சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்

பேராசிரியர்
மு. சண்முகம் பிள்ளை
(தமிழ்ப் பல்கலைக்கழகம் - ஓய்வு)

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Caṅkattamiḻariṉ Vaḻipāṭum Caṭaṅkukaḷum
Author	:	Prof. M. Shanmukham Pillai
Publisher	:	International Institute of Tamil Studies C.I.T. Campus, Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	468
Language	:	Tamil
Edition	:	Second; First Edition: 1996
Date of Publication	:	2003
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	xviii + 350
No. of Copies	:	1000
Price	:	Rs. 85/- (Rupees Eighty Five Only)
Printed by	:	Powerman Printers No.89, Coral Merchant Street Mannady, Chennai-600 001.
Subject	:	Cultural Study of the Tamils

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

அணிந்துரை

வழிபாடும் சடங்குகளும் மனித வாழ்வோடு ஒன்றியவை. இத்தகைய வழிபாடும் சடங்குகளும் நம்பிக்கை வயப்பட்டனவாக வாழ்வோடு ஒன்றிய நிலையில் காணப்படுவனவாகும். இறை நம்பிக்கையும் மனித உறவுகளும் இவற்றால் வளர்ந்து வந்தன. வாழ்வில் நல்லன நிகழவும், அன்றாட நடைமுறை நிகழ்வுகளில் தீய விளைவுகளிலிருந்தும் இயற்கைச் சீற்றங்களிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளவும், நோய் அணுகாமல் இருக்கவும், தம்மைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார்களுக்குத் தீங்கு நேராமல் இருக்கவும் இத்தகைய வழிபாடுகளும் சடங்குகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகிறது.

சங்க இலக்கியங்கள் அக்காலத் தமிழர்களின் வெளிப்பாடுகள் என்னும் நிலையில் இவற்றை வெளிப்படுத்திக்காண்பது நம் முன்னோர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை அனுபவங்களை அறிந்துகொள்ளத் துணை செய்யும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெள்ளிவிழா வெளியீடாக வெளிவந்த இந்நூல் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது இதனை மறுபதிப்புச் செய்ய அனுமதி அளித்த பதிப்புக் குழுவினர்க்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா,** இ.ஆ.ப., அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன்,** இ.ஆ.ப., அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த பவர்மேன் அச்சகத்தார்க்கு நன்றி.

சென்னை
13.11.2003

இயக்குநர்

டாக்டர் ச.சு. இராமர் இளங்கோ
மேனாள் இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

முதற்பதிப்பின் அணிந்துரை

பண்டைத் தமிழரின் வரலாற்றை வெளிப்படுத்தவல்ல வரலாற்றுப் பெட்டகம் சங்க இலக்கியம். இவ் வரலாற்று உண்மைகள் பலவும் அறிஞர் பெருமக்களாலும், ஆய்வாளர்களாலும் ஆராயப்பட்டு, வெளிப்படுத்தப் பெற்றுள்ளன. 2000 வருடங்களுக்கு முன்னரேயே தமிழ் மக்களின் வாழ்வு எவ்வாறெல்லாம் சிறக்க இருந்துள்ளது என்பதைத் தெளிவாக நம்முன் காட்டும் ஆடிகள் இவை. இவற்றுள் ஒன்றாகப் பெருமையுடன் வெளிவருகிறது 'சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்' வெளியீட்டுக் குழுவினரின் பரிந்துரைக்கேற்ப இந்நூலை வெளிக் கொணர்வதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

நூலாசிரியர் மு.சண்முகம் பிள்ளை தமிழ்ப் புலமை நிரம்பப் பெற்றவர். தமிழ் நூல் விவர அட்டவணை, திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறுபாடும், திருக்குறள் அமைப்பும் முறையும், நிகண்டுச் சொற்பொருட்கோவை - தெய்வப் பெயர் போன்ற பல நூல்கள் வழியாக அதனை வெளிப்படுத்தியவர், வெளிப்படுத்திவருபவர். இவரின் பெருமை விரிப்பின் பெருகும். இவரது நுண்மாண் நுழைபுலத்தை வெளிப்படுத்தும் மற்றுமொரு நூல் இந்நூல். இது நிறுவன வெள்ளிவிழா ஆண்டு வெளியீடாக வெளிவருகிறது.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறை அமைச்சர், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர் ஆகியோர்க்கு எங்கள் இனிய நன்றி.

இந்நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த பாவை அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி.

ச.சு. இராமர் இளங்கோ

நூற்றின் பதிப்புரையில் ஐயர் அவர்களின் உரை வருமாறு;

''பழைய உரையில்லாத செய்யுட்களுக்கு உள்ளுறையுவமம் முதலியவற்றைப் புலப்படுத்தி ஏதோ ஒரு வகையாக உரை எழுதி இத்துடன் பதிப்பிக்கலாமென்ற விருப்பம் சிலசமயம் எனக்கு நிகழ்ந்ததுண்டு; நிகழ்ந்தும் இந்நூலையும் இவ்வுரையையும் உற்று நோக்க அவ்விருப்பம் அடியோடே மாறிவிட்டது. இந்நூல் முழுமைக்கும் நான் எழுதி வைத்த அரும்பதவுரையை இதனுடன் பதிப்பியாமைக்குக் காரணமும் இதுவே.

(பழைய முகவு. பக்.11)

இங்ஙனமாக, ஐயர் அவர்களால் மதிப்பிடப் பெற்ற பழைய உரைகளையும் கூட அப்படியே கொண்டுவிடவில்லை. அவ்வுரைக் கருத்துக்களைக் பிற சூழ்நிலைகளோடும், ஒத்த பிற பகுதிகளோடும் ஒருங்கு வைத்து நோக்கி, ஒரு சில இடங்களில் புதுவிளக்கமும் கொள்ள பெற்றதுண்டு.

கடவுள் வாழ்த்தும் பிறவும்

சங்கப் பாடல்கள் பொருள் வகையாலும், பாடலடிகளின் அளவைக் கொண்டும் தொகுக்கப்பெற்ற காலத்துப் பாடிச் சேர்க்கப் பெற்றனவே கடவுள் வாழ்த்துப் பாடல்கள். ஆகவே இவற்றைச் சங்கப் பாடல்களுடன் ஒருங்கு வைத்து எண்ண இட மில்லை. இது போன்றே பாடல்களுக்குத் தரப்பட்டுள்ள திணை, துறை பற்றிய குறிப்புக்களும் தொகுத்தாரால் சேர்க்கப்பட்டன வாதல் வேண்டும்.

புலவர்களின் பெயர்களும் பிறவும் தொகுத்தார் காலத்து வழக்கினை ஒட்டி அமைக்கப் பெற்றிருத்தல் இயல்பே. ஒருசில பாடல்களைப் பாடியவர்களின் இயற்பெயர் தெரியவாராத விடங்களில் பாடலினுள் அமைந்த சிறப்புத் தொடரால் புலவர்களுக்குப் புனைபெயர்களைத் தொகுத்தார் தோற்று வித்திருத்தல் ஒன்றே இங்ஙனம் கருத இடந்தருகின்றது. எனவே, ஐயத்திற்கு இடமாயிருக்கும் கடவுள் வாழ்த்துப் பாடல்களையும், திணை, துறைக் குறிப்புக்கள் பாடல் பாடிய சூழ்நிலை பற்றிய செய்திகள் ஆகியவற்றையும் முதன்மையான ஆதாரமாகக் கொள்ளவில்லை. பிற் சேர்க்கையான பதிகம், வெண்பா ஆகியனவும் இத்தகையன. நூலுள் அமைந்துள்ள பாடல்களை மட்டுமே, முதன்மை ஆதாரமாகக் கொண்டு இந்த ஆய்வுரை அமைக்கப் பெறுகிறது.

நூற்பொருள்

வேதநெறி

'வேதநெறி தழைத்தோங்க,
   மிகுசைவத் துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப்
   புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
   திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
   திருத்தொண்டு பரவுவாம்'

என்று திருஞானசம்பந்த மூர்த்திகள் புராணத்தைத் தொடங்கும் போதே தெய்வச் சேக்கிழார் வேதநெறியை முதன்மையாகக் சுட்டியுள்ளார். 'வேதநெறி - வைதிகம், அதாவது அறிவு நெறி' என்கிறார் திரு. வி.க. சமயங்களுக்கெல்லாம் மூலமாய், முதல் வித்தாய் அமைவது வேதநெறி என்பர். ஆகவே, வேத நெறி பற்றிச் சங்கப் பாடல்களில் காணும் செய்திகள் முதற்கண் எடுத்துக் கொள்ளப்பெற்றன.

வேதம் என்பது மறை, வாய்மொழி முதலிய பல பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொல்பழங்காலத்தது என்பர். நான்மறை காத்து ஓம்புவார் அந்தணர் எனப்படுகின்றனர். வேதாங்கம் ஆறு பற்றிய செய்தியும் காணப்படுகிறது. வேள்வி மூலமாக அந்தணர் வழிபாடு செய்து வந்தனர். வேள்விச் செய்திகள் சங்கப் பாடல்களில் நிரம்பக் காணப்படுகின்றன. வேள்வி வழிபாட்டிற்கு மன்னர்கள் ஆதரவு தந்தமையும் தெரிய வருகிறது. மக்களும் இதில் ஈடுபாடுடையவர்களாயிருந்தனர். முனிவர்களின் வேள்விப் பயனால் நன்மை உண்டாம். வேள்வி செய் அந்தணர் வாழ்க்கை, அவர்தம் சிறப்பியல்புகள், பழக்க வழக்கங்கள் பற்றிய செய்திகளும் விரிவாகவே பேசப்பட்டுள்ளன. தமக்குரிய நெறிபிறழ்ந்த பார்ப்பனர்களின் இழிநிலையும் புலப்படுகிறது. துறவு நெறி நிற்கும் தூய அந்தணர், சுடரொடு திரியும் முனிவர், முக்கோல் அந்தணர் ஆகியவர்களும் ,இப்பகுதியில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளனர்.

வேதகாலக் கடவுளர்களாகக் கருதப்படும் இந்திரன், யமன் முதலிய தேவர்களைப் பற்றிக் 'கடவுளர்' என்னும் இரண்டாம் அத்தியாயம் விளக்குகிறது. இந்திரனுக்கு விழா எடுத்து அந்நாள் மக்கள் போற்றினர். 'இந்திர விழவிற் பூவின் அன்ன' என்னும் உவமைக் குறிப்பு மட்டுமே ஐங்குறு நூற்றில் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்தில், 'இந்திரவிழவூர் எடுத்த காதை' என ஒரு காதையே இளங்கோவடிகள் தந்துள்ளார். காவிரிப்பூம்பட்டினத்தில் 28 நாட்கள் நடைபெற்ற இந்திர விழா நிகழ்ச்சிகளை அங்குக் காண்கிறோம். தேவர் முப்பத்துமூவர், பதினெண் தேவ கணத்தார், திக்குபாலகர்கள் பற்றிய குறிப்புகள் பல. இந்திரனை விடவும் யமன் அதிக அளவில் சுட்டப்பட்டுளளான். சூரிய சந்திரர் தெய்வமாகக் போற்றப்பட்டுள்ளமையும் காண்கிறோம்.

'மாயோன் மேய காடுறை உலகமும், சேயோன் மேய மை வரை உலகமும்' எனத் தொல்காப்பியர் நிலத் தெய்வங்களுள் கரியோனாகிய திருமாலையும் சேயோனாகிய முருகனையும் முற்பட வைத்துப் போற்றியுள்ளார். இந்த இருபெருந் தெய்வங்களைப் பற்றிய பாடல்கள் மிகுதியாக உள்ளன. தொல்காப்பியர் சுட்டிய முறையிலேயே மூன்றாம் நான்காம் அத்தியாயங்கள் முறையே திருமால் முருகன் பற்றியமைகின்றன். சங்கப் பாடல்களில் 'திருமால்' என்னும் பெயர் வழக்கு இல்லை. எல்லா இடங்களிலும் 'மால்' என்றே குறிப்பிடக் காண்கிறோம். எனவே மூன்றாம் அத்தியாயத்திற்கு மால் என்னும் தலைப்புத் தரப் பெற்றது.

காடுறை ஆயர் போற்றும் சிறப்புத் தெய்வம் திருமால் எல்லா நிலத்தும் போற்றப்பெறுகிறார். அவர் தம் திருவுருவக் காட்சிகள் பலபலச் சித்திரிக்கப்பட்டுள்ளன. திருமாலின் ஊர்தி, கொடி, படை முதலியன கூறப்பட்டுள்ளன. அவரோடு தொடர்புடைய திருமகள், ஆதிசேடன், பிரமன், காமன் என்பாரும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். அவர் தீயவரை மாய்த்து உலகைப் பரிபாலிப்பதும சுட்டப்பட்டுள்ளது. திருமால் கோயில் கொண்டுள்ள திருவரங்கம், திருமாலிருஞ்சோலை, திருவனந்தபுரம் முதலிய திருப்பதிகள் பற்றிய செய்திகளும் உள. திருமாலை மக்கள் வழிபட்டுவந்த முறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. எல்லா உலகு உயிர்களின் தோற்றமும் நிலைபேறும் ஒடுக்கமுமாக எல்லாமாய் நிற்கும் ஏக பரம்பொருள் திருமாலே என்றும்

எடுத்துக்காட்டப்பட்டுள்ளார். திருமாலின் அவதார சரிதங்களும் சுட்டப்பட்டுள்ளன. திருமாலோடு தொடர்புடைய தெய்வங்கள் பற்றிய விவரங்கள் இறுதியில் தரப்பட்டுள்ளன.

மாலின் மருகனாகிய முருகன் செய்திகள் அடுத்துவரும் நான்காம் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளன. திருமுருகாற்றுப் படை முருகன் வீற்றிருந்தருளும் ஆறுபடை வீடுகளை அறிமுகப் படுத்துகிறது. பரிபாடலில் முருகனுக்கு எட்டுப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. முருகன் மலையுறை கடவுள், மலைவாழ் குன்றக் குறவர் போற்றும் பெருந்தெய்வம். முருகப்பெருமானின் திருவ வதாரம் பற்றி விரிவாகவே பேசப்பட்டுள்ளன. அவனது ஆறு திருமுகங்களும் பன்னிரு கைகளும் ஆற்றும் அருட்பணிகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அவன் மயில்மீது எழுந்தருளிவரும் காட்சி எழிலுற அமைந்துள்ளது. முருகனது திருமேனிக் காட்சிகள் பலபடப் புனையப்பட்டுள்ளன. அவன் சூரனைக் கொன்றும் கிரவுஞ்ச மலையை வேலால் அழித்தும், தேவர்கள் சிறைமீட்டும் தேவசேனாபதியாக விளங்கினான். தெய்வயானை அம்மையைத் திருமணம் புரிந்தான். தெய்வயானையை இந்திரன் கொடுக்கக் கொண்டதேயன்றி வள்ளியைக் களவுமண முறைப்படி மணந் தான். வெறியாட்டு, முருகபூசை முதலியனவும் பிற வழிபாட்டு முறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. மயிலேயன்றி ஆட்டுக் கிடாயும் இவன் வாகனமாகிறது. பிணிமுகம் என்னும் யானையும் மேற்கொண்டு நடத்துகின்றான். முருக பூசையில் வேலன் வெறி யாட்டுப் பல இடங்களில் காணலாகும். திருப்பரங்குன்றத்தில் மக்கள் சென்று வழிபட்ட முறை நன்கு எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. முருகன் கோயில் கொண்டருளும் தலங்கள் திரு முருகாற்றுப்படையிலும் பிற சங்கப் பாடல்களிலும் குறிக்கப் பட்டுள்ளமை காணலாம்.

முருகன் புகழை அடுத்து முருகனைத் தந்த முக்கண்ணன் பெரும்புகழ் பேசும் அத்தியாயம் அமைகிறது. சிவன் என்னும் பெயர் சங்க நூல்களில் இல்லை. முக்கண்ணன், ஆதிரையான், கறைமிடற்றண்ணல், கொன்றையவன், சலதாரி என்றாற் போல் அவர் தம் திருவுருவை நினைப்பூட்டும் பெயர்களாலேயே கவிஞர் சுட்டுகின்றனர். முக்கட் பெருமானின் திருவுருவக் காட்சிகளும் பெருமானின் ஊர்தி, மழுப்படை முதலியவற்றைப் புலவர் பலரும் சிறப்பித்துள்ளனர். அண்ணலின் தெய்விக

ஆற்றல்களும் பெருங்கருணைத் திறமும் பிறவும் பலபடப் புகழ்ந்து பேசப்பட்டுள்ளன. சங்கத் தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய பெருந்தேவனார் ஐங்குறு நூறு, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை நூல்களுக்குப் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல்கள் முக்கண்ணனைப் பற்றியவையாகும். முக்கண்ணனுக்குச் சக்தியாக விளங்கும் உமை, கொற்றவை பற்றித் தெரிய வரும் செய்திகளும் இப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் விவரித்த மால், முருகன், முக்கண்ணன் ஆகியோர் பெருந்தெய்வங்களாகக் கருதப்படுகின்றனர். ஒருசில தெய்வங்கள் தொகுப்பாக உவமை வாயிலாகவும் பிறவாறும் சுட்டப்படுகின்றனர். பெருந்தெய்வம் என்று குறிப்பிடப்படும் தெய்வங்களுக்குள்ளும் பெருந்தெய்வம் என்பது பற்றிய ஆய்வினை ஆறாம் அத்தியாயத்தில் காணலாம். மாயோனும் முக்கண்ணனுமே இருபெருந்தெய்வங்களாகப் போற்றப்படலாயினர் என்பது முடிவாகத் தெளிவுபடுத்தப்படுகிறது.

ஏழாம் அத்தியாயம் வேத நெறிக்கு மாறுபட்ட வேற்றுச் சமயங்களாகிய சமணம், பௌத்தம் பற்றி அமைகிறது. இந்தச் சமயங்களைச் சார்ந்த மக்களும் தமிழகத்தில் மிகுதியாக வாழ்ந்தனர். மதுரைக் காஞ்சியிலும் பட்டினப்பாலையிலும் முறையே மதுரை, காவிரிப்பூம்பட்டினங்களில் விளங்கிய புத்த-சமணப் பள்ளிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலைப் பெருங்காவியங்கள் இச்சமயச் சார்புடையனவே.

'மலை முதல் மனை வரையிலும் கண்ட பல கடவுளர்' என்னும் எட்டாம் அத்தியாயம் சிறுதெய்வங்கள் பற்றிய பகுதியாகும். பேரூர்களிலேயன்றிச் சிற்றூர்களிலும் சிறு தெய்வங்கள் பல போற்றப்பட்டமை தெரியவருகிறது. மலையுறை தெய்வம், காடுறை கடவுள், காவிலும் மரங்களிலும் வாழும் தெய்வம், நீர்த்துறைக் கடவுள், வருத்தும் தெய்வம் (அணங்கும் சூரும்), யாழ்த் தெய்வமும் முலை உறை வீற்றுத் தெய்வமும், ஆயுதத் திலும் முரசிலும் அமர்ந்துறை அணங்கு, பேய், பிசாசு, பூதம், நடுகல், சதுக்கம், சந்தி, மன்று, பொதியயில் கந்துகளில் நிலைபெறு தெய்வங்கள்,இல்லுறை கடவுள். ஆகியவற்றை இப்பகுதியில் காணலாம்.

அடுத்து வரும் பல்வகைப் பாவை என்பதும் சிறுதெய்வமே, மனையில் விளங்கும் சுவர்ப்பாவையேயன்றி மன்றப் பாவை,

தெற்றிப்பாவை, அல்லிப்பாவை, கொல்லிப்பாவை எனப்படும் பாவைத் தெய்வங்கள் பற்றிய செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளன. மகளிர் விளையாட்டில் அமைந்த தாதுசெய் பாவை, வண்டற் பாவை, பைஞ்சாய்ப்பாவை, மணலில் எழுதிய பாவை என்பனவும் தென்படுகின்றன. பாவைத் தெய்வங்களுள் கொல்லிப் பாவை என்பது புலவர் பலராலும் போற்றி உரைக்கப் பட்டுள்ளது. காவிரிப் பூம்பட்டினத்திலே பண்டு புகழுடன் விளங்கிய ஐவகை மன்றங்களுள் ஒன்றான பாவை மன்றம் குறித்த செய்தியைச் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

தெய்வத்தன்மையுடையவாகக் கருதப்படும் கோள் நாள்கள் பற்றியது அடுத்து வரும் அத்தியாயம். ஞாயிறு முதலாக எண்ணப் படும் நவகோள்கள், அசுவினி முதலாக எண்ணப்படும் இருபத் தேழு நட்சத்திரங்கள் ஆகியவற்றுள் சங்கப் பாடல்களில் இடம் பெற்றவையெல்லாம் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன. திருப்பரங் குன்றத்தில் அமைந்திருந்த சித்திரமண்டபத்தில் நாள் கோள்கள் பற்றிய 'சுடர்ச்சக்கரம்' தீட்டப்பட்டிருந்தமை குறிக்கப்பட் டுள்ளது. ஒளியுடைய் பொருள்களுள் எல்லாம் பேரொளியாய் விளங்கும் ஞாயிறும் திங்களும் பற்றிய செய்திகள் பலவாக உள்ளன. ஞாயிற்றைப் போற்றி வழிபடும் நிலை அன்று இருந்தமை தெரிய வருகிறது. ஞாயிற்றைப் போலவே திங்களை யும் தொழுது வழிபட்டு வந்துள்ளனர். சந்திரன் வளர்ந்தும் தேய்ந்தும் வருவது கொண்டு காலம் கணக்கிட்டு வந்துள்ள னர். நிறைமதிநாளில் இருசுட்ரும் ஒரே காலத்தில் காட்சி தரும் தன்மை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பர்ம்பு சேர் மதியம்- கிரகணம்- பற்றிய குறிப்பும் காண்கிறோம்., பதினொன்றாம் பரிபாடலில் மழைக்கான கோள்நிலை சுட்டப்பட்டுள்ளது. செவ்வாய்க்கோள் வெண்மீன் எனப்படும் சுக்கிரன், கருநிறம் கொண்ட சனிக்கோள் என்பவை விவரிக்கப்பட்டுள்ளன.

நட்சத்திரங்களாகிய விண்மீன்கள் இரவிலே வானத்தை அழகு செய்கின்றன. வானத்து விண்மீன்களைப் புலவர்கள் பலவற் றிற்கு உவமை காட்டியுள்ளனர். மதிக்கு உற்ற துணையாய் அமைந்தது உரோகிணி. திருமணம் புரிவதற்கு உகந்த நாளாகத் திங்கள் உரோகிணியுடன் கூடியிருக்கும் நாள் தேர்ந்தெடுக்கப் பெற்றது. ஓணமும் ஆதிரையும் தெய்வ சம்பந்தம் பெற்ற பெருமையுடையவை. அறுமீனாகிய கார்த்திகை நாள், எழுமீன்

(சப்தரிஷி மண்டலம்) வடமீன் (அருந்ததி) ஆகியவையும் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளன. மகவெண்மீன், பரணிநாள் பற்றியும் காண்கிறோம். பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. நாள்கோள்களால் நலமும் தீங்கும் விளைதல் பற்றியும் பல பாடல்களில் காண்கிறோம். இவற்றின் இயக்கத் தால் காலம் கணிக்கப்படுவதும் தெரியவருகிறது.

மக்கள் தெய்வங்க்ளை வழிபட்டுவந்த முறைகளும் அவர்கள் கொண்டாடிய விழாக்களும் பற்றித் தெரிவிப்பது 'நாள்முறை வழிபாடும் விழாக்களும்' என்னும் 11ஆம் அத்தி யாயம். கோயில்கள் பெரும்பாலும் ஊரின் நடுநாயகமாகத் திகழ்ந்தன. கோயில்களில் வழிபட்டுவந்த தெய்வங்கள் அவரவர் மனப்பான்மைக்கு ஏற்ற வண்ணம் பலவகை வடிவங்களை உடையனவாய் இருந்தன. வழிபாட்டிற்குப் பல்வகைச் சாந்து, புகை, விளக்கு, மலர் தெய்வத்திற்குப் படைக்கும் பாற்சோறு, பலிச்சோறு, முதலியனவும் கொண்டு சென்றனர். மன்றங்களிலும் வெறியாட்டுக் களங்களிலும் வழிபட்ட தெய்வங்களுக்குக் குருதிப் பலியும் கொடுத்து வந்தனர். மறையவர் தாம் செய்யும் வேள்வியில் அவி மூலமாகத் தெய்வங்களுக்குப் பலி செலுத்தினர். வழிபாட்டுக் காலத்தில் பற்பல இசைக் கருவி களையும் இயக்கினர். திருக்கோயிலை வலமாகச் சுற்றிவந்து வழிபடும் பழக்கம் இருந்துவந்தது. கடவுளுக்குப் பல பொருள் கள் காணிக்கையாக்குதலும் நேர்த்திக்கடன் செலுத்துதலும் உண்டு எனத் தெரிய வருகின்றது.

விழவுடைவியல்நகர், பேரூர்கொண்ட ஆர்கலி விழவு என ஊர்களில் நிகழ்ந்த விழா நிகழ்ச்சிகளும் சுட்டப்பட்டுள்ளன. விழா எடுக்கும் ஊர்களில் உள்ளூர் மக்களும் வெளியூர் வாசி களுமாகப் பலர் திரண்டமையும் குறிக்கப்பட்டுள்ளது. சந்திரன் நிலவொளி நல்கும் வளர்பிறைக் காலத்திலேயே விழா எடுக்கப் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. தெருவில் தெய்வம் உலா வரும் காட்சியும் உண்டு. வேங்கடம், உறையூர், கூடல்(மதுரை) திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் நடைபெறும் விழாக் களைப் புலவர்கள் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

மேல்வரும் 12-ஆம் அத்தியாயம் சடங்குகளைப் பற்றியது. முந்தையோர் முறைப்படி பரம்பரை வழக்கமாகச் செய்துவரும்

சிறப்பு நிகழ்ச்சிகளே சடங்குகளாகும். மக்களிடையே குழந்தை பிறந்தது முதல் மனிதன் மடியும்வரை மேற்கொண்டுவந்த பல்வேறு சடங்குகளும் சங்கப் பாடல்கள் வழி ஆராயப் பட்டுள்ளன. வழிபாடு, விழா முதலிய சடங்குகள் மக்கள் பயன் கருதி செய்யப்படுவனவே.

குழந்தைப்பேறு வேண்டித் தெய்வம் பராவுகின்றனர். குழந்தை பிறந்ததும் தந்தை மகவைக் கண்டு மகிழ்கிறான். குழந்தைகளுக்குத் தம் தந்தையின் பெயரையிடுவது மரபா யிருந்தது. சிறுவர் சிறுமியருக்கு அணிகள் பூட்டி அழகு பார்க் கின்றனர். குழந்தையின் பிறந்த நாளைக் குதூகலமாகக் கொண்டாடினர். குழந்தைக்குக் கல்வி தரப்படுகிறது. 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்பதனால் முத்தமிழ்க் கல்வியும் மேம்பாடுற்றிருந்தது என்பது புலனாம். காளையர் போர்ப்பயிற்சியும் பெற்றனர்.

இளமகளிர் அம்பா ஆடல் என்னும் பாவை நோன்பு நோற்றனர். குரவைக்கூத்து முதலிய ஆடல்களிலும் ஈடுபட்டனர். யானையை வழிபடும் வழக்கமும் தெரியவருகிறது. களவு மணம் - கற்பு மணம் நிகழ்ச்சிகள் நடைமுறையில் இருந்தன. மகட்பேசி மணம் முடிக்கும் வழக்கமும் காணப்படுகிறது. திருமணச்சடங்கு பற்றிய செய்திகளும் பல; பெண்ணுக்குச் செய்யப்படும் சிலம்பு கழி நோன்பும் ஒரு சடங்காகும். திருமணத்தை முன்னிட்டு இல்லுறை தெய்வங்களுக்கு வழிபாடாற்றுகின்றனர். மண மகளுக்குத் தாலி அணியும் வழக்கமும் இருந்தமை புலப் படுகிறது. தாலியை 'ஈகை அரிய இழை' என்றனர். புதுமணப்பெண் புக்ககம் சென்றபின் நறுஞ்சுவை உணவாக்கிக் கணவனுக்குப் படைப்பதும் ஒரு வழக்கம். 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்றபடி ஆடவர் பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். சூரியன் மறையும் வேளையில் மங்கையர் வீட்டில் விளக்கேற்றி வழிபடுவர். பிறை தொழும் வழக்கமும் உண்டு.

புதுப்புனலாடல், பொழில்விளையாடல் முதலிய இன்பப் பொழுது போக்கு நிகழ்ச்சிகளிலும் மக்கள் ஈடுபடுகின்றனர். விருந்தோம்பல், விழா முதலியவற்றில் தானம் வழங்கினர். போர் நிகழ்ச்சிகளிலும் பல நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. நிமித்தம் பார்த்தல், விரிச்சி கேட்டல் போன்ற வழக்கமும் இருந்

தது. இவ்வுலகை வெறுததார் தவம் செய்தலும் வடக்கிருத்தலும் உண்டு. இறக்குமவரை எரித்தல் புதைத்தல் செய்தனர். கணவனை இழந்தால் கைம்மை நோன்பு நோற்கும் முறைகளும் புலப்படுகின்றன. இறந்த தாய் தந்தையருக்குப் புதல்வன் நீர்க்கடன் செய்தல் முதலிய சடங்குகளும் சுட்டப்பட்டுள்ளன. உலகின் நிலையாமை கண்டு வீட்டின்பம் நாடிச் செல்லும் துறவுநிலை மேற்கொண்டார் வாழ்க்கை முறையும் விளக்கப் பட்டுள்ளது.

மக்களின் வாழ்க்கையிலே வழிகாட்டியாய் அமைந்து, உலகிற்கு உண்மை நிலைகளை எடுத்துரைத்து எல்லார்க்கும் எடுத்துக்காட்டாய் விளங்கிய சான்றோர்களின் சீரிய வாழ்வு ஈற்றயல் அத்தியாயமாக இடம்பெறுகிறது. தெய்வ வழிபாடா யினும் மக்கள் வாழ்க்கையில் நடைபெறும் திருமணம் முதலிய சடங்குகளாயினும் சான்றோரை முன்னிட்டே ஆற்றப்படு கின்றன. சான்றோர் அமைதியான நல்வாழ்விற்கு வழிகாட்டி நிற்கின்றனர். அறங்கூறும் அணவயங்களில் அமர்ந்து நீதி வழங்கி நெறிப்படுத்தியவரும் இவரே அரசர்கள் முறை தவறும் காலத்து இடித்துரைத்து அவர்களை அறவழிப்படுத்திய சான்றோர் பலராவர். சங்க இலக்கிய வழிப் பார்ப்பனர் நிலை உயர்வாகவே காணப்படுகிறது.

சங்ககால மக்கள் வாழ்க்கையில் போரும் பூசலும் இல்லா மல் இல்லை. தமிழ்நாட்டுச் சேர சோழ பாண்டியர்களுக்குள்ளும் மாறுபாடுகள் பல நிகழ்ந்தன. பல்வேறு சமயத்தினரும் பல மொழி பேசுவோரும் தமிழகத்தில் வாழ்ந்தனர். உழவு, வாணிகம் முதலிய பல தொழில்களும் வளமுடன் அமைந்தன. யவனர், சோனகர் முதலிய மேலை நாட்டினரும் தமிழகத்தில் வாழ்ந்து வந்தனர். மக்கள் பல்வேறு வகையினராதல் போலவே அவர் தம் உணவுப் பழக்கங்களும் நடை, உடை பாவனைகளும் பல்வேறு வகைப்பட்டு அமைந்திருந்தமையும் காண்கிறோம். எனினும் அவர்கள் நன்றி மறவாமை, பெரியோ ரைப் பேணல், கள், காமம் துறத்தல், பொய்கூறாமை, பிறர்க்குத் தீங்கு புரியாமை முதலிய நன்னெறிகளை மேற்கொண்டு ஒழுகினர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதே அவர்தம் குறிக்கோள். இவ்வாறு வேற்றுமையில் ஒற்றுமையாகவிருந்த தமிழக்த்தை இந்த இறுதி அத்தியாயம் விளக்குகிறது.

நூலுள் தரப்பட்டுள்ள ஒவ்வொரு செய்திக்கும் சங்கப் பாடல்கள் - சொற்கள் - தொடர்கள் சான்றாக எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. ஆதாரம் இன்றி எதுவும் எழுதப் பெற வில்லை என்பதை இந்நூலைக் கற்பார் நன்கு உணர்வர்.

ஒருசில மேற்கோள்கள், செய்திகள் வெவ்வேறு இடங்களில் தென்படலாம். அவை அந்தந்த இடத்திற்குப் பொருத்தமான வையாதல் கருதி எடுத்தாளப்பெற்றன. எனவே இவை கூறியது கூறல் ஆகா. பொருள் தொடர்ச்சிக்கு அவை இன்றியமை யாதவை என்பது மனம் கொள்ளத்தக்கது.

இந்த ஆய்வு நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழி வெளியிட முன்வந்து, ஊக்கம் தந்து பலவகையிலும் உதவியவர் நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களாவர். அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு அவர் தம் பணி சிறக்க உளமார அவரைப் பாராட்டுகிறேன் - வாழ்த்து கிறேன்.

மு.சண்முகம் பிள்ளை.

கவிமணிநிலையம்

2.10.96

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1.	வேதநெறி	1
2.	கடவுளர்	17
3.	மால்	29
4.	முருகன்	70
5.	முக்கண்ணன்	87
6.	பெருந்தெய்வங்களுக்குள் பெருந்தெய்வம்	103
7.	வேதநெறிக்கு மாறுபட்ட வேற்றுச்சமயங்கள்	106
8.	மலை முதல் மனை வரையிலும் கண்டபல கடவுளர்	112
9.	புல்வகைப் பாவை	155
10.	கோளும் நாளும்	164
11.	நான்முறை வழிபாடும் விழாக்களும்	207
12.	சடங்குகள்	232
13.	செந்நெறி காட்டும் திருத்தகு சான்றோர்	293
14.	வேற்றுமையில் ஒற்றுமை	313
15.	பொருட்குறிப்பு அகராதி	331

சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்

I.வேதநெறி

வேதம்

'மறை' என்றும், 'வேதம்' என்றும், 'வாய்மொழி' (பரி3:11-12) என்றும்,'எழுதாக் கற்பு' (குறுந்.156)என்றும்,'கேள்வி'(பதிற்.21:1) பரி.2:24,61,3 :48, பரி.தி.1:19) என்றும், 'முதுமொழி '(பரி.3:42, 47;8:11;13:10) என்றும்,'முதுநூல்'(புறம்.166:4)என்றும் குறிக்கப் படுகிறது.நான்கு கூறுபாடாக அமைந்தது;ஆறு அங்கத்தாலும் உணரப்பட்டது;பழமையான ஒரு நூல்(புறம்.166 : 3-4);'அருமறை' (பரி;1:13,2:57,3:14,4:65)' நான்மறை '(புறம் .26:13;93:7;362:9; பரி.9:12)' நால் வேதம்' (புறம்.2:18;15;17)என 'அருமை',நான்கு என்னும் அடை மொழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்தணரால் ஓதப்படுவது என்னும் கருத்தில்,'அந்தணர் வேதம்'(மது.654-656);'அந்தணர் அருமறை' (பரி1:13,2:57,3:14,4:65): 'அந்தணாளர் நான்மறை' (புறம்.363:8-9) என்றும் குறிக்கப் படுகிறது. நீண்ட சடையையுடைய முதுமுதல்வனது வாக்கை விட்டு நீங்காது உறைவது வேதம் (புறம்.166;12) இது எழுதாமல் செவிவழிக் கேட்டுக் கற்கப்படும் நூல் (குறுந்.156:5), வேதம் இசையோடு பாடப்பெறுவது என்பது,

> தாதுஉண் பறவை போது முரன்றாங்கு
> ஓதல் அந்தணர் வேதம் பாட (மதுரைக் 655-656)

என்பதனால் விளங்கும். 'சிறந்த வேதம் விளங்கப் பாடி' (மதுரைக்.468) என்னும் மதுரைக்காஞ்சித் தொடருக்கு, ''அதர்வ வேதம் ஒழிந்த முதன்மைப்பட்ட வேதங்களைத் தமக்குப் பொருள் தெரியும் படி ஓதி' என்று பழைய உரைகாரர் பொருள் எழுதியுள்ளார். இங்கே 'சிறந்த' என்பது வேதங்கள் நான்கையும் குறிக்கும் பொது அடை மொழியாகவும் கொள்ளத்தக்கது. ஆயினும், வேதங்களுள் சாமவேதம் சிறப்பாகக் கூறப்படுவத னாலும் வேதங்களுள் கானம் செய்யப்படுவதற்கு ஏற்ப அமைந்தது இதுவே ஆதலானும், 'சிறந்த வேதம் 'என்னும் அடைமொழியும்

'பாடி' என்னும் தொழிலும் குறிக்கப்பெறுவதனாலும் இது சாமவேதத்தைக் குறிப்பதாகக் கருதலாம் என்று தோன்றுகிறது.

வேதம் ஓதுதல் சிறப்பால் அந்தணர் 'நான்மறைப் புலவர்' எனச் சிறப்பிக்கப்படுகின்றனர்.

'நான்மறை விரித்து , நல்லிசை விளக்கும்
வாய்மொழிப புலவீர் ' (பரி.9:12-13)

என்கிறார் குன்றம் பூதனார். 'நான்மறை முதல்வர் '(புறம் .26:13) என்றும், 'மறைகாப்பாளர்' (பெரும்பாண்.301) என்றும் வேதத்தை அழியாது வழிவழியாக அந்தணர் காப்பாற்றிவரும் பெருமையும் சுட்டப்படுகிறது. அந்தணர் ஓதும் மறையைக் கேட்ட அவர் இல்லத்தில் உறையும் கிளியும் கூட வேதத்தினது ஓசையை இசைக்கின்றதாம்.

'வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாளர் உறைபதி' (பெரும்பாண்.300-301)

என்பது பெரும்பாணாற்றுப்படை. வேதங்கள் உயர்ந்தோராகிய ஞானிகளால் ஆராயப்படுவது. இந்த ஞானிகள் தவறு இல்லாத விரதங்களை உடையோராவர்.

'வடுஇல் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த
கெடுஇல் கேள்வி'

என்பது பரிபாடல் (2:24-25)

ஆறு அங்கங்கள் கொண்டு உணரத்தக்கது வேதம் என்னும் கருத்தைப் பின்வரும் புறநானூற்றுப் பகுதி விளக்கும்.

'நன்று ஆய்ந்த நீள் நிமிர்சடை
முதுமுதல்வன் வாய் போகாது
ஒன்று புரிந்த ஈர் - இரண்டின்
ஆறு உணர்ந்த ஒரு முதுநூல்' (புறம்.166:1-4)

இங்கே வேதம் முதுநூல் என்று குறிக்கப்படுகிறது. வேதப் பொருள் விளக்கத்திற்குத் துணை செய்வன இந்த ஆறு அங்கங்கள்.

'சொல், பெயர், நாட்டம், கேள்வி, நெஞ்சம் என்று
ஐந்துடன் போற்றி அவைதுணையாக
எல்லாம் சூழ்ந்து விளங்கிய கொள்கை' (பதிற்.21:1-5)

எனவரும் பதிற்றுப்பத்துப் பகுதியில் கேள்வி என்னும்

பெயருடைய வேதத்திற்குத் துணை அங்கமாகச் சொல், பெயர், நாட்டம் என மூன்று குறிக்கப்படுகிறது. இவை முறையே சொல்லிலக்கணம் சொல்லும் நூல், பொருள், சோதிடநூல் ஆகியவற்றைக் குறிக்கும் என்பது பழைய உரைகாரர் கருத்து. இவற்றைப் பொதுவாக வேதத்திற்கு உபகாரப்படும் சாத்திரங்களைக் குறிப்பனவாகக் கொள்ளலாம்.*

வேதத்துள் இலைமறை காய்போல் மறைந்து கிடக்கும் பொருள்களை விளக்கும் பகுதியை ' உபநிடதம்' என்றும், வேதத்தின் ஞானகாண்டம் என்றும் உரைப்பர்.

'அறத்தினுள் அன்புநீ: மறத்தினுள் மைந்துநீ:
வேதத்து மறைநீ: பூதத்து முதலும்நீ' (பரி.3:65-66)

என்னும் பரிபாடல் பகுதியில் 'வேதத்து மறை' என்பது 'உபநிடதம்' என்பதைக் குறிக்கும் என்பர். மறை - உபநிடதம் என்பது பரிமேலழகர் உரை.

வேத வேள்வி

செந்தீப் பேணி வேள்வி செய்து வழிபடும் முறை மூவேந்தர் நாட்டிலும் மிகப் பரவியிருந்ததாகத் தெரியவருகிறது. அந்தணர் வேள்வி நடத்துதற்கு உரியராகக் கூறப்படுகின்றனர். காடுகளில் முனிவர் செய்யும் வேள்வியைப் பற்றிய குறிப்பும் உண்டு. சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் பாரி, அதிகமான் முதலிய குறுநில மன்னர்களும் அந்தணரைக் கொண்டு வேள்வி செய்வித்து வழிபாடு

* ஆறுஅறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்து
கூறாமல் குறித்ததன்மேல் செல்லும் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற்று எண்கையாய்!'
(கலித்.கடவுள் வாழ்த்து 1-4)

வியாகரணம், சோதிடம், நிருத்தம், சந்தம், சிக்கை, கற்பம் என்னும் ஆறினையும் வேதாங்கம் என்பர்:

'கற்பமகை, சந்தம்கால், எண் கண்.
தெறறென் நிருத்தம் செவி, சிக்கை மூக்கு
உற்ற வியாகரணம் முகம். பெற்று
சார்பின் தோன்றா ஆரண வேதக்கு
ஆதி அந்தம் இல்லை: அது நெறி' (மணி.27:100-104)

நிகழ்த்தினர் என்பது புறநானூறு, பதிற்றுப்பத்து, மதுரைக்காஞ்சி முதலியவற்றிலிருந்து தெளிவாகத் தெரிய வருகின்றது.

வேள்வி செய்த முறைமையையும் அதில் நெய் முதலியன வார்த்து வழிபட்டமையும் ஒருசில பாடல்களில் விவரிக்கப்பட்டுள்ளன. முக்கியமாகப் 'பார்ப்பன வாகை' என்னும் துறையில் அமைந்த 166-ஆம் புறப்பாட்டைச் சான்றாகக் குறிப்பிடலாம். இருபத்தொரு துறைகள் வேள்வியுள் உண்டு என்பது,

'மூவேழ் துறையும் முட்டு இன்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோர் மருக !' (புறம். 166:8-9)

எனவரும் இந்தப் புறப்பாடல் பகுதியால் புலப்படும். வேள்விக்கு முதன்மையாக இருந்து நடத்திவைப்பவன் வேள்வி ஆசான் எனப்படுவான்(பரி,2:61)வேள்வி நிகழ்த்தும் போது, யாக பத்தினியர் உடனமர்ந்து ஏவல் செய்தலும் மான்தோல் அணிதலும் உண்டு. வேள்விச்சாலை வட்டவடிவமாயும், வேள்விக் குண்டம் பருந்து விழுங்குவது போன்ற வடிவத்திலும் தூண் நடப் பட்டதாயும் .அமைக்கப்பெற்றிருந்ததாகத் தெரிய வருகிறது (புற,229:பெரும்பாண்.315-319). இவற்றைப் பின்வரும் பகுதி நன்கு விளக்கும்.

'முறை நற்கு அறியுநர் முன்னுறப் புகழ்ந்த
தூஇல் கொள்கைத் துகள்அறு மகளிரொடு
பருதி உருவின் பல்படைப் புரிசை,
எருவை நுகர்ச்சி, யூப நெடுந்தூண்
வேத வேள்வித் தொழில் முடித்ததூஉம' (புறம்.224:5-9)

வேள்வியில் காட்டுள்ளும் நாட்டுள்ளும் வாழும் பதினான்கு வகைப் பசுக்களிலிருந்து கிடைக்கும் நெய்யை நீர் நாணும்படியாக மிகுதியாகச் சொரிந்து எண்ணற்ற பல வேள்விகளைச் செய்தனராம். கொழுப்புடன் கூடிய ஊன் கலந்த சோற்றைப் பலியாகத் தீயில் சொரிந்தனர்.

காடு என்றா நாடு என்று ஆங்கு
ஈரேழின் இடம் முட்டாது
நீர் நாண நெய் வழங்கியும்

எண் நாணப் பல வேட்டும்
மண் நாணப் புகழ் பரப்பியும் ' (புறம்.166:19-23)

'நிணம பெருத்த கொழுஞ் சோற்றிடை,
மண் நாணப் புகழ் வேட்டு,
நீர் நாண நெய் வழங்கிப்
புரந்தோன்....... ' (புறம்.384;15-18)

'நல்பனுவல் நால் வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங் கண்ணுறை
நெயம் மலி ஆவுதி பொங்கப் பல்மாண்
வீயாச சிறப்பின் வேள்வி முற்றி:
யூபம் நட்ட வியன்களம் பலகொல்.' (புறம்.15:17-21)

'உருகெழு மரபின் கடவுட் பேணியர்
கொண்ட தீயின சுடர் எழுதோறும்
விருமபுமெய் பரந்த பெரும்பெயர் ஆவுதி
''(பதிற்.21:5-7)

மேலே காட்டிய பாடற்பகுதிகள் வேள்வி செய்த முறைமைகளை விளக்குகின்றன. மந்திர விதிகளின் முறைப்படிச் செய்யப்படுவது இவ் வேள்வி என்பது, 'மந்திர விதியின் மரபுரி வழா அந்தணர் வேள்வி'(முருகு.95-96)என்பதால் பெறப்படும். பதிற்றுப் பத்தில் வரும், 'கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது வேள்வி வேட்டனை' என்று தொடங்கும் பதிற்றுப்பத்துப் பாடலிலும் (74)வேள்வி செய்யும் வகை நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. பெருஞ் சேர விரும்பொறை தன் மனைவியோடு அமர்ந்து யாகம் செய்வித்த பயனால் அவனுடைய தேவியின் கருவில் சால்பு, செம்மை முதலிய நற்குணங்கள் நிரம்பிய புதல்வனைப் பெற்றான் என்று தெரிவிக்கப்பெற்றிருக்கிறது.

யாகம் செய்தார் சுவர்க்கம் புகுவர் என்னும் நம்பிக்கையும் காணப்படுகிறது. 'ஆவுதி மண்ணி, மா விசும்பு வழங்கும் பெரியோர் போல' (மதுரைக். 494-495) என்னும் மதுரைக் காஞ்சி அடிகள் இதனைக் குறிப்பிடுகின்றன. பாலைக் கௌதமனார் என்னும் புலவர் விருப்பின்படி பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஒன்பது பெருவேள்வி செய்வித்துப் பத்தாம் பெருவேள்வியில் அப்பார்ப்பனப் புலவரும் அவர் பத்தினியும் சொர்க்கம்

பெற்றார்கள் என்பது பதிற்றுப்பத்து மூன்றாம் பத்துப் பதிகத்தில் காணும் செய்தி.

வேள்வி செய்கின்ற களங்களுக்கு மக்கள் சென்று ஆங்கு நிகழும் காட்சிகளைக் காணுதலும் வழிபடுதலும் உண்டு என்பதை,

'வேள்வியின் அழகுஇயல் விளம்புவோரும்' (பரி.19:43)

என வருவது கொண்டு அறியலாம்.

பரிபாடலில் திருமால் வேள்வியின் உருவமாக வெளிப் படுதல் வருணிக்கப்பட்டிருக்கிறது.

'செவ்வாய் உவணத்து உயர்கொடியோயே!
கேள்வியுள் கிளந்த ஆசான் உரையும்,
படிநிலை வேள்வியுள் பற்றி ஆடுகொளலும்,
புகழ்இயைந்து இசைமறை உறுகனல் முறைமூட்டித்
திகழ்ஒளி ஒண்சுடர் வளப்பாடு கொளலும்
நின உருபுடன் உண்டி:
பிறர் உடம்படு வாரா
நின்னொடு புரைய
அந்தணர் காணும் வரவு '(பரி. 2: 60-68)

இப்பாடற் பகுதியுள் பொதிந்த கருத்தைப் பின்வரும் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களின் பொருட்சுருக்கப் பகுதியால் நன்கு உணரலாம். அது வருமாறு:

கருடக் கொடியை உடையோய்,வேள்வியாசானது
உரை நின் உருவம்: வேள்விக்குரிய பசுவைக் கொள்ளல்
யூப உருவாகிய நினக்கு உணவு; வேள்வித்தீயை முறையாக
மூட்டிச் சுடரினது பெருக்கத்தை உண்டாக்கிக் கோடல்
அந்தணர் காணுகின்ற நின்வெளிப்பாடு; கடவுள் இல்லை
என்பாரும் அதுகண்டு உண்டென்பர்.

முருகப்பெருமானின் ஆறுமுகங்களுள் ஒன்று வேத விதிப்படி செய்கின்ற அந்தணர் யாகங்களில் தீங்கு வாராதபடி நினைக்கும் என்றும், மற்றொருமுகம் அரிய நூற்பொருள்களை ஆராய்ந்து முனிவர் இன்புறும்படி திசைகளை விளங்கச்செய்யும் என்றும் கூறுகிறார் நக்கீரர்.

'காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே:ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ அந்தணர் வேள்வி
ஓர்க்குமமே:ஒருமுகம்,
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடி,
திங்கள் போலத் திசை விளக்கும்மே, (முருகு. 94-98)

முருகப்பெருமான் விளங்கும் திருப்பரங்குன்றத்தில் வேள்வி வழிபாடு மிகுதியாக நிகழ்ந்தமையை ஒரு பரிபாடல் கற்பனை முறையில் தருகிறது. இக்குன்றம் வசை இன்றி அமைந்த புகழ்ப் பெருக்கினாலும் வேள்வி நடைபெறும் சிறப்பினாலும் திக்கு எங்கலும் பரந்த பெருமையையுடையது. இங்கே முருக பூசையின் பொருட்டுப் புகைக்கும் அகிற்புகையும் வேள்வியில் புகையும் ஆகாயத்தின் மேலே மண்டி எழுகின்றன. இப்புகைகள் சூரிய மண்டலமும உலகில் தெரியாதபடி வானம் முழுவதும் இருள் பரப்பிவிடுகினறன. வானுலகு வரையிலும் புகை செல்ல, ஆண்டு உறையும் இமையா நாட்டமுடைய தேவரும் புகை தம் கண்களை வந்து முட்டுகையினால் இமை முகிழ்த்து விலகிச் செல்கின்றனராம்.

'வசை நீங்கிய வாய்மையால், வேள்வியால்,
திசை நாறிய குன்று அமர்ந்து, ஆண்டு ஆண்டு
ஆவி உண்ணும் அகில் கெழு கமழ்புகை
வாய்வாய் மீபோய்,உம்பர் இமைபுஇறப்ப:
தேயா மண்டிலம் காணுமாறு இன்று' (பரி.17:28-32)

இவ்வாறாக இமையாரையும் இமைக்கச் செய்யும் வகையில் எழுந்தது வேள்விப்புகையும் அகிற்புகையும் எனக் கற்பனை செய்யும் அளவுக்கு அங்கு வேள்விகள் மிகுதியாக நடை பெற்றிருக்க வேண்டும் அன்றோ?

அரசரும் பிறரும் அந்தணரைக் கொண்டு வேள்வி பல செய்வித்த செய்திகள் பலவாக உள்ளன. அரசருள் முதுகுடுமிப் பெருவழுதி சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவன். இவன் பல வேள்விகளைச் செய்தமையால், 'பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்று சிறப்பிக்கப்படுகிறான்.

'பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறை போகிய
தொல் ஆணை நல் ஆசிரியர்

புணர் கூட்டு உண்ட புகழ்சால சிறபபின்,
நிலம்தரு திருவின் நெடியோன போல, '

(மதுரைக்.759-763)

என வரும் மதுரைக்காஞ்சி அடிகள் இவன் ஆற்றிய பல் யாகசாலைகளைக் குறிப்பிடுகின்றன.

'யூபம் நட்ட வியன்களம் பலகொல் ' (புறம்.15:21)என வரும் புறநானூறு இவனுடைய யாகசாலையில் நாட்டப்பட்டுள்ள தூண்களை வியந்து போற்றுகிறது. இவன் யாகம் செய்த பெருஞ்சிறப்பால், 'நெடியோன்' என்று போற்றப்படுகிறான். இவனைத் தவிர, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன், நான்மறை முனிவர் சுற்றமாகவும் மன்னர் ஏவல் செய்யவும் வேள்வி செய்தான் (புறம்.26:12-15). சோழர்களில் கரிகாலன் செய்த வேள்வியும் (புறம். 224:4-9), சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் செய்த வேள்வியும் (புறம். 397:20-21) குறிக்கப்பெற்றுள்ளன. கிள்ளிவளவன் நாட்டில் வேள்வி பலவாக நிகழ்ந்தது என்பதனை,

'அறுதொழில் அநதணர் அறமபுரிநது எடுத்த
தீயொடு விளங்கும நாடன' (புறம். 397 20-21)

என இவன் போற்றப் பெறுதலால் நன்கு புலனாகும்.

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பானைப் பற்றிய குறிப்பு புறநானூற்றிலே நான்கு பாடல்களில் காணப்படுகிறது (16,125,367,377). இவன் இராசசூயம் என்னும் பெருவேள்வி செய்தான் என்பதனை இவனது பெயருக்குரிய சிறப்பு அடைமொழி தெரிவிக்கும். இதுவன்றிப் பாடல்களில் தெளிவான சான்று இல்லை. 377- ஆம் புறப்பாட்டில்,

'அவி யுணவினோர புறங்காபப
அறநெஞ் சத்தோன்'வாழ நாள் '(புறம்.377.5-6)

என்று இவன் வாழ்த்தப் பெறுகிறான். இதிலிருந்து இவன் அவியுணவினோராகிய தேவரை வேள்வியாற் போற்றினான் என்பது குறிப்பால் பெறப்படும்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன், செல்வக்கடுங்கோ வாழியாதன், பெருஞ்சேரலிரும்பொறை என்னும் சேரமன்னர் மூவர் செய்த வேள்வியைப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது.

பதிற்.21, 70, 74). இவர்களுள் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் வேள்வியால் தேவர்களையும் ஆள்வினை வேள்வியால் விருந்தாய் வரும் மக்களையும் பேணினான் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளான் (பதிற்.21:1-15). பாலைக்கௌதமனார் என்னும் புலவர் வேண்ட பத்துப் பெருவேள்விகளை வேட்பித்தவனும் இவனே.

அதிகமான் நெடுமானஞ்சி (புறம்.99:1,350:1), பாரி வள்ளல் (புறம். 122:), கரும்பனூர் கிழான் (புறம். 384) என்னும் குறுநில மன்னர்கள் அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும் வழிபட்டனர் என்று தெரியவருகிறது. தென்னவன் மறவன் பண்ணி என்பான் செய்த பயங்கெழு வேள்வியை அகநானூறு குறிப்பிடு கின்றது(அகம். 13:11-12).

அரசர்களேயன்றி நீரினும் நிலத்தினும் சென்று பொருளீட்டி வந்து, நாட்டின் செல்வ நிலையைப் பெருக்கும் வணிகப் பெரு மக்களும் வேள்விக்கு வேண்டுவன செய்து வந்துள்ளமையைப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

'அமரர்ப் பேணியும், ஆவதி அருத்தியும்,
நல் ஆனொடு பகடு ஓம்பியும்,
நானமறையோர் புகழ் பரப்பியும்
பண்ணியம் அட்டியும் பசும் பதம் கொடுத்தும்
புண்ணியம் முட்டாத் தண்நிழல் வாழ்க்கை'

(மதுரைக். 200-204)

என்று இவ் வணிகரின் வாழ்க்கைச் சிறப்புப் பேசப்பட் டுள்ளது.

காட்டில் தவமுனிவர் இயற்றும் வேள்வியும் சில இடங்களில் சிறப்பிக்கப்பெற்றிருக்கின்றது. முனிவர் இயற்றும் வேள்விக்கு யானை, மந்தி முதலிய பிராணிகளும் உதவி செய்கின்றனவாம்.

கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல்
மஞ்ஞை ஆலும் மரம்பயில் இறும்பின்,
கல்லைபாய்ந்து உதிர்த்த மலர்வீழ் புறவின்,
மந்தி சீக்கும் மாதுஞ்சு முன்றில்
செந்தீப் பேணிய முனிவா, வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறு இயங்கு அருவிய மலைகிழ வோனே!

(பெரும்பாண்.494-500)

முனிவர்களின் வேள்விப் பயனால் உலகிற்கு நன்மை விளைதல் உண்டு. இருங்கோவேளின் குலமுதல்வன் வட பக்கத்தில் ஒரு முனிவனுடைய ஓமகுண்டத்தில் நின்று தோன்றியதாக ஒரு குறிப்புக் காணப்படுகிறது (புறம். 201:8-12) வேளிர்கள் எல்லாருமே இவன் வழியினர் என்று கொள்வர்.

நீயே,
வடபால் முனிவன் தடவினுள் தோன்றி,
செம்பு புனைந்து இயற்றிய சேண்நெடும்புரிசை,
உவரா ஈகை, துவரை ஆண்டு,
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போர் அண்ணல்.!

(புறம்.201:8-12)

என்று கபிலர் இருங்கோவேளின் குடிச்சிறப்பைப் பேசுகின்றார்.

முனிவர்களுள் சிறந்தவராகிய பரசுராமன் செய்த வேள்வி நிகழ்ச்சியை அகநானூற்றின் பாடற்பகுதி விளக்குகிறது:

மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன்று அரிதினின் முடித்த வேள்வி,
கயிறு அரை யாத்த காண்தரு வனப்பின்,
அருங்கடி நெடுந்தூண்போல, யாவரும்
காண லாகா மாண்எழில் ஆகம் ! (அகம். 220:5-9)

இப்பாடற்பகுதியில், யாவராலும் காணக்கூடாத தலைவியின் எழில் நலத்திற்குப் பரசுராமன் அரிதின் முயன்று செய்த வேள்விக் குண்டத்துத் தூண் உவமிக்கப்பட்டிருக்கிறது.

அவியுணவை 'நாற்ற உணவு' (புறம். 62:17) என்றும், எங்கும் பரந்த புகழைத் 'திசை நாறிய புகழ்' (பரி.17:29)என்றும் நாற்றம் என்னும் சொல் உயர்வு கருதி வழங்கிய வழக்கிற்கு எதிர்மாறான பொருள் இப்பொழுது வழங்குவது யாவரும் அறிந்ததே. இதுபோன்றே கடவுளை அக்கினிவழி வழிபடும் முறைக்கு அமைந்த வேள்வி என்னும் புனிதமான பெயரை விருந்தோம்புதலுக்கும் வழங்குவதாயினர். பின்னூலோர் (புறப்பொருள் வெண்பாமாலை, 215). விருந்து புறந்தருதலை, 'அடுநெய் ஆவுதி' (பதிற்.21:13) என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. போர்க்களத்தில் பகைவர்களைக் கொன்றழித்துப் பேய்

களுக்கு விருந்து வைத்தலையும் களவேள்வி எனச் சங்கப்பாடல்கள் குறிக்கின்றன. இவையெல்லாம் காலப்போக்கில் நேர்ந்த வழக்கு விநோதங்களா என்பது ஆராய்தற்குரியதது.

வேள்வி செய் அந்தணர்

வேள்வி செய்யும் அந்தணர்கள் நன்கு போற்றப்படுகின்றனர். அரசர்களும் வணங்கிப் போற்றுவதோடு அவர்களைக் கொண்டு வேள்வி செய்தும், அவர்களுக்கு நிலம், பொருள்கள் முதலியன தானம் செய்தும் அவர்களைப் பேணி வந்துள்ளனர்.

பார்பார்க்கு அல்லது பணிபு அறியலையே
என்பது பதிற்றுப்பத்து (63:1)

அந்தணர்களது தோற்றமும், அவர்களது இயல்பும், கல்வி அறிவு ஒழுக்கங்களும் அங்கங்கே சுட்டிக்காட்டப்படுகின்றன. இவர்கள் பசுக்களைப் போன்ற இயல்பு வாய்ந்தவர்கள் (புறம். 9;1). இருபிறப்பாளர் என்று போற்றப்படுபவர்கள் (முருகு. 182, புறம்.367:13). 'இருபிறப்பு,இருபெயர்,ஈரநெஞ்சத்து,ஒருபெயர் அந்தணர்' என்பது பரிபாடல் (பரி.14:27-28).காலையில் குளிர்ந்த நீரில் நீராடுவார்கள் (பரி.6:43-45)ஈர ஆடையொடு வழிபாடு இயற்றுவர் (முருகு.182-185). மார்பில் பூணூல் அணிபவர்கள் (பரி.11:83). மிகுந்த நூற்கேள்விகளையும் ஐம்புலன்கள் அடங்கிய விரதங்களையும் நான்கு வேதங்களையும் உடையவர்கள். 'ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை நான்மறை முதல்வர்' (புறம். 26:12-13) என்றும், 'மறைகாப்பாளர் '(பெரும். 301) என்றும், 'வேதியர்' (பரி.11:84)என்றும், 'வாய்மொழிப் புலவர்' (பரி.9:13) என்றும் குறிக்கப்படுகின்றனர். கேள்விச் செல்வம் மிகுதியும் உடையவர்கள்.'கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த வேள்வி' (பெரும்பாண். 315-316) கேள்வி அந்தணர் கடவும் வேள்வி. (கலி. 36:25-26)

நெருப்பை ஓம்பி வழிபடுபவர்கள் (புறம்.122:3). இவர்கள் ஓம்பும் நெருப்பு மூன்று வகைப்படும். அதனால் இவர்கள் முத்தீச் செல்வமுடையவர்கள் என்றும் கூறப்படுவர். முத்தீ (புறம். 2:22. புறம்.367:13:முருகு.181) என்னும் குறிப்புக் காணத்தக்கது. இவர்கள் முத்தீயை வலம் செய்து வழிபடுதலை, 'ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான்போல்' (கலி.69:5) என்பது புலப்படுத்தும்.

இவர்கள் நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசரிய வாழ்க்கை நடத்தும் இயல்பினர்(முருகு.179-180). பிரமசாரிகள் புரசமரத்தின் மட்டை நீக்கிய தண்டும் கமண்டலமும் கைகளில் கொண்டு விரத உணவை உண்பர் (குறுந்;156:2-5). பார்ப்பனரின் மக்கள் குடுமித் தலையராயிருந்தனர்: மிகவும் அடர்த்தியாகத் தலைமயிரை இவர்கள் வளர்த்து வநதனர். குதிரையின் தலை மயிருக்கு இவர்களுடைய தலைமயிரை ஒப்புக் கூறுவதிலிருந்து இதனை உணரலாம் (ஐங். 202:2-4) இதனால் பார்ப்பாரும் குடுமித் தலையரா யிருந்தனர் என்பது தெரியலாம்.

அந்தணர் இல்லம் சாணத்தால் மெழுகப்பட்டிருக்கும். வழிபடு தெய்வங்களும் அங்கு உண்டு. இல்லத்தை அடுத்த குறுங்கால் பந்தலில் பசுங்கன்று கட்டப்பட்டிருக்கும். வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகளும் நாயும் இவர்களுடைய இல்லத்தில் சேர்வதில்லை. அங்கு வாழும் கிளிகள் வேத ஒலி செய்யும். பார்ப்பன மகள், பறவைப் பெயர்ப்படு வத்தத்தால் ஆக்கிய (இராசான்னம் என்னும் பெயர் பெற்ற நெல்) சோற்றைச் சமைப் பாள். கொம்மட்டி மாதுளையின் பசுங்காயோடு மிளகுப்பொடி சேர்த்து, கருவேம்பின் இலையும் கலக்கப்பட்டு, சிவந்த வாசனை யோடு கூடிய பசுவின் மோரையும் ஆகார மாய்க்கொள்வர். மாவடு வினால் ஆக்கிய ஊறுகாயும் சேர்த்துக்கொள்வர். இவ்வாறு அந்தணர் இல்லம் பெரும்பாணாற்றுப்படையில் சித்திரிக்கப் படுகிறது(பெரும்பாண். 297-310).

அந்தணர் எல்லாருமே உணவு முறையில் இந்நிலையிலே இருந்தனர் என்றும் கருதக்கூடவில்லை. அந்தணப்புலவராகிய கபிலர் கள்ளும் ஊனும் பாரிவள்ளல் தரத் தாம் உண்டு இனிது இருந்தமையைச் சுட்டுகின்றார். இப்புலவர் தம்மை, 'யானே பரிசிலன் மன்னும் அந்தணன்' (புறம். 200:13) என்றும், 'அந்தணன் புலவன் கொண்டுவந் தன்னே' (புறம்.201:7) என்றும் தம்மை விச்சிக்கோனுக்கும் இருங்கோவேளுக்கும் அறிமுகப்படுத்துகிறார். தம் உயர்வும் பெருமிதமும் தோன்ற அந்தணன் என்றும் புலவன் என்றும் இவர் கூறிக்கொள்ளுதல் வெளிப்படை. பாரி இறந்தபின் கபிலர் அவர்தம் மகளிரை அழைத்துக்கொண்டு அம்மலையை விடுத்து நீங்கும்போது,

மடடுவாய் திறப்பவும், மைவிடை வீழ்ப்பவும்,
அட்டு ஆன்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்

பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ, முன்னே, இனியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் - வாழியோ பெரும் பெயர்ப் பறம்பே-
கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறுஇருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே

என்னும் புறப்பாட்டால் (113) கபிலர் பாரியின் பறம்பு மலையில் ஊனும் கள்ளும் உண்டு வாழ்ந்தமை தெரியவரும்.

இவர்களுக்கு ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைத் தொழில் உண்டு. அதனால் இவர் 'அறுதொழில் அந்தணர்' எனப்படுவர் (புறம். 397:20)

'ஓதல், வேட்டல், அவைபிறர்ச் செய்தல்
ஈதல், ஏற்றல் என்று ஆறுபுரிந்து ஒழுகும்
அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுகி'

என்பது பதிற்றுப்பத்து (24:6-8). இதில் அந்தணர்க்கு அரசர் வழிபாடு செய்து ஒழுக வேண்டும் என்பதை வழிமொழிந்து ஒழுகி என்னும் பகுதி குறிக்கிறது.

சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும் தாமப்பல் கண்ணனார் என்னும் பார்ப்பனப் புலவரும் வட்டாடும் இடத்துச் சோழன் வெகுண்டு அவர்மேல் வட்டுக் கொண்டு எறிய, அப் பொழுது புலவர்,

'ஆர்புனை தெரியல் நின் முன்னோர் எல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்; மற்றுஇது
நீர்த்தோ நினக்கு?' (புறம். 43:13-15)

என வெறுப்பக் கூறினர். கபிலர் என்பார் பாரிமகளிரை இருங்கோவேளிடத்து அழைத்துச்சென்று, அவரை மணஞ்செய்து கொள்ள வேண்டும் என்று வேண்டுமிடத்து,

'இவர் யார்? என்குவை ஆயின், இவரே,
....
நெடுமாப் பாரி மகளிர்: யானே
அந்தணன், புலவன் கொண்டுவந் தனனே. (புறம்.201:1-7)

எனத் தமது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்குத் தாம் ஓர் அந்தணப் புலவர் என்பதை நினைவு படுத்துகிறார்.

அந்தணர்க்கு நிலமும் பொன்னும் பிறபொருள்களும் தானமாக அளித்து முன்னர் முதலியோர் அவர்களைப் பாதுகாத்து வந்தனர். காரிவள்ளல் தமதுநாட்டின் பகுதிகளை அந்தணர்க்கு உரிமையாக்கினான் (புறம். 122:1-3).

ஏற்கின்ற பார்ப்பார்களுக்குப் பொன் முதலியவற்றை நீரட்டித் தானமாகக் கொடுப்பது மரபு

ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து (புறம். 367:4-5)

என வரும் புறநானூற்று அடிகளும்,

கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்க்கு
அருங்கலம் நீரொடு சிதறிப் பெருந்தகைத்
தாயின் நன்று பலர்க்கு ஈத்து. (புறம்.361:4-6)

அறம் கரைந்து வயங்கிய நாவின், பிறங்கிய
உரைசால் வேள்வி முடித்த கேள்வி,
அந்தணர் அருங்கலம் ஏற்ப, நீர்பட்டு,
இருஞ்சேறு ஆடிய மணல்மலி முற்றத்து.' (பதிற்.64:3-6)

எனவரும் பதிற்றுப்பத்து அடிகளும் மேலதற்குச் சான்றாம்.

இங்கே குறிக்கப்பெற்ற அந்தணர்தம் மரபுக்கு ஏற்ற வண்ணம் நடக்கும் ஒழுக்கசீலர்களாவர். இவரே வேள்வி முதலியன புரிதற்கும், அரசர்க்கும் பிறர்க்கும் அறிவுரை கூறுதற்கும் தகுதி படைத்தவர். இவர்கள் ஓரளவு முற்றத் துறந்த முனிவர்க்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றத் தக்கவர்களாயுள்ளனர். அந்தணர் குடியில் பிறந்தும் வேதம் ஓதுதல் முதலிய் நெறிபிறழ்ந்தாரும், வேள்வி செய்யாதாரும் ,'வேளாப் பார்ப்பார்'. எனப்படுவர். இவருக்குச் சங்கறுத்தல் போன்ற தொழில்கள் உள எனத் தெரியவருகிறது.

வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளை களைந்து ஒழிந்த கொழுந்தின் அன்ன,

தளை பிணி அவிழாச் சுரிமுகப் பகன்றை. (அகம். 24:1-3)

இவரைப் போன்றே தலைவற்குத் தோழனாக அமர்ந்து, தூது செல்லும் தொழில் புரிவோரும், பிற உலகியல் தொழில்களில் சிக்கி உழல்வோரும் சாதாரண நிலையில் உள்ள பார்ப்பனராவர். பார்ப்பான் தூது செல்லும் நிகழ்ச்சியை அகநானூற்றுப் பாடல் ஒன்று நன்கு விவரித்து உரைக்கின்றது (337). தூது செல்லும் தொழில் பூண்ட பார்ப்பான் ஒருவன் கையில் கொண்ட வெள்ளிய ஓலைச்சுருளுடன் பாலை நிலத்து வழியே வருகிறான். அவன் உண்ணாமையால் வாடிய விலாப்புறத்தை உடையவனாயிருந்தான். அவன் கையிடத்தே உள்ள பொதியை அந்நிலத்து வாழும் வழிப்பறி செய்யும் கொடுந்தொழில் மறவர் கண்டு, 'இவன் கையில் உள்ளது பொன்னாகவும் இருத்தல் கூடும்' என்று கருதி, அவனைக் கொன்று வீழ்த்திவிடுகின்றனர். அப் பார்ப்பான் உடுத்துள்ள கந்தையைத் தவிர, அவனிடம் பொன் ஒன்றும் இல்லாமை கண்டு, தமது கொலைத்தொழிலால் பயன் சிறிதும் இல்லாமற் போகவே கையை நொடித்து அப்பாற் போய் விடுகின்றனராம். இந்நிகழ்ச்சியை,

'.தூது ஒய் பார்ப்பான் மடி வெள் ஓலைப்
படையுடைக் கையர் வரு தொடர் நோக்கி,
உண்ணா மருங்குல் இன்னோன் கையது
பொன் ஆகுதலும் உண்டு. எனக் கொன்னே
தடிந்து உடன் வீழ்த்த கடுங்கண் மழவர்,
திறன்இல் சிதாஅர் வறுமை நோக்கி
செங்கோல் அம்பினர் கைந்நொடியாப் பெயர.

(அகம். 337:8-14)

என வரும் அகநானூற்றுப் பாடல் தருகிறது.

ஒரு தலைவி இரவுக் குறியிடத்துச் செல்ல, அங்குப் .புலிக்கு வைத்த வலையில் ஒரு குறுநரி அகப்பட்டது போன்று, கருங்குட்டத்தினாலே காலும் கையும் குறைந்து முடமாகிய நிலையில் உள்ள ஒரு முதுபார்ப்பான், தலைவியினிடம் காதல்வேட்கை கொண்டான் போல் பேசுதலும், தலைவியின் சாதுரியச் செய்கையால் அவளை ஒரு பெண் பிசாசு என்று அஞ்சி அவன் ஒலமிட்டு ஒடுதலும் ஆகிய நிகழ்ச்சிகள் நாடகச் சுவைபடக் கலித்தொகையில் (கலி.65) சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

இப்பாடலில் அந்த முதிய பார்ப்பான் எந்நாளும் தனி நிற்கும் மகளிரைக் கண்டால், இவ்வாறு காம வேட்கையால் பேசி

அணுகும் இயல்புடையோன் என்று அவனைச் சுட்டித் தலைவி

என்றும் தன்,
வாழ்க்கை அதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்வீழ்க்கைப்
பெருங் கருங்கூத்து.' (கலி. 65:27-29)

என்று பேசுவதும் கவனிக்கத்தக்கது.

இவ்வாறாக வேதம் வல்ல வேள்விசெய் அந்தணர் முதல் அந்தணர்தம் நெறிதவறிய வேளாப்பார்ப்பானையும், பாங்கனாயும், அரசர்க்கு உறுசுற்றமாயும், ஊனும் கள்ளும் உண்பவனாயும், தகாத வழிகளில் செல்பவனாயும் உள்ள பல்வேறு வகையில் வேறுபட்ட நிலையினரான அந்தணர்களையும் சங்கநூல்வழி நாம் காணலாகும்.

2. கடவுளர்

இந்திரன்

இந்திரன் வானுலகத் தேவர்களின் அதிபதி. 'துறக்கத்து அமரர் செல்வன்' (பரி.5:69), 'அமரர் செல்வன்' (பரி.5:51), 'வானத்து வளம்கெழு செல்வன்'(பரி.5:59), 'அருநிலை உயர் தெய்வத்து அணங்கு'(பரி.9:12)'விண்ணோர் வேள்வி முதல்வன்' (பரி.5:30) என்று சிறப்பிக்கப்படுகின்றான். இவன் வடபால் உயர்ந்தோங்கி யுள்ள பெருமலையைக் காவல் புரிபவன். (பரி.9:1-3) .நூறு வேள்விகளைப் புரிந்தவன்: அதனால் விளைந்த பகைவரை வென்று கொல்லும் வெற்றி படைத்தவன் (முருகு. 155-156). ஆயிரம் கண்களையுடையவன் (முருகு.155: கலி.105;15, பரி.9:9): பகைவர்களை வருத்தும் இயல்புடைய வச்சிராயுதத்தைக் கையில் ஏந்தியவன் (புறம்.241:3, பரி.18:30, கலி.105:15) ' நெடியோன் என்றும் இவன் குறிக்கப்படுகிறான் (புறம். 241:3). நான்கு கொம்பு கள் படைத்த யானையின் பிடரியில் ஏறி நடத்துபவன்.

> ' நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து, நூறுபல்
> வேள்வி முற்றிய வென்று அடு கொறறத்து,
> ஈர்-இரண்டு ஏந்திய மருப்பின், எழில்நடை,
> தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
> எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்.' (முருகு.155-59)

இவன் சுவர்க்க லோகத்திற்கு அதிபதியாதலின் வீர சுவர்க்கம் புகும் வீரர்கள் இவனது வானுலகிற்கு வருவர். சுவர்க்க உலகிற்கு வருவாரை இந்திரன் பிற தேவர்களுடன் சென்று எதிர்கொள்வான் என்பது ஒரு நம்பிக்கை. ஆய்வள்ளல் இறந்தபோது, உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடிய கையறுநிலைப் பாடலில் கற்பனையாக; இரவலரைப் புரந்த ஆயை எதிர்கொள்ள இந்திரன் கோயில் முரசம் வானத்தின்கண் ஒலிக்கின்றது என்று மொழி கின்றார் (புறம். 241:1-5).

இந்திரனும் பிற தேவர்களும் அமுதை உட்கொள்ளுபவர். ஆகவே அவர்கள் அருந்தும் அமுது, 'இந்திரர் அமிழ்தம்' .(புறம்.182:1-2) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேவ மைந்தரும்

மகளிரும் புடைசூழ ஆகாய கங்கையில் இவன் நீராட்டியர்வான். பாண்டிய மன்னன் கூடல்வாழ் மாந்தருடன் வையையில் நீராடிய காட்சியை இந்திரன் நிகழ்த்தும் நீராட்டத்துடன் ஒப்பிட்டுப் பேசுகின்றார் ஒரு புலவர்:

வெருவரு கொல்யானை வீங்குதோள் மாறன்
உருகெழு கூடலவரோடு,வையை
வருபுனல் ஆடிய தன்மை பொருவுங்கால்-
இருமுறநீர் வையம் படித்து என்னை? யான் ஊர்க்கு
ஒருநிலையும் ஆற்ற இயையா!! அருமரபின்,
அந்தர வான் யாற்று, ஆயிரம் கண்ணினான்
இந்திரன் ஆடும் தகைத்து. (பரிபாடல் திரட்டு. 2:91-97)

வானத்தின்கண் மழைக்காலத்தில் தோன்றும் பல வண்ணமுடைய வானவில்லை 'இந்திரவில்' என்பர். இது 'திருவில்'(புறம்.20:10,அகம்.84:1),'விசும்பின்வில்' (அகம்.192:3-4), 'வானவில்'(பரி.18:39),'குறைவில்' (பெரும்பாண்.292) என்னும் பெயர்களால் சுட்டப்பட்டுள்ளன. கார் காலத்திலும் கூதிர் காலத்திலும் இவ்வில்லின் தோற்றம் நிகழ்தல் இயற்கை.

'அச்சிரக்கால் ஆர்த்து - அணிமழை - கோலின்றே
வச்சிரத்தான் வான வில்லு.' (பரி.18:38-39)

முருகன் அவதார சரிதத்தில் இந்திரன் தொடர்பும் உள்ளது. இறைவன் உமாதேவியாரோடு கூடியின்புற்றதினால் தோன்றிய கருவை,இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்க அவ் இறைவன் சிதைத்துவிடுகிறான். பின், அக்கருவை எழுமுனிவரும் பெற்று அக்கினியில் அவியோடு சொரிகின்றனர். அம் முனிபத்தினியருள் அருந்ததி ஒழிந்த ஏனைக் கார்த்திகை மாதர் அறுவரும் அங்கியில் பெய்ததனை அருந்திக் கருக்கொண்டு, சரவணப் பொய்கையில் தாமரைப் பூவிலே முருகனைக் கருவுயிர்த்தனர்.முருகன் பிறந்த அன்றே இந்திரன் இகல் மிகுதியால் தன் வச்சிராயுதத்தினாலே எறிய, அக்குழந்தை ஆறு வேறு உருவாகிப் பின் ஓர் உருவாய் ஆறுமுகத்தோடு அமைகிறது. குழவிப்பருவத்தில் படைக்கலம் இன்றியே முருகப்பெருமான் செய்த போருக்கு இந்திரன் தோற்றுவிடுகிறான். பேராற்றல் படைத்த இவனே தனது சேனைக்குத் தலைவனாதற்குரியன் என இந்திரன் கருதுகிறான்.

இந்திரன், அக்கினி, யமன் முதலிய தேவர்கள் முருகனுக்கு ஆயுதங்கள் அளிக்கின்றனர். பின், அவன் தேவர் சேனைக்கு அதிபதியாக விளங்குகிறான் (பரி.5:21-70). தேவர்க்காக அவுணர் களை அழித்து, இந்திரன் மகள் தேவயானையை முருகன் திருமணம் செய்துகொள்கிறான் (பரி.9:9). தெய்வயானை, 'ஐஇருநூற்று மெய்ந்நயனத்தவன் மகள்' (பரி.9:9) என்றும், 'மறுஇல் கற்பின் வாணுதல் கணவன்'. (முருகு.6) என்றும் போற்றப்படுகின்றாள்.

வள்ளுவப் பெருந்தகை ஐந்தவித்தான் ஆற்றலுக்கு எடுத்துக் காட்டாக ஐம்புலன்களுக்கு அடிமையாய், அகலிகையை விரும்பிச் சாபம் எய்தி நின்ற இந்திரனை எடுத்துக்காட்டி, ஐந்தவித்த முனிவரின் பெருமையைப் புலப்படுத்துகின்றார். இச்சரிதத்தையும் சங்கப்புலவர் ஒருவர் சுட்டியுள்ளார். இந்திரன் கவுதமமுனிவரின் பத்தினி அகலிகையை விரும்பி, அம்முனிவன் ஆசிரமத்தை விட்டு நீங்கிய சமயம் பார்த்துச் சென்று அவளைப் புணர்ந்ததும், பின் முனிவர் வருகையால் அஞ்சிய இந்திரன் பூனை வடிவில் மறைந்து வந்ததும், நிகழ்ந்தவை அறிந்து சினங்கொண்ட கவுதமன் சாபத்தால் அகலிகை கல்லுருவம் பெற்றதும் எங்கும் பரந்து பேசப்படும் ஒரு புராண வரலாறு. இவ்வரலாற்றை விளக்கும் ஓவியம் திருப்பரங் குன்றத்து எழுத்துநிலை மண்டபத்தில் (ஓவியக்கூடம்) தீட்டப் பட்டிருந்ததாம். ஆங்குள்ள சித்திரங்களைக் காண்பார். இப்புராண நிகழ்ச்சிச் சித்திரத்தைச் சுட்டிக் காட்டித் தமக்குள் பேசிக் கொண்ட உரையாடலைப் பரிபாடலில் காணலாம்.

'இந்திரன், பூசை: இவள் அகலிகை: இவன்
சென்ற கவுதமன்: சினன் உறக் கல் உரு
ஒன்றிய படி இது என்று உரைசெய்வோரும்
இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்.' (பரி.19:50-53)

இஃது இந்திரனது பெருமைக்குச் சிறுமை தரும் கதை.

அந்நாளில் பேரூர்களிலே இந்திரனுக்கு விழாக்கொண்டாடி வந்தனர். இது 'இந்திரவிழா.' என வழங்கப்பட்டது. இவ்விழா வில் பூக்களை மிகுதியாகப் பயன்படுத்தி வந்தனர் என்பது,

'இந்திர விழவிற் பூவின் அன்ன
'புன்தலைப் பேடை வரிநிழல் அகவும்.' (ஐங். 62:1-2)

எனவரும் ஐங்குறு நூற்றுப் பாடற் பகுதியால் புலனாகும். பதிற்றுப்பத்து இதனைப் 'பலபூவிழவு' (பதிற். 30:15) என்று

சுட்டுகிறது. பழனம் சூழ்ந்த ஊர்களிலே நிகழும் இந்தப் பலபூ விழாவாகிய இந்திரவிழாவைக் கண்டு களிக்க, மக்கள் திரண்டு செல்வதையும் பதிற்றுப்பத்து சுட்டுகிறது(30:14-21) பதிற்றுப் பத்தும் ஐங்குறுநூற்றுப் பாடலும் மருதநிலத்தார் பேரூர்களிலே கொண்டாடிய விழாவாகவே இந்திர விழாவைச் சுட்டியுள்ளன. இது கொண்டு இந்திரன் மருதவைப்புக்கள் சூழ்ந்த நாட்டின் சிறப்புத் தெய்வம் என்பது பெறப்படும். சிலப்பதிகாரத்திலே, 'இந்திரவிழவூர் எடுத்த காதை', யில் புகார் நகரில் நடைபெற்ற இந்திரவிழா பற்றிய செய்திகளை விரிவாக இளங்கோவடிகள் பாடியுள்ளமையும் ஈண்டுக் கருதத்தக்கது.

தேவர்கள

தேவர்கள் பிரமனிடத்திலிருந்து தோன்றியவர்கள் (பரி.8:3-7) வானுலகில் வாழ்பவர்: ஆகவே இவர்கள் 'வானோர்',(புறம். 213:10),' வானத்து நிலைபெறு கடவுள், '(பதிற்.21:15) என வழங்கப்படுகின்றனர். தவிரவும், அமரர்(புறம்.99:1), புத்தேள் (புறம்.22:35) ஐயர்(பதிற்.70:19), உயர்ந்தோர் (புறம்.174:20) மேலோர்(புறம்.229:29)அவி உணவினோர்(புறம்.377:5), 'நாற்ற உணவினோர்', 'இந்திரர்', (புறம்.182:1)முதலிய பெயர்களும் உண்டு.

மேரு மலையில் தேவர்கள் உறைகின்றனர். இமையவர் உறையும் சிமையச்செவ்வரை(பெரும்பாண்.429)என்பதனால் இது புலப்படும். அன்றியும் தேவசாதியார்கள் இமயமலையைத் தமக்கு வாழ்விடமாக உடையர். இம்மலையின் உச்சியில்தான் தேவர்களின் வான் உலகம் உள்ளது(நற்.356:3-4)'தெய்வங்களின் நிலையை உடையது இமயம்' எனப் பதிற்றுப்பத்துக் கூறும்.

'கடவுள் நிலைய கல்ஓங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயம் ஆக
தென்அம் குமரியொடு ஆயிடை அரசர் '(பதிற்.143:6-8)

இங்குத் தேவருடனே தேவமகளிரும் உடன்கூடி வாழ்ந்து வருதலை,

'பொன்படு நெடுங்கோட்டு இமயத்து உச்சி.
வான் அரமகளிர்க்கு மேவல் ஆகும் '(நற்.356:3-4)

என்னும் நற்றிணைப் பகுதியால் அறியலாம். இத்தேவர்களையும் இம்மலையையும் இந்திரன் காக்கின்றான். எனவே இம்மலை,

'இருநிலம் துளங்காமை வடவயின் நிவந்து ஓங்கி,
அருநிலை உயர்தெய்வதது அணங்குசால் தலைகாக்கும்
உருமுச் சூழ் சேண சிமை' (பரி.9:1-3)

என்று பாராட்டப்படுகிறது.

பூவுலகில் நல்வினை செய்வார் இவ் வா உலகு பெறுவர். உலகில் பிறர்க்கு ஈந்து இசைபட வாழும் நல்லோர்க்கு அல்லாது பிறர்க்கு வானுலகம் கிட்டுதற்கு அரியதாம். இது அரிதின் முயன்று பெறத்தகுவது என்பது 'அரும்பெறல் உலகம்' (அகம்.55:14: புறம்.213:10) என்பதனால் தெரியவரும். இவ்வுலகு இனிய வளம் பல நல்கும் பொலம் பூங்காவினை(கற்பகக்கா) உடையது: மிக்க எழில் வாய்ந்தது. பல்வகையாக வேறுபட்ட பன்னிற மலர்களைத் தாங்கிச் செல்லும் வையை யாற்றின் நீரில் தோன்றும் நிற ஒளியைத் துறக்கத்தின் எழிலுக்கு ஒப்பிடுகிறார் ஒரு புலவர்(பரி. 12:77-84). இங்கே எல்லாரும் எவ்வகைக் குறைபாடும் இன்றி இன்பம் துய்த்து வாழ்வர். உடையோர் இல்லார்க்கு ஈதலும், இல்லோர் உடையோர்பால் இரத்தலும் இந்நாட்டில் இல்லை. இவ்வகையான இவ் வானுலகின் இயல்புகளை,

இவண்இசை உடையோர்க்கு அல்லது அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல் -
வளம்படு குருசில் நீ ஈங்கு இது செயலே? (புறம்.50:14-17)

ஈண்டுச் செய் நல்வினை ஆண்டுச் சென்று உணீஇயர்
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன் (புறம்.174:19-20)

..................இன்நிலைப்
பொலம்பூங் காவின் நல் நாட்டோரும்
செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை,
உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
கடவது அன்மையின் கையறவு உடைத்து (புறம். 38:11-15)

எனவரும் புறப்பாட்டுப் பகுதிகளால் உணரலாகும். இவ் வானுலகைக் குறித்தும், அங்கு வாழும் வானோர்களைக் குறித்தும்புலவர்கள் பாடும் பாடல் தொடர்கள் இவர்களின் அருமை பெருமை களைப் புலப்படுத்துகின்றன. அவை வருமாறு:

பெரும் பெயர் உலகம் (குறுந்.83), உயர்நிலை உலகம் (குறுந்.361:2: ஐங்.442:3-4; புறம் .50:15 ;249: 11,287: 12: பதிற் ,70 :19 : 89:11:மதுரைக்.147,471),அரும்பெறல் உலகம் (அகம். 55: 14 :213:18:புறம்.213:10),அரிதுசெல் உலகம் (புறம்.250:21) தவல்இல் உலகம் (அக.178:16),தொய்யா உலகம் (புறம்.214:8) புத்தேள் உலகம் (புறம்.22:35)மதுரைக்.698)தேவர் உலகம் (புறம் .228:11) பொலம் பூங்காவின் நல் நாட்டோர் (புறம்.38:13) உயர்ந்த தேஎத்து விழுமியோர் (மதுரைக். 200),உயர்நிலை உலகத்து உயர்ந்தோர் (பதிற்: 89:11). உயர்ந்தோர் உலகம்(புறம். 174:20,213:10),மேலோர் உலகம்(புறம்.229:22,240:6),மாடோர் உறையும் உலகம் (பதிற்.70:23), அரும் பெறல் உலகத்து ஆன்றவர் (புறம். 213:23).

இவ்வானுலகில் வாழும் தேவர்களோ அழுக்கு நீங்கிய உடம்பினை உடையவர்; தெய்வத் தன்மையால் ஒளிபடைத்த வாடாத பூவை அணிந்தவர்; இதழ் குவியாத கண்களை உடையவர்; அவியாகிய நாற்ற உணவினை உண்பவர்கள் (புறம்.62:16-19: மதுரைக்.456-460). இத் தேவர்களின் மகளிர் வான் உறை மகளிர் (பதிற்.14:13),அந்தர மகளிர் (ஐங்.76:4):வானவ மகளிர் (மதுரைக் 582)எனப்படுவர். இவர்கள் அமுதம் உண்பவர்கள்; இவர் உண்ணும் அமிழ்தம், 'அரும்பெறல் அமிழ்தம் ' என அருமையாகப் போற்றப்படுவது (குறுந்.83:1-2) திருமாலினால் இவர்களுக்கு வழங்கப்பட்டதாகும். இந்த அமிர்து (பரி.3:33-34). கலை வளர் மதியம் நிறைமதிக்குப்பின் அமரர்க்கு உணவாகப் பயன்படுகின்றது.

ஆம்நாள் நிறைமதி அலர்தரு பக்கம் போல்,
நாளின்,நாளின், நளிவரைச் சிலம்பு தொட்டு,
நிலவுப் பரந்தாங்கு, நீர் நிலம் பரப்பி,
உலகு பயம் பகர: ஓம்பு பெரும் பக்கம்
வழியது பக்கத்து அமரர் உண்டி (பரி.11:31-35)

மதிஉண் அரமகளென ஆம்பல் வாய்மடுப்ப' (பரி.10:78)

தேவர்கள் உண்ணும் அமிழ்தம் ஒருவர் பெறும் பொருள்களில்

எல்லாம் மிக்ச் சிறந்த பொருளாகப் போற்றப்படுவது. நல்ல மகிழ்ச்சிக்குரிய நற் செய்தியைக் கேட்டபோது, 'இச்செய்தி சொன்னவர் தேவாமிர்தத்தை உணவாகப் பெறட்டும்' என்று உவந்து வாழ்த்தும் மரபு சங்கப்பாடல்களில் காண்கிறது.

அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப்
பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ, அன்னை: ! (குறுந்.83:1-2)

அமிழ்தம் உண்க - நம் அயல் இலாட்டி!:
(குறுந்.201:1:நற்.65:1)

உலகில் நன்றாற்றி வானுலகு புகுவாரை விண்ணுலக ஆன்றோர் விருப்பத்தோடு விருந்தாக ஏற்றுக் கொள்வர் (புறம்.*213:22-24*) என்றும், போரில் வீரமரணம் எய்திய மறவர்கள் தேவர் உலக மகளிரை மணந்து சுவர்க்க இன்பம் அனுபவிப்பர் என்றும் மக்கள் கருதினராம் (புறம்.*287:10-12*).

தேவர் முப்பத்து மூவரும் பிறரும்

பஞ்ச பூதங்களும், நவகோள்களும், அசுரரும், நால்வேறு பகுதியுள் அமைந்த தேவர் முப்பத்து மூவரும், யமனும் அவனுடைய ஏவலனாகிய காலனும், மூவேழுலகமும், அவற்றில் உள்ள உயிர்ப்பன்மையும் ஆகிய எல்லாம் திருமாலிடத்தினின்று தோன்றியவை என்று வேதம் கூறும் (பரி.3:1-14). இவர்களுள் தேவர் முப்பத்து மூவர் ஆவர். துவாதசாதித்தியரும், மருத்துவர் இருவரும், வசுக்கள் எண்மரும், ஏகாதச ருத்திரர்களும் ஆவர் (முருகு.167: பரி.3:6-8,27-28,8:4-7) இவர்களை, '. நால்வேறு இயற்கைப் பதினொரு மூவர்.' என முருகாற்றுப்படை ஒரு தொகுதியாகக் குறிப்பிடுகிறது. இம்முப்பதது மூவரின் வகையினை,

மலரிமிசை முதல்வனும், மற்று அவனிடைத் தோன்றி
உலகுஇருள் அகற்றிய பதின்மரும் இருவரும்,
மருத்து உரை இருவரும், திருந்து நூல் எண்மரும்,
ஆதிரை முதல்வனின் கிளந்த
நாதர் பன்னொருவரும் (பரி.8:3-7)

என்னும் பரிபாடலடிகளில் காணலாம்.

இத்தகையவர்களை உள்ளிட்டு அசுரர், கருடர், கந்தருவர், பூதர், பைசாசர், தாராகணம் முதலிய பதினெண்வகைப்பட்டஇவர்

களை மேற்குறித்த முப்பத்துமூவருடன் ஒருபடித்தாக வைத்து,

நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர் (முருகு. 167-168)

என முருகாற்றுப்படை போற்றுகிறது. இவர்கள் வடக்கே யுள்ள நிலமாகிய உத்தர குருவில் வாழ்பவராவர்; துன்பம் இடை விரவின இன்பமன்றி எந்நாளும் இடையறாது இன்பமாகவே செல்லும் வாழ்க்கையினை உடையவர் (பதிற்று. 68:12-13). இவர் களுள் அசுரர், கந்தருவர் போன்ற ஒரு சில தேவ்சாதியாரைப் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் உள. கந்தருவரின் மென் மொழியும் யாழிசை இனிமையும், இசைபாடும் கந்தருவ மகளிருடைய இயல்பும் பற்றிய ஒரு குறிப்பு முருகாற்றுப்படையில் உள்ளது(முருகு. 141-142).

உலகின் எட்டுத் திக்கினும் நின்று காவல் தொழில் புரியும் திக்குப் பாலர்களைப் பரிபாடலின் எட்டாம் பாட்டு, 'நன்திசை காப்போர்' என்று (பரி. 8:7) குறிப்பிடுகிறது. இவர்களாவார்: இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்போராவர். இவர்களுள் இந்திரனைப் பற்றி விரிவாக முன்னர்ப் பார்த்தோம். மற்றும் அக்கினி, யமன், வாயு, குபேரன் முதலியோர்களைப் பற்றிய குறிப்புக்களும் காணக்கிடக்கின்றன. அக்கினியும் யமனும் கொடுமை மிக்க தேவதைகளாகவும், அழிவுத் தொழில் புரியும் கடவுளர்களாகவும் கூறப்பட்டுள்ளனர். வெம் மையும் கேடும் விளைபோராகவும் கொண்டு இவ்வகை நிகழ்ச்சி களுக்கு உவமையாகவும் கூறப்படுகின்றனர். முருகப்பெரு மானுக்கு அனலன் தன் மெய்யிற் பிரித்துக் கோழி கொடுத்தனன்: யமன் அப்பெருமானுக்கு வெள்ளாட்டு மறியைக் கொடுக்கின்றான் (பரி.5:56-57).

ஊழி முடிவில் உலகை அழிப்பதற்குத் தீயும் யமனும் சூரியனும் ஒன்று சேர்கின்றனவாம். இதனை,

தீசெங் கனலியும் கூற்றமும் ஞமனும்
மாசுஇல் ஆயிரம் கதிர் ஞாயிறும் தொகூஉம்
ஊழி ஆழிக்கண் (பரி. 3:21-23)

என்னும் பாடற்பகுதி உணர்த்தும். அக்கினியை அந்தணர் வழிபடுதலை இதற்கு முன்பு வேதவேள்விபற்றிக் கூறிய பகுதியில் காணலாம்.

வன்மைக்கு நெருப்பையும், மென்மைக்கு நீரையும் ஒப்புக் கூறுகின்றனர் (குறு.95:4-5). காற்றோடு நெருப்பும் கலந்து அழிவு செய்தாற்போல அரசன் பகைநாட்டை அழிக்கின்றான் என்று கூறப்பட்டிருக்கிறது (புற. 41:16-18). வளிதரும் செல்வன். (கலித்.16:16). விசும்பினும் ஞாலத்தகத்தும் வளியே எதிர்போம் (கலி.144:39-40) என்று காற்றுத்தேவன் கலித்தொகையில் சுட்டப்பட்டிருக்கின்றான். .பெருங்கடல் தெய்வம் நீர்நோக்கித் தெளித்து. (கலி.131:1-2), 'பிறங்கு இரு முந்நீர்' (கலி.144:46) என வருவன கடல் தெய்வத்தைச் சுட்டியுரைப்பினும் இங்கே வருணனைக் குறித்ததாகக் கொள்ளத் தெளிவில்லை. .மாநிதிக் கிழவனும் போன்ம்' (அக.66:17) எனக் குபேரன் உவமையாகச் சுட்டப்பட்டிருக்கிறான். இவ்வுவமையால் அவன் நிதிக்கெல்லாம் உரிமையுடையான் என்பது பெறப்படும்.

யமன்

இந்திரனைவிடவும் சங்கப்பாடல்களில் யமன் அதிகமான அளவில் கூறப்பட்டிருக்கிறான். இவன் கூற்று (புறம்.4:12, 5:1, 226:6, 255:4: குறு.283:5: பதிற்.14-10) கூற்றம் (அக.61:1: பதிற். 26:13, 51:35, 84:7: புறம். 75:11, 98:17, 210:8, 221:8, 227:1, 230:1, 237:9, 361:1, 362:7), காலன் (புறம். 41:1, 240:5; கலி. 105:19, 147:40, பதிற். 39:8) ஞமன் (புறம்.6:9: பரி.5:61) மடங்கல் (புறம், 363:9: 366:23: பரி.3:8): தருமன் (பரி.3:8) எருமை (கலி.101:25, 103:43) என்னும் பெயர்களால் சுட்டப் படுகிறான். மன்பதைகளின் உடலினின்றும் உயிரை மாய்க்கும் பண்புடைமையால் இவன் கூற்று, கூற்றம் எனப்பட்டான். 'உயிர் செகு மரபின் கூற்றம்' (மலைபடு.209). 'உயிர் திறம் பெயர்ப்பான்' (கலி.100:15) உயிர்களை உரிய காலம்பார்த்துக் கொண்டுசெல்லுதலினால் வந்த பெயர் ஆகும் 'காலன்' என்பது, 'காலனும் காலம் பார்க்கும்' (புறம்.41:1), 'செயிரின் குறைநாளால் பின் சென்று சாடி, உயிர் உண்ணும் கூற்றம்' (கலி. 105:37-38) ஊழியில் யாவற்றையும் மறித்து அழித்தலினால் 'மடங்கல்' எனப்பட்டான்.

'மடங்கல் உண்மை மாயமோ அன்றே' (புறம். 363:9, 366:22). 'மடங்கலும் கணிச்சியும் காலனும் கூற்றும், தொடர்ந்து செல் அமையத்துத் துவன்று உயிர் உணீஇய'. (கலி.105:20-21). துலாக்கோல் போல நடுநிலை பிறழாது நீதி செய்வதனால் தருமன், ஞமன் என்று பாராட்டப்படுகின்றான். 'உறைவரை நிறுத்தகோல்.', உயிர்திறம் பெயர்ப்பான்போல், முறை செய்தி. (கலி.100:13-16), '.திருந்துகோல் ஞமன்.' (பரி. 5:61),

உருவும் புகழும் ஆகி, விரிசீர்த்
தெரிகோல் ஞமன்ன் போல, ஒருதிறம்
பற்றல் இலியரோ! நின்திறம் சிறக்க!. (புறம். 6:8-10)

மேலே சுட்டிய பெயர்களுள் காலன், மடங்கல் என்னும் இரண்டும் கூற்றுவனது ஏவலாளரைக் குறிப்பது என்றும் கொள்வர். 'கால முன்பின் பிறவும்' (கலி.105:19), 'காலன் போல் வந்த கலக்கத்தோடு என்தலை மாலையும் வந்தன்று. (கலி. 143:40-41) எனவரும் இடங்களில் நச்சினார்க்கினியர் இக் கருத்தே கொண்டுள் ளனர். 'ஏம கால தூதர்' எனக் கூறுதல் இன்றும் வழக்கில் உண்டு. 'தருமனும் மடங்கலும்' (பரி. 3:8) எனப் பரிபாடல் தருமனுடன் மடங்கலைச் சேர்த்து உரைக்கின்றது (தருமன் - யமன்: மடங்கல் - அவன் ஏவல் செய்யும் கூற்றம் (பரி. 3:8 உரை). இவன் கணிச்சி என்னும் மழுப்படையை உடையவன் (புறம். 42:23, 195:14), 'கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல்'ஒருவன்' (புறம். 195:14). இவன் எருமை ஏற்றினை ஊர்தியாகக் கொண்டவன். அதனால் இவனுக்கு 'எருமை' என்னும் பெயர் ஆகுபெயராய் அமைந்துவிடுகிறது (கலி. 101:25, 103:43, பரி.8.88).

சிற்றத்திற்கும் வலிமைக்கும் கொலைத் தொழிலுக்கும் கூற்றுவன் பல இடங்களில் ஒப்புக்காட்டிப் பேசப்பட்டுள்ளான். '.கூற்று ஒத்தியே மாற்று அருஞ் சீற்றம்.' (புறம். 56:11). '.காலன் அனைய கடுஞ்சின முன்ப'. (பதிற். 39:8)..'கூற்று வெகுண்டன்ன முன்பொடு'. (புறம். 42:23), .'கூற்றத்து அன்ன மாற்றுஅரு முன்பின்'. (புறம். 362:7), .'கூற்றத்து அன்ன மாற்றுஅரு மொய்ம்பு'. (முருகு. 81), '.கூற்றத்து அன்ன கொலை வேல் மறவர்'. (குறுந். 283:5). வருத்தத்தை விளைக்கும் செயலுக்கும் யமன் ஒப்பிடப் படுதல் உண்டு. 'யம வேதனை' என இன்றும் மக்கள் தமது பெரு வருத்தத்தைக் குறித்தல் காணலாம்.

ஒப்பற்ற பேரழகியான நங்கை ஒருத்தியை எதிர்ப்பட்ட ஓர் ஆடவன் அவளால் தனக்கு நேர்ந்த வருத்தம் காரணமாக அவளை யமனோ என்று ஐயுற்றுப் பேசுகிறான்.

'.வல்லவன் தைஇய பாவைகொல்? நல்லார்உறுப்பு எலாம்
கொண்டு, இயறறியாள் கொல்? வெறுப்பினால்
வேண்டுஉருவம் கொண்டதோர் கூற்றம் கொல்?. (கலி.56:7-9)

என்பது அந்த ஆடவனின் ஐய வியப்புரை.

யமன் குறித்த காலத்தில் வந்து உயிர்களைக் கொண்டு செல்லுதலின் சிறிதும் தவறான். விலங்குகளை வேட்டையாடு வதற்கு வலை விரித்தல் போல, இவனும் உயிர்களைக் கவர்வதற்கு வலை விரித்துத் திரிகிறான்.

'.மாற்று அருஞ் சீற்றத்து மாஇருங் கூற்றம்
வலை விரித்தன்ன நோக்கலை' (பதிற். 51:36-36)

ஆகவே, இவன் உயிர்களைக் கொண்டு செல்லும் பொருட்டு எப்பொழுதும் சீற்றத்தோடு சுழன்று திரிந்துகொண்டிருக்கிறானாம்.

'.கார் எதிர் உருமின் உரறி, கல்லென,
ஆர் உயிர்க்கு அலமரும் ஆராக் கூற்றம்.' (புறம். 361:42)

இவன் இரக்கம் இன்றி உயிர்களைக் கொண்டு செல்லுத லினால், 'காலன் என்னும் கண்ணிலி' (புறம். 240;5-6) என்று பழிக்கப் படுகிறான். இவனுக்கு உணவு மன்பதைகளின் ஆர் உயிர்தான். 'உயிர் உண்ணும் கூற்று' (புறம். 4:12). எவ்வளவு புண்ணியம் புரிந்தோர்களாயினும் இவன் விட்டுவைப்பதில்லை: எத்தகையோராயினும் இவன் அவர்தம் இன்உயிரைக் கொண்டு செல்லுதலில் தவறுதல் இல்லை.

'.பாடுநர்க்கு ஈத்த பல் புகழன்னே;
....
துகள்அறு கேள்வி உயர்நதோர் புக்கில்;
அனையன் என்னாது அத் தக்கோனை
நினையாக் கூற்றம் இனஉயிர் உய்த்தன்று'. (புறம். 221 1-8)

யமன் நியதிப்படியே தனது அழிவு வேலையைச் செய்து வருகிறான்; நீதிக்கே அவன் நிலையமாக விளங்குகிறான்; .தருமன். என்றே போற்றப்படுகிறான். இந்த உண்மை தெரிந்திருப்பினும், அவன் செய்யும் அழிவினால் அல்லலுற நேர்ந்துவிட்ட உலகோர் அவனை வைதலும் சபித்தலும் செய்கின்றனர். அவனை அறம் இல்லாதவன் என்று பழிக்கின்றனர். 'அறன் இல் கூற்றம்' (புறம். 210:8, 237:9: 255:4).

மகளைப் பிரிந்த வருத்தம் பொறுக்காத நிலையில், இந்நிகழ்ச்சியைப் பார்க்கும் நிலையில் என் உயிரைக் கொள்ளாது விட்டு வைத்திருக்கும் யமன் புதைக்கப்பட்டு ஒழியட்டும் எனச் சபிக்கிறாள். ஓர் அன்னை. இறந்தோரைப் பெரிய மண் தாழியில் இட்டுப் புதைப்பது முன்னை மரபு. அது போல இந்தக் கூற்றுவனும்

பெரிய தாழியினால் கவிக்கப்பட்டுப் புதையுண்டு போகட்டும். என்கிறாள்.

'மா இருந் தாழி கவிப்ப
' தா இன்று கழிக, எற்கொள்ளாக் கூற்றே'. (நற். 271:11-12)

இத்துணைப் பேராற்றல் படைத்த கூற்றுவனும் குழந்தை முருகனிடம் தோல்வியடைகிறான். யமனது ஆணையை இகழ்கிறான் முருகன். '.எருமை இருந்தோட்டி எள்ளியும் காளை'. *(பரி. 8:86)*. தோற்ற யமன் முருகனுக்கு வெள்ளாட்டு மறி தநதான். யமன் பால் சீற்றமுற்ற எரிதிகழ் கணிச்சியோனாகிய சிவன் அவனுடைய நெஞ்சத்தைப் பிளந்து, அவனது ஆயிருரை மாய்த்து கால காலனாய் விளங்குகிறான். *(கலி. 101:24-26, 103:43-45)*.

சூரிய சந்திரர்களும் தெய்வங்களாகவே போற்றப்பட்டிருக்கின்றனர். '.ஞாயிற்றுப் புத்தேள்.' *(கலி. 108:13)*, '.திங்கட் புத்தேள்'. *(புறம். 27:14)* இவ்விருவரும் கோள்களில் முதன்மைக் கோள்களாக உள்ளனர். எனவே; இவர்களைக் குறித்து, '.கோளும் நாளும்'. என்னும் பகுதியில் பார்ப்போம்.

3. மால்

குன்று தோறும் ஆடும் குமரன் முருகன் மட்டும் அல்லன்; மாலும் குன்று உறை தெய்வமே. மதுரைக்கு அண்மையிலே திருப்பரங்குன்றத்தில் முருகன் எழுந்தருளிக் காட்சி தருமாறு போல, இந்நகரக்கு மற்றொரு திக்கில் இருங் குன்றத்திலே மால் எழுந்தருளிக் காட்சி தருகிறான். திக்கெலாம் போற்ற அங்கே மால் குடிகொண்டிருத்தலால், அக்குன்றம், 'மாலிருங் குன்றம்' என்னும் பெயரையும் பெறுவதாயிற்று.

'மால்' (முல்லை. 3, கலி. 107:38, 123:4; பரி.1:31,13:6 என்றும், 'மாயோன்' (புறம். 57:2) என்றும் போற்றப்படும் இத் தெய்வம் காடு உறையும் பொதுவர்களால் சிறப்பாக வழிபடப் பெறுவதாம். கலித் தொகையுள் அமைந்த முல்லைக் கலிப்பாடல்கள் பதினேழில் பொதுவர் குரவையாடித் திருமாலைப் போற்றும் செய்திகள் அமைந்தவை ஐந்தாம் (கலி. 103,104, 105,107, 108). இப்பாடல்களிலே ஆயர்தம் வாக்கில் வைத்து, 'தேயா விழுப் புகழ்த் தெய்வம்' (கலி. 103:75), 'தொல்கதிர்த் திகிரியான்' (கலி. 104:78), 'ஆடு கொள் நேமியான்' (கலி. 105:72), 'தெய்வமால்' (கலி. 107:22), 'மலையொடு மார்பு அமைந்த செல்வன்' (கலி.108:55) என்று மாலைச் சிறப்பித்துப் பேசுகின்றார் புலவர். ஏறு தழுவிய காதலனுடைய முடிமேல் அணிந்த முல்லைப் பூவைத் தன் கொம்பிலே எடுத்துக்கொண்டு அந்தக் காளை துள்ளவும், அந்த முல்லைப் பூ அவனுடைய காதலியின் மயிருக்குள்ளே வந்து விழுகின்றது. அதனைக் கெட்ட பொருளைப் பெற்றாரைப் போல, அந்த ஆயர்மகள் மகிழ்வுடன் எடுத்து முடித்துக் கொள்கிறாள். இச் செய்தி கேட்ட அவளுடைய தந்தையோடே தமையன்மார் எல்லாம் கூடியிருந்து, தெய்வமாகிய மால் இவளுக்கு இதனைத் தின்னணி தாகக் கொண்டுவந்து காட்டிற்று என மகிழ்ந்து, களவொழுக்கம் வெளிப்படாது ஒழுகிய அந்த ஆயனுக்கே மணமுடித்துக் கொடுக்க ஒருப்படுகின்றனர். இந் நிகழ்ச்சியைத் தெய்வச்செயல் எனப் போற்றும் அவ் ஆயர்கள், 'தெய்வ மால் காட்டிற்று' என்று பேசுவதிலிருந்து காடுறை மக்களாகிய அந்த ஆயர் கூட்டத்தார் போற்றும் சிறப்புத் தெய்வம், 'மால்' என்பது விளங்கும். மாலுக்குத் திருவைச் சேர்த்துத் 'திருமால்' எனவழங்கும் வழக்கு சங்கப் பாடல்களில் இல்லை. ஆனால், நாம் இப்பொழுது பலபொருள்

தரும் இச் சொல்லைத் தெய்வத்தைக் குறிக்கும் பொழுது, 'திருமால்' என வழங்கிவருதலினாலே, இனித் 'திருமால்' என்றே குறிப்பிடத் தொடங்குகிறேன்.

திருமால் காணவர் போற்றும் சிறப்புத் தெய்வமே ஆயினும் எல்லா நிலத்தும் எங்கும் தொழப்படும் தெய்வமும் அவனே என்கின்றனர். ஆலமர் செல்வனாகிய அரனும், கடம்பு உறை காளை ஆகிய முருகனும், மற்றும் பல்வேறு இடங்களில் உள எனப் போற்றப்படும் தெய்வங்களும் எல்லாம் அவனே என்கின்றார் ஒரு புலவர்.

> 'அழல்புரை குழை கொழு நிழல் தரும் பலசினை
> ஆலமும், கடம்பும், நல் யாற்று நடுவும், கால் வழக்கு
> அறுநிலைக் குன்றமும், பிறவும்,
> அவ்வவை மேவிய வேறுவேறு பெயரோய்' (பரி. 4:66-69)

என்பதனால் எல்லா நிலத்தும் போற்றப்படும் தெய்வமாகவும் இத்திருமால் உள்ளான் என்றும், இத்திருமால் வணக்கம் எங்கும் பரந்திருந்தது என்றும் கருதலாம்.

திருமாலைப் பற்றிய குறிப்பு முல்லைக் கலியில் மிகுந்தும், பிற சங்க நூல்களில் ஏகதேசமாயும் வரும். பரிபாடல் திருமாலைத் துதிக்கும் ஆறு தனிப்பாடல்களைக் கொண்டுளது (1-4, 13,15). பரிபாடல் திரட்டில் வரும் ஒரு பாடலையும் இதனோடு சேர்ப்பின், இப்பரிபாடல் தொகுதி திருமாலுக்குரிய பாடல்கள் ஏழினைக் கொண்டுள்ளதாகும். இவற்றில் திருமாலின் திருவுருவக் காட்சிகளும், அவன் கொண்டுள்ள ஊர்தி, கொடி, படை ஆகியவற்றின் விவரமும், அவனோடு தொடர்புடைய திருமகள், ஆதிசேடன், பிரமன், காமன் ஆகியோரைப் பற்றிய செய்திகளும், வேத, உபநிட தங்கள் கூறும் அவனது மெய்ப்புகழும், அவன் உயிர்கள் மாட்டுப் பேரருள் கொண்டு மன்பதைகளுடன் கலந்து உறவாடுவதற்காகத் தன் இச்சையால் எடுத்துக்கொண்ட அவதார நிகழ்ச்சிகளும், மாய அவுணரை மாய்த்து உலகினை உறுத்திய துயரப் படலத்தை ஒதுக்கித் தள்ளிய அருட்பாடுகளும் ஆகியவற்றை நல்ல முறையில் கவிஞர்கள் வளமாகத் தந்துள்ளமை காணலாம்.

'நெடுவேள்' எனப் போற்றும் முருகப்பெருமானைப் போலவே திருமாலும் நீண்ட பெருவடிவுடையவன்... 'அடைமொழியாக வன்றி'. 'நெடியோன்'. என்னும் பெயரா' லயே

திருமாலைக் குறித்துள்ளனர் (மது. 763, பெரும். 402: பதிற். 15:39; கலி.104-8). இவன் நீலநிற வண்ணன் (கலி. 104:38); நன்றாகக் கழுவப்பெற்ற நீலமணிபோன்றும், கார்மேகத்தைப் போன்றும், கடலைப் போன்றும், கார் இருளைப் போன்றும், கரிய பூவைப் புதுமலர் போன்றும் இவனுடைய திருமேனி ஒளிரும் (புற. 56:5, 58:15; பெரும். 30,402; பரி.1:61-62, 2:52, 3:3, 4:67, 57, 13:42-43, 15-50; கலி. 119:3). இவ்வகையானை மேனி அழகினாலே '.மாயோன்'. என்னும் பெயர் இவனுக்கு வழங்குகிறது.

'திருமணி, திரைபாடு அவிந்த முந்நீர்,
வருமழை இருஞ்சூல் - மூன்றும் புரையும் மா மெய்.
(பரி. 4:6-7).

'வெளவல் கார்இருள் மயங்குமணி மேனியன். (பரி. 15:50)
'பூவை விரிமலர் புரையும் மேனியை. (பரி. 1:6-7)'.

கார், மலர்ப் பூவை, கடலை, இருள், மணி,
அவை ஐந்தும் உறழும் அணிகிளர் மேனியை'. (பரி. 13:42-43)

நீலமலை மேலே தோன்றும் இளஞாயிற்றினது வண்ணம் போன்று இலங்குகின்றது இவன் தலைமேல் அணிந்துள்ள திருமுடி; இவன் தன்னுடைய அரையில் அணிந்துள்ள பொன்னாடையோ நீல மலைமேல் பரந்து படிந்த இளஞாயிற்று ஒளிபோலத் துலங்குகின்றது (பரி. 13:1-2). எனவே இவனது உடுக்கை இவனுடைய மேனி நிறத்திற்கு மாறுபட்ட வண்ணத்துடன் தோற்றம் தரும் (பரி. 4:8). இப் பீதாம்பரம் 'பொலம்புரி ஆடை' (பரி. 88) என்றும், 'எரிதிரிந்தன்ன பொன்புனை உடுக்கை' (பரி. 1:9-10)என்றும் பாராட்டப்படுகிறது.

திருமாலின் மார்பு மலைக்கு ஒப்பாகக் கூறப்படுகிறது (கலி. 108:55; பரி. 13:10-12). இம் மார்பிலே விளங்கும் மாலை மலையினின்று இழியும் அருவிபோலக் காண்கிறது (பரி. 13:3-4). இம் மாலை பல்வகையான வண்ண மலர்களால் கட்டப்பெற்றதாகும். கரிய மாலின் மார்பிலே விளங்கும் இப் பூந்தார் கார் வானிலே தோன்றும் இந்திரவில் போன்றும் காணப் பெறுகிறது.(அக. 175:13-16); கடற்கரைக் கருமணிலிலே விழுந்து கிடக்கும் ஞாழல், புன்னை, தாழை, செருந்தி முதலியவற்றின் மலர்களில் வண்டுகள் ஒலித்துத் தேனுண்ணும் படியான காட்சியைத் திருமா லின் தாருக்கு ஒப்புக் கூறுகின்றார் ஒரு புலவர் (கலி. 127:1-5). மலர்த் தண் தாருடன் (கலி. 134:1). துளசி மாலையும்,

மலர்களை இடை யிட்டுத் தொடுத்த துளசி மாலையும் இம்மார்பில் காணலாம் (பதிற். 31:7-9, பரி. 13:59-60). இத்துளவத்தால் அமைந்த கண்ணியையே அவன்தன் திருமுடியிலும் பூண்டுள் ளான்(பரி. 4:59, பரி.13:29) மார்பில் பூவாரம் போன்றே பொன்னா பரணமும், மணி ஆபரணமும் வேறு விளங்குகின்றன. இந்த ஆபரணங்கள் வான வில்லைப் போன்று மிகவும் ஒளி சிறந்து தோன்றும் (பரி. 1:31:2:28,29). இதில் கௌஸ்துபமணி' என்னும் பெரும்பதக்கம் காணப்படும் (பரி. 1:8-9). அந் நித்தில மதாணி வான் போன்று தோன்றும் (பரி. 2:29-30).

இவனது எழில் மார்புக்கு (பரி. 1:63) மேலும் எழில் தருவதாக உள்ளது, அம்மார்பில் திருமகள் வீற்றிருத்தல். அவள் இருக்கை நிறத்தால் பொன் போலத் தோன்றி யாவராலும் புகழப்படும் மறுப் போல அங்கு நீங்காது காணப்படும். இத் திருக்காட்சியைத் தரும்மார்பினைத் 'திருமறு மார்பு' (பெரும்.29:பரி.1:38). 'திருஞெமிர்அகலம்'(பதிற்.31:7)'மாவுடைய மலர் மார்பு' (பரி.1:3-8), 'செய்யோள் சேர்ந்த மார்பு'.(பரி.2:31)என்று பாராட்டு கின்றனர். அவனையே 'திருமறு மார்பன்' என்றும் அழைக் கின்றனர்(கலி.104:9)

எழில் மார்பின் கீழாக உதரத்தே அமைந்த உந்தியில் தாமரைப் பூவும் உண்டு. எங்கும் மூடிய நிறைந்த வெள்ளத்திடையே இம் மாநிலம் தோன்றாத முதற்பெருங்காலத்து, பிரமனை ஈன்றளித்தது இது(பரி.3:91-94). இதனைச் சுட்டி,

நீல்நிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நானமுக ஒருவற்பயந்த பல்இதழ்த்
தாமரைப் பொகுட்டு(பெரும்பாண்.402-404)

என்று பெரும்பாணாற்றுப்படை போற்றுகிறது. இப்பெரு மானது திருக்கண்கள் இந்த உந்தித் தாமரை போன்றவை. கண்ணே,புகழ்சால் தாமரை அலர் இணைப் பிணையல்(பரி.2:53) என்பர். (பரி. 1:6, 4:60-61, 15:49). இந்த அருட்கண்ணிற்கு ஆளாக வேண்டி அன்பர்கள் தொழும் அவனுடைய திருவடிகள் செந்தாமரை மலர்கள் போன்றவை. தோன்றியதும், தோன்று கின்றதும்,தோன்றுவதும் ஆகிய காலக் கூறுபாடுகளைக் கடந்து, அக்காலங்கள் தமாமேயாய்த் திருவடிகள் அமைந்துள்ளன (பரி. 13:46-47). இத்திருவடிகள் தம்மைச் சேர்ந்தவரைப் பிறவிப் பெருங்கடலினின்று கரை ஏற்றுபவை. 'மறுபிறப்பு அறுக்கும் மாசு

இல் சேவடி' (பரி. 3:2) என்று இவை சிறப்பிக்கப்படுகின்றன. இங்ஙனம் வீடுபேறு அளித்தலினாலே இத்தாளிணைகள் திருமாலினும் சிறந்தவை என்று போற்றப்படும் (பரி. 4:62).

திருமால் தனது வலக்கரத்தில் சக்கரத்தையும் இடக்கையில் சங்கத்தையும் தாங்கியிருக்கிறார். இவை இரண்டும் கார்மேகம் தவழும் பருவகால வானத்தில் அணிசெய்து விளங்கும் சூரிய சந்திரர்களின் இயக்கம் போன்று காணப்படுகின்றன (பரி, 13:7-9). சக்கரத்தைச் சூரியனுக்கும் (கலி. 134:1-4, அக. 175;14) வெண்சங்கைச் சந்திரனுக்கும் ஒப்புக்காண்டல் பிற நூலகத்தும் உண்டு

'பருவம் வாய்த்தலின் இரு விசும்பு அணிந்த
இருவேறு மண்டிலத்து இயக்கம் போல
நேமியும் வளையும் ஏந்திய கையான். (பரி.13:-9)

நளந்தலை உலகம் வளைஇ, நேமியொடு
வலம்புரி பொறித்த மாதங்கு தடக்கை '. (முல்லை. 1-2)

எனவரும் முல்லைப் பாட்டடிகளால் அவன் ஏந்தும் சங்கு வலம்புரிச் சங்காக இருக்கும் என்பது தெரியவரும். சக்கரப்படை பொன்னால் செய்யப்பட்டதாம். 'பொலம்புனைபுகழ் நேமி' (கலி.104:9). 'பொன் அணி நேமி வலம் கொண்டு ஏந்திய மன்னிய முதல்வன்' (பரி. 1:55-56) என வரும் பகுதிகள் கொண்டு இதனை உணரலாம். திருமாலின் சக்கரமும் சங்கமும் போரில் பெரிதும் வெற்றியளிக்கும் படையாகும். இவற்றால் அவன் தன்னை இகழ்ந்தாரையும் பகைவர்களையும் அழித்து வெற்றி கொண்டான் (அக. 175:14; பதிற். 31:8; புற. 58:15; முல்லை 1-2, பரி. 1:55-56,60-61, 4:9, 2:19, 51, 3:37, 13:9,58; கலி.129:4; 134:3-4)

சங்குசக்கரப்படைகள் மாற்றாரின் உயிர் செகுக்குங்கால் சங்கம் இடியை ஒத்துமுழங்கும்; தன்முழக்கத்தால்பகைவரை நிலைகுலையச் செய்யும். சக்கரமோ பகைவர் உயிர் உண்ணும் கூற்றத்தை ஒக்கும். அதன் நிறமோ கட்ட பெரன்னோடு விளங்கும் நெருப்பின் கொழுந்தை ஒக்கும். இவ்விரு படைகளும் மாற்றார்க்கு மறுக்கம் செய்து, கொன்றொழித்தல் தொழிலில் மேம்பட்டு நிற்றலை இரண்டாம் பரிபாடலின் ஒரு பகுதி விளக்குகிறது. பாட்டில் காணும் சந்த அமைப்பாலும், எடுத்துச் சொல்லும் தகைமையினாலும் அச்செய்யுட் பகுதி ஒரு யுத்தகள வருணனை போன்று உள்ளமை காணலாம்.

ஓடியா உள்ளமொடு உருத்து, ஒருங்கு உடன் இயைந்து,
இடி எதிரி கழறும் - கால் உறழ்பு எழுந்தவர்
கொடி அறுப் இறுபு, செவி செவிடு படுபு
முடிகள் அதிர, படிநிலை தளர,
நனிமுரல்வளை, முடி அழிபு, இழிபு,
தலை இறுபு தாரொடு புரள -
நிலை தொலைபு, வேர், தூர், மடல்,
குருகு, பறியா நீள் இரும் பனை மிசைப்
பல பதினாயிரம் குலை தரை உதிர்வபோல் -
நில்லாது, ஒருமுறை கொய்பு கூடி,
ஒருங்கு உருண்டு, பிளந்து, நெரிந்து, உருள்பு சிதறுபு,
அளறு சொரிபு, நிலம் சோர,
சேரார் இன் உயிர் செகுக்கும் -
போர் அடு குருசில்! நீ ஏந்திய படையே;
ஒன்னார் உடங்கு உண்ணும் கூற்றம் உடலே;
பொன் ஏர்பு அவிர் அழல் நுடக்கு அதன் திறனே.

(பரி. 2:36-51)

இங்ஙனமாகச் சிறப்புடைய சங்கு சக்கரப் படைகளை குறிக் கொண்டு அப்பெருமானை வாழ்த்துதல் புலவர் மரபு. அவன் அணிந் துள்ள துழாய்மாலை முதலிய அணிகளோடு சார்த்தியும் அவன் புகழ் பேசுவர். 'திகிரியான்' (கலி. 104:78), நேமிமால். (பரி. 13:6): நேமியான் (கலி. 105:72; 119:3; 127;4): 'நேமிஅம் செல்வன்' (அக. 175:14), 'துழாய் அலங்கல் செல்வன்' (பதிற். 31:9; பரி. 13:39), 'துழாயோன்' (பரி. 15:15); 'ஆழி முதல்வ' (பரி. 2:19); 'தோலாக் கோட்ட' (பரி. 3:87) என வரும் சிறப்புத் தொடர்களால் இவ்வழக் கினை அறியலாம்.

இவன் வில்லில் கணை தொடுத்துத் தானவர் முதலிய பகைவரை அழிக்கும் வகையைச் சங்குசக்கரப் படைகளைச் சிறப்பித்தவாறே சிறப்பிக்கிறது முதற் பரிபாடல் (பரி. 1:25-30). சங்கு, சக்கரம், விற்படை தவிர பிற ஆயுதங்கள் திருமாலுக்குக் கூறப்படவில்லை. திருமாலுக்கு ஐம்படை உரியது என்பதும், குழந்தைகளுக்குக் காப்பாக ஐம்படைத்தாலி அணிவிப்பதும் பிற்காலத்து உளதாய வழக்குப்போலும்.

திருமாலின் கொடியாகவும் ஊர்தியாகவும் அமைந்துள்ளது கருடப்புள். 'செவ்வாய் உவணத்து உயர் கொடியோயே'. (பரி. 2:60)

எனத் திருமால் விளக்கப்படுகிறார். இக்கொடியைப் .'புட்கொடி' (புற. 56:6; பரி. 1:66; 13:4) என்றும், 'சேவற் கொடி' (பரி. 1:11, 4:37-38; 13:4) என்றும், குறிக்கும் இடங்களும் சில உள. பறவைக் கரசு கருடனாதல் பற்றி இங்ஙனம் குறிக்கப்பட்டது போலும்.

'ஏளர், வயங்குபூண் அமரரை வெளவிய அமிழ்தின்,
பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளினை;
பயந்தோள் இடுங்கண் களைந்த புள்ளின்
நிவந்து ஓங்கு உயர்கொடிச் சேவலோய்! (பரி. 3:15-18)

எனவரும் பரிபாடல் அடிகள் கருடன் ஊர்தி, கொடி என்னும் இரு வகையாகவும் திருமாலுக்கு உறுப்பாக இருத்தலை விளக்கு கின்றன. கருடக் கொடியைத் தவிர பலதேவனுக்குரிய பனைக் கொடி, நாஞ்சில் படை, யானை ஊர்தி ஆகியவற்றைத் திருமாலுக்குரிய கொடிகளாகக் குறிப்பிட்டு அவற்றுள் எல்லாம் உயர்வு பெற்றது கருடக்கொடி என்றும் ஓர் இடத்தில் குறிக்கப்பட்டி ருக்கிறது (பரி. 4:36-42)

இங்ஙனமாக, இதுவரையில் குறிப்பிட்ட திருமால் திருவுருவத்தின் அழகில் கால் தாழ்ந்து அப்பெருமானைத் துதிக்கும் பாடற்பகுதிகள் சிலவற்றைக் காண்போம். இவை திருமாலின் திருவுருவச் சொற்சித்திரமாக இருத்தலின் இவற்றைப் புலவர் வாக்கினாலேயே, அவர்கள் போற்றிப் புகழ்ந்த முறையில் நாமும் பார்த்தல் மிகவும் மகிழ்ச்சி தருவதாகும். அவை வருமாறு;

வாய்வாங்கும் வளைநாஞ்சில், ஒருகுழை ஒருவனை:
எரிமலர் சினைஇய கண்ணை; பூவை
விரிமலர் புரையும் மேனியை; மேனித்
திரு ஞெமிர்ந்து அமர்ந்த மார்பினை; மார்பில்
தெரிமணி பிறங்கும் பூணினை; மால்வரை
எரி திரிந்தன்ன பொன்புனை உடுக்கையை -
சேவல் அம் கொடியோய்! (பரி. 1:5-11)

வண்டு ஊது பொலிதார், திரு ஞெமிர் அகலத்து
கண்பொரு திகிரி, கமழ் குரற் துழாஅய்
அலங்கல் செல்வன் சேவடி. (பதிற். 31:7-9)

அடை இறந்துஅவிழ்ந்த வள் இதழ்த் தாமரை
அடியும்,கையும்,கண்ணும்,வாயும்
தொடியும்,உந்தியும்,தோள் அணி வலயமும்,
தாளும் தோளும் எருத்தொடு பெரியை;
மார்பும் ,அல்குலும்,மனத்தொடு பரியை;
கேள்வியும்,அறிவும்,அறத்தொடு நுண்ணியை
வேள்வியும்,மறனும்,விருப்பொடு வெய்யை;அறாஅ
மைந்தின், செறாஅச் செங்கண்,
செருமிகு திகிரிச் செல்வ! வெல் போர்
எரி நகை இடைஇடுபு இழைத்த நறுந்தார்ப்
புரிமலர்த் துழாஅய் மேவல் மார்பினோய்!
(பரி. 13:50-60)

இவ்வாறு திருமால் திருப்புகழ்களைப் பாடிப் பரவுவார் உயர்ந்த ஞானியராவர். இவர்கள் இந்திரியம் ஐந்தையும் மயக்கமற நீக்கியவர்; மைத்திரி, கருணை, முதிதை, இகழ்ச்சி என்னும் நான்கினாலும் சித்தத்தை தூயதாக்கியவர்; சமாதி நிலை கைவரப் பெற்றவர்கள். இத்தகைய தியானச் செல்வர்களாகிய திருமாலன் பர்கள் அவனைத் தொழுது அவன் பல்புகழ்களையும் விரித்து ரைக்கின்றனர். இத்தனை அளவு சித்தி பெறாத எளிய நிலையில் உள்ள சாமானியரும் அவனைத் தாம் அறிந்தமட்டில் துதித்து ஆராதிக்கின்றனர் (பரி. 4:1-5). அவன் தன்னைத் துதிக்கும் அன்பர் களின் மயக்கங்களைப் போக்குகின்றான் (12:36-37) .அவர்கள் இரு வினையும் இலராகின்றனர் (பரி. 18;48); சுவர்க்கத்தையும் தமக்கு உரிமையாய்ப் பெறுகின்றனர் (பரி. 13:12-13)

ஞானியர் வழிபாடு இங்ஙனமாக முல்லை நிலமாக்கள் குரவைக் கூத்து ஆடி இவனைப் பரவுகின்றனர். முல்லைக்கலிப் பாடல்களில் இவர்கள் குரவையாடிப் பரவும் வகைகள் சிற்சில இடங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆயர் வாழும் சிறுகுடிலின் மன்றத்தில், ஆட்டத்திற்கு ஏற்ற இனிய பண் அமைந்த தாள விசை யுடன் கூடிய ஆடல் நிகழ்த்துகின்றனர் (கலி. 102:34-39). ஒருவரை ஒருவர் தழுவி நின்று கைகோத்து ஆடப்பெறுவது இக் கூத்து.

குரவை தழீஇ, யாம், மரபுளி பாடி,
தேயா விழுப் புகழ்த் தெய்வம் பரவுதும் (கலி.103:74-75)

தொல்கதிரித் திகிரியாற் பரவுதும் (கலி.104:78)

எனக் குரவையாடும் மகளிர் திருமாலைப் போற்றுவது குறிக்கப்படுதல் காணலாம்.

திருமால் திருப்பதிகள் சிலவும் சங்கப்பாடல்களால் தெரியவரும். அவையாவன: இருந்தையூர், குளவாய், திருவரங்கம், திருவெஃகா, திருவனந்தபுரம், திருமாலிருஞ்சோலை என்பனவாம். இவற்றுள் முதலிரண்டு பதிகளைப் பற்றிய குறிப்பு பரிபாடல் திரட்டில் வரும் திருமாலைக் குறித்த பாடலிலிருந்து தெரியவரும் (பரி. திரட்டு.1:5). நான்மாடக்கூட மதுரை மாந்தர் சென்று வழிபடும் வகையில் வைகைக் கரையில் அமைந்திருந்தது இருந்தையூர்க்கோயில். சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர், 'ஸ்ரீ இருந்த வளமுடையார் கோயில்' என்கிறார். இவ்வூரை அடுத்த பெயர்களாக இருந்தையூர் கருங்கோழி மோசியார், இருந்தையூர்க் கொற்றம் புலவன் என இரண்டு புலவர்களின் பெயர் காணப்படுகின்றன. 'குளவாய்' என்பதும் மதுரையைச் சார்ந்த தலமாகவே ஊகிக்க இடமுண்டு (உ.வே.சா. குறிப்பு). இங்கே ஆதிசேடனுக்குரிய கோயிலே சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. இக்கோயிலில் மகளிரும் மைந்தரும் ஏந்து வணங்கிப் பேறு பெறுகின்றனர் (பரி. திரட்டு. 1:60-63)

சோழர்க்குரிய உறையூரை அடுத்து விளங்கும் அரங்கத்தில் பங்குனி நிறைமதிநாள் உத்தரத்தில் நிகழ்ந்த திருவிழாவைப் பற்றிய ஒரு குறிப்பு மட்டும் உள்ளது. அது கொண்டு திருமால் கோயில் கொண்டிருக்கும் தலமாக ஊகிக்கலாம் (அக. 137:6-11).

பதிற்றுப்பத்து நூலின்கண்,

வண்டு ஊது பொலிதார், திரு ஞெமிர் அகலத்து,
கண் பொரு திகிரி, கமழ்குரற் துழாஅய்
அலங்கல், செல்வன் சேவடி பரவி.' (பதிற். 31:7-9)

எனவரும் இவ்வடிகளில் குறிக்கப்படும் திருமால் திருவனந்தபுரத்துத் திருமால் என்று பழைய உரைகாரர் கருதுகின்றார்.

கச்சிப்பதி ஆண்ட தொண்டைமான் இளந்திரையனைப் பற்றிய பெரும்பாணாற்றுப்படையில் திருவெஃகாக் கோவில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கருதுவர்.

காந்தள் அம் சிலம்பில் களிறு படிந்தாங்கு
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்
(பெரும். 372-373)

' என அரவணையில் அறிதுயில் கொள்ளும் திருமாலை வருணிக்கின்றார். இங்கே அவன் பள்ளி அமர்ந்துள்ள இடம் 'திருவெஃகா' எனக் கொள்கின்றார் நச்சினார்க்கினியர்.

திருமாலிருஞ் சோலை மலையைச் சிறப்பித்துரைக்கும் பரிபாடற் பகுதிகள் பல. இம்மலையை 'இருங்குன்று' (பரி. 15: 35-45), 'இருங்குன்றம்' (பரி.15:17), 'மால் இருங்குன்றம்'(பரி.15:17) 'சோலையொடு தொடர்மொழி மால் இருங்குன்றம்' (பரி. 15:23) என்று இவ்வாறு பரிபாடல் குறிப்பிடுதல் காணலாம். இம்மலையிலிருந்து பெருகி வருவது சிலம்பாறு.

அலங்கும் அருவி ஆர்த்து இமிழ்பு இழிய,
சிலம்பாறு அணிந்த, சீர்கெழு திருவின்
சோலையொடு தொடர்மொழி மாலிருங்குன்றம்

(பரி. 15:21-23)

என்று இம்மலையைச் சிலம்பாறு அழகு செய்தல் கூறப்படுகிறது. இங்கே பலராமனும் திருமாலும் ஒன்றாக வைத்து வழிபடப்பட்டனர். இவ்விருவரும் காவல் தொழில் புரியும் கடவுளராவர். வெண்ணிறமுடைய பலதேவனையும் நீல நிறமுடைய துழாயோனையும் இம்மலை தாங்கி நிற்கும் சிறப்பைப் பெற்றுள்ளது.

குலவரை சிலவே; குலவரை சிலவினும்
சிறந்தது-கல் அறை கடலும் கானலும் போலவும்,
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்,
எல்லாம் வேறுவேறு உருவின் ஒருதொழில் இருவர்த்
தாங்கும் நீள்நிலை ஓங்கு இருங்குன்றம்.
நாறு இணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ, வீறு பெறு துறக்கம்?

(பரி.15:10-16)

எனவரும் பாடற்பகுதியில் மேருமலை முதலாக வரும் குல வரைகளுக்குள்ளே திருமால் வீற்றிருக்கும் குன்றம் சிறந்தது என்று எடுத்துக்காட்டப்படுகிறது. துறக்கத்தை நல்கும் துழாயோன் தன் முன்னோனுடன் நிற்கும் பேறு பெற்றதல்லவா இம்மலை.

திருமாலின் பெருமாண்புகள்

வேதம் போற்றிப் புகழும் விழுப்பொருள் திருமால். நாவல் அந்தணர் அருமறைகளில் அவன் பலபடியாசத் துதித்துப் போற்றப்படுகிறான். (பரி. 1:11-12 ,2:56-57, 3:11-14). அவ் வேதங்கள் அவனைக் குறித்து முறையிடுவதனால் அவன்தன் தலைமையும் பெருமையும் நாம் அறிகிறோம். வேதமுதல்வன் அவன். ஆயினும், அந்த வேதாகமங்களுக்குள்ளே அடங்கிவிடுவதன்று அவன் பெரும்புகழ். ஆகமங்களாலும் அகங்காரத்தாலும், மனத்தாலும், உணர்வினாலும், மற்று எல்லாவற்றினாலும் வனப்பும் எல்லையும் அறியப்படாத எல்லை கடந்த பரம்பொருள். தேவர்களுக்கும், அவனுக்கு அஞ்சி ஓடிப் புக்குக் கடலில் ஒளியும் அவுணர்களுக்கும் முதல்வன் அவன். அதனால் அவனுக்குப் பகைவர் நட்டோர் என்பது இல்லை.

நினக்கு - விரிந்து அகன்ற கேள்வி அனைத்தினும்,
வலியினும், மனத்தினும், உணர்வினும், எல்லாம்
வனப்பு வரம்பு அறியா மரபினோயே!
அணி நிழல் வயங்கு ஒளி, ஈர் - எண் தீம் கதிர்,
பிறை வளர், நிறை மதி உண்டி.
அணி மணிப் பைம்பூண், அமரர்க்கு முதல்வன் நீ.
திணி நிலம் கடந்தக்கால், திரிந்து அயர்ந்து அகன்று ஓடி
நின் அஞ்சிக் கடற் பாய்ந்த பிணி நெகிழ்பு அவிழ்தண்தார்
அன்னவர் பட, அல்லா அவுணர்க்கும் முதல்வன் நீ;
அதனால், 'பகைவர் இவர்; இவர் நட்டோர்' என்னும்
வகையும் உண்டோ, நின் மரபு அறிவோர்க்கே.

(பரி.3:48-58)

இவன் எங்குமாய் எல்லாமாய் நிறைந்த பெருமையுடையான். சுவைமை, இசைமை முதலிய ஐம்புலனும் அவற்றை உணர்தற் குரிய ஐம்பொறியுமாக இருப்பவனும் அவனே. விசும்பும், வளியும், தீயும், நீரும், நிலனும் என்னும் ஐம்பூதமும் அவனே. அதனால், மூலப்பகுதியும் அறமும் அநாதியான காலமும் ஆகாய மும் காற்றும் கனலும் கூடிய இம்மூவேழ் உலகத்துள்ள உயிர்கள் எல்லாம் அவனிடத்திலிருந்தும் உளவாயின.

சுவைமை, இன்சைமை, தோற்றம், நாற்றம், ஊறு;
அவையும் நீயே, அடு போர் அண்ணால்!

அவைஅவை கொள்ளும் கருவியும் நீயே;
முந்து யாம் கூறிய ஐந்தனுள்ளும்,
ஒன்றனில் போற்றிய விசும்பும் நீயே;
இரண்டின் உணரும் வளியும் நீயே;
மூன்றின் உணரும் தீயும் நீயே;
நான்கின் உணரும் நீரும் நீயே;
ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே;
அதனால், நின் மருங்கின்று - மூ - ஏழ் உலகமும்,
மூலமும், அறனும்; முதன்மையின் இகந்த
காலமும், விசும்பும், காற்றொடு, கனலும்.

(பரி. 13:14-25)

அவனது திருமேனியின் ஒளி நீலமணி போன்றிருக்கும். கண்கள் தாமரையை நிகர்க்கும். அவனது வாய்மை தப்பாது வருகின்ற தினத்தையும், பொறை நிலத்தையும், அருள் நீர் நிறைந்த மேகத்தையும் ஒக்கும் என்று வேதங்கள் கூறும். இங்குக் கூறிய பொருள்களையும் பிறவற்றையும் அவன் பண்புகளாலும் தொழில்களாலும் ஒப்பான்; எப்பொருளின் அகத்தும் அவனே இருக்கின்றான்.

நின்னது திகழ் ஒளி சிறப்பு இருள் திருமணி;
கண்ணே, புகழ்சால் தாமரை அலர் இணைப் பிணையல்;
வாய்மை, வயங்கிய வைகல்; சிறந்த
நோன்மை நாடின் இருநிலம்; யாவர்க்கும்,
சாயல் நினது, வான் நிறை - என்னும்
நா வல் அந்தணர் அருமறைப் பொருளே;
அவ்வும் பிறவும் ஒத்தனை; உவ்வும்
எவ்வயினோயும் நீயே. (பரி. 2:52-59)

ஐம்பூதங்களும் ஞாயிறு திங்கள் முதலிய கோள்களும் தேவரும் அசுரரும், மூவேழ் உலகின் உயிர்த்தொகுதிகள் அனைத்தும் திருமாலிடத்திலிருந்து தோன்றிப் பரந்த பொருள்களே.

தீ வளி விசும்பு நிலன்நீர் ஐந்தும்
ஞாயிறும், திங்களும், அறனும், ஐவரும்,
திதியின் சிறாரும் விதியின் மக்களும்,
மாசுஇல் எணமரும், பதினொரு கபிலரும்,
தா மா இருவரும், தருமனும், மடங்கலும்,

மு-ஏழ் உலகமும், உலகினுள் மன்பதும்,
மாயோய் நின்வயின் பரந்தவை உரைத்தேம் -
மாயா வாய்மொழி உரைதர வலந்து:

(பரி. 3:4-11)

உலகத்துறு பொருள்கள் எல்லாமாய் அவன் விரிந்து பரந் இருந்தலோடு, அவ்வப் பொருள்களின் உள்ளுறு பண்புகளாகவும் பரந்து ஒளிர்கின்றான்.

தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ,
வேதத்து மறைநீ, பூதத்து முதலும் நீ;
வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களுள் அளியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ. (பரி.3:63-68)

கோபமும் அருளும் பட்சபாதமும் நடுவு நிலைமையும் ஆகிய இவற்றை மறமும் அறமும் உடையார்பால் முறையே உடைய னாயிருக்கிறான். இவை இல்லாரிடத்து இல்லாதவனா யிருக் கிறான். இங்ஙனம் அன்றியும் பகைவர் உயிரை நீக்குதலும் நட்டோர் உயிரைப் பாதுகாத்தலும் ஆகிய தொழில் உடையவன் அல்லன். ஏனெனில், அவனுக்குப் பகைவரும் நட்டோரும் இல்லை. உயிர் களது இயல்பால் அவனுக்குப் பகையும் நட்பும் உளபோலத் தோன்றுகின்றவேயன்றி இயல்பால் அவனுக்கு அவை இல. அன்பர் மனத்தில் கொள்ளும் வடிவங்களேயன்றித் தனக்கு என வேறு ஒரு திருவுரு உடையவனும் அல்லன்.

கடுநவை அணங்கும் கடுப்பும், நல்கலும்,
கொடுமையும் செம்மையும், வெம்மையும் தண்மையும்
உள்வழி உடையை; இல்வழி இலையே;
போற்றார் உயிரினும், போற்றுநர் உயிரினும்,
மாற்று ஏமாற்றல் இலையே: நினக்கு
மாற்றோரும் இலர், கேளிரும் இலர் எனும்
வேற்றுமை இன்று, அது போற்றுநர்ப் பெறினே:
மனக்கோள் நினக்கு என வடிவு வேறு இலையே.

(பரி.4:49-56)

எல்லா உலகு உயிர்களின் தோற்றமும், நிலைபேறும், ஒடுக்கமும் ஆக எல்லாமாய் நிற்கும் ஏக பரம்பொருள் திருமாலே.

நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்று உள:
நின் தண்மையும் சாயலும் திங்கள் உள;
நின் சுரத்தலும் வண்மையும் மாரி உள;
நின் புரத்தலும் நோன்மையும் ஞாலத்து உள;
நின் நாற்றமும் ஒண்மையும் பூவை உள;
நின் தோற்றமும் அகலமும் நீரின் உள;
நின் உருவமும் ஒலியும் ஆகாயத்து உள;
நின் வருதலும் ஒடுக்கமும் மருத்தின் உள;
அதனால், இவ்வும், உவ்வும், அவ்வும், பிறவும்,
ஏமம் ஆர்ந்த நிற்பிரிந்து,
மேவல் சான்றன, எல்லாம். (பரி. 4:25-35)

ஆலமரத்தும், கடப்பமரத்தும், ஆற்றிலும், குன்றத்திலும் ஆக எங்கெங்கும் எழுந்தருளியிருந்து அருள்புரியும் தெய்வங்களாகவும் காட்சி தருபவன் அவனே. பல தெய்வங்களாக வகுத்துச் சொல்லப் படும் நாமங்கள் எல்லாம் அவனுக்கு உண்டு. அன்பர்கள் தொழு கின்ற கையுள்ளும் அமர்ந்து, அவர்க்கு ஏவலாளனாயும் பாதுகாவ லானாயும் இருப்பவன் திருமால்.

அழல் புரை குழை கொழு நிழல் தரும் பல சினை
ஆலமும், கடம்பும், நல் யாற்று நடுவும்,
கால் வழக்கு அறுநிலைக் குன்றமும், பிறவும்,
அவ்வவை மேவிய வேறுவேறு பெயரோய்!
எவ் வயினோயும் நீயே; நின் ஆர்வலர்
தொழுத கை அமைதியின் அமர்ந்தோயும் நீயே;
அவரவர் ஏவலா ளனும் நீயே;
அவரவர் செய்பொருட்கு அரணமும் நீயே.
(பரி. 4:66-73)

எல்லாவற்றையும் காக்கின்ற தொழிலைச் செய்யும் பேரரு ளாளன் அவன். 'ஒருமை வினை மேவும் உளத்தினை' (பரி. 1:49) உடையான். அருளைக் குடையாகவும், அறத்தைக் காம்பாகவும் கொண்டு மூவேழுலகத்தையும் பொதுக்கடிந்து தனியே காக்கின்ற காப்பை உடையவன்.

அருள் குடையாக, அறம் கோலாக,
இரு நிழல் படாமை மூ-ஏழ் உலகமும்
ஒரு நிழல் ஆக்கிய ஏமத்தை மாதோ! (பரி. 3:73-76)

எல்லாம் அவனுடைய ஒரு குடை நிழலில் பாதுகாப்பாக இருக்கின்றன.. காத்தல் தொழில் ஒப்புமை கருதி, நாடு காவல் தொழில் புரியும் மன்னர்களைத் திருமாலுக்கு ஒப்பிட்டுப் பேசுவது மரபு. புகழுக்கும் அவனே ஒப்புக் கூறப்படுகிறான்.

'புகழ் ஒத்தீயே இகழுநர் அடுநனை' (புறம். 56:13)

புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன,
உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற (புறம். 57:2-3)

நெடியோன் அன்ன நல் இசை,
ஒடியா மைந்த! நின் பண்பு பல நயந்தே.
(பதிற்.15:39-40)

எனவரும் பாடற்பகுதிகளால் இசை திசையெலாம் பரவ நிலமாளும் வேந்தரைத் திருமாலுக்கு ஒப்பிட்டுப் பேசும் திறம் விளங்கும்.

இங்ஙனம் காக்கின்ற அந்த மூர்த்தியே ஐந்து திருமுடி களையுடைய ஈசனாகவும் அவனால் உண்டாகும் சங்காரமாகவும் திகழ்கிறான். அழிந்தவற்றை மீண்டும் படைக்கப் பிரமனாகவும் படைத்தல் தொழிலாகவும் அவனே அமைகிறான்.

ஐந்தலை உயரிய அணங்குடைஅருந்திறல்
மைந்துடை ஒருவனும். மடங்கலும் நீ;
நலம் முழுது அளைஇய புகர் அறு காட்சிப்
புலமும், பூவனும், நாற்றமும் நீ. (பரி. 1:46-49)

ஆகவே, முத்தொழில் புரியும் முதல்வன் திருமால் என்கிறார்.

இங்ஙனமாக எல்லாமாய், யாவுமாய், எங்குமாய் ஒளிரும் பரம்பொருளுக்கு ஒப்புக் கூறத்தகும் பொருளும் உண்டோ? அவன் ஒப்புயர்வற்று விளங்குகிறான். ஆகவே, அவனுக்கு அவனேதான் ஒப்பு. '.பல பொருளாயிருத்தலினரல், இன்னாரை ஒத்தாய், இத்தகையை என்று நினக்கு உவமை கூறத் தகுவாரை யாம் காணேம். பொன்னால் அழகு பெற்ற சக்கரப்படையை வலத்தே ஏந்திய நீ எல்லா உயிர்கட்கும் முதல்வனாயுள்ளாய். நின் புகழோடு விளங்கி நீ நின்னையே ஒக்கின்றாய்' என்று போற்றுகிறார் ஒரு புலவர்.

'இன்னோர் அனையை; இனையையால். என
அன்னோர் யாம் இவண் காணாமையின்,

பொன் அணி நேமி வலங்கொண்டு ஏந்திய
மன்னிய முதல்வனை ஆதலின்,
நின்னோர் அனையை நின் புகழொடும் பொலிந்தே!.
(பரி. 1:53-57)

என்பது புலவர் வாக்கு.

இங்ஙனம் மனம், வாக்குக் காயங்கட்கு எட்டாத இப் பரம்பொருளைத் தெய்வ முனிவர் உணர்கின்றார்கள். அவர்கள் உணரும் உபநிடப்பொருளாக அவன் உள்ளான். அவர்கள் திரு மாலை ஒத்த சிறப்புப் பொருந்தியவர்களாவர்.

'அன்னோர் அல்லா வேறும உள; அவை
நின் ஓர் அன்ஓர் அந்தணர் அருமறை!' (பரி. 4:64-65)

அவனது அருள்மொழிகள் வலம்புரி முழக்கையும் வேத முழக்கையும் ஒத்துள்ளன (பரி. 13:44-45). அவன் தத்துவங்களால் ஆராய்ந்து அறியப்படுகிறான். பூதங்கள் ஐந்தும், கன்மேந்திரி யங்கள் ஐந்தும், ஞானேந்திரியங்கள் ஐந்தும், புலன்கள் ஐந்தும், மனம் முதலிய அந்தக்கரணங்கள் நான்கும் மூலப்பகுதியும் புருடனும் எனப்பட்ட தத்துவம் இருபத்தைந்தினாலும் நால்வகை யுகங் களிலும் ஆராயப்படும் பெருமையுடையவனாய்த் திகழ் கிறான் திருமால். ஆகவே, தத்துவ உணர்வுடைய ஞானியர் அவனது அருள்நோக்கிற்குப் பாத்திரமாகின்றனர்.

பாழ்என, கால்என, பாகுஎன், ஒன்றுஎன,
இரண்டுஎன, மூன்றுஎன, நான்குஎன, ஐந்துஎன,
ஆறுஎன, ஏழு என, எட்டுஎன, தொண்டு என,
நால்வகை ஊழி எண் நவிற்றும் சிறப்பினை!.
(பரி.3:77-80)

திருமாலோடு தொடர்புடைய தெய்வங்கள்

இனி திருமாலொடு தொடர்புடையராய்க் கணிக்கப்பட் டாரைக் குறித்துச் சங்கப் பாடல்கள் தரும் குறிப்புகளைப் பார்த்து, பின் அவனுடைய அவதார சரிதங்களையும் பார்ப்போம். திருமால் மார்பில் வீற்றிருப்பவள் திருமகள்; நிலமகளையும் அவன் அணைத்துக்கொள்கிறான். அவனுக்குக் குடையாகவும் படுக்கையாகவும் பிறவாறாகவும் தொண்டு புரிவது ஆதிசேடன்.

அவனுடைய ஊர்தி கருடன். அவனுடைய உந்தித் தாமரையில் வந்தவன் நான்முகன். காமனும் அவனுடைய புதல்வனே. ஆகவே, திருமகள், நிலமகள், ஆதிசேடன், கருடன், நான்முகன், காமன், காமன் தம்பிசாமன் ஆகியோரைக் குறித்து முறையே பார்ப்போம்.

திருமகள்

திருமாலின் திருமார்பில் இவள் இடம்பெற்று விளங்குதலை முன்னர்க் குறிப்பிட்டோம். இவளுடைய கணவனாகத் திருமால் உள்ளமையினால், 'திருவின் கணவ!'(பரி.3:90) என்று அவன் போற்றப்படுகிறான். சிவந்த நிறமுடையவளாதலின், .'செய்யாள்'. (பரி.தி.10) .'செய்யோள்'.(பரி.2:31;அக.316:13)என்றும் குறிக்கப் படுவள். '.மா'.(புறம்.7:5) ,'.திரு'.(முருகு.80;பட்டின.291)என்னும் பெயர்களாலும் இவள் கூறப்பட்டுள்ளாள். பொன்போலத் திருமாலின் மார்பில் தோற்றமளித்தல் பற்றி, 'பொன்னின் தோன்றிய புனைமறு மார்ப' (பரி.4:59) என்னும் பாராட்டைப் பெறுகிறார் திருமால். இவள் தாமரை மலரை இருக்கையாகக் கொண்டவள். 'அல்லி அம் திரு மறு மார்ப' (பரி.1:38-39) என்பது பரிபாடல். யானைகள் பூவுடன் நீரையும் சொரியத் தாமரை மலரின் பொகுட்டிலே வீற்றிருக்கும் கஜ லட்சுமியை உவமையாகத் தருகிறது கலித்தொகைப் பாடல்.

வரிநுதல் எழில் வேழம் .நீர்மேல் சொரிதர,
புரி நெகிழ் தாமரை மலர்அம் கண் வீறுஎய்தி,
திரு நயந்து இருந்தன்ன தேம் கமழ் விறல் வெற்ப'
(கலி. 44:5-7)

இவளுக்குத் திலகம் இடுதலை, ' செய்யாட்கு இழைத்த திலகம்போல்'. என வருவதனால்(பரி.தி.10) தெளியலாம்.

செல்வத்திற்கு உரியவளாக இவள் போற்றப்படுகிறாள். செல்வம் கொழித்துச் சிறப்புறுதலைத் திருமகள் இருக்கையாகப் போற்றுகின்றனர்.

'.திரு வீற்றிருந்த.தீது தீர் நியமம்'. (முருகு. 70)

'.திரு நிலைஇய பெரு மன் எயில்'. (பட்டின. 291)

இவற்றிற்கு உரைவகுத்த நச்சினார்க்கினியர், '.திருமகள் வருத்தமின்றி இருந்த குற்றம் தீர்ந்த அங்காடித் தெருவினையும்'.

என்றும், '.திருமகள் நிலைபெற்ற பெரிய ஆக்கத்தையுடைய உறந்தையின் மதிலிடத்தே'. என்றும் எழுதுதலும் ஈண்டுக் கருதத்தகும். செல்வம் இழந்து வறிய நிலை அடைதலைத் திருமகள் விட்டு நீங்கியதாகக் கருதுகின்றனர்

'செய்யோள் நீங்க. சில் பதம் கொழித்து,
தாம் அட்டு உண்டு, தமியர் ஆகி,
தேமொழிப் புதல்வர் திரங்கு முலைசுவைப்ப
வைகுநர் ஆதல்.............(அக.316:13-16)

எனவரும் அகநானூற்றுப் பாடற்பகுதியால் இக்கருத்துப் புலனாகும். செல்வம் ஒருவருக்குச் சேர்தலும் தவிர்தலும் அவரவர் கொள்ளும் பற்று, பற்றின்மைகளால் உளதாகும் என்றும் ஒரு கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. யார் பற்றினை ஒதுக்கினார்களோ அவர்கள்பால் திருமகள் சென்று சேர்வாளாம். யார் விருப்பத்தை ஒழிக்கவில்லையோ அவர்களைத் திருமகள் விட்டுவிட்டு நீங்கிப் போய்விடுவாளாம். இச் செய்தி,

விட்டோரை விடாஅள், திருவே;
விடாஅதோர் இவள் விடப்பட்டோரே.
(புறம். 358:6-7)

என்வரும் புறநானூற்று அடிகளில் காணலாம்.

அரசர்களைத் திருமால் வழியினர் என்று போற்றுதல் போல *(பெரும்.29-30)* நாடு காவல் தொழில் புரியும் அரசரையே திருமாலாகக் கொண்டு அவ்வரசர்தம் மார்பிலும் திருமகள் உறைகிறாள் என்று கூறும் மரபும் உண்டு. .'திருமகள் பிறர் மார்பை மறுத்தற்கு ஏதுவாகப் பரந்த மார்பினையுடையான் கரிகாலன்'. என்று, '.மா மறுத்த மலர் மார்பின்'. *(புறம்.7:5)* என்னும் தொடரால் குறிப்பிடப்படுகிறான். இவைகள் எல்லாம் செல்வத்திற்கு அதி தேவதை திருமகள் என்னும் கருத்தின் விளைவுகளாம்.

நிலமகள்

பூமண்டலத்தைப பெண்ணாகக் கூறுவது மரபு. மூங்கில் களைத் தோளாகவும், மலையை முலையாகவும், மலையில் தங்கிய மணிகள் அவள் முலையிடை அழகு செய்யும் ஆபரணங்களாகவும், அம் மலையில் நின்று வீழும் அருவியை அந் நிலமகளின் மார்பில்

அசையும் முத்தாரமாகவும் வருணிக்கிறார் நத்தத்தனார்.

மணிமலைப் பணைத் தோள் மாநில மடந்தை
அணி முலைத் துயுல்வரூஉம் ஆரம் போல (சிறுபாண் 1-'

என்பது அவர் வாக்கு. 'நிலமகள் அழுத காஞ்சியும்' (புறம்.365.10) எனப் பூமியை 'நிலமகள்' என்றே குறிப்பிடுகின்றார் ஒரு புலவர். நிலமகளையும் ஒரு காலத்தில் கூடினான் திருமால். வராக கற்பத்தில் புனலிடை மூழ்கிக் கிடந்த நிலமகளைத திருமால் ஆதிவராகமாக வந்து, தன் கொம்பிடையில் கோத்தெடுத்து வெளிக் கொணர்ந்து, அந்நிலமகளையும் மணம்புரிந்தான் என்பர்.

வளர்திரை மண்ணிய கிளர்பொறி நாப்பண்
வை வால் மருப்பின் களிறு மணன் அயர்பு,
புள்ளி நிலனும் புரைபடல அரிது. என,
உள்ளுநர் உரைப்போர் உரையொடு சிறந்தன்று
(பரி.2:32-35)

எனத் திருமால் நில்மகளைச் சேர்ந்த மணநிகழ்ச்சியைப் பரிபாடல் தருகிறது.

ஆதிசேடன்

முழங்குகின்ற கடலிடத்தே திருமாலுக்குப் பள்ளியாக அமைந்து கிடப்பவன் (கலி. 105:7:71-72). நீண்ட பூங்கொத்துக் களையுடைய காந்தளைக் கொண்டுள்ள அழகிய பக்கமலை யிடத்திலே ஒரு யானை படுத்துக் கிடந்தாற்போலப் பாம்பணைக் கிடந்த திருமாலின் காட்சி உளது என்று பெரும்பாணாற்றுப்படை சிறப்பிக்கிறது.

'நீடுநிலைக் காந்தள் அம் சிலம்பில் களிறுபடிந்தாங்கு,
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண'
(பெரும். 371-373)

ஆதிசேடன் ஆயிரம் திருமுடிகளை உடையான் (பரி. தி. 1,79-80) எனவே, இவன்,

அணங்குடைச் அருந்தலை ஆயிரம் விரித்த
கணங்கொள் சுற்றத்து அண்ணல (பரி தி. 79-80)

என்று போற்றப்படுகிறான். இவன் தலைகள் எல்லாம் தீயை உமிழும் திறலுடன் விளங்குபவை. இவற்றைத் திருமாலின் திரு

முடியின் மேலே குடையாகக் கவித்து நிற்கிறான்.

ஆயி ரம் விரித்த அணங்குடை அருந்தலை
தீ உமிழ் திறலொடு முடிமிசை அணவர (பரி. 1:1-2)

திருமால் காட்சி தந்து அருளுகின்றான்.

இருந்தையூரில் இரண்டு படப்பொறியைக் கொண்ட ஆதிசேடனின் திருக்கோயில் ஒன்றும் சிறந்து விளங்கியது. அக்கோயிலினிடத்தே விளங்கும் பூமுடிநாகரைப் பூசித்தற்கு மகளிரும் மைந்தரும், இளையரும் முதியரும் வந்து திரளு கின்றனர். அவர்கள் தெய்வத்திற்குரிய மடையையும் மலர்ச் செப்பையும் தூபத் தையும் ஏந்தி இடையொழிவு இன்றி வழிபாடு இயற்றுகின்றனர் (பரி.தி.1:39-40), நாகர் திருக்கோயிலில் பற்பல ஒலிகள் எழு கின்றன. வண்டும் தும்பியும் யாழிசை போன்று ஒலி செய்கின்றன. மதயானை மேகத்தைப் போலே முழங்குகிறது. அருவியின் ஒலி ஒரு புறம்; இன்னொரு புறம் அதற்கு எதிரான முழவின் ஓசை. மகளிரும் மைந்தரும் கூடி நிகழ்த்தும் ஆடல்பாடல்களும் அங்கு நிகழ் கின்றன. அவர்கள் சூடும் நறவம் பூவாலாகிய மாலையும், சூடப் படாத நறவமாகிய கள்ளையும் விரும்பிக் கொணர்கின்றனர் (பரி.தி.1:50-59). வழிபாட்டின் ஒரு பகுதியாக அந்நாகரை அன்பு கலந்து துதி மொழிகளாலும் போற்றுகின்றனர். அவர்கள் போற்றும் புகழ்மொழிகளில் ஆதிசேடனது பெருஞ்சிறப்புக்கள் பலவும் வெளிப்படுகின்றன. அவுணரும் அமரரும் கடல் கடைந்த காலத்தில் இருதிறத்தினரும் அமுது கடைவதற்கு மத்தின் நாணாக இருந்தான். வண்மை எல்லாம் பூண்ட இவன் இந்த உலகத்தை ஆபரணம் போலத் தலையில் தாங்கி நிற்கின்றான். விடைப் பாகராகிய சிவபெருமான் திரிபுரத்தை அழித்த காலத்தில் அப் பெருமான் கையில் பிடித்த மேரு மலையாகிய வில்லுக்கு நாணாக அமைந்து, புகழ் தந்தவனும் இவனே என்று இவ்வாறு எல்லாம் பூமுடி நாகரைப் போற்றிப் புகழ்கின்றனர் (பரி.தி.1:64-78).

கருடப்புள்

திருமாலின் கொடியாகவும் ஊர்தியாகவும் விளங்கும் கருடன் பல வரிகளுடன் கூடிய வளைந்த சிறகுகளைக் கொண்டவன். இச்சிறகுகள் பரந்து பல நிறங்களுடன் கூடியிருக்கும். நஞ்சு ஒடுங்கிய துளையையுடைய வெள்ளிய பற்களை உடையதும்,

நெருப்பென மூச்சுக் காற்றை எழுப்புவதும், அஞ்சத்தக்க மிக்க வலிமையுடையதுமாகிய பாம்பு இறக்கும்வரைப் புடைக்கும் ஆற்றல் படைத்தவன். அதனால் 'உவணப் புள்ளிற்குப் 'பாம்புப் பகை' என்னும் ஒரு பெயரும் உண்டு (பரி.13:38-40). ஆயிரம் தலையைக் கொண்ட ஆதிசேடனையும் தன் வாயில் கௌவிக் கொண்டு இருக்கும். அது மட்டுமா, பாம்பையே தனக்கு அணியா கவும் பூண்டிருக்கும். அக் கருடன் பாம்பினது உடலையும் உயிரையும் உண்ணுவான். அவன் வயிற்றின்மேல் கட்டப்பட் டிருப்பதும் பாம்பு; அவனுடைய தொடி, கண்ணிகள், கழுத்துப் பூண், சூட்டு, சிறகுகளின் மேல் இருப்பன எல்லாம் பாம்பு (முருகு. 148-150, பரி.13:38-40, பரி.3:59-60; பரி.4:42-48).

> விடமுடை அரவின் உடல் உயிர் உருங்கு உவணம்;
> அவன் மடிமேல் வலந்தது பாம்பு;
> பாம்பு தொடி, பாம்பு முடி மேலன;
> பாம்பு பூண், பாம்பு தலைமேலது;
> பாம்பு சிறை தலையன;
> பாம்பு படிமதம் சாய்த்தோய்! பசும் பூணவை
> கொடி மேல் இருந்தவன் தாக்கு இரையது பாம்பு'.
> (பரி. 4:42-48)

இங்ஙனமாகப் பாம்பின் மதம் சாய்த்து வீறு கொள்ளும் கருடனையும் தருக்கு அடங்கச் செய்தார் திருமால். வலி அழிந்து ஆற்றாத அக்கருடன், 'செங்கண் மாஅல்! ஓ!' எனக் கூவிக் கதறி யதாம் (பரி.3:60-61).

கருடன் தன்னை ஈன்ற அன்னை விநதையின் அடிமைத்தளை போக்கிய செய்தி ஒன்றும் குறிக்கப்படும். .பயந்தோள் இடுக்கண் களைந்த புள். (பரி. 3:16-17) என்று இந்நிகழ்ச்சியை உட்கொண்டு கூறுகிறது பரிபாடல். கருடன் தாய் விநதை கத்துருவினோடு இந்திரன் குதிரைவால் வெள்ளையாயிருப்பது என்றும் அன்றாயின் உனக்கு அடிமையாவன் என்றும் சபதம் செய்தனள். கத்துரு வஞ்ச னையால் வாலைக் கரிதாக்க, அது தெரியாது விநதை அடிமை யானாள். இவளது அடிமைத்தளையினின்றும் மீட்க, இந்திரர் அமுதம் தரல் வேண்டும் எனக் கத்துரு சொல்ல, அவள் விருப்பப் படியே அவளுக்கு அமுது கொணர்ந்து தந்து, அன்னையின் துன்பம் களைகிறான் கருடன் (பரி. 3:16-17)

நானமுகன்

திருமாலின் உந்தியில் வந்தவன். திருமாலினுடைய கொப்பூழிலிருந்து தோன்றிய தாமரையே இவன் பிறப்பிடம். பூவில் பிறந்தமையால், பூவன் (பரி. 1:49) என்னும் பெயரும் இவனுக்கு உண்டு. உலகம உருப்பெறாது நீர் மூடிக்கிடந்த முதல் ஊழியில் முதன் முதலாகப் பிரமனை உந்தித் தாமரையில் தந்தனன் திருமால். எனவே இவ்வுலகம் 'தொடங்கற்கண் தோன்றிய முதியவன்' (கலி .2:1-2) என நான்முகன் போறறப்படுகிறான்.

நீல்நிற உருவின நெடியோன் கொப்பூழ்
நானமுக ஒருவற் பயந்த பல் இதழ்த்
தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி
(பெரும். 402-404)

மாநிலம் இயலா முதல் முறை அமையத்து,
நாம வெள்ளத்து நடுவண் தோன்றிய
வாய்மொழி மகனொடு மலர்ந்த
தாமரைப் பொகுட்டு நின் நேமி நிழலே
(பரி. 3·91-94)

எனவரும் பாடற்பகுதிகளில் பிரமன் தோன்றிய வகை விவரிக்கப்படுதல் காணலாம். திருமால் பிரமனைத் தோறறுவித்ததால் அவனுக்கு மகன் பூ.உ.றுயினும் இருவரும் ஒருவரே; வேறல்லர் என்பது வேதக்கருத்து.

வாய்மொழி ஓடை மலர்ந்த
தாமரைப் பூவினுள் பிறந்தோனும், தாதையும்
நீ' என மொழியுமால் அந்தணர் அருமறை'
(பரி. 3:12-14)

இங்ஙனமே அயனாய் நின்று படைப்போனே பின் எல்லாவற்றையும் ஒடுக்கிக்கொள்ளும் காலத்து அரனாய் நின்று மீண்டும் தனபால் ஒடுக்கிக் கொள்கிறானாம்.

மதால் ஊழி தடுமாறி, தொகல்வேண்டும பருவத்தால
பலவயின உயிர் எல்லாம் படைத்தானகண் பெயர்ப்பான்போல்
(கலி.129:1-2)

என்பதனால் படைப்பவனும் துடைப்பவனும் ஒருவனே என்பது போதரும். திருமாலே அரனாய் நின்று சங்கரித்தும், அயனாய் நின்று படைத்தும் உலகைக் காத்து வருகிறான் என்று பரிபாடலில் ஓரிடத்துக் காண்கிறது. திருமாலின் புகழ் கூறும் முகத்தான் ஐந்து திருமுடிகளையுடைய ஈசனும் அவனால் உண்டாகும் சங்காரமும் நீ. வேதமும் பிரமனும், படைத்தலாகிய தொழிலும் நீ என்று கூறுமிடத்து,

ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறன்
மைந்துடை ஒருவனும், மடங்கலும், நீ;
நலம் முழுது அளைஇய புகர் அறுகாட்சிப்
புலமும், பூவனும, நாற்றமும், நீ (பரி.1:48-49)

என அத்திருமால் புகழப்படுகிறான்.

பிரமன் நான்கு முகங்களை உடையவன். இவனே படைப்புக் கடவுள். இவன்தான் எல்லாம் மூடிக்கிடந்த காலவெள்ளத்தை நீக்கிப் பெரிய நிலத்தில் பழையபடியே உடல் உயிர்கள் தோன்றும் வண்ணம் தொழில் புரிகிறான்.

உருகெழு மாநிலம் இயற்றுவான்,
விரிதிரை நீக்குவான், வியன்குறிப்பு ஒத்தனர் (கலி.106:18-19)

என உவமை வாயிலாகவும், 'படைத்தோன் மன்ற அப் பண்பிலாளன்'. (புறம்.194:15) என உலகினை விசித்திரமாகப் படைத்த திறனைக் கூறுமிடத்தும் நான்முகனின் படைப்புத்திறம் குறிப்பிடப்படுதல் காணலாம். துன்பமும் இன்பமும் எதிர் எதிராகக் காட்சிதரும் வகையில் அமைந்துள்ள அந் நான்முகனின் படைப்பு விநோதத்தை எடுத்துக் காட்டி, இவ்வுலக இயல்புணர்ந்தோர் இனிய இன்பம் தரும் நல்ல செய்கை அறிந்து செயல்வேண்டும் என்று அறிவுறுத்துகிறது ஒரு புறநானூற்றுப் பாடல்,

ஓர் இல் நெய்தல் கறங்க, ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப,
புணர்ந்தோர் பூ அணி அணிய, பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப,
படைத்தோன் மன்ற, அப் பண்பிலாளன்!
இன்னாது அம்ம, இவ் உலகம்;

இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே. (புறம். 194)

'ஐதே கம்ம இவ் உலகு படைத்தோனே'. (நற்.240:1)

எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலும் உலகு படைத் தானுடைய விநோதத்தைக் கருதிக் கூறுகிறது.

ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் நிற்கும் இந்த இன்னா உலகத்திலிருந்து கொண்டு, இனிய காண்பதற்குரிய வழிவகுத்துத் தந்துள்ளவனும் அந் நான்முகனே. வேதம் பிறந்தது பிரமனின் நாவிலிருந்துதான். இதனை மக்கள் ஓதி உணர்ந்து அல்வழி நீக்கி நல்வழி காண்போராகின்றனர்.

பூவினுள் பிறந்தோன் நாவினுள் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில் குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை,
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாது, எம் பேர்ஊர் துயிலே
(பரி. தி. 8:7-11)

என்பது பரிபாடல். இவன் உரைத்த வேதத்தை .வாய்மொழி. *(பரி.3:11)* என்றும் இந் நான்முகனை 'வாய்மொழி மகன்' (பரி *.3:93)*என்றும் கூறுகின்றனர். எல்லாவற்றையும் விதித்ததால் 'விதி' *(பரி.3:6)* என்றும் இவனுக்கு ஒரு பெயர் உண்டு.

காமனும் சாமனும்

பிரமனைப் போலவே காமனும் திருமாலின் மகனே யாவன். 'நெடியோன் மகன்' *(கலித்.140:7)* எனக் கலித்தொகை இவனைக் குறிப்பிடுகிறது. பரிபாடலில், .இருவர் தாதை! இலங்கு பூண் மாஅல்!.என வருமிடத்து *(பரி.1:31)* இருவர் தாதை என்பதற்குக் காமன், பிரமன் என்னும் இருவருக்கும் தந்தை திருமால் எனக் கருதுகின்றனர். காமன் தம்பியாகிய சாமனைப் பற்றிய குறிப்பு கலித்தொகையுள் ஈரிடங்களில் உளது*(கலி.26:3-4, 94:33-34)*. இந்த ஈரிடங்களிலும் காமனுடன் சேர்த்தே சாமனும் கூறப்படுகிறான். 'சாமனார் தம்முன்' எனச் சாமனின் தமையன் காமன் என்று குறிக்கப்பட்டுள்ளான். இவ்விருவர் நிறத்திற்கும் வண்டையும் ஞாழற் பூவையும் ஒப்புக் கூறுதலினால் இருவரும் கார்மேனித் தாதையார் திருமாலைப் போன்றே கார்வண்ணர் என்பது போதரும். இங்ஙனம் இவ்விருவரும் இணைத்துப் போற்றப்படுதலினால்

அசுவினி மருத்துவர் போலே இவர் இரட்டையர் போலும். பரிபாடலில் வரும் 'இருவர் தாதை' என்னும் தொகைத் தொடருக்குக் காமன் சாமன் இருவருக்கும் தாதை என்றுகொள்ளுதலும் பொருத்தமாகும்.

காமனுக்கு உரிய கொடி சுறாமீன் கொடியாகும் (கலி. 26:3 ,84 .24 147:42). சுறாமீன் காமனுக்கு உரிய முத்திரைப் பொறியாகவும் கருதப்படும். ஒரு தலைவி, தன் தோழியுடன் வெளியில் சென்றுவந்த புதல்வனுக்குப் பரத்தை ஒருத்தி அணிவித்துவிட்ட சுறா ஏறு பொறித்த மோதிரத்தைப் பார்க்கிறாள். அதனைக் கண்டதும் அத்தலைவி,

'இதை அணிவித்தவளின் உட்கருத்து எனக்குப் புலனாகிறது. காமன்கொடியாகிய மகரத்தை மோதிரத்தில் குழித்தாற்போல வேறொன்றிலே அழுத்தி, அதனை எந்நாளும் அடங்காத பரத்தைமைக் குணத்தையுடைய இவன்தந்தை மார்பிலே பொறியாக ஒற்றி அடிமைகொள்வேன் என்று தான் சொல்லும் வார்த்தையை எனக்கு அறிவிப்பதற்குச் செய்ததொரு செயலாகும்' என்று இயம்புகிறாள்.

அவற்றுள் நறாஇதழ் கண்டன்ன செவ்விரற்கு ஏற்பச்
சுறாஏறு எழுதிய மோதிரம் தொட்டாள்
குறி அறிந்தேன், .காமன் கொடி எழுதி. என்றும்
செறியாப் பரத்தை இவன் தந்தை மார்பில்
பொறி ஒற்றிக்கொண்டு ஆள்வல். என்பது தன்னை
அறீஇயச் செய்தவினை. (கலி.84:22-27)

தோழி தலைவியரிடையே நிகழும் இவ்வுரையாடல் நிகழ்ச்சியால் காமனுக்கு உரிய முத்திரை அடையாளமாகவும் சுறாமீன் அமைதலைத் தெரிவித்தல் போதரும்.

இவன் மலர் அம்புகளைக் கொண்டவன். 'அரிபடும் ஐ விரை மாண் பகழி' (பரி. 10:97) என்பது பரிபாடல். இதற்கு வண்டுகள் பொருந்தும் வாசனையால் சிறப்புப் பெற்ற ஐந்து மலர் அம்புகள், என்பது பொருளாம். அவையாவன தாமரை, மா, முல்லை, அசோகு, நீலோற்பலம் என்னும் ஐந்துமாம். திருப்பரங்குன்றத்துப் பெருமானைத் துதிக்குமிடத்து, 'வேலையுடைய வேளே! விரைந்து செல்லும் மயில்மேல் உலாவரும் ஞாயிறே! மழை முழங்கிய சிகரமும் அதனிடத்தேயுள்ள கொடி மின்னலும் உன்னுடைய

நெற்றிப் பட்டத்தை அணிந்த களிற்று யானையை ஒக்கும். உன் குன்றத்தின்கண் உள்ள சித்திரசாலை காமவேளது படைக்கலக் கொட்டிலை ஒக்கும்; சோலைகளும் சுனைகளும் மலர்களின் நெருக்கத்தால் அக்காமவேளினது அம்பறாத் துணியை ஒக்கும். கார்காலத்தில் தோன்றும் காந்தட் பூவின் குலைகள் அக்காமவேள் புரியும் போரில் தோற்றுக் கட்டுண்டார் கைகளை ஒக்கும்.' என வரும் பகுதி *(பரி.18:26-35)* காமவேளின் மலர்க்கணைகளையும் அவற்றின் செயல்களையும் புலப்படுத்துகின்றன. இவற்றால் இன்பத்தை மிகுவிக்கும் அழகின் இருப்பிடமே காமன் உறைவிடம் என்பது பெறப்படும்.

இவனுடைய கருவூலமும் படையுமாக அமைந்துள்ளவர்கள் மகளிர்களே.

கண்டார்க்குத தாக்கு அணங்கு இக் காரிகை காண்மின;
பண்டாரம், காமன் படை, உவள்; காண்மின்
(பரி.11:122-123)

என்பது பரிபாடல். மகளிரின் கண்களே இவன் ஏவும் மலர்ப்படைகள். காதல் மகளிரின் கண்ணைக் காமனது ஐந்து மலர் அம்புகளினது அரத்தால் கூர்மையிடப்பட்ட வாய்போன்று உள்ளது என்கின்றனர். அவர்தம் காதலர் (பரி.10:97-98). மகளிரின் வனப்பின் மிகுதியைச் சிறப்பிக்குமிடத்து அவர்தம் நெற்றி; பாதம், ஒடிந்து விழுந்துவிடுமோ என்னும்படியான சிறிய இடை உடையாள் என்று வருணிப்பர். இந்த நிலையில் காமன் கணை பொழிந்தால் அவள் நிலை யாதாகுமோ என்னும்படி அத்தகு அழகு நிலையமாக விளங்குகிறாள் என்கிறார் ஒரு கவிஞர்.

'அகல் அல்குல்; தோள், கண், என மூவழிப் பெருகி,
நுதல், அடி, துசுப்பு, என மூவழிச் சிறுகி,
கவலையால் காமனும் படைவிடு வனப்பினோடு
(கலி.198:2-4)

என்பது கலித்தொகைச் சித்திரம். கட்டிளங் காளையரை மன்மதனுக்கு ஒப்பிடுவது மரபு. காமனது மனைவி இரதி எனப்படுவாள். காமன இரதியாச்சித்திரமும் திருபபரங்குன்றத்து எழுது எழில் மண்டபத்தில் காணப்பெற்றதாம். அதனைக் கண்ணுறும் காதல் மகளிர் நம் மைந்தரும்,

முகவுரை

நூல் பிறந்த சூழல்

சங்கத் தமிழரின் 'வழிபாடும் சடங்குகளும்' என்னும் இந் நூல் உருவாகி முப்பத்தைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. 'சங்க இலக்கியத்தில் காணும் வழிபாடும் சடங்குகளும்' என்னும் தலைப்பு இதற்கு முன்பு தந்திருந்தேன். சுருக்கம் எளிமை விளக்கம் கருதி இப்பொழுது இப்பெயரை, 'சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் ' என்று மாற்றி அமைத் துள்ளேன். இந்த ஆய்வுரை என்றும் நிலைபெற்று விளங்கி வரும் சங்க இலக்கியங்களாகிய பாட்டு - தொகைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. எனவே இது என்றும் மாறாமல் நிலைத்து நிற்கும்.

1956 முதல் 1960 வரையில் மர்ரே எஸ். ராஜம் வெளியிட்ட 'இலக்கியச் செல்வம்' நூல்களின் பதிப்பாசிரியனாயிருந்தேன். அப்பொழுது உருவானதே இந்த ஆய்வுரை.

'இலக்கியச் செல்வம்' நூல் வெளியீட்டு வரிசையில் திவ்யப் பிரபந்தம் முதல் சந்தி - குறியீட்டு விளக்கம் ஈறாக 64 நூல்கள் 45 தொகுதிகளில் வெளியிடப்பெற்றன. இப் பதிப்புக்களில் பாடல்கள் சந்தி பிரிக்கப்பட்டுப் பொருட்போக்கிற்கு ஏற்புடைய குறியீடுகளும் தரப்பெற்றன. பதிப்புரை, பாடல் முதற்குறிப்பு, சிறப்புப்பெயர் அகராதி முதலியனவாக அவ்வந் நூல்களுக்கு ஏற்ப அமைக்கப் பெற்றன. பத்துப்பாட்டு - எட்டுத் தொகை நூல்களுக்கு விளக்கத் துணை நூலாக, 'பாட்டும் தொகையும்' என்னும் தனித் தொகுதியும் (186 பக்கம்) வெளியிடப்பெற்றது. இதில் புலவர்கள் அகராதி, பாடப்பட்டோர் பெயர் வரிசை. சொல் - தொடர் விளக்கம், கதைகளும் வரலாற்றுக் குறிப்புக்களும், பழக்க வழக்கங்கள், கட்டுரைத் தொடர்கள் (சுவைப்பகுதிகள்) உவமைகள், வருணனைகள் என்பவை இடம் பெற்றுள்ளன. இவற்றுள் 'சொல் - தொடர் விளக்கம் இத்தொகுதியின் பெரும்பகுதி, பாட்டிலும் தொகைகளிலுமுள்ள முக்கியமான சொற்களும், சொல் - தொடர்களும இந்த அகராதியில் இடம்பெற்றுள்ளன. இதனை ஒரு சங்க இலக்கிய அகராதி எனலாம்

பாடல் நூல்கள் பதிப்பிக்கப் பெற்றுவந்த முறையில் இவ்வரிசை நூல்கள் புதுமுறையை அறிமுகம் செய்வன. சாதாரணக் கல்வியுடையாரும் எளிதில் வாசிக்கத் துணைசெய்வனவாகும் இப் பதிப்புக்கள்.

இலக்கியச் செல்வம் வரிசையில் முதல் நூலாகிய முதலாயிரத்தைப் பதிப்பித்தவர் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களாவர். புதுமுறையை அறிமுகப்படுத்தியவரும் அவரே.

முதலாயிரம் வெளிவந்த அணிமையிலேயே 1956-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17ஆம் நாள் பேராசிரியர் மறைந்தனர். அதன்பின் பேராசிரியருக்கு உதவியாளனாயிருந்த என்மீது அப்பணி வந்துற்றது. அப்பொழுதிருந்த நோயுற்ற என் உடல் நிலை - குடும்பச் சூழல் காரணமாக அரசாங்கப் பணியிலிருந்து ஊதியம் இல்லாத விடுப்பு எடுத்துக் கொண்டு இப்பதிப்புப் பணியைத் தொடர்ந்தேன்.

பாட்டும் தொகையும் பதிப்பாகி வந்தபோது மர்ரே எஸ். ராஜம் தென்னிந்திய வரலாற்றுக் கழகத்தில், 'சங்க இலக்கியத்தில் காணும் வழிபாடும் சடங்குகளும் ' என்னும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்த ஏற்பாடு செய்தார். அப்பொழுதுதான் இந்நூலைச் சிறுகச் சிறுகப் பல நாள் தொடர்ந்து எழுதி வரலானேன். இதன் சுருக்கவுரை அச்சங்கத்தில் படிக்கப்பெற்றது. அவ்வுரை என்னால் மதுரை பல்கலைக் கழகத்தில் வெளியிடபெற்ற 'நிகண்டுச் சொற்பொருட்கோவை' - தெய்வப்பெயர்' என்னும் நூலில் சேர்க்கப் பெற்றுள்ளது.

ஆய்வுரைகளை நான் எழுதிவந்தபோதே அப்பொழுது எனக்கு உதவியாளராயிருந்த திரு.சி. தமிழன்பன் என்பார் நல்ல முறையில் தெளிவான கையெழுத்தில் படியெடுத்துவந்தார். அதனைச் செப்பம் செய்து 1984ல் நான் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்தபோது எழுதி வைத்தேன். அந்தக் கையெழுத்து மூலப்படிவம் தட்டச்சுச் செய்யப்பெற்று இப்பொழுது அச்சுக்குத் தரப்பெற்றது.

ஆய்வுக்கு ஆதாரங்கள்

பண்டைத் தமிழகத்தின் வரலாற்றை அறிய நமக்கு இன்று கிட்டியுள்ள சிறந்த கருவி சங்க இலக்கியங்கள் என்று போற்றப்

பெறும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமே. இவற்றிற்கு இலக்கணமாக ஆன்றோர் போற்றும் தொல்காப்பியம் பழைய நூலே ஆயினும், அதன் பழமை, பாட்டு தொகைகளுக்கு முந்தியதா, சமகாலத்ததா, பிந்தியதா என்னும் ஐயம் ஆராய்ச்சியாளர்களிடையே இருந்து வருகின்றது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள் ஒன்றைத் தவிர ஏனையவெல்லாம் சங்க நூல்களுக்குப் பிற்பட்டவை என்ற கருத்தே பலரும் கொண்டுள்ளனர். சிலர், இக்கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவியவை என்றும், பாட்டு தொகைகளுக்குப் பிற்பட்டுத் தோன்றியவை என்றும், இவற்றைப் பிற் சங்க நூல்கள் எனக் கருத வேண்டும் என்றும் துணிகின்றனர்.

பாட்டு தொகைகளில் கூட, கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை என்னும் மூன்றையும், பிற் சங்க நூல்கள் என்று கருதுவாரும் உண்டு. எனினும், பாட்டு தொகைகளை ஒரு தொகுப்பாகவே ஆன்றோர் கொண்டு வந்துள்ள மரபு பண்டை உரையாசிரியர் காலத்திருந்தே தெரிய வருவதால், பாட்டு தொகைகளை மட்டுமே முதன்மைக் கருவியாகக் கொண்டு முன்னையோரின் தெய்வக் கொள்கை, வழிபாட்டுமுறை, சமய சம்பந்தமான கருத்தோட்டங்கள், எண்ணங்கள், இவற்றால் அவர்தம் வாழ்க்கையில் நேர்ந்த பல நம்பிக்கைகள் முதலியவற்றைக் காண்பதையே நோக்கமாகக் கொண்டு ஆராயப்பெற்றது.

இலக்கியங்கள்

இலக்கியங்கள் கல்லெழுத்தாகிய சாசனங்களைப் போன்றவை அல்ல. சாசனங்கள் என்று பொறிக்கப்பட்டனவோ அப்படியே இன்றும் இருந்து வருபவை. இயற்கையாலோ செயற்கையாலோ அழிக்கப்படும் வரை மாறாமல் இருக்கக் கூடியவை. ஆனால் இலக்கியங்களோ பாடியோராலும், தொகுத்தோராலும் எழுதியோராலும், படிப்போராலும், மாறுதல்கள் செய்வதற்கு இடமானவை; எத்தனையோ நூற்றாண்டுகள் ஓலைச் சுவடிகளில் மாறி மாறிப் பிறந்து வந்திருப்பவை. ஆதலால், எழுதுவோர் மனப்போக்கும் கைவண்ணமும் பட்டு ஒருசில மாறுதல்களை அவைகள் அடைந்திருக்கலாம், அந்நூல்களுக்கு உரிய சுவடிகளில் காணும் பாட வேறுபாடு வடிவவேறுபாடுகள் நமக்கு இவ்வுண்மையைத் தெரிவிக்கின்றன.

அச்சு நூல்களே அடிப்படை

அச்சுப் பொறியின் வாயிலாக இப்பொழுது அந்த இலக்கியங்கள் ஒருவகையான நிலைத்த வடிவத்தைப் பெற்றுவிட்டன எனலாம். எங்கோ ஒரு சில பாட வடிவ பேதங்களில் ஆராய்ச்சியாளர்களிடைக் கருத்து வேறுபாடு நிகழலாமே அன்றிப் பொதுவாக இந்த நூற்றாண்டில் அச்சுப்படிகள்தாம் ஆதார நூல்களாகின்றன. 'இலக்கியச் செல்வம்' என்னும் வரிசையில் வெளியிடப்பட்ட பாட்டு தொகை நூல்களின் மூலபாடங்களே இந்த உரைக்கோவைக்கும் கருவி நூல்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருவாளர்கள், சி.வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநாதையர், இராஜகோபாலையங்கார் முதலியோர் வெளியிட்ட இவற்றிற்குரிய பண்டை உரையாசிரியர்களின் உரைகளும் பொருள் விளக்கத்திற்கு உதவின. பழைய உரை இல்லாத குறுந்தொகை, நற்றிணை, அகநானூற்றின் பிறபகுதிகள் ஆகியவற்றிற்கு முறையே டாக்டர் உ.வே. சாமிநாதையர், பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைத் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை ஆகியோரின் புத்துரைகளும் கவனிக்கப்பட்டன.

பழைய உரைகளின் அருமைப்பாடு

சங்கப் பாடல்களுக்குரிய பழைய உரைகளின் அருமை பெருமைகளை ஒரு சிறிது இங்குக் கூறுதல் பொருத்தமாம். இவ்வுரைகள் ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தப் பண்டை உரைகள் என்னும் விளக்கொளி நமக்குக் கிட்டாமல் போயிருந்தால் சங்க இலக்கிய வானம் இருள் மயமாகவே இருந்திருக்கும்; புத்துரைகள் புறப்படுவதற்கும் ஊற்றுக்கண் அடைபட்டிருக்கும். இந்நாளில் நமக்குப் பழந்தமிழின் சொற்பொருள் மரபுகளை அறிவதற்கு இப்பழைய உரைகளே சிறந்த கைவிளக்காகப் பயன்படுகின்றன.

பழைய உரைகளின் சிறப்புக்களை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் தமது ஐங்குறுநூற்றுப் பதிப்பின் முகவுரையில் எழுதியுள்ள ஒரு குறிப்பினால் அறியலாம். தவிரவும், பழைய உரைகளின்பால் டாக்டர் ஐயர் அவர்கள் எத்துணை மதிப்பு வைத்துள்ளார்கள் என்பதும் அதனால் பெறப்படும். ஐங்குறு

'இரதி காமன், இவள் இவன். எனாஅ
விரகியர் வினவ, வினா இறுப்போரும்'. (பரி.19:48-49)

ஆக அவர்தம் அழகினை வியந்து கண்டனர். இளங்காதலர் கூடித்துய்க்கும் இன்பத்தை இரதி மன்மதர்களுக்கு ஒப்பிட்டுப் பேசுவர். சுனையாடி மகிழும் காதலரின் களிமயக்கைப் பின்வரும் பரிபாடற் பகுதியில் காணலாகும்.

பைஞ்சுனைப் பாஅய் எழு பாவையர்
ஆய் இதழ் உண்கண் அலர்முகத் தாமரை,
தாட் தாமரை, தோட் தமனியக் கயமலர்,
எம் கைப் பதுமம், கொங்கைக் கயமுகை
செவ்வாய் ஆம்பல் செல்நீர்த் தாமரை,
புனற் தாமரையொடு, புலம் வேறு பாடுறாக்
கூர் எயிற்றார் குவிமுலைப் பூணொடு,
மாரன் ஒப்பார் மார்பு அணி கலவி;
அரிவையர் அமிர்த பானம்
உரிமை மாக்கள் உவகை அமிர்து உய்ப்ப;
மைந்தர் மார்பம் வழி வந்த,
செந்தளிர் மேனியார், செல்லல் தீர்ப்ப
(பரி.8:112-123)

பிரிந்து உறையும் காதலர்க்குக் காமன் பெருந்துன்பம் தருபவன். பிரிந்துறை மகள் ஒருத்தி, காமன் செய்கொடுமைக்காக, யமன் அவனைத் தண்டிக்க வேண்டும் என்கிறாள் (கலி.147 :42-43). 'இங்ஙனம் வருந்தல் எல்லார்க்கும் ஒத்த தன்மையுடைய அல்லவோ?' என்றும் ஒரு தலைவி காமனை நோக்கி,

'தன் நெஞ்சு ஒருவற்கு இனைவித்தல், யாவர்க்கும்
அன்னவோ - காம! - நின் அம்பு?'. (கலி.147·46-47)

என்று வினவுகிறாள்.

காமவேளுககும் கோயில அமைத்து அந்நாளில் வழிபட்டனர். சிலப்பதிகாரத்தில் தேவந்திகை என்னும் கண்ணகியின் பார்ப்பனத் தோழி அவளுக்குக் .காமவேள் கோட்டம் தொழுவார் பெறும் பயனை எடுத்தோதும் பான்மை யாவரும் அறிந்ததே. ஒரு தலைவியின் அழகை வியந்து போற்றும் ஒரு தலைவன், 'இவளுக்கு உருப்பசி திலோத்தமையோ, அன்றித் திருமகளும் நிலமகளுமோ

தமது அழகை எல்லாம் உவந்து அளித்தார் போலும். இவள் தெய்வத்திற்குப் படைக்கும் பலியாகப் பாலுடனே காமவேள் கோட்டம் புகுந்தால், அந்தக் காமவேளே இவள் அழகிற்குத் தோற்றுத் தன் படையைப் போட்டுவிட்டு நிற்பான்' என்று கூறும் பகுதியில் காமன் கோட்டம் குறிக்கப்பட்டிருக்கிறது.

'இடை தெரியா ஏஎர் இருவரும் தத்தம்
உடை வனப்பு எல்லாம் இவட்கு ஈந்தார் கொல்லோ!
படை இடுவான்மன கண்டீர், காமன் - படை அடும்
பாலொடு கோட்டம் புகின்.' (கலி.109:17-20)

எனவரும் கலித்தொகைப் பாடற்பகுதியால் மேற்குறித்த செய்தி புலனாகும்.

இளவேனிற் காலம் இக் காமவேளுக்கு விழா எடுக்கும் காலமாகும். இயற்கையின் எழில் பூத்துக் குலுங்கும் இந்தக் காலத்தில் காதலியைப் பிரிந்து வேறுவேறு வினைவழிச் சென்றாரும் தத்தம் மனை திரும்பிவிடுவர். இளவேனிற் காலத்தின் எழிலுறு காட்சிகளைப் பாலைக் கலியில் 25ஆம் பாடல் தொடங்கி 35 ஆம் பாடல் முடிய ஒவ்வொரு பாடலிலும் தொடக்கப் பகுதிகளில் கண்டு மகிழலாகும். ஒவ்வொன்றும் இளவேனிற் காலத்தை வெவ்வேறு வகையில் சித்திரித்துக் காட்டும் சொற் சித்திரங்களாகும். இந்தக் காலத்தில் இன்பம் செய்யும் காமக் கடவுட்கு விழா எடுப்பது பொருத்தமான பொழுதும் ஆகும்.

ஆனா விருப்போடு அணி அயர்ப, காமற்கு
வேனில் விருந்து எதிர் கொண்டு. (கலி.92:67-68)

உறல யாம் ஒளிவாட, உயர்ந்தவன் விழவினுள்
விறல் இழையவரொடும் விளையாடுவான மனனோ!
(கலி.30:13-14)

மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்து, அவர்,
வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ.
(கலி.35:13-14)

குழவி வேனில் இரவு எதிர்கொள்ளும்
சீரார் செவ்வியும் வந்தன்று. (கலி.36:9-10)

எனவரும் கலித்தொகைப் பாடற்பகுதிகளில் இக் காமவேள்

விழா குறிப்பிடப்படுதல் காணலாம். காமவேள் விழா ஆடவரும் மகளிரும் ஆனந்தமாகப் பொழுது போக்கும் ஓர் இன்ப விழா என்பதும் இவற்றால் போதரும்.

அவதார சரிதங்களும் பிறவும்

மால் தன் நீல்நிற உருவுடனே மாறுபட்டுத் தோன்றும் வெண்மை நிறமுடைய பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரம் பொருள். அந்தப் பாற்கடல் நடுவே, சுடர்மணிகள் இலங்கும் முடி ஆயிரமும் கவை நாவும் உடைய ஆதிசேடனாகிய படுக்கையின் மேல் துளவம் சூடிய முதல்வன் அறி துயில் கொள்கின்றான்(கலி.105:71-72; கலி.123:4; பெரும்.372-373; பரி.13:26-29).

தன் உரு உறழும் பாற்கடல் நாப்பண்,
மின் அவிர் சுடர்மணி ஆயிரம் விரித்த
கவைநா அருந்தலைக் காண்பின் சேக்கைத்
துளவம் சூடிய அறிதுயிலோன்'. (பரி.13:26-29)

இவன் கொள்கின்ற தூக்கம் யோக உறக்கமாதலால் 'அறிதுயில்' எனப்படுகிறது. தாமரைக் கண்ணனாகிய இந்தக் கரியோன் அனைத்துப் பொருளாகவும் அவற்றின் உட்பொருளாகவும் இருக்கிறான். இதனால் இவன் உறைதலும் இல்லை. உறையும் இடமும் இல்லை என்னும்படி இவன் இல்லா இடம் எதுவும் இல்லை. இவ்வாறு இவன் உளபோலத் தோன்றும் தன்மையும் ஒரு மாயம். உலகில் முதலிலும் இடையிலும் இறுதியிலும் படைப்பு, அளிப்பு, அழிப்பு என்னும் தொழில் வேற்றுமை காரணமாக இவன் பிறக்காத பிறப்புக்கள் எதுவும் இல்லை. ஆனால், இவனைப் பிறப்பித்தோர் எவரும் இலர். தானே முதலாம் அத்தனிப் பரம்பொருள் ஏனையுயிர்கள் போல் கருமத்தால் பிறத்தல் இன்றித் தன் இச்சையால் பல பிறப்பை எடுத்துக் கொள்கிறான். இங்ஙனம் இவன் பிறப்பு எடுப்பது மன்பதைகளின் துன்பம் துடைத்து இன்பம் தருவதற்கேயாம்.

அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ; ஆதலின்
உறையும் உறைவதும் இலையே; உண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமார் அனையை;
முதல் முறை, இடைமுறை, கடைமுறை, தொழிலில்

பிறவாப் பிறப்பு இலை; பிறப்பித்தோர் இலையே.
(பரி.3:68-72)

புவ்வத் தாமரை புரையும் கண்ணன்,
வெளவல் கார்இருள் மயங்குமணி மேனியன்,
எவ்வயின் உலகத்தும் தோன்றி, அவ்வயின்
மன்பது மறுக்கத் துன்பம் களைவோன்.
(பரி.15:49-52)

இங்குக் காட்டிய பரிபாடற் பகுதிகள் பாற்கடல் துயிலும் பரந்தாமன் இவ்வுலக உயிர்களை உய்விக்கும் பொருட்டுத் தன் இச்சையால் கொள்ளும்அவதாரங்களின் உட்கருத்தை விளக்கு கின்றன.

வராகத் திருக்கோலம்

எல்லாம் நீருள் அமிழ்ந்து கிடந்த பேரூழிக் காலத்தே, இந்த உலகத்தில் உயிர்கள் உளவாதற் பொருட்டு வராகத்திருக்கோலம் கொண்டு நிலத்தை நீரிலிருந்து எடுத்து உயர்த்தினான். அதனால் இந்த உலகத்திற்கு 'வராக கற்பம்' என்பது பெயராயிற்று (பரி. *2:16-19*). பெருமான் ஆதிவராகமான காலத்தில் வெள்ளத்துள் மூழ்கி எடுத்த நிலமகளைத் தன் கொம்பினிடத்தே கொண்டு தழுவுதலால் அவ்வுலகம் சிறிதும வருத்தம் உறாது உயர்ந்தது *(பரி.2:32-33; பரி.3:21-23; பரி.3:34-36)*. இங்ஙனம் வெள்ளத்தினின்று உலகை எடுத்துத் திருத்திய தொழில் உலகைத் தாங்கும் மேரு மலையின் தொழிலொடு ஒப்பதாயுள்ளது *(பரி.4:22-24)*

அன்னம் ஆனமை

ஒருகால் ஏழு மேகங்களும் நீரைப் பொழிந்து உலகை நாசம் செய்ய முற்பட்ட காலத்தில், பெருமான் அன்னச்சேவலாக வந்து, தன் சிறகுகளினாலே அம்மழை நீரெல்லாம் மாயுமாறு வற்றச் செய் தான் *(பரி.3:25-26)*.

மா விசும்பு ஒழுகு புனல் வறள அன்னச்
சேவலாய்ச் சிறகர்ப் புலர்த்தியோய்! (பரி.3:25-26)

நிலம் அளக்க நீண்ட மால்

மாவலிபால் குறளனாய்ச் சென்று மூன்றடி நிலம் இரந்து, அவன் தானமாக வார்த்த நீர் தன் கையிலே விழவும் நெடிய திரு

வுருக்கொண்டு, உலகங்களையெல்லாம் மூன்றடியாய் அளந்து கொண்டான்.

'நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல' (முல்லை.3)

'இருநிலம் கடந்த திருமறு மார்பன்
முந்நீர் வண்ணன்.' (பெரும்.29-30)

''ஞாலம் மூன்று அடித் தாய முதல்வன் ' (கலி.124:1)

இவன் நிலம் அளக்கின்ற காலத்துக் கீழ் ஏழுலகத்தையும் ஒக்க ஓர் அடியிட்டான் (பரி.3:20). அக்காலத்தில் அவுணர் பலர் திரிந்து அயர்ந்து, அஞ்சி, அகன்று ஓடிக் கடலிற் பாய்ந்தனராம் (3:54-56).

தூணில் தோன்றி அரக்கன் ஆகம் பிளந்தது (நரசிங்காவதாரம்)

தன்னை நேசித்துப் புகழும் பிரகலாதன் மனத்திலே பொருந்தி, அவனைச் சினத்தால் துன்புறுத்திய அவன் தந்தை இரணியனை அழிக்க வேண்டி, தூணில் நரசிங்கமாய்த் தோன்றி, அந்த இரணியனுடைய மார்பைத் தன் கூரிய நகங்களால் கிழித்துப் போட்டனன் (பரி.4:10-21)

'செயிர்தீர் செங்கட் செல்வ! நிற்புகழ -
புகைந்த நெஞ்சின், புலர்ந்த சாந்தின் -
பிருங்கலாதன் பலபல பிணிபட
வலந்துழி, மலர்ந்த நோய் கூர் கூம்பிய நடுக்கத்து
அலர்ந்த புகழோன், தாதை ஆகலின்
இகழ்வோன், இகழா நெஞ்சினனாக, நீ இகழா
நன்றா நட்ட அவன நன் மார்பு முயங்கி,
ஒன்றா நட்டவன் உறுவரை மார்பின் -
படிமதம் சாம்ப ஒதுங்கி
இனனல் இன்னரொடு இடிமுரசு இயம்ப,
வெடி படா ஒடி தூண் தடியொடு,
தடி தடி பலபட - வகிர் வாய்த்த உகிரினை. (பரி.4:10-21).

மன்னரை மாய்த்த மழுவாள் நெடியோன (பாசுராமன்)

தான் கொண்டதோர் வஞ்சினத்தால் மன்னர் கால்வழியை எல்லாம் தனது மழுப்படையால் கொன்று மாய்த்தான் பரசுராமன். இவன் அரிதின் முயன்று செய்து முடித்த பெருவேள்வியை உவமையாகக் கூறுமிடத்து, இவன் மன்னர் வமிசத்தை மாய்த்த

நிகழ்ச்சியும் உடன் சுட்டப்பட்டிருக்கிறது. (அக.220:5-8).

மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன்று அரிதினின் முடித்த வேள்வி,
கயிறு அரை யாத்த காண் தரு வனப்பின்,
அருங்கடி நெடுந்தூண் போல (அக.220:5-8).

இராம சரிதம்

இராமாவதார சரித நிகழ்ச்சிகளில் இரண்டு அகநானூறு புறநானூற்றுத் தொகுதிகளுள் உவமை வாயிலாகப் புலப்படுத்தப் பட்டுள்ளன. ஒன்று, இராமனுடன் வனத்தில் வசித்திருந்த சீதையை வலித்தகை அரக்கன் இராவணன் கவர்ந்து சென்ற நிகழ்ச்சி. இராவணன் சீதையைக் கவர்ந்து செல்லுங்கால் தன்னைத் தேடிவரும் இராமனுக்குத் தடையமாகும் பொருட்டுத் தன் ஆபரணங்களைக் கழற்றிக் கீழே இட்டனள். அதனைப் பூமியில் பெற்ற சுக்கிரீவனுடைய சுற்றத்தவரான வானரங்கள் அந்த ஆபர ணங்களைத் தத்தம் உறுப்புக்களில் முறை மாற்றி அணிந்து கொண்டனவாம். இங்ஙனம் வறுமையுற்றுச் சோழனிடம் பரிசி லாக அணிகலன் பெற்ற புலவரின் சுற்றத்தாரும் அந்த அணிகலன் களை அதுவரையில் அணிந்தறியாதவர்களாதலினாலே விரலணி யைச் செவியினும், காதணியை விரலிலும் அரையணியைக் கழுத் திலும் கழுத்தணியை அரையிலுமாக அணிந்து போந்தனராம் (புறம்.378:9-22).

மற்றொன்று, இராமன் தன் துணைவர்களுடன் நிகழ்த்திய மந்திராலோசனை. இராவணன் மேல் படைகொண்டு சென்ற இராமன் பாண்டியர்களுக்குரிய பழைய கோடிக்கரையிலே மிகப்படர்ந்ததோர் ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கின்றான். தனது நெருங்கிய துணைவர்களுடனே மந்திராலோசனை நடத்தத் தொடங்கினான். அவர்கள் பேச்சு வெளிப்படாவண்ணம் அந்த ஆலமரத்தில் தங்கியிருந்த பறவைகள் பேரிரைச்சல் இட்டன. அப்பொழுது இராமன் அப்பறவைகள் ஒலிக்காத படி செய்து விட்டானாம் (அக.70:13-16). இராமன் தான் மேற்கொண்ட போரிலே வெற்றியும் பெற்றனன். 'வெல்போர் இராமன்' (அக.70:13-15) என்பதனால் இது குறிப்பின் பெறப்படும். 'கடுந் தெறல் இராமனுடன் புணர் சீதை' (புறம்.378:18) என இராமன் சீதை என்னும் பெயர்கள் எடுத்தாளப்படுதலும் நோக்கத்தக்கது. வட

சொல் சிதைந்து பொருத்தமுடையனவாகச் சான்றோர் செய்யுளில் வந்ததற்கு இந்த அடியை மேற்கோள் காட்டுகின்றார் நச்சினார்க்கினியர். இங்ஙனம் வடசொற்களை ஏற்ற பெற்றி அமைக்கும் மரபு, வடநூற் சரிதங்களைத் தமிழ்ச் சான்றோர் மேற்கொண்டு மொழி பெயர்ப்புக் கலையில் ஈடுபட்டதனால் நேர்ந்த விளைவே.

பஞ்ச மூர்த்தியாம் வியூக நிலை

திருமால் ஐந்து மூர்த்தங்களாகவும் உள்ளான். தன்னோடு சங்கருஷணன், பிரத்யும்நன், அநிருத்தன், வாசுதேவன் என நால் வகையாகவும் பிரிந்து நின்று பஞ்சமூர்த்தியாகக் காட்சி தருவன். இது திருமாலின் வியூகநிலை எனப்படும். இதனை,

> செங்கட் காரி! கருங்கண் வெள்ளை!
> பொன்கட் பச்சை! பைங்கண் மாஅல்! (பரி.3:81-82)

எனவரும் பரிபாடலடிகளால் உணரலாகும். சிவந்த கண்ணையுடைய வாசுதேவனே! கரிய கண்களையுடைய சங்கருடணனே! சிவந்த உடம்பினையுடைய பிரத்தியும்நனே! பசிய உடம்பினையுடைய அநிருத்தனே! - என்பது இவ்வடிகளின் பொருளாம்.

மூவுருநிலை

திருமாலின் திருவுருவங்களில் மூன்று திருவுருவ நிலையைச் சிறப்பாக எடுத்துக் கூறலும் உண்டு. ஒப்பற்ற தனிப் பரம்பொருள், பாற்கடலில் யோகத்துயில் நிலையிலும், நாஞ்சில் படையைக் கொண்டு விளங்கும் பலராமன் நிலையிலும், வராகமாய் வந்து நிலமகளைக் கூடிய நிலையிலும் ஆக மூன்று நிலைகளில் நிற்பதும் பரிபாடலில் ஓர் இடத்தில் சுட்டப்பட்டிருக்கிறது (பரி.13:26-37). திருமாலை, 'மூஉரு ஆகிய தலை பிரி ஒருவனை!' (பரி.13:37) என்று பாராட்டுகின்றார் கவிஞர்.

ஈருரு நிலை: (பலதேவனும் கண்ணனும்)

வெள்ளை மேனிப் பிரான் பலதேவனும், கரியமேனிப் பிரான் கண்ணனும் பிறப்பு முறையால் மூத்தோனும் இளையோனும் ஆகின்றனர். இதனால் பலதேவனுக்கு 'நம்பிமூத்தபிரான்' என்றொரு பெயரும் உண்டு. கண்ணனுக்கு அமைந்த சிறப்புக் களைக் கருதி பலதேவனிலும் மிக்குவரும் சிறப்பு முறையில் கண்ணன் முதியவனும் ஆகின்றானாம். ஆனால், தேருமிடத்து.

எங்கும் திருமால் எள்ளினுள் எண்ணெய்போல் கலந்து உள்ளுறு பொருளாய் அமைந்து விளங்குகிறான் என்கிறார் கவிஞர்:

'நீயே, 'வளையொடு புரையும் வாலியோற்கு அவன்
இளையன்' என்போர்க்கு இளையை ஆதலும்,
'புதைஇருள் உடுக்கைப் பொலம்பனைக் கொடியோற்கு
முதியை' என்போர்க்கு முதுமை தோன்றலும்,
வடுஇல் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த
கெடுஇல் கேள்வியுள் நடு ஆகுதலும்,
இந்நிலைத் தெரிபொருள் தேரின், இந்நிலை
நின்நிலைத் தோன்றும் நின் தொல் நிலைச் சிறப்பே
(பரி.2:20-27)

என்பது அக்கவிஞரின் வாக்கு. பலதேவனும் கண்ணனும் ஒருங்கு வைத்துப் பூசிக்கப்படுகின்றனர். திருமாலிருங்குன்றத்தில் இவ் விருவரும் ஒருங்கே எழுந்தருளிக் காட்சிதருதலை,

எல்லாம் வேறுவேறு உருவின் ஒருதொழில் இருவர்த்
தாங்கும் நீள்நிலை ஓங்கு இருங்குன்றம் (பரி. 15:13-14)

என்னும் பாடற்பகுதியால் காணலாம்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்தாரை வருணிக்குமிடத்துக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், அவ்விருவரையும் கண்ணனுக்கும் பலதேவ னுக்கும் ஒப்பிட்டுப் பேசுகின்றார். இங்ஙனம் சோழ பாண்டியர் சேர்க்கையால் நாட்டின் பொருளும் புகழும் பெருகும் என்றும் அச்சேர்க்கைக் காட்சி மிக இனிய காட்சி என்றும் போற்றுகிறார் புலவர். அவர் வாக்கு வருமாறு:

பால்நிற உருவின் பனைக் கொடியோனும்,
நீல்நிற உருவின் நேமியோனும, என்று
இருபெருந் தெய்வமும் உடன் நின்றாஅங்கு
உருகெழு தோற்றமொடு உட்குவர விளங்கி,
இன்னீர் ஆகலின் இனியவும் உளவோ? (புறம்.58:14-18)

இங்கே பலதேவனையும் கண்ணனையும் 'இருபெருந் தெய்வம்' என்று போற்றுதல் இவர்தம் வழிபாட்டு வழக்கத்தை உட்கொண்டு கூறியதாகும்.

வாலியோன் (வெள்ளை மூர்த்தியாகிய பலதேவன்)

'பால்நிற உருவின் பனைக்கொடியோன்' (புறம்.56:14), 'பால் அன்ன மேனியான்' (கலி.124:2), 'பால்நிற வண்ணன்' (கலி.104:7) என்று பாலின் வெண்மைக்கும், 'மைஇல் வால்வளை மேனி' (பரி.1:3), 'வலம்புரி வண்ண!' (பரி.3:86) என்று சங்கின் வெண் மைக்கும் ஒப்பிட்டுப் பேசுமாறு தூய வெண்ணிறம் படைத்தவன். எனவே, இவன் 'வளையொடு புரையும் வாலியோன்' (பரி.21:20) என 'வாலியோன்' என்று குறிக்கப்படுகின்றான். 'வாலியோன்' என்றால் 'வெள்ளையன்' என்பது பொருள்.

இவன் தனது ஒரு காதில் சிறந்த குண்டலம் ஒன்றை அணிந்திருப்பான். இக்குண்டலம் யமுனையால் அவனுக்கு அளிக்கப்பட்டது என்பர். இவனுடைய மார்பில் மராமலரால் ஆகிய மாலை விளங்கும். சிவந்த கடப்பமாலை வெண்ணிற மார்பில் ஒளிரும் காட்சியைச் செம்மறுவுடன் கூடிய வெள்ளை ஏற்றிற்கு ஒப்புமை காட்டுகிறார் ஒரு புலவர்.

'ஒரு குழையவன் மார்பில் ஒண்தார்போல் ஒளிமிகப்
பொரு அறப் பொருந்திய செம்மறு வெள்ளையும்'.
(கலி.105:11-12)

என்பது அப்புலவர் வாக்கு. திருமாலிருங்குன்றத்திலிருந்து விழும் அருவியொழுக்கிற்கும் இவன் மாரபில் தாரை ஒப்புக் காண்கிறது பரிபாடல்.

'அரா அணர் கயந்தலைத் தம்முன் மார்பின்
மரா மலர்த் தாரின் மாண்வரத் தோன்றி,
அலங்கும் அருவி ஆர்த்து இமிழ்பு இழிய' (பரி.15:19-21)

என்பது அருவியின் காட்சி.

இவன் ஏந்தியிருக்கும் படை நாஞ்சில் என்னும் கலப்பை (பரி.13:35). இவனுக்குரிய கொடி பனை (புற.56:14, கலி.104:7); யானைக் கொடியும் இவனுக்கு உண்டு (பரி.1:4). கலப்பையும் திருமாலுக்குக் கொடியாகக் கூறப்படுதலின் (பரி.4:30) கலப்பைக் கொடியும் கொள்ளப்படுதல் போதரும். இவ்வகையாக வருணிக் கப்படும் வாலியோனின் திருவுருவத் தோற்றத்தை உட்கொண்டு, 'ஒருகுழையன்' (கலி.105:11), 'நாஞ்சிலோன்' (பரி.13:33), 'பனைக்

கொடியோன்'(புற.58:14) என்னும் பெயர்களாலும் இவன் அழைக்கப்படுகிறான்.

கோவலன் (கண்ணன்)

வாலியோற்கு இளையன் (பரி.2:20-21). ஆயர்களுடன் வாழ்ந்து கோவலர்களுக்குத் தலைவனாக விளங்குகிறான். ஆய்ச்சியரோடு குரவைக்கூத்தாடி அவர்க்கு இடமாகவும் வலமாகவும் நின்று மகிழ்விக்கிறான். அங்கே குடத்தைத் தலைமேலே விட்டுக் கொண்டு குடக் கூத்தும் ஆடுகின்றான். நல்லியற் பாடல் பாடுகின்றான்; நல்யாழிசையை எழுப்புகின்றான். இங்ஙனம் பாலகோபாலன் நிகழ்த்திய ஆடல்களில் ஈடுபட்டு,

'இடவல! குடஅல! கோவல! காவல!
காணா மரப! நீயா நினைவ!
மாயா மன்ன! உலகு ஆள் மன்னவ!
தொல்இயல் புலவ! நல்யாழ்ப் பாண! (பரி.3:83-86)

என்று பாராட்டுகின்றார்.

ஆயர் மகளிருடன் கோவலனாகிய கண்ணன் கூடி விளையாடினான். அவர்களுக்குப் பற்பல இன்பத் தொல்லைகளையும் இழைத்தான். யமுனை ஆற்றில் நீராடிய ஆயர் மகளிரின் துகில்களைக் கவர்ந்தும், அவர் பொருட்டுக் குருந்த மரத்தை வளைத்தும் அவன் புரிந்த ஆடல் ஒன்றை அகநானூற்றுப் பாடல் ஒன்று உவமையாக எடுத்துக் காட்டியுள்ளது.

....வடா அது
வண்புனல் தொழுநை வார்மணல் அகன்துறை,
அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்
மரம்செல மிதித்த மாஅல் போல (அக.59:3-6)

ஒரு களிற்றியானை தன்பிடி உண்ணும் பொருட்டாக யா மரத்தின் கொம்பைத் தாழ்த்துக் கொடுத்தது, கண்ணன் ஆய்ச்சியர் பொருட்டுக் குருந்தமரம் தாழ்த்த நிகழ்ச்சியை ஒக்கும் என்று ஒப்புக் காண்கின்றார் புலவர். இக்கதை நிகழ்ச்சியைப் பழைய உரைகாரர் விரிவாக எடுத்து எழுதியுள்ளார். அது வருமாறு:

"மரம் செல மிதித்த மால்: ஆயர் பெண்கள் குளியா நின்றார்களாக, அவர் இட்டுவைத்த துகிலெல்லாம் பின்னை எடுத்துக்கொண்டு குருந்தமரத் தேறினராக, அவ்வளவில் நம்பி

மூத்தபிரான் வந்தாராக, அவர்க்கு ஒருகாலத்தே கூட மறைதற்கு மற்றொரு வழியின்மையின் ஏறி நின்ற குருந்தமரத்துக் கொம்பைத். தாழ்த்துக் கொடுத்தார், அதற்குள்ளே அடங்கி மறைவாராக. அவர் போமளவும் தானையாக உடுக்கத் தாழ்த்தார் என்பாரும் உளர்.

இதனால் கண்ணன் சரிதக் கதைகள் பல அந்நாளில் வழங்கி யிருத்தல் கூடும் என ஊகிக்கலாம். பிற்காலத்தே பெரியாழ்வார், ஆண்டாள் முதலியோர் பாடிய திருப்பாடல் களிலும் பற்பல கண்ணன் சரிதைகளை எடுத்து மொழிகின்றமை கொண்டு இது தெளியலாம்.

இவ்வாறு இளமையில் ஆடல் புரிந்த கண்ணனின் தெய்வத் தன்மையும் ஆற்றலும் புலப்பட நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் பலவாதல் வேண்டும். அசுரர் பலர் அவனுக்குப் பகைவராய்த் தோன்றி, அவனை அழிக்கப்பார்ப்பதும், அவர்களை எல்லாம் மடியச் செய்வதும் பற்றிய பல நிகழ்ச்சிகள் பிற்காலத்துப் பேசப்படு கின்றன. சங்கப்பாடல்களிலும் ஓரிரு நிகழ்ச்சிகள் காணலாகும். கஞ்சன்(கம்சன்) முதலியோர் வரவிட்ட கழுத்துமயிரினையுடைய குதிரையை வாயைப் பிளந்து போட்டு அழித்துவிடுகிறான் கண் ணன். *(கலி.103:53-54)* இதனைப் பரிபாடலும் சுட்டியுள்ளது.

கூந்தல் என்னும் பெயரொடு கூந்தல்
எரிசினம் கொன்றோய்! (பரி.3:31-32)

இதற்குப் பரிமேலழகர் பின்வருமாறு விளக்கம் தந்து இந் நிகழ்ச்சியை விளக்குவர்.

"...தன்மா என்று கண்டார் சொல்லும் வடிவொடு வந்த கேசியது கனல்கின்ற சினத்தை அழித்தோய். கூந்தலையுடைய மாவை, கூந்தல்' என்றும் கூந்தல் என்னும் பெயரினையுடைய வடிவைப் 'பெயர்' என்றும் கூறினார் ஆகுபெயரான். கேசி குதிரையாய் வந்து பொருதானோர் அசுரன். இப் பெயர் கேசம் என்னும் வட மொழி முதனிலையாக முடிந்தமையின் அதன் பொருண்மை பற்றிக் கூந்தல். என்றார்''

அசுரரைப் பொருதழித்தது போலப் பகைவராய் வந்த மன்னர்களையும் வீரர்களையும் இவன் வென்று மேம்பட்டான். உலகாள் மன்னவனாய் துவரைப் பகுதியை ஆண்டான். வேளிர் களாக வந்தவர்கள் இவனது வழித்தோன்றல்களே என்பர். இவன் வாழ்ந்த இத்துவரைப்பதி (துவாரகை) செம்பினால் இயன்ற உயர்ந்த

மதில் சூழ்ந்த பெருநகராயும், கொடையினால் புகழ் பெற்றும் விளங்கியது. இவன் தன்னை எதிர்த்த மல்லர்களின் மறம் சாய்த்த வரலாற்றைக் கலித்தொகை. ஈரிடங்களில் ஈட்டியுள்ளது (கலி:52:5-6;134:1-4).

கண்ணன் ஐவர்க்கும் நூற்றுவர்க்கும் இடையே நிகழ்ந்த பெரும் போரில் ஈடுபட்டு, ஐவரை வாழ்வித்த வரலாறு உலகம் அறிந்தது. பாரத வீரனாகிய அருச்சுனனுக்குக் கீதையை உபதேசித்து வெல்வழி காட்டினான் கண்ணன்.

..''தொல் ஆணை நல் ஆசிரியர்
புணர்கூட்டு உண்ட புகழ்சால் சிறப்பின்,
நிலந்தருதிருவின்நெடியோன்போல' (மதுரைக் 761-763)

எனவரும் மதுரைக்காஞ்சியடிகளின் உரையில் கீதை நிகழ்ச்சி புலப்படும் என்கிறார் நச்சினார்க்கினியர்:

''எல்லா நிலத்தையும் தன்னிடத்தே காட்டின பெருஞ் செல்வத்தையுடைய மாயோனைப் போலத் தொல்லாணை யை உடைய நல்லாசிரியர் என்றது, கண்ணன் எப்பொருளும் தானாயிருக்கின்றபடியைக் காட்டி ஸ்ரீ கீதை அருளிச்செய்து. எல்லாரையும் போதித்தாற்போலப் போதிக்க வல்ல ஆசிரியர் ''

என்பது நச்சினார்க்கினியர் கருத்து.

இங்ஙனமாகக் கண்ணன் கீதாசிரியனாய் நின்று நிகழ்த்திய பாரதப் போர்ச் செய்திகள் சிலவும் அங்கங்கே தென்படுகின்றன. பாரத வீரர் சரித நிகழ்ச்சிகளில் சிலவும் காண்கின்றன. பாரதப் போரில் நின்று வழிகாட்டிய கண்ணன் புகழ் பேசியதை ஒட்டிச் சங்கப்பாடல்களில் காணும் பாரத சரிதங்களையும் இங்கே நோக்குவோம்.

திருதராட்டினை 'வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர் பெற்ற முகத்தவன்' (கலி.25:1) என்று குறிப்பிடுகிறார். இவன் மக்கள் ஈரைம்பதின்மர் (புற.2:15): அதாவது நூற்றுவர் எனப்படுகின்றனர். இவர்கள் மரபில் வந்த ஐவர்கள் உலகு ஏத்தும் பெரும்புகழுடன் விளங்குகின்றனர். இது பொறாத திருதராட்டிரனின் முதல்மகன் துரியோதனன் சூழ்ச்சியாக அரக்கு மாளிகையில் தங்கச் செய்து அதற்குத் தீ வைத்து - விடுகிறான். அந்த ஆபத்தி

னின்று வளிமகனாகிய் வீமன் தன் சுற்றத்தாரைக் காப்பாற்றுகிறான். இந்நிகழ்ச்சிச் சித்திரத்தை பின்வரும் கலித்தொகைப் பாடல் அடிகளில் காணலாகும்.

வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்,
'ஐவர்' என்று உலகு ஏத்தும் அரசர்கள் அக்கரா,
கை புனை அரக்கு இல்லைக் கதழ்எரி சூழ்ந்தாங்கு,
களிதிகழ் கடாஅத்த கடுங்களிறு அகத்தவா,
முளி கழை உயர்மலை முற்றிய முழங்கு அழல்,
ஒள் உரு அரக்கு இல்லை வளிமகன் உடைத்துத் தன்
உள்ளத்துக் கிளைகளோடு உயப்போகு வான் போல
(கலி. 25:1-8)

மேலே காட்டிய பாடற்பகுதியில் வீமனை 'வளிமகன்' என்றாற் போலக் கன்னனை 'ஞாயிற்றுப் புத்தேள் மகன்' (கலி. 108:13) என்றும் கலித்தொகை குறிப்பிடுகிறது. எனவே, பாரத வீரரின் வமிச வரலாறுகள் எங்கும் பிரசித்தமானவை என்பது போதரும்.

பாரதப் போருக்கு மூலகாரணமானவர் நூற்றுவரே. அவர்தம் பொறாமையும் பொச்சரிப்புமே பெரும்போராகத் தலைதூக்குகிறது. துரௌபதையின் கூந்தலைப் பிடித்து இழுத்துச் சபையில் அவள் ஓலமிட்டுக் கதறவும், ஐவர் அருஞ்சபதம் ஏற்கவும் அவர்கள் காரணபூதரானார்கள் (கலி.101:18-20). இவர்களுக்குப் படைத்துணைவனாக அக்குரன் என்பவன் விளங்குகிறான். இந்த அக்குரன் கொடையில் சிறந்தோன் என்று குறிக்கப்பட்டுள்ளான்; இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் கொடைமைக்கு இந்த அக்குரன் கொடை ஒப்புக் காட்டப்படுகிறது. இவனைக் குறித்து டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள், ''அக்குரன் பாரதத்தில் கூறப்படுவனும் தலையெழு வள்ளல்களுள் ஒருவனுமாகிய அக்குரன் போலும். கர்ணன் என்று நினைத்தற்கும் இடமுண்டு. ஆதாரம் கிடைக்கவில்லை'' என்று எழுதியுள்ளார்கள்.

போர்தலை மிகுத்த ஈர் - ஐம்பதின்மரொடு
துப்புத் துறை போகிய, துணிவுடை ஆண்மை,
அக்குரன் அனைய கைவண் மையையே (பதிற்.14:5-7)

என்னும் பகுதியில் மேற்கண்ட குறிப்பு மிளிர்தல் காணலாம்.

பாரதப்பெரும் போர் நிகழ்ச்சிகள், போர்க்கள நிகழ்ச்சிகள் ஆகியவையும் உவமை வாயிலாக வரும் பகுதிகளால் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஐவர்க்கும் நூற்றுவர்க்கும் நிகழ்ந்த போரில் இருதிறத்தார்க்கும் பெருஞ்சோறு வழங்கி நடுநிலை காத்த சேர மன்னன் பெருமை புறநானூற்றின் தொடக்கத்திலேயே வைத்துப் போற்றப்படுகிறது. பெருஞ்சோறு வழங்கியதனால் 'உதியஞ் சேரலாதன்.', 'பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்' என்னும் புகழ் புனைந்தான்.

அலங்கு உளைப்புரவி ஐவரொடு சினைஇ,
நிலம் தலைக்கொண்ட பொலம்பூந் தும்பை
ஈர்-ஐம் பதின்மரும் பொருது, களத்து ஒழிய
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!
(புறம்.2:13-16)

என்பது முரஞ்சியூர் முடிநாகராயர் வாக்கு. இப்போரிலே வீமசேனன் தான் சபையில் மொழிந்த வஞ்சினப்படியே துரௌபதையின் கூந்தல் மேல் கைதீண்டிப் பற்றியிழுத்த துச்சாதனனுடைய நெஞ்சைப் பிளந்து போட்டுப் பகைவர் நடுவே தான் சொன்ன வஞ்சினத்தை முற்றுவிக்கிறான் (கலி.101:18 20). நூற்றுவர் தலைவனைத் தொடையில் புடைத்து உயிர்கவர்கிறான் (கலி. 52:1-3). பின் வருவதற்கரிய கங்குலிலே வந்து, தன் தந்தை துரோணாசாரியனைக் கொன்றவனாகிய சிகண்டியைத் தன் முயற்சியாலே வென்று கொன்று, தன் தோளால் அவன் தலையைத் திருகிவிடுகிறான் அச்சுவத்தாமா(கலி.101:30-32).

தருமன் முதலிய ஐவரும் வெற்றி பெறுகின்றனர். எனவே, தொண்டைமான் இளந்திரையன் பகைவரை வென்று கொண்ட பெருவெற்றி ஐவர் வெற்றியுடன் ஒப்பிட்டுப் பாராட்டப்படுகிறது.

' ஈர் -ஐம் பதின்மரும், பொருது,களத்து அவிய,
பேர் அமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஆர்ராச் செருவின் ஐவர் போல,
அடங்காத் தானையோடு உடன்று மேல்வந்த
ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்து,
கச்சியோனே, கைவண் தோன்றல்'.
(பெரும். 415-420)

ஐவரும் அட்ட பொருகளம் எங்கும் பேசப்படுவதாயிற்று.

'புரிபு மேல் சென்ற நூற்றுவர் மடங்க,
வரி புனை வல்வில் ஐவர் அட்ட,
பொருகளம் போலும், தொழூஉ'

(கலி.104:57-59)

இங்ஙனமாகப் பாரதக் கதையின் முதலும் இடையும் கடையுமான சில முக்கிய நிகழ்ச்சிகளைச் சங்கப்பாடல்கள் சித்திரிப்பதிலிருந்தும், அதிலும் உவமையாக எடுத் காட்டப்படுவதிலிருந்தும் பாரத சரிதம் பண்டைத் தமிழ்நாட் ார் நன்கு அறிந்ததொரு சரிதமாதல் புலனாகும்.

திருமாலைக் குறித்த பிற சரிதங்கள்

திருமால் அமிர்தம் கொணர்ந்து தேவர்களைச் சாவா மரபின் அமரர் ஆக்குகிறான் (பரி. 2:69-73). அமரரை எதிர்த்துத் துன்புறுத்திய அசுரரை அழித்து, அவரைக் காப்பாற்றுகிறான் (பரி.1:25-30 மதுரைக். 590). அவுணர்கள் சூரியனைக் கொண்டுசென்று மறைத்து விட, அதனால் உலகமெல்லாம் அலமர, அஞ்சன உருவனாகிய திருமால் அவ்வவுணரிடமிருந்துமீட்டு, ஞாயிற்றை நிலைபெறச் செய்தான். (புறம்.174:1-5). பால்மதியைச் சேர்ந்து துன்புறுத்திய அரவினை விடுவித்து மதிக்கும் நேர்ந்த மறுக்கத்தைத் துடைகின்றான் (கலி.104:37-38). இங்ஙனமாக எந்த அவதார நிகழ்ச்சியில் நடந்தது என்று உறுதி செய்யமுடியாத வகையில் அமைந்த ஒருசில திருமால் அருஞ்செயலைப் புலப்படுத்தும் நிகழ்ச்சிகளையும் சங்கப்பாடல்களில் நாம் காண்கிறோம்.

4.முருகன்

இந்திராதி தேவர்களுக்கும், கோள் நாள்களுக்கும் எல்லாம் மேற்பட்ட பேராற்றல் வாய்ந்தனவும், எல்லாவற்றையும் ஆக்கி, இயக்கி, காத்து, அழித்துத் தம் அருளாணை செலுத்துவனவும் ஆன பெருந்தெய்வங்களையும் சங்கப்பாடல்களில் காணலாகும். முருகன், மால், இராமன், பலராமன், கண்ணன், முக்கண்ணன் ஆகியோர் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர். மற்றும் இவர்களோடு தொடர்புடைய திருமகள், பிரமன், காமன், உமை, கொற்றவை முதலியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இக்கடவுளர்களுக்குள் சிறப்பாகத் தனிக்கவிதைகளால் பாராட்டப் பெற்றிருப்பவர் முருகனும் மாலுமே. இவ்விரு கடவுளரையும் வாழ்த்தி வணங்கிப் போற்றும் பாடல்கள் பரிபாடல் தொகுதியுள் உள. இப்பொழுது நமக்குக் கிட்டியுள்ள இருபத்திரண்டு பரிபாடல்களுக்குள்ளே திருமாலுக்கு ஆறும் முருகக் கடவுளுக்கு எட்டும் ஆகப் பதினான்கு பாடல்கள் காணப்படுகின்றன. இவை எல்லாம் கடவுள் வாழ்த்துப் பொருளில் அமைந்தவை. இப்பரிபாடல் தொகுப்பில் முதற்கண் திருமால் வாழ்த்துக்கள் நான்கு அமைந்து, அதனை அடுத்துச் செவ்வேளாம் முருகக் கடவுள் வாழ்த்துச் சேர்ந்துள்ளது. இதன்பின்னர் வையையைப் பற்றிய பாடல்களுக்கு இடையிடையே இவர்களைக் குறித்த பாடல்களும் கலந்து அமைகின்றன. எனினும், இத்தொகுப்புத் திருமாலுக்கு முதலிடம் தந்திருப்பது சிந்தித்தற்குரியது.

'மாயோன் மேய காடு உறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்'.

(தொல்.பொருள்.அகத்.5)

எனத் தொல்காப்பியரும் இவ்வகை முறையே கொண்டிருத்தல் ஒப்புநோக்கத் தக்கதாகும். பரிபாடலைத் தவிரப் பத்துப்பாட்டுள் முதலாவதாக வைத்துப் போற்றப்பெறும் திருமுருகாற்றுப்படை. முருகன் புகழ்பாடும் நெடும் பாட்டாகும்.

சங்கப் புலவர் முருகு, முருகன், சேய், சேயோன், வேள், செவ்வேள், நெடுவேள், வேலன், வேலான் என்னும் பெயர்களால்

முருகனைச் சுட்டுவர். முருகு என்பது அழகு; அழகு தெய்வமாகிய முருகனையும் இப்பெயர் சுட்டும். முருகன் என்றாலும் அழகன் என்பதுதான் பொருள். 'என்றும் இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே' என்பது நக்கீரர் வாக்கு. இளமையோன், அழகன் என்னும் இருபொருள் பயப்பதாய்க் 'குழகன்' என்னும் ஒரு பெயரும் இப் பெருமானுக்கு உண்டு. செந்நிறம் பொருந்தியவனாதலின் சேய், சேயோன் எனப் பெற்றான். வீரப்பெருங்கடவுளாதலின் வேள் என்றும் அவன் திருவுருவைக் கருதிச் செவ்வேள், நெடுவேள் என்றும் போற்றப் பெறுவானாயினன். வேல் தாங்கிய வீரப்பெருந் தெய்வமாதலின் வேலன், வேலான் என்று புகழப் பெறுகின்றான்.

முருகன் மலை உறை கடவுள் என்பது பெருவழக்கு. மலை வாழ் மக்களாகிய குன்றவர் போற்றும் தெய்வம். மலையும் மலை சார் நிலமும் ஆகிய குறிஞ்சி நிலம் இவனுக்கு உரிய நிலம். எனவே, இவனுக்குக் '.குறிஞ்சிக் கிழவன்'. (முருகு. 267) என்னும் ஒரு பெயரும் வழங்கி வருகிறது.'பிறங்குமலை மீமிசைக் கடவுள்' (குறிஞ்சி.208-209) என்று இவனைக் குறிஞ்சிப்பாட்டு குறிப்பிட்டுள்ளது. மலையில் வாழ்நர் சிறப்பாகக் கொண்டு போற்றினமை கருதியே இவனை 'மலைக்கடவுள்' என்று கருதுகின்றனர். 'வெறி கமழ் நெடுவேள்' (அக. 98:27) என்றும் இவன் சிறப் பிக்கப் படுகின்றான். காடு ஒழிந்த பிற நிலப்பகுதியினராலும் இவன் வணங்கிப் போற்றப்பட்டவனே.

'ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்,
ஆர்வலர் ஏத்த மே வரு நிலையினும்,
வேலன் தைஇய வெறிஅயர் களனும்,
காடும் காவும், கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும், வேறுபல் வைப்பும்,
சதுக்கமும் சந்தியும் புதுப் பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும் (முருகு.
220-226)

இப்பெருமான் வழிபடப் பெறுதலை முருகாற்றுப்படையினால் தெளியலாம்.

முருகப்பெருமானின் திரு அவதார நிகழ்ச்சியைப் பரி பாடலின் ஐந்தாம் செய்யுள் நன்கு விவரித்துள்ளது (பரி.5:21-54). திரிபுராந்தகன் உமையொடுகூடிய காலத்து முருகன் உருப்பெற, இந்திரனது குறுக்கீட்டால் அவ்வுருச் சிதைந்து, அறுமுனிவர் அவி

யுள் புகுந்து, பின் அந்த அறுமுனிவர் பத்தினியர்தம் கருப்பத்துள் தங்கி, இமயத்து உச்சியில் உள்ள சுனையின்கண் மலரும் தாமரைப் பள்ளியிலே கருவுயிர்க்கின்றனர். 'மறுமிடற்று அண்ணற்கு மாசிலோள் தந்த செல்வன்' (பரி.8:126-127) என்றும், 'அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ!' (முருகு.255) என்றும்,

> '.தணிவுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி
> மணிமிடற்று அண்ணற்கு மதிஆரல் பிறந்தோய்!'
> (பரி.9:6-7)

என்றும் போற்றப்படுவானாயினான். இந்த அவதார நிகழ்ச்சி பற்றிய குறிப்பு பிற சங்க நூல்களிலும் ஒருசில இடங்களில் சுட்டப் பட்டுள்ளன (முருகு.253-255; பெரும்.458-459; கலி.81:9; 83:14). இவனை 'மால் மருகன்' (பரி.19:57) என்று பரிபாடல் குறிப்பிடுகிறது.

முருகன் பிறந்த அன்றே, இந்திரன் பகைமையால் வச்சிராயுதம் கொண்டு, அவன்மேல் எறிகிறான். அப்பொழுது அறு கூறாகி நின்ற பெருமான் ஒருவனாகி, ஆறுமுகமும் பன்னிரு தோளுமுடையனாய் நின்று, ஆயுதம் எதுவும் இன்றி, இந்திரனுடன் போர் செய்ய, இந்திராதி தேவர்கள் தோல்வியுறுகின்றனர். தத்தம் மெய்யினின்றும் பிரித்துப் பல ஆயுதங்கள் முதலியவற்றைப் பெருமானுக்குக் கையுறை கொடுக்கின்றனர். அவர்கள் தந்த மறி,மயில், கோழிச்சேவல், வில், மரன், வாள், ஈட்டி, கோடரி, மழு, கனலி, மாலை, மணி ஆகிய இவற்றைத் தன் பன்னிரு கைகளிலும் கொண்டு சிறப்புடன் திகழ்கின்றான் ஆறுமுகப்பெருமான் (பரி.5 :55-70)

நீலக்கடலில் எழும் உதயசூரியனை ஒத்துச் செந்நிற ஒளி வீச, ஆறு திருமுகங்களும் அருட்காட்சி நல்க, பன்னிரு கையும் பல தொழில் புரிய, மயிலின் மேல் வீற்றிருக்கும் பெருமானின் அழகினை முருகாற்றுப்படை பலபடியாகப் பாராட்டிப் பேசியுள்ளது. இப்பகுதிகள் எல்லாம் பரிவுடன் பாடுவோரைப் பரவசப்படுத்தும் பான்மைய (முருகு. 1-11; 77-125). பரிபாடலும் பெருமான் ஆறுமுகத்தையும் பன்னிரு தோளையும் பல இடத்தும் குறிப்பிட்டுள்ளது (பரி.5:11-12;.14:21; 21-67). பெருமான் புனைந்துள்ள உடை, மாலை முதலியன எல்லாம் அவன் திருவுருவே போன்று செந்தீப் பிழம்பாகக் காட்சி தருகின்றன (முருகு. 1-3).

'உடையும் ஒலியலும் செய்யை; மற்று ஆங்கே
படையும் பவளக் கொடிநிறம் கொள்ளும்;
உருவும் உருவத் தீஒத்தி; முகனும்
விரிகதிரி மூற்றா விரிசுடர் ஒத்தி'. (பரி.19:97-100).

முருகனுடைய உடையை, 'நலம்பெறு கலிங்கம்' (முருகு. 109) என முருகாற்றுப்படை குறிப்பிடுகிறது. கலித் தொகையோ இவனு டைய உடை வெண்துகிலால் அமைந்தது என்று கூறுகிறது (கலி. 105:17).

இவன் தனது செந்நிற மார்பிலே முத்துமாலை அணிந்துள்ளான். இது செவ்வான ஒளியில் வரிசை வரிசையாகப் பறக்கும் கொக்கின் கூட்டத்தைப் போன்று உள்ளது என்கிறார் ஒரு புலவர் (அக.120:1-3 முருகு.104). இதோடு கடப்பம் பூமாலையும் அம் மார்பில் புரளுகின்றது (புற.23:3; முருகு.10:11; பரி.5:81). இம் மாலையில் வள்ளிப் பூவும் இடையிட்டுத் தொடுக்கப் பெறுமாம் (பரி.21:10-11;14:22). இவன் தலையில் சூடும் கண்ணி கடம்பின் கண்ணியும் (நற்.34-8)காந்தட் கண்ணியும் (முருகு. 43-44) ஆகும். மற்றும் பேரொளி வீசும் பல்வகை அணிகலன்களைப் பூண்டு விளங் குகிறான் (குறிஞ்சிப்.51; குறுந்.1:3)

முருகப் பெருமானுக்கு யானையும் மயிலும் ஊர்தியாக அமைந்துள்ளன. இவன் ஏறி நடத்தும் யானை 'பிணிமுகம்' எனப் படும் (குறு.1:2; புற.56:8; பதி.11:16; பரி.5:2; 17:44; 21:1-2; முருகு.78-82). இவன் ஏறிச் செலுத்தும் மயிலூர்தி மிகவும் விரைந்து செல்லும் இயல்புடையது. 'விரை மயில்மேல் ஞாயிறு'(பரி.18:26) என்று இவன் சிறப்பிக்கப்படுகிறான். இவனது கொடியாக அமைந்து விளங்குவனவும் இவ்விரண்டுமே (பரி.19:90-91; புற. 56:7; முருகு.122; பரி.17:48). இவை தவிரக் கோழிக்கொடியும் இவனுக்கு உண்டு (முருகு.38-39).

முருகப்பெருமானின் திருவுருவையும் அவன் அணிந்துள்ள ஆடை அணிகளையும், அவனுடைய கொடி, ஊர்தி ஆகியவற்றையும், அவன் இயக்கும் வாத்தியம் முதலியவற்றையும் சுட்டி, முருகாற்றுப்படையில் ஓர் உருவ வருணனை உள்ளது. அது வருமாறு:

''செய்யன், சிவந்த ஆடையன்; செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்,

கச்சினன் கழலினன், செச்சைக் கண்ணியன்,
குழலன், கோட்டன், குறும் பல்லியத்தன்,
தகரன், மஞ்ஞையன், புகர்இல் சேவல்அம்-
கொடியன்.நெடியன், தொடி அணி தோளன்-
நரம்பு ஆர்த்தன்ன இன்குரல் தொகுதியொடு,
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன் நேர்பு துகிலினன்''

(முருகு.206-214)

இவன் சீற்றமும் சினமும் மிக்கவன் (புற.16:12; அக.158:16-17; பதி.26:11; பொருந.131); ஒப்பற்ற பெருந்திறல் வாய்ந்தவன் (நற்.225:1; அகம்.181:6); போரிலே முன்னின்று புகழ் பெறுபவன் (அகம்.1:3;புற.14:19; மலைபடு. 493). எந்நாளும் வெற்றியையே விரும்புபவன். அதனால், 'விறல் வெஞ் சேய்' (புற.22:29;120-21; 125:20)என்று போற்றப்படுபவன். போர் வீரர்களை முருகனுக்கு ஒப்பிட்டுப் பேசுதல் உண்டு. இது மேற்குறித்த 'விறல் வெஞ் சேய்' ஒப்போனே என அரசர்களை விளிப்பது கொண்டு அறியத்தகும்.

வேல் ஆற்றும் மொய்ம்பனின், விரைமலர் அம்பினோன்-
போல், ஆற்று முன்பின் புனை கழல் மைந்தர்

(பரி.22:26-27)

என்று இளங்காளையர் குறிக்கப்படுகின்றனர்.

முருகப்பெருமான் கொண்டுள்ள ஆயுதங்களுள் வேல் மிகவும் சிறப்பாகக் கூறப்படும் (குறிஞ்சி 51-52; சிறுபாண்.172; முருகு.45-46; பரி.5:7;21:8-9, 21:66). இவனை 'வேல்வல்லான்' (கலி.104:14), 'வல்வேல் கந்தன்' (புற.380:12), 'வேல் வலான்' (கலி.105:17) என்று சிறப்பிப்பர். முருகாற்றுப்படை பெருமான் பன்னிரு கைகளின் தொழில்களை வருணிக்குமிடத்து (110-111). அங்குசம் (தோட்டி), ஐ-இரு வட்டம் (பரிசை), எஃகு (வேல்) என மூன்று ஆயுதங்கள் குறிக்கப்பட்டுள்ளன. தேவர்கள் முருகனுக்குப் படை யாகத் தந்தனவாகிய மறி, மயில், கோழி, வில், மரன், வாள், ஈட்டி, கோடரி, மழு, கனலி, மாலை, மணி ஆகிய பன்னிரண்டு பொருள் களையும் பன்னிரு திருக்கரங்களிலும் கொண்டு விளங்குவதாகப் பரிபாடல் உரைக்கிறது. இந்த ஆயுதங்களைத் தாங்கி இந்திரன் வேண்ட தேவர் சேனைக்கு முருகன் அதிபதியாயினான் (முருகு.260; பரி.1:25; 5:63-70). அதனால்

அத்தேவர்களுக்கு அரசனாகிய இந்திரனது புகழின் எல்லையையும் கடந்து, யாவரும் போற்றச் சிறந்து விளங்கலானான்.

ஆஅங்கு அவரும் பிறரும் அமர்ந்து படை அளித்த
மறியும், மஞ்ஞையும், வாரணச் சேவலும்,
பொறிவரிச் சாபமும், மரனும், வாளும்,
செறி இலை ஈட்டியும், குடாரியும், கணிச்சியும்,
தெறுகதிர்க் கனலியும், மாலையும், மணியும்,
வேறுவேறு உருவின் இவ்ஆறு இரு கைக்கொண்டு,
மறுஇல் துறக்கத்து அமரர் செல்வன்தன்
பொறிவரிக் கொட்டையொடு, புகழ்வரம்பு இகந்தோய்!

என்பது (5:63-70) பரிபாடல்.

தேவர் தலைவனாக விளங்கிய பெருமான் அவர்களுக்குப் பகையாய்த்துன்பம் கொடுத்த அவுணர்களையெல்லாம் (குறுந். 1-2; முருகு.59-60; பரி 1:25-28; 5:7) அழித்து, அத் தேவர்களுக்கு வாழ்வு நல்குகிறான். முருகன் ஒழித்த அவுணர்களில் சூரனைத் தடிந்தது சிறப்பாகக் கூறத்தகும். சூரன் மாமர உருவில் கடலிடைப் புகுந்து நின்று போர் செய்ய, பெருமான் அக்கடலினுள் புகுந்து சூர்மாவின் அடியை வெட்டி எறிந்து அழித்தொழிக்கின்றான் (முருகு.45-46; 59-60; 275).

பாய் இரும் பனிக்கடல் பார்துகள் படப் புக்கு,
சேய் உயர் பிணிமுகம் ஊர்ந்து, அமர் உழக்கி,
தீ அழல் துவைப்பத் திரிய விட்டெறிந்து,
நோயுடை நுடங்கு சூர்மா முதல் தடிந்து,
வென்றியின் மக்களுள் ஒருமையொடு பெயரிய
கொன்று உணல் அஞ்சாக் கொடுவினைக் கொல்தகை
மாய அவுணர் மருங்கு அறத் தபுத்த வேல்'.

(பரி.5:1-7)

சூர்மா கொன்ற இந் நிகழ்ச்சியைப் புறநானூறு (23:3-7), பதிற்றுப்பத்து (11:56), பெரும்பாணாற்றுப்படை(456-460), குறுந்தொகை (1:2), கலித்தொகை (27:15-16; 93:25-27; 104; 13-14), பரிபாடல் (1:5; 9:70; 14:18; 18:3-4; 19:101; 21:8; 28-29) என்னும் நூல்கள் பல இடங்களில் சுட்டிச் செல்கின்றன.

அடுத்தபடியாகக் குறிப்பிடத்தக்கது குருகுபெயர்க் குன்றமாகிய கிரவுஞ்ச மலையை முருகன் வேலால் எறிந்து

அழித்தது (முருகு. 266; பரி.8:29; 19:26,102-103). மலை பண்டு உயிர் உடையனவாய்ப் பறந்து திரிந்தன ஆதலால் குன்றம் கொன்ற குன்றாத கொற்றமுடையனாயினான் முருகன் எனக் கருதுவர் (தக்க. 170 உரை). இந்த மலை நாவலந்தீவிற்கு வடபால் அமைந் திருந் ததாம். இதனை வேலால் துளைத்து அத்னைக் கீழ்ப்படுத்தினான் அறுமுகன்.

நாவல்அம் தண்பொழில் வடபொழில் ஆயிடை,
குருகொடு பெயர்பெற்ற மால்வரை உடைத்து,
மலை ஆற்றுப்படுத்த மூ-இரு கயந்தலை'. (பரி.5:8-10)

இங்ஙனமாகக் கிரவுஞ்சத்தையும், சூரபன்மா முதலிய அவுண ரையும் தொலைத்துத் தங்களுக்கு வாழ்வளித்த பெருமானுக்கு இந்திரன் தன் மகள் தேவயானையைத் திருமணம் செய்து கொடுக் கிறான் (முருகு.6,175; பரி.9:9,58). இவளைத் தேவசேனை என்றும் குறிப்பர். அதனால் முருகன், 'மறு இல் கற்பின் வாணுதல் கணவன்' (முருகு.6) என்னும் சிறப்பைப் பெறுகிறான். பின், பரங்குன்றத்தில் பெருமான் குறவர்குடிப் பிறந்த வள்ளி நாச்சியாரையும் மணந்து கொள்கிறான் (முருகு. 101-102; பரி.8:69, 9:67, 14:21-22; 19:95).

நிலவரை அழுவத்தான் வான் உறை புகல் தந்து
புல வரை அறியாத புகழ் பூத்த கடம்பு அமர்ந்து,
அருமுனி மரபின் ஆன்றவர் நுகர்ச்சிமன்
இரு நிலத்தோரும் இயைக'. என, ஈத்த நின்
தண் பரங்குன்றத்து, இயல் அணி, நின் மருங்கு
சாறு கொள் துறக்கத்தவளொடு
மாறு கொள்வது போலும், மயிற்கொடி வதுவை
(பரி.19:1-7)

தேவயானையை இந்திரன் கொடுக்கக் கொண்டது போலன்றி இந்த வள்ளி நாச்சியாரைக் களவு முறைப்படி மணம் புரிந்தான் முருகன். முருகனுடன் களவினால் கூடி வள்ளி உடன் சென்ற நிகழ்ச்சியை, 'முருகு புணர்ந்து இயன்ற வள்ளி போல'. என உவமையாக எடுத்துக் காட்டினாரும் உளர் (நற்.82:4).

தேவசேனை இந்தத் திருமணத்திற்கு ஒவ்வாது கண் கலுழ்ந்து அழுதனளாம். அவள் உகுத்த கண்ணீர் பரங்குன்றத்தில் மழைபோல் கொட்டியதாம். இதனை நமக்குத் தெரிவிப்பவை,

மைஇரு நூற்று இமை உண்கண் மான்மறி தோள் மணந்த
ஞான்று.
ஐ-இருநூற்று மெய்ந்நயனத்தவன் மகள் மலர் உண்கண்,
மணிமழை தலைஇயென, மா வேனில் கார் ஏற்று,
தணிமழை தலையின்று, தண்பரங் குன்று. (பரி.9:8-11)

எனவரும் பரிபாடல் அடிகளே. தெய்வயானை - வள்ளி மணாளனாகப் பெருமான் விளங்குதலினால், 'மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!' (முருக.264) என்று புகழப்படுகிறான். இவ்விரு மங்கையரும் முருகப்பெருமானைக் கூடியும் ஊடியும் இன்பந் துய்த்தனர். முருகன்பால் இம்மங்கையர் கொள்ளும் ஊடலும், அதனை அவர் தணிக்கும் வகையும், இருமங்கையர் தமக்குள் நேரும் பிணக்கு, அவ்வவரைச்சார்ந்த தோழிமார் முதலியோர்க்கும் பரவுதலும் போன்ற சில கற்பனைச் சித்திரங்களை ஒன்பதாம் பரிபாடல் தருகிறது.

தாமரை புரையும் காமர் சேவடி
பவழத்து அன்ன மேனித் திகழ்ஒளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கை குன்றின்
நெஞ்சுபக எறிந்த செஞ்சுடர் நெடுவேல்
சேவல்அம் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே

எனவரும் குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடல், முருகன் காத்து - வருதலினாலே இவ்வுலகம் இன்பமயமான நாள்க்ளைப் பெற்று விளங்கியமையைத் தெரிவிக்கிறது.

முருகப்பெருமான் கன்னிமகளிரைத் தீண்டி வருத்துவன் என்றும் (குறிஞ்சி.174-175, நற்.288:10, அக.98:9-10), அந்த அல்லல் தீர அப்பெருமானுக்கு வெறியாட்டு எடுத்து வழிபாடு செய்ய வேண்டும் என்றும் சங்ககால மக்கள் கருதினர். 'அணங்குடை முருகன்' (புற.299:6), 'நெடுவேள் அணங்குறு மகளிர்', (குறிஞ்சிப்.174-175) என்பதைப் போன்று வரும் சிறப்புத் தொடர்களால் இதனை அறியலாம். முருகனுக்குச் செய்யும் இவ்வகையான பூசை, 'முருகு ஆற்றுப்படுத்தல்' (அக.22:11), 'முருகு அயர்தல்' (குறுந்.362:1) என்றும், வெறி (ஐங்.243:2; நற்.273:4-5; பரி.5:15), 'வெறியயர்தல்' (அக.182:17-18) வெறியாட்டு(தொல்,63,109) என்றும் கூறப்படும். வெறியாடல் பொருள் பற்றியே ஐங்குறு

நூற்றில் 'வெறிப்பத்து' என ஒரு பத்து அமைந்துள்ளது. நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, முருகாற்றுப்படை முதலிய நூல்களில் வெறியாட்டலைக் குறித்தும் அதனை நிகழ்த்துவிக்கும் வேலன் என்பானைக் குறித்தும் பல குறிப்புகள் உள.

வெறியாட்டில் முருகனுக்குப் பூசை செய்வோன் 'வேலன்' எனப்படுவான். முருகப்பெருமானின் வேலைத் தாங்கி நிற்றலால் வெறியாட்டாளனும் 'வேலன்' என்னும் பெயர் பெறுகின்றான். ''பிள்ளையார் வேலைத் தனக்கு அடையாளமாகக் கொண்டு திரிதலின் வேலன்'' என்றார்' என்று நச்சினார்க்கினியர் கொள்வர். முருகன் ஆவேசம் தன்மேல் வரக்கொண்டு இவன் ஆடுவான். பச்சிலைக் கொடியால் நறைக்காயை இடையிட்டு, காட்டு மல்லிகையுடன் வெண்டாளியையும் சேர்த்துக் கட்டின கண்ணியைச் சூடியிருப்பான். நறுமணம் மிக்க சந்தனத்தை மார்பில் பூசியிருப்பான் (முருகு.190-193). இவனைப் 'படிமத்தான்' என்றும் கூறுவர். இவ்வேலன் வெறியாடி முருகனை வழிபடும் இடம் வெறியயர்களம் (முருகு.222, குறுந்.53:3, 360:1; அக.98:18-19; 114:1-2) எனப்படும். இவ்வெறியாட்டு நடுநாளாகிய இரவின் சாமப் பொழுதில் நடைபெறும். வெறிக்களம் பெரும்பாலும் வீட்டின் முற்றமாக அமைந்திருக்கும். அம்முற்றத்தில் மணல் பரப்பப் பட்டிருக்கும்(அக.138:10; நற்.268:8-9). மேலும், அக்களம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கும். அதில் ஒருபால் முருகப்பெருமானுக்குரிய கோழிக்கொடி நாட்டி வைக்கப்பட்டிருக்கும். அங்கே பூவும் மாலையும் அணிவித்து, நறும்புகை காட்டுவான். முருகப் பெருமானை அங்கு எழுந்தருளப் பண்ணுவான். இனிய வாச்சியங்கள் ஒலிக்க, அப்பெருமானின் இருக்கையாகிய கடம்பையும் ஊர்தியாகிய யானையையும் புகழ்ந்து பாடுவான். முருகப் பெருமான் கடப்பமரத்துறைதலை .'கடம்பு அமர் நெடுவேள்'. (பெரும்.75) எனவும், '.புலவரை அறியாத புகழ் பூத்த கடம்ப அமர்ந்து'. (பரி.19:2) எனவும் வருவனவற்றால் அறியலாகும்.

ஆங்குள்ள மரத்தில் ஆட்டுவிடையைக் கட்டியிருப்பான். அந்த மறியை அறுத்து, செந்தினையை அதிலிருந்து பெருகும் குருதியுடன் கலந்து,பலியாகத் தூவுவான். முருகப்பெருமானின் பெயர்களைக் கூறி விளித்து, அவனுடைய மாண்புமிகு புகழ்களை இசையுடன் கலந்து பாடுவான். பல்வகை மலர்களையும் தூவி வழிபடுவான் (நற்.47:9, 10; 173 :1-4; 322: 10-12; அக. 22: 8 -11 ;98 :18-19,114:1-3,138:7-13,187:17-18).

களம் நன்கு இழைத்து, கண்ணி சூட்டி,
வளநகர் சிலம்பப் பாடி, பலி கொடுத்து,
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகு ஆற்றுப்படுத்த உருகெழு நடுநாள் (அகம்.22:8-11)

அணங்கு என உணரக் கூறி, வேலன்
இன் இயம் கறங்கப் பாடி,
பல்மலர் சிதறிப் பரவுறு பலிக்கே (நற்.322:10-12)

அருஞ்சிமை இழிதரும் ஆர்த்துவரல் அருவியின்
ததும்பு சீர் இன்இயம் கறங்க, கைதொழுது,
உருகெழு சிறப்பின் முருகு மனைத் தரீஇ,
கடம்பும் களிறும் பாடி, நுடங்குபு,
தோடும் தொடலையும் கைக்கொண்டு, அல்கலும்
ஆடினர் ஆதல் நன்றோ? (அகம்.138:8-13)

என்னும் இப்பாடல் அடிகளிலே வெறியயர் களத்தையும் வழிபாட்டையும் விளங்கக் காணலாம்.

குறமகளிர் வெறியாட்டெடுத்து, முருகனை வழிபட்ட வகையினை முருகாற்றுப்படை மிக விரிவாகத் தருகிறது. இதில் மேலே நாம் கண்ட பிறநூல் செய்திகளோடு மேலும் பல நிகழ்ச்சிகளை இந்நூற் பகுதியில் காணலாகும். அப்பகுதி வருமாறு:

மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர,
நெய்யோடு ஐயவி அப்பி, ஐது உரைத்து,
குடந்தம்பட்டு, கொழுமலர் சிதறி,
முரண்கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ,
செந்நூல் யாத்து, வெண்பொரி சிதறி,
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து, பல் பிரப்பு இரீஇ,
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்து,
பெருந்தண் கணவீர நறுந் தண் மாலை
துணை அற அறுத்துத் தூங்க நாற்றி,
நளிமலைச் சிலம்பில் நல்நகர் வாழ்த்தி,
நறும்புகை எடுத்து, குறிஞ்சி பாடி,
இமிழ் இசை அருவியொடு இன் இயம் கறங்க,

உருவப் பல்பூத் தூஉய், வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பி, குறமகள்
முருகு இயம் நிறுத்து, முரணினர் உட்க,
முருகு ஆற்றுப்படுத்த உருகெழு வியல்நகர் -
ஆடுகளம் சிலம்பப்பாடி, பலவுடன்
கோடு வாய் வைத்து, கொடு மணி இயக்கி,
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட,
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்த வாறே. (முருகு.227-249)

மேலே தரப்பட்டுள்ள வெறியாட்டு நிகழ்ச்சிகளை இனிக் காண்போம். வெறியாடும் இடம் அச்சம் தரத்தக்க தன்மையதாய்க் காணப்படுகிறது. இங்கே முருகப்பெருமான் எழுந்தருளி வருமாறு செய்வதற்குப் பலவகையான அலங்காரங்கள் செய்து படையல்கள் வைத்துப் பற்பல வகையான இசைக் கருவிகளை ஒலிக்கச் செய்து வழிபடுகின்றனர்.

வெறியாடுகளத்திலே கோழிக்கொடியை முறைப்படி ஏற்றி வைக்கின்றனர். நெய்யையும் வெண்சிறுகடுகையும் அந்த இடத்திலே அப்பிவைக்கின்றனர். வழிபடுதற்குரிய மந்திரத்தை மென்மையாக உச்சரித்து அழகிய மலர்களைத் தூவுகின்றனர். மாறுபட்ட நிறமுடைய இரு ஆடைகளை உள்ளொன்றும் புறம்பொன்றுமாக உடுத்துக் கொள்கின்றனர். சிவந்த நூலால் கையிலே காப்புக் காட்டிக் கொள்கின்றனர். மிகு வலிமைபெற்ற பெருமையுடைய காலினையுடைய கொழுத்த ஆட்டுக்கிடாயினது உதிரத்தோடே தூய வெள்ளரிசியையும் கலந்து சிறு பலியாக் இடுகின்றனர். பல்வகையான சோற்றுப்படையல்களையும் கூடைகளில் பரப்பி வைக்கின்றனர். சிறிய பச்சை மஞ்சள் கலவையுடனே மணமுள்ள சந்தனம் முதலியனவற்றையும் தெளிக்கின்றனர். குளிர்ச்சியான பெரிய செவ்வலரிமலர் மாலையினையும் மற்றுமுள்ள மணமலர் மாலைகளையும் அறுத்துத் தொங்கலாகக் கட்டிவைக்கின்றனர். மலைப்பக்கத்து ஊர்கள் எல்லாம் பசியும் பிணியும் பகையும் நீங்கி மழையும் வளனும் பெருகுமாறு வாழ்த்துகின்றனர். அருவி ஒருபால் முழக்கமிட்டுப் பாய்வதும் ஒருவகையான இசையை எழுப்பிக் கொண்டிருக்கிறது. அதற்கு இனையாகப் பல வேறு வகையான வாத்தியங்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. கெடாத வலிமையுடைய முருகப்பெருமான் ஏறிவரும் பிணிமுகம் என்னும்

யானையும் வாழ்த்துகின்றனர்; மயிலையும் வாழ்த்துகின்றனர். இவ்வாறாக வழிபாடும் வாழ்த்துமாய்க் குறவர் குடியிருப்புக்களில் குறமகளிர் வெறியாடலைச் செய்து முருகப்பெருமானை வழிபடும் திறம் பேசப்படுகிறது.

வேலன் தானே ஆடும் வெறியாட்டமேயன்றி, குறவர்களோடும், அவர்தம் மகளிரோடும் கூடி, கள்ளைக் குடித்து, ஊர் மன்றத்தில், வேங்கை மரத்தடியில் கைகோத்துக் குரவையாடி, முருகனை வழிபடுதலும் உண்டு. இக்கூத்தில் மகளிர் கைகளை ஆடவர் தழுவி அவர்க்கு முதற்கை கொடுத்து, அவர்களுடன் கலந்து நின்று ஆடுவது வழக்கம்; அப்பொழுது தொண்டகச் சிறுபறை முழங்கும் என முருகாற்றுப்படை கூறும் (முருகு.197).

அருங்கடி வேலன் முருகொடு வளைஇ,
அரிக் கூடு இன்இயம் கறங்க, நேர்நிறுத்து,

குரவை வேறு பல இடங்களிலும் சுட்டப் பட்டுள்ளன (முருகு.190-197; மலைபடு.318-322; நற்.276:8-10; புறம்.129:1-3). முருகப்பெருமானே குன்றுகள் தோறும் தம்மைச் சேவிக்கும் மகளிருடன் குரவையாடி மகிழ்கின்றான்என்று முருகாற் றுப்படை கூறும் (முருகு. 199-217).

வேலன் ஆடும் வெறியாட்டினாலும், குறவர்தம் மகளிருடன் கூடி ஆடும் குரவையினாலும் முருகனை வழிபடுதல் ஒருபுறம். இது மலைநாட்டு மக்களின் வழிபாட்டு முறை போலும். பிறநிலத்து ஊர்களிலும் இப்பெருமானுடைய வழிபாடு சிறக்க நடைபெறுகிறது. வெறியாட்டிற் போலவே தினையரிசியை மலரொடு கலந்து வைத்து, மறியை அறுத்து, கோழிக்கொடியை நிலைநிறுத்தித் தொழுகின்றனர். இதனை,

'சிறுதினை மலரொடு விரைஇ, மறி அறுத்து,
வாரணக் கொடியொடு வயிற்பட நிற்இ,
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்' (முருகு. 218-220)

எனவரும் பகுதியால் உணரலாம்.

இனி, அந்தணர்களோ நீராடும்போது நனைத்துக் கட்டிய ஈர ஆடையுடன், தலைமேல் கூப்பிய கையினராய், முருகப்பெருமானைத் துதித்து, ஆறு எழுத்துடன் கூடிய மந்திரத்தை உச்சரித்து, மணம் மிக்க பூவைக்கொண்டு வழிபடுகின்றனர் (முருகு .184-189). திருப்பரங்குன்றத்தில் முருகப்பெருமானின் திருக்கோயில் மேரு

மலை போல் உயர்ந்து விளங்கும் தோற்றத்தையும், அங்கே பாண்டிய மன்னனும், அவன் சுற்றமும், பிறரும் வந்து வழிபடு தலையும் பரிபாடல் தொகுதியுள் அமைந்த செவ்வேளைப் பற்றிய பாடல் களில் காணலாகும் (பரி.19:19-29). 'கடம்பு அமர் செல்வன் கடிநகர்' ஆகிய பரங்குன்றத்துக் கோயிலைக் கூடல்வாழ் மாந்தரும் பிறரும் வந்து வழிபடுகின்றனர். முருகப்பெருமான் உறையும் கோயிலைக் .கோட்டம். என வழங்குதல் உண்டு என்பது, 'முருகன் கோட்டத்து'(புறம்.299:6) எனப் புறநானூறு கூறுதலால் தெரிய வரும்.

பரங்குன்றப் பெருமானை வழிபடுவோர் மதுரையிலிருந்துபரங்குன்றத்திற்குச் செல்லும் வழியில், பூசை செய்யும் நோக்கத்துடன் திரள் திரளாக எழுந்து செல்கின்றனர். பூசைக்கு வேண்டும் சந்தனமும், தூபத்திற்குரிய பொருள்களும், காற்றால் அவியாத விளக்கமும் கொண்டு செல்கின்றனர். மணம் கமழ்கின்ற மலர்கள், முழவம், மணி, பாசம், மயில், கோடரி, பிணிமுகம் ஆகிய வற்றையும் வேறுபல பொருள்களையும் ஏந்திச் செல்கின்றனர். இக்காட்சியை,

> சீறடியவர் சாறு கொள எழுந்து -
> வேறுபடு சாந்தமும், வீறுபடு புகையும்,
> ஆறுசெல் வழியின் அவியா விளக்கமும்,
> நாறு கமழ் வீயும், கூறும் இசை முழவமும்,.
> மணியும், கயிறும், மயிலும், குடாரியும்,
> பிணி முகம் உளப்படப் பிறவும், ஏந்தி -
> அருவரை சேராத் தொழுநர் (பரி. 8:95-112)

> தேம்படு மலர், குழை, பூந்துகில், வடிமணி,
> ஏந்து இலை சுமந்து, சாந்தம் விரைஇ,
> விடை அரை அசைத்த, வேலன் கடிமரம்
> பரவினர் உரையொடு பண்ணிய இசையினர்,
> விரிமலர் மதுவின் மரம்நனை குன்றத்து -
> கோல் எரி, கொளை, நறை, புகை, கொடி, ஒருங்கு எழ-
> மாலை மாலை, அடி உறை, இயைநர்,
> மேஎோர் உறையுளும் வேண்டுநர் யாஅர்? (பரி.17:1-8)

எனவரும் பரிபாடல் அடிகளில் காண்கிறோம். பதினேழாம் பரிபாட்டு முருகன் உறையும் கடிமரமாகிய கடம்பினைத் துதித்து

வழிபாடு இயற்றுதலைக் குறிப்பிடுகிறது.

திணிநிலைக் கடம்பின் திரள்அரை வளைஇய
துணை அறை மாலையின், கைபிணி விடேம்

(குறிஞ்சி.176-177)

எனவரும் குறிஞ்சிப்பாட்டு அடிகளிலும் இது குறிக்கப் பட்டிருத்தல் காணலாம். இத் திருப்பரங்குன்றத்தின் அடியில் மாலை தோறும் இவ்வாறு பலராகச் சேர்ந்து வழிபடு வோருள் யாரும் தேவருலகத்தையும் விரும்பார் என்கிறார் கவிஞர்.

பரங்குன்றில் வழிபாடு இயற்றுவார் முருகனுக்கு இடும் நறும்புகை காற்றுடன் கலந்து எங்கும் நறுமணத்தைப் பரப்பு கின்றது (பரி.14:19-20; 18:52-53; 21:50-51).

உருள் இணர்க் கடம்பின் நெடுவேட்கு எடுத்த
முருகு கமழ்புகை நுழைந்த வளியும் (பரி.21:50-51)

எனக் காற்றுடன் கமழ்புகை கலந்துவருதல் போல, முருகப் பெருமானும், அந்த நறும்புகையூடு அமர்ந்து இனிது உறை கின்றான்.

கறைஇல் கார்மழை பொங்கி அன்ன
நறையின் நறும்புகை நனி அமர்ந்தோயே!

என்று நறும்புகையூடு முருகனது தெய்வ நலமும் கண்டு அடியார்கள் இன்பத்தில் திளைக்கின்றனர்.

பெருமானுக்குரிய நாமங்களை நவின்றும், அவனுடைய அவதாரப் பெருமை, பிற வீரதீரச் செயல்கள் முதலியவற்றைச் சுட்டியும் புகழ்மாலை பாடித் துதித்தலும் செய்கின்றனர். சங்கப் பாடல்களில் அங்கங்கே காணப் பெறும் முருகன் திருப்பெயர் களாவன: முருகு (நற்.225:1;அக.118:5;138:10;288:4; புற.56:14; ஐங்.245:3; 247:3; 249:2) முருகன் (புற.23:4; 299:6; அக.1:3; முருகு.269), வேள் (பதிற்.11:6), செவ்வேள் (பட்டின.154; முருகு.269), நெடு வேள் (நற்.173:10; 288:10; அக.98:27); 120:1, 272;15; 382:5; பெரும்.75; குறிஞ்சிப்.174; மதுரைக்.614; முருகு.278; குறுந். 111:2), நெடியான் (பரி.19:28), கந்தன் (புறம் .380:12), குமரன் (பரி.91:81-82), இயவுள் (முருகு.274), மதவலி (முருகு.275) என்பனவாம். அடியார்கள் முருகனைக் கண்டு, தம் கையைத் தலைமேற் குவித்து வணங்கியும், பின் அவன் திருவடிகளிலே வீழ்ந்து அவன் திருவடி தம் தலைமேல்

பொருந்துமாறு வணங்கியும், பெருமானுடைய பல்புகழையும் கூறித் துதிக்கின்றனர். அடியார்கள் துதிக்கும் துதிமாலைப் பகுதி ஒன்று முருகாற்றுப் படையில் மிளிர்கின்றது. 'அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ!' 'மலைமகள் மகனே!', .'குறிஞ்சிக் கிழவ!' ., .'போர்மிகு குரிசில்!'. எனப் பலவாறு முருகனைப் புகழும் துதிமொழிகள் முருகாற்றுப்படையுள் 253 முதல் 276 வரையுள்ள பாடல் அடிகளிலே வருவது கண்டு மகிழத்தக்கது.

முருகப்பெருமானை வணங்கும் தகுதி பெற்றார் சிலரே. எல்லாரும் அவனை அண்டி வழிபடும் பேறு பெறுதல் இல்லை. உயிர்களை வதைக்கின்ற தீய நெஞ்சத்தில் சினத்தை மிகப்பெற்றாரும், அறவழியில் செல்லாத புகழில்லாதவரும், கூடா வொழுக்கத்தால் அழிந்த தவ விரதத்தினரும், 'இப்பிறப்பின் நுகர்ச்சியே உண்மை; மறுபிறப்பு இல்லை' என்னும் அறிவிலிகளும் ஆகிய இவர்கள் பெருமானுடைய திருவடி நிழலை அடையார். இப்பெருமானது குணத்தை ஏற்றுக்கொண்டோராகிய அறங்கொண்டோரும், வீடுபெறும குணமுடையராகிய மாதவரால் வணங்கப்பட்டோருமே அவனது திருவடி அடைவர் (பரி.5:71-77).

முருகன் திருவடி அடைந்து வணங்கும் பக்தர்கள் இம்மைப் பயன் ஒன்றையே அவன்பால் இரத்தல் இல்லை. அவனிடத்துத் தாம் செலுத்தும் அன்பையும் அவனுடைய பேரருளையும் அறத்தையுமே அவர்கள் இரந்து வேண்டுகின்றனர்.

"- யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும் -
உருள் இணர்க் கடம்பின் ஒலிதா ரோயே! (பரி.5:78-81)

என்பதுவே அவர்தம் வேண்டுகோள்.

முருகன் கோயில் கொண்டருளும் சில தலங்களைப் பற்றிய செய்திகளும் சங்கப் பாடல்களால் தெரியவருகின்றன. திருப்பரங்குன்றம், திருச்சீர் அலைவாய், திருஆவினன்குடி, திருஏரகம், குன்றுதொறு ஆடல்', 'பழமுதிர்சோலை' என ஆறு தலங்களை முருகாற்றுப்படை பாடுகிறது. இவற்றுள் குன்றுதொறு ஆடல்., .பழமுதிர் சோலை. என்பன இரண்டும் ஒரு தலத்தைக் குறிப்பிடுவன அல்ல. முருகன் இருப்பிடமாகக் குறித்தவற்றுள், .'காடும். காவும்'. (முருகு.223) எனச் சுட்டியதன் இயல்பினையே விவரிப்பன

இவை. எனவே தான், தனிப்பட்ட திருப்பதிகள் நான்கினையும் முன்னர்க்கூறிப் பின்னர்ப் பொதுவகையாக எங்கும் பரந்து காணும் காட்டிற்கு இருப்பிடமாகிய குன்றத்தையும் காவாகிய சோலையையும் சிறப்பிக்கின்றது முருகாற்றுப்படை. இப்பகுதியில் முருகன் மகளிருடன் குரவையயர்தலும், குறமகளின் வெறியாட்டும், மலை இழி அருவியும் ஆக எல்லாம் மலைக்கண் நிகழும் நிகழ்ச்சியும் மலைக்காட்சியுமாகவே அமைதலும் கவனிக்கத் தக்கது. 'முருகு அமர் மாமலை' (ஐங்.308:4), 'சேய் குன்றம்' (குறுந் .1:3), 'பிறங்கு மலை மீமிசைக் கடவுள்' (கு ,சி .208-209) என மலையொடு பிணைத்து முருகப்பெருமானைக் கூறுதலும் உணரத்தக்கது.

திருப்பரங்குன்றத்தையும் திருச்சீர் அலைவாயையும் முருகாற்றுப்படையொழிந்த பிற சங்க நூல்களும் குறிப்பிட்டுள்ளன. பரிபாடல்களில் திருப்பரங்குன்றத்தையும் ஆங்குள்ள கோயிலையும் ஆங்கு நிகழும் வழிபாடு, விழா, மற்றும் பல சிறப்புகள் ஆகியவற்றையும் காணலாம். (பரி.6:69-70,95; 8:11-16; 21:15; பரி.திரட்டு.17:1-2). இம்மலையை ஆசிரியர் நல்லந்துவனார் பாடியுள்ள சிறப்பினை பரிபாடலில் காணலாம். (பரி.6,8,11,20).

சூர்மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேல்
சினம் மிகு முருகன் தண்பரங் குன்றத்து,
அந்துவன் பாடிய சந்து கெழு நெடுவரை (அக.59:10-12)

என அகநானூற்றுப் பாடலில் மதுரை மருதனிளநாகனார் குறிப்பிடுகின்றார். 'ஓடியா விழவின் நெடியோன் குன்று' என அகநானூற்றின் பிறிதொரு பாடல் புகழ்கிறது (அக.149:16), .வெள் வேலான் குன்று. (கலி.27-16) என்பது கலித்தொகை.

அலைவாய் எனப்படும் திருச்செந்தூர் இன்று போலவே அலை வந்து மோதும் கடல் மருங்கிலேயே அன்றும் விளங்கியது; முருகப்பெருமான் கோயில் நிலைபெற்றிருத்தலாகிய சிறப்பினைப் பெற்று, எங்கும் புகழ்ந்து பேசும் நிலையில் அது விளங்கியது. இதனை,

'திருமணி விளக்கின் அலைவாய்ச் செருமிகு சேஎய்'
(அக.266:20-21) எனவும்,

தாழ்நீர், வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில்

நெடுவேள் நிலைஇய காமர் வியன் துறை
(புறம்.55:17-21)

எனவும் வரும் அகநானூறு புறநானூற்றுச் செய்யுட் பகுதிகளரல் உணரலாகும்.

'வேலூர்' என்பது முருகனது வேலால் பெற்ற பெயர் என்று கூறும் செவிவழிச் செய்தி ஒன்று சிறுபாணாற்றுப்படையில் உண்டு.

திறல் வேல் நுதியில் த்த கேணி,
விறல் வேல் வென்றி, வேலூர் (சிறுபாண். 172-173)

என்னும் அடிகளுக்கு நச்சினார்க்கினியர்தரும் உரைவிளக்கப் பகுதியில் இவ்வூரின் பெயர் வரலாறு பற்றிக் கேட்கப்படும் பழம் செய்தியை விளக்கியுள்ளார்.

அது வருமாறு:

''முருகன் கையில் வலியிணையுடைத்தாகிய வேலின் நுதி போலே கேணி பூக்கப்பட்ட வெற்றியையுடைய வேலாலே வெற்றியை யுடைய வேலூர் என்றது; நல்லியக்கோடன் தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்டவழி அவன் இக்கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை எறி என்று கனவிற் கூறி, அதிற் பூவைத் தன் வேலாக நிருமித்ததொரு கதை கூறிற்று. இதனாலே வேலூர் என்று பெயராயிற்று''

இது போன்று தெய்வத்தொடு சார்த்தி ஓர் ஊருக்குப் பெருமை பேசும் பிற்காலப் பௌராணிக வரலாறுகளைப் போன்றவை ஒரு சில முற்காலத்தும் கேட்கப்பட்டன என்பதனை வேலூர் பற்றிய கதையால் உணரலாகும்.

5.முக்கண்ணன்

மாலைக் குறித்தும், மாலொடு தொடர்புடைய நான்முகன், பலதேவன், காமன் முதலியோரைக் குறித்தும், மால்மருகன் முருகனைக் குறித்தும் இதுகாறும் பார்த்தோம். இப்பொழுது முருகனை ஈன்றளித்த முக்கண்ணான் முதுபுகழைப் பார்ப்போம்.

முக்கண்ணான் அந்திவானத்தைப் போன்ற செந்நிறம் படைத்தவன் (அக.360:6-9). இதனை,

'வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உரு உடன் இயைந்த தோற்றம் போல,
அந்தி வானமொடு கடல்அணி கொளாஅ,
வந்த மாலை பெயரின்.'' (அக.360:6-9)

என்னும் வருணனைப் பகுதியால் அறியலாகும். 'செவ்வான் அன்ன மேனி' (அக.க.வா.8) என்பது அகநானூற்றின் கடவுள் வாழ்த்து. குரால் ஏற்றின் நிறத்திற்கும் முக்கண்ணான் உரு ஒப்புக் காட்டப்பட்டிருக்கிறது.

மிக்கு ஒளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதல்
முக்கண்ணான் உருவேபோல் முரண்மிகு குராலும்
(கலி.104:11-12)

என்பது கலித்தொகையில் வரும் காட்சி. மலர்ந்து மணம் பரப்பும் சண்பக மலர் இவனது திருமேனி அழகைப் பெற்று விளங்குகிறது என்கிறார் ஒரு புலவர்.

'அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த
பெருந்தண் சண்பகம் போல'. (கலி.150:20-21)

என்பது அவர் வாக்கு. எனவே, முக்கண்ணான் வண்ணம் அந்தி வான் வண்ணமும் சண்பகம் போன்ற பொன்வண்ணமுமாக அன்பர்களுக்குக் காட்சி அளிக்கிறது.

திருமேனி போன்றே சிவந்து காணப்படுவது இவன் திருமுடியில் இலங்கும் சடை. நெருப்பை ஒத்துக் காட்சியளிப் பதாகப் புறநானூறு, 'எரிமருள் அவிர்சடை' (புற.56:1) என்று கூறுகிறது. இவனது சடை மிகவும் நீண்டது; நீட்சியினால் தாழ்ந்து தொங்கு கிறது.

'நன்று ஆய்ந்த நீள் நிமிரிசடை
முது முதல்வன்.' (புறம்.166:1-2)

என்கிறார் ஆவூர் மூலங்கிழார். இது நல்ல ஒளி வீசித் திகழ்கிறது (புற.166:1). இச் சடையிலே நல்ல ஒளியை வீசும் நீரை மறைத்து வைத்துள்ளான் (கலி.150:9).

'ஆறு அறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து
தேறு நீர் சடைக்கரந்து, திரிபுரம் தீமடுத்து
கூறாமல் குறித்ததன்மேல் செல்லும் கடுங்கூளி
மாறாப் போர் மணிமிடற்று எண்கையாய்!. (கலி.1:1-4)

.பிறங்கு நீர் சடைக்கரந்தான்.' (கலி.150:9)

எனவரும் கலித்தொகைப் பகுதிகள் அவன் சடையிடை விளங்கும் கங்கையைச் சுட்டுகிறது. இதனால் இவனுக்குச் 'சலதாரி' (பரி.9:6) என்று ஒரு பெயரும் உண்டாயிற்று. நீர் எப்பொழுதும் தங்கியிருத்தலால் அந்தச் சடை ஈரமாகவும் உள்ளது (கலி.38:1). பால் போன்று வெள்ளொளி தரும் பிறையை நெற்றியைப் போலப் பொலியுமாறு தன் இருமுடியிலே கொண்டுள்ளான் (புற.55:4-5; புற.91:5-6; கலி.103:25; கலி.142:24-28). பிறை சூடிய பெருமானை,

பால் புரை பிறை நுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் (புற.91:5-6)

கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண். போல (புற.55:4-5)

என்று இவ்வாறு புறநானூறு போற்றுகிறது. கலித் தொகையிலே,

எரிதிகழ் கணிச்சியோன் சூடிய பிறைக்கண்
உருவ மாலை போல (கலி.103:25-26)

கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிது ஒன்று
நாடுவேன் கண்டனென்; சிற்றிலுள் கண்டு, ஆங்கே,
ஆடையான் மூஉய் அகப்படுப்பேன்; சூடிய
காணான் திரிதரும் கொல்லோ - மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றையவன்? (கலி.142:24-28)

என்று அவன் சூடிய பிறையைச் சுட்டி உவமையாகவும் பிற குறிப்புத் தோன்றவும் பாடியுள்ள பகுதிகள் உள. பிறை பெருமானுக்கு முடிமாலைபோன்று அமைந்துள்ளது. எனவே, இவன்

'புதுத் திங்கள் கண்ணியான்' (கலி.150:17) என்று போற்றப் படுகிறான்.

பெருமானது முக்கண்ணையும் கறைமிடற்றையும் சங்கப் புலவர்கள் ஒப்புமையாகவும் பிறவாறாகவும் எடுத்தாண்டுள்ளனர். இவை முறையே இவனது சினத்திற்கும் பேரருளுக்கும் சின்னமாக விளங்குகின்றன. இவனது முக்கண்களோ இமையாத முக்கண்கள் (முருகு. 153), 'முக்கண்ணான்' (கலி.2:4), 'முக்கணான்' (கலி.104:10), 'முக்கட்செல்வன்' (அக.181:16) என்று இவன் குறிக்கப்படுதலி னாலே முக்கண்ணின் சிறப்பும் மூர்த்தியின் பெருமையும் விளங் கும். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை மூன்று வேந்தருக்குள்ளும் மேம்பட்டவன் என்று குறிப்பிடு மிடத்து,

கறைமிடத்து அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்து மேம்பட்ட பூந்தார்மார்ப! (புற.55:4-6)

என்று சிறப்பித்துக் கூறுகிறார். இதில் மதுரை மருதனிள நாகனார், கறைமிடற்று அண்ணலின் நெற்றியிடத்தே விளங்கும் ஒப்பற்ற கண்ணைப்போல உள்ளான் என்று எடுத்துக் காட்டு கின்றார்.

இவன் கறைக்கண்டனாக ஆனமைக்குக் காரணம் கரிய நஞ்சை உண்டமைதான். அதனால் இவனைக் 'காரி உண்டிக் கடவுள்' (மலைபடு.83) என்று மலைபடுகடாம் சுட்டுகிறது. நஞ்சை உண் டமை காரணமாக இவனது கழுத்து கருங்கழுத்தாய் மாறி விட்டது. ஆனது பற்றி இவனது கழுத்து 'கறைமிடறு' (புற.55:4), 'மணி மிடறு' (புற.56:2, புற.55:4; கலி.105:13; கலி.147:27-28; பரி.9:7) என்னும் சிறப்பைப் பெற்றுள்ளது. சாதற்கு எதுவான நஞ்சை உண்டும் முக்கண்ணன் நிலவுதல் போல அதிகமானும் அழிவின்றி இருத்தல் வேண்டும் என்று நெல்லிக்கனி பெற்ற ஔவையார்,

'போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி!
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும! நீயே' (புற.91:4-7)

என்று வாழ்த்துகின்றார்.

பலரும் புகழும் சிக்கென்ற தோள்களைப் படைத்தவன் (முருகு. 152), 'எண்கையாய்' (கலி.1:4) என விளிக்கப்படுதலினால் இவனுக்கு எட்டுக் கைகள் உள்ளமை தெரியவரும். 'எண்தோள் முக்கண் எம்மானே' என்பார் மணிவாசகரும். தோளிலே கொன்றை மாலையைத் தரித்திருப்பவன். ஆகவே இவன், 'மாண்மலர்க் கொன்றையவன்' (கலி.142:28); .'அயம் திகழ் நறுங்கொன்றை அலங்கல் அம் தெரியலான்'. (கலி.150:1) என்று சிறப்பிக்கப் படுகின்றான்.

முக்கண்ணன் தனது வெற்றிக்கொடியாகக் கொண்டிருப்பது ஏறு (புற.56:1; முருகு.151-152); இதனால் இவன், 'ஆன் ஏற்றுக் கொடியோன்' (கலி.26:5) என்று அழைக்கப்படுகிறான். இவன் ஏறிச்செல்லும் ஊர்தியும் ஏறுதான்(கலி.150:13; பரி.8:2). அது வெண்ணிறமுடையது (முருகு.151). வெள்ளை ஏற்றை ஊர்தியாகக் கொண்டு காட்சி தந்தும், அந்த வெள்ளேற்றையே தன் வெற்றிக் கொடியாகவும் கொண்டு விளங்குகிறான் இவன் என்பது போதரும்.

இவன் 'கணிச்சி.' என்றும் மழுப்படையைத் தாங்கியவன் (கலி.2:6; 101:8). இது எரிசுற்றி விளங்கும் காட்சியாதாயிருக்கும். 'எரிதிகழ் கணிச்சியோன்' (கலி.103:25) என்கிறது கலித்தொகை. இது யாராலும் விலக்குதற்கு அரிய வன்மை படைத்தது (புற.56:2); பெரும்புகழ் படைத்து விளங்குவது (கலி.105:13). இவன் முப்புரம் எரிசெய்த காலத்து, இமய மலையை வில்லாகவும் ஆதிசேடனாகிய பாம்பை நாணாகவும் கொண்டு ஓர் அழல் அம்பால் அழித்தான் என்று கூறப்பட்டிருக்கிறது(புற.55:1-3; கலி.38:1; பரி.5:24-25; பரி.தி.1:76-77). ஆகவே வில்லும் இவனுக்கு ஆயுதமாக உள்ளமை தெரியவரும்.

முக்கண் செல்வன் உமையை ஒரு பாகத்தே கொண்டு உயர்ந்த மலையாகிய கயிலை மலையிலே அமர்ந்து போகியாகக் காட்சி தருகின்றான் (முருகு.153; கலி.38:1-2). இவன் காம வதுவையுள் உமையொடு புணர்ந்து அமையாப் புணர்ச்சியில் அமைந்ததனாலே முருகன் தோற்றம் அளித்தான். ஐந்தலைப் பெம்மானாகிய முக்கண்ணன் (பரி.6:53-54) அறுமுகப்பெருமானை ஈன்றளித்தான். இம்முருகப் பெருமானால் விண்ணோர் மண்ணோர் துயரங்கள் நீங்கி நல்வாழ்வு பெற்றனர்.

இவனே அருந்தவ முதல்வனாய் ஆலின்கீழ் அமர்ந்து அற முரைக்கும் யோகியாகவும் காட்சி தருகின்றான் (கலி.100:7-8).

ஆலமரத்தின் அடியில் அமர்ந்து விளங்கும் தவக்காட்சியைக் குறித்தே இவன், 'ஆல் அமர் செல்வன்'' (கலி.81:9; 83:14; சிறு பாண்.97); 'ஆல்கெழு கடவுள்'(முருகு.256). 'ஆல் அமர் கடவுள்' (புற.198:9) என்று போற்றப்படுகிறான். இவன் அருந்தவனாதல் பற்றி, 'ஈர்ஞ்சடை அந்தணன்' (கலி.38:1) என்றும் சிறப்பிக்கப் படுகின்றான்.

வேதம் இவன் வாக்கினின்றும் பிறந்தது; இவன் வாக்கில் நீங்காது உறைவதும் அவ் வேதமே (புறம்.166:1-2). இதனால் இவன் உலகம் எல்லாம் பரவிப் பொலியும் நற்புகழையுடையவனாய்த் திகழ்கிறான்.

'ஞாலம் நாறும் நலம்கெழு நல்இசை,
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்' (அக.181:15-16)

என்று அகநானூற்றுப்பாடல் ஒன்றில் பரணர் போற்று கின்றார். வேதம் என்னும் முதுநூலை அருளிய முக்கண்ணனும் மிகப் பழையோனாகின்றான். 'முதுமுதல்வன்' (புற.166:2) எனக் கொண்டாடப் பெறுபவன் இவன். தேவர் பொருட்டு இயற்றப்படும் வேள்விகளிலே அவிப்பாகத்தை உண்பவனாய் வேள்வி முதல்வனாயும் இவன் உள்ளான் (பரி.5:26-27).

இவன் வீற்றிருக்கும் கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க இராவணன் முற்பட்டதும், தனது கைகளால் அதனைப் பெயர்க் கலாற்றாது அவன் இசையுடன் இசைத்த துதிமொழிகளுக்கு மகிழ் ந்து அவனுக்கு வாளும் வாழ்நாளும் அருளியதும் ஆகிய நிகழ்ச்சி யாவரும் அறிந்ததே. இந்நிகழ்ச்சியைக் குறிஞ்சிக்கலி பாடிய கபிலர் ஒரு பாடலில் (கலி.38),

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமை அமர்ந்து உயர்மலை இருந்தனனாக,
ஐ-இரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப் பொலி தடக்கையின் கீழ்ப்புகுந்து, அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல - (கலி.38:1-5).

உவமையாக எடுத்துரைக்கின்றார்.

உமையொருபாகன் தன்னடி அடைந்தார் எவ்வளவு பிழைகளை முன்னர் இயற்றினராயினும் அவர்தம் பிழையை

உணர்ந்து தன்னைச் சரண் புகுவரேல், அவர்க்கு அவனுடைய ஆர் அருள் உண்டு என்பதைக் காட்டுவது இராவணன் நிகழ்ச்சி. இராவணனுக்கு இறைவன் அருளிய கருணைத் திறத்தைத் திருஞான சம்பந்தர் தாம் பாடிய தேவாரப் பதிகங்கள் தோறும் எட்டாவது பாடலில் போற்றிப் புகழ்கின்றார். இங்ஙனம் இராவணன் செய்தி கூறிய திருஞானசம்பந்தரின் திருவுளத்தை,

'மண்ணுலகில் வாழ்வார்கள்
பிழைத்தாலும். வந்து அடையின்
கண்ணுதலான் பெருங்கருணை
கைக்கொள்ளும் எனக் காட்ட,
எண்ணம் இலா வல் அரக்கன்
எடுத்து முறிந்து இசைபாட
அண்ணல் அவற்கு அருள்புரிந்த
ஆக்கப்பாடு அருள் செய்தார்'.

(பெரியபு. திருஞான. 77)

என்று விளக்கிக் காட்டுகின்றார் தெய்வச் சேக்கிழார்.

முக்கண்ணன் முப்புரம் எரித்த செய்தியை விரிவாகவே சங்கப்பாடல்கள் தருகின்றன. அமரரைக் காப்பாற்றி அவர்க்கு வாழ்வு அளிக்கும் பொருட்டாக அவன் முப்புரத்தை அழிக்க நேர்ந்தான். அடியார்தம் அல்லல் களைந்து ஆனந்தம் தரும் இயல்பினன் அவன் என்பதை இச் சரிதம் விளக்கும். முப்புரம் இடம்விட்டு இடம்பெயரும் பேரரணாக இருந்தது. இதனை, 'இயங்கு எயில்' (*கலி.150:1*) என்று கலித்தொகை குறிப்பிடுகிறது. இந்த இயங்கு எயிலால் முப்புரத்தவர் தேவர்க்கும் யாவர்க்கும் இன்னல் பல இழைந்து வந்தனர். இதற்கு ஆற்றாது பிரமன் முதலிய தேவர்கள் எல்லாரும் கூடிவந்து இவனைச் சரண் புகுந்து இரக்கின்றார்கள். அப்பொழுது ஊழித்தீப்போல் இறைவன் சினம் கொண்டு மாயஞ்செய் அவுணர் வாழும் மும்மதிலையும் அழிக்க முற்பட்டான்.

தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக,
அடங்காதார்-மிடல் சாய, அமரர் வந்து இரத்தலின்
மடங்கல்போல் சினைஇ, மாயம் செய் அவுணரைக்
கடந்து அடு முன்பொடு, முக்கண்ணான் மூஎயிலும்
உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்,

சீறு அருங் கணிச்சியோன் சினவலின் அவளயில்
ஏறுபெற்று உதிர்வன போல், வரைபிளந்து இயங்குநர்
ஆறு கெட விலங்கிய அழல் அவிர் ஆர்இடை (கலி.2:1-8)

என்பது கலித்தொகை தரும் உவமைக் காட்சியில் முப்புரச் செய்தி.

முப்புரத்தை எரிக்க முக்கண்ணான் சென்ற வகையையும் சங்கப் பாடல்கள் விவரிக்கின்றன. பூமியாகிய தேரிலே, வேதங் களாகிய குதிரைகளைப் பூட்டி, ஆதி அந்தணனாகிய பிரமன் தேர் செலுத்திச் செல்கிறான். இமையமலையாம் பெருமலையை வில்லாகவும் ஆதிசேடனை நாணாகவும் கொண்டு வளைத்துத் தன் கைக்கொண்டான். ஒப்பற்ற அழல் அம்பைத் தொடுத்து எய்ய மும்மதிலும் தீப்பட்டு நீறாகிவிடுகிறது. இங்ஙனமாக முக் கண்ணான் முப்புரத்தை எய்து அழித்த காட்சியைப் பின்வரும் பாடல்களில் காணலாகும்.

ஆதி அந்தணன் அறிந்து பரி கொளுவ,
வேத மா பூண் வையத் தேர் ஊர்ந்து,
நாகம் நாணா, மலை வில்லாக,
மூவகை ஆர் எயில் ஓர் அழல் - அம்பின் முளிய,
மாதிரம் அழல எய்து - அமரர் வேள்விப்
பாகம் உண்ட பைங்கட் பார்ப்பான் (பரி 5:22-27)

'இமைய வில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்' (கலி.38:1)

- பணிவு இல் சீர்ச்
செவ்விடைப் பாகன திரிபுரம் செற்றுழி
கல் உயர் சென்னி இமயவில் நாண் ஆகித்
தொல்புகழ் தந்தாரும் தாம் (பரி.தி.1:75-78)

ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ,
ஒரு கணை கொண்டு மூஎயில் உடற்றி,
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறை மிடற்று அண்ணல் (புறம்.55:1-4)

முப்புரத்தை அழித்தது போலவே எல்லாவற்றையும் அழிக்கும் கடவுளாக விளங்குபவனும் அவனே. அதனால் அவன், 'காய் கடவுள்' (பரி.5:13)ஆகின்றான். பல்லுயிரும் வருத்தத்தை அடையும் ஊழி முடிவிலே எருமை ஏற்றின்மேல் ஏறும் கூற்றைத்

தன் காலாலேயே பிளந்து போட்டு எல்லா உயிர்களையும் உண்ட அந்தக் கூற்றுவனது உயிரையும் மாய்க்கின்றான் (கலி.101:24-26; கலி.103:43-45).

படர் அணி அந்திப் பசுங்கட் கடவுள்
இடரிய ஏற்று எருமை நெஞ்சு இடந்துஇட்டு
குடர் கூளிக்கு ஆர்த்துவான் போன்ம் (கலி.101:24-26).

ஏற்றெருமை நெஞ்சம் வடிம்பின் இடந்து இட்டு,
சீற்றமோடு ஆர்உயிர் கொண்ட ஞான்று, இன்னன்கொல்
கூற்று என உட்கிற்று,என் நெஞ்சு (கலி.103:43-45)

முக்கண்ணான் உமையுடன் கூடக் கயிலை மலையில் காட்சி தருதலை முன்பு பார்த்தோம். இவன் நன்னன் சேய் நன்னனுடைய நவிரமலையில், 'காரி உண்டிக் கடவுள்' என்னும் பெயருடன் விளங்குதலையும் ஆங்குச் செல்லும் பாணர், கூத்தர் முதலியோர் இசைபாடி வழிபடுதலையும் மலைபடு கடாத்தில் காணலாகும் (மலைபடு. 81-82; 225-233). அப்பகுதிவருமாறு:

நீர்அகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பேர் இசை நவிரம் மேஎய் உறையும்
காரி உண்டிக் கடவுளது இயற்கையும். (மலைபடு.81-83)

உயர்நிலை மாக்கல் புகர்முகம் புதைய,
மாரியின் இகுதரு வில் உமிழ் கடுங்கணை
தாரொடு பொலிந்த் வினை நவில் யானைச்
சூழியின் பொலிந்த சுடர்ப்பூ இலஞ்சி,
ஓர் யாற்று இயவின் மூத்த புரிசைப்
பராவு அரு மரபின் கடவுட் காணின்
தொழா நிர் கழியின் அல்லது, வறிது
நும் இயம் தொடுதல் ஓம்புமின் - மயங்குதுளி
மாரி தலையும் அவன் மல்லல் வெற்பே (மலைபடு.225-233)

இப்பெருமான் எழுந்தருளியிருக்கும் .ஆலமுற்றம். என்னும் தலத்தையும் ஆங்குள்ள பொய்கை, பொழில்களையும் அக நானூற்று பாடல் ஒன்று குறிப்பிடுகிறது (அக.181:14-22).

வைப்பின் யாணர் வளம் கெழு வேந்தர்
ஞாலம் நாறும் நலம்கெழு நல் இசை

நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்,
ஆலமுற்றும் கவின்பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழில்மனை மகளிர்
கைசெய் பாவைத் துறைக்கண் இறுக்கும்
மகர நெற்றி வான் தோய் புரிசைச்
சிகரம் தோன்றா சேண் உயர் நல்இல்
புகாஅர் நல்நாட் டதுவே (அக.181:14-22)

இந்த ஆலமுற்றம் சோழர்க்குரிய புகார் நாட்டில் அமைந்த தலம் என்பதும் இப்பாடலால் விளங்குகிறது.

உமை

உமை முக்கண்ணனோடு ஒருங்கிணைந்து கயிலையில் அமர்ந்திருத்தல் என்பது, அவன் உடலோடு உடலாய் ஒரு பாதியாக அமைந்து விளங்கும் அருங்காட்சிதான். இறைவனுடைய செம் மேனிக்கு மாறான கருமையும் பசுமையுமான நிறமுடை யளாய் உள்ளாள் இவள். *'மாயவள் மேனி போல் தளிர் ஈன' (கலி.35:3)* என இவள் மேனி இளந்தளிருக்கு ஒப்புக் கூறப்படுகிறது. இறைவ னுடைய ஒரு பாகத்தில் உமை விளங்குதலை,

மிக்கு ஒளிர் தாழ் சடை மேவரும் பிறை நுதல்
முக்கண்ணான் (கலி.104:11-12)

படர் அணி அந்தி, பசுங்கட் கடவுள். (கலி.101:24)

உமை அமர்ந்து உயர்மலை இருந்தனன். (கலி.38:2)

உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்,
மூ-எயில் முருக்கிய முரண்மிகு செல்வன். (முருகு.153-154)

எனவரும் பகுதிகளால் தெளிய உணரலாகும்.

இவள் இமவானின் மகள் என்பது புராண வரலாறு. இவ் வரலாற்றை உட்கொண்டு வழங்கும் *.மலைமகள். (முருகு .257)* என்னும் பெயரால் முருகாற்றுப்படை இவளைச் சுட்டுகிறது. இவள் இறைவனோடு கூடி முருகப் பெருமானைத் தந்த செய்தியை முன்னரும் பார்த்தோம். ஆகவே, *'மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!' (முருகு. 257)* என்று முருகன் போற்றப்படுகிறான்.

கொற்றவை

முருகன் உமைபாலன் என்று புகழப்படுவது போலவே,

'வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழைஅணி சிறப்பின் பழையோள் குழவி!' (முருகு.258-259)

என்றும் பாராட்டுகின்றார் நக்கீரர். சாந்த சக்தியாய் அமைந்துள்ள உமையே, முக்கண்ணானுக்குப் போர்ச் சக்தியாகக் 'கொற்றவை' என்னும் பெயருடன் காட்சி தருகிறாள். 'முதுமுதல்வன்' என்று முக்கண்ணானைக் குறித்தது போலவே(புறம்.166:2) இவளையும் 'பழையோள்' என்று கூறுதல் நோக்கத் தக்கது.

இவள் காட்டுள் வாழும் மறவர்களால் போற்றப்படும் வெற்றிமகள் என்பதை 'ஓங்கு புகழ் கான் அமர் செல்வி' (அக.345:3-4), 'பெருங்காட்டுக் கொற்றி' (கலி.89:8), 'விடர்முகை அடுக்கத்து விறல் கெழு சூலி' (குறுந்.218:1) என வரும் பகுதிகளால் அறியலாகும். கொற்றவையின் கோலம் பற்றிய குறிப்பு ஒன்று மகளிரின் தைந்நீராடல் பற்றிக் கூறும் பரிபாடல் பகுதியில் காணப்படுகிறது (பரி.11:93-100). தைந்நீராடும் பொழுது ஒரு பெண்ணுக்கு மற்றொரு பெண் நெற்றியில் செந்நிறத் திலகம் இட்டு இவள் கொற்றவை போலக் கனல்விழி படைத்தாள் என்று பாராட்டிவாளாம்.

'நெற்றி விழியா நிறை திலகம் இட்டாளே;
கொற்றவை கோலம் கொண்டு ஓர்பெண்'

(பரி.11:99-100)

இதனால் இவள் 'முக்கண்ணி' என்பது தெரியவரும் 'விறல்கெழு சூலி' (குறுந்.218:1) என இவளை அழைத்தலிலே இவள் தன் கரத்தில் சூலப் படையுடன் விளங்குகின்ற காட்சியும் காணலாகும். 'விறல்கெழு சூலி' (குறுந்.218:1) என இவளை அழைத்தலினாலே இவள் தன் கரத்தில் சூலப்படையுடன் விளங்குகின்ற காட்சியும் காணலாகும். 'விறல்கெழு' என்னும் அடைமொழி யால் இவள் வெற்றிமடந்தையாவள் என்பதும் தெளிவு. இவள் வென்ற பெரும்போர் மகிடாசுரனை வதைத்ததே யாகும் எபர். 'வெல்போர்க் கொற்றவை' என்றது மகிடனைச் செற்றதனை என்று எழுதுகின்றார் நச்சினார்க்கினியர்

இவள் உலகத்திற்கும் வெற்றி தருபவள். போர் வீரர்கள் வாகை மரத்தினது துய்களையுடைய பூவைப் பனங்குருத்தொடு தொடுத்து அணிந்து கொள்கின்றனர். இந்த வாகைப் பூ வெற்றிக்கு அறிகுறியாக அணியப்படுவது. இதனை, 'கடவுள் வாகைத் துய்வீ' என பதிற்றுப்பத்து கூறுகிறது. இந்தச் செய்யுளடிக்குக் கடவுள் வாகை(யாவது), 'வெற்றி மடந்தையாகிய கடவுள் வாழும் வாகை' என்று விளக்கம் தருகிறார் பழைய உரைகாரர். நச்சினார்க்கினியரும் 'வெற்றிக் கொற்றவை சிறுவ'(முருகு.258) என்னும் தொடருக்கு, "வெற்றியை உலகத்திற்குக் கொடுக்கும் வன துர்க்கையினுடைய புதல்வ" என்று உரை எழுதுதலும் இங்குக் கருதத்தக்கது. 'பழையோள்' என்பதற்கு (முருகு.259) காடுகாள் என்று கூறி, 'காடுகிழாள்' என்பது இக்காலத்துக் 'காடுகாள்' என மருவிற்று என்று நச்சினார்க்கினியர் தரும் சொல் விளக்கமும் உடன் வைத்து ஆராயத் தக்கது.

கொற்றவையின் கோட்டம் காட்டகத்தே விளங்குகிறது. பேய், பூதம், பிசாசுகள் அக்கோயிலைக் சூழ்ந்து நின்று காவல் புரிகின்றன. அக்கோவிலில் புறாக்களும் தங்கியிருக்கும். வேடர்கள் மரத்து விறகால் தீ மூட்டி எரி விளக்கு வைத்துள்ளனர். அக்கோயில் முற்றத்தில் வந்து உறங்கும் மான் கூட்டங்களை அந்த எரி விளக்கின் ஒளியில் மந்திகள் எழுப்பி ஓட்டி, அதனைத் துடைத்துத் தூய்மை செய்கின்றனவாம்.

பூதம் காக்கும் புகல் அருங்கடி நகர்
தூது உண் அம் புறவொடு துச்சில் சேகரும்
முது மரத்த முரண் களரி (பட்டின. 57-59)

யானை தந்த முளிமர விறகின்
கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து;
மடமான் பெருநிரை வைகு துயில் எடுப்பி.
மந்தி சீக்கும் அணங்குடை முன்றில் (புறம். 247:1-4)

எனவரும் பாடற் பகுதிகளிலே கொற்றவை கோயில் காட்சிகள் சில காணலாகும். அங்கே கூடியிருக்கும் அவள் சுற்றமாகிய பேய்கள் அவளுக்குப் பொழுதுபோக்காகச் சிலபல வேடிக்கையான விடுகதைகளைக் கூறுமாம்.

இந் நிகழ்ச்சியை,

'பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு'
(கலி.89:8)

எனக் கலித்தொகையுள் ஆளும் உவமையால் உணரலாகும்.

கொற்றவையைத் தொழுது அவளுக்குப் பலிக்கடன் செலுத்துவர் மறவர் முதலியோர். அப்பொழுது காப்பாகத் தம் கையில் நூல் கட்டிக் கொள்ளுதலும் உண்டு.

விடர் முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணாம்; கைந்நூல் யாவாம் (குறுந். 218:1-2)

எனவரும் குறுந்தொகை அடிகளில் மேற்குறித்த மரபு காணப்படுகிறது.

அயிரைமலையில் உறையும் தேவியைக் குறிக்குமிடத்து மார்பினின்று உண்டாம் இரத்தத்தைப் பலியாகப் பெறுவதல்லாமல் நிவேதனமாக அளிக்கும் பிற பொருளை ஏற்றுக் கொள்ளாத அச்சம் வருகின்ற முறைமையையுடைய கடவுளாவள் என்று பதிற்றுப்பத்துக் கூறுகிறது(பதிற்.79:14-18).

அணங்குடை மரபின் கட்டில்மேல் இருந்து,
தும்பை சான்ற மெய்தயங்கு உயக்கத்து,
நிறம் படு குருதி புறம்படின் அல்லது,
மடை எதிர் கொள்ளா அஞ்சுவரு மரபின்
கடவுள் அயிரை....... (பதிற்.9:14-18)

என்பது பதிற்றுப்பத்து. மேலும், இரத்தம் தெளித்துக் கலந்த திரட்சியான சோற்றுப் பிண்டங்களால் இந்த அயிரைமலைக் கொற்றவையை இளஞ்சேரலிரும்பொறை வழிபட்டான் என்னும் செய்தி பதிற்றுப்பத்தில் காணப்படுகிறது.

'குருதி விதிர்த்த குவவுச் சோற்றுக் குன்றொடு
உரு கெழு மரபின் அயிரை பரவி' (பதிற். 88:11-12)

என்பர். இவற்றால் அந்நாளில் கொற்றவையை வழிபட்ட முறைகளுள் ஒருசில நமக்குத் தெரிய வருதல் காணலாம்.

அயிரை மலையில் உறையும் கொற்றவையைக் குறித்த ஒரு சில குறிப்புகள் பதிற்றுப்பத்தில் மட்டுமே காணப்படுகின் றன. (பதிற்.79:16-19; 88:11-12; 90:19). இந்த அயிரை மலையினின்று தோன்றும் ஆறு அயிரைப் பேரியாறு எனவும் பெயர் பெறுகின்றது. இதனை,

'மாற்று அருந் தெய்வத்துக் கூட்டம் முன்னிய
புனல் மலி பேரியாறு'. (பதிற்.88:24-25)

என்று சிறப்பிக்கிறது பதிற்றுப்பத்து—இந்தக் கொற்றவையைச் சோ மன்னன் முதலில் வழிபட்டே பின்னர் போர் முதலியவற்றில் ஈடுபட்டான் என்னும் குறிப்பும்,

> உருகெழு மரபின் அயிரை பரவியும்
> கடல் இருப்ப வேல் இட்டும்
> உடலுநர் மிடல் சாய்த்தும் (பதிற்.80:19-21)

எனவரும் பாடல் அடிகளால் அறியலாகும்.

> வையகம் மலர்ந்த தொழில்முறை ஒழியாது,
> கடவுட் பெயரிய கானமொடு கல் உயர்ந்து,
> தெண்கடல் வளைஇய மலர்தலை உலகத்து,
> தம்பெயர் போகிய ஒன்னார் தேய,
> துளங்கு இருங்குட்டம் தொலைய, வேல் இட்ட
> (பதிற்.88.1-5)

என்வரும் பகுதியில், 'கடவுட் பெயரிய கானம்' என்பது விந்தியமலைக் காட்டையும், 'கடவுள்' என்பது ஆங்கு உறையும் கொற்றவையினையும் குறிக்கும் என்பது பழைய உரைகாரர் கருத்து. ''கடவுட் பெயரிய கானம் என்றது விந்தாடவியை; கடவுள் என்றது ஆண்டு உறையும் கொற்றவையினை'' என்பது பழையவுரை. விந்திய மலையில் கொற்றவை கோயில் கொண்டுள்ளமை பிறநூல்களில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. காயசண்டிகை என்னும் வித்தியாதரமகள் விந்திய மலை உறையும் விந்தாகடிகை என்னும் தெய்வத்தால் கவரப்பட்ட செய்தியை மணிமேகலைக் காவியத்துள் காணலாகும்.

சங்கப்பாடல்களில் இலை மறைகாய் போல் அங்கங்கே காணப்படும் முக்கண்ணான் சிறப்புகளை ஒருங்கு திரட்டிக் கண்ட போது தெரியவந்த செய்திகளை இதுவரையிலும் கண்டோம். இனி, சங்கத்தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனார் இப்பெருமானின் திருக்காட்சி கண்டு பாடிய இரண்டு முழுமையான பெரிய பாடல்களை அகநானூற்றிலும் புறநானூற்றிலும் காண்கிறோம். ஐங்குறு நூற்றின் குறுமை அளவுப் பாடல்களுக்கு ஏற்ப மூன்று அடிகளில் அம்மையப்பர் புகழ் பேசிய அவர் அகநானூற்றிலும் மற்றும் புற நானூற்றிலும் நெடிய பாடல்களால் முக்கண்ணான் பெரும்புகழைப் போற்றியுள்ளார்.

இருநூல்களிலும் காணும் வாழ்த்துப்பாடல்கள், பெருமான் அணிந்துள்ள கொன்றை மாலையைத் தொடக்கமாகக் கொண்டு அமைந்துள்ளன. இவற்றை முடிக்கும்போது முறையே அந்தணன் என்றும், அருந்தவத்தோன் என்றும் அவனுடைய தவப்பெருங் கோலத்தை முதன்மையாக வைத்துப் போற்றியுள்ளார்.

முக்கண்ணான் திருமுடியில் நெருப்புச் சூழ்நதது போல முறுக்குண்ட சடையோடு பிறையும் சுடர்வீசித் திகழ்கின்றதாம். நெற்றியிலே இமையாத கண்ணுடன் காணப்படுகிறான். நஞ்சுக் கறை அவனுடைய கழுத்திற்கு அழகு செய்து விளங்குகின்றது. அவனுடைய திருமேனி செவ்வானம் போல ஒளிவீசும் செந்நிறமாய்க் காட்சி தருகிறது. அவனுடைய திருமேனியில் அம்மை உருவமும் இணைந்து காணப்படுகிறது.

நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே

என ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்து உமையொரு பாகனான பெருமான் காட்சியைப் போற்றிப் புகழ்கிறது.

அவன் புலித் தோலுடை அணிந்துள்ளான். அவனுடைய திருக்கைகளில் கணிச்சியும் மழுவும் தாங்கியுள்ளான். முத்தலை வேலாகிய சூலமும் உள்ளது.

அவன் ஊர்ந்து செல்லும் வாகனம் பவளநிற எருது. அவனுடைய கொடியிலும் அந்த எருதே காட்சி தருகிறது.

அமரரும் முனிவரும் யாவரும் அறிய இயலாப் பழம்பெரும் புகழினை உடையான். அவனுடைய திருவடி நீழலில் இவ்வுலகம், இடையூறு இன்றிப் பாதுகாப்பாக அமைந்துள்ளது.

உலகம் புரக்கும் இப்பெருமானின் புகழ்களை இவ்வாறு போற்றிக் கூறும் பெருந்தேவனார் பாடல்களையும் ஈண்டுப் பாடிக் காண்போம்.

கண்ணி கார்நறுங் கொன்றை; காமர்
வண்ண மார்பின் தாருங் கொன்றை;
ஊர்தி வால்வெள் ஏறே; சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வேறு என்ப;

கறைமிடறு அணியலும் அணிந்தன்று; அக்கறை
மறை நவில் அந்தணர் நுவலவும் படுமே;
பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்;
பிறை நுதல் வண்ணம் ஆகின்று; அப்பிறை
பதினெண் கணனும் ஏத்தவும் படுமே-
எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய
நீர் அறவு அறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோர்க

(புறம். கடவுள் வாழ்த்து)

கார் விரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்த்
தாரன்: மாலையன்; மலைந்த கண்ணியன்;
மார்பிஃதே மைஇல் நுண்ஞாண்;
நுதலது இமையா நாட்டம்; இகல அட்டு,
கையது கணிச்சியொடு மழுவே. மூவாய்
வேலும் உண்டு, அத் தோலா தோற்கே,
ஊர்ந்தது ஏறே; சேர்ந்தோள் உமையே;
செவ்வான் அன்ன மேனி. அவ் வான்
இலங்கு பிறை அன்ன விலங்கு வால் வை எயிற்று,
எரி அகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை,
முதிராத் திங்களொடு சுடரும் சென்னி,
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொல் நெறி மரபின்,
வரிகிளர் வயமான் உரிவை தைஇய,
யாழ் கெழு மணி மிடற்று அந்தணன்-
தாஇல் தாள் நிழல் தவிர்ந்தன்றால் உலகே.

(அகம் கடவுள் வாழ்த்து)

சங்கப்பாடல்களில் புலவர்பெருமக்கள் பலரும் அங்கங்கே புகழ்ந்து கூறிய முக்கட் பெருமானின் திருவுருவக் காட்சிகளும் அவனுடைய தெய்விக ஆற்றல்களும், பெருங்கருணைத் திறமும் பிறவும் மேலே காணும் பாடல்களில் ஒருசேரக் கண்டு மகிழலாம்.

இத்தகைய பெருந்தெய்வமாகிய முக்கண்ணனை, 'அரும் பெறல் ஆதிரையான்' என நல்லந்துவனார் நவில்வர். ஆதிரை நாள்

இப்பெருமானுக்கு உகந்த நாள் என்பது உலகம் அறிந்தது. உலகம் எல்லாம் படைத்துக் காத்து அழிக்கும் பேராற்றல் படைத்த ஒப்பற்ற முதல்வனை ஆதிரை நாளுக்கு உரியான் என இவ்வுலகம் பேசுவது எவ்வளவு பேதைமைத்து என்பார் போல முத்தொள்ளாயிரப் புலவர் போற்றுகின்றார்.

மன்னிய நாள்மீன் மதிகனலி என்று இவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப் - பின்னரும்
ஆதிரையான் ஆதிரையான் என்றே அறையுமால்
ஊர்திரை நீர் வேலி உலகு. (முத்தொள்ளாயிரம்)

6. பெருந்தெய்வங்களுள் பெருந்தெய்வம்

இதுவரை நாம் கண்டுவந்த தெய்வங்களுக்குள்ளே ஒரு சிலரைத் தொகுப்பாகச் சேர்த்தும், இன்னும் சிலரைப் பெருந் தெய்வம் என்று குறிப்பிட்டும் உள்ள வழக்கு சங்கப்பாடல்களால் தெரியவருகின்றது. குற்றம் தீர் சிறப்பினையுடைய ஓர் ஐவர்களைக் கலித்தொகை குறிப்பிடுகின்றது. அவர்களாவார்: ஒரு குழை ஒருவன் (பலதேவன்), பருதி அம் செல்வன் (ஞாயிறு), மீன் ஏற்றுக் கொடியோன் (காமன்), ஏனோன் (சாமன்), ஆன் ஏற்றுக் கொடியோன் (முக்கண்ணன்). இவர்களின் நிறத்தை ஒப்ப மராம், செருந்தி,காஞ்சி, ஞாழல், இலவம் என்னும் மரங்கள் போது அவிழ்த்துக் காட்சி தரும் இளவேனில் பருவத்தைப் புலவர் வருணிக்கின்றார். இவர்களைத் 'தீது தீர் சிறப்பின் ஐவர்கள்' என்று இங்கே ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். (கலித்.26:1-6).

'நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய உலகம்' (முருகு. 160-16 எனவரும் முருகாற்றுப்படை யடிகளின் உரையில் நச்சினார்க்கினியர், ''நான்காகிய பெரிய தெய்வத்தையுடைய நன்றாகிய ஊர்கள்'' என்றும், ''நாற்பெருந் தெய்வங்களாவன; இந்திரன், யமன், வருணன், சோமன் (குபேரன்)'' என்னும் தெய்வங்கள் என்றும் விளக்கம் தருகின்றார். இவர்கள் நாற்பெருந் திசையும் - முறையே கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்னும் திசைகளுக்குக் காவலர்களான தேவர்களாவர்.

உலகத்தைக் காப்பவரும், முடிவு காலத்தைச் செய்யும் வலிமை படைத்தவரும், நல்ல புகழையுடையவருமான தெய்வங்கள் நால்வரை ஐம்பத்தாறாம் புறப்பாட்டு தருகிறது. இவர்களாவர்; மணிமிடற்றோன் (முக்கண்ணன்), பனைக் கொடியோன் (பலதேவன்), விறல் வெய்யோன் (மால்), செய்யோன் (முருகன்). இவர்களை முறையே இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனுடைய சீற்றம், வலிமை, புகழ், முன்னியது முடிக்கும் ஆற்றல் ஆகியவற்றிற்கு ஒப்பிட்டுப் பேசுகின்றார். இங்ஙனமாக, தெய்வங்களை ஒத்து விளங்கும் உனக்கு எவ்விடத்தும் அரியது யாதேனும் உளதோ என்று கேட்கிறார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர். இந்தத் தோலாநல் இசை நால்வரையும் அவர் வாக்கிலேயே காணலாம். புலவர் வாக்கு பின்வருமாறு:

ஏற்று வலன் உயரிய எரிமருள் அவிர்சடை,
மாற்று அருங் கணிச்சி, மணிமிடற்றோனும்;
கடல் வளர் புரி வளை புரையும் மேனி,
அடல் வெந் நாஞ்சில், பனைக் கொடியோனும்;
மண்ணுறு திருமணி புரையும் மேனி,
விண் உயர் புட்கொடி, விறல் வெய்யோனும்;
மணிமயில் உயரிய மாறா வென்றி,
பிணிமுக ஊர்தி, ஒண்செய்யோனும் - என
ஞாலம் காக்கும் கால முன்பின்,
தோலா நல்இசை, நால்வருள்ளும்,
கூற்று ஒத்தீயே, மாற்று அருஞ் சீற்றம்;
வலி ஒத்தீயே, வாலியோனை:
புகழ் ஒத்தீயே, இகழுநர் அடுநனை;
முருகு ஒத்தீயே, முன்னியது முடித்தலின்;
ஆங்கு ஆங்கு அவர் அவர் ஒத்தலின் யாங்கும்
அரியவும் உளவோ, நினக்கே? (புறம். 56:1-16)

துழாய் மாலையையும் கருடக்கொடியையும் உடைய திருமால், விடை ஊர்தியாகிய முக்கண்ணன், மலர்மிசை முதல்வனாகிய நான்முகன் என்னும் மூவரும் முறையே காத்தல், அழித்தல், படைத்தல் என்னும் முத்தொழில் பற்றி முதன்மையாக உரைக்கப்படுகின்றனர். பிரமதேவனிடமிருந்து ஞாயிறு, திங்கள் முதலிய தேவர்களும் பிறரும் தோன்றுகின்றனராம். இத் தேவர்களெல்லாருமே முருகப் பெருமானைக் காண்டல் வேண்டிப் பூவுலகத்திலே திருப்பரங்குன்றத்தில் வந்து குழுமுகின்றனராம். இதனால் பரங்குன்றம் தேவர்கள் உறையும் இமயக்குன்றமாகவே காட்சி தருகிறதாம். இவ்வாறு முருகனின் சீர்த்தி செப்புமிடத்தே மாயோன், முக்கண்ணன், நான்முகன் எனும் மூவரும் முதன்மையாக எடுத்துரைக்கப்படுகின்றார்கள்.

மண்மிசை - அவிழ் துழாய் மலர்தரு செல்வத்துப்
புள்மிசைக் கொடியோனும், புங்கவம் ஊர்வோனும்,
மலர்மிசை முதல்வனும், மற்று அவனிடைத் தோன்றி
உலகு இருள் அகற்றிய பதின்மரும், இருவரும்,
மருந்து உரை இருவரும், திருந்து நூல் எண்மரும்,
ஆதிரை முதல்வனின் கிளந்த

நாதர் பன்னொருவரும், நன்திசை காப்போரும்.
யாவரும், பிறரும், அமரரும், அவுணரும்,
மேஅரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்
பற்றா கின்று, நின் காரணமாக;
பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும். (பரி.8:1-11)

திருமுருகாற்றுப்படை புட்கொடிச் செல்வனாகிய மாயோன், முப்புரம் எரித்தவன், ஆயிரங்கண்ணனாகிய இந்திரன் என்னும் மூவரையும் முதலில் குறித்து, பின்,

உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவராக (முருகு. 161:162)

அவரை ஏறட்டுக்கொண்டு தேவர் முப்பத்து மூவரும் பிறரும அந்தரத்தே தோன்றி வருகின்ற காட்சியைச் சித்திரிக்கிறார். இங்கே பலர்புகழ் மூவர் என்பது முதலிற் சுட்டிய மாயோன், முப்புரம் எரித்த முதல்வன், இந்திரன் ஆகியோரைக் குறிப்பதாதல் வேண்டும் (முருகு. 148-174). இங்கே, 'பலர் புகழ் மூவரும் தலைவராக' என்பதற்குப் 'பலரும் புகழ்கின்ற அயன், அரி, அரன் என்னும் மூவரும் தத்தமக்குரிய தொழில்களை முன்புபோல நிகழ்த்தித் தலைவராக வேண்டி' என்று பொருள் உரைக்கின்றார் நச்சினார்க் கினியர். பரிபாடலின் முதற்பாட்டு ஐந்தலை கொண்ட திறனுடைய இறைவனும் அவனது அழிப்புத் தொழிலும், வேதமும், பிரமனும், அவனுடைய படைப்புத் தொழிலும் எல்லாமாக விளங்குபவர் காத்தல் தொழில் புரியும் மாலே என்று கூறுகிறது (பரி.1:44-51). இங்ஙனமாக முத்தொழில் புரியும் வகையால் நான்முகன் மாயோன், முக்கண்ணன் என்னும் மும்மூர்த்திகளும் யாவற்றிற்குப் முதல்வர்களாகக் கருதப்படுகின்றமை தெளிவு.

பனைக்கொடியோனையும் நேமியோனையும் இணைத்து, 'இருபெருந் தெய்வம்' என்று புறநானூற்றின் 58-ஆம் பாடல் உரைக்கின்றது.

பால்நிற உருவின் பனைக்கொடி யோனும்,
நீல்நிற உருவின் நேமியோனும், என்று
இருபெருந் தெய்வமும் உடன் நின்றா அங்கு (புறம். 58:14-16)

என வாலியோனையும் மாயோனையும் மட்டும் இருபெருந் தெய்வம் எனச் சுட்டுதலை இங்கே காண்கிறோம். திருமாலிருங்

குன்றத்தில் இவ்விருவருமே எழுந்தருளியுள்ளார்கள். இவர்கள் அங்கு விளங்கும் காட்சியை,

எல்லாம் வேறுவேறு உருவின் ஒருதொழில் இருவர்த்
தாங்கும் நீள்நிலை ஓங்கு இருங்குன்றம் (பரி.15:13-14)

என்று பரிபாடல் சுட்டி உரைக்கின்றது. அகநானூற்றுப் பாடல் ஒன்றில்,

வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உரு உடன் இயைந்த தோற்றம் போல,
அந்தி வானமொடு கடல் அணி கொளாஅ
வந்த மாலை........,(அக.360:6-9)

என மாலைக் காலத்தை அந்திவானத்திற்கும் கடலுக்கும் ஒப்பாக இரு பெருந் தெய்வத் தோற்றங்கள் உவமையாகத் தரப்படுகின்றனர். இங்கே செந்நிறமாகத் தோன்றும் வானமும் கரும் பசுமையாகத் தோன்றும் கடலும் எந்த இருபெருந் தெய்வங்களை நினைவுபடுத்தல் கூடும். செவ்வான் அன்ன மேனி படைத்த முக்கட் செல்வனையும், கரும்பசுமை மேவிய மாயோனையுமே குறித்தல் வெளிப்படை. ஆகவே, முத்தொழில் புரியும் முதல் மூர்த்திகள் மூவரில் படைப்புத்தொழில் புரி நான்முகனை விடுத்து அரிக்கும் அரனுக்கும் முதன்மை அளிக்கும் தகைமை அறியலாகும்.

மதுரைக்காஞ்சி மழுவாள் நெடியோனைத் தலைவனாக ஏனைய தெய்வங்களைச் சுட்டி உரைக்கின்றது. அது வருமாறு;

நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்துஉடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவன் ஆக,
மாசு அற விளங்கிய யாக்கையர், சூழ்சுடர்
வாடாப் பூவின் இமையா நாட்டத்து,
நாற்ற உணவின், உருகெழு பெரியோர்.

(மதுரைக். 453-458)

இப்பகுதிக்கு நச்சினார்க்கினியர், 'திக்குக்களையுடைய ஆகாயத்துடனே காற்றும் நெருப்பும் நீரும் நிலனுமாகிய ஐந்தினையும் சேரப் படைத்த மழுவாளாகிய வாளையுடைய பெரியோன் ஏனையோரின்

முதல்வனாகக் கொண்டு, தீர்த்தமாடிய வடிவினையுடையராய், தெய்வத் தன்மையால் சூழ்ந்த ஒளியினையுடைய வாடாத பூக்களையும் இதழ் குவியாத கண்ணினையும் அவியாகிய உணவினையும் உடைய அச்சம் பொருந்திய மாயோன், முருகன் முதலாகிய தெய்வங்கள்'' என்று உரை வகுக்கின்றார். இவ்வுரைப் பகுதிக்கு எழுதிய அடிக்குறிப்பு விளக்கத்தில் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள், 'மழுவாள் நெடியோன் -என்றது சிவபிரானை. இக்கருத்தை, 'ஏற்று வலன் உயரிய' (புறம்.56) என்னும் செய்யுள் வலியுறுத்தும்', என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

மழுவாள்' எனப்படும் ஆயுதத்தைக் கொண்ட தெய்வங்கள் பரசுராமனும் முக்கண்ணனுமே. பரசுராமனை, 'மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்' (அக.220:5) என்று குறிப்பிடுதலும் கவனிக்கத்தக்கது. மதுரைக்காஞ்சியோ அடைமொழி யாதும் இன்றி 'மழுவாள் நெடியோன்' என்று சுட்டுகிறது. மேலும், இங்கே ஓர் ஐயம் எழுகின்றது. முக்கண்ணன் ஆயுதங்களைச் சுட்டிக் கூறிய இடங்களில் எல்லாம் 'கணிச்சி' என்ற சொல்லும், முக்கண்ணனைக் குறிக்கக் 'கணிச்சியான்' என்ற சொல்லுமே சங்கப் பாடல்களில் ஆளப்பட்டிருக்கின்றன. தவிரவும் நெடியோன் என்பது மாயோனுக்கும் முருகனுக்கும் மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. இக் கடவுளர்க்கு -அடைமொழியாக இந்நெடுமை 'நெடுமால்', 'நெடுவேள்' எனக் சுட்டப்படுதலால் தெரியவருகின்றது. முக்கண்ணனைச் சங்கப் பாடல்கள் 'நெடியோன்' என்று எவ்விடத்தும் குறிப்பிடவில்லை. எனவே, 'மழுவாள் நெடியோன்' என்பது முக்கண்ணனை மட்டுமே குறித்துக் கூறியதாகுமா, மாயோனையும் அத்தொடர் சுட்டியதாக ஆகாதா என்னும் ஐயம் எழுகின்றது. அன்றியும், 'மழுவாள் பரசுராமனுக்குரிய படையாக இருத்தலினாலும், மாயோனின் ஒரு தோற்றமே பரசுராமனா தலாலும், 'மழுவாள் நெடியோன்'' என்பது மாயோனையே சுட்டியதாக ஏன் கொள்ளக்கூடாது என்னும் வினாவும் எழலாம். எங்ஙனமாயினும் அகநானூற்றுப் பாடல் கூறுமாறு மாயோனும் முக்கண்ணனுமே இருபெருந் தெய்வங்களாகப் போற்றப்படலாயினர் என்பதில் ஒள்ளளவும் ஐயம் எழுதற்கு இடமில்லை. மேலும் இதனைப் பிற்பட்டு எழுந்த சைவ-வைணவ சமயங்களின் எழுச்சியும் உறுதிப்படுத்தும்.

7. வேதநெறிக்கு மாறுபட்ட வேற்றுச் சமயங்கள்

கோள், நாள் என்னும் இயற்கைத் தோற்றங்களை வழிப டல், வேத விதிப்படி வேள்வி செய்து கடவுட் பேணல், முருகன், மால், முக்கண்ணன் முதலிய பெருந்தெய்வங்களை வழிபடல் ஆகிய வழிபாட்டு முறைகள் அமைந்திருந்தமை சங்கப்பாடல்களால் தெரியவருகின்றது. ஆயினும், அந் நாளில் வேதவிதிக்கு மாறுபட்ட வேற்றுச் சமயங்களாகிய சமணம், பௌத்தம் என்னும் சமயங்களும் மிகுதியும் பரவி, அச்சமயங்களின் வழிபாட்டு முறைகளும் ஆலயங்களும் எங்கும் வேரூன்றி விளங்கின என்பதைத் தெரிவிக்கும் ஒருசில குறிப்புகளும் சங்கப்பாடல்களில் உள்ளன.

நன்று ஆய்ந்த நீள் நிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகாது,
ஒன்று புரிந்த ஈர் - இரண்டின்,
ஆறு உணர்ந்த ஒரு முதுநூல்
இகல் கண்டோர் மிகல் சாய்மார்,
மெய் அன்ன பொய் உணர்ந்து
பொய் ஓராது மெய் கொளீஇ
மூ-ஏழ் துறையும் முட்டு இன்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோர் மருக! (புறம்.166:1-9)

எனப் பூஞ்சாற்றூர்க் கௌணியன் விண்ணந்தாயன் விளக்கப படுகிறான். இவன் வேத நெறிக்கு மாறுபட்டார் வலிமை குன்றும் படியாக, அவர்கள் கூறும் மெய்போலும் பொய்ம்மொழிகளை உணர்ந்து, உண்மை தேர்ந்து, இருபத்தொரு வகைப்பட்ட வேள்வித் துறைகளிலே சிறந்து விளங்கினானாம். இங்கே முதுநூலுக்கு 'இகல் கண்டோர்' எனப்படுபவர் சமண புத்த சமயிகளே யாதல் வேண் டும். ஏனெனில், வேள்வியையும் உயிர்க்கொலையையும் கடிந்து, காணாவுயிர்க்கும் கருணை காட்டும் பண்பின் தலைநின்று வழி காட்டியவை அம்மதங்களே. ''இகல் கண்டோர் மிகல் சாய்மார்'' என்பதற்கு, ''வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்தர் முதலாயின புறச்சமயத்தோரது மிகுதியைச்சாய்க்க வேண்டி'' என்று பழையுரைகாரர் விளக்கம் தருகிறார். இதனால் புறச்சமயத் தோராகிய புத்த சமணர்களும் மிகுதியாகவும் வலிமை புடனும் அந்நாளில் விளங்ினார்கள் என்பது போதரும்.

மதுரைக்காஞ்சியும் பட்டினப்பாலையும் கூடலிலும், காவிரிப்பூம்பட்டினத்திலுமவிளங்கியபுத்த சமணப்பள்ளிகளைக் குறிப்பிட்டுக் கூறுதல் கவனிக்கத்தக்கது. சோழ பாண்டியர் களுடைய கோநகர்களில் புத்த சமணர்கள் மிகுதியாயி இருந்தனர் எனில், அந்நாளில் தமிழ்நாட்டிலே இச் சமயத்தார்களும் மிகுந் திருந்தனர் என்று கொள்ளலாம் அன்றோ?

காவிரிப்பூம்பட்டினத்துச் சிறப்புக்களைக் கூறுமிடத்து அங்குள்ள பல இடங்களையும் சுட்டிவரும் பட்டினப்பாலை,

பகட்டு எருத்தின் பல் சாலை;
தவப் பள்ளி; தாழ்காவின்
அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்
ஆவுதி நறும்புகை (பட்டினப். 52-55).

என்பவற்றையும் குறிப்பிடுகிறது. இங்கே தவப்பள்ளி என்பது தவம் செய்யும் அமண்பள்ளி, பௌத்தப்பள்ளிகளைக் குறிப்ப தாகும். இப்பள்ளிகளையும் இங்கு மக்கள் சென்று வழிபாடு இயற் றுதலையும் மதுரைக்காஞ்சி விளக்கமாகத் தருகிறது (மதுரைக். 461-467).

பேரிளம் பெண்டிர்கள் தமது குழந்தைகளை எடுத்துக கொண்டு, தத்தம் கணவன்மாருடன் கூடி, தாமும் கணவரும் பிள்ளைகளும் சீலத்தாலே விளங்கும்படியாகப் பௌத்தப் பள்ளி களுக்குச் செல்கின்றனர். அங்கே தாம் வழிபாடியற்றும் பூசைக்கு வேண்டிய பூவினையும் தூபங்களையும் ஏந்தியவர்களாய்ச் சென்று துதித்து வணங் நகின்றனர், இதனை,

திண்கதிர் மதாணி ஒண்குறு மாக்களை,
ஓம்பினர்த் தழீஇ, தாமம் புணர்ந்து முயங்கி,
தாது அணி தாமரைப் போதுபிடித் தாங்கு
தாமும் அவரும் ஓராங்கு விளங்கக்
காமர் கவினிய பேர்இளம் பெண்டிர்,
பூவினர், புகையினர், தொழுவனர் பழிச்சிச்
சிறந்து புறங்காக்கும் கடவுட பள்ளியும்

(மதுரைக். 461-467)

என வரும் பாடல் அடிகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

இங்ஙனமே அமணப் பள்ளிகளில் சமண்சமய விரதம் காக்கும் இல்லறத்தாராகிய சாவகர்கள் பூக்களையும் புகையினையும் ஏந்தித் துதிக்கிறார்கள். அங்கே முக்கால நிகழ்ச்சிகளையும் உணர்ந்து உரைக்கும் ஆற்றல் வாய்ந்தவரும், தேவருலகிலும் நிலவுலகிலும் ஆன எல்லாச் செய்திகளையும் தம் நெஞ்சால் எண்ணி அறிவோரும் ஆகிய ஆன்றோர்கள் உறைந்திருக்கின்றனர். அவர்கள் தமக்கு அமைந்த விரதங்களை மேற்கொண்டவர்கள். விரதங் காத்தலுக்குச் சளைக்காத உடம்பினையுடையவர்கள். நோன்பு செய்கைக்காகச் சிறிய வாயையுடைய குண்டிகையைப் பலவடங்களையுடைய நூல் உறியிலே தூக்கிச் செல்வர். அவர்களுடைய கோவில் மலைகள் போல் உயர்ந்து திரண்டு விளங்கின. செம்பால் செய்தாலொத்து விளங்கும் அக்கோயிலின் சுவர்களில் சித்திரம் தீட்டப்பட்டிருக்கும். வழிபடுதற்குரிய நறும் பூக்கள் பலவும் சூழ்ந்து காணப்படும். இவர்கள் பள்ளியைச் சூழ நறியபூஞ்சோலை பொலிந்து விளங்கும். இவ்வகையான தோற்றப் பொலிவுடன் விளங்கும் அமணப்பள்ளிக் காட்சியை மாங்குடி மருதனாரின் வாக்கிலும் கண்டு மகிழலாம்.

வண்டுபடப் பழுநிய தேன்ஆர் தோற்றத்துப்
பூவும் புகைப்பும் சாவகர் பழிச்ச,
சென்ற காலமும் வருஉம் அமயமும்.
இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்கு உணர்ந்து,
வானமும் நிலனும் தாம் முழு துஉணரும்,
சான்ற கொள்கை, சாயா யாக்கை,
ஆன்று அடங்கு அறிஞர் செறிந்தனர், நோன்மார்,
கல் பொளிந்தன்ன இட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி, நல்கு வர,
கயம்கண்டன்ன வயங்குடை நகரத்து,
செம்பு இயன்றன்ன செஞ்சுவர் புனைந்து,
நோக்கு விசை தவிர்ப்ப மேக்கு உயர்ந்து, ஓங்கி,
இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும் -
குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற. (மதுரைக். 475-488)

சமண் சமய முனிவர்கள் உண்ணாது பட்டினி நோன்பு இயற்றியமையால் வாடிய தோற்றத்தை உடையராய் நீராடாமை ஒழுக்கத்தையும் மேற்கொண்டவர்களாவர். இம்முனிவரின் தோற்

றத்தை அழகு மழுங்கிய குன்றத்திற்கு உவமையாகத் தருகின்றார் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்.

உண்ணாமையின் உயங்கிய மருங்கின்
ஆடாப் படிவத்து ஆன்றோர் போல,
வரை செறி சிறு நெறி நிரையுடன் செல்லும்
கான யானை கவின் அழி குன்றம் (அக. 123:1-4)

என்பது புலவர் வாக்கு.

போதியார், இளம்போதியார், உலோச்சனார் போன்ற சில புலவர்களின் பெயர்களும் இம்மதச் சார்புடையனவேயாதல் வேண்டும். மேலும், கொல்லாமை, நிலையாமை, துறவு முதலியவற்றை மிகவும் வற்புறுத்தி வந்தனவும் சமண பௌத்த மதங்களே. இவ்வகைப் பொருள்களை வற்புறுத்தியுரைக்கும் பாடற் பகுதிகளும் சங்கப்பாடல்களில் பலவாகும். இந்தப் புறச்சமயத் தாருக்கும் வேதவேள்வி செய்து வழிபட்டார்க்கும் பகைமையும் இருந்தது என்பது புறநானூற்றுப் பாடலில் வரும், 'இகல் கண்டோர் மிகல் சாய்மார்' (புற. 166:5) என்னும் அடியால் புலப்படும்.

8. மலை முதல் மனை வரையிலும் கண்ட பல கடவுளர்

மலையும் மரமும் மரம்செறி காவும்
காடும் மேடும் கள்ளியும் புதரும்
சுனையும் துருத்தியும் கழியும் கடலும்
நாடும ஊரும் நல்மனை இடங்களும்
மருவு சந்தியும் மறுகுகூடு சதுக்கமும்
மன்றில் பொதியிலில் கந்துடை நிலையினும்
யாழினும் பிறவினும் எங்கணும் மன்னி
உவந்துறை கடவுளர் காட்சியும் உளவே.

பெருங்கடவுளர் என்று ஒரு சில கடவுளர்க்குக் கோவிலும் விழாவும் எடுத்து வழிபட்டமையைப் பேரூர்களிலும் நாகரிகம் வளர்ச்சிபெறத் தொடங்கிய சிற்றூர்களிலும்தான் சங்க நாளில் காணமுடிகிறது. இந்த ஊர்களிலும் கூடப் பற்பல சிறுசிறு கடவுளர்களையும் மக்கள் போற்றி வந்திருக்கின்றனர். இந்தக் கடவுளர்களில் பெரும்பாலனவும் மக்களுக்குத் துன்பமும் கொடுமை யும் புரிந்தனவாகும். இவற்றை 'உருகெழு மரபின் கடவுள்' (பதிற.21:5) என்று கொண்டனர். அச்சம், வருத்தம் என்னும் பொருள் தரும் அணங்கு,சூர், பேய் முதலிய பெயர்களால் இத்தெய்வங்களைக் குறிப்பிடுதலும் கவனிக்கத் தக்கது. ஆகவே, மக்கள் தமக்கு அச்சத்தை விளைவித்த பல பொருள்களும் தம்மை வருத்தும் இயல்பின எனவும், பேராற்றல் படைத்தன எனவும் கொண்டு, அவற்றைக் கடவுளாகவே தொழுதனர். இவர்களுடைய வணக்கத்திற்கு மலை, காடு, மரம், சுனை, ஆற்றிடைக்குறை, கழி, கடல் முதலியன எல்லாம் உரியவாகின்றன. யாழ், முரசு, ஆயுதம் முதலிய கருவிகளிலும் தெய்வம் உறைவதாகப் போற்றப்படுகிறது. மக்கள் வாழும் வீட்டிலும் இல்லுறை தெய்வங்கள் சில இடம் பெறுகின்றன. ஊர்களில் உள்ள தெருச்சந்திகள், மன்றங்கள், பொதுச்சபையிடங்கள் இவற்றிலும் தெய்வங்கள் குடிகொண்டுள்ளன.

காடும் காவும், கவின் பெறு துருத்தியும்
யாறும் குளனும். வேறுபல வைப்பும்,

சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்'
(முருகு.223-226)

'ஆலமும், கடம்பும், நல் யாற்று நடுவும்
கால் வழக்கு அறுநிலைக் குன்றமும், பிறவும்,
அவ்வவை மேவிய வேறுவேறு பெயரோய்'
(பரி.4:67-69)

'துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்
முறையுளி பராஅய், பாய்ந்தனர், தொழூஉ
(கலி.101:13-14)

எனவரும் பாடற்பகுதிகளால் பற்பல இடங்களிலும் மக்கள் பரவிய பல்வேறு கடவுளர்களின் தோற்றங்களைக் காணலாகும்.

மலை உறை தெய்வம்

மேருமலையில் தேவர்கள் உறைகின்றனர் என்று முன்பு தேவர்களைப் பற்றிப் பேசும்போது குறிக்கப்பட்டது (சிறு.205-206; பெரும்.429-430). இம்மேரு மலையில் மட்டும் அன்று தெய்வங்கள் உறைவது; எல்லா மலைகளிலுமே தெய்வங்கள் உறைவதாக நம்பினர். 'அணங்குடை நெடுவரை' (அக.22:1); 'அணங்குடைக் கவாஅன்' (அக.72:11); 'வான்கோட்டுக் கடவுள் ஓங்குவரை' (அக.348:6-7); 'அணங்குடை வரைப்பு' (அக.372:1); 'கடுந்திறல் அணங்கின் நெடும் பெருங் குன்றத்து' (அக.378:22); 'மலை உறை கடவுள்' (நற்.259:3); 'அணங்கொடு நின்றது மலை' (நற்.165:8) என மலையில் உறையும் தெய்வங்களைக் கவிஞர்கள் சுட்டிச் செல்கின்றனர். இம் மலைத் தெய்வங்கள் மலையைக் காக்கும் பணி புரிவனவாம்.

'அருந்தெறல் மரபின் கடவுள் காப்ப,
பெருந்தேன் தூங்கும் நாடுகாண் நனந்தலை,
அணங்குடை வரைப்பின், பாழி ஆங்கண்'
(அக.372:1-3)

'ஈர்ந்தண் சிலம்பின் இருள் தூங்கு நளி முழை
அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமை
பெருங்கல் நாடன் பேகனும்' (புற.158:10-12)

என வருவன இதற்குத் தக்க சான்றுகளாம். இங்ஙனம் மலையைக் காவல் புரியும் கடவுள், மக்களை மிகவும் வருத்தும் இயல்புடையனவாயும், மிகுந்த வலிமை படைத்தனவாயும் இருந்தன என்பதை மேற்குறித்த பாடற்பகுதியுள் வரும் 'அருந்தெறல் கடவுள்' ,'அருந்திறல் கடவுள்' எனவரும் அடைமொழிகளால் உணரலாகும்.

இம்மலையில் உறையும் தெய்வமகளிரை, 'வரையரமகளிர்' என்பர். மலைகளில் தெய்வம் விரும்பும் இடங்கள், பூக்கள், வரையரமகளிரின் இருப்பிடங்கள் ஆகியவை கண்டார்க்கு நடுக்கத்தைச் செய்வனவாக இருந்தன. மலை வழியில் செல்லும் கூத்தர்களுக்கு இவ்வகையான தெய்வங்களின் இருப்பிடங்கள் நடுக்கத்தைத் தருவன ஆதலால் மலைநாட்டில் பலநாள் தங்கியிருத்தல் கூடாது என்று அறிவுறுத்துதலை மலைபடு கடாத்துள் காண்கிறோம்.

'அனையது அன்று அவன் மலைமிசை நாடே
நிரை இதழ்க் குவளைக் கடிவீ தொடினும்,
வரைஅர மகளிர் இருக்கை காணினும்,
உயிர்செல வெம்பிப் பனித்தலும் உரியிர்;
பலநாள் நில்லாது நிலநாடு படர்மின்'

(மலைபடு.188-192)

என்பது கூத்தர்க்குக் கூறிய எச்சரிக்கை உரை. வரையர மகளிர் என்பார் மலைக்குகைகளிலே பார்ப்பார் கண்களுக்குத் தென்படாது மறைந்து உறைபவராவர் (அக.342:11-12). இதனால் இவர்கள் காட்சிக்கு அரியராயுள்ளனர் என்பது தெரியவரும். அடைதற்கு எளியளல்லாத தலைவியைக் சுட்டும்போது, தலைவன் ஒருவன் இவள் வரையர மகளிர்போல அரியளாயுள்ளாள் என்கிறான். 'வரையர மகளிரின் அரியள்' (ஐங்.191:4, அக.342:11) என்பது அத்தலைவனின் வாக்கு.

இத் தெய்வ மகளிர் மிகுந்த அழகு படைத்தவர்கள். பெண்களின் சாயலுக்கு இம்மகளிரின் நிறத்தை ஒப்பிடுகின்றனர். 'வரையர மகளிர் புரையும் சாயலள், ஐயள்' (ஐங்.255:3-4) என்று தலைவி ஒருத்தி சிறப்பிக்கப்படுகிறாள். இம் மகளிர்கள் மலைகளிலே பரந்து விளையாடுகின்றனர். அப்பொழுது மலைச் சிகரங்களில் உள்ள மலர்கள் தம் அழகு கெட்டு உதிர்ந்து கீழே வந்து

விழுந்து பரவிக்கிடக்குமாம். இக் காட்சி பூங்கச்சுக்களை விரித்து வைத்தாற் போன்று தென்படுகின்றனவாம். இதனை,

வரை அர மகளிரின் சாஅய், விழைதக,
விண் பொரும் சென்னிக் கிளைஇய காந்தள்
தண் கமழ் அலரி தாஅய், நன்பல
வம்பு விரி களத்தின் கவின்பெறப் பொலிந்த
குன்று கெழு நாடன் (குறிஞ்சி. 195-199)

எனவரும் குறிஞ்சிப்பாட்டு அடிகளிலே காணலாம்

மலையில் உறையும் தெய்வங்களும் பலவாம். இவற்றைப் பொதுவாக 'அணங்கு' எனக் குறிப்பிடுவர். இரவுக்குறிக்கண் வரும் இயல்புடைய தலைவனை, 'நீ இவ்வாறு ஒழுகுதல் தகாது; இப்படி நீ இரவில் வந்தால் இச்சிறுகுடியில் உள்ளார் மலையில் நின்று பலியைக் கொள்ளும் அணங்குகளுள் ஓர் அணங்கோ என்று கருதி அஞ்சுவர்' என்று தலைவியின் தோழி ஒருத்தி தலைவனுக்கு அறிவுறுத்துகிறாள்.

'மணம் கமழ் நாற்றத்த மலை நின்று பலி பெறூஉம்
அணங்கு என அஞ்சுவர் சிறு குடியோரே' (கலி.52:9-10)

என்பது தோழியின் வாக்கு.

மலைவாழ் தெய்வங்களுக்கும் பலியிட்டுக் குன்றவர் வழிபாடு செய்கின்றனர். குன்றவர் தமது சுற்றத்தார்களுடன் கூடி வழிபாடு இயற்றுகின்றனர். கோடையில் முற்றி முதிர்ந்து பழுத்த தேனினும் இனிய மாங்கனிகளோடு பலாச்சுளைகளையும் இட்டுத் தேனுடன் கூட்டி, மூங்கில் குழாய்களிலே இட்டு வைத்து முதிர்ந்த பக்குவம் அடைந்த கள்ளினை மலைத் தெய்வத்திற்குப் படைக்கின்றனர். வழிபட்டபின் அந்தக் கள் முதலியவற்றை மகளிர் தர உண்டு, தம்மையும் மறந்து கள்ளின் மயக்கிலே ஆழ்ந்து இன்புறு கின்றனர் குன்றவர்.

'அணங்கொடு நின்றது மலை, வான் கொள்க எனக்
கடவுள் ஓங்கு வரை பேண்மார், வேட்டு எழுந்து,
கிளையொடு மகிழும் குன்ற நாடன்' (நற். 165:3-5)

'தேன் தேர் சுவைய, திரள் அரை, மாஅத்து,
கோடைக்கு ஊழ்த்த, கமழ் நறுந்தீம் கனி,

பயிர்ப்புறப் பலவின் எதிர்ச்சுளை அளைஇ,
இறாலொடு கலந்த, வண்டு மூசு, அரியல்
நெடுங்கண் ஆடு அமைப் பழுநி, கடுந்திறல்
பாப்புக் கடுப்பு அன்ன தோப்பி வான்கோட்டுக்
கடவுள் ஓங்கு வரைக்கு ஓச்சி, குறவர்
முறித்தழை மகளிர் மடுப்ப, மாந்தி,
அடுக்கல் ஏனல் இரும்புனம் மறந்துழி' (அக.348:2-10)

என்னும் படைப்பகுதிகள் மலைவாழ் மக்களாகிய குறவர்கள் தம் மகளிருடன் மலையுறை தெய்வத்தை வழிபடும் காட்சியை விவரிக்கின்றன. வரை உறை தெய்வம் மகிழ குரவையாடியும் அவர்கள் போற்றுகின்றனர்.

வரை உறை தெய்வம் உவப்ப, உவநது
குரவை தழீஇ யாம் ஆட, குரவையுள்
கொண்டு நிலை பாடிக்காண் (கலி.39:27-29)

என்பது கலித்தொகை. பாணர், கூத்தர், விறலியர் முதலியோர் யாழை மீட்டியும் குறிஞ்சி என்னும் பண்பாடியும் மலைக் கடவுளைப் பரவும் இயல்பும் தெரியவருகிறது. நன்னன் சேய் நன்னனது மலை வழிச் செல்லும் கூத்தர்க்குக் கூறும் வழிச் செலவில் மலையில் அவர்கள் தெய்வம் பரவிச் செல்லுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்:

செரு மிக்குப் புகலும் திருஆர் மார்பன்
உரும் உரறு கருவிய பெருமலை பிற்பட,
இறும்பூது கருவிய இன்குரல் விறலியர்
நறுங்கார் அடுக்கத்துக் குறிஞ்சி பாடி,
கைதொழூஉப் பரவி, பழிச்சினிர் கழிமின்
(மலைபடு.356-360)

என்று கூத்தர்க்கு மலைவழியில் ஆற்ற வேண்டும் கடமை கூறப் படுகிறது.

காடு உறை கடவுள்

மலை மட்டுமா கடவுள் உறைவிடங்கள்? காடும், சிறுகாடும், பெருவழிகளும் எங்குமே கடவுளர்கள்!

காடே கடவுள் மேன; புறவே
ஒள் இழை மகளிரொடு மள்ளர் மேன;

ஆற்ற அவ் அளைத்து (பதிற். 13:20-22)

என்பது பதிற்றுப்பத்து. இப் பகுதிக்கு, "நின் நாட்டுப் பெருங்கா டான இடங்கள் எல்லாம் கோயில்களான; சிறுகாடான இடங்கள் எல்லாம் நின் படையாளர்கள் மகளிரொடு உறையும் படைநிலை களாயின. காடும் புறவும் அல்லாத பெருவழிகளும், ஆறலைகள் வரும் பிற இடையூறுமின்றி முன் சொன்ன கடவுளும் மள்ளரும் உறையும் இட'மாயின" என்று விளக்கம் தருகின்றார் பழைய உரையாசிரியர். காட்டில் தங்கும் கடவுளையும் மக்கள் வழிபடுகின்றனர். தன் பாடினி பாடிய தாளத்துக்குப் பொருந்த யாழில் இசைத்துப் பாணன் காட்டுத் தெய்வங்களுக்குச் செய்யும் கடமை செய்து மேற்செல்லுகிறான்.

பெடை மயில் உருவின் பெருந்தகு பாடினி
பாடின பாணிக்கு ஏற்ப, நாள்தொறும்
களிறு வழங்கு அதிர கானத்து அல்கி,
இலைஇல் மரா அத்த, எவ்வம் தாங்கி,
வலை வலந்தன்ன மெல்நிழல் மருங்கில்,
காடு உறை கடவுட் கடன் கழிப்பிய பின்றை -

(பொருந. 47-52)

எனவரும் பொருநராற்றுப்படை அடிகளிலே பாணன் நாள் தோறும் காட்டிடத்துச் செல்லுங்கால், ஆங்கு உறையும் கடவு ளுக்குச் செய்த வழிபாட்டு முறையைக் காணலாம்.

காவிலும் மரங்களிலும் வாழும் தெய்வம்

காட்டில் உறையும் கடவுள் மரஞ்செடி கொடிகளிலும் மலர் மண்டிக் கிடக்கும் சோலைகளிலும் உறைதல் வியப்பன்று.' காடும் காவும் கவின் பெறு துருத்தியும்' (முருகு.223) தெய்வம் உறையும் இடங்கள் என்பர் நக்கீரர். மரங்களில், அதுவும் மரங்களின் அரைகளில், அதாவது அடிமரங்களிலும் கடவுள் சேர்ந்திருப்பதாகக் கண்டனர். 'கடவுள் மரத்த முள் மிடை குடம்பை'(அக.270:12), 'நல்அரை மராஅத்த கடவுள்' (மலைபடு.395), 'தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை, மன்றப் பெண்ணை' (நற்.300:3-4), 'தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்' (அக.309:4) என்று குறிப்பிடுதல் காணலாம். முக்கியமாக, ஆலமரம் (குறுந்.15:1-2;நற்.343:3-6; புற.199:1; கலி.101:13-14, 106:28-29), மராமரம் (குறுந்.87:1-2; மலைபடு.395; கலி.101:13),கடம்பு

(பதிற்.88:6; கலி.106:28); வேங்கை (நற்.216:6-7), ஓமை (அக.297:11), வேம்பு (அக.309:4-6), மருது (பெரும்.232); பனை (நற்.303:3-4), கள்ளி (புற.260:5) என்னும் மரங்களில் கடவுள் உறைதல் குறிப்பிடப்பட்டுள்ளது. வெற்றி மடந்தையாகிய கடவுள் வாகை மரத்தில் வாழ்கின்றனளாம்; வாகைப்பூ போர் வெற்றியைக் குறிக்கும் அடையாளம். ஆகவே, போர் வெற்றி தரும் கொற்றவையை வாகையில் உறையும் கடவுளாகக் கொண்டுள்ளனர் என்பது தெரியவருகிறது. 'கடவுள் வாகைத் துய்வீ' (பதிற்.66:15) என்பதற்கு 'வெற்றி மடந்தையாகிய கடவுள் வாழும் வாகை' என்று பொருள் காண்கின்றார் பழைய உரைகாரர்.

மரங்களில் உறையும் கடவுள் பிறர்க்கு அச்சம் செய்தலில் முதிர்ந்த இயல்புடையதாம். 'மன்ற மராஅத்த பேஎம் முதிர் கடவுள்' (குறுந்.87:1) என்னும் தொடர் இதனை அறிவுறுத்தும். இம் மரங்களில் உறையும் தெய்வங்களுக்கு மகிழ்ச்சி உண்டாக வேண்டி நெடிய மாலைகளை அம் மரக் கொம்புகளிலே தொங்கவிடுவர் என்றும் தெரியவருகிறது. ஏறு தழுவச் சென்ற ஆயர் சிலரின் குடர்களைத் தம் கொம்புகளினாலே தோண்டியெடுத்து ஒடுகின்றன சில காளைகள். இந்தக் குடர்களைக் கௌவிஎடுத்துப் பறக்கும் பருந்தின் வாயினின்றும் நழுவி ஆலமரம், கடப்ப மரம் ஆகியவற்றின் மேலும் குடர்கள் சிலபல வந்து விழுகின்றன. குடர்மாலைகள் தொங்கக் காட்சிதரும் ஆலமரமும் கடப்ப மரமும் அவற்றின்கண் உறையும் தெய்வத்தின் பொருட்டுச் சாத்தப் பெற்ற மாலைகள் போல உள்ளனவாம் (கலி.106:26-29). மரங்களில் உறையும் கடவுளுக்கு அம்மரங்களின் அடியில் பலிச்சோறு இடுதலும், பிற பலிகளைக் கொடுத்தலும் உண்டு. பலியாக இட்ட சோற்றைக் காக்கைகள் தம் இனத்துடன் உண்டு உவக்கின்றன. ஆட்டு மறியை வெட்டி, அதன் குருதியைத் தூவி ஆக்கிய பலிச் சோற்றை வழிபட்டார் உண்ணுகின்றனர்.

'நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து,
உகுபலி அருந்திய தொகுவிரற் காக்கை
புன்கண் அந்தி கிளைவயின் செறிய' (நற்.343:4-6).

'தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்
கொழுப்புஆ எறிந்து, குருதி தூஉய்,
புலவுப் புழுக்கு உண்ட வான்கண் அகல் அறை' (அக.309:4-6)

எனவரும் சங்கப்பாடற் பகுதிகளால் மேற்குறித்த செய்திகள் புலனாகும்.

நீர்த்துறைக் கடவுள்

நீர் நிலைபெற்றுள்ள சுனை, குளம், ஆறு, ஆற்றுத்துருத்தி, கடல், கழிமுகம் என்பவற்றிலும் கடவுள் உறைவதாக வழிபட்டமையும் சங்கப்பாடல்களில் காணலாகும். 'உண்துறை அணங்கு இவள்' (ஐங்.28:1), 'துறை எவன் அணங்கும்' (ஐங்.53:1), 'அருந்திறற் கடவுள் அல்லன்' - பெருந்துறைக் கண்டு இவள் அணங்கியோனே' (ஐங்.182:3-4) எனவரும் ஐங்குறு நூற்று அடிகள் மகளிரை வருத்தும் நீர்த்துறைத் தெய்வங்களைச் சுட்டிக் காட்டுகின்றன. 'கடவுட் கற்சுனை' (நற்.34:1), 'சூர்ச்சுனை' (அக.91:4) என்பன சுனை உறை தெய்வத்தைக் குறிக்கும். ஆற்றின் நடுவில் அமைந்துள்ள துருத்தி எனப்படும் திட்டுக்களிலும் தெய்வம் காண்கின்றனர். 'நல்யாற்று நடுவும்' (பரி.4:67), 'கவின்பெறு துருத்தியும்' (முருகு.223) என்று பரிபாடலும் முருகாற்றுப்படையும் துருத்தியில் தெய்வம் உறைதலைச் சுட்டும். ஆறு கடலொடு கலக்கும் நீர்ச்சுழிகள் நிறைந்த கழிமுகத்திலும்கூட ஒரு தெய்வம் உறைகின்றது. தெய்வம் சுட்டி ஆணையிடும் தோழி செவிலித்தாயை நோக்கி,

'கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கி,
கடுஞ்சூழ் தருகுவன், நினக்கே' (அக.110:4-5)

என்று கழிமுகத்துறைத் தெய்வத்தின் மேல் ஆணையிட்டுப் பேசுகிறாள்.

எல்லா நீர்களையும் ஏற்கும் பெரிய கடற்பரப்பில் உறையும் தெய்வம் நீர்த்தெய்வங்களிலே மிகப்பெரிதும் போற்றி வணங்கப் படுகிறது. இப்பெருங்கடல் தெய்வத்தின்மேல் ஆணையிட்டுக் கூறுதலும் உண்டு.

'பெருங்கடற் தெய்வம் நீர்நோக்கித் தெளித்து, என்
திருந்திழை மென்றோள் மணந்தவன்' (கலி.131:1-2)

என்பது தலைவி ஒருத்தியின் வாக்கு. 'அணங்குடை முந்நீர்' (அக.220:1), 'பெருந்துறைப் பரப்பின் அமர்ந்து உறை அணங்கோ?'(நற்.155:5-6), 'கடல்கெழு செல்வி' (அக.370:12) என்பன எல்லாம் கடல்-தெய்வத்தைக் குறிக்கும். கடல் கெழு

செல்வி ஞாழல் பூவால் அமைந்த கண்ணியையும், நெய்தல் பூவா லாகிய மாலையையும் அணிந்து விளங்குகின்றாளாம்.

-ஞாழல்
வண்டுபடத் ததைந்த கண்ணி, நெய்தல்
தண்நறும் பைந்தார் துயல்வர, அந்தி,
கடல்கெழு செல்வி கரை நின்றாங்கு ' (அக.270:9-12)

என்பது அகநானூறு தரும் கடல்தெய்வக் காட்சி. இச்செல்வியை நெய்தல் நில மாக்கள் போற்றி வழிபடுகின்றனர். தாய் தன் தோழி யருடன் குளிர்ச்சி மிக்க கடல் துறையிலே வாழும் தெய்வத்தை வழிபடுதலைக் குறித்து நெய்தல் நிலத் தலைவி ஒருத்தி,

அணங்குடைப் பனித்துறை கைதொழுது ஏத்தி.
யாயும் ஆயமோடு அயரும்' (அக.240:8-9)

என்று கூறுகின்றாள். கொற்கைத் துறையிலே நெய்தல்நில மகளிர் பனித்துறைக் கடவுளுக்கு முத்தும், வலம்புரிச் சங்கு முதலியன வும் சொரிந்து வழிபாடு இயற்றும் காட்சியையும் அகநானூறு தருகிறது.

'வினைநவில் யானை விறற்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை
அவிர் கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து,
தழை அணிப் பொலிந்த கோடு ஏந்து அல்குல்
பழையர் மகளிர் பனித்துறை பரவ' (அக.201.3-7)

என்பது அகநானூறு. தமிழ்நாட்டு மன்னர்களும் கடல் தெய்வத் திற்கு விழா எடுத்து, மிகவும் சிறப்புற வழிபட்டிருக்கின்றனர். பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி முந்நீர்க் கடல் தெய்வத்திற்கு எடுத்த விழாவைக் குறிப்பிட்டு,

'முந்நீர் விழவின் நெடியோன்' (புற.9:10)
என்று புகழப்பட்டுள்ளான்.

மலை, மரங்களில் உறையும் கடவுளர்களுக்கு மறி பலியிட்டு, கள், கண்ணி முதலியவற்றைக் காணிக்கையாகச் செலுத்துதல் போலவே நீருறையும் கடவுளுக்கும் வழிபாடு செய்யும் வழக்கமும் தெரியவருகிறது. இதனை,

'கள்ளும் கண்ணியும் கையுறையாக

நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய்
நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி' (அக.156:13-16)

எனவரும் அகநானூற்றுப் பாடற்பகுதியில் காணலாகும்.

வருத்தும் தெய்வம்

(அணங்கும் சூரும்)

மலை, மரம், நீர் ஆகியவற்றில் உறையும் தெய்வங்களில் பெரும்பாலனவும் வருத்தும் தெய்வங்களேயாம். அச்சமும் வருத்தமும் விளைவிக்கும் காரணம் பற்றி இத்தெய்வங்களை 'அணங்கு' என்றும், 'சூர்' என்றும் குறிப்பிடுகின்றனர். இவற்றுள் அணங்கு என்பது தெய்வத்தைக் குறிக்கும் பொதுப்பெயராகவும் வழங்கப்பட்டிருக்கிறது. 'இன் சீர்க் கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல். (பெரும்.493-494), 'அணங்கு வீழ்வு அன்ன பூந்தொடி மகளிர்' (மதுரை.446), 'எம் அணங்கு அன்னோளே' (அக.366:16) எனவரும் இடங்கள் தெய்வம் என்னும் பொதுமைப்பொருள் தருவன. ஆகவே, மக்களைத் தீண்டி வருத்தும் இயல்புடைய அணங்குகளைத் 'தாக்கு அணங்கு' என்று கவிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

'கண்டார்க்குத் தாக்கு அணங்கு இக்காரிகை
காண்மின்!' (பரி.11 122)

'தாக்கு அணங்கு ஆவது எவன்கொல் அன்னாய்!'. (ஐங் 23:4)

'மூப்புடை முதுபதி தாக்கு அணங்கு உடைய;
காப்பும் பூண்டிசின், கடையும் போகலை' (அக.7:4-5)

இங்கே வரும் பாடற்பகுதிகள் தாக்கு அணங்கின் இயல்பினைப் புலப்படுத்துவதாயுள்ளது. தாக்கு அணங்கு தம்மை எதிர்ப்பட்டார்களைத் தாக்கும் என்பதும் சிறப்பாகக் கன்னி மகளிரைத் தீண்டித் துன்புறுத்தும் என்பதும் புலனாகும்.

அணங்கைப் போலவே வருத்தும் தெய்வம் சூர் என்பதுவும், மலைநாட்டில் உள்ள வழிகளில் செல்லுதற்கு அருமைபற்றி விளக்கவந்த இடத்தில் அங்குச் செல்வார்க்குக் கொடுமை செய்யும் 'சூரை' யும் உடன் கூறுகிறது குறிஞ்சிப்பாட்டு.

'உருமும், சூரும், இரைதேர் அரவமும்,
....

வழுவின் வழாஅ விழுமம், அவர்
குழுமலை விடரகம், உடையவால் எனவே'
(குறிஞ்சி.255-261)

இவை பிறரைக் கொன்று ஒறுக்கும் இன்னாச்செயலில் நின்று நீங்கா இயல்புடையனவாம். இங்கே 'சூரும்' என்பதற்கு, 'கொடுந்தெய்வமும்' என்று விளக்கம் தருகின்றார் நச்சினார்க் கினியர். சூர் குடிகொண்டிருக்கும் மலைத்தழையைத் தீண்டினும், வாடச்செய்யினும் அது வருத்துமாம். அதனால் தழை தின்னும் வரையாடுகள்கூட சூர் இருக்கும் மலைத்தழையைத் தொடாது ஒதுங்குகின்றனவாம்.

'வாடல கொல்லோ தாமே - அவன் மலைப்
போருடை வருடையும் பாயா,
சூருடை அடுக்கத்த கொயற்கு அருந் தழையே?'
(நற்.359:7-9)

என்பது நற்றிணை. 'சூர்ப்பனிப்பு அன்ன தண்வரல் ஆலியொடு'(அக.304:3) என்பதனால் இச்சூரின் நடுங்கச் செய்யும் இயல்பு புலனாம். 'தாக்கு அணங்கு' என்றாற்போல், இங்கே 'சூர்ப்பனிப்பு' என்று அதன் வருத்தும் இயல்பு உரைக்கப் பட்டுள் ளமை காணலாம்.

கொடுமை செய்யும் தெய்வமகளிர் 'சூர்மகள்', 'சூரரமகளிர்' எனப்படுவர். தலைவன் ஒருவன், தலைவி கிட்டுதற்கு அரிய நிலை யினளாயும், அவன்தன்னை அடுத்தவழி வருத்தும் இயல் பினளாயும் உள்ளாள் என்பதைக் குறிக்குமிடத்துச் சூரரமகளிரோடு அவளை ஒப்புக்கூறி, அத்தெய்வ மகளிர் போன்ற இயல்பினளா கின்றாள் தலைவி என்று பேசுகிறான்.

'நேர்கொள் நெடுவரைக் கவாஅன்
சூரர் மகளிரின் பெறற்கு அரியோளே' (அக.162:24-26)

'சூரர மகளிரின் நின்றநீ மற்று
யாரையோ? எம் அணங்கியோய்! உண்கு. (அக.32:7-8)

என்பன தலைவன் தலைவியை நோக்கி மொழிந்தவை. சூரர மகளிரை முன்னிட்டு ஆணையிட்டு உரைத்தலும் உண்டு.

'எக்கர் நண்ணிய எம்ஊர் வியன் துறை
நேர்இறை முன்கை பற்றி,

சூரர மகளிரோடு உற்ற சூளே' (குறுந்.53:5-7)

எனத் தலைவன் ஒருவன் தலைவி ஒருத்தியின் முன்கையைப் பற்றிச் சூரர மகளிரின்மேல் ஆணையிட்டு உரைத்த உறுதி மொழிகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. மலையிலன்றி மலையிடத்துள்ள சுனைகளிலும் சூர் மகளிர் உறைகின்றனராம். ஆய் நாட்டுள்ள கவிரமலைச் சுனை வாழும் சூர் மகளை அகநானூற்றுப்பாடல் ஒன்றில் காண்கிறோம்.

'ஆஅய் நல்நாட்டு அணங்குடைச் சிலம்பில்,
கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்
ஏர்மலர் நிறை சுனை உறையும்
சூர்மகள் மாதோ என்னும்'- என் நெஞ்சே (அக.197:14-17)

சூரரமகளிர் நீலநிறம் வாய்ந்த குவளை மலரையும் இரத்தம் போன்று சிவந்த நிறமுள்ள செங்காந்தள் மலரையும் கூட்டி அணிந்து கொண்டு மலையிடங்களில் ஆடுவார்களாம். அவர்களுக்கு அங்கு இயற்கையில் அமைந்து ஒழுகும் அருவி விழும் ஓசையே இன்னிய ஓசையாக அமைகின்றதாம். இதனைப் புலப்படுக்கும் செய்யுட் பகுதி பின்வருமாறு:

'கட்வுட் கற்சுனை அடை இறந்து அவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி ஒண்பூ உருகெழக் கட்டி,
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன் இயத்து ஆடும் நாடன்' (நற்.34:1-5)

இச் சூரரமகளிர் பலரும் கூடிப்பாடி மலையிடமெல்லாம் ஆரவாரிக்கும்படி சோலையில் அவர்கள் ஆடுகின்ற பான்மையைத் திருமுருகாற்றுப்படை விவரித்துள்ளது. இப் பகுதியில் சூரர மகளிரின் தோற்றம் முதலியனவும் நன்கு வருணிக்கப்பட்டுள்ளன. இம்மகளிர் கைபுனைந்து இயற்றா இயற்கை வனப்புடன் திகழ்கின்றனர். இந்திரகோபத்தை ஒத்த செந்நிறம் வாய்ந்த துகிலினை அணிந்துள்ளனர். நாவலம் பசும்பொன்னால் ஆன ஆபரணங்களையும் அவர்கள் அணிந்து விளங்குகின்றார்கள். அவர்களின் அரையிலே மேகலாபரணங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கால்களிலே சதங்கை அணிந்திருக்கின்றனர். இவர்கள் சிறிய பாதமுடையர்; திரண்ட கணைக்காலினர்; வளைந்து துடங்கும் இடையினை உடையர்; பருத்த தோளினை உடையர்; இவர்கள்

மேனியொளியே வானுலகையும் கடந்து செல்லும் தகையன. தெய்வநலம் வாய்ந்த இவர் ஆடையணிகளுடன் விளங்கும் காட்சி ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். இப்பொழுது நக்கீரர் தரும் சொற்சித்திரத்தைக் காண்போம்:

மால் வரை நிவந்த சேண் உயர் வெறபில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி,
கணைக்கால், வாங்கிய நுசுப்பின், பணைத்தோள்,
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்,
பல் காசு நிரைத்த சில்காழ் அல்குல்,
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்,
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழை,
சேண் இகழ்ந்து விளங்கும் செயிர்தீர் மேனி

சூரர மகளிர் ஆடும் சோலை (முருகு 12-41)

அணங்கு, சூர் என்னும் தெய்வங்களின் ஆவேசம் வாய்ப் பெற்றார் துள்ளித்துள்ளி ஆடுவர். துள்ளிச் செல்லும் ஆனிரைக்குத் தெய்வம் மெய்யின்கண் ஏறிய புலைமகளை ஒப்பிடுகின்றரர் ஒரு கவிஞர். 'முருகுமெய்ப்பட்ட புலைத்தி போல, தாவுபு தெறிக்கும் ஆன்' (புற. 259:5-6) என்பது கவிஞர் வாக்கு. 'சூர் நசைந்தனையையாய் நடுங்கல் கண்டே' (குறுந். 52:2) என்பதும், சூரினால் விரும்பிப் பற்றப்பட்டார் நடுக்கம் அடைதலைத் தெரிவிக்கும். மக்கள் மட்டுமல்லர்: பிற பிராணிகளும்கூடச் சூரினால் பற்றப்பட்டால் நடுக்கம் எய்தும் என்பது 'சூர் உறு மஞ்ஞையின் நடுங்க' (குறிஞ்சி. 169) என வரும் குறிஞ்சிப் பாட்டு அடியால் போதரும். தெய்வத்திற்குரிய பொருளைத் தீண்டியவரும் இவ்வகை நடுக்கத்திற்கு உள்ளாகின்றனர். கடவுட்கு எனப் பலியாக இடப்பட்ட தினைக்கதிரைத் தெரியாமல் உண்ட மயில் வெறியாடும் மகளைப்போல நடுங்குகின்ற காட்சியைக் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் காண்கிறோம்

'புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்
கடி உண் கடவுட்கு இட்ட செழுங்குரல்
அறியாது உண்ட மஞ்ஞை ஆடுமகள்
வெறிஉறு வனப்பின் வெய்துற்று, நடுங்கும்
சூர்மலை நாடன்' (குறுந். 105:1-5)

என்பதுவே அக் குறுந்தொகைப் பாட்டு. வெறியாட்டத்திலும், கட்டுக்கழங்குக் குறி பார்த்தலிலும் வேலனும் தேவராட்டியும் தெய்வ ஆவேசம் உற்று ஆடுதலும் ஈண்டுக் கவனிக்கத் தக்கது.

யாழ்த்தெய்வமும் முலை உறை வீற்றுத் தெய்வமும்

அணங்கு என்பது ஆண் பெண் தெய்வங்களுக்குப் பொதுவாகவும், ஆண் தெய்வத்திற்குச் சிறுபான்மையும் பெண் தெய்வத்திற்குப் பெரும்பான்மையாகவும் சங்கப்பாடல்களில் வழங்கப்பட்டிருக்கின்றது. பெண்களையே 'அணங்கு' எனச் சுட்டும் வழக்கும் காணப்படுகிறது. சூர் என்பதும் இவ்வகையாக வரினும், பெண் தெய்வத்தைக் குறிக்கும் பொழுது சூர்மகள், சூரரமகளிர் என்று சிறப்பித்துப் பேசப்படுகின்றனர். யாழ், முரசு முதலிய கருவிகளில் உறையும் தெய்வமும் அணங்கு எனவே குறிக்கப் பட்டிருக்கிறது.

'மணம் கமழ் மாதரை மண்ணியன்ன
அணங்கு மெய்ந் நின்ற அமைவரு காட்சி,
ஆறு அலை கள்வர் படை விட அருளின்
மாறு தலை பெயர்க்கும் மருவு இன் மாலை' (பொருந.19-22)

என்று பொருநன் கையில் ஏந்திச் செல்லும் பாலை யாழைப் பொருநராற்றுப்படை வருணிக்கிறது. இங்கே அணங்கு என்பது யாழிற்குரிய தெய்வத்தைக் குறிப்பதாகும். யாழிற்கு உரிய தெய்வத்தை 'மாதங்கி' என்று நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணி உரையில் குறிப்பிட்டுள்ளார் *(சீவக.411, 500)*.

மகளிர் முலையிடையே வாழ்கின்ற அணங்கு வீற்றுத் தெய்வம் என்று குறிக்கப்படும்:

'சுணங்கு சூழ் ஆகத்து அணங்கு என உருத்த
நல்வரல் இளமுலை. (அகம்.161:12-13)

.பொரிப் பூம் புன்கின் அழற்தகை ஒண்முறி
சுணங்கு அணி வனமுலை அணங்கு கொளத் திமிரி. (நற்.9.5-6)

எனவரும் பாடற்பகுதிகள் முலை உறை வீற்றுத் தெய்வத்தைக், குறிப்பிடுதல் காணலாம். இதனை, 'முலைவாழ் திரு' என்றும் குறித்தல் உண்டு.

ஆயுதத்திலும் முரசிலும் அமர்ந்துறை அணங்கு

வீரர்கள் கைக்கொண்டிருக்கும் ஆயுதங்களிலும் அணங்கு அமர்ந்து அவர்களுடைய தொழில்களில் வெற்றி நல்குகிறாள்

'அரவின் பொறியும் அணங்கும் புணர்ந்த
உரவு வில்மேல் அசைத்த கையை' (கலி.50:6-7)

என வருவது விற்படையில் சேர்ந்துறையும் அணங்கைக் குறிப்பிடுகிறது.

பண்டை மன்னர்கள் 'முரசு' என்னும் தம் சின்னத்தைப் பெரிதும் மதித்துப் போற்றிவந்தனர். மன்னரைக் குறிக்கும் பொழுது அவர்தம் முரசு உடைமை ஒரு தனிச சிறப்பாகக் கூறப் பட்டிருக்கிறது. தமிழ்நாட்டுப் பெருமன்னர் மூவரும் பெருமையைக் கொண்ட முரசினை உடைய மூவர் என்னும் பொருளில், 'நளி கொள் முரசின் மூவர்' என்று குறிப்பிடப்படுகின்றனர். இடி என முரசு ஒலிக்க மன்னர் போரிடைப் பொருது அப்போர்க் களத்திலே வெற்றி முரசு முழக்குவர்.

'முரசு முழங்கு தானை நும் அரசும் ஓம்புமின்' (புற.301:5)

'உரும் உரற்றன்ன உட்குவரு முரசமொடு
செருமேம் படூஉம் வென்றியர்'' (புற.197:5-6)

'வென்று எறி முரசின் வேந்தர்'(புற 112:4)

என்பன புறநானூற்றில் காணும் செய்திகள்.

அரசனுடைய பல்வேறு நிகழ்ச்சிகளைத் தெரிவிப்பதற்கும் முரசு முழக்குதல் உண்டு. காலையிலே அரண்மனையில் ஒலிப்பதை 'நாள்முரசு இரங்கும் இடனுடை வரைப்பு' (புற.161:29) என்று குறிக்கிறது. அரசர்கள் தமது வீரமுரசத்தைச் சிறப்பாகப் போற்றினர். இம்முரசு வைக்கப்பெற்றிருக்கும் பீடம் 'முரசுக் கட்டில்' என வழங்கப்படுகிறது. இந்த முரசும் தெய்வத்திற்குரிய சிறப்பைப் பெறுகிறது. இதனை நீராட்டி, இதற்கு மாலை முதலியன பூணுவித்துக் குருதிப் பலி கொடுத்துப் போற்றுதல் மரபு.

'மாசு அற விசித்த வார்புறு வள்பின்
மை படு மருங்குப் பொலிய. மஞ்ஞை
ஒலி நெடும் பீலி ஒண் பொறி மணித்தார்,
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டி

குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை. (புற.50:1-6)

'சிலைத் தார் முரசம் கறங்க,
மலைத்தனை' (புறம்.50:1-6)
'பலிபெறு முரசம் பாசறைச் சிலைப்ப' (புற 362;3)

'வாள்மின் ஆக, வயங்கு கடிப்பு அமைந்த
குருதிப் பலிய முரசு முழக்கு ஆக' (புற.369:4-5)

எனவரும் பகுதிகள் முரசு தெய்வத்திற்குரிய சிறப்புப் பெறுதலை விளக்குவனவாம். முரசுறை கடவுளுக்குச் செய்யும் வழிபாட்டினைப் பதிற்றுப்பத்தின் முப்பதாம் பாடல் விரிவாக விளக்கி உரைக்கின்றது. முரசு ஒலி கேட்ட மாத்திரத்தில் பிற பெருமன்னரும் குறுநில மன்னரும் நடுங்குகின்றனராம். முரசுறை கடவுளை வழிபடுவோன் மிக்க சினத்துடன் உரக்க உச்சரிக்கப்படும் மந்திரங்களால் குருதியும் கள்ளும் முதலிய பலிகளைக் கொடுக்கிறான். இவன் முரசுறை கடவுளுக்குப் பலியாக இட்ட பிண்டத்தைப் பேய்மகளும்; எறும்பு முதலியனவும் நடுங்கி நெருங்காமல் இருக்க, காக்கையும் பருந்தும் உண்ணுகின்றன. போரில் பகைவரைத் தோற்றோடச் செய்து வெற்றிபெற்ற பெருவீரர்களுக்குப் பெருஞ்சோறு வழங்குதற்கு இம்முரசம் அடிக்கப்படுகிறது. இச்செய்திகளை அறிவிக்கும் பாடற் பகுதி வருமாறு:

'பணைகெழு வேந்தரும் வேளிரும், ஒன்று மொழிந்து.
கடலவும் காட்டவும் அரண் வலியார் நடுங்க,
முரண் மிகு கடுங்குரல் விசும்பு அடைபு அதிர,
கடுஞ்சினம் கடாஅய். முழங்கும் மந்திரத்து
அருந்திறல் மரபின் கடவுட் பேணியர்;
உயர்ந்தோள் ஏந்திய அரும்பெறற் பிண்டம்
கருங்கட் பேய்மகள் கைபுடையூ நடுங்க,
நெய்த்தோர் தூஉய நிறைமகிழ் இரும்பலி,
எறும்பும் மூசா இறும்பூது மரபின்;
கருங்கட் காக்கையொடு பருந்து இருந்து ஆர:
ஓடாப் பூட்கை, ஒண் பொறிக் கழற் கால்.
பெருஞ் சமம் ததைந்த. செருப்புகல், மறவர்
உருமு நிலன் அதிர்க்கும் குரலொடு. கொளைபுணாநது.

பெருஞ்சோறு உகுத்தற்கு, எறியும் -
கடுஞ்சின வேந்தே! - நின் தழங்கு குரல் முரசே'

(பதிற்.30:30-44)

மன்னவன் கோயிலில் முரசம் வைக்கும் கட்டிலும் புனித மாகப் போற்றப்படுகிறது. நீராட்டி வருதற் பொருட்டு முரசம் எடுத்துச் சென்றது உணராது, மெல்லிய நல்லாடை விரிக்கப் பெற்றிருந்த முரசு கட்டிலைத் தூங்குதற்குரிய மஞ்சம் எனக் கருதிப் புலவர் மோசிகீரனார் படுத்து உறங்கிவிடுகிறார். பின் அவ்விடம் வந்த சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை சினத்துடன் கட்டிலை அணுகுகிறான். முரசு கட்டிலில் தூங்குவது புலவர் என்பது தெரிந்ததும், அவர் நடந்து வந்த களைப்பால் முரசு கட்டில் என்பது தெரியாது படுத்துத் தூங்கிவிட்டவர் என்று எண்ணிய மன்னன் அவர் துயில் எழும்வரை கவரியால் விசிறியும் நின்றான். விழித்தெழுந்தபின் அவர் தாம் புரிந்த தவற்றையும், மன்னன் தமக்கு அளித்த பெருமதிப்பையும் போற்றிப் புகழ் கின்றார்.

குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை, எண்ணெய்
நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவர,
இருபாற் படுக்கும் நின் வாள்வாய் ஒழித்ததை.
அதூஉம் சாலும், நல் தமிழ் முழுது அறிதல்;
அதனொடும் அமையாது, அணுக வந்து, நின்
மதனுடை முழவுத் தோள் ஓச்சி, தண்ணென
வீசியோயே! (புற.50:5-13)

என்பது புலவர் வாக்கு. இங்கே முரசு கட்டில் எவ்வளவு மதிப்புடன் போற்றப்பட்டது என்பது போதரும். அதற்குப் பிழை செய்தார் புலவர் அல்லராயின் அவர் கொலையுண்டிருப்பர் என் பதும் புலனாகிறது. முரசும் முரசுறை தெய்வமும் மன்னர் போற்று தலுக்கும் வணக்கத்திற்கும் உரியனவாக விளங்கியமை மேற் குறித்த நிகழ்ச்சியால் போதரும்.

பேய், பிசாசு, பூதம்

மன்னர்கள் போரிடும் போர்க்கள நிகழ்ச்சிகளும், அவர்தம் வெற்றிச் சிறப்புகளும் பேசப்படும் இடத்துப் பேய், பிசாசு, பூதம்

முதலிய பெருந்துன்பம் விளைக்கும் சிறுதெய்வங்கள் இடம் பெறுகின்றன. 'வருத்துகின்ற தெய்வத்தன்மை 'அணங்கு சால் உயர் நிலை' (முருகு. 299) எனப்படும். மக்களுக்குப் பேரச்சத்தை விளைவித்து வந்தமையால், இவை 'உரு கெழு தெய்வம்' (நற்.398:1) என வழங்கப்பட்டன. 'உருகெழு தெய்வம்' என்பது அச்சத்தை விளைவிக்கும் தெய்வம் என்னும் பொருளாம். அவையாவன; ''பேயும், பூதமும், நிரையப்பாலரும், அணங்குதல் தொழிலரராகிய சவந்தின் பெண்டிர் முதலாயினாரும் பிறருமாம்'' என்பர். பேயினத் தெய்வங்கள் பாசம், பிசாசு, கழுது, பழு, அணங்கு, கூளி, பூதம் முதலிய பெயர்களைப் பெறுகின்றன.

'பானாள் கொண்ட கங்குல் இடையது
பேயும் அணங்கும் உருவு கொண்டு, ஆய்கோல்
கூற்றக் கொல்தேர், கழுதொடு கொட்ப'
(மதுரை. 631-633)

எனவரும் மதுரைக்காஞ்சியடிகளில் பேய், அணங்கு, கழுது என்பன குறிக்கப்பட்டுள்ளன. ''பேய்களும் வருத்தும் தெய்வங்களும் வடிவு கொண்டு கழுதுடனே சுழன்று திரிகின்றனவாம்''. ''கழுது - பேயில் ஒரு சாதி'' என்று மேற் குறித்த மதுரைக் காஞ்சி அடிகளுக்குப் பொருள் உரைக்கின்றார் நச்சினார்க்கினியர். இதனால் கழுது, கூளி, பூதம் முதலியன பேயினத்தைச் சார்ந்தவை என்றும், அவற்றுள் ஒன்றற்கு ஒன்று உருவம், செயல்கள் முதலியவற்றில் மாறுபாடு கொண்டவை என்றும், நடு இரவில் இவை உருவு கொண்டு சுழன்று திரியும் என்பதனால் பிற காலங்களில் இவற்றின் உருவம் வெளிப்படாது கரந்து உறையும் என்றும் அறியலாம். இவற்றைக் 'கூளிச்சுற்றம்' என்பர். இவை குட்டையும் நெட்டையுமான வடிவு வேற்று மையுடையனவாம். உதியஞ்சேரலாதன் தன் போர்ப்படை வீரர் களுக்குப் பெருஞ்சோறு அளித்த காலத்துப் போர்க்களத்தே கூடியிருந்த குட்டை நெட்டை கட்டையான பேய்களின் உருட் போன்ற சிறிய பெரிய குன்றங்கள் காட்சியளிக்கின்றன என்று உவமிக்கின்றார் மாமூலனார்.

''துறக்கம் எய்திய தொய்யா நல்இசை
முதியர்ப் பேணிய, உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை. இருமடல
கூளிச் சுற்றம் குழீஇ இருந்தாங்கு.

குறியவும் நெடியவும் குன்று தலை மண்நத
சுரன்'' (அக.233:7-12)

என்பது மாமூலனாரின் வாக்கு. இவையெல்லாம் கொற்றவையின் பரிவாரங்களாம். இவைகள் கொற்றவைக்குரிய பணிசெய்து, அவள் அருளைப் பெற்று வாழ்வன. காடு கெழு செல்வி யாகிய கொற்றவைக்குப் பேய் முதலியனவை வேடிக்கைப் பேச்சுக் களாகிய நொடிகளை உரைத்து அவ்ளை மகிழ்வித்தலும் பேசப்படுகிறது.

'துணங்கை அம் செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு'
(பெரும். 459)
'பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு'
(கலி.89:8)

என வருவன காடுகெழு செல்விக்குப் பணிபுரியும் பேய்களைக் குறிப்பன.

பேய் பிசாசுகளிலும் ஆண்-பெண் பால் வேற்றுமை உண்டு. இரவுக் குறியிடத்துக் காதலனை் எதிர்நோக்கி நின்ற தலைவியைப் பிசாசு என்று கருதி அஞ்சி உரையாடிய முதுபார்ப்பான் நிகழ்ச்சி கூறும் கலித்தொகைப் பகுதியில் அப் பார்ப்பான் தன்னை ஓர் ஆண் பிசாசு என்று கூறிக்கொண்டு அவளை அச்சுறுத்தப் பார்க்கிறான்.

'கைப்படுக்கப் பட்டாய், சிறுமி! நீ' - மற்றுயான்
ஏனைப் பிசாசு; அருள்; என்னை நலிதரின்,
இவ் ஊர்ப் பலி நீ பெறாமல் கொள்வேன்' (கலி 65:16-18)

என்பது முதுபார்ப்பான் வாக்கு. இதில் அவன் தன்னை ஓர் ஆண் பிசாசு எனச்சுட்டி, 'யான் ஏனைப் பிசாசு' என்று தலைவியை நோக்கி மொழிகிறான். மேலும், பேய் எனப் பொதுப்பட வழங் குவதோடு பேய்மகள், பேய்மகளிர் என்று சிறப்பித்துப் பல இடங்களிலும் பேசப்படுதலும் ஈண்டு உணரத்தகும்.

பேய்களின் உருவத் தோற்றத்தைச் சங்கப்பாடல்கள் பல் வேறு வகையாக வருணித்துள்ளன. அவற்றால் அவற்றின் தோற்றம் ஒருவாறு நமக்குப் புலப்படுகிறது. பொதுவாகப் பேய்கள் கண் ணுக்கு இனிய காட்சியை உடையனவல்ல, தூய்மையும் நன் மணமும் வாய்க்கப் பெற்றனவல்ல இவை. குழந்தை பெற்றதனால் மேனி அழகு குன்றியிருந்த ஒரு தலைவி தன்னைப்

பேய்க்கு ஒப்பிட்டும் தலைவன் விரும்பிச் சென்று சேரும் பரத்தையர் அழகும் தூய்மையுமுடையர் என்றும் எடுத்துக்காட்டும் குறிப்பால் இது உய்த்துணரப்படும்.

> 'தூயர்; நறியர் - நின் பெண்டிர்:
> பேஎய் அனையம் யாம்; சேய் பயந்தனமே!
> (ஐங்.70:4-5)

என்பது பரத்தையரோடு பொழுதுபோக்கிவந்த தலைவனைக் குறித்துத் தலைவி உரைக்கும் உரை. பேயின் தலை தாழைமரத்தின் தோற்றம் போல் உள்ளது (*அக.130:4*). 'கவைத்தலைப் பேய்மகள்' (*பதிற்.13;15*) எனவரும் தொடர் பேய்களின் தலை இரண்டாகப் பிளவுபட்டுத் தோன்றும் என்பதைக் குறிப்பிடுகிறது. கவைத் தலைப் பேய்கள் ஒரு தனி இனமாக இருக்கும் போலும்.

இப் பேய்களின் கண்கள் முரசின் கண்கள் போன்றவை (*பட்.236*): கொடிய கண்கள் என்னும் பொருளில் 'கருங்கண் பேய்' (*பதிற்.22:37*) என்றும் கூறப்படுகிறது. 'கருங்கண் - கொடிய கண்' என்பது பழைய உரை. இதற்கு விளக்கம் எழுதிய டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள், 'செங்கண்ணையுடைய பேய் ஆதலின் கரியகண் என்னாது கொடிய கண்' என்றார் என்று பேயின் கண்கள் செந்நிறமானவை என்பதைத் தெரிவிக்கிறார். பேயின் பார்வை மிகவும் கடுமையாக இருக்கும். 'கடு நோக்கத்துப் பேய்' (*மதுரை. 161*). காதுகளில் வெள்ளாட்டு மறியைக் காதணியாகப் பூண்டிருக்கும் (*சிறுபாண்.197*), வலிய வாயினைக் கொண்டிருக்கும் (*நற். 73:2*); மேல்நோக்கி எரியும் நெருப்புக் கொழுந்து சாய்ந்தாற் போன்ற நாக்கு உண்டு (*சிறுபாண்.196*). இவற்றின் பற்கள் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டுத் தோன்றும் நீட்சியுடையவை (*புற.356:2*). யானைத் தந்தம் போன்று வாலிதாய் விளங்குவன இவை (*புற.371:21; சிறுபாண்.196*). பேயின் பற்களை ஒத்துள்ளன யானையின் கால் நகங்கள் (*குறுந். 180:1*). செம்முருக்கின் பூங்கொத்தில் காயத்துப் பழுத்து முற்றிய நெற்றுப் போன்ற அழகில்லாத விரல்களைக் கொண்டவை. பேயின் பாதங்கள் பிளவுபட்டுத் தோன்றுவனவாம். 'சுவை அடிப் பேய்' (*மதுரை. 161-162; சிறுபாண். 197*). இவ்வகையான உறுப்புகளைக் கொண்ட பேய்களின் தோற்றம் அழகுடையதல்ல; கண்டார்க்கு அச்சமும் வருத்தமும் தோன்றச் செய்யும் வடிவம் இப் பேய்களின் வடிவம்

(பதிற். 67:11; புற. 371:26). இங்கு விவரித்த தோற்றங்களை நமக்குக் காட்டும் சங்கப் பாடற்பகுதிகள் பின்வருமாறு;

'பேஎய்த் தலைய பிணர் அரைத் தாழை' (அக. 130:4)

'கவைத் தலைப் பேய்மகள் கழுது ஊர்ந்து இயங்க'
(பதிற். 13:15)

'எரி மறிந்தன்ன நாவின், இலங்கு எயிற்று,
கருமறிக் காதின், கவை அடிப் பேய்மகள்'
(சிறுபாண். 196-197)

பழூஉப் பல் அன்ன பருஉகிர்ப் பாஅடி
இருங் களிற்று இனநிரை. (குறுந். 180:1-2)

'பேய்க்கண் அன்ன பிளிறுகடி முரசம்' (பட்டின. 236)

'வேனில் முருக்கின் விளை துணர் அன்ன
மாணா விரல வல்வாய்ப் பேஎய்' (நற். 75:1-2)

'கவைஅடி, கரு நோக்கத்துப்
பேய் மகளிர்' (மதுரை 161-162)

இக் காட்சிகளை எல்லாம் ஒருசேரப் பிணைத்தாற்போல் அழகுபட நக்கீரர் தமது சொற்சித்திரத்தில் தீட்டிக் காட்டுகின்றார் முருகாற்றுப்படையில்.

'உலறிய கதுப்பின், பிறழ் பல் பேழ்வாய்,
சுழல்விழிப் பசுங்கண், சூர்த்த நோக்கின்,
கழல்கட் கூகையொடு கடும் பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின், பிணர்மோட்டு,
உருகெழு செலவின், அஞ்சுவரு பேய்மகள் (முருகு. 47-51)

என்பது முருகாற்றுப்படையில் காணும் பேய்மகளின் காட்சி.

பேய்கள் உருவத்தில் மிகவும் குள்ளமானவை. 'வேறு பல் உருவின் குறும்பல் கூளியர்' (முருகு. 282) என்பர். குட்டை வடிவமானது பற்றி வந்த பெயரே 'கூளி' என்பது. கலித்தொகை குறளும் கூனுமான காதலர் தமது சந்திப்பில் ஒருவரை ஒருவர் காமுற்றவராய்த் தங்கள் உருவத்தையும் எண்ணங்களையும் வெளியிட்டு, மாறிமாறிப் பேசிய உரையாடலில் இறுதியாகக் குறளனை நோக்கிக் கூனி,

'ஆங்கு ஆக' சாயல் இன் மார்ப! அடங்கினேன்; ஏஎ

பேயும் பேயும் துள்ளல் உறும் . எனக்
கோயிலுள் கண்டார் நகாமை வேண்டுவல்;
தண்டாத் தகடு உருவ! வேறாகக் காவின் கீழ்ப்
போதர்; அகடு ஆரப் புல்லி முயங்குவேம்' (கலி 94:37-41)

என்று அவனை விரும்பி மொழிகின்றாள். இக்குறளனையும் கூனியையும் காண்பார் பேயும் பேயும் துள்ளல் போலும் எனப் பிறர் நினைப்பர் என்பதனால் பேய்களின் குறுகிய வடிவம் நமது காட்சிக்கு இலக்காகிறது.

பேய் ஏறி நடத்தும் ஊர்தியாக அமைவதும் பேய்தான்; 'பேய்மகள் கழுது ஊர்ந்து இயங்க' (பதிற். 13:15) என்பதனால் பேய்ச்சாதியில் ஓர் இனமான கழுதுகள் பேய்களுக்கு ஊர்தியாகப் பணிசெய்கின்றன என்பது போதரும். இவை ஊர் எல்லாம் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் நடு இரவில் எங்கும் நடமாடித் திரியும். பேய்கள் இரவில் நடமாடுதலைப் புலவர் பலர் குறித்துள்ளனர்.

'கழுது வழங்கு அரை நாள்' (அக. 260:13, 311:4)

'கழுது வழங்கு யாமத்து அழிதகக் குழறும்' (அக. 122:14)

கழுது கால் கொள்ளும் பொழுது கொள் பானாள்' (நற். 171:9)

'கழுது கால்கிளர ஊர்மடிந் தன்றே' (நற். 255:1)

'அணங்கு கால் கிளரும், மயங்குஇருள் நடுநாள்' (நற். 319:6)

இப்பேய்கள் சுற்றித்திரியும் இடம் பிணங்களை எரித்தலும் புதைத்தலும் செய்யும் சுடுகாடுதான். சுடுகாட்டில் இவை கூட்டம் கூட்டமாகத் திரிந்து கொண்டிருக்கும்.

'பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும்
காடு முன்னினனே கட் காமுறுநன்'

(புற. 238:4-5)

என்பது புறப்பாட்டு. அழகிழந்து பாழ்பட்ட மன்றங்களிலும் பிற பாழிடங்களிலும் இவை திரிந்து கொண்டிருக்கும் (பதிற். 13:14-19; மதுரை. 156-163). ஆகவே, சுடுகாடும் பாழ்பட்ட இடங்களும் பேயின் வாழ்விடங்களாகின்றன என்பது தெரியவரும்.

அணங்கு, சூர் என்பன போலவே பேயும் மனிதரைப் பற்றிப் பிடிக்கும் இயல்புடையன ஆம். இதற்குச் சாந்தி செய்யும் பொருட்டு வழிப்போவார் செல்லும் வழியில் உள்ள கவர்த்த சந்திப்பு இடங்களில், அதாவது நால்திசையும் செல்லும் வழிகள் பிரியும்

இடத்தில் வழிபாடு இயற்றுவர். அப்பொழுது பலியாக ஆட்டின் கழுத்தை அறுத்துத் தினையையுடைய பலியை இட்டு, பல்வகை வாத்தியங்களை முழக்குவர். வடக்கிருந்து உயிர்விடத் துணிவாரும் கவர்த்த வழியகூடயில் உள்ள மரநிழலில் வடக்கிருத்தல் வழக்கம்.

'உள் ஆற்றுக் கவலைப் புள்ளி நீழல்,
முழூஉ வள்ளூரம் உணக்கும் மள்ள!' (புறம். 219:1-2)

என்பது கவர் வழியில் வடக்கிருத்தல் பற்றித் தெரிவிக்கிறது. கவர்த்த வழிகளில் பேய் பிடித்தாருக்காகச் சாந்தி வழிபாடு இயற்று தலைப் பின்வரும் குறுந்தொகைப் பாடல் அறிவிக்கின்றது. அது வருமாறு:

மறிக்குரல் அறுத்து, தினைப் பிரப்பு இரீஇ,
செல் ஆற்றுக் கவலைப் பல்இயம் கறங்க,
தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து ஆகா
வேற்றுப் பெருந்தெய்வம் பல உடன் வாழ்த்தி (குறுந். 263:1-4)

வளப்பம் மிக்க ஊர்களில் தமக்கு இடப்படும் பலியை உண்ணும் பொருட்டுத் தான் வாழும் பாழிடத்தை மோதிப் புடைத்துக் கொண்டு பேய்கள் எழுந்து வருமாம்.

'வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன
மாணா விரல வல்வாய்ப் பேஎய்
மல்லல் மூதூர் மலர்ப்பலி உணீஇய,
மன்றம் போழும் புன்கண் மாலை' (நற். 73:1-4)

என்னும் நற்றிணைப் பகுதியால் மாலைப் பொழுதில் மன்றங்களிலே பேய் பலி கொள்ளுதல் விளங்கும். நன்னன் என்பானது பாழியில் உறையும் அச்சம் தரும் பேய்களுக்குப் பலியாக மிஞிலி என்பான் ஊட்டினை ஏற்பித்த செய்தி,

'கறை அடி யானை நன்னன் பாழி,
ஊட்டு அரு மரபின் அஞ்சு வரு பேஎய்க்
கூட்டு எதிர்கொண்ட வாய்மொழி மிஞிலி' (அக.142:9-11)

எனவரும் அகப்பாட்டுப் பகுதியால் உணரலாம். குற்றமற்ற பெருங் கற்புடையாள் ஒருத்தி பேய்க்குப் பலியாகத் தன் குழந்தையைக் கொடுத்து விடுகிறாள். அவள் கொடுத்த குழந்தையாகிய பலியைப் பேய் பற்றியதும் தாய் அதனைக் கைவிட்டு விடுகிறாள். மேலும் பேய் தனக்குக் கொடுக்கும் பலிகளை முறைப்பட ஏற்றுக்கொண்டு அப்பால் நீங்கிச் சென்றுவிடுகிறது.

'மாசுஇல் கற்பின் மடவோள் குழவி
பேஎய் வாங்கக் கைவிட்டாங்கு,
சேணும் எம்மொடு வந்த
நாணும் விட்டேம்; அலர்க, இவ் ஊரே! (நற். 15:7-10)

'விருந்தின் வாழ்க்கையொடு பெருந்திரு அற்றென,
அருஞ்சமத்து அருநிலை தாங்கிய புகர் நுதற்
பெருங் களிற்று யானையொடு அருங்கலம் தராஅர்,
மெய்பனி கூரா, அணங்கு எனப் பராவலின்,
பலி கொண்டு பெயரும் பாசம் போல,
திறை கொண்டு பெயர்தி; வாழ்க நின் ஊழி!'
(பதிற். 71:19-24)

மன்னனுக்குப் பணிந்து திறை செலுத்திய பகைமன்னர் தரும் பொருளை ஏற்று அவர் உயிரைக் கொல்லாது விட்டு நீங்குதல் போல, பிசாசமும் தன்னால் பற்றப்பட்டாரது உயிரைக் கொள்ளாமல் தனக்கு இட்ட பலியை மட்டும் கொண்டு நீங்குகின்றது.

பெரும்போர் நடக்கும் போர்க்களத்துள் பேய்கள் புகுந்து அங்கே இறந்து விழும் வீரர்கள், யானை, குதிரை முதலிய விலங்குகள் ஆகியவற்றின் ஊனையும் கொழுப்பு முதலிய வற்றையும் தின்று, குடர் மாலைகளை அணிந்துகொண்டு அங்கே மகிழ்ச்சிக் கூத்தாடுதல் பற்றிக் கவிஞர்கள் பலரும் வருணித் துள்ளனர். பேய்மகள் பிணங்களின் ஊன்களைத் தோண்டி உண்ணும் விருப்பமுடையனவாயிருத்தலை,

அணங்கு அரு மரபின் பேஎய் போல
விளர் ஊன் தின்ற வேட்கை நீங்க (அக 265:14-15)

பேஎய் மகளிர் பிணம் தழூஉப் பற்றி,
விளர் ஊன் தின்ற வெம்புலால் மெய்யர் (புற. 359:4-5)

எனவரும் பாடற்பகுதிகளால் அறியலாம். இப் பேய்கள் நிணத்தைத் தின்று மகிழ்ந்து சிரித்துக் கும்மாளமிடுகின்றன. 'கவை அடிப் பேய் மகள் நிணன் உண்டு சிரித்த தோற்றம் போல' என்பதால் ஊனுண்ட பேய்களின் எக்களிப்பு வெளியாம். களிப்பு மிகுதியால் பேய்கள் ஒருபுறம் ஆடும் ஆட்டமும், களத்து வெட்டுண்டு வீழ்ந்தாருடைய கவந்தங்களின் துள்ளலும் போர்க்களத்தே மிகுகின்றன. பேய் மகளிரும் பிற பேய்களும் துணங்கைக் கூத்தாடுகின்றனர்.

பொருது ஆண்டு ஒழிந்த மைந்தர் புண் தொட்டு,
குருதிச் செங்கைக் கூந்தல் தீட்டி,
நிறம் கிளர் உருவின் பேஎய்ப் பெண்டிர்
எடுத்து எறி அனந்தற் பறைச்சீர் தூங்க,
பருந்து அருந்துற்ற தானை' (புற. 62:2-6)

'கணம் கொள் கூளியொடு கதுப்பு இகுத்து அடைச்சி,
பிணம் தின் யாக்கைப் பேய்மகள் துவன்றவும்'
(பட்டின. 259-260)

'இனத்தடி விராய வரிக்குடர் அடைச்சி,
அழுகுரற் பேய்மகள் அயர' (புற. 370:23-25)

'தலைதுமிந்து எஞ்சிய மெய் ஆடு பறந்தலை.
அந்தி மாலை விசும்பு கண்டன்ன
செஞ்சுடர் கொண்ட குருதி மன்றத்து,
பேஎய் ஆடும் வெல்போர்
வீயா யாணர் நின்வயினானே' (பதிற். 35:6-10)

'நிலம் இழி நிவப்பின் நீள்நிரை பலசுமந்து
உருகெழு கூளியர் உண்டு மகிழ்ந்து ஆட,
குருதிச் செம்புனல் ஒழுக
செருப் பல செய்குவை; வாழ்க நின் வளனே!'
(பதிற். 36:11-14)

'பிணக் கோட்ட களிற்றுக் குழும்பின்
நிணம் வாய்ப் பெய்த பேய் மகளிர்
இணை ஒலிஇமிழ் துணங்கைச் சீர்ப்
பிணை யூபம் எழுந்து ஆட' (மதுரை. 24-27)

'களிற்றுக் கோட்டன்ன வால் எயிறு அழுத்தி,
விழுக்கொடு விரைஇய வெண்நிணச் சுவையினள்,
குடர்த்தலை மாலை சூடி, உணத் தின
ஆனாப் பெருவளம் செய்தோன் வானத்து
வயங்கு பல் மீனினும் வாழியர் பல என
உரு கெழு பேய்மகள் அயர' (புற. 371:21-26)

'உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர் உகிர்க் கொடுவிரல்
கண் தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை

ஒண் தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்று அடு விறற் களம் பாடி, தோள் பெயரா,
நிணம் தின் வாயள் துணங்கை தூங்க' (முருகு. 51-56)

மேற்குறித்த பாடற்பகுதிகள் போர்க்களம், போர்க்களத்தில் பேய்களின் செயல்கள், அவை ஊன் உண்டு செருக்குதல், துணங்கைக் கூத்தாடுதல் என்னும் செய்திகள் பலபடப் புனைந்து கூறப் பட்டிருத்தல் படித்து இன்புறுதற்குரியன.

மன்னர்கள் ஒருவரோடு ஒருவர் பொருது, பேய்களுக்கு வயிறார ஊனுணவு அருத்துதலைக் 'களவேள்வி' எனப் புகழ்வர். களத்தில் பேய்கள் கூழ் சமைத்து எல்லாப் பேய்களும் கூடியிருந்து உண்டு மகிழ் சிறப்பினை இக் கள வேள்வி தெரிவிக்கும். யானைகள், மரக்கலம் கடலில் நீரைக் கிழித்து ஓடுமாறு, முன் சென்று போர்க்களத்துப் பரப்பை மேலும் விரிவுபடுத்துகின்றன. அங்கே இலை வடிவு பெற்ற வேலை ஏந்திச் சென்று போரைக் கலக்கிப் பகைவரைப் புறங்காண்கின்றனர். அங்கே சிதைந்து கிடக்கும் முரசத்தைப் பேய்கள் கூழ் சமைக்கும் கலமாகக் கொள்கின்றன. இறந்தவர்களின் முடித்தலையை அடுப்பாக அமைத்து, அதன் மேலே முரசாகிய கலத்தை வைத்து, குருதிப் புனலாகிய உலையின் கண் தசையும் மூளையும் முதலானவற்றைப் பெய்கின்றன. அவ் விறந்துபட்ட வீரர்களின் வீர வளையை உடைய தோளாகிய துடுப் பினால் துழாவிக் கூழ் சமைக்கின்றன பேய்கள். சோறாக்குவோ னாகிய பேய்மடையன் முறைமை அறிந்து அதனை இயற்று கின்றான்.

பிணக் கோட்ட களிற்றுக் குழும்பின்
நிணம் வாய்ப் பெய்த பேய் மகளிர்
இணை ஒலி இமிழ் துணங்கைச் சீர்ப்
பிணை யூபம் எழுந்து ஆட,
அஞ்சு வந்த போர்க்களத்தான்,
ஆண்தலை அணங்கு அடுப்பின்,
வய வேந்தர் ஒண் குருதி
சினத்தீயின் பெயர்பு பொங்க,
தெறல் அருங் கடுந் துப்பின்,
விறல் விளங்கிய விழுச் சூர்ப்பின்,
தொடித் தோட்கை துடுப்பு ஆக
ஆடுற்ற ஊன் சோறு,

நெறிஅறிந்த கடி வாலுவன்
அடி ஒதுங்கிப் பின் பெயராப்
படை யோர்க்கு முருகு அயர,
அமர் கடக்கும் வியன் தானை (மதுரை. 24-39)
களன் அகற்றிய வியல் ஆங்கண்
ஒளிறு இலைய எஃகு ஏந்தி,
அரைசு பட அமர் உழக்கி,
உரைசெல முரசு வெளவி,
முடித்தலை அடுப்பு ஆக,
புனற்குருதி உலைக் கொளீஇ,
தொடித்தோட் துடுப்பின் துழந்த வல்சியின்,
அடுகளம் வேட்ட அடு போர்ச் செழிய!' (புறம். 26:4-11)

மேலே குறித்தவை போர்க்களத்தில் பேய் முதலியவற்றிற்கு வெற்றி மன்னர் வைக்கும் விருந்காகும். இந்தப் பேய் விருந்தையே 'களவேள்வி' என்று பாராட்டுவர். இக்கள வேள்விச் சித்திரங்கள் பிற்காலத்தில் தோன்றிய பரணிப் பிரபந்தங்களுக்கு மூலக்கருவாக அமைந்து விளங்குதல் காணலாம்.

போர்க்களத்தில் பேய்களோடே கூடத் திரியும் மற்றொன்று பூதம். பூதம் போர்க்களத்தில் காவல் புரிந்து நிற்பது

பேய்மகள் பற்றிய பிணம் பிறங்கு பல்போர்பு,
கண நரியோடு க்ழுது களம் படுப்ப,
பூதம் காப்ப, பொலிகளம் தழீஇ,
பாடுநர்க்கு இருந்த பீடுடையாள! (புற. 369:15-18)

எனவரும் புறநானூற்றுப் பகுதியில், 'பூதம் காப்ப, பொலி களம் தழீஇ' என வருவது கவனிக்கத் தக்கது. பூதங்களும் பேய்களைப் போன்றே தம் சுற்றத்துடன் பிணைந்து போர்க் களத்தில் துணங்கைக் கூத்து ஆடுமாம். இவையும் குறள் வடிவின ஆயினும் பேயினும் பெரிய உடம்பு படைத்தவை. களத்தில் அடுக்கப்பெற்ற நெற்கதிரின் சூடுகளும், அச்சூட்டின்மேல் சிலந்தி வெண்ணூல் பரப்பி இழைத்திருக்கும் கூடுகளும் துணங்கைக் கூத்தாடும் பூதங்கள் வெண்மையான ஆடையை உடுத்தி நிற்கும் தோற்றம் போன்று உள்ளது என்று வருணிக்கின்றார் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

'கணம் கொள் சுற்றமொடு கைபுணர்ந்து ஆடும்

துணங்கை அம் பூதம் துகில் உடுத்தவை போல்,
சிலம்பி வாய்நூல் வலந்த மருங்கின்,
குழுமு நிலைப் போரின் முழுமுதல் தொலைச்சி'
(பெரும். 234-237)

என்பது பெரும்பாணாற்றுப்படை தரும் பூதங்களின் காட்சி.

கொடையாளியாக விளங்கிய கழுவுள் என்பானது காமூரில் பூதத்தால் தரப்பட்ட பொரிந்த அடிமரத்தோடு கூடிய வேங்கை மரத்தின் புதுமலர்போல மணம் வீசும் கூந்தலினை யுடையாள் தலைவி என்று பேசுகிறான் ஒரு தலைவன்.

'மாவண் கழுமுள் காமூர் ஆங்கண்,
பூதம் தந்த பொரி அரை வேங்கைத்
தண் மகழ் புதுமலர் நாறும்
அம்சில் ஓதி ஆய்மடத் தகையே' (அக. 365:12-15)

இங்கே பூதம் தந்த வேங்கை என்பது பூதம் குடிகொண்டுள்ள வேங்கை மரமாதல் வேண்டும்.

இப்பூதங்கள் காளி கோயிலின் வாயிலில் நின்று காவல் புரிதலும் தெரியவருகிறது. காளியின் படைகளில் பேய்ப் படையைப் போல இப் பூதப்படைகளும் அவளுக்குத் தொண்டு புரிந்து வருவன.

'பூதம் காக்கும் புகல்அருங் கடிநகர்' (பட். 57)

என்று காளிகோட்டம் குறிக்கப்படுதல் காணலாம். இதற்குப் 'பூதங்கள் வாசலிலே காத்திருக்கும் புகற்கு அரிய அச்சத்தையுடைய காளிகோட்டத்தில்' என நச்சினார்க்கினியர் தரும் உரையையும் கவனிக்கத்தகும்.

நடுகல்

போர்க்களத்தில் பேயும் பூதமும் குழுமி, கூழ் சமைத்து உண்டு, சுற்றத்துடன் கூடித் துணங்கை ஆடும் காட்சியைக் கண்ட நாம், வீரத்துடன் போரிட்டு மாய்ந்த வீர மறவரை மக்கள் போற்றிய வகையையும் காண்போம். பேரமரிலே அஞ்சாது பகைவர் எதிர் நின்று தம் வில்லாற்றல் காட்டி விழுப்புண் பட்டு மாய்ந்த வீரர் களின் பெயரையும் வீரச் செயலையும் பெருமையையும் கல்லில் எழுதி நாட்டி, அதற்கு வழிபாடும் செய்துவந்துள்ளனர். நடுகல்

நாட்டற்குரிய தகுதி படைத்த வீரர்களின் தகைமையைச் சங்கப் பாடல்கள் நன்கு விவரித்துள்ளன. அவை வருமாறு:

'வீள்ள அம்பின் விழுத்தொடை மறவர்
நாள் ஆ உய்த்த நாம வெஞ்சுரத்து
நடை மெலிந்து ஒழிந்த சேண் படர் கன்றின்
கடை மணி உகுநீர் துடைத்த ஆடவர்' (அக.131:6-9)

'விடுவாய்ச் செங்கணைக் கொடுவில் ஆடவர்' (அக.179:7)

' ஏறுண்ட இனநிரை பெயரப் பெயராது,
செறி சுரை வெள்வேல் மழவர்த் தாங்கிய
தறுகணாளர். .... (அக. 269:3-5)

'நல் அமர்க் கடந்த நாணுடை மறவர்' (அக. 67:7)

'வில் ஈண்டு அருஞ்சமம் ததைய நூறி,
நல் இசை நிறுத்த நாணுடை மறவர்' (அக. 387:13-14)

'வில் ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்' (அக. 35:6)

'விழுத் தொடை மறவர் வில்இட வீழ்ந்தோர்' (அக. 53:10)

'விழுத் தொடை மறவர் வில்இடத் தொலைந்தோர்'
(ஐங். 352:1)

'ஒன்னாத் தெவ்வர் உலைவு இடத்து ஆர்த்தென,
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்' (மலைபடு. 386-387)

'பல் ஆத் திரள் நிரை பெயர்தரப் பெயர்தந்த,
கல்லா இளையர் நீங்க நீங்கான்,
வில் உமிழ் கடுங்கணை மூழ்க,
கொல் புனல் சிறையின் விலங்கியோன்' (புற. 263:5-8)

'மனைக்கு விளக்கு ஆகிய வாணுதல் கணவன்
முனைக்கு வரம்பு ஆகிய வெல் வேல் நெடுந்தகை'
(புற. 314:1-2)

இங்ஙனமாக மறவர் முதலாகப் போரின் பல்வேறு நிலைகளிலும் அஞ்சாது பகைவர் எதிர்நின்று பொருது வீரப்பெருஞ் செயல் காட்டி மாய்ந்த வெற்றி மறவரின் பெயரையும் அவர்தம் தொண்டினையும் சிறப்புக்களையும் கல்லில் பொறித்து நாட்டி, அக்கல்லிற்கு வழிபாடும் செய்து வந்துள்ளனர்.

'பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்
வேல் ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்'
(அக.67:9-11; 131:10-12)

விடுவாய்ச் செங்கணைக் கொடுவில் ஆடவர்
நல்நிலை பொறித்த கல்நிலை அதர' (அக.179:7-8)

'எழுத்துடை நடுகல்' (ஐங். 352:2; அக.53:11)

'கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென,
மருங்கில் நுணுகிய பேஎம் முதிர் நடுகல்
பெயர் பயம் படரத் தோன்று குயில் எழுத்து
இயைபுடன் நோக்கல் செல்லாது, அசைவுடன்
ஆறு செல் வம்பலர் விட்டனர் கழியும். (அக.297:6-10)

நடுகல் மயங்கு இருளில் ஆள் போலவே காட்சி தருகிறதாம். ஆகவே, நடுகற்கள் பெரும்பாலும் ஓர் ஆள் உயரத்திற்கு நாட்டப் படும் எனக் கொள்ள இடமுண்டு. அதில் மறவனின் பெயரும் அவனுடைய பெருஞ்செயல்களும் குறிக்கப்பட்டிருக்கும். அவனுடைய உருவமுங்கூட அக்கல்லில் வடிக்கப் பெற்றிருக்கலாம் என்றும் ஊகிக்கும் வகையில் ஒருசில பகுதிகள் உள. காட்டு யானை ஒன்று மாலை இருளில் நடுகல் ஒன்றனை ஆள் எனக் கருதித் தன் காலால் உதைக்கின்றது. அப்பொழுது அதன் கால் நகங்கள் பெரிய பனை நுங்கின் தோடு போல ஒடிந்து விடுகின்றன. இவ்வகையான யானையின் செயலை,

'அகல்வாய் வானம் மால் இருள் பரப்ப,
பகல் ஆற்றுப்படுத்த பையென் தோற்றமொடு
சினவல் போகிய புன்கண் மாலை,
அத்த நடுகல் ஆள் என உதைத்த
கான யானைக் கதுவாய் வள் உகிர்,
இரும் பனை இதக்கையின், ஒடியும் ஆங்கண்' (அக.365:1-6)

எனவரும் அகநானூற்றுப் பாடற்பகுதியில் காண்கிறோம்.

வீரர்களுக்குரிய கற்கள் மக்கள் நடமாடும் வழிகளில் நாட்டப்பெற்றிருந்தமையும் 'அதர்தொறும்; 'அதர' எனக் குறித்தவற்றாலும், அவற்றை வழிச் செல்வார் நோக்குதல் 'ஆறு செல் வம்பலர் விட்டனர் கழியும்' என்பதனாலும் புலப்படும்.

வீரர்க்கு நட்ட நடுகற்களையும் மக்கள் தெய்வமாகவே கருதிப் போற்றினர்.

'செல்லும் தேஎத்து, பெயர் மருங்கு அறிமார்,
கல் எறிந்து, எழுதிய நல் அரை மராஅத்த
கடவுள் ஓங்கிய காடு ஏசு கவலை' (மலைபடு.394-396)

என்பது மலைபடுகடாம். இவ் அடிகளுக்கு, ''கல்லை இடந்து கொண்டு அதனிடத்தே இவ்வாறே பொருதுபட்ட இன்னானென்று அவன் பெயரை உலகம் அறிவதற்கு எழுதிய கடவுள்'' என்றும், ''நல்ல அரையினையுடைய மராஅத்திடத்தனவாகிய கடவுள் என்றது மராமரத்தின் நிழலிலே நட்ட கல் என்றவாறு'' என்றும், ''அக்கடவுளின் தெய்வத்தன்மை மிக்க தன் கொடுமையால் பிற காடுகளை இகழும் பல வழிகளில்'' என்றும் நச்சினார்க்கினியர் தரும் பொருளும் நடுகல் கடவுளாதலை நன்கு விளக்கும்.

'அரிது உண் கூவல், அம்குடிச் சீறூர்
ஒலி மென் கூந்தல் ஒள்நுதல் அரிவை
நடுகல் கை தொழுது பரவும்' (புறம்.306:2-4)

'சிலை ஏறட்ட கணை வீழ் வம்பலர்
உயர் பதுக்கு இவர்ந்த ததர் கொடி அதிரல்
நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும்
சுரனிடை விலங்கிய மரன் ஓங்கு இயவின்' (அகம்.289:1-4)

என வரும் பகுதிகளால் நடுகல்லை மக்கள் பரவித் தொழுதலும் அதற்கு நாட்பலியிட்டுப் போற்றுதலும் நன்கு புலனாகும்.

வழிச் செல்லும் இரவலன் ஒருவனுக்கு, அவ்வழியிடைக் காணும் நடுகல்லைத் தொழுது செல்லவேண்டும் என்றும், அவ் வாறு அவன் தொழுது போவானாயின் அவன் செல்லும் கொடுங் கானம் மழை பெய்தலால் குளிர்ந்து, அங்கே உண்டாம் மலர்த்தேன் உண்ண வண்டுகளும் மிகுதியாகச் சேரும் என்றும் அறிவுறுத் தப்படுகின்றான்.

'பெருங் களிற்று அடியின் தோன்றும் ஒரு கண்
இரும் பறை இரவல; சேறி ஆயின்,
தொழாதனை கழிதல் ஓம்புமதி; வழாது
வண்டு மேம்படூஉம், இவ் வறநிலை ஆறே' (புறம். 263:1-4)

எனவே, நடுகல்லில் உறையும் வீரத் தெய்வத்தைத் தொழுதால் மழை பொழிந்து நாட்டிற்கு நன்மை உண்டாகின்றமை காணலாம்

நிரை கவர்ந்து செல்லும் வெட்சியாரை வீழ்த்து வெற்றி கொண்டு மாய்ந்த மறவர்களைப் புதைத்து, அம் மேட்டின் மேலே இட்டு மூடி வைத்த கற்களிலும் நடுகல்லைப் போன்றே கடவுள் உறைவதாகப் போற்றுகின்றமையும் தெரியவரும்.

'முனை ஆத் தந்து, முரம்பின் வீழ்த்த
வில் ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்' (அக.35:5-7)

எனவரும் அகப்பாடற்பகுதி 'பதுக்கைக் கடவுளைச்' சுட்டுதல் காணலாம். இப்பாடல் அடிகளுக்கு,

'முனையிடத்து ஆவை மீட்டு, முரம்பின் கண்ணே வெட்சி
யாரை வீழ்த்த மறவரது பதுக்கை எனக் கூட்டுக;
வலியஆண்மையால் இட்ட பதுக்கை; பதுக்கைக் கடவுள்
என்றான், பதுக்கைக் கல்லிற் கடவுள் உறைதலான்''

என்று எழுதியுள்ள பழைய உரைகாரர் தரும் குறிப்பும் ஊன்றி நோக்குதற்குரியது.

போரில் வீரமரணம் எய்திய அதிகமான் நெடுமான் அஞ்சியைக் குறித்து ஔவையார் பாடிய கையறுநிலைப்பாடலில், அவனுக்காகக் கல்நட்டு வழிபடப்போகும் செய்தி குறிப்பிடுகின்றார்.

'இல்லாகியரோ, காலை மாலை;
அல்லாகியர் யான் வாழும் நாளே;
நடுகல் பீலி சூட்டி, நார் அரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ -
கோடு உயர் பிறங்குமலை கெழீஇய
நாடு உடன் கொடுப்பவும் கொள்ளாதோனே?'

(புறம். 232)

என்பது ஔவை வாக்கு. இங்ஙனமன்றி வடக்கிருந்து உயிர்நீத்த கோப்பெருஞ்சோழனுக்கும் கல் நட்டமையைப் புறநானூற்றில் காணலாம். (புறம். 221, 222, 223). இவனைக் குறித்து இரங்கிப் பாடும் பொத்தியார்,

'நனந்தலை உலகம் அரந்தை தூங்க,
கெடு இல் நல் இசை சூடி,
நடுகல் ஆயினன் புரவலன்' (புற. 221:11-13)

என்கிறார். இங்கே போர்க்களத்தில் இறவாது வடக்கிருந்து உயிர்நீத்த மன்னனுடைய நடுகல்லைக் காண்கிறோம். இஃது இறந்தார் பொருட்டு இக்காலத்தும் நிகழ்ந்தும் 'கல்லெடுப்பு' போன்றதொரு சடங்காகுமா என்பது ஆழ்ந்து நோக்குதற்குரியது.

இனி, நடுகல்லுக்கு மக்கள் ஆற்றிய வழிபாட்டினை நோக்குவோம். நடுகல்லுக்கு நன்னீர் கொண்டு நீராட்டுகின்றனர் (புற. 329:3; அக. 269:8); மஞ்சளை அதன் மேல் பூசுகின்றனர் (அக. 269:9); அதிரல்பூ (அக. 229:2-3), கரந்தைப்பூ (புற. 261:13-14), வேங்கைப்பூ (புற. 265:3-4), செந்நிறப் பூக்கள் (புற. 264:2) ஆகியவற்றால் தொடுத்த கண்ணி, மாலை ஆகியவற்றைச் சாத்துகின்றனர். (கண்ணி. அக. 343:6; புற. 264:2; மாலை. புற. 265:3-4). கல்லின் மேலாகத் துணியாலாகிய பந்தரும் இடுகின்றனர் (புற. 260:28). மயிற் பீலியும் சூட்டுகின்றனர் (அக. 35:8; 67:10; 131:11; புற. 232:3, 260:26; 264:3). வேலாயுதத்தை நடுகல்லின் பக்கலில் ஊன்றி, அதனோடு பரிசையையும் உடன் வைக்கின்றனர் (அக. 67:11; 131:12; பட்டினா. 79-80). நறுமணமுள்ள தூபம் புகைக்கப் படுகின்றது (புற. 329:4); துடியையும் முழக்குகின்றனர் (அக. 35:8). தோப்பிக்கள்ளும், இல்லில் அடும் பிற கள் வகைகளும், நாரால் அரித்தெடுக்கப்படும் மதுவகையும் ஆன பலதிறப்பட்ட கள் வகைகள் படைக்கப்படுகின்றன (அக. 35:9; 131:2; புற. 232:4; 329:1-2) வெள்ளாட்டைப் பலியாகக் கொடுக்கின்றனர் (அக. 35:9). இங்ஙனமாக நடுகல்லை வழிபடும் வழக்கம் பலபடப் பேசப் பட்டிருக்கின்றன. நடுகற் செய்திகள் சங்க இலக்கியங்களில் அகநானூற்றிலும் புறநானூற்றிலும்தான் மிகுதியாகப் பேசப் பட்டிருத்தலும் கூர்ந்து நோக்குதற்குரியதாம்.

இங்கே குறித்த நடுகல் வழிபாட்டு முறைகளை நமக்கு உணர்த்தும் பாடற்பகுதிகள் பின்வருமாறு:

இல் அடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லின் நாட்பலி ஊட்டி,
நல்நீராட்டி, நெய்ந்நறைக் கொளீஇய,
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்

அருமுனை இருக்கைத்து..... (புற. 329.1-5)

'உயர் இசை வெறுப்பத் தோன்றிய பெயரே,
மடஞ்சால் மஞ்ஞை அணிமயிர் சூட்டி,
இடம் பிறர் கொள்ளாச் சிறுவழி
படம் செய் பந்தர்க் கல்மிசை யவ்வே' (புற. 260:25-28)

'நாகுமுலை அன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபின் சூட்ட,
நிரை இவண் தந்து நடுகல் ஆகிய
வெள்வேல் விடலை..... '(புற 261:13-16)

'பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி,
மரல் வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு,
அணிமயிற் பீலி சூட்டி, பெயர் பொறித்து,
இனி நட்டனரே கல்லும்' (புற. 264:1-4)

'ஊர் நனி சிறந்த பார்முதிர் பறந்தலை,
ஓங்கு நிலை வேங்கை ஒள் இணர் நறுவீப்
போந்தை அம் தோட்டின் பிணைந்தனர் தொடுத்து,
பல் ஆன் கோவலர் படலை சூட்ட
கல் ஆயினையே கடுமான் தோன்றல்' (புற. 265:1-5)

'வல் ஆண் பதுக்கைக் கடவுள் பேண்மார்
நடுகல் பீலி சூட்டி, துடிப்படுத்து,
தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்' (புற. 35 7-9)

'பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேல் ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்'
(அக. 67.10-11, 131.11-12)

'கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி,
நடுகல்லின் அரண்போல' (பட்டின 79-80)

'நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகல் இடம் குயின்ற பல்பெயர் மண்ணி,
நறு விரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய
அம்பு கொண்டு அறுத்த ஆர் நார் உரிவையின்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி

'வரிவண்டு ஆர்ப்பச் சூட்டி, கழற்கால்
இளையர் பதிப் பெயரும் அருஞ்சுரம்' (அக. 269:7-13)

'சிலை ஏறட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக்கு இவர்ந்த ததர்கொடி அதிரல்
நெடுநிலை நடுகல் நாட்பலிக் கட்டும்' (அக 289:1-3)

'நடுகல் பீலி சூட்டி, நார் அரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ' (புற. 232:3-4)

மலைகளிலும் குன்றுகளிலும் இருந்து கற்களைப் பிளந்து எடுத்துவந்து, உருச்சமைத்து, மறவனின் பெயரையும் பெருமையையும் பொறித்து, பூவும் புகையும் பிற பலிகளும் கொடுத்துத் துடியை முழக்கி, நடுகல்லில் அமைந்த வீரதெய்வத்தை வழிபட்டமையை இதுவரையிலும் விரிவாகப் பார்த்தோம். இங்ஙனமன்றி நிலையான பாறைகளின் மேலேயே வீரரின் உருவைச் சமைத்து, அவருடைய பெயர் புகழ்களையும் பொறித்தலும் உண்டு என்பதை 269-ஆம் அகப்பாட்டில் காணலாகும். நட்டுவைத்தாற் போல் தோன்றும் இயற்கையாக அமைந்த நீண்ட கல்லின்மீது செதுக்கி அமைத்த வீரப்புகழை இப்பாட்டு குறிப்பிடுகிறது. பாடற்பகுதி வருமாறு:

'ஏறுடை இனநிரை பெயர, பெயராது,
செறி சுரை வெள்வேல் மழவாத் தாங்கிய
தறுகணாளர் நல்இசை நிறுமார்,
பிடி மடிந்தன்ன குறும்பொறை மருங்கின்,
நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகல் இடம் குயின்ற பல் பெயர் மண்ணி,
நறுவிரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய
அம்புகொண்டு அறுத்த ஆறநார் உரிவையின்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி
வரி வண்டு ஆர்ப்பச் சூட்டி, கழற்கால்
இளையர் பதிப் பெயரும் அருஞ்சுரம்' (அக 269:3-13)

இப்பாடலில், ''நடாஅ நெடுங்கல் அகலிடம் குயின்ற என்றதனால், பல்லவர் காலத்திற் போல இயல்பாய பாறையைக் குடைந்து படிவம் இயற்றும் வழக்கு அஞ்ஞான்றும் இருந்தது என்பது புலனாகின்றது'' என்று நாவலர் ந.மு. வேங்கடசாமி

நாட்டாரும் கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளையும் சேர்ந்து உரை வகுத்த அகநானூற்றுப் புத்துரையில் எழுதியிருப் பதும் ஆராயத் தக்கதோர் அரிய செய்தியாகும்.

சதுக்கம், சந்தி, மன்று, பொதியில் கந்து'

முருகாற்றுப்படையுள் முருகன் உறைந்து காட்சி தரும் இடங்களைக் கூறுமிடத்து நக்கீரர்,

'சதுக்கமும் சநதியும், புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும், கந்துடை நிலையினும்'
(முருகு. 225-226)

என்று கூறியுள்ளார். இவையெல்லாம் மக்கள் சேர்ந்து வாழும் ஊரகத்தே உள்ளனவாகும். இவற்றுள் சதுக்கம என்பது நான்கு தெருக்கள் கூடும் நாற்சந்தி. சந்தி என்பது முச்சந்தி, ஐஞ்சந்திகளைக் குறிக்கும். ஊர்க்கு நடுவாய் எல்லாரும் வந்து கூடியிருக்கும் மரத்தடியே மன்று. பொதியில் என்பது அம்பலம் என வழங்கும் பொது இடம். பொதியிலில் மரம் இருப்பது உண்டாயினும் மன்றத்தில் கட்டடம் எதுவும் இன்றித் திறந்தவெளியாக இருக்கும். பொதியிலில் அமைத்து வழிபடப்பெறும் மூர்த்தமே கந்து என்பது.

புற்றுடைச் சுவர புதல் இவர் பொதியில்
கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து (அக. 307:11-12)

என்பதால் பொதியில் சுவர் எழுப்பி அமைக்கப்பட்ட பொது இடம் என்பதும், அப்பொதியில் பாழ்பட்டு அங்கு வந்து வழி படுவார் அற்றுப் போகவே அப்பொதியில் கந்துடை நிலையில் நின்ற தெய்வமும் அதைத் துறந்து சென்றுவிடுகிறது என்பதும் தெரிய வருகின்றன.

மன்றம் அந்தந்த ஊர்களில் எல்லாரும் கூடும் நிலையில் வளர்ந்திருந்த மரங்களில் ஏதோ ஒன்றின் அடியாதல் பெறப்படும்.

'மன்ற மராஅத்த பேஎம் முதிர் கடவுள்' (குறு. 87:1)

'இரத்தி நீடிய அகன்தலை மன்றம்' (புற. 34:12)

'மறுகுடன் கமழும் மதுகை மன்றத்து,
அலந்தலை இரத்தி அலங்கு படு நீழல்,
தயங்தலைச் சிறாஅர் கணை விளையாடும்
அருமிளை இருக்கை யதுவே' (புற. 325:10-13)

எனவரும் பாடற்பகுதிகள் மன்றத்துறை தெய்வநிலையைக் குறிப்பன. நெய்தல் நிலத்தில் பனைமரத்தடியே மன்றமாக' அமைகிறது.

'ஒலிஅவிந்து அடங்கி யாமம் நள்ளென,
கலிகெழு பாக்கம் துயில் மடிந்தன்றே;
தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை
மன்றப் பெண்ணை வாங்கு மடற் குடம்பை
துணை புணர் அன்றில்.......' (நற். 303:1-5)

இங்கே பனைமரம் நிற்கும் மன்றத்தைக் காண்கிறோம். ''தம் குலதெய்வத்தையும் ஊர்ப்பொதுத் தெய்வத்தையும் பனையிலேற்றுவித்து வணங்கி வருவது தொன்றுதொட்டு வரும் நெய்தல் நிலத்து வழக்கு'' என்று இப்பாடலின் உரையில் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

மேலும், நெய்தல் நில மக்கள் சுறா மீன் கொம்பை நட்டு, அதனிடத்து ஏற்றிய தெய்வத்தை வழிபட்டு, வெண்டாளி மாலையும் தாழை மலரும் புனைந்து, பனங்கள்ளைக் குடித்து விளையாடுவதும் உண்டு. இவ்வழக்கத்தை,

'குறுங் கூரைக் குடி நாப்பண்;
நிலவு அடைந்த இருள் போல,
வலை உணங்கும் மணல் முன்றில்,
வீழ்த் தாழைத் தாட் தாழ்ந்த
வெண் கூதாளத்துத் தண்பூங் கோதையர்,
சினைச் சுறவின் கோடு நட்டு,
மனைச் சேர்த்திய வல் அணங்கினான்,
மடற் தாழை மலர் மலைந்தும்;
பிணர்ப் பெண்ணைப் பிழிமகிழ்ந்தும்;
புன்தலை இரும்பரதவர்
பைந்தழை மா மகளிரொடு,
பாய் இரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது,
உவவு மடிந்து உண்டு ஆடியும்' (பட்டின. 81-93)

எனவரும் பட்டினப்பாலை அடிகளில் காணலாகும்.

பொதியில் எனப்படும் ஊரம்பலத்தில சித்திர வேலைப் பாடுகள் செய்யப்பெற்றிருந்தன. 'எழுது எழில் அம்பலம்' (பரி. 18:28) என்பது பரிபாடல். பொதியிலிலே தெய்வம் உறை கந்தில்

வழிபாடு இயற்றியது போலவே, அங்குள்ள சுவரில் கடவுளின் உருவத்தை எழுதியும் வழிபடுவர் என்றும் தெரியவருகிறது. பாழ்பட்ட மன்றத்திலிருந்து 'எழுது அணி கடவுள் போகலின் ' அங்குப் பலி கொடுப்பார் இன்றிப் பலிபீடம் அழகிழந்து கிடந்ததை 167-ஆம் அகப்பாட்டு தெரிவிக்கிறது. இங்கே எழுதணி கடவுள் பொதியிலை விட்டுச் செல்வதற்குக் காரணம் அது பாழ்பட்டு மனிதர் அங்கு வாராது ஒழிந்ததுதான்

மேலும் இந்தப்பாட்டு பொதியில் கட்டட அமைப்பையும் ஒருவாறு வெளிப்படுத்துகிறது. வழிப்பறித்துண்ணும் கொடியோரது துன்பத்திற்கு ஆற்றாது ஓர் ஊரிலுள்ளார் குடிபெயர்ந்து சென்றுவிடுகின்றனர். அதனால் மன்றம் பீர்க்கு முதலியன படர்ந்து புதல் சேர்ந்து பாழ்பட்டுக் கிடக்கிறது. அதன் பக்கத்தில் உள்ள முருங்கையைத் தின்னவந்த காட்டு யானை பிடரியினால் பொதியிலின் சுவரில் தேய்க்கின்றது. ஏற்கெனவே பாழ்பட்டுப் பலமிழந்திருந்த செங்கல்லால் கட்டப்பெற்ற சுவரின் மேலுள்ள விட்டத்தைச் சேர்ந்திருக்கும் மாடங்களில் வாழ்ந்த கரும்புறாக்கள் தங்கும் இடம் இல்லாமையால் அதைத் துறந்துவிட்டு வேறு காப்பிடம் நாடிச் சென்றுவிடுகின்றன. அப்பொதியிலின் சுவரில் எழுதப்பெற்றிருந்த அழகிய கடவுளும் பலியிட்டு வணங்குவார் இல்லாமற்போகவே புறப்பட்டுச் சென்றுவிடுகிறது. பலிபீடத்தைக் கொண்ட பொதியிலின் திண்ணையிடம் மெழுகாமையால் அழகிழந்து காணப்படுகிறது. குட்டி போட்ட நாய், தன் குட்டிகள் துள்ள அங்கே தங்கியிருக்கிறது. அப்பொதியில் மேல் அமைந்திருந்த கைமரங்களையும் கறையான் மூடி உண்டுவிடுகிறது; இதனால் கூரையும் விழுந்து கிடக்கிறது. இதனால் மக்கள் உவந்து வாழ்ந்த காலத்து அப்பொதியில் எவ்வகையான பொலிவுடன் இருந்திருக்கும் என்பதை நாம் ஊகித்து அறியலாம். இங்குக் குறித்த பாழ்பட்ட பொதியில் காட்சியைத் தெரிவிக்கும் பாடற்பகுதியைப் பார்ப்போம்.

- சாத்து எறிந்து
அதர் கூட்டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடு வில் ஆடவர் படுபகை வெரீஇ,
ஊர் எழுந்து உலறிய பீர்எழு முதுபாழ்,
முருங்கை மேய்ந்த பெருங்கை யானை
வெரிந் ஓங்கு சிறுபுறம் உரிஞ, ஒல்கி

இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென,
மணிப் புறாத் துறந்த மரம் சேர் மாடத்து
எழுது அணி கடவுள் போகலின், புல்லென்று
ஒழுகு பலி மறந்த மெழுகாப் புன்திணைப்
பால் நாய் துள்ளிய பறைக்கட் சிற்றில்,
குயில் காழ் சிதைய மண்டி, அயில் வாய்க்
கூர்முகச் சிதலை வேய்ந்த
போர் மடி நல் இறைப பொதியிலானே' (அக. 167:7-20).

இங்ஙனமே பாழ்பட்ட ஒரு பொதியிலில் உள்ள கந்தினைப் பற்றியும் மற்றோர் அகநானூற்றுப் பாடல் விவரிக்கிறது. பாழ்பட்ட பொதியிலில் நாட்டப்பெற்றிருந்த கந்தின் மேல் ஆண்மான் தன் உடம்பை உராய்ந்து - கொள்கிறது. இதனால் அந்தக் கந்து அசையும் நிலையை அடைந்துவிடுகிறது. சுரைக்கொடி படர்ந்த அம்பலத்தையுடைய அந்தச் சீறூர் முன்பு அழகிய குடியிருப்புக்களைக் கொண்டதாயிருந்ததாம். இப்பொழுது ஊரார் இடம் பெயர்ந்து விட்டனர். அங்கே நாட்பலி முதலியன செய்து வழிபடுவார் இல்லை. அதனர்ல் அங்குள்ள செங்கல்லால் ஆன பலிபீடம் வெளிறிய காட்சி தருகிறது. அதன் பக்கத்துள்ள ஆலமரத்தின் விழுதுகளின் மேல் கோடைக்காற்று கனவேகத்துடன் மோத, அப்பொதியிலின் இறப்பில் துணையுடன் வாழ்ந்த புறாக்களின் மேல் அடித்து, அவற்றை ஓட்டுகின்றனவாம்.

- தூங்கு நிலை,
மரைஏறு சொறிந்த மாத் தாட் கந்தின்
சுரை இவர் பொதியில் அம்குடிச் சீறூர்
நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகை
புரிசை மூழ்கிய பொரி அரை ஆலத்து
ஒரு தனி நெடுவீழ் உதைத்த கோடை
துணைப்புறா இரிக்கும் தூய்மழை நனந்தலை' (அக. 287:3-9)

இங்கே பொதியிலில் உள்ள கந்து அசையும் நிலைபடக் கலைமான் சொறிந்தது என்பதனால், கந்து என்பது அப்பொதியிலில் வழிபடுதற்கு நாட்டப்பெற்றிருந்த ஒரு தறியேயாதல் விளங்கும். அதன் அடி வழிபடுதற்குரிய பொருள்கள் முதலியன பட்டதன் ஏதுவாகக் கருநிறம் வாய்ந்திருத்தல் வேண்டும் என்பது . மாத்தாள். என்னும் அடைமொழி கொண்டு ஊகிக்கலாம்.

பொதியிலில் ஊருக்குப் புதிதாய் வருவோர் தங்குதலும் அங்கு மகளிர் முதலியோர் வந்து வழிபாடு செய்தலும் கண்டு இதனை,

கொண்டி மகளிர், உண்துறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்,
மலர் அணி மெழுக்கம், ஏறிப் பலர் தொழ,
வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்.
(பட்டின. 246-249

எனவரும் பட்டினப்பாலையடிகள் புலப்படுத்தும். பகைவர் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட கொண்டி மகளிர் மக்கள் நீருண்ணும் நீர்த்துறையில் சென்று முழுகி, பின் சென்று பொதியில் திண்ணையை மெழுகுகின்றனர். அந்தி வேளையில் அணையாத விளக்கையும் அங்கு ஏற்றிவைக்கின்றனர். கந்திற்கு மலர் அணியப்பட்டிருக்கிறது. புதியவர்கள் தொழுதற்பொருட்டு அந்த அம்பலத்திலே ஏறித் தங்குகின்றனர். அரசன் பகைவரை வென்று தனது ஆற்றலால் பற்றிக் கொணர்ந்த மகளிரைத் தெய்வத்திற்குப் பணிவிடை செய்ய நியமித்தான் என்பதும் நமக்கு இதனால் விளங்குகிறது. மேலே குறித்த பட்டினப்பாலை அடிகளில் வரும் கந்து என்பதற்குத் 'தெய்வம் உறையும் தறி' என நச்சினார்க்கினியர் விளக்கம் தருகிறார். இதனால் மரத்திலிருந்து தறித்து எடுக்கப்பட்ட தூண் போன்ற பொருளே பொதியில் தெய்வம் உறையும் கந்தாக நடப்பட்டது என்று கொள்ளலாம்.

இல்லுறை கடவுள்

ஊர்களில் உலாவும் அணங்குகள் இல்லுறை தெய்வங்களாம். 'அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்' (மதுரை. 164) என்பதற்கு 'இல்லுறை தெய்வங்கள் உலாவும் அகன்ற ஊரிடத்து' என்று பொருள் விரிப்பர் நச்சினார்க்கினியர்.

'கொழுங்குடிச் செல்வரும் பிறரும் மேவிய,
மணம் புணர்ந்து ஓங்கிய, அணங்குடை நல்இல்'
(மதுரை. 577-578)

எனவரும் மதுரைக்காஞ்சியடிகள் வளம்மிக்க குடிப்பிறந்த செல்வரும் அவர் வழிச் சார்ந்த பிற செல்வர்களும் வாழும் இல்லங்கள் தெய்வங்களை உடையனவாயிருக்கின்றன என்பதைக்

குறிப்பிடுகின்றது. இல்லத்தின் வாயில் நிலைகளிலும் தெய்வம் நிலைபெற்றிருப்பதாகக் கொண்டாடினர்.

'தொல்வலி நிலைஇய. அணங்குடை நெடுநிலை,
நெய்படக் கரிந்த திண்பொரிக் கதவின் -' (மதுரை. 353-354)

என்பதனால் பழைமையான வலிமை நிலைபெற்றதும், தெய்வத்தையுடைத்தாகிய நீண்ட நிலையினை உடையதும் பல காலம் நெய் இடுதலால் கருநிறம் படைத்ததுமான கதவினையுடையதாயிருக்கின்ற வாயிலைக் காண்கிறோம். இவ்வடிகளுக்குத் தரும் விளக்கவுரையில், ''வாயிலில் தெய்வம் உறையுமாகலின், அதற்கு அணியும் நெய்யும் ஆம். ''ஐயவி அப்பிய நெய் அணி நெடுநிலை'' (நெடுநல். 86) என்பதனால் உணர்க'' என்று நச்சினார்க்கினியர் கூறும் விளக்கத்தால் வாயில் நிலையில் தெய்வம் பேணுதல் விளங்கும். இவ்வாயில்களில் இல்லுறை தெய்வம் மகிழும் வண்ணம் மலர் அணிந்து கொடிகளும் கட்டியிருப்பார்களாம் (பட்டின. 160). மாலைக்காலத்தில் மகளிர்கள் இரும்பால் செய்த தகளியில் விளக்கு ஏற்றி, நெல்லையும் மலரையும் தூவி இல்லுறை தெய்வத்தை வணங்கி வழிபடுகின்றனர். தெருக்களில் உள்ள மாளிகைகளில் எல்லாம் மாலைக்காலத்தை இவ்வாறு மகளிர்கள் கொண்டாடுகின்றனராம்.

'மடவரல் மகளிர் - பிடகைப் பெய்த
செல்வி அரும்பின் பைங்காற் பித்திகத்து,
அவ் இதழ் அவிழ் பதம் கமழ, பொழுது அறிந்து,
இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ,
நெல்லும் மலரும் தூஉய், கைதொழுது,
மல்லல் ஆவணம் மாலை அயர' (நெடுநல். 39-44)

எனப் பெண்கள் மாலைக்காலத்தில் இல்உறை தெய்வங்களை வழிபடுதலை நெடுநல்வாடையும் விவரிக்கிறது.

தவிரவும் மனைகளில் வெண்சோறும் கருனைக்கிழங்கால் ஆக்கிய கறியும் கூட்டித் தெய்வத்துக்குப் பலியிடுகின்றனர். அதனை உண்பதற்குக் காக்கைகள் தம் பிள்ளைகளைத் தழுவிக் கொண்டு மனையிடங்களிலே வந்து தங்குகின்றனவாம். இக் காட்சியை,

கொடுங்கண் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்கு சிறைப் பிள்ளை தழீஇ. கிளை பயிர்ந்து.

கருங்கண் கருனைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப பலியொடு கவரிய, குறுங்கால்
கூழுடை நல்மனைக் குழுவின இருக்கும்
மூதில் அருமன் பேர் இசைச் சிறுகுடி' (நற். 367:1-6)

எனவரும் நற்றிணைப் பாடற்பகுதியுள் காணலாம்..

தலைவி ஒருத்திக்காகக் குறித்த மணநாள் விரைவில் வரட்டும் என்று தோழி அத் தலைவியுடனே மனையில் உறையும் தெய்வத்தைக் கைகூப்பி வணங்கி, அதற்குரிய பலியையும் செலுத்துவோம் என்று தலைவியிடம் பேசுகின்றாள்.

'வல்லே வருக, வரைந்த நாள்!. என,
நல் இறை மெல்விரல் கூப்பி,
இல் உறை கடவுட்கு ஆக்குதும் பலியே!' (அக. 282:16-18)

என்பது தோழியின் கூற்று. இதனாலும் மகளிர் தத்தம் மனைகளில் இல்லுறை தெய்வத்தைப் போற்றி வழிபட்டு வந்தமை தெளிவாகத் தெரியவருகிறது.

இல்லத்தில் மகளிர் வணங்கி வந்த தெய்வத்துள் ஒன்று பாவை என்பது, இது சுவரில் ஓவியமாகத் தீட்டப்பெற்று வழிபடப் பெறுவது ஆகும். இதற்குப் பலி முதலியன படைத்து மகளிர் வழிபடுவர். தலைவி ஒருத்தி உடன்போக்கு ஒழுக்கத்தால் தலைவனுடன் சென்றுவிடுகிறாள். அவளைப் பிரிந்த செவிலித் தாய் மகளின் பிரிவால் மனையில் நேர்ந்துள்ள துயரங்களைப் பேசுமிடத்துத் தலைவி வளர்த்த கிளி, பால் உண்ணாதிருத்தலும், அவளுடைய தோழியர் விளையாடாது மடிந்திருத்தலும், தாழிகள் புதுமலர் பெறாது வாடியிருத்தலும் கூறி, அம்மனைச் சுவரிடத்திலுள்ள பாவைத் தெய்வமும் இவள் பிரிவால் பலியைக் கொள்ளவில்லை என்கிறாள்.

'ஒண் தொடி செறித்த முன்கை ஊழ் கொள்பு,
மங்கையர் பல பாராட்ட, செந்தார்க்
கிள்ளையும் தீம்பால் உண்ணா; மயில் இயல்
சேயிழை மகளிர் ஆயமும் அயரா;
தாழியும் மலர்பல அணியா; கேழ் கொளக்
காழ்புனைந்து இயற்றிய வனப்பு அமை நோன்சுவர்ப்
பாவையும் பலிஎனப் பெறாஅ; நோய் பொர,

இவை கண்டு இனைவதன் தலையும், நினைவிலேன்,
கொடியோள் முன்னியது உணரேன்.....' (அக. 369:2-10)

என்பது மகட்போக்கிய செவிலித்தாயின் பேச்சு. இங்கே மகள் மனையிலிருந்து பிரிந்த வருத்தம் ஓரறிவுயிராகிய தாழியின் மலர் முதல் சுவர்ப்பாவைத் தெய்வம் வரையில் சென்றமையை வெளியிடுகிறாள். சுவர்ப்பாவை பல்வண்ணத்தால் மிகவும் அழகுடையதாக விளங்கியமையும், அது மனையில் வணக்கத்திற்குரிய தெய்வமாக நிலைபெற்றமையும், 'கேழ் கொள, காழ்புனைந்து இயற்றிய, வனப்பு அமை, நோன்சுவர்ப் பாவையும் பலி எனப் பெறா' என்பதனால் விளங்கக் காணலாம்.

மனையில் விளங்கும் சுவர்ப்பாவையேயன்றி, மன்றப் பாவை, தெற்றிப் பாவை, அல்லிப் பாவை, கொல்லிப் பாவை எனப்படும் பாவைத் தெய்வங்களும் மகளிர் விளையாட்டில் அமைந்த 'தாது செய் பாவை', வண்டற் பாவை', 'பைஞ்சாய்ப் பாவை', 'மணலின் எழுதிய பாவை' எனப் பல விளையாட்டுப்பாவைகளும் ஆக வேறு பல பாவைகளையும் சங்கப் பாடல்களில் காண்கிறோம். இவற்றை அடுத்துவரும் 'பல் வகைப் பாவை' என்னும் தலைப்பின் கீழ்ப் பார்ப்போம்.

9. பல்வகைப் பாவை

பாவை என்பது சிறுபெண்களின் விளையாட்டுக்குரிய பொம்மையைக் குறிக்கும். பாவையும் பந்தும் அவர்களுடைய விளையாட்டுப் பொருள்களில் முக்கியமானவை. 'இது என்பாவை' (ஐங். 375:1), 'பந்தும் பாவையும் கழங்கும் எமக்கு ஒழித்தே' (ஐங். 377:4:3) என வருவன இதற்குச் சான்றாம். இது மரம், மண், கல், உலோகம் முதலியவற்றால் செய்யப்படுவதாம். 'செய்வுறு பாவை அன்ன என் மெய்' (குறு. 198:6-7), 'வரிப்புனை பந்தொடு பாவை தூங்க' (முருகு. 68) என்பவற்றால் வினைஞர்களால் அழகுறக் கைபுனைந்து இயற்றப்படுவது பாவை என்பது போதரும். 'வழு அறு மரனும் மண்ணும் கல்லும் எழுதிய பாவையும்' (மணி. 21:115-116) என மணிமேகலை பாவை செய்யப்படும் பொருள்களைக் குறித்தலும் ஈண்டு ஒப்புநோக்கத் தகும்.

சிறந்த பொன்னாலும் பாவை செய்வது உண்டு,

'செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை
செஞ்சுடர் பசுவெயில் தோன்றியன்ன
செய்யர்..........' (மதுரை. 410-412)

'தாஇல் நன்பொன் தைஇய பாவை
விண் தவழ் இளவெயிற் கொண்டுநின் றன்ன
மிகு கவின்.......... ' (அகம். 212:1-3)

என வருவன மகளிரின் மேனியழகிற்கு இளவெயிலின் ஒளி பொருந்தப்பெற்ற பொற்பாவையை ஒப்புக்கூறும் பகுதிகளாம்.

விளக்கினை ஏந்தி, நிற்கும் முறையில் பாவையை அமைத்து மாடங்களில் வைத்து விளக்கு ஏற்றுதலும் உண்டு. அந்நாளில் யவனர்களால் தொழில் திறம்பட இயற்றப்பட்ட பாவை விளக்குகள் மன்னர் முதலியோரின் மாளிகையில் ஒளிசெய்து விளங்கின.

'பாவை விளக்கின் பரூஉச் சுடர் அழல
இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடத்து' (முல்லை. 85-86)

'யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கை ஏந்[illegible]அகல் நிறைய நெய் சொரிந்து

பருஉத்திரி கொளீஇய குருஉத்தலை நிமிர்எரி,
அறுஅறு காலை தோறு, அமைவரப் பண்ணி
பல்வேறு பள்ளிதொறும் பாய்இருள் நீங்க' (நெடுநல். 101-105)

இப்பகுதிகள் நமக்குப் பாவை விளக்கின் பயன்பாட்டினைப் புலப்படுத்துகின்றன.

தவிரவும் சித்திரகாரிகள் பல வண்ணங்கள் கொண்டு சுவரில் பாவை வடிவம் தீட்டுதலும் உண்டு. இங்ஙனம் தீட்டும் சுவர்ப் பாவைகள் இல்லத்திலும் மன்றங்களிலும் தெய்வங்களின் பொருட்டு எழுதப்படுவனவாம்.

'வல்லோன் தைஇய வரிப்புனை பாவை
குருகு இயன்றன்ன உருவினை ஆகி. (மதுரை. 723-724)

.....கேழ்கொளக்
காழ்புனைந்து இயற்றிய வனப்பு அமை நோன்சுவர்ப்
பாவையும் பலி எனப் பெறாஅ' (அகம். 369:6-8)

'தாய் உயிர் பெய்த பாவை போல' (கலி. 22:5)

இவை எல்லாம் சுவரில் புனையப்பெற்ற சித்திரப் பாவையைப் பற்றியனவாம்.

சுவர்ப்பாவைகளுள் அல்லியம் என்னும் கூத்தாடும் அழகை ஒப்பப் புனையப்பெற்ற பாவைச் சித்திரத்தை 'அல்லிப்பாவை' என்று புறநானூறு கூறுகிறது.

'வல்லோன் தைஇய வரிவனப்பு உற்ற
அல்லிப் பாவை ஆடு வனப்பு ஏய்ப்ப
காம இருவர் அல்லது, யாமத்துத்
தனிமகள் வழங்காப் பனிமலர்க் காவின்' (புறம். 33:16-19)

இங்கே அல்லிப்பாவையின் ஆடுவனப்பு சிறப்பித்துப் பேசப் படுகிறது.

பதுமை போன்று இயற்கையில் மரம் முதலியவற்றின் தோன்றும் பூ முதலியவற்றையும் 'பாவை' என்று குறிப்பிட்டுள்ளனர். இயற்கைத் தோற்றத்தில் காணும் இவ்வகைக் பாவைகள் 'செய்யாப்பாவை' என்னும் தொடரால், மனிதரால் செய்யப் படாமல் இயற்கை வழங்கும் காட்சி சுட்டிக்காட்டப்படுகிறது. குரவமரத்தின் பூவும் இஞ்சியின் கிழங்கும் பாவை போன்ற தோற்றமுடையனவாம்.

'நறும் பூங்குரவம் பயந்த
செய்யாப் பாவை கொய்யும் பொழுதே' (ஐங். 344:2-3)

'செய்யாப் பாவை வளர்ந்து கவின்முற்றாக்
காயம் கொண்டன இஞ்சி' (மலைபடு. 125-126)

என்பவை குரவம்பாவை, இஞ்சிப்பாவை பற்றித் தெரிவிக்கின்றன.

தவிரவும் கண்ணாடியுள் தோன்றும் எதிர்வடிவாகிய நிழலுருவமும் பாவை என்றே குறிக்கப்படுகின்றது. தன்னை அடுத்த பொருளின் சாயையைக் காட்டும் கண்ணாடியில் தோன்றும் உருவத்தை 'ஆடிப்பாவை' என்பர். காதற்பரத்தை ஒருத்தி தலைவனைப் பற்றிப் பேசுமிடத்து அவன் தன்னுடைய மனைவி சொற்படியே நடக்கின்றமை ஆடிப்பாவையின் காட்சியை ஒத்தது என்று கூறுகின்றாள்.

'கழனி மாஅத்து விளைநது உகு தீம் பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்இல் பெருமொழி கூறி, தம்இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே' (குறுந். 8)

மகளிர் தம் விளையாட்டில் பாவைகளைக் கொண்டு விளையாடுவதன்றித் தாமே கோரை முதலிய பொருள்களால் ஆக்கிய பாவையும் கொண்டு விளையாடுவர். பைஞ்சாய்க் கோரையினால் அவர்கள் பாவை செய்து விளையாடும் வழக்கத்தையும் சங்கப் பாடல்கள் சிலவற்றில் காண்கிறோம்.

'பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளம் சூழ்ந்தும்' (குறுந். 276:1-2)

'ஓதமொடு பெயரும் துறைவற்குப்
பைஞ்சாய்ப் பாவை ஈன்றனென் யானே' (ஐங். 165:4-5)

பஞ்சாய்க் கோரையினாலான பாவை தலைவனால் செய்யப்பெற்று தலைவிக்குக் கொடுக்கப்படுதலையே இப்பாடற் பகுதிகளில் காண்கிறோம்.

கையில் எடுத்து மகளிர் பாராட்டி விளையாடுவதற்கு ஏற்ற பாவைகள் ஒருபுறம் இருக்க, அம்மகளிர் வண்டல் மண்ணின் கூடி

விளையாடும்போது, அம்மணலால் பாவை உருவம் அமைத்தும் விளையாடுவர். இதனை 'வண்டற் பாவை' என்பர்.

'மாதர் மட நல்லார், மணலின் எழுதிய
பாவை சிதைத்தது. என அழ, ஒருசார்' (பரி.7:25-26)

இது வையை யாற்றங்கரை . மருங்கில் மணற்பாவை புனைந்து விளையாடிய மகளிர் செயலைக் குறிப்பிடுகிறது.

'நேர்இழை மகளிர் வார் மணல் இழைத்த
வண்டற் பாவை' (நற். 191:2-3)

என்பது நற்றிணை. வண்டற் பாவைக்குப் பூக்கள் முதலிய வற்றை அணிதலும், பூந்தாது முதலியவற்றால் அழகு செய்தலும் உண்டு.

'தாதின் செய்த தண்பனிப் பாவை (குறுந். 48:1)

'தாது செய் பாவை' (அகம். 392 5)

என்பன மகரந்தம் முதலியவற்றாலும் மணற்பாவை அழகு றுத்தப் பெற்றதைப் புலப்படுத்தும்.

'அரி மயிர்த் திரள் முன்கை
வால் இழை மட மங்கையர்
வரிமணல் புனை பாவைக்குக்
குலவுச் சினைப் பூக் கொய்து
தண் பொருநைப் புனல் பாயும்
விண் பொரு புகழ், விறல் வஞ்சி' (புற. 11:1-6)

எனவரும் புறப்பாட்டுப் பகுதியில் வஞ்சி மகளிர் ஆன்பொருநை நதித் துறையில் பாவை இழைத்து விளையாடிய காட்சியைச் சிறப்பிக்கிறது. இங்ஙனம் நீர்த்துறைக்கண் மகளிர் பாவை செய்து விளையாடுதலை,

'நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆல முற்றம் கவின்பெறத் தைஇய,
பொய்கை சூழ்ந்த பொழில் மனை மகளிர்
கை செய் பாவை துறைக்கண் இறுக்கும்' (அகம். 181:16-19)

என்னும் அகநானூற்றுப் பாடற்பகுதியாலும் அறியலாகும்.

மகளிர் விளையாடும் பாவை அவர்தம் மனைகளில் வழிபடப் பெறும் பாவையை ஒப்ப அமைவன போலும். மனைத் திண்ணை

களிலும் பாவைகள் தொழுதற்குரியனவாய் அமைக்கப் பட்டிருந்தன. திண்ணைகளில் பொருந்தி விளங்கும் பாவை போல மணல் மேடுகளில் அம்மகளிர் அமைக்கும் பாவையையும் நன்கு பாதுகாக்கின்றனர்.

'தெற்றிப் பாவை திணிமணல் அயரும்
மென்தோள் மகளிர் நன்று புரப்ப' (புறம். 283:12-13)

எனவரும் புறப்பாட்டு 'தெற்றிப்பாவை' பற்றிக் கூறுகிறது.

ஊர்களில் மக்கள் கூடும் மன்றங்களிலேயும் ஒரு பாவைத் தெய்வம் உண்டு. இதுவும் வண்ணம் தீட்டி அமைக்கப்பட்டதாகும். பகைவர் படையெழுச்சியின் காரணமாகக் குடிபெயர்ந்த ஓர் ஊரின் மன்றில் உள்ள பாவையைப் போற்றுவார் இல்லை. அது மழையில் இளகியும் வெயிலில் காய்ந்தும் வேலைப்பாடுகள் அழிந்தும் அழகிழந்த தோற்றத்துடன் உள்ளதாம். இவ்வாறு குடிபெயர்ந்து மக்கள் இல்லாத ஓர் ஊரின் மன்றப் பாவையை அகநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

'முனைப் புலம் பெயர்த்த புல்லென் மன்றத்து,
பெயல் உற நெகிழ்ந்து, வெயில் உறச் சாஅய்,
மனை ஒழிந்திருத்தல் வல்லுவோர்க்கே!' (அகம்.157:11-14)

என்பது கவிஞர் வாக்கு.

பாவைத் தெய்வங்களிலே 'கொல்லிப்பாவை' என்பது புலவர் பலராலும் பெரிதும் போற்றி உரைக்கப்பட்டுள்ளது. இது சேர மன்னனுக்குரிய கொல்லி மலையின் மேல்புறத்தில் அமைந்திருந்ததாம். இம்மலை முதலில் வல்வில் ஓரிக்கும், பின் சேரமானுக்கும் உரிமைப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது. இம் மலைப்பகுதி மிகுந்த அச்சம் தருவதாம். இங்கே உள்ள பாவைத் திருவுரு தெய்வத்தால் எழுதி வைக்கப்பட்டது; மிக்க அழகு வாய்ந்தது. மகளிரின் அழகுக்கு இப்பாவையை ஒப்புக் கூறுவது புலவர் மரபு.

'வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந்தனனே' (குறு. 100:5-6)

- வெள்வேற்
களிறு கெழு தானைப் பொறையன் கொல்லி
ஒளிறு நீர் அடுக்கத்து வியல் அகம் பொற்பக்

கடவுள் எழுதிய பாவையின்
மடவது மாண்ட மாஅயோளே' (அக. 62:12-16)

'செவ்வேர்ப் பலவின் பயம் கெழு கொல்லி,
நிலைபெறு கடவுள் ஆக்கிய
பலர்புகழ் பாவை அன்ன நின் நலனே' (அக. 209:15-17)

'பெரும் பூண் பொறையன் பேஎம்முதிர் கொல்லி
கருங்கட் தெய்வம் குடவரை எழுதிய
நல்இயல் பாவை அன்ன இம்
மெல்இயல் குறுமகள்' (குறுந். 89:4-7)

'இரவலர் மெலியாது ஏறும், பொறையன்
உரைசால்உயர்வரைக் கொல்லிக் குடவயின்,
அகல்இலைக் காந்தள் அலங்குலைப் பாய்ந்து,
பறவை இழைத்த பல்கண் இறாஅல்
தேனுடை நெடுவரை. தெய்வம் எழுதிய
வினை மாண் பாவை அன்னோள்' (நற். 185:6-11)

'பயம் கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிது இயல் பாவை
விரிகதிர் இளவெயில் தோன்றியன்ன நின்
ஆய் நலம் உள்ளி வரின்' (நற். 192:8-11)

'செவ்வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லித்
தெய்வம் காக்கும் தீதுதீர் நெடுங் கோட்டு,
அவ்வெள் அருவிக் குடவரை யகத்து,
கால் பொருது இடிப்பினும், கதழ் உறை கடுகினும்
உரும் உடன்று எறியினும் ஊறு பல தோன்றினும்
பெருநிலம் கிளரினும், திருநல உருவின்
மாயா இயற்கைப் பாவையின்,
போதல் ஒல்லாள் என் நெஞ்சத்தானே! (நற். 201:5-12)

பூதம் என்னும் தெய்வத்தால் எழுதி அமைக்கப்பட்ட பாவை ஆதலின் இதற்கு எவ்வகை இடையூறும் நேருவதில்லை. காற்றும் மழையும் இடியும் வெயிலும் எதுவரினும் இக்கொல்லிப் பாவையின் அழகு கெடுவதில்லை. அழகிய பெரிய அத்தெய்வத் திருவுரு பூமி நடுங்கினாலும் ஊறுபடுவதில்லையாம். இத்தகைய தெய்வப்பாவையை, 'திருநல உருவின் மாயா இயற்கைப் பாவை'

என்று போற்றுகின்றார் கவிஞர். எனவே, இப் பாவையின் எழில் நலம் மாதர் நலத்துக்கு ஒப்பிடப்பெறுதல் எங்கும் காணலாம்.

தவிரவும், 'பாவை' எனக் கொல்லி என்னும் அடையின்றி மகளிர்க்கு ஒப்புக் கூறப்படினும், அது கொல்லிப் பாவையையே குறிப்பதாகப் பண்டை உரையாசிரியர்கள் கருதுவாராயினர்.

'ஓவத்து அன்ன இடனுடை வரைப்பின்
பாவை அன்ன குறுந்தொடி மகளிர்' (புறம். 25;1-2)

என்பதற்குப் பழைய உரைகாரர்.

''ஓவியம் போலும் அழகினை உடைத்தாகிய இடமுடைய
இல்லின்கண், கொல்லிப்பாவை போன்ற வடிவினை
உடைய சிறு வளை அணிந்த மகளிர்''

என்று உரை எழுதுகின்றார். இதனைத் தழுவியே இக்கால உரையாசிரியர்களும், இம்மாதிரி வருணனை வரும் இடங்களில் உள்ள பாவையைக் கொல்லிப்பாவை என்று கொள்ளுகின்றனர். அவற்றுள் ஒருசில இடங்கள் வருமாறு;

'ஓவத்து அன்ன வினைபுனை நல்இல்,
பாவை அன்ன பலர் ஆய் மாண் கவின்
பண்டையின் சிறக்க என் மகட்கு' (அக. 98:11-13)

'ஓவத்து அன்ன வினை புனை நல்இல்
பாவை அன்ன நல்லோள் கணவன்' (பதிற். 61:3-4

'ஓவத்து அன்ன உருகெழு நெடுநகர்,
பாவை அன்ன மகளிர் நாப்பண்' (பதிற். 88:28-29)

'ஓவத்து அன்ன இடனுடை வரைப்பின்
பாவை அன்ன நிற்புறங் காக்கும்' (நற். 182:2-4)

'வினை அமை பாவையின் இயலி, நுந்தை
மனைவரை இறந்து வந்தனை..... (நற். 362;1-2)

'பாவை அன்ன வனப்பினள் இவள்' (நற். 301:6)

'பாவை அன்ன பலர்ஆய் வனப்பின்' (நற். 319:7)

'பாவை அன்ன என் ஆய் கவின். (ஐங். 221:2)

'பாவை அன்ன நின்துணை' (ஐங். 307:4)

'பாவை அன்ன என் ஆய்தொடி மடந்தை' (ஐங். 389:3)

இங்ஙனமாக மகளிர்க்குப் பாவையை ஒப்புக்கூறும் பகுதிகள் பலவாகச் சங்கப்பாடல்களில் காணப்பெறுதலினாலே 'கொல்லிப் பாவை' த் தெய்வம் அந்நாளில் மிகவும் புகழ்பெற்ற விளங்கியது போலும்.

பதினொரு வகையான ஆடல்களுள் பாவையாடல் என்பதும் ஒன்று. இதனைப் 'பாவைக்கூத்து' என்றும் உரைப்பர்.

'செருவெங் கோலம் அவுணர் நீங்கத்
திருவின் செய்யோள் ஆடிய பாவையும்'
(சிலப். கடலாடு. 60-61)

என்று பாவையாடலின் இயல்பினை உரைக்கின்றார் இளங்கோ வடிகள். பாவையாடல் என்பது செய்யவள் என்று புகழப்படும் திருமகள் யுத்த களத்திலே அவுணர்கள் போர்க்கோலம் விடுத்து மயங்கி விழும்படியாக ஆடிய ஆடலாகும். சிலப்பதிகாரத்தில் வரும் இவ் ஆடல் பற்றிய அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் பின்வருமாறு உரை வரைகின்றார்.

''அவுணர் செவ்விய போர்செய்தற்குச் சமைத்த போர்க்
கோலத்தோடு மோகித்து வீழும்படி கொல்லிப்பாவை
வடிவாய்ச் செய்யோளாகிய திருமகளால் ஆடப்பட்ட
பாவை என்னும் ஆடலும்''

இவ் உரைப்பகுதியால் திருமகள் கொல்லிப்பாவை உருவை மேற்கொண்டு அவுணரை மயங்கி வீழச் செய்தாள் என்பது கவனிக்கற் பாலது. இதனாலும் கொல்லிப்பாவையின் அழகும் அணங்குந் திறனும் வெளிப்படுதல் காணலாம்.

காவிரிப்பூம்பட்டினத்திலே பண்டு புகழுடன் விளங்கிய ஐவகை மன்றங்களுள் பாவை மன்றம் என்பதும் ஒன்று. இம் மன்றத்தில் உள்ள பாவை அரசனும் அறங்கூறும் அவையோரும் நடுநிலைமை தவறி ஒரு சார்பான நீதி பிழைத்தால் நாவால் உரையாது கண்களில் நீர் சிந்தி அந்த அநீதியை வெளிப்படுத்தும் இயல்புடையதாகும்.

அரசு கோல் கோடினும் அறங்கூறவையத்து
உரை நூல் கோடி ஒருதிறம் பற்றினும்

நாவொடு நவிலாது நவைநீர் உகுத்துப்
பாவை நின்றழூஉம் பாவை மன்றமும்

(சிலப். இந்திர. 135-138)

என இப் பாவை மன்றத்தின் இயல்பினைச் சித்திரிக்கின்றார் இளங்கோவடிகள்.

தெய்வம் போற்றும் முறையில் பண்டை மக்கள் கொண்ட மனப்பான்மையை மணிமேகலையிலே வரும் 'கந்திற் பாவை' வருவது உரைத்த காதையில் உள்ள ஒரு குறிப்பும் தெளிவாக உரைப்பது காணலாம். மூதூர்களிலும் வீதிகளிலும், தேவர் கோயில்களிலும், மரம் மன்றம் முதலியவற்றிலும் ஆகப் பல இடங்களிலும் கல்லிலும், மரத்திலும், சுவரிலும் தெய்வத்தை நிறுத்தி வழிபட, அவ்வத் தெய்வங்கள் அவ்விடங்களினின்றும் நீங்காது மக்களுக்கு அருள் செய்து விளங்கியமை இங்குக் கூறப் பட்டுள்ளது.

'முடித்து வரு சிறப்பின் மூதூர் யாங்கணும்
கொடித்தேர் வீதியும், தேவர் கோட்டமும்,
முதுமர இடங்களும், முதுநீர்த் துறைகளும்,
பொதியிலும், மன்றமும், பொருந்த நாடி,
காப்புடை மாநகர்க் காவலும் கண்ணி,
யாப்புடைத்தாக அறிந்தோர் வலித்து,
மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்
கண்ணிய தெய்வம் காட்டுநர் வகுக்க
ஆங்கு அத் தெய்வம் அவ்இடம் நீங்கா;
ஊன் கணினார்கட்கு உற்றதை உரைக்கும்'

(மணி. 21·119-12)

என்பது சாத்தனார் வாக்கு.

10. கோளும் நாளும்

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்னும் ஏழும இராகு, கேது என்னும் இரு பாம்புகளும் ஆக ஒன்பதும் கோள்கள் (கிரகங்கள்) எனப்படும். இவை ஞாயிற்றை (சூரியனை) முதலாக வைத்து எண்ணப்படும். சூரிய சந்திரரும் பிற கோள்களும், நட்சத்திரங்கள் என வழங்கும் நாள்களும், மேருமலையைச் சுற்றிவருவனவாம். நியதிப்படி இவை சுற்றி வரும் வழி வட்டவடிவமாக அமைந்திருப்பதனால், இவை அனைத்தும் சேர்த்து 'சுடர் நேமி' (சுடர்ச்சக்கரம்) என்று அழைக்கப்பெறும். இதனைத் 'துருவசக்கரம்' என அழைக்கும் வழக்கும் பிற்காலத்துக் காண்கிறது.

திருப்பரங்குன்றத்தில் அமைந்திருந்த எழுத்துநிலை மண்டபத்தில் (சித்திரசாலை) சுடர்ச்சக்கரத்தின் சித்திரமும் தீட்டப் பட்டிருந்ததாம். இதனைக் கண்டு, ஆங்கு மலைவளம் காணவும் வழிபாடு செய்யவும் வரும் மக்கள், கோள் நாள்களின் இயல்பினை அறிகின்றனராம். இச்செய்தியினை 19ஆம் பரிபாடல் நமக்குத் தெரிவிக்கிறது.

> என்றூழ் உறவரும் இருசுடர் நேமி
> ஒன்றிய சுடர்நிலை உள்படு வோரும்.' (பரி. 19:46-47)

எனவரும் பாடல் அடிகள் சுடர்ச்சக்கரத்தைச் சுட்டிக் காட்டுதல் காணலாம். இப்பாடலில் தானே பிறிதோரிடத்து,

> 'சுடரொடு சூழ்வரு தாரகை மேருப்
> புடைவரு சூழல்' (பரி. 19:19-20)

என்வரும் பகுதியில் மேருவைச் சூழச் சந்திரனும் நட்சத்திரங்களும் சுற்றி வருதலை, பாண்டிய மன்னன் தனது அமைச்சர்களோடும் கூடி, நாடும் நகரும் தன்னைச் சேர்ந்துவரப் பரங்குன்றப் பெருமானின் திருக்கோயிலை வலம் வருவதற்கு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். கோள்கள் சூரியனை முதலாகக் கொண்டு வருவன என்பது, 'என்றூழ் (சூரியன்) உறவரும்' (பரி.19:46) என்பதனாலும், சூரியன் மேருவலம் வருதலை, 'உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு' (முருகு. 1-2) என்பதனாலும் அறியலாம்.

எல்லாக் கோள்களும் சூரியனை நடுவாகக் கொண்டு சுற்றி வருவனவாம் என்பதனை, 'வாள் நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த இளங்கதிர் ஞாயிறு' என்னும் சிறுபாணாற்றுப்படையின் பாடல் அடிகள் (242-243) புலப்படுத்துவனவாம்.

நாள்களாவன அசுவினி, பரணி, கார்த்திகை முதலிய இருபத்தேழு நட்சத்திரங்களாம். இந்நாள்களும் கோள்களும், 'மீன்' என்னும் சொல்லுடன் இணைத்து, 'நாள்மீன்', 'கோள்மீன்' என்றும் வழங்கப்படும். நாள்மீன்களுடன் கலந்தே கோள்மீன்களும் வலம் வருகின்றன.

'நீல்நிற விசும்பின் வலன் ஏர்பு திரிதரும்
நாளமீன் விராய கோள்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலர் உடன் குழீஇ' (பட்டினப். 67-69)

என்னும் பட்டினப்பாலைப் பகுதி, இவை பல்வேறு வடிவு கொண்டு ஒரே குழுவாக நாள்களுடன் கோள்களும் விரவி, நீல வானிலே, மேருவை வலமாகக் கொண்டு சூழ்வருதலை விளக்குகிறது.

இவை சூழ்வரும் தெரு (வீதி) மூன்று. அவையாவன: ஆடு (மேட இராசி), ஏறு (இடப இராசி), மிதுனம் என்பன. இவற்றுள் மேடராசியை முதலாகக் கொண்டு ஏனைய இராசிகளிலும் ஞாயிறு, திங்கள், நாள்கள் ஆகியவை திரியும். ஒவ்வோர் இராசியும் ஒன்பது ஒன்பது நட்சத்திரங்களை உரித்தாகக் கொள்ளும். இதனைத் ''தெரு இடைப்படுத்த மூன்று ஒன்பதிற்று இருக்கையுள்'' என்னும் பரிபாடல் அடி (11:3) புலப்படுத்துகிறது. பாண்டியன் தேவி பள்ளிகொள்ளும் கட்டிலின் மேலாகக் கட்டியிருந்த மேற்கட்டியில் மெழுகு பூசப்பட்டு மேடராசி முதலான இராசிகளில் திரியும் சந்திரனும் ரோகிணியும் புதிதாக எழுதப்பட்டிருந்தனவாம். தலைவனைப் பிரிந்து வருந்தும் மாதேவி சந்திரனைப் பிரியாமல் உடனாக இருக்கும் உரோகிணியின் நிலை கண்டு, அது போன்ற நிலை தனக்குக் கிட்டவில்லையே என்று வேதனைப்படுவதாக நெடுநல்வாடைக் குறிப்பிடுகிறது.

புதுவது இயன்ற மெழுகுசெய் படமிசை
திண்நிலை மருப்பின் ஆடு தலை ஆக,
விண் ஊர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து,
முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய,
உரோகிணி நினைவனள் நோக்கி, நெடிதுயிரா,

புலம்பொடு வதியும் நலம் கிளர் அரிவை' (நெடுநல்.159-166)

பதினொன்றாம் பரிபாடலில் மழைபெய்தற்குத் துணை செய்யும் கோள் நிலைகளைக் குறிப்பிடும் பகுதியும் (பரி. 11:1-5), உற்பாதமாக ஒரு மீன் விழுந்தபோது இருந்த கோள்களின் இருப்பினைத் தெரிவிக்கும் புறநானூற்றுப் பாடல் (229:1-13) பகுதியும் இராசி பற்றியும் நாள்கோள்கள் ஒன்றனோடு ஒன்று பிணைந்து நிற்கும் நிலைமையும் சுட்டிக் காட்டுவன ஆகும்.

கோள்களுள் சனி (மைம்மீன். புற. 117:1), இராகு, கேது என்னும் மூன்றையும் தவிரப் பிற கோள்களும் நாள்களும் ஒளி செய்வனவாம். இந்த ஒளியுடைப் பொருள்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தால் எங்ஙனம் பேரொளி மயமாக இருக்குமோ, அத்தகைய சிறந்த ஒளியைப் படைத்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் எனப் பதிற்றுப்பத்தில் கூறப்பட்டுள்ளது.

'நாள், கோள், திங்கள், ஞாயிறு, கனைஅழல்,
ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை. (பதிற். 14:3-4)

ஞாயிறும் திங்களும்

ஒளியுடைப் பொருள்களில் எல்லாம் பேரொளியாய் விளங்குவதும், உலகத்தாரால் தெய்வம் எனப்போற்றப்படுவதும் ஆகிய சிறப்பினைப் பெற்றவை ஞாயிறும் திங்களுமே. 'இருசுடர்' (புற. 65:7) எனத் தொகைப் பெயரால் குறிப்பிடப் பெறுபவை. இவ்விரண்டனையும் 'ஞாயிற்றுப் புத்தேள்' (கலி. 108:13), 'திங்கள் புத்தேள்' (புற. 27:14) எனச் சுட்டுதல் கொண்டு இவற்றைத் தெய்வங்கள் எனவே மக்கள் போற்றியமை விளங்கும். வானத்தில் தோன்றி உலகின்கண் நிறைந்த இருளைப் போக்கி, என்றும் அழியாது நிலைத்து, உலகத்தைக் காப்பவை இவை.

'அம்கண் விசும்பின் ஆர்இருள் அகற்றும்
வெங்கதிர்ச் செல்வன் போலவும்
தண்கதிர் மதியம் போலவும்
நின்று நிலைஇயர் உலகமோடு உடனே'
(புற. 56:21-25)

'தண்கதிர் மதியம் போலவும்
ஒண்சுடர் ஞாயிறு போலவும்

மன்னிய பெரும: நீ நிலமிசை யானே' (புற. 6:27-29)

என வருவனவற்றால் இவை இருள்நீக்கி உலகை இன்புறுத்துதலும், என்றும் நிலைத்த பொருளாகக் கொள்ளப்படுதலும் பெறப்படும். ஞாயிறு பகலிலும் திங்கள் இரவிலும் வந்து ஒளி செய்து ஒரு நாளின் இருகூற்றிற்கும் அதிபதியாய் விளங்குகின்றனர்; இந்த இருபொழுதுகளையும் ஆக்குபவரே இவர்தாம்.

'பகற் செய்யும் செஞ்ஞாயிறும்
இரவு செய்யும் வெண்திங்களும்' (மதுரைக். 7-8)

என்னும் அடிகளில் இருபொழுதுகளை ஆக்கும் தேவர்களாக இவர்கள் போற்றப்படுதல் காணலாம்.

சூரியனுடைய ஒளியை வெயில் என்றும் திங்களின் ஒளியை நில்வு என்றும் வழங்குவர். வெம்மை தரும் வெயில் ஒளியைக் காலும் சூரியனோ செம்மை நிறமுடையவன்; நிலவு காலும் சந்திரனோ வெண்மை நிறமுடையவன். இந்த இயற்கை வண்ணத்தை உட்கொண்டு, 'செஞ்ஞாயிறு', 'வெண்திங்கள்' என்று குறிப்பிடுதல் மரபு. இவர் செய்யும் ஒளியின் வெம்மை, தண்மை கருதி ,'வெங்கதிர்', 'ஒண்சுடர்' என்று ஞாயிற்றையும், 'தண்கதிர்', 'தண்சுடர்' என்று திங்களையும் சுட்டுதல் உண்டு.

'செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்,
வெண்திங்களுள் வெயில் வேண்டினும்,
வேண்டியது விளைக்கும் ஆற்றலை' (புற. 38:7-9)

என்று ஓர் அரசனது பேராற்றலைப் புலவர் ஒருவர் பாராட்டுகின்றார். இவ்விரு கோள்க்ளின் இயற்கையை மாற்றும் வன்மையன் என்று கூறுவது அவன் சிறப்பினைப் புகழவேதான்.

கொடுமைக்குச் சூரியனையும் அளி செய்தலுக்குச் சந்திரனையும் ஒப்புமை காட்டுவர். மன்னவனது தண்ணளி செய்யும் குடையைச் சந்திரனுக்கு ஒப்பிடுவர். ஒருவனுடைய ஆண்மை, புகழ் ஆகியவற்றிற்குச் சூரியனை ஒப்புமை காட்டுவர்.

ஈண்டு, நீர்மிசைத் தோன்றி இருள்சீக்கும் சுடரேபோல்
வேண்டாதார் நெஞ்சு உட்க, வெருவந்த கொடுமையும்
நீண்டு தோன்று உயர்குடை. நிழல் எனச் சேர்ந்தார்க்குக்
காண்தகு மதி என்னக் கதிர்விடு தண்மையும்,

மாண்டநின் ஒழுக்கத்தான், மறு இன்றி, வியன் ஞாலத்து
யாண்டோரும் தொழுது ஏத்தும் இரங்கு இசை முரசினாய்'
(கலி. 100:1-6)

மீன்திகழ் விசும்பில் பாய்இருள் அகல
ஈண்டுச் செலல் மரபின் தன்இயல் வழாஅது
உரவுச் சினம் திருகிய உருகெழு ஞாயிறு
நிலவுத் திகழ் மதியமொடு நிலம் சேர்ந்தாங்கு (புற. 25:1-4)

'திங்கள் அன்ன வெண்குடை
ஒண்ஞாயிறு அன்னோன் புகழ் மாயலவே' (புற. 231:5-6)

'ஞாயிறு அனையை, நின் பகைவர்க்கு!
திங்கள் அனையை,எம்மனோர்க்கே' (புற. 59:6-7)

இங்ஙனமாகச் சூரிய சந்திரர் சிறப்புக்களை ஏற்றி மன்னர் முதலியோரைப் புகழ்தலால், இந்த இரு கோள்களிடமும் மக்கள் கொண்டிருந்த ஈடுபாடும் போற்றுதலும் புலனாம். ஒரு புறப் பாட்டு ஞாயிறு, திங்கள், மழை இம்மூன்றையும் முறையே ஓர் அரசனது வன்மை, மென்மை, கொடை என்னும் மூன்றற்கும் ஒப்பிட்டுக் கூறுகின்றது.

'ஞாயிற்று அனன வெந்திறல் ஆண்மையும்
திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்
வானத்து அன்ன வண்மையும், மூன்றும்
உடையை ஆகி, இல்லோர் கையற
நீ நீடு வாழிய, நெடுந்தகை'! (புற. 55:13-17)

ஆகவே, உலகை நிலைநிறுத்துவதில் ஞாயிறும் திங்களும் மழையும் முதல் இடம் பெறுதல் பெறப்படும். இளங்கோவடிகள் இம் மூன்றனையும் முதற்கண் பே.ாற்றித் தம் காவியத்தை தொடங் குதலும் ஈண்டுக் கருதத்தக்கது.

ஞாயிறு போற்றுதல்

ஞாயிற்றைச் சுட்டியுரைக்கும் பொழுதெல்லாம் பெயர் மாத்திரையால் ஞாயிறு எனச் சுட்டும் இடங்கள் சிலவே (கலி. 108:13; 143:22). இதன் இயல்பினையும் சிறப்பினையும் சுட்டும் அடைமொழி சேர்த்தே புலவர்கள் மிகுதியும் பாராட்டுகின்றனர். சூரிய மண்டிலத்தைக் குறித்துக் கூறும் தொடர்கள் இம் மண்டிலத்தின் இயல்புகளைச் சிறப்பித்துப் பேசுகின்றன. 'பகல்

செய் மண்டிலம்' (பெரும். 442), 'மலர்வாய் மண்டிலம்' (புற. 175:9), 'வீங்கு செலல் மண்டிலம்' (நெடுநல். 161, புற. 8:6), 'தேயா மண்டிலம்' (பரி.17:32), 'சுடர்மண்டிலம்' (அக. 367:1), 'சுடர்கெழு மண்டிலம்' (அக. 378:14), 'பருதிஅம் செல்வன்'' (அக. 360:2; கலி.26:2), 'மை அறு மண்டிலம்' (கலி. 141:12), ஞாயிற்றினின்று எழும் கதிர் ஒளியின் விளக்கம், வெம்மை முதலிய இயல்புகளைக் குறித்துப் பாராட்டிய தொடர்களும் உள. அவை வருமாறு: 'விரிகதிர் ஞாயிறு' (புற. 228:8), 'கதிர்ச் செல்வன்' (பட்டி. 122), அலங்கு கதிர்க் கனலி. (புற. 35:6), 'தெறு கதிர்க் கனலி' (புற. 397:24), 'அழல் போல் வெங்கதிர்' (அக. 1:10), 'உருகெழு ஞாயிற்று ஒண்கதிர்' (புற. 160:1), 'வெவ்வெஞ் செல்வன்' (பொருந. 136), வெம்மையால் தெறுதலால் 'கனலி' (புற. 35:6 கலி.16:12) என்றும் சூரியன் அழைக்கப் படுகிறான். அடைமொழியின்றிச் 'சுடர்' (கலி. 100:1) என்றும் சுட்டப்படுகிறான். இவனுடைய சுடர், உலகிற்கு இன்பத்தையும் சேமத்தையும் நல்குவது. எனவே, இவன் ''ஏமுற விளங்கிய சுடர்'' (நற். 283:7) என்று போற்றப்படுகின்றான்.

இவன் பல கிரணங்களையுடையான். எனவே, 'விளங்கு பகல் உதவிய பல் கதிர் ஞாயிறு' (அக. 99:1) எனப்படுகிறான். கதிர் பல பரப்பிப் பகலில் விளங்குதலும், தெற்கும் வடக்குமாகிய இடங்களில் மாறிமாறிவருதலும், திங்கள் மண்டிலத்திற்குப் புறங் கொடுத்தோடி மலையில் மறைதலும் என்னும் இவ்வியல்புகளைச் சுட்டிக்காட்டி, ஞாயிற்றை நோக்கி நீ எப்பொழுதும் பேராற்றலுடன் விளங்கும் சேரலாதனுக்கு எவ்வாறு ஒப்பாக இயலும் என்று பேசுகின்றார் கபிலர்.

> கடந்து அடு தானைச் சேர
> யாங்கனம் ஒத்தியோ? - வீங்குசெலல் மண்டிலம்:
> பொழுது என வரைதி; புறக் கொடுத்து இறத்தி;
> மாறி வருதி, மலை மறைந்து ஒளித்தி;
> அகல்இரு விசும்பினானும்
> பகல் விளங்குதியால் பல்கதிர் விரித்தே (புற. 8:5-10)

என்பது புலவர் வாக்கு.

ஞாயிறு ஒற்றைச் சக்கரமுடைய தேரையுடையவன். 'ஒருகால் ஊர்திப் பருதிஅம் செல்வன்' (அக. 360:2) என்பது அகநானூறு. ஓராழித்தேரில் பூட்டிய குதிரைகளைப் பற்றிய குறிப்பும் உளது. இவனது தேரில் பூட்டிய குதிரைகள் ஏழு என்பது மரபு. அக

நாலூற்றில் வரிசையாகச் செல்லும் குதிரைகளை இவன் ஓட்டிச் சென்று மேல்பால் மறைகிறான் என்று கூறுவதனால் பல குதிரைகள் என்பது தெளிவு.

> நிரை செலல் இவுளி விரைவுடன் கடைஇ,
> அகல் இரு விசும்பில் பகல் செலச் சென்று,
> மழுகு சுடர் மண்டிலம் மாமலை மறைய' (அக. 363:1-3)

என இவன் தனது தேர்க் குதிரைகளை ஓட்டிச் செல்லுதலைக் குறிப்பிடுகிறது. புகார்த் துறைமுகத்தில் ஒருபொழுதும் ஒழிவின்றி, இளைப்பின்றிச் சுங்கங்கொள்வோர் தொழில் புரிதலுக்குச் சூரியன் தேர்மா ஒப்புக் கூறப்பட்டிருக்கிறது.

> நல் இறைவன் பொருள் காக்கும்
> தொல் இசைத் தொழில் மாக்கள்
> காய் சினத்த கதிர்ச் செல்வன்
> தேர் பூண்ட மாஅ போல,
> வைகல் தொறும் அசைவு இன்றி,
> உல்கு செயக் குறைபடாது! (பட்டினப். 120-125)

இனி, சூரியனது தோற்றத்தையும், அவனது பகல் ஆட்சியையும், மாலையில் மறைதலையும் குறித்துப் புலவர்கள் கண்ட காட்சிகளுள் சிலவற்றைக் கவனிக்கலாம். உதயசூரியனது தோற்றத்திலும், அவன் அந்திச் செக்கர் வானில் திளைத்து, காலையில் உதித்து வரும்போது மெல்மெல முறுகிச் சிவந்த வெம்மை யெல்லாம் மென்மெல அகன்று, தளர்ந்து மறையும் காட்சியிலும் மனத்தைப் பறிகொடாதவர் யார்? காலை ஞாயிற்றையும், வைகறை வானத்தையும், நண்பகல் வெம்மை ஆட்சியையும், மாலையில் மென்மெல வெம்மை குறைதலையும், அந்திச் செக்கர் வானத்தையும் குறித்துப் பலரும் பல்வேறு வகையில் பாடியுள்ளனர்.

சூரியன் குணகடலில் தோன்றிக் குடகடலில் மறைகிறான் என்று ஒருசில பாடல்களில் தோற்ற மறைவுகள் சுட்டப் பட்டுள்ளன. பல பாடல்கள் அவன் மலையில் சென்று மறைகின்றான் என்று குறிப்பிடுகின்றன. கடலில் தோன்றி கடலில் சூரியன் மறைதலை அனுபவித்த புலவராயின், அவர் குமரித் துறையின் எல்லையிலே, பாரதத்தாயின் திருவடிகளிலே நின்று பார்த்து அனுபவித்தாராதல் வேண்டும். இன்றும் கன்னியாகுமரிக்குச் செல்லும் பலரும் கடலிலினின்று எழுந்து கடலில் மறையும் கதிரவன் காட்சியைத் தவறாது கண்டு மகிழ்கின்றனர்.

மலையில் மறைதலைக் கண்ட புலவர்களை மேலை மலைக்குக் கீழ்பால் தமிழகத்தவராகக் கொள்ள இடமுண்டு. கடலில் தோற்றம் கண்டவர் மேற்கேயும் கடலில் தானே அவன் மறைய வேண்டும் என்று தமிழகத்தின் குணகுட கடலாம் எல்லை தெரிந்த புலவர் பாடினராயின், அவர் குமரி எல்லைக்குச் செல்லவேண்டு வதில்லை.

கிழக்குத் திக்கிலே உலகைக் கவ்வியுள்ள இருளைத் தன் பொற்கிரணங்களாகிய கைகளினால் ஆரவுண்டு; உலகம் உவப்பக் கடலினின்றும் செந்நிற வண்ணம் எங்கும் பரவ, என்றும் விடியலில் காட்சி தருகிறான் சூரியன்.

'புல்இருள் விடிய, புலம்பு சேண் அகல,
பாய்இருள் நீங்க, பல்கதிர் பரப்பி,
ஞாயிறு குணமுதல் தோன்றியாஅங்கு' (பதிற். 59:4-6)

'அகல் இரு விசும்பில் பாய்இருள் பருகி,
பகல் கான்று, எழுதரு பல்கதிர்ப் பருதி' (பெரும். 1-2)

'குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்
பகல்செய் மண்டிலம் பாரித்தாங்கு' (பெரும். 441-442)

'பொய்தீர் உலகம் எடுத்த கொடிமிசை
மைஅறு மண்டிலம்' (கலி. 141:11-12)

'உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல் கண்டாஅங்கு' (முருகு. 1-2)

'மாக்கடல் நிவந்து எழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ' (புற. 4:15-16)

இந்தச் செஞ்ஞாயிற்றையே 'இளஞாயிறு' (சிறுபாண். 242; மலைபடு. 464) என்று அழைக்கின்றனர். செஞ்ஞாயிற்றின் கவின் தீட்டிக் காட்டும் அளவிற்கு உட்பட்டதல்லவே? நன்னன் சேய் நன்னன் தனது பகையாகிய இருளைப் போக்கிய செயலுக்கு, இருள்நீக்கி எழும் ஞாயிற்றை ஒப்பிட்டு.

'பாய் இருள் நீங்கப் பகல் செய்யா எழுதரும்
ஞாயிறு அன்ன, அவன் வசை இல் சிறப்பும்'
(மலைபடு. 84-85)

என்று பேசப்பட்டுள்ளான்.

ஞாயிறு தோன்றியதும் இரவில் மின்னிய விண்மீன்களின் ஒளி மழுங்கி விடுகின்றது. வான் எனும் நீல விதானத்தில் இரவில் காட்சிதந்த முத்துப்பந்தல் எங்கோ இமை நொடியில் மறைந்து போகிறது. ஏன், நிறைமதி கூடச் சூரியனின் கதிர் ஒளிக்கு முன் நிற்க முடியுமா? பகலில் தோன்றும் வான் மதி தன் ஒளியின் தண்மையும் வெண்மையும் முற்றும் மறைந்து பகலவனது கதிர் விளக்கின் முன் இருந்தவிடம் தெரியாமல் ஆகிவிடுகின்றது.

'மாஇரு விசும்பில் பல்மீன் ஒளி கெட
ஞாயிறு தோன்றியங்கு' (பதிற். 64:12-13)

'ஒண்சுடர் ஞாயிற்று விளக்கத்தான் ஒளிசாம்பும்
நண்பகல் மதியம்போல் நலம் சாய்ந்த அணியாட்கு'
(கலி. 121:17-18)

எனவரும் பாடற்பகுதிகள் ஞாயிற்றின் பேரொளிக்கு முன்னர் வான்மதியும் விண்மீனும் நலம் இழத்தலைச் சுட்டிப் பேசுகின்றன. ஆனால் உலகமோ எழுச்சி பெறுகிறது. இராப்பொழுதில் செயலற்று ஒடுங்கிய ஆற்றல்கள் எல்லாம் மீண்டும் எழுகின்றன. உலகம் தொழில்புரியத் தொடங்குகிறது. மரம் செடி கொடிகள் தழைக்கின்றன; மாவும் புள்ளும் மகிழ்கின்றன. இரவின் பனிக்குச் சாம்பியிருந்த மலர்கள் எல்லாம் பற்பல வண்ணங்களுடன் மலர்ந்து கதிரவனை வரவேற்கின்றன. நெருஞ்சிப் பூக்கள் எப்பொழுதும் சூரியனை எதிர்நோக்கி மலர்முகம் காட்டுகின்றன.

'பாழ்ஊர் நெருஞ்சிப் பசலை வான்பூ
ஏர்தரு சுடரின் எதிர்கொண் டாஅங்கு'
(புறம். 155:4-5)

'வானிடைச் சுடரொடு திரிதரும் நெருஞ்சி போல'
(அகம். 336:17-18)

'ஒழுகுவெள் அருவி ஓங்கு மலைநாடன்
ஞாயிறு அனையன் - தோழி! -
நெருஞ்சி அனைய என் பெரும்பணைத் தோளே'
(குறுந். 315:2-4)

என்பனவற்றால் நெருஞ்சிப் பூவின் இயல்பு விளங்கும். இங் கெல்லாம் நெருஞ்சி சூரியனை எதிர்நோக்கும் தன்மை ஒப்பி டப்படுதல் காணலாம். உலகிற்குப் பல்வகைச் செல்வங் களையும்

பாலிப்பது ஞாயிறே. உலகிற்கு ஒளிதந்து, ஒவ்வொரு பொருளுக்கும் ஊக்கம் தந்து, அவற்றை இயங்கச் செய்து, பல் வளமும் சிறக்க வைக்கும் ஞாயிற்றின் இயல்பினை,

'பயம்கெழு திருவின் பல்கதிர் ஞாயிறு
வயங்குதொழில் தரீஇயர், வலன் ஏர்பு விளங்கி,
மல்கு கடல் தோன்றியாங்கு' (அக. 298:1-3)

என்னும் அகநானூற்றுப் பாடற்பகுதியால் அறியலாகும்.

இங்ஙனம் இருட்பகை போக்கித் தோன்றிய இளஞாயிற்றுச் செல்வன் விசும்பில் படர்ந்து மேலெழுகின்றான். கரிகாலன் இளமை தொடங்கிச் சிறுகச் சிறுக வலிமை மேன்மேல் வளரத் தன் நாட்டைத் தோள் வலியால் கொண்டமைக்கு இளஞ்சூரியன் விசும்பில் மேன்மேலும் உக்கிரமுடன் எழுந்து செல்லுதலை உவமிக்கின்றார் முடத்தாமக் கண்ணியார்.

''பல்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி,
வெவ்வெஞ் செல்வன் விசும்பு படர்ந்தாங்கு,
பிறந்து தவழ் கற்றதன் தொட்டு, சிறந்தநன்
நாடு செகிற்கொண்டு நாள்தொறும் வளாப்ப''
(பொருந. 135-138)

இங்ஙனமாகச் சூரியன் வளர்ந்து மேலே எழுகின்றபோது உக்கிரமான வெயிலால் காய்கின்றான். இங்ஙனம் காய்கின்ற சூரியனைச் சினங்கொண்ட வேந்தர்க்கு ஒப்புரைக்கின்றனர்.

'அகல்இரு விசும்பின் பகல்இடம் தரீஇயர்;
தெறுகதிர் திகழ்தரும் உருகெழு ஞாயிற்று
உருபு கிளர் வண்ணம் கொண்ட
வான் தோய் வெண்குடை வேந்தர்தம் எயிலே'
(பதிற். 52:28-31)

தெறுகதிர்க் கனலி நண்பகலில் உச்சியை நண்ணுகிறான. உச்சி வேளையில் அவன் ஒருபக்கமும் சாய்தல் இன்றி நடுவு நிற்கிறான்.

'குடதிசை மாய்ந்து குணமுதல் தோனறி,
பாய்இருள் அகற்றும், பயம்கெழு பண்பின்,
ஞாயிறு கோடா நன்பகல் அமயத்து'
(பதிற். 22:32-34)

இங்ஙனமாகப் பகலவனைப் போன்று உச்ச நிலையிலே பிறர் பணிந்தொழுக அரசன் சிறந்து நிற்றல் வேண்டும் என வாழ்த்து கின்றார் ஒரு புலவர்.

'மாகம் சுடர மாவிசும்பு உகக்கும்
ஞாயிறு போல விளங்குதி, பல்நாள்'

(பதிற். 88:37-38)

எல்லாப் பொருள்களையும் விளக்கி, விசும்பிற்கும் ஒளிதரும் ஞாயிறுச் செல்வன் அறியாத பொருளும் உலகின்கண் உண்டோ? தலைவி ஒருத்தி தன் தலைவன் எங்கு இருப்பினும் அவனைக் காட்டியருள்க என்று ஞாயிற்றுப் புத்தேளிடம் வேண்டுகிறாள்.

'காணினும், என்னை அறிதிர்; கதிர் பற்றி,
ஆங்கு எதிர் நோக்குவன் - ஞாயிறே! - எம் கேள்வன்
யாங்கு உளன் ஆயினும் காட்டிமோ காட்டாயேல்,
வானத்து எவன் செய்தி நீ?' (கலி. 147 26-29)

கணவன் கோவலனை இழந்த கண்ணகி, தன் கணவன் கள்வன் அல்லன் என்று உலகிற்குக் காட்ட, காய்கதிர்ச் செல்வ னிடம் கேட்டு, அவன் மறுமொழி தந்த செய்தி சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது.

பகலில் பல்கதிர் விரித்துத் தன் ஆணை செலுத்தி விளங்கிய ஞாயிறு மாலையில் மலையின் பின்னே மறைந்து செல்கின்றது. 'மலை மறைந்து ஒளித்தி' (புற. 8:8) என்று அவனுக்கு ஒரு குறைவு போலப் புலவர் ஒருவர் பேசுகின்றார்.

'ஒருகால் ஊர்திப் பருதிஅம் செல்வன்
குடவயின் மா மலை மறைய' (அகம். 360:2-3)

'இலங்கு சுடர் மண்டிலம் புலம் தலைப் பெயர்ந்து
பல்கதிர் மழுகிய கல்சேர் அமையத்து!' (அகம். 367:1-2)

'அகன் ஞாலம் விளக்கும் தன் பல்கதிர் வாயாகப்
பகல் நுங்கியது போலப் படுசுடர் கல்சேர'

(கலி. 119:1-2)

'எல்லை பைப்பயக் கழிப்பி, குடவயின்
கல்சேர்ந் தன்றே பல் கதிர் ஞாயிறு' (அகம். 120:4-5)

'அகன் சுடர் கல்சேர்பு மறைய' (அகம் 47:9)

'நிரைசெலல் இவுளி விரைவுடன் கடைஇ
அகல்இரு விசும்பில் பகல் செலச் சென்று,
மழுகு சுடர் மண்டிலம் மாமலை மறைய' (அகம். 363:1-3)

ஞாயிறு மலையில் சென்று மறைதலைக் குறித்திருப்பது போலவே மேலைக் கடலிலும் இவன் மறைகின்றான் என்று ஒரு சில இடங்களில் கூறப்பட்டிருக்கிறது.

'நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்
வெண்தலைப் புணரிக் குடகடற் குளிக்கும்'
(புறம் 2:9-10)

'சுடர்கெழு மண்டிலம் அழுங்க ஞாயிறு
குடகடல் சேரும் படர் கூர் மாலையும்'
(அகம். 378:14-15)

சூரியன் மேலைக்கடலில் மறையும் காட்சியை வருணிக்கும் முரஞ்சியூர் முடிநாகராயரும் காவட்டனாரும் மலைநாட்டுப் புலவர்களாயிருத்தல் கூடுமா? இவருள் முன்னவர் உதியஞ் சேரலாதனைப் பாடியிருத்தலும், பின்னவர் தாம் பாடிய அந்து வங்கீரனை நோக்கி இரவலர்க்கே யானையோடு குதிரை, தேர் முதலிய பொருள்களையும் கொடுத்து இசை பெறுக என அறிவுறுத்துவதில், யானை சுட்டப்படுதலும் கொண்டு இவர் இருவரும் சேர நாட்டினராவரோ என்னும் ஐயம் எழ இடமுண்டு.

ஞாயிறு மறைந்ததும் அந்தியில் செக்கர் வானம் நெஞ்சை அள்ளும் இயற்கைப் பொலிவுடன் தோற்றம் அளிக்கிறது. அவ்வானத்தில் பிறை தோன்றும் காட்சியையும் காணுதல் கூடும்.

'எல்லுப்பட இட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்ற'
(புறம். 16:7-8)

'அவ் வாய் வ்ளர்பிறை சூடிச் செவ்வாய்
அந்தி வானத்து ஆடுமழை கடுப்ப' (பெரும். 412-413)

இங்ஙனமாக, உலகிற்கு எழுச்சியும் எழிலும் தரவரும் ஞாயிற்றைத் தெய்வமாகக் கொண்டு பலரும் புகழ்ந்து தொழுது போற்றினர்.

சூரியனுடைய வருகை உலகத்தார்க்கு எல்லாம் உவகை தருகிறது; உதயசூரியனை உலகோர் பலரும் புகழ்ந்து ஏத்தினர்.

உலகியல் அறியாதாரை மிகவும் சீறிக் கதிரவன் ஒறுப்பான் என்று ஆன்றோர் கருதினர். இதனைக் கேட்டறிந்த ஒரு தலைவி, தன்னைக் கைவிட்டுச் சென்ற தலைவனைச் சீறுகின்ற பொழுது ஞாயிறு மிக ஒறுக்கும் என்று அஞ்சி, ஞாயிற்றைச் சீறாதபடி இரந்து வேண்டிக் கொள்கின்றாள். இந்நிகழ்ச்சியை,

'பழிதபு ஞாயிறே! பாடு அறியாதார் கண
கழியக் கதழ்வை எனக் கேட்டு, நின்னை
வழிபட்டு இரக்குவேன் வந்தேன்' (கலி. 143:22-24)

எனவரும் கலித்தொகைப் பாடற்பகுதியில் காணலாம். 'ஞாயிற்றுப் புத்தேள்' என்று மக்கள் தொழுது ஏத்தக் கீழ்த் திசைக்கண்ணே என்றும் தோன்றி ஞாயிறு உலகிற்கு இன்னருள் புரிகின்றான்.

'பொய்தீர் உலகம் எடுத்த கொடிமிசை,
மைஅறு மண்டிலம் வேட்டனள்' (கலி. 141:11-12)

-ஓங்குதிரை
'முந்நீர் மீமிசைப் பலர் தொழத் தோன்றி,
ஏமுற விளங்கிய சுடர்' (நற். 283:5-7)

'உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு' (முருகு. 1-2)

திங்களைப் போற்றுதல்

பகற்பொழுதில் ஒளிதரும் ஞாயிற்றைப் போல இரவுப் பொழுதின்கண் ஒளிதருவது திங்கள். இரவு அரசனாக விளங்கும் திங்களை 'இரவுச் செய்யும் வெண் திங்கள்' (மதுரை. 8) என்று மாங்குடி மருதனார் குறிக்கின்றார். திங்களின் தன்மை ஞாயிற்றின் தன்மையின்னிறும் முற்றும் மாறுபட்டது. இதுபற்றியே ஒரு புலவர், 'விண் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து, முரண்மிகு சிறப்பின் செல்வன்' (நெடுநல். 161-162) என்று திங்களைக் குறிக்கின்றார். ஞாயிற்றின் வெம்மையை ஆற்றாது அலைந்த உலகிற்கு ஆறுதல் அளிப்பான்; தண்ணிலவைப் பொழிந்து திங்களஞ் செல்வன் தோன்றுகிறான். ஞாயிற்றின் ஆற்றலை உணர்ந்த மக்கள் திங்களின் தண்ணருளில் இன்பம் காண்கின்றனர். பால் போன்ற வெள்ளிய நிலாக்கதிரைச் சொரிந்து மன்பதைகளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்றான். திங்கள்

பொழியும் நிலாக்கதிரைப் பெண்களின் மார்பில் அணியும் முத்து மாலைக்கும், மலையிலிருந்து இழிந்துவரும் வெள்ளிய அருவிக்கும் ஒப்பிடுகிறார் ஒரு புலவர்.

-நம் இடைமுலைச்
சுணங்கு அணி முற்றத்து ஆரம் போலவும்
சிலம்பு நீடு சோலைச் சிதர் தூங்கு நளிப்பின்
இலங்கு வெள் அருவி போலவும்
நிலம் கொண்டனவால் திங்கள் அம்கதிரே (அகம். 362:11-15)

திங்களின் தண்கதிரையும் அதன் பால் போன்ற வெள்ளிய தன்மையையும் பாராட்டியுரைப்பார் போன்று இதற்குப் பல சிறப்புப் பெயர்களையும் அடைமொழிகளையும் சார்த்தி உரைப்பர். அவை வருமாறு: திங்கள் (*அக. 2:17; அக. 362:15; புற. 13:6; 102:6; 118:2; 232:5;* பதிற். *59:2;* பெரும். *11)* வெண்திங்கள் (புற. *400:1);* 'நெடுவெண் திங்கள்' (அக. *2:11);* மதி. (பெரும். *251;* சிறு. *219;* புற. *22:10; 160:8;* அக.*297:15;* பரி. *3:52;* கலி. *56:4; 104:2; 144:22; 147:30);* மதியம் (புற. *6:27; 67:4; 102:7; 299:11;* கலி.*121:17),* நிலா (அக.*67:4;* பதிற்.*31:11);* நிலவு (புற. *112:1, 37;* கதிர் (அக. *362:15);* பாற்கதிர் (பெரும். *250).*

பாற்கதிர் பரப்பும் நெடுவெண் நிலவினைப் பெறுவதற்கு முன்னும் பின்னும் திங்கள் தன் உருவத்தில் அடைகின்ற மாறுபாடுகள் பல. நெடுவெண் நில்வு கொண்ட அவன் தன் வடிவில் குறைந்து குறைந்து தன் உருவம் சிறிதும் வெளிப்படாவண்ணம் உவா நாளில் கரந்துவிடுதலும் உண்டு. ஒவ்வொரு திங்களிலும் மதியம் தன் உரு நிழல் சற்றும் தோன்றா வண்ணம் முற்றும் மறைந்து விடுதலும் உண்டு. தேய்தலும் பெருகலும் மாய்தலும் பிறத்தலும் ஆக ஒன்றற்கொன்று மாறுபட்ட இருவேறு தன்மைகளைத் தாம் அடைந்து, உலகின் வாழ்க்கை இயல்பை மக்களுக்குத் திங்கள் தேவன் கண்கூடாக உணர்த்தி வருகிறானாம்.

தேய்தல் உண்மையும பெருகல் உண்மையும்
மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்
அறியாதோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து (புற. 27:11-14)

என்று முதுமொழி பகர்கிறார் ஒரு புலவர்.

அமாவாசியை அன்று திங்களின் உருவம் முற்றும் மாய்ந்து விடுகிறது. அந்நாளின் பின்நாள் தொடங்கி பிறை பிறந்து வளர்ந்து வருகின்றது. 'பிறை பிறந்தன்ன பின் ஏந்து கவைக்கடை' (பெரும்.11) என்று யாழின் பின்புறத்தில் ஏந்தியிருக்கின்ற கவைத்தலையையுடைய கடைப்பகுதியை முதற் பிறைக்கு ஒப்பிடுகின்றார் பெரும்பாணாற்றுப்படைகாரர். மூன்றாம் நாளில் தோன்றும் பிறையைத் 'தொழுதுகாண் பிறை' (குறுந். 178:5) என்று உரைக்கின்றார் ஒரு புலவர். பிறையைத் தொழுது வணங்கும் மரபு அந்நாள் வழக்கில் மட்டுமன்று; இந்நாளிலும் இருந்து வருவதேயாகும். இங்ஙனம் பிறை தொழும் மரபு மகளிர்க்கே உரிய தனிப்பண்புமாகும்.

'வளை உடைத்தனையது ஆகி, பலர் தொழ,
செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி
இன்னாப் பிறந்தன்று பிறையே' (குறுந். 307:1-3)

'ஒள் இழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென் மாலை' (அக. 239:9-10)

'குடமுதல் தோன்றிய தொன்று தொழு பிறையின்
வழிவழி சிறக்க நின் வலம்படு கொற்றம்' (மதுரை 193-194)

மேற்குத் திக்கில் தோன்றும் பிறையே மேன்மேலும் பெருகி வளர்கின்றது. மேன்மேலும் ஆக்கம் சிறத்தற்கு இந்த வளர்பிறையை ஒப்புக் கூறுவது மரபு. பிறை சிறுவளைவுடன் கீற்றாகத் தோன்றி மேன்மேலும் உருவம் பெருகி வளர்ந்து வருகின்றது. இவ் வளர்பிறையை 'சிறு கோட்டுக் குழவித் திங்கள்' (பெரும். 383-384) என்று குழந்தையாகவே ஒரு புலவர் வருணிக்கின்றார். இக் குழவித் திங்கள் முக்கண்ணான் முடியில் சூடப்பெற்று மேலும் உயர்வு பெற்று இலங்குகிறது.

எட்டாம் பக்கத்துத் தோன்றும் அரைத்திங்களையும் சிலர் வருணித்துள்ளனர்.

'எண்நாள் திங்கள் வடிவிற்று ஆகி,
அண்-நா இல்லா அமை வரு வறுவாய்' (பெரும். 11-12)

அறையும் பொறையும் மணந்த தலைய,
எண்நாள திங்கள் அனைய கொடுங்கரைத்
தெள்நீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ'' (புறம். 118:1-3)

நிலா அரும்பும் பிறைமதியைக் குழந்தைக்குக் காட்டிக் குழந்தையுடன் விளையாட வருமாறு தாய்மார் விரலால் சுட்டி அழைத்தல் உண்டு. ஒரு தாய், 'என் மகனுடன் விளையாட வந்தால் உனக்குப் பால் தருவேன்' என்று இனிய மொழிகள் பேசுகிறாள். இத்தகைய ஒரு தலைவியின் செய்கையை வினை முடித்துத் தேரில் திரும்பிவரும் ஒரு தலைமகன் தன் தேர்ப்பாகனிடம் உரைக்கின்றான். இந்நிகழ்ச்சிச் சித்திரம் அகநானூற்றுப் பாடல் ஒன்றில் உளது. அது வருமாறு:

'கடவுக, காண்குவம் - பாக! ...

....

புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையின் தீவிய மிழற்றி,
முகிழ் நிலா திகழ்தரும் மூவாத் திங்கள்!
பொன்னுடைத் தாலி என் மகன் ஒற்றி,
வருகுவை ஆயின், தருகுவன் பால்' என
விலங்கு அமர்க் கண்ணள் விரல் விளி பயிற்றி,
திதலை அல்குல் எம் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே' (அகம். 54:6-22)

இங்ஙனமாக மக்கள் மதித்துப் போற்ற வளர்ந்து வரும் மதியம் பதினைந்தாம் நாளில் தனது முழு வடிவமும் வளர்ந்து நிறைவு பெறுகிறது. பிறையின் இருகோடுகளும் தோன்றாவண்ணம் ஒன்றாகப் பொருந்தி வட்ட வடிவம் திருந்திவிடுகிறது. இங்ஙனம் வடிவமும் வண்ணமும் நிறைவு பெறுதலை (ஊர் கொள்ளல்) என்பர் (அகம். 27; சிறு. 250-253). அதனால் நிறைமதியைக் 'கோடு கூடு மதியம்' என்றும் (புறம். 67;4; பதிற். 31:12) ஒரு புலவர் குறிப்பிட்டுள்ளார். திங்களின் நாள்கள் முற்றியபோது அது நிறைமதியாகக் காட்சி தருகிறது. இந் நிறைமதி பதினாறு கதிர்களும் நிரம்பப் பெற்றதாக விளங்குகிறது. நிறைமதி பெரிதாகத் தோன்றுவதனால் 'அகல் மதி' என்றும் வழங்கப்படுகிறது (கலி. 56:4). இந்த அகல் மதியே இனிய நிலாக்கதிரைப் பொழிந்து உலகை இன்புறுத்துகிறது. அதனால் இதனைப் 'பால்மதி' (கலி. 104:33; 105:46) என்றும் குறிப்பிடுவர். இங்கே கூறிய திங்களினுடைய வளர்ச்சியின் உச்ச நிலையைப் பின்வரும் பாடற் பகுதிகளிலே கண்டு மகிழலாம்.

மாக விசும்பின் வெண்திங்கள்...

மூ-ஐந்தான் முறை முற்ற,
கடல் நடுவண் கண்டன்ன' (புறம். 400:1-3)
'நாடு தலை அளிக்கும் ஒள் முகம் போல,
கோடுகூடு மதியம் முகிழ் நிலா விளங்கும்
மையல் மாலை' (புறம். 67: 3-5)

'மணிநிற மைஇருள் அகல, நிலா விரிபு,
கோடுகூடு மதியம் இயலுற் ங்கு' (பதிற். 31:11-12)

'நெடு வெண் திங்களும் ஊர் கொண்டன்றே' (அகம். 2:17)

'பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி,
உருவ வான்மதி ஊர்கொண்டாங்கு' (சிறுபாண். 250-251)

'திங்கள் நாள்நிறை மதியத்து அனையை' (புறம். 102:6-7)

சென்ற ஞாயிறு, நன்பகற் கொண்டு,
குடமுதல் குன்றம் சேர, குணமுதல்
நாள்முதிர் மதியம் தோன்றி, நிலா விரிவு,
பகல் உரு உற்ற இரவு வர' (மதுரை. 546-549)

'அகல் மதி, தீம் கதிர் விட்டது போல' (கலி. 56:4)

நிறைமதி நாளில் இருசுடரையும் ஏக காலத்தில் காண இயலும். ஞாயிறு குடதிசை மறையவும் நிறைமதி குணதிக்கில் தோன்றவும் ஆகிய காட்சியை உவவு நாளில் (பௌர்ணமி) காணலாகும். இங்ஙனம் ஒரு சுடரின் ஆட்சி தொடங்கும் வேளையில் மற்றொரு சுடர் தன் ஆட்சிப்பொழுது முடிவுற்று விடைபெற்றுச் செல்கிறது.

உவவுத் தலைவந்த பெருநாள் அமையத்து
இருசுடர் தம்முள் நோக்கி, ஒருசுடர்
புன்கண் மாலை மலை மறைந்தாங்கு (புற. 65:6-8)

என இருசுடரின் ஏககாலக் காட்சியை ஒப்புக் காட்டுகிறார் ஒரு புலவர்.

நிறைமதியின் தோற்றத்னத அரசரின் வெண்கொற்றக் குடைக்கு ஒப்பிட்டுப் பேசுவது புலவர் மரபு.

பாஅல் நின்று கதிர் சோரும்
வான் உறையும் மதிபோலும்
மாலை வெண்குடை நீழலான்' (புறம். 22:10-12)

வானத்து உச்சியில் தோன்றும் உவாநாள் நிறைமதி பிறைமதி போன்று தொழுதற்குரியதன்று. ஆயினும் அதன் தோற்றம் வளவனது குடையை ஒத்து விளங்கியதால், பாணன் தன் விறலியுடன் அதனைத் தொழுததாகக் கூறுகிறான். அவன் அதனைத் தொழுத காரணம் வளவன் வெண்கொற்றக்குடை போன்று காட்சியளித்தமையாம். இதனால் உவாமதி தொழத்தக்கது அன்று என்பதும் சிறப்பு நிலையில் அதற்கு அத்தகுதி தரப்பட்டது என்பதும் இந்நிகழ்ச்சியாற் பெறப்படும். இதனை நமக்கு விளக்கும் உறையூர் மருத்துவன் தாமோதரனார் வாக்கு வருமாறு:

'முந்நீர் நாப்பண் திமில் சுடர் போல,
செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்
உச்சி நின்ற உவவுமதி கண்டு,
கட்சி மஞ்ஞையின் சுரமுதல் சேர்ந்த,
சில்வளை விறலியும், யானும் வல் விரைந்து
தொழுதனம் அல்லமோ, பலவே-
....
வலன் இரங்கு முரசின் வாய்வாள் வளவன்
வெயில் மறைக் கொண்ட உருகெழு சிறப்பின்
மரலை வெண்குடை ஒக்குமால் எனவே? (புறம். 60:1-12)

திங்களில் குறுமுயல் என்னும் கறை படிந்து காணப்படும். பிறை வளரவளர இக்கறைபடு முயலும் வளர்ந்து வரும்.

'குறுமுயல் மறுநிறம் கிளர, மதி நிறைந்து
அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்' (அகம். 141:7-8)

என்பது குறுமுயலின் தோற்றத்தை விளக்குகிறது. இம் முயலின் செய்தியைக் கலித்தொகைப் பாடல் ஒன்று காட்டுகிறது. தலைவனைப் பிரிந்து அந்தி மாலையில் பெரிதும் வருந்தும் தலைவி, திங்களுடன் சேர்ந்துள்ள முயலை நோக்கி, 'இந்தக் கடல் சூழ்ந்த உலகங்களைத் திங்களின் உள்ளாக அமர்ந்து பார்த்துவரும் குறிய முயலே! என் நெஞ்சம் கவர்ந்து சென்ற எம் கணவன் இருக்கின்ற இடத்தைக் காட்டுவாய்' என்று வேண்டுகின்றாள். இந்த இடத்தில் அத் தலைவி திங்களுள் சேர்ந்துள்ள குறுமுயலை, காட்டு முயல் போலே கொண்டு, நீ அவனுள்ள இடத்தை எனக்குக் காட்டாவிடின் அதனைத் துன்புறுத்துவதாகச் சொல்வது ஒரு சுவையான நிகழ்ச்சி. அவளது அச்சுறுத்தலைக் கேட்டபின் மதி

மேகத்துள் புக, 'என்பால் கருணை கொண்டு நீ தேடிச் செல்கின்றாய் போலும் ' என்றும் கூறுகிறாள்.

பொங்கு இரு முந்நீர் அகம் எல்லாம் நோக்கினை
திங்களுள் தோன்றி இருந்த குறுமுயால்! -
எம் கேள் இதன் அகத்து உள்வழிக் காட்டீமோ?
காட்டியாய் ஆயின், கதநாய் கொளுவுவேன்;
வேட்டுவர் உள்வழிச் செப்புவேன் ; ஆட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் - மதிதிரிந்த
என் அல்லல் தீராய் எனின்.
என்று, ஆங்கே, உள் நின்ற எவ்வம் உரைப்ப, மதியொடு
வெண் மழை ஓடிப் புகுதி; சிறிது என்னைக்
கண்ணோடி னாய் போறி நீ. (கலி. 144:17-26)

பதினாறு கலைகளும் நிரம்பிய, பிறையாய் வளர்ந்த அழகிய குளிர்ச்சி மிக்க நிறைமதி தேவர்களுக்கு உணவாக அமைகிறது.

'அணி நிழல் வயங்கு ஒளி, ஈர்- எண் தீம் கதிர்,
பிறை வளர், நிறைமதி உண்டி,
அணிமணிப் பைம்பூண், அமரர்க்கு முதல்வன் நீ'
(பரி.3:51-53)

நிறைமதிக்குப் பின் அம்மதியின் பதினாறு கலைகளும் ஒன்றொன்றாகத் தேயத் தொடங்குகிறது. இங்ஙனம் தேய்தலும் வளர்தலும் திங்களின் இயல்பே. திங்கள் வளரும் பக்கத்தை 'அலர்தரு பக்கம்' என்றும், நிறைமதி உவாவைப் 'பெரும்பக்கம்' என்றும், அமரர்க்கு உணவாகித் தேயும் பக்கத்தை 'வழியது பக்கம்' என்றும், அமாவாசியை 'இருள் உவா' என்றும் பரிபாடல் சுட்டுகிறது. வையையில் நீர் பெருகுதல் குறைதலுக்கு மதியின் பெருக்க சுருக்கங்களை உவமை காட்டும் முகத்தான் திங்களின் இயல்புகளை நன்கு விளக்கியுரைக்கின்றார் கவிஞர்.

'ஆய் நாள் நிறைமதி அலர்தரு பக்கம் போல்,
நாளின், நாளின், நளிவரைச் சிலம்பு தொட்டு,
நிலவுப் பரந்தாங்கு, நீர் நிலம் பரப்பி,
உலகு பயம் பகர, ஓம்பு பெரும்பக்கம்
வழியது பக்கத்து அமரர் உண்டி
மதிநிறைவு அழிவதின் வரவு சுருங்க;

எண்மதி நிறை. உவா இருள் மதிபோல
நாள் குறைபடுதல் காணுநர் யாரே? (பரி. 11:31-38)

பாம்பு சேர் மதி (கிரகணம்)

மதியைப் பாம்பு பற்றுதல் பற்றிய செய்தி சங்கப் பாடல்களில் அங்கங்கே உவமையாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆனால், சூரியனை அரவு பற்றும் சூரிய கிரகணம் பற்றிய செய்தி சங்கப்பாடல்களில் எவ்விடத்தும் காணக்கூடவில்லை. பாம்பினால் பற்றப்படும் கிரகண காலச் சந்திரனை 'அரவு நுங்குமதி' (குறுந். 395:4; அக.313:7) என்றும், 'அரவுக் குறைப்படுத்த பசுங் கதிர் மதியம்' (நற். 377:6-7), 'பாம்பு ஊர்மதி' (நற். 128:2), 'பாம்பு சேர் மதி'(கலி. 15:17), 'அரவு செறி உவவு மதி' (பரி. 10:75), 'அரவின் வாய்க் கோட்பட்டுப் போதரும் பால்மதி' (கலி. 105:45-46), எனக் கவிஞர்கள் காட்டுகின்றனர். இதிலிருந்து உவாக்காலத்து உளதாகிய நிறைமதியே அரவினால் பற்றப்படுவது புலனாம். பாம்பு மதியைப் பற்றும். மெல்ல மெல்ல மதியைப் பற்றி விழுங்கி அதனை மறைக்கிறது. சூரியன் மெல்ல மெல்ல ஒளி மழுங்கி மறைதலை அரவின் வாயினுள் புகும் மதிக்கு உவமை காட்டி,

'உரவுக் கதிர் மழுங்கிய கல்சேர் ஞாயிறு
அரவு நுங்கு மதியின் ஐயென மறையும்' (அகம். 114:4-5)

என்று கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்து கிரகண காலத்தில் மதியில் ஒளி மழுங்கிப் போதலும் உணரலாம். இங்ஙனம் ஒளி குறையும் தன்மையை, 'பாம்பு ஊர் மதியின் நுதல் ஒளி கரப்ப' (நற். 128:2), 'அரவு நுங்கு மதியின் நுதல் ஒளி கரப்ப' (அக. 313:17) என ஒளி மழுங்குதலுக்கு உவமை காட்டுதல் புலப்படுத்தும். கூந்தலுடன் சேர்ந்து விளங்கும் மகளிரின் நெற்றியை அரவினால் விழுங்கிக் குறைக்கப்பட்டுள்ள திங்களோடு ஒப்பிடுதலினால் கூந்தல் போன்று கறுத்து நீண்ட பாம்பினால் ஒளித்திங்கள் பற்றப்பட்டுள்ள காட்சி புலனாம்.

அகல் இரு விசும்பின் அரவுக் குறைபடுத்த
பசுங் கதிர் மதியத்து அகல் நிலாப் போல;
அளகம் சேர்ந்த திருநுதல் (நற்..377:6-8)

என்பது அரவு பற்றி ஒரு பாதியை விழுங்கிய திங்களின் காட்சி, மதுரை மாநகரில் வையையில் புதுப்புனலாடி நீர்

விளையாட்டு நிகழ்ச்சி இழைத்த மகளிர் சிலர் உறையிலிருந்தும் மதிபோன்ற கிண்ணத்தைக் கையில் தாங்கி, அதில் வெம்மை தரும் மதுவை வார்த்து, தேவமகளிர் மதியை வாயில் வைத்து, அதன் கிரணங்களை உண்ணுவது போல வள்ளத்தை வாயில் வைத்து அம்மதுவை உண்டனர். இம்மகளிரின் கைகள் ஐந்தலை அரவைப் போலவும் அவர்தம் கைகளில் பற்றியிருக்கும் கிண்ணங்கள் முழுமதி போலவும் தோற்றமளிக்கின்றன என்கிறார் கவிஞர்.

'திகை முழுது கமழ, முகில் அகடு கழி மதியின்
உறைகழி வள்ளத்து உறுநறவு வாக்குநர்
அரவு செறி உவவுமதியென அங்கையில் தாங்கி,
எறி மகர வலயம் அணிதிகழ் நுதலியர்,
மதி உண் அரமகளென, ஆம்பல் வாய் மடுப்ப',
(பரி. 10:74-78)

இந்த வருணனையும் அரவு பற்றும் மதியின் தோற்றத்தை நம கண்முன் நிறுத்துகின்றது. இங்ஙனமே அரும்பு விரிந்த வெண்டாமரையானது நாட் காலையில் மலர்ந்த பூவில் சென்று தேனை நுகரும் நீலநிறமும் சிவந்த கண்ணும் கொண்ட வண்டுகளின் நிரையொழுங்கு திங்களைச் சேர்ந்து பற்றுகின்ற கரும்பாம்பிற்கு ஒப்ப உளது என்று,

முன் அரைத் தாமரை முகிழ் விரி நாட்போது
கொங்கு கவர் நீலச் செங்கட் சேவல்
மதிசேர் அரவின் மானத் தோன்றும' (சிறுவாண். 183-185)
எனவரும் சிறுபாணாற்றுப்படை அடிகள் அறிவிக்கின்றன.

இங்ஙனம் பாம்பினால் பற்றப்பட்டுத் துயருறும் துன்பத்தைப் பார்த்தும் வாளா இருப்பனோ, காவற் கடவுளாகிய நீல்நிற வண்ணனாகிய மால்? கரிய மால் வந்து வெளிய மதியின்மேல் பற்றியிருக்கும் கரும்பாம்பின் பிடியிலிருந்து அதனை விடுவிக்கின்றான். திருமால் செய்யும் இந்த அருட்செயல் கலித்தொகையில் ஓர் உவமை வாயிலாகப் புலப்படுகிறது. வேல் முனை போலும் கொம்பிற்கு அஞ்சானாய் பால் நிறம் போலும் ஓர் எருத்தின் கழுத்திலே பாய்ந்து பற்றுகிறான் ஓர் ஆயன். இங்ஙனம் பாய்ந்தவனின் செயலைப் பார்த்துப் பொறுக்கலாற்றாது ஒரு கரிய எருது, வெள்ளேற்றினைப் பற்றிய ஆயனைக் கோட்டால் குத்துகிறது. இந்த ஏறு தழுவும் களத்து நிகழ் காட்சி பால் போலும்

மதியைச் சேர்ந்து மறைத்த பாம்பினை, அது மறைத்த செயலினின்றும் அப்பாற் போக விடுவிக்கும் நீல்நிற மாயோனை ஒத்துக் காண்கிறது என்பது கவிஞர் தரும் ஒப்புமைக் காட்சி. ஏறு தழுவல் களத்தில் கண்ட அரவினைக் கோள்விடுக்கும் ஒப்புக் காட்சியைத் தீட்டிக் காட்டும் கலித்தொகைச் சித்திரம் வருமாறு:

> மேல்நிலை மிகல் இகலின், மிடைகழிவு இழிபு, மேற்சென்று
> வேல் நுதி புரை விறல் திறன் நுதி மருப்பின் மாறு அஞ்சான்,
> பால் நிற வெள்ளை எருத்தத்துப் பாய்ந்தானை
> நோனாது குத்தும் இளங்காரித் தோற்றம் காண்-
> பால் மதி சேர்ந்த அரவினைக் கோள் விடுக்கும்
> நீல்நிற வண்ணனும் போன்ம். (கலி. 104:33-38)

மதியின் அல்லல் கண்டு பூவுலக மாந்தரும் பலவாறு பேசிப் புலம்புகின்றனர். ஆனால் அவர்களால் யாது செய்ய இயலும்? பின், துயில் கொண்டு விடுகின்றனர். சான்றோர்களோ அத்துன்பத்தைத் தீர்க்க மாட்டாது போயினும் அந்த மதியின் மேல் தமக்குள்ள பெருவிருப்பத்தைத் தம் செய்கை மூலம் காட்டித் துன்புறுவர்.

> 'அரவு நுங்கு மதியிற்கு இவணோர் போலக்
> களையார் ஆயினும் கண்இனிது படீஇயர்' (குறுந். 395:4-5)

> 'திங்கள் அரவு உறின், தீர்க்கலார் ஆயினும்,
> தம் காதல் காட்டுவர் சான்றவர்' (கலி. 140:17--18)

இவற்றால் கிரகண காலத்தில் பூவுலக மாந்தரும் சான்றவரும் மேற்கொள்ளும் ஒழுகலாறும் ஒருவாறு ஊகித்து உணர்தல் கூடும்.

பிற கோள்கள்

இதுவரையில் கோள்களுள் என்றும் யாவரும் தொழும் ஞாயிறு திங்கள்களையும், திங்களை ஒரொருகால் நிறைமதி நாளில் வந்து பற்றும் பாம்புக்கோள் இரண்டினையும் கிரகணம் பற்றிய பகுதியிலும் பார்த்தோம். இனி, எஞ்சிய கோள்களாகிய செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்னும் ஐங்கோள்களையும் இப்பகுதியில் காணலாம்.

பதினோராம் பரிபாட்டில், மழை பெய்தற்குரிய நிலையில் கோள்கள் அமைய, சையமலை எனப்படும் மேற்கு மலையில் மழை பொழிகின்றது பற்றி உரைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் வெள்ளி, செவ்வாய், புதன், வியாழன் சனி, இராகு, கேது என்னும்

கோள்களின் நிலைகள் சுட்டப்பட்டுள்ளன. இவற்றொடு கார்த்திகை, திருவாதிரை, பரணிஎன்னும் நாள்களும் குறிக்கப் பட்டுள்ளன. இந்தக் கோள்களும் நாள்களும் மதியம் விசும்பில் திகழ, கார்த்திகை, திருவாதிரை, பரணி என்பனவற்றை முதலாகக் கொண்டு முறையே இடபம், மிதுனம், மேடம் என்னும் மூவகை வீதிகளில் ஒவ்வொன்றற்கும் ஒன்பது ஒன்பது நட்சத்திரங்களாக 27 நட்சத்திரங்களும் அமைந்துவரும் இராசிச் சக்கர நிலையும் இங்குக் காணலாம். இருசுடர் முதலிய கோள்கள் இலங்கும் மூவகை வீதிகளுள் இடபு வீதியில் கன்னி, துலாம், மீனம், மேடம் என்பவை சேரும். மிதுன வீதியாவது தேள்(விருச்சிகம்), வில்லு(தனு), மகரம், கும்பம் ஆம். மேடவீதி இடபம், மிதுனம், கற்கடகம், சிங்கம் என்பன. இங்கே கூறப்பட்ட ஒவ்வோர் இராசிக்கும் இரண்டேகால் நாள்கள்; எனவே, ஒவ்வொரு வீதியிலும் வரும் நந்நான்கு இராசியாகிய இவை ஒவ்வொன்றும் ஒன்பது நாள்கள் கொண்டனவாகின்றன. கோள்களுக்கு இடமாக அமைதலால் இப்பன்னிரண்டு இராசிகளையும் 'இருக்கை' எனப் பரிபாடல் குறிக்கிறது.

இங்கே பாம்பு மதி மறையவரும் நாளாகிய ஆவணி மாதத்து மதிநிறை நாளாம் அவிட்ட நாளில் இக் கோள்கள் தத்தமக்குரிய இராசிகளில் நிற்பது உணர்த்தப்பட்டுள்ளது. அதாவது நிறத்தை யுடைய வெள்ளி இடபத்தைச் சேர, செவ்வாய் மேடத்தைச் சேர, புதன் மிதுனத்தைச் சேர, கார்த்திகை உச்சமாக விடிதல் உண்டாக. வியாழம் சனியின் இல்லம் இரண்டாகிய மகர கும்பங்கட்கு உப்பால் மிதுனத்தைச் சேர, யமனைத் தமையனாகவுடைய சனி வில்லுக்குப் பின்னாகிய மகரத்தைச் சேர, இராகு மதியத்துள் மறையும்படி நின்றன. ''புலர் விடியல் அங்கி நிற்ப'' என்பதனால் ஆதித்தன் சிங்கத்தை அடைந்து நின்றனன் என்பது போதரும். இங்கே, 'பாம்பு மதியம் மறைய ஒல்லை வருநாள்'' என்றமையின், இக்காலம் ஆவணி மாதத்தின் மதிநிறை நாளாகிய அவிட்டம் உணரப்படும். ஆகவே மதியும் இராசியும் மகரத்து நிறக என்பதும், கேது அதற்கு ஏழாம் இடமாகிய கற்கடகத்து நிற்க என்பதும் பெறப்பட்டன. இவ்வகையாக நிற்கும் கோள் நாள்களின் நிலைமை யால் முறுகின் வெயிலையுடைய முதுவேனிற்குப் பின் வரும் கார்காலத்து மழை பெய்க என்னும் முறையால் சைய மலையின் மழை பொழிதலையும் அதனால், வையையில் நீர்ப்பெருக்கெடுத்து வந்ததையும் கவிஞர் குறிக்கின்றார். அவர்தம் உரை வருமாறு;

'விரிகதிர் மதியமொடு, வியல் விசும்பு, புணர்ப்ப,
எரி, சடை, எழில் வேழம், தீலையெனக் கீழ் இருந்து,
தெரு இடைப்படுத்த மூன்று ஒன்பதிற்று இருக்கையுள்
உருகெழு வெள்ளி வந்து ஏற்றியல் சேர,
வருடையைப் படிமகன் வாய்ப்ப, பொருள் தெரி
புந்தி மிதுனம் பொருந்த, புலர் விடியல்
அங்கி உயர்நிற்ப, அந்தணன் பங்குவின்
இல்லத் துணைக்கு உப்பால் எய்த, இறையமன்
வில்லின் கடை மகரம் மேவ, பாம்பு ஒல்லை
மதியம் மறைய, வருநாளில் - வாய்ந்த
பொதியில் முனிவன் புரை வ்ரைக் கீறி
மிதுனம் அடைய, விரிகதிர் வேனில்
எதிர்வரவு மாரி இயைக' என இவ் ஆற்றால்
புரை கெழு சையம் பொழி மழை தாழ,
நெரிதரூஉம் வையைப் புனல்' (பரி. 11:1-15)

இந்தப் பாடற்பகுதி கோள்களின் நிலையை எல்லாம் ஒருசேர நோக்கி, மழைக்கோள் நிலையை அறிவிக்கின்றது. இவ்வகையான மழைக்கோள் பற்றிய செய்திகள் பிற இடங்களிலும் காணப்படுகின்றன. மழை பெய்தற்குக் காரணமாக இருக்கும் வெள்ளியைச் 'சீர்சால் வெள்ளி' என்று பதிற்றுப் பத்து (24:24) குறிப்பிடுகிறது. மழைக்கோளாகிய வெள்ளி வடபக்கத்துத் தாழுமாயின் மழை உண்டாதலும், அது தெற்குப் பக்கம் எழுந்தால் மழையில்லையாதலும், நேரும். இதனைப் பின்வரும் பாடற் பகுதி சுட்டுதல் கவனிக்கத்தக்கது.

'வயங்கு கதிர் விரிந்து வானகம் சுடர்வர,
வறிது வடக்கு இறைஞ்சிய சீர்சால் வெள்ளி
பயம்கெழு பொழுதொடு ஆநியம் நிற்ப' (பதிற். 24:23-25)

'நிலம் பயம் பொழிய, சுடர் சினம் தணிய,
மயங்கெழு வெள்ளி ஆநியம் நிற்ப,
விசும்பு மெய் அகல, பெயல் புரவு எதிர,
நால் வேறு நனந்தலை ஓராங்கு நந்த' (பதிற். 69:13-16)

பயம் கெழு வெள்ளி ஆநியம் நிற்றலாவது உலகத்திற்குப் பயன் பொருந்திய சுக்கிரன் என்னும் கோள் மழைக்கே காரணமான மற்ற நாள் கோள்களுக்குச் செல்கின்ற நாட்களிலே நிற்ப என்பதாம்.

அழல் சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது
மழை வேண்டு புலத்து மாரி நிற்ப,
நோயொடு பசி இகந்து ஒரீஇ,
பூத்தன்று - பெரும! - நீ காத்த நாடே' (பதிற்.13:25-28)

என வரும் இப்பகுதியுள் 'அழல்' என்னும் செவ்வாய்க் கோள் சென்ற பக்கத்தில் சுக்கிரன் சேராமல் மழைக்குரிய பிற கோள்களுடன் இயைந்து நிற்றல் கூறப்படுதல் காணலாம். செவ்வாயும் சுக்கிரனும் சேர்ந்தால் மழை இலதாகும் என்பது சோதிட நூல் துணிபு. தாம் வேண்டியதை உணர்ந்து அளிக்கும் மன்னன் ஆதரவு இருக்கும்போது பொராப் பொருநராகிய இரவலர்க்கு வெள்ளி எங்கு நின்றால் என்ன? சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் பரிசிலர் தகுதி அறிந்து அவரவர் வேண்டியவற்றை அளிக்கும் இயல்பினைக் கூறவந்த புலவர் வெள்ளி எங்கு வேண்டுமானாலும் நிற்கட்டுமே என்கிறார்.

குணதிசை நின்று குடமுதல் செலினும்,
குடதிசை நின்று குணமுதல் செலினும்,
வடதிசை நின்று தென்வயின் செலினும்,
தென்திசை நின்று குறுகாது நீடினும்
யாண்டும் நிற்க வெள்ளி; யாம்
வேண்டியது உணர்ந்தோன் தாள் வாழியவே (புறம்.
386:20-25)

வெள்ளிக்கோள் தெற்கே ஏகுதல் மழை வளத்தைப் பாதிக்கும் என்பதனை,

அணங்கு கதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்
இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அம் தண் காவிரி வந்து கவர்பு ஊட்ட (புறம். 35:6-8)

மைம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்,
தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்
வயலகம் நிறைய புதல் பூ மலர (புறம். 117:1-3)

வெள்ளி தென்புலத்து உறைய, விளை வயல்,
பள்ளம், வாடிய பயன் இல் காலை' (புறம். 388:1-2)

கல் காயும் கடு வேனிலொடு
இரு வானம் பெயல் ஒளிப்பினும்

வரும் வைகல் மீன் பிறழினும்
வெள்ளம் மாறாது விளையுள் பெருக (மதுரைக். 106-109)
வசை இல் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கு ஏகினும் (பட்டின. 1-2)

என வரும் பாடற்பகுதிகள் கொண்டு அறியலாகும்.

சுக்கிரன் எனப்படும் கோள் வெண்ணிறம் வாய்ந்தது ஆனது பற்றியே இது 'வெண்மீன்', 'வெள்ளி' என்னும் பெயரிட்டு அழைக்கப்பெறுகின்றது. சூரியன் உதயமாவதற்கு முன்னாக ஞாயிற்றுப் புத்தேளுக்குக் கட்டியங்கூறி வருவது போல வைகறையில் காட்சி தருவது. எனவே, 'வைகுறு மீன்' என்றும் இதனைக் குறிப்பர். 'குற்றங் கூறுதல் இல்லாத புகழையுடைய விளக்கமான வெள்ளிமீன்' என்று பட்டினப்பாலை இதன் சிறப்பைப் பேசுகின்றது. இருள் செறிந்த விடியற் கருக்கலிலே விரிகின்ற வெள்ளிய கிரணங்களைக் கொண்டு எழுவது. 'விரிகதிர் வெள்ளி முளைத்த நள் இருள் விடியல்' (பொருந. 71-72) என்பது பொருநராற்றுப்படை. 'இலங்கு கதிர் வெள்ளி' (புறம். 35:7) என்பதும் இதன் ஒளிச்சிறப்பைக் காட்டும். வைகறைப் பொழுதின் வரவு கூறி வானத்தின் கிழக்குத் திக்கிலே இது காட்சிதரும் காலத்தில் பறவைகளும் துயிலெழுகின்றன; குரலெடுத்து வானவீதியில் புறப்படத் தயாராகின்றன. வெள்ளி எழுந்த மாத்திரையே புட்கள் உறக்கம் தெளிந்து குரல் கொடுக்கத் தொடங்குகின்றன.

'வைகுறு மீனின் தோன்றும்' (அக. 17:21)

'வைகுறு மீனின் பைபயத் தோன்றும்' (பெரும். 318)

'கயக்கணக் கொக்கின் அன்ன கூம்பு முகை,
கணைக்கால், ஆம்பல் அமிழ்து நாறு தண் போது,
குணக்குத் தோன்று வெள்ளியின், இருள்கெட விரியும்
(நற். 230:2-4)

'காதலி உழையளாக,
குணக்குத் தோன்று வெள்ளியின், எமக்கு மார் வருமே
(நற். 356:2-4)

'வெள்ளி தோன்ற, புள்ளுக்குரல் இயம்ப,
புலரி விடியல் பகடு பல வாழ்த்தி (புற. 385:1-2)

'வெள்ளியும் இருவிசும்பு ஏர்தரும்; புள்ளும்
உயர்சினைக் குடம்பைக் குரல் தோற்றினவே (புறம். 397:1-2)

வெள்ளியும் வியாழமும் முறையே அசுரர்க்கும் தேவர்க்கும் குருவாகக் கூறப்படும் பெற்றியர். இவர்கள் இருவரும், கள்ளை உணல் ஆகாது என்று நீக்கின தேவர்க்கும், அதனை உண்டலை நீக்காத அசுரர்க்கும் வரைதலும் வரையாமையும் ஆகிய அவ்விரண்டினையும் கைக்கொண்டு அறத்தொழிலாக இன்பமுறுத்தும் வியாழமும் வெள்ளியுமாகிய குருமார் இருவரும் செய்த, வேறுவேறு வழிமுறைகளை யாத்தனராம். வியாழமும் வெள்ளியும் ஆகிய இக் குருமார் இருவரும் இயற்றிய அரசியல் நூல்கள் முறையே 'பாருகற் பத்திய சூத்திரமும்', ' சுக்கிர நீதியும்' ஆம் என்பர். இவ் வியாழ, வெள்ளிகளை,

'நறவினை வரைந்தார்க்கும் வரையார்க்கும் அவை எடுத்து.
அறவினை இன்புறூஉம் அநதணா் இருவரும்'

எனவரும் கலித்தொகைப் பகுதி (கலி. 99:1-2) காட்டுகிறது.

செவ்வாய்க் கோள் செந்நிறம் வாய்ந்தது. 'செம்மீன்' என்று இது குறிக்கப்பட்டிருக்கிறது.

'முந்நீர் நாப்பண் திமில் சுடர் போல,
செம்மீன் இமைக்கும் மாக விசும்பின் (புற. 60:1-2)

என்பது புறம்.

'அழல் சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது' (பதிற். 13:25)

என வரும் பதிற்றுப்பத்துப் பாடலடியில் 'அழல்' எனக் குறிப்பிட்டிருப்பது இச் செவ்வாய்க் கோளினையே. நெருப்புப் போன்ற செந்நிறப் பிழம்பாய்த் தோற்றம் அளிப்பது இக்கிரகம் என்பது போதரும். இத்றகுப் 'படிமகன்' என்றும் (பரி.11:4) பெயருண்டு.

'புதன்' என்னும் கோள், 'புந்தி மிதுனம் அடைய' (பரி. 11:5). எனச் சுட்டப்பட்டிருக்கிறது.

சனிக்கோள் கருநிறம் கொண்டது. அதனால் இது 'மைம்மீன்' எனப்படுகிறது (புறம். 117:1).

'மைம்மீன் புகையினும்; தூமம் தோன்றினும்
தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்' (புறம். 117:1-2)

என்பர். சனிமீன் புகைக்கோளோடு கூடிப் புகைதலாவது இடபம், சிங்கம், மிதுனம் இவற்றோடு மாறுபடுதலாம். பாம்புக் கோள்களாகிய இராகு கேதுக்கள் திங்களை மறைத்தல் போன்ற செய்திகளைக் கிரகணம் பற்றி முன்னர்க் கூறியதனால் உணரலாகும்

நாள்கள்

சூரியன் மேலைக் கடலில் மூழ்கி மறைந்ததும் அந்திவானம் எங்கும் நட்சத்திர மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. எந்தப் பக்கம் பார்த்தாலும் வைரம் போன்று ஒளிவிடும் விண்மீன்கள்; இவை எல்லாம் வானக்கடலில் மிதந்து நீல வானிற்கும் மேக வெண்திரைக்கும் இடையில் பல்வேறு கோலம் செய்து உலகை அழகு மயமாக்குகின்றன. ஆதவன் ஆட்சியால் எழுச்சியுற்றுத் தொழில் மயமாகிப் பரபரப்புடன் சஞ்சரித்த உலகிற்கு அமைதி அளிக்கும் உலகின் எழில் எல்லாம் யாவரும் காண மேலே திரண்டெழுந்தாற் போன்ற காட்சிதரத் தொடங்குகின்றது மீன்பூத்த வானம்.

'மீன் பூத்து அவிர்வரும் அந்திவான் விசும்புபோல்'
(கலி. 103:13)

'வானம் மீன் பல் பூப்பின்' (புற. 129:7)

வானத்தைத் தொடுவது போன்று உயர்ந்து விளங்கும் மதிலின் உறுப்பாகிய ஞாயில் என்னும் சூட்டுகள் வானமீன் போன்று பலவாக அமைந்து காண்கின்றன என்கிறார் ஒரு புலவர்.

'வான் தோய்வு அன்ன புரிசை, விசும்பின்
மீன் பூத்தன்ன உருவ ஞாயில்' (புறம். 21:3-4)

நெடுங்கொடிகள் அசையும் உயர்ந்தோங்கிய மதிலின் மேலே இராப்பொழுதில் காவல் புரிவாரால் ஏற்றி நெருக்கமாக வைக்கப்பட்டுள்ள விளக்குகள் வானில் விளங்கித் தோன்றும் மீன்களைப்போல உள்ளன என்று வருணிக்கப்பட்டிருக்கிறது.

'நெடுங்கொடி நுடங்கும் வான்தோய் புரிசை
யாமம் கொள்பவர் நாட்டிய நளிசுடர்
வானக மீனின் விளங்கித் தோன்றும்' (அக. 114:9-11)

போர்க்களத்திலே மாற்றார் படையை வாள்வீசிக் கொன்றதனால் பெருகிய குருதி, அக்களத்தில் பதிந்துள்ள குதிரைக்

காலடிப் பள்ளங்களில் அங்கங்கே தேங்கி நின்று, வான மீனைப் போன்று காட்சி தருகின்றனவாம்.

போர் வேட்டு எழுந்த மள்ளர் கையதை
கூர் வாட் குவிமுகம் சிதைய நூறி,
மான் அடி மருங்கில் பெயர்த்த குருதி
வான மீனின் வயின்வயின் இமைப்ப
(அக. 144:14-17)

ஒரு தலைவன் அமர் விரும்பிப் பகைவரை அட்ட வெற்றிச் செல்வம் சுட்டிக் காட்டப்படுகிறது. ஒரு மன்னனது மலையை அகல நீள உயரத்தால் வானிடத்திற்கும் அம்மலையில் அமைந்த எண்ணிக்கையற்ற சிறிய தெளிந்த நீரையுடைய சுனைகளை, வானத்தில் விளங்கும் விண்மீனிற்கும் ஒப்புக் கூறப்பட்டிருக்கின்றன.

'வான் கண் அற்று, அவன் மலையே; வானத்து
மீன் கண் அற்று, அதன் சுனையே' (புறம். 109: 9-10)

முசுண்டைச் செடியின்கண் மலர்ந்து அணிசெய்யும் வெண்ணிறப் பூக்களுக்கு விண்மீன்களை ஒப்பிடும் மரபும் காணப்படுகிறது.

'மழை இல் வானம் மீன் அணிந்தன்ன
குழை அமல் முசுண்டை வாலிய மலர (அகம். 264:1-2)

'சுரிமுகிழ் முசுண்டைப் பொதிஅவிழ் வான்பூ
விசும்பு அணி மீனின் பசும்புதல் அணிய.. (அகம்.235:9-10)

இங்ஙனமாக வானத்தின்கண் வெண்ணிற மலர்களாய், முத்துப் பந்தல் போல் விண்மீன்கள் காட்சி நல்கிய போதிலும், அதனுடன் மதி என்னும் நாயகன் சேரும் போதுதான் மேலும் அவற்றின் அழகு பன்மடங்கு மலர்ச்சி பெறுகின்றது.

நல்லியக்கோடன் தன்னைச் சூழ இயல், இசை, நாடகத்தாலும் இனிய மொழிகளாலும் மகிழ்வூட்டும் ஆயத்தார்களுடன் வீற்றிருக்கின்ற காட்சி கலைகள் நிறைந்த நிறைமதி பல வான்மீன்களுக்கு இடையே விளங்குவது போல் உள்ளது என்று பாராட்டப்பட்டுள்ளது.

'பல் மீன் நடுவண் பால்மதி போல,
இன் நகை ஆயமோடு இருந்தோன்!'' (சிறுபாண். 219-220)

இங்ஙனமே, ஓவியத்து எழுதினாற் போன்றுள்ள நீண்ட வெருகுப் பூளையின் பூளைப் பூவை ஒத்த மயிருடன் கூடிய குட்டிகள் அத் தாயின்பின் சூழ்ந்திருப்பது திங்களைச் சூழ்ந்துள்ள விண் மீன் போன்று தோற்றம் அளிக்கிறதாம்.

'எழுதியன்ன கொடி படு வெருகின்
பூளை அன்ன பொங்கு மயிர்ப் பிள்ளை,
மதிசூழ் மீனின், தாய் வழிப் படூஉம்'. (அக. 297:13-15)

ஒருகளிறு வாளோர் சூழத் தன்னை அடுத்த பாகரையும் அறியாது கடலில் செல்லும் மரக்கலம் போல் போர்க் களத்தில் மதங்கொண்டு தலைமை தோன்றச் செல்லுகின்ற போக்கு,

'களிறே,முந்நீர் வழங்கு நாவாய் போலவும்.
பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்,
சுறவினத்து அன்ன வாளோர் மொய்ப்ப,
மரீஇயோர் அறியாது, மைந்து பட்டன்றே' (புறம். 13:5-8)

என்று வருணிக்கப்படுகிறது.

குமண வள்ளல் தான் நடுவண் இருக்கத் தன்னைச் சுற்றிலும் பொன்னாற் செய்யப்பட்ட சிறிய கலங்களைச் சூழவைத்துப் பரிசிலர்க்குப் பரிவுடன் உணவூட்டிய காட்சி, நிறைமதியை சூழ்ந்துள்ள விண்மீன்களை நினைப்பூட்டுகிறது. புலவர் பெருஞ்சித்திரனார் அவர் இந்த அருட்காட்சியை பாராட்டி,

'குய் கொள் கொழுந்துவை நெய்யுடை அடிசில்,
மதிசேர் நாள்மீன் போல, நவின்ற
சிறுபொன் நன்கலம் சுற்ற இரீஇ.
'கேடு இன்றாக, வாடுநர் கடும்பு' என
நட்டோர் நட்ட நல் இசைக் குமணன்',
அரிது பெறு பொலங்கலம் எளிதினின் வீசி, (புற:160:7-12)

என்று புகழ் பாடுகின்றார்.

மதிசேர் உரோகிணி

இதுவரையில் கண்ட வருணனைக் காட்சிகளில் விண்மீன்கள் சூழ, அவற்றிற்கு எல்லாம் நாயகனாக நாண்மதிவிளங்குவது தெளிந்தோம். விண்மீன்களுக்குள் மதிக்கு

உகந்த துணையாக அமைந்த சிறப்புறும் பேற்றைப் பெற்றது உரோகிணி. இது மதியை விட்டுப் பிரியாது அதனோடு சேர்ந்தே எப்பொழுதும் நிலைபெற்றிருக்கும். நாயகனைப் பிரியாது இந்நங்கை இருக்கும் தோற்றத்தைச் சித்திரமாகத் தீட்டி வைத்தும் போற்றினர். கட்டிலின் விதானத்திலே,

'விண் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து,
முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய,
உரோசிணி நினைவனள் நோக்கி, (நெடுநல்.161-163)

பாண்டியன் நெடுஞ்செழியனின் தேவி பிரிவுத்துயரால் உணர்ச்சி வசப்படுகிறாள் என்று நெடுநல்வாடை தெரிவிக்கின்றது. திருமணம் செய்வதற்குத் தேர்ந்தெடுக்கும் மணநாளாகத் திங்களை உரோகிணியுடன் கூடியிருக்கும் நாள் தேர்ந்தெடுக்கப்படுதலை அகநானூறு அறிவிக்கின்றது.

'அம் கண இரு விசும்பு விளங்க, திங்கட்
சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்து,
கடிநகர் புனைந்து கடவுட் பேணி.' (அக. 136·4-6)

இங்குச் சகடம் என்றது உரோகிணியை,

ஓணமும் ஆதிரையும்

நாள்களுக்குள்ளே தெய்வ சம்பந்தம் பெற்ற பெருமை உடையவை ஓணமும் ஆதிரையும்.

'கணம் கொள் அவுணர் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நல் நாள்', (மதுரை.590-591)

என மாயோனும்,

'ஆதிரை முதல்வன் (பரி.8:6)
'அரும்பெறல் ஆதிரையான்' (கலி. 150:20)

என்று கறைமிடற்றண்ணலும் சிறப்பாகப் புகழ்ந்து பேசப் படுவர். தெய்வத்தொடர்பால் இந்த இரு நாள்களும் நாள்களுக் குள்ளே 'திரு' என்னும் அடைமொழி பெற்றுத் 'திருவோணம்', 'திருவாதிரை' என வழங்கப்படுதலும் தனிச்சிறப்பு. இந்த நாள்களில் இந்த இருபெருந்தெய்வங்களுக்கும் விழா எடுத்துச்

சிறப்பு செய்தும் வந்துள்ளனர். (மதுரை. 590-599; பரி.11:74-92). இவ்விழாக் கொண்டாட்டங்களை அவ்வத்தெய்வங்களைப் பற்றிப் பேசிய இடத்து விரிவாகக் காணலாம்.

அறுமீன் (கார்த்திகை)

ஆண்டவன் தொடர்போடு ஓணமும் ஆதிரையும் நாள்களில் சிறப்புற்றது போலவே அருந்தவ முனிவர் தொடர்போடு ஒரு சில நாள்கள் உள. இவற்றுள் முதலாவதாகக் கவனிக்கத் தகுந்தது கார்த்திகை நாள். இந்த நாளுக்கு முனிவர் தொடர்பும் தெய்வத் தொடர்பும் உண்டு. முருகன் திருவவதாரத்துடன் இந்தக் கார்த்திகை மாதர் அறுவரின் தொடர்பு வருகிறது. இவர்கள் வானத்தின் வடபால் உறையும் எழுமுனிவர் தம் பத்தினிமாரில் அருந்ததி ஒழிந்த அறுவராவர். இவ்வறுவரும் அக்கினிவாய்ப்பெய்த அவி உணவை உண்டு அறுமுகப் பெருமானைக் கருவுயிர்க்கின்றனர். இமயத்து உச்சியில் சரவணம் என்னும் சுனையில், தாமரைபூப்பாயலிலே அப் பெருமானைப் பெற்றனர் என்பது பௌராணிக வரலாறு.

'வடவயின், விளங்கு ஆல், உறை எழுமகளிருள்
கடவுள் ஒருமீன் சாலினி ஒழிய,
அறுவர் மற்றையோரும் அந்நிலை அயின்றனர் -
....
பயந்தோர் என்ப. பதுமத்துப் பாயல் (பரி.5:43-49)

ஆகவே, முருகனை,

'அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ'. (முருகு. 255)

என்று போற்றுகிறார் நக்கீரர்.

கார்த்திகை நாள் அறுமீன்கள் சேர்ந்த ஒரு கூட்டமாகும். கார்த்திகைத் திங்களின் நிறைமதி நாள் இக் கார்த்திகை மதியுடன் சேர்ந்து திகழும்.

'மழை கால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறு நிறம் கிளர, மதி நிறைந்து
அறுமீன் சேரும் அகல் இரு நடுநாள். (அக. 141:6-8)

என்னும் அகநானூற்றுப் பாடல் இச் செய்தியினைத் தெரிவிக்கின்றது. புல்லிய கொடியினைக் கொண்ட முசுண்டை விசும்பில்

ஒவிரும் கார்த்திகை மீன்களைப் போல வெள்ளிய பூக்களை மலரப் பெற்றுள்ளன என்று ஒப்புக் காட்டப்பட்டுள்ளது.

'அகல் இரு விசும்பின் ஆஅல் போல,
வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை',
(மலைபடு. 100-101)

இஃது, 'அழற்குட்டம்' என்றும் வழங்கப்படும்.

எழுமீன் (சப்த ரிஷிமண்டலம்).

நற்றிணைப் பாடல் ஒன்று இந் நாளினைக் குறிப்பிடுகிறது. கடல் துறையில் சிறுவெண் காக்கைகள் நீரில் மூழ்கிக் குளித்தலை எழுமீன்களின் தோற்றத்துடன் ஒப்பிட்டுக் கூறுகின்றார். மாசு மறுவின்றி விளங்கும் நீலமணி போன்ற ஆகாயத்திலே தோன்றி உலகத்தாரால் தொழப்படும் தகுதியையுடைய எழுமுனிவரின் தோற்றம் போலேயாய் இராநின்றது இக் காக்கைகள் கடல் துறை படிதல் என்று கூறுவாராய்,

'மை அற விளங்கிய மணிநிற விசும்பில்
கைதொழும் மரபின எழுமீன் போல,
பெருங்கடற் பரப்பின் இரும்புறந் தோய,
சிறுவெண் காக்கை பலவுடன் ஆடும்
துறை புலம்பு உடைத்தே தோழி' (நற். 231:1-5)

என்று பேசுகின்றார். இம்முனிவரை

'ஏழு உறு முனிவர்'

என்று குறிப்பிடுகிறது (நற். 231:1-5; பரி.5;37). இவர்களுடைய பத்தினிமாரும் இவருடன் உடன் உறைபவராவர்.

'வடவயின், விளங்கு ஆல், உறை எழுமகளிருள்.' (பரி. 5:43)

என்பது பரிபாடல்.

வடமீன் (அருந்ததி)

வானத்து வடவயின் விளங்கும் ஏழு முனிவருள் வசிட்ட முனிவரின் பத்தினி; இவள் கற்பினுக்கு அருங்கலமாக எடுத்துப் பேசப்பெறுகிறாள். முருகக் பெருமானுடைய கருச்சேர்ந்த

அவியுணவை எழுமுனிவர் பத்தினியருள் இவள் ஒழிய ஏனையோரே அருந்துகின்றனர் என்னும் செய்தியால் எழுவருள் இவளுக்கு இருந்த ஏற்றம் புலப்படும்.

'வடவயின் விளங்கு ஆல் உறை எழு மகளிருள்
கடவுள் ஒருமீன் சாலினி ஒழிய
அறுவர் மற்றையோரும் அந்நிலை அயின்றார். (பரி. 5:43-45)

அருந்ததி வானத்தின் வடபகுதியில் விளங்கும் ஒரு சிறிய செம்மீன் என்று சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன. எங்கும் கற்பின் தெய்வமாக இவள் போற்றப்படுதல் நன்கு வெளிப்படுகிறது.

'பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையும் கற்பின், நறுநுதல்', (பெரும்.302-303)

'வானத்து அணங்கு அருங் கடவுள்' (அக. 16:17-18)

'இருண்டு தோன்று விசும்பின் உயர்நிலை உலகத்து
அருந்ததி அனைய கற்பின்
குரும்பை மணிப்பூண் புதல்வன் தாயே', (ஐங். 442:3-5)

'வட மீன் புரையும் கற்பின் மட மொழி'. (புற. 122:8)

'வட மீன் போல் தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள்
(கலி. 2:21)

'விசும்பு வழங்கு மகளிருள்ளும் சிறந்த
செம்மீன் அனையள், நின் தொல்நகர்ச் செல்வி',
(பதிற். 31:27-28)

'மீனொடு புரையும் கற்பின்
வாள்நுதல் அரிவையொடு காண்வரல் பொலிந்தே'
(பதிற். 89:19-20)

அடைமொழி யாதுமின்றி 'மீன்' என்றே போற்றத்தகும் கற்பு மீனாக இவள் பாராட்டப்படுகின்றமையும் தெரியவருகின்றது.

அகத்தியன்

'பொதியில் முனிவன் புரைவரை கீறி மிதுனம் அடைய'
(பரி. 11:11-12)

எனவரும் பரிபாட்டில் இந்நாள் சுட்டப்பட்டிருக்கிறது. அகத்தியன் என்னும் மீன் உயர்ந்த தன் இடத்தைக் கடந்து

மிதுனத்தைப் பொருந்தியதும் அதனால் சையமலையில் மழை வளம் வாய்க்கப்பெற்றதும் பேசப்பட்டுள்ளன.

மகவெண்மீன்

பொய்கைக்கு இம்மீன் ஒபபிடப்பட்டுள்ளது. மகம் என்னும் வெண்மீன் போன்ற வடிவுடன் இலங்கியது பொய்கை; அது திண்மை வாய்ந்த உயர்ந்த கரையை உடையதாக இருந்தது. இவ்வாறு பட்டினப்பாலையில் பொய்கைகளின் தோற்றம் உணர்த்தப்படும் இடத்தில், அதன் வடிவத்தை குறிக்கும் முகத்தான் மகநட்சத்திரம் குறிக்கப்பட்டிருக்கிறது.

'பொழில் புறவின் பூந்தண்டலை
மழை நீங்கிய மா விசும்பில்
மதி சேர்ந்த மக வெண்மீன்
உரு கெழு திறல் உயர் கோட்டத்து,
முருகு அமர் பூ முரண் கிடக்கை
வரி அணிசுடர், வான் பொய்கை. (பட்டின. 33-38)

பரணி முதலிய பிற நாள்கள்

பதினொன்றாம் பரிபாடலில் பரணி, அவிட்டம் முதலிய சில நாள்கள் பற்றிய குறிப்புகள் உள. எரி கார்த்திகை (பரி.11:2); சடை-திருவாதிரை (பரி.11:25) வேழம், - பரணி (பரி.11:27) முடப்பனையத்து நாள்-அனுடம் (புற.229:4); கடைக்குளத்துக் கயம்-புனர்பூசம் (புற.229:4); புறம்.229-ல் மேலும் மூலம், மிருக சீரிடம் என்னும் நட்சத்திரங்கள் பற்றிய குறிப்புக்கள் உள என்பர்.

பிறந்த நாளின் பிறக்கம்

மன்னன் வாழ்நாளுக்கு ஓர் இடையூறு உண்டாதலைக் கண்டு அஞ்சிய புலவர் ஒருவர் அவனுக்கு ஓம்படை கூறும்போது,

'நின்று நிலைஇயியர் நின் நாண்மீன், நில்லாது
படாஅச் செலீயியர் நின் பகைவர் மீனே' (புற. 24:24-25)

என்று கூறுகின்றார். இதன் கருத்தாவது, ''நினது நாளாகிய மீன் நின்று நிலைப்பதாக'' என்பதாம். இதனால் ஒவ்வொருவருக்கும் உரிய ஒரு பிறந்த நாள் சுட்டப்படுதலும், அது வாழ்த்தப் படுதலும் புலனாகும். பிறந்த நாளில் சிறப்புச் செய்து மகிழும் வழக்கமும் முன்பு உண்டு என்பதனை இந்நிகழ்ச்சி புலப்படுத்தும்.

விசும்பு வீழ் கொள்ளி (எரி நட்சத்திரம்)

உலகிற்கு உற்பாதமாக இந்த எரிவீழ் கொள்ளி வீழ்தலைக் கருதுவர். 'திசை இரு நான்கும் உற்கம் உற்கவும்' (புற. 41:4) என்று பகைவர் நாட்டில் இவ்வகை உற்பாதம் நிகழ்ந்து அவருக்கு அழிவு நேரும் என்பதைப் புலப்படுத்துவதாயிருக்கும் என்று குறிக்கப் பட்டிருக்கிறது. ஒரு தலைவன் ஏறிச் சென்ற தேர்ச்சக்கரம் பசும்பயிர்களை அழித்து செல்லும் செயலுக்கு இவ் விசும்புவீழ் கொள்ளியினால் நிகழும் அழிவு ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளது.

'குன்று இழி அருவியின் வெண் தேர் முடுக,
இளம் பிறை அன்ன விள்ங்குசுடர் நேமி
விசும்பு வீழ் கொள்ளியின் பைம்பயிர் துமிப்ப'
(குறுந். 189:2-4)

தேர்க்காலின் கீழ்ப் பசும்பயிர் அகப்பட்டு அழிதலை,

'இழை அணி நெடுந்தேர் ஆழி உறுப்ப,
நுண்கொடி மின்னின் பைம்பயிர் துமிய' (அக. 254:13-14)

எனவரும் அகநானூற்றடிகளாலும் பெறப்படும்.

கூடலூர் கிழார் என்னும் புலவர் விசும்பினின்று வீழ்ந்த ஓர் எரிகொள்ளி கண்டு, இதனால் தம் மன்னன் சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை ஏழுநாட்களுள் இறந்துபடுவன் என்று அஞ்சினாராம். மன்னன் கேடு இன்றி நோயையுடையன் அல்லனாக வேண்டும் என்னும் உள்ளத்தோடு மடிந்து வாழ்கின்றனர். அப்புலவர் அஞ்சியபடியே விண்வீழ்கொள்ளி வீழ்ந்த ஏழாம் நாளில் அம் மன்னன் இறந்துபடுகின்றான். அப்பொழுது அப்புலவர் பெருமான் மனம் நொந்து பாடிய கையறுநிலை பாடலிலே (புறம். 229) 'விண் வீழ் கொள்ளி' வந்து விழுந்த வகையையும், அதனால் நேர்ந்த விளைவுகளையும் சுட்டி உரைத்துள்ளார்.

நாள் கோள்களால் நலமும் தீங்கும் விளைதல்

நாளும் கோளும் நாள் தவறாமல், நொடி தவறாமல் தத்தம் வீதியில் விண்ணிலே இயங்கிவருவதினாலே உலகமும் ஒரு நிலையில் நிற்கிறதாம். இவற்றுள் ஏதேனும் ஒன்றின் நிலை தவறுமாயின், அதனால் உலகிற்கு கேடு உண்டாகும் என்னும் செய்தியும் தெரிய வருகிறது. மக்கள் தம் வாழ்க்கையில் நாள்

கோள்களினால் தடை உளதாகும் என்றும், நல்ல கோள்களின் நிலையிலேயே நற்காரியம் தொடங்குதல் வேண்டும் என்றும் கருதிவந்தமை ஒரு சில குறிப்புக்களினால் தெரியவரும். தோழி ஒருத்தி ஒரு தலைவனிடம், 'தலைவியை விட்டுப் பிரிந்து செல்லாதே; அங்ஙனம் பிரிந்து செல்லின் உன்னை நாளும் கோளும் தடுத்தலைச் செய்யும் என்று கூறுகின்றாள்.'

'நாளும் கோள்மீன் தகைத்தலும் தகைமே'' (கலி.5:9)

திருமணம் புரிதற்கு ஏற்ற காலமாக, மதியத்தை உரோகிணி சேரும் நாளைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

'கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடு இல் விழுப்புகழ் நாள் தலைவந்தென, (அக. 86:6-7)

இங்கே கோள் என்றது தீய கோள்களை, இங்ஙனம் தீமை பயவா நாள்கோள்களைத் தேர்ந்தெடுத்தல் அவற்றால் உளவாகும் நன்மை கருதியே ஆகும். உவாநாளில் பரதவர் கடலில் மீன் பிடிக்கச் செல்லுதல் தவிர்த்து ஊரின்கண் உண்டு மகிழ்ந்தமையை,

'புன்தலை இரும் பரதவர்
பைந்தழை மாமகளிரொடு
பாய் இரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது.
உவவு மடிந்து. உண்டு ஆடியும்' (பட்டின. 90-92)

என வரும் பட்டினபாலை அடிகளால் உணரலாம்.

நாளும் கோளும் நல்நிலையில் நிற்க மழை பொழிதலும், அதனால் உலகம் இன்பம் அடைதலும், அதன் நிலை மாற்றத்தால் மழையின்மையும் நேர்தலை பிற கோள்களைப் பற்றிப் பேசுமிடத்து விவரித்தோம். நாள் கோள்களின் நல்லியக்கத்தினால் நலம் விளைந்தமையை பின்வரும் மதுரைக்காஞ்சியடிகள் புலப்படுத்து கின்றன.

'ஓங்குதிரை வியன் பரப்பின்
ஒலி முந்நீர் வரம்பு ஆக.
தேன் தூங்கும் உயர் சிமய
மலை நாறிய வியல் ஞாலத்து,
வல மாதிரத்தான் வளி கொட்ப,
வியல் நாள்மீன் நெறி ஒழுக,

பகற் செய்யும் செஞ்ஞாயிறும்
இரவுச் செய்யும் வெண் திங்களும்
மை தீர்ந்து கிளர்ந்து விளங்க,
மழை தொழில் உதவ, மாதிரம் கொழுக்க
தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய,
நிலனும் மரனும் பயன் எதிர்பு தந்த' (மதுரை. 1-12)

எரிகொள்ளி வீழ்வதனால் பயிர் அழிதலும், அது வீழ்தல் தீமைக்கு ஓர் உற்பாதமாகக் கருதப்பட்டமையும் விண் வீழ் கொள்ளியைப் பற்றிப் பேசுமிடத்தும் கண்டோம். இங்ஙனமாக நாளும் கோளும் மக்களின் வாழ்க்கை விதியை முன்னின்று நடத்தும் முக்கிய பொருளாக அந்நாளில் நிலை பெற்றிருந்தமை தெளிவு.

காலச்சுழல்

நாள்கோள்களின் இயக்கத்தால் காலச்சக்கரம் சுழல்கிறது. ஞாயிறும் திங்களும் பகலிரவுகளை ஆக்குகின்றனர். திங்களின் பிறை வளர்ந்தும் தேய்ந்தும் முப்பது நாள்களைக் கொண்ட திங்களைத் தோற்றுவிக்கின்றன. திங்கள் பன்னிரண்டு என்பதும், அவற்றுள் தை, மாசி, பங்குனி, கார்த்திகை முதலிய மாதப்பெயர்களைச் சங்கப்பாடல்கள் குறிப்பதனாலும் ஓர் ஆண்டில் சித்திரைத் திங்கள் முதற்கொண்டு பங்குனி ஈறாக எண்ணும் தமிழ் ஆண்டின் மாதப்பெயர் வழக்கும் பழமையானவை என்பது போதரும்.

'குறுமுயல் மறுநிறம் கிளர, மதி நிறைந்து
அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்.' (அக.141:7-8)

'ஞாயிறு காயா, நளி மாரிப் பின்குளத்து
மாஇருந் திங்கள் மறுநிரை ஆதிரை. (பரி. 11:76-77)

'மழை நீங்கிய மா விசும்பில்
மதி சேர்ந்த மக வெண்மீன்' (பட்டின.34-35)

என்பன போன்றுவரும் குறிப்புக்களைக் கொண்டு ஒவ்வொரு திங்களிலும் நிறைமதி நாளில் சந்திரனோடு ஒரு நட்சத்திரம் சிறப்பாக உடன் சேர்தலும், அது கொண்டு மாதப்பெயர் வழங்கப்படுதலும் தெளிவுபடும். மேற்குறித்த பாடற் பகுதிகள்

முறையே கார்த்திகை, மார்கழி, மாசி என்னும் மாதங்களைக் குறிப்பிடுகின்றன. பாரி மகளிர் பாடிய புறப்பாடலில்,

'அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்' (புற.112:1)

என்றும்; 'இவற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்' (புற. 112:3) என்றும் 'திங்கள்' என்றும் பெயர் மாதத்தையும் சந்திரனையும் குறித்தல் காணலாம்.

''........வைதல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால் அன்னனோ' (புற. 87:2-4)

என்னும் பாடல் நாள், திங்கள் காலப் பாகுபாட்டை உணர்த்துகிறது.

ஓர் ஆண்டின் பருவ காலங்கள் தோன்றுவதற்கும் ஏதுவானவை கோள்களே. வெயில், மழை, பனி, என முப்பருவங்கள் முதன்மையானவை. இவற்றையே இளவேனில், முதுவேனில், கார் ,கூதிர், முன்பனி, பின்பனி என அறுவகைப் பருவமாகக் கொள்ளும் மரபும் உண்டு. இங்ஙனமே ஒரு நாளின் காலக்கூற்றினைக் காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம், வைகறை என ஆறு பகுதிகளாகப் பாகுபடுத்தியுள்ளனர்.

'முன்பகல் தலைக்கூடி, நன்பகல் அவள் நீத்து,
பின்பகல் பிறர்த்தேரும் நெஞ்சமும் ஏமுற்றாய்.''
(கலி.74:10-11)

''காலையும், பகலும், கையறு மாலையும்,
ஊர்துஞ்சு யாமமும், விடியலும் என்று இப்
பொழுது இடை தெரியின் பொய்யே காமம்.' (குறுந்.32;1-3)

என்னும் பாடற் பகுதிகள் ஒருநாளின் காலக்கூறுகளைச் சுட்டி உரைத்துள்ளன.

பொழுது, நாள், திங்கள், பருவம், ஆண்டு என்பவை ஒன்றுக்கொன்று கால அளவின் பெருக்கத்தைக் குறிப்பன. ஆண்டிற்கு அப்பாற்பட்ட பெருங்கால அளவு ஊழி, வெள்ளம் முதலியன.

'கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்
காண்டல் இல்லாது யாண்டு பல கழிய' (புற. 216:1-2)

'வாழும் நாளொடு யாண்டு பல உண்மையின்,
தீர்தல் செல்லாது என் உயிர்' (புற. 159:1-2)

'நின் நாள் திங்கள் அனைய ஆக திங்கள்
யாண்டு ஓரனைய ஆக; யாண்டே
ஊழி அனைய ஆக; ஊழி
வெள்ள வரம்பின் ஆக; என உள்ளி
காண்கு வந்திசின் யானே. (பதிற். 90:51-55)

'புகழ் நிறைந்த நல்மாந்தரொடு
நல் ஊழி அடிப்படர,
பல்வெள்ளம் மீக்கூற,
உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக!' (மதுரை. 20-23)

என்னும் பாடல் அடிகள் மேற்குறித்த காலப் பாகுபாட்டினைத் தெரிவித்தல் காணலாம். வெள்ளம் என்பது போன்றே நெய்தல் குவளை, ஆம்பல், சங்கம், கமலம் என்பனவும் காலத்தின் பேரளவைக் குறிக்கும் பெயர்களாகும்.

'வெள்ள வரம்பின் ஊழி' (ஐங்.281; 1)

'நாள் இடைச் சேப்பின், ஊழியின்நெடிதே' (ஐங்.482;4)

'அடை அடுப்பு அறியா அருவி ஆம்பல்
ஆயிர வெள்ள ஊழி
வாழி, ஆத, வாழிய பலவே!' (பதிற். 63;20-22)

நெய்தலும், குளளையும், ஆம்பலும் சங்கமும்,
மைஇல் கமலமும், வெள்ளமும் நுதலிய
செய்குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை' (பரி. 2;13-15)

மேற்கூறிய பரிபாடல் அடிகளுக்கு, 'நெய்தலும் குவளையும், ஆம்பலும் சங்கமும், கமலமும், வெள்ளமும் என குறித்திட்ட பெயர்களது அளவிற்றாகிய கால்வீட்டம் கழிந்த பின்' என்று விளக்கம் தருகின்றார் பரிமேலழகர். இவ்வாறு அளந்து எல்லைகாண இயலாதபடி காலவெள்ளம் சுழன்று செல்கிறது.

நிலம், நீர், நாள், கோள்கள் எல்லாமே ஏதோ ஒரு காலத்தில் முற்றும் அழிந்துபடுகின்றன. இதனை உலகமுடிவாகிய ஊழிக் காலம் என்பர். இக் காலத்தில் நிலமும் நீரும் தம் நிலை தடுமாறி அழிகின்றன.

'நிலம் திறம் பெயரும் காலை ஆயினும்' (பதிற். 63;6)

'எறிதிரைப் பெருங்கடல் இறுதிக்கண் செலினும்' (புற.)

மண்ணுலகம் மட்டுமா அழிகிறது. பொன்னுலகமும் கூட அழிந்து பாழ்படுகிறது.

தொல்முறை இயற்கையின் மதியொடு
..............மரபிற்று ஆக
பசும்பொன் னுலகமும் மண்ணும் பாழ்பட,
விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல' (பரி. 2;1-4)

இந்தப் பாடலடிகளுக்குப் பரிமேலழகர், 'மண்ணுலகமும் பசும் பொன்னுலகமும் பாழ்பட ஒன்றற்கொன்று மாறி வருவதலாகிய பழைய இயல்பினையுடைய மதியமும் ஞாயிறும் கெடுதலான் அழகிழந்த இயல்பிற்றாக விசும்பு கெட்ட ஊழிகள் முறை முறையாகக் கழிந்தனவாக', எனத் தரும் உரைவிளக்கமும் ஊழியில் எல்லாம் நிலைகுலைந்து கெடுதலைத் தெளிவாக விளக்குகிறது.

ஊழி முடிவில் கோளும் நாளும் நிலைகுலைதலைப் பின்வரும் சங்கப் பாடற் பகுதிகளும் விளக்குகின்றன.

'தீசெங் கனலியும், கூற்றமும், ஞமனும்,
மாசு இல் ஆயிரம் கதிர் ஞாயிறும், தொகூஉம்
ஊழி ஆழிக்கண்..............(பரி. 3;21-23)

'படர் அணி அந்தி, பசுங்கட் கடவுள்
இடரிய ஏற்று எருமை நெஞ்சு இடந்து இட்டு,
குடர் கூளிக்கு ஆர்த்துவான் போனம் (கலி. 101;24-26)

'மடங்கலும், கணிச்சியும், காலனும், கூற்றும்,
தொடர்ந்து செல் அமையத்து துவன்று உயிர் உணீஇய,
உடங்கு கொட்பன போல் புகுந்தனர், தொழூஉ'
(கலி. 103;20-22)

ஊழித்தீ கிளர்ந்து எழுந்து எழுந்து யாவற்றையும் பொசுக்குகின்றது.

.... பசும் பிசிர் ஒள் அழல்,
ஞாயிறு பல்கிய மாயமொடு சுடர் திகழ்பு,

ஒல்லா மயலொடு பாடு இமிழ்பு உழிதரும்
மடங்கல் வண்ணம் கொண்ட கடுந்திறல் (பதிற். 62;5-8)

'துஞ்சல் உறுஉம் பகல்புகு மாலை,
நிலம் பொறை ஒராஅ நீர் ஞெமரவந்து ஈண்டி,
உரவுத்திரை கடுகிய உருத்து எழு வெள்ளம்
வரையா மாதிரத்து இருள்சேர்பு பரந்து,
ஞாயிறு பட்ட அகன்று வரு கூட்டத்து
அம்சாறு புரையும் நின்தொழில் ஒழித்து,
பொங்கு பிசிர் நுடக்கிய செஞ்சுடர் நிகழ்வின்
மடங்கல் தீயின் அனையை
சினம் கெழு குருசில்: நின் உடற்றிசினோர்க்கே'

(பதிற். 72;8-16)

இங்ஙனம் நிலம், நீர், தீ, காற்று என்னும் பூதங்களும் ஞாயிறு திங்கள் முதலிய கோள்களும் நாள்களும் இடியும் ஊழி என்னும் ஒரு பெருங் காலப்பாகுபாட்டையும் கவிஞர்கள் காட்டியமை கண்டோம். இந்த ஊழிகளும் ஒன்றல்ல; நான்கு உளவாம்.

'நால்வகை ஊழி எண் நவிற்றும் சிறப்பினை' (பரி. 3;80)

எனத் திருமாலைப் போற்றும் தொடரினால் உணரலாம்.

மேலே நாம் கண்ட காலக் கணக்குகளை எல்லாம் அளந்தறியவல்ல அறிஞர்களும் அரசனுக்கு உற்ற துணைவரா யிருந்தனர். ஒருவருடைய வாழ்நாள் இத்துணைய என அறியும் ஆற்றல் இவர்க்கு உண்டு. ' நாழிகை வட்டிலின்' உதவியால் பொழுதினைக் கணக்கிட்டு அறிந்தனர். அந்நாள் மக்கள் நாழிகைக் கணக்கர் பொழுது அறிந்து மன்னருக்கு அவ்வப்போது உரைக்கும் வகையினை முல்லைப் பாட்டில் காண்கிறோம்.

'பொழுது அளநது அறியும், பொய்யா மாகக்கள்
தொழுது காண்கையர், தோன்ற வாழ்த்தி,
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்
குறுநீர்க் கன்னல் இணைத்து' என்று இசைப்ப

(முல்லை. 55-58)

இங்ஙனம் ஒருநாளின்கண் சென்ற பொழுதினை அறிவிக்கும் நாழிகைக் கணக்கர் போன்று, உலகையும், வானையும் அளந்தறியும் அறிவுடையாரும் அந்நாளில் இருந்தனர்,

'இரு முந்நீர்க் குட்டமும்,
வியல் ஞாலத்து அகலமும்,
வளி வழங்கு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்றாங்கு
அவை அளந்து அறியினும், அளத்தற்கு அரியை'

(புறம். 20;1-5)

நீர், நிலம், ஆகாயம் ஆகியவற்றை மட்டுமா அளந்தனர். ஆகாயத்தில் தோன்றும் ஞாயிறு, திங்கள் முதலிய ஒன்பது கோள்களையும் நலன்களையும் அவற்றின் இயக்கங்களையும், அவற்றின் அண்மையிலே சென்று, இத்துணைய என்று அளந்து அறிந்தாரைப் போலச் சொல்லும் தன்மையுடைய வானநூற் புலவர்களும் வாழ்ந்தனர். இவர்களின் இயல்பினை,

'செஞ்ஞாயிற்றுச் செலவும்,
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்பு சூழ்ந்த மண்டிலமும்,
வளி திரிதரு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்று இவை
சென்று அளந்து அறிந்தோர் போல, என்றும்
இனைத்து என்போரும் உளரே.'

(புறம். 30;1-7)

எனவரும் புறநானூற்றுப் பாடற்பகுதி எடுத்தியம்புகிறது.

11. நாள்முறை வழிபாடும் விழாக்களும்

பெருந்தெய்வங்களையும் சிறு தெய்வங்களையும் பற்றிப் பேசிய இடங்களில்தானே ஒரு சில தெய்வங்களை மக்கள் போற்றி வழிபட்டமையையும் பார்த்தோம். ஆங்குச் சுட்டப்பெறாதனவும் பொதுவகையாய் அமைந்தனவும் ஆன வழிபாட்டு முறைகளையும், தெய்வங்களுக்குப் பேரூர்களிலும் சிற்றூர்களிலும் எடுத்த திருவிழாக்கள் முதலியவற்றையும் இங்குக் காண்போம்.

மலைமுதல் கடல் வரையிலும் காணும் பல பொருள்களிலும் தெய்வக் காட்சியைக் கண்டனரேனும் பெருந்தெய்வங்களுக்கும் சிறு தெய்வங்களுக்கும் கோயில் எடுத்தும் வழிபட்டனர். மன்னர் காடு கெடுத்து மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாகச் செய்யும் பொழுது, வளம் பெருக்குவதற்கு அங்கங்கே நீர்நிலைகளையும் அமைத்தனர். ஊர்களையும் உண்டாக்கி, மக்களைக் குடியேற்றி, அங்கே அதன் நாயகமாகக் கோயிலையும் அமைத்து வந்துள்ளனர். பேரூர்களுக்குக் காவலாக ஊரைச் சூழப் பெருமதிலும் அதன் உச்சியில் எய்து மறைதற்கு ஏற்ற அம்புக் கட்டுகள் முதலிய மதிலுறுப்புகளையும் அமைப்பதும் அந்நாள் வழக்கமாகும். சோழ மண்டலத்தில் கரிகாலன் காடுகெடுத்து நாடாக்கிக் கோநகராகிய உறையூரை விரிவுபடுத்திய நிகழ்ச்சியைப் பட்டினப்பாலை பின்வருமாறு பேசுகிறது:

'காடு கொன்று நாடு ஆக்கி,
குளம் தொட்டு வளம் பெருக்கி,
பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி,
கோயிலொடு குடி நிறீஇ,
வாயிலொடு புழை அமைத்து,
ஞாயில் தொறும் புதை நிறீஇ,
பொருவேம் எனப் பெயர் கொடுத்து,
ஒருவேம் எனப் புறக் கொடாது
திருநிலைஇய பெருமன் எயில்' (பட். 283-291)

இங்கே கோயிலொடு குடிநிறீஇயமை கவனிக்கத்தக்கது.

மேலும், கோயில் ஊர் வாழ் மக்கள் யாவரும் வந்து வணங்கத் தக்க வகையில் அதன் நடுநாயமாகவும் அமைக்கப்பட்டிருந்தது.

மதுரை மாநகரின் கோயில் அமைப்பும் ஊர் அமைப்பும் பற்றிப் பரிபாடல் தரும் செய்தியால் இதனை ஊகித்து உணரலாம்.

'மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீர்ஊர்; பூவின்
இதழகத்து அனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட்டு அனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்தமிழ்க் குடிகள்' (பரி.தி.8:1-5)

கூடல்மாநகர் திருமாலின் உந்தித்தாமரை போலுள்ளதாம்; அப்பூவின் நடுவில் அமைந்திருக்கும் கொட்டை போல உள்ளதாம் இறைவன் திருக்கோயில்; தாமரைக் கொட்டையைச் சூழவிருக்கும் பூவிதழ்போலவும் மகரந்தம் போலவும் தெருக்களும் குடியிருப் பிடங்களும் அமைந்துள்ளன என்கிறார் கவிஞர். தெய்வத் திருக்கோயில் காட்சிக்கு இனியதாய் விளக்கம் தரும். அங்கே சுற்றிலும் சோலை சூழ்ந்திருக்கும்; வழிபடுவார் கொண்டுவந்து இட்ட பூக்கள் பல வண்ணங்களுடன் மிளிரும். காட்டின் காட்சி அழகிற்குத் தெய்வமுறையும் கோயிலில் காணும் பூக்களை உவமிக்கிறார் ஒரு புலவர்.

'மராஅ மலரொடு விராஅய், பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்
நன்றே, கானம்.......' (அகம். 99;8-10)

என்பது புலவர் வாக்கு.

கோயில்களில் வழிபட்ட தெய்வங்கள் அவ்வவர் மனப்பான்மைக்கு ஏற்றவண்ணம் பல்வகை உருவங்களை உடையனவாயிருந்தன. தனக்கோர் வடிவமும் பெயரும் இன்றிக் கடவுள் தன் அன்பர் மனம் கொண்ட வகையில் எல்லாம் காட்சியளிக்கிறானாம். இதனால் 'அவன் வடிவும் எண்ணிக்கையுட்படுவன அல்ல. 'இனைத்து என எண் வரம்பு அறியா யாக்கையை' (பரி. 3;45). 'மனக்கோள் நினக்கு என வடிவுவேறு இலையே' (பரி. 4;56) என்பனவற்றால் வழிபடும் அன்பர் மனத்திற் குறிக்கொள்ளும் வடிவமே அவன் வடிவம்; அன்றி அவனுக்கு என ஒரு தனி வடிவு இல்லை. அவரவர் தாம் தாட அறிந்தவாறு பல்வேறு வடிவுகளில் அவனை வழிபட்டனர்.

'பரவியும், தொழுதும், விரவுமலர் தூயும்,
வேறுபல் உருவின் கடவுட் பேணி

நறையும் விரையும் ஓச்சியும்' (குறிஞ்சி. 5-7)

என்பது குறிஞ்சிப்பாட்டு. இதனால் வேறுபட்ட வடிவினை யுடைய பல தெய்வங்களைத் தூபங்களும் சந்தனம் முதலியனவும் கொடுத்தும், துதித்தும், வணங்கியும், பற்பல பூக்களைச் சிதறி வழிபட்டும் வந்தமை புலனாம். அன்றியும், வீடுகளிலும் மன்றங்கள், பொதியில்கள் முதலிய இடங்களில் சுவரில் வண்ணங்கொண்டு எழுதப்பட்ட தெய்வ உருக்கள் தொழப்பட்டமையும், பொதியில்களில் கந்து எனப்படும் தறிகள் நட்டு வணங்கியமையும் முன்பு பார்த்தோம்.

தெய்வங்கள் பல தொழப்படினும் வழிபடு தெய்வமாக அவரவர் தமக்கு ஒரு தெய்வத்தைக் கொண்டிருந்தனர். குன்றக் குறவர் முருகனையும், முல்லை நிலத்து ஆயர் மாயோனையும் தம் குலத்திற்கு உரிய வழிபடு தெய்வமாகக் கொண்டு போற்றிய செய்திகள் பல சங்கப் பாடல்களில் காணலாகும்.

'அழிவிலர் முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண் கண்டாஅங்கு' (நற். 9;1-2)

'வழிபட்ட தெய்வம்தான் வலிஎனச் சார்ந்தார்கண்
கழியும் நோய் கைம்மிக அணங்கியது போல'
(கலி. 132;21-22)

'வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவமுடை யோர்க்கு' (பதிற். 74;25-26)

என வழிபடு தெய்வம் சிறப்பாக எடுத்துப் பேசப்படுதல் கவனிக்கத்தகும்.

வழிபாட்டிற்குப் பல்வகைச் சாந்து, புகை, விளக்கு, மலர் தெய்வத்திற்குப் படைப்பதற்குரிய பால்மடை, பலிச்சோறு முதலிய பலவும் கொண்டு செல்லுதல் மரபு.

'வேறுபடு சாந்தமும்; வீறுபடு புகையும்,
ஆறுசெல் வளியின் அவியா விளக்கமும்,
நாறு கமழ் வீயும், கூறும் இசை முழவமும்,
மணியும், கயிறும், மயிலும், குடாரியும்,
பிணிமுகம் உளப்படப் பிறவும், ஏந்தி;
அருவரைச் சேராத் தொழுநர்' (பரி. 8;97-102)

'யாழ்இசை இன வண்டு ஆர்ப்ப. நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய்' (முல்லை. 8-10)

'கடுஞ்சினம் கடாஅய் முழங்கும் மந்திரத்து
அருந்திறல் மரபின் கடவுட் பேணியர்
உயர்ந்தோர் ஏந்திய அரும்பெறற் பிண்டம்' (பதிற். 30;33-35)

'கணம் கெழு கடவுட்கு உயிர்ப்பலி தூஉய்ப்
பரவினம் வருகம் சென்மோ' (நற். 358;6-7)

இங்கே காட்டிய பாடற்பகுதிகள் கடவுட் பரவ மக்கள் கொண்ட பொருள்களை நமக்குத் தெரிவிக்கின்றன. இவற்றுள் பல்வகை மலர்களாலும் மாலைகட்டித் தெய்வத்திற்கு அணிதலும், பூக்களைக் கொண்டு அருச்சித்தலும் செய்து வழிபட்டனர். 'பூப்பலி விட்ட கடவுளைக் கண்டாயோ?' (கலி. 93;24); 'பல்மலர் சிதறிப் பரவுறு பலிக்கே' (நற். 322;11-12) என்பன மலரிட்டு அருச்சித்து வழிபடுதலைக் குறிக்கும். பல்வகையான மலர்களையும் மக்கள் பூசைக்கு மேற்கொண்டனர். குறிஞ்சிப்பாட்டில்,

- வள் இதழ்
ஒண்செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண்கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,

என்று இவ்வாறாக நீரிலும் நிலத்திலும் கொம்பிலும் கொடியிலும் மலரும் பல வண்ண மலர்களை (61 முதல் 96 வரை) 36 அடிகளிலே கபிலர் தொகுத்துக் கூறுதல் படித்து மகிழத்தக்கதொரு பகுதி. தெய்வத்திற்கு இன்ன மலர் என்று இல்லை; எருக்கம் பூவைக்கூடக் க்டவுளர் விரும்புவராம்.

'நல்லவும் தீயவும் அல்ல குவி இணர்ப்
புல்இலை எருக்கம் ஆயினும், உடையவை
கடவுள் பேணேம் என்னா' (புற. 106;1-3)

ஆயினும் ஒருசில மலர்கள் சிறப்பாகக் கொள்ளப்படும்.

....குருந்தே, முல்லை என்று
இந்நான்கு அல்லது பூவும் இல்லை' (புற. 335;2-3)

'கடவுட் காந்தள்' (அக..152;17)

'திணர்இதழ்க் குவளைக் கடி வீ (மலைபடு. 189)

என முல்லை, குருந்து, காந்தள், குவளை என்னும் மலர்கள் சிறப்பாகக் கொள்ளப்படுகின்றன.

எல்லாப் பூக்களிலும் தாமரைப்பூ தெய்வத்தன்மை பொருந்திய பூவாகப் போற்றப்பட்டது. 'பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை' (அப்பர் தேவாரம்) என்றும், 'பூ எனப்படுவது பொறிவாழ் பூவே' என்றும், தாமரைப் பூவை ஏனைப் பூக்களில் எல்லாம் சிறப்பாக வைத்து ஆன்றோர் போற்றியுள்ளனர். சங்கப்பாடல்களும் தெய்வத் தன்மையோடு கூடிய தாமரைப்பூவின் சிறப்பைப் பலவாறு போற்றியுள்ளன;

'வருமுலை அன்ன வண்முகை உடைந்து
திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை' (சிறுபாண். 72-73)

'நீத்துடை நெடுங்கயம் தீப்பட மலர்ந்த
கடவுள் ஒண்பூ அடைதல் ஓம்பி' (பெரும்பாண். 289-290)

'கடவுட் கயத்து அமன்ற சுடர் இதழ்த் தாமரை' (மதுரை. 710)

எனவே, தாமரைப்பூ தெய்வங்களுக்குரிய பூக்களுள் சிறப்பாகக் கொள்ளப் பெற்றது என்பது போதரும், வாசனை மலர்கள் பலவற்றையும் சேர்த்துச் செய்த மலர் மாலைகளோடு, மலர்களின் இடையிடையே பச்சிலைகளையும் சேர்த்துக் கட்டிய மாலைகளையும் ஆக்கித் தெய்வத்திற்குச் சாத்தி மகிழ்ந்தனர்.

'நறுவிரை தெளித்த நாறு இணர் மாலை' (அக. 166;5)

'புலராப் பச்சிலைஇடைஇடுபு தொடுத்த
மலரா மாலைப் பந்து கண்டன்ன' (புற. 39;12-13)

என்பவற்றால் பச்சிலை கலந்து கட்டிய கதம்பமாலை பயன்படுத்தியமை தெரியவரும். 'கண்ணி' எனப்படும் தலை மாலைகளும் சூட்டி மகிழ்ந்தனர். மலர்மாலைகளில் நறுமணப் பொருள்களைத் தெளித்தலும் உண்டு என்பது 'நறுவிரை தெளித்த' என வரும் அடைமொழியாற் புலப்படும்.

நடுகல்லிற்கு நீராட்டி தூப தீபங்களுடன் பலி முதலியன இட்டு வணங்குதல் (புற. *329;1-5*), அரசனுக்கு உரிய முரசத்தை நீராட்டிப் போற்றுதல் (புற. *50:1-5*) என்னும் வழக்கங்களைப் பார்க்குமிடதது, தெய்வத் திருவுருவங்களுக்கு நீராட்டுதலும் பண்டிருந்தது எனக் கொள்ள இடமுண்டு, நீராட்டி, மலர் அணிந்து, விளக்கேற்றி. தூபம் புகைத்து உயரிய பொருள்களைப் பலியாகவும்

படைக்கின்றனர். இப்பலி 'தெய்வமடை' (பெரும்.233) எனப்படும். மன்றங்களிலும் வெறியாடும் களங்களிலும் வழிபட்ட தெய்வங்களுக்குக் குருதிப் பலியும் செய்கின்றனர்.. அரிசியைப் பலியாகச் சிதறுதல், ஆட்டு மறியை அறுத்தல், மறியின் குருதியைச் சோற்றுடன் கலந்து திரளையாகச் செய்து பலி தூவுதல், கள் வைத்தல் முதலியன உண்டு. பலி இடுதற்குப் பலி பீடமும் அமைக்கப்பட்டிருந்தது. (அக. 167;14-16).

'வால் அரிசிப் பலி சிதறி' (பட்டினப் . 165)

'மறிக்குரல் அறுத்துத் தினைப்பிரப்பு இரீஇ' (குறுந். 263;4)

'பாப்புக் கடுப்பு அன்ன தோப்பி வான் கோட்டுக்
கடவுள் ஓங்கு வரைக்கு ஓக்கி' (அக. 348;7-8)

'நெய்த்தோர் தூஉய நிறைமகிழ் இரும்பலி' (பதிற். 30;37)

'செஞ்சோற்ற பலி' (பொருந. 183)

'காவல் மன்னர் கடைமுகத்து உகுக்கும்
போகு பலி வெண்சோறு' (புற. 331;11-12)

'மடை அடும் பாலொடு கோட்டம் புகின்' (கலி. 109;19-20)

'உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்' (அக. 166;7)

மேலும், விழாக்காலங்களில் குயவன் கள்ளும் மற்றும் இடும் பலிகளும் மன்றத்துத் தெய்வத்திற்குஇட்டு வணங்கும் வழக்கமும் உண்டு என்பது.

'மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடி,
பலிக்கள் ஆர்கைப் பார்முது குயவன்
இடுபலி நுவலும் அகன்தலை மன்றத்து,
விழவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர்' (நற். 293;1-4)

என்னும் நற்றிணைப் பாடற்பகுதியால் உணரலாம். பலியிடும் பொழுது மந்திரங்களை உச்சரித்தல் மரபு.

'கடுஞ்சினம் கடாஅய் முழங்கும் மந்திரத்து
அருந்திறல் மரபின் கடவுட் பேணியர்
உயர்ந்தோன் ஏந்திய அரும்பெறல் பிண்டம்' (பதிற். 30;33-35)

என்பது மந்திர முழக்கத்தைத் தெரிவிக்கிறது.

மறையவர் தாம் செய்யும் வேள்வியில் அவிமூலமாகத் தெய்வங்களுக்குப் பலி செலுத்தினர் என்பது வேள்வி வழிபாட்டு முறையில் வரிவாகப் பார்த்தோம்.

'அந்தி அந்தணர் எதிர்கொளஅயர்ந்து
செந்தீச் செவ்அழல் தொடங்க' (கலி. 119;12-13)

'கரியாப் பூவின் பெரியோர் ஆர,
அழல் எழு தித்தியம்.....' (அக. 361;10-11)

'உருகெழு மரபின் கடவுட் பேணியர்
கொண்ட தீயின் சுடர்எழு தோறும்
விரும்புமெய் பரந்த பெரும்பெயர் ஆவுதி' (பதிற். 21;5-7)

என வருவன அழல்வழி தெய்வங்கள் உண்ணும் பொருட்டு ஆவுதி வழங்கியமையைப் புலப்படுத்துவனவாம்.

வழிபாட்டுக் காலத்தில் பல இனிய இசைக்கருவிகளையும் இயக்குவர்.

'வயிர் எழுந்து இசைப்ப, ல்வளை ஞரல,
உரம் தலைக்கொண்ட உரும்இடி முரசமொடு'
(முருகு. 120-121)

'நறும்புகை எடுத்து, குறிஞ்சி பாடி,
இமிழ்இசை அருவியோடு இன்இயம் கறங்க'
(முருகு. 239-240)

'பறை பட, பணிலம் ஆர்ப்ப, இறைகொள்பு
தொல் மூதாலத்துப் பொதியில்' (குறு. 15;1-2)

'இன்இயம் கறங்கப் பாடி,
பல் மலர் சிதறிப் பரவுறு பலிக்கே' (நற். 322;11-12)

எனவரும் பாடற்பகுதிகள் இன்இயம் இயக்கிப் பாடல்கள் பாடி மக்கள் தெய்வம் போற்றியமையைப் புலப்படுத்தும்.

பாணர், கூத்தர் முதலிய இசையறி மாக்கள் தாங்கள் வல்ல இசையை எழுப்பித் தெய்வம் இறைஞ்சுகின்றனர். முதலில் தெய்வத்தை இசையில் பரவிய பின்பே வேறுவகைப் பாடல்களை அவர்கள் இசைப்பது வழ்க்கம். இசையறி மாக்கள் தம் உரிமை மகளிருடன் இசைபாடி இறைவனை வாழ்த்துதலையும் சங்கப் பாடல்களில் சில இடங்களில் காண்கிறோம். ஒரு சில வறுமாறு;

'சென்னியர்
தெறல் அருங் கடவுள் முன்னர், சீறியாழ்
நரம்பு இசைத்தன்ன இன்குரல் குருகின்' (நற். 182;2-4)
'செவ்வழி நல்யாழ் இசையினென், பையென,
கடவுள் வாழ்த்தி......' (அக. 14;15-16)

'மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்பு மீது இறவாது, உடன் புணர்ந்துஒன்றி,
கடவது அறிந்த இன்குரல் விறலியர்
தொன்று ஒழுகு மரபின் தம்இயல்பு வழாஅது,
அருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை' (மலைபடு. 534-538)

'அருங் கறை அறைஇசை வயிரியா, உரிமை
ஒருங்கு அமர் ஆயமொடு, ஏத்தினர் தொழுவே'
(பரி. 10;130-131)

இங்ஙனம் இசையும் பாட்டுமாகக் கடவுளைப் போற்றுதல் ஒருபுறமிருக்க, நாள்தோறும் பல்வேறு காலங்களில் முறைப்படவும் தெய்வ பூசை ஆற்றிவந்தனர் என்பது ஒருசில குறிப்புகளால் புலனாகும். 'நாட்பலி' (அக. 213;7; அக.287;6; அக.289;3) என்பது காலை வேளையில் கடவுட்கு ஆற்றிய வழிபாட்டினைச் சுட்டுவதாகும். சிவபெருமான் மாயோன் முதலிய கடவுளர் ஆலயங்களில் தெய்வங்களுக்கு மாலையில் பூசை செய்து மக்கள் வழிபட்டமையை மதுரைக்காஞ்சி விவரிக்கிறது.

'மழுவாள் நெடியோன் தலைவன் ஆக,
மாசு அற விளங்கிய யாக்கையர், சூழ்சுடர்
வாடாப் பூவின் இமையா நாட்டத்து,
நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு
மாற்று அரு மரபின் உயர்பலி கொடுமார்
அந்தி விழவில் தூரியம் கறங்க' (மதுரை. 455-460)

மேற்கூறியவற்றால் காலை மாலைகளில் மக்கள் கடவுளைப் பேணியமை புலப்படும். இங்ஙனம் கடவுள் வழிபாடு செய்புங்கால் கடவுளர் விளங்கும் திருக்கோயிலை வலம் வருவர். குழந்தைகளையும் கூடப் பெரியோர்கள் உடன் அழைத்துச் சென்று வலம் வருதல் உண்டு. தலைவி ஒருத்தி தன் இளம் புதல்வனைத் தோழியுடன் அனுப்பி, தேவர்கோட்டம் தொழுது வரப் பணிக்கிறாள். இதனை,

'புத்தேளிர் கோட்டம் வலம் செய்து இவனொடு
புக்க வழி எல்லாம் கூறு' (கலி. 82;4-5)

'கடவுட கடிநகர் தோறும் இவனை
வலம் கொளீஇ வா' எனச் சென்றாய்' (கலி.104;6-7)

என வருவன தலைவியின் பேச்சுக்கள், பாண்டிய மன்னன் தன் பரிவாரங்கள் சூழச்சென்று பரங்குன்றத்து முருகன் கோயிலை வலம் வந்து வணங்கிய காட்சியை மேருமலையைச் சூழ சூரியன் பிற கோள் நாள்களுடன் சூழ வருதலுக்கு ஒப்பிட்டுப் பேசுகின்றார் ஒரு புலவர் (பரி. 19;19-29)

சுற்றத்தாருடன் கூடிச் சென்று திரண்டு நின்று வழிபாடு ஆற்றுதல் குன்றக் குறவர்களிடையேயும் கூடக் காணப்பட்டது.

'அணங்கொடு நின்றது மலை, வான் கொள்க' எனக்
கடவுள் ஓங்குவரைபேண்மார், வேட்டு எழுந்து
கிளையொடு மகிழும் குன்றநாடன்' (நற். 165;3-5)

'மலை உறை கடவுள் குலமுதல் வாழ்த்தி
தேம் பலிச் செய்த ஈர்நறுங் கையள்' (ஐங். 259;3-4)

இங்கே மலைக்குறவரும் மகளிரும் சுற்றமொடு தெய்வம் தொழுதமையைக் காணலாம். பரிபாடலும் மக்கள் தத்தம் கிளையுடன் மகிழ்ந்து இறைவனை வழிபட்டமையைப் பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளமை காணத்தகும்.

'காமரு சுற்றமொடு ஒருங்கு நின் அடியுறை
யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிக!' என
ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழிப் புலவ! நின் தாள்நிழல் தொழுதே' (பரி. 1;65-68)

'....நின் அடி
தலை உற வணங்கினேம், பல்மாண் யாமும்
கலிஇல் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்,
கடும்பொடும் கடும்பொடும் பரவுதும் -
'கொடும்பாடு அறியற்க, எம் அறிவு எனவே' (பரி. 2;72-76)

'பிணிமுகம் ஊர்ந்த வெல்போர் இறைவ!
பணி ஒரீஇ, நின்புகழ் ஏத்தி,
அணி நெடுங் குன்றம் பாடுதும்; தொழுதும்

அவை யாமும் எம் சுற்றமும் பரவுதும் -
ஏம வைகல் பெறுக, யாம் எனவே' (பரி. 17;49-53)

இப் பாடற் பகுதிகளில் தெய்வத்திடம் மக்கள் வேண்டும் பயன்களும் குறிக்கப்படுதல் காணலாம். ''நாங்கள் சுற்றமுடன் இன்றுபோல் எந்நாளும் உன் திருவடியைச் சார்ந்து பொலிவுற வேண்டும்; எங்கள் அறிவில் தீமை சேராது மெய்யுணர்வு பெருக வேண்டும். துன்பம் நீங்கிய இன்பம் மிகுந்த நாள்களை நாங்கள் பெற வேண்டும்'' என்பவை அவர்களுடைய வேண்டுதல்கள்,

'தீது இன்றிப் பொலிக! எனத் தெய்வக் கடி அயர்மார்,
வீவு இல் குடிப் பின் இருங்குடி ஆயரும்' - (கலி. 195;6-7)

எனவரும் கலிப்பாட்டு அடிகள், ஆயர்தம் சுற்றம் உட ன்வர, தமக்குத் துன்பம் இன்றி இன்புடன் பொலிய வேண்டி வழிபாடாற்றல் செய்தமையைக் குறிப்பிடுகின்றன.

பல்வேறு பயன் கருதிப் பரங்குன்றத்து மகளிர் வழிபட்ட மையைப் பரிபாடலில் காணலாம். ஒரு சில மகளிர் தாம் காதலரோடு அளவளாவியதாகக் கண்ட கனவு பழுதாகாமல் நனவில் அவருடன் நீராடி மகிழ, வையை நதி புதுவெள்ளத்தைப் பெற வேண்டும் என வரம் வேண்டுகின்றனர். இன்னும் சிலர் எமக்குக் கருப்பம் உண்டாக வேண்டும் என்று காணிக்கை செலுத்துகின்றனர். 'எம் கணவருக்குப் பொருள் வாய்ப்பதாக' என்றும் 'எம் கணவர் போரில் வெற்றி பேறுவாராக' என்றும் வேறுசில மகளிர் கடவுளை வேண்டுகின்றனர்.

''அருவரைச் சேராத் தொழுநர்,
'கனவின் தொட்டது கை பிழையாகாது
நனவில் சேஎப்ப நின் நளி புனல் வையை
வருபுனல் அணிக' என வரம் கொள்வோரும்,
'கருவயிறு உறுக' எனக் கடம்படுவோரும்,
'செய் பொருள் வாய்க்க எனச் செவி சார்த்துவோரும்,
'ஐ அமர் அடுக' என அருச்சிப்போரும்,
பாடுவார் பாணிச் சீரும், ஆடுவார் அரங்கத் தாளமும்,'
(பரி. 8;102-109)

ஆகப் பரங்குன்றத்தே பாடுவோரும் ஆடுவோருமாய்ப் பற்பல பயன் வேண்டி மகளிர் நின்றமை காண்கிறோம்.

குறவர் மஞ்ழ பெய்ய வேண்டியும், வேண்டாத போது பெருமழை பெய்யின் அது நிற்க வேண்டியும் தெய்வத்தைப் போற்றினர் என்று புறநானூறு தெரிவிக்கின்றது.

'மலை வான் கொள்க!' என, உயர் பலிதூஉய்
'மாரி ஆன்று, மழை மேக்கு உயர்க!' எனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கன்
பெயல் கண் மாறிய உவகையர், சாரற்
புனத்தினை அயிலும் நாட!' (புற. 143;1-5)

என்பது புறப்பாட்டு. உலகை வாழ்விக்கும் அம்மழையைய தொழுது போற்றவும் தலைப்படுகின்றனர் மக்கள்.

'உலகிற்கு ஆணியாகப் பலர் தொழப்
பலவயின் நிலைஇய குன்றின் கோடுதோறு
ஏயினை, உரையியரோ! - பெருங்கலி எழிலி!

என்று மேகத்தை போற்றுகிறான் ஒரு தலைவன், மக்கள் தத்தம் நல்வாழ்வுக்கு கடவுள் அருள் பெருக வேண்டும் என்றும், அவரவர் மனத்துள்ள குறை நீக்கி அருள வேண்டும் என்றும், மெய்யுணர்வு பெருக வேண்டும் என்றும் பற்பல பயன் கருதிக் கடவுள் வழிபாடு ஆற்றியமை மேற்குறித்தவற்றால் நன்கு புலனாகும்.

மேலும், கடவுட்குப் பல பொருள்களைக் காணிக்கை செலுத்துதலும் நேர்த்திக் கடன் செய்தலும் உண்டு. தாங்கள் ஆற்றும் விளைவின் பயனை கடவுட்கும் படைத்து மகிழ்ந்தனர். குறவன் ஒருவன் தான் பயிரிட்ட தினைப்புனத்தில் விளைந்த தினைக்கதிர் சிலவற்றை தெய்வத்திற்காக என நேர்ந்து விட்டிருந்தானாம். அக் கதிரினைத் தெய்வத்திற்குரியது எனஅறியாது ஒரு மயில் உண்டுவிட்டது; அதனால், அது மிகவும் துன்புற்று நடுங்கியதாம். இதனை,

''புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்
கடி உண் கடவுட்கு இட்ட செழுங்குரல்
அறியாது உண்ட மஞ்ஞை, ஆடுமகள்
வெறி உறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்' (குறு. 105;1-4)

எனவரும். குறுந்தொகைப் பாடலில் காண்கிறோம். தெய்வத்திற்குப் பொருள்களை நேர்தலைக் 'கடம் பூணுதல்' என்றும் வழங்குவர்.

'நிலை உயர் கடவுட்குக் கடம்பூண்டு தன் மாட்டுப்
பல சூழு மனத்தோடு பைதலென் யானாக' (கலி. 46;16-17)

'விடர் முன்க அடுக்கத்து விறல் கெழு சூலிக்குக்
கடனும் பூணாம்; கைந்நூல் யாவாம்.' (குறுந். 218;1-2)

எனத் தெய்வக்கடன் பூணுதலைக் குறிப்பிக்கின்றன.

தெய்வங்காட்டிச் சூளுரைக்கும் பழக்கமும் மக்களிடையே காணப்படுகிறது. ஒருவரது தலையைத் தொட்டும், மெய்யைத் தொட்டும், கையைப் பற்றியும், தெய்வசாட்சியாக உறுதி கூறி வஞ்சினமுரைக்கும் முறை பல இடங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது. (குறு. 36;3-6;53;5-7; நற்.214;4-6; 358;1-7; 386;6-8; அக.110;4-5; 166;7-10; 175;6-9; 266;20-24; 378;18-19;386;7-10; குறிஞ்.208-210; கலி.63;12-13; 88;20-21; 94:35-36; 95;23-24; 149;8-11; பரி. 6;94-95; 8;61-66)

அணங்குடை அருஞ்சூள் தருகுவென்' (நற். 386;1)

'கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கித்,
கடுஞ்சூள் தருகுவன் நினக்கே' (அக. 110;4-5)

'திருமணி விளக்கின் அலைவாய்ப்
செருமிகு சேயோடு உற்ற சூளே' (அக. 266:20-21)

'தெறல் அருங்கடவுள் முன்னர்த் தேற்றி,
மெல் இறை முன்கை பற்றிய சொல் இறந்து' (அக. 396:7-8)

'அறம் புணை ஆகப் தேற்றி, பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்தி, கைதொழுது,
ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி'

(குறிஞ்சி. 208-210)

எனவரும் பகுதிகள் தெய்வம் சுட்டிச் சூளுரைத்தலைத் தெரிவிப்பன.

தெய்வம் காட்டித் தெளித்தலையும் தெய்வத்தின் அடி தொட்டுச் சூளுரைத்தலையும் பின்வரும் கலித்தொகைச் செய்யுட் பகுதிகளும் தெரிவிக்கின்றன.

'ஐயத்தால் என்னைக் கதியாதி; தீது இன்மை
தெய்வத்தான் - கண்டீ - தெளிக்கு' (கலி. 91:7-8)

''பிரிவு இல்லாய் போல, நீ தெய்வத்தின் தெளித்தக்கால்,
அரிது என்னாள், துணிந்தவள் ஆய்நலம் பெயர்தர.'
(கலி. 124:17-18)

'தெய்வத்தின் தேற்றித் தெளிப்பேன்; பெரிது என்னைச்
செய்யா மொழிவது எவன்?' (கலி. 98:32-33)

'மலையொடு மார்பு அமைந்த செல்வன் அடியைத்
தலையினால் தொட்டு உற்றேன் சூள்' (கலி. 108:55-56).

தெய்வத்தை முன்னிட்டுச் சூளுரைக்குநர் தாங்கள் சொற்படி நடவாது தவறு இழைத்தால் அத் தெய்வம் சூளுரைத்தாரை வருத்தும் என்றும் மக்கள் நம்பினர். தலைவன் ஒருவன் வையை மணலையும் திருப்பரங்குன்றத்தையும் சுட்டிச் சூளுரைத்தான். அதற்குத் தோழி மறுமொழியாக, ''கேளிரை ஒத்த மணலொடு கொண்ட உன் நட்பு இத்தன்மையதா? நீ பரங்குன்றத்து முருகனைக் குறித்துச் சூளுரையாதே. அவனைக் குறித்து நீ சொன்ன சூள் தவறினால் உன்னை அருள் இல்லாத அணங்குடனே அவன் வேலும் மெய்யாக வருத்தும். அன்றியும் அறவோர் அடியைத் தொட்டு சூளுரைத்தாலும் உரை; விறல் வெய்யோனும் முருகன் ஊர்ந்து செல்லும் மயிலையும் அவன் வேல் நிழலையும் நோக்கிச் சூளுரையாதே!'' என்கிறாள் (பரி. 8:61-70). தான் சொன்ன சொற்படி நடவாது தவறியமையான் அவன் சுட்டிக் கூறிய தெய்வம் அவனை வருத்தாமலிருக்க வேண்டி அத் தெய்வத்திற்கு சாந்தி செய்வோம் என்று ஒரு தலைவி தோழியை நோக்கிப் பேசும் காட்சியை நற்றிணையில் காணலாம்.

'பெருந்தோள் நெகிழ, அவ் வரி வாட,
சிறுமெல் ஆகம் பெரும் பசப்பு ஊர,
இன்னேம் ஆக, எற்கண்டு நாணி,
நின்னொடு தெளிந்தனர் ஆயினும் என்னதூஉம்,
அணங்கல் ஓம்புமதி, வாழிய நீ; 'என,
கணம் கெழு கடவுட்கு உயர்பலி தூஉய்,
பரவினம் வருகம் சென்மோ - தோழி' (நற். 358:1-7)

என்பது தலைவி கூற்று. இதனால், தெய்வத்திடத்து மக்கள் கொண்டுள்ள பயமும் அதனைச் சாந்தி செய்ய வழிபாடாற்றும் முறையும் மக்களிடையே நிலவியமை புலப்படும்.

மக்கள் பலர் கூடித் தெய்வங்களின் பொருட்டுச் செய்யும் சிறப்பே விழா ஆகும். விழவு, சாறு என்றும் குறிக்கப்படும். பேரூர்களிலும் சிற்றூர்களிலும் பெருவிழாக் கொண்டாடி மக்கள் மகிழ்ந்தனர்.

'சாறு கொள் ஊர்' (குறு. 41:2)

'விழவுடை வியல் நகர்' (அக. 206:11; 397:3)

'விழவுதலைக் கொண்ட பழவிறல் மூதூர்'
(நற். 293:4; அக.17:19-20),

'பேரூர் கொண்ட ஆர்கலி விழவு' (குறு. 223:1-2)

'கல்லென் பேரூர் விழவிடை ஆங்கண்' (புற. 84:4)

'சாறு அயர் மூதூர்' (சிறுபாண். 201; பட்டின. 215).

'சாறுதலைக் கொண்டென' (புற. 82:1),

'விழவும், அகலுள் அங்கண் சீறூர் மறப்ப' (புற. 65:4-5)

'விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்' (பெரும். 411),

என் ஊர்களைச் சிறப்பித்து பேசப்படும் தொடர்களால் அங்கு எல்லாம் திருவிழாக்கள் நடைபெற்றமை பெறப்படும். சிற்சில ஊர்களில் எந்நாளும் விழா நடைபெற்றுக் கொண்டிருந்ததாகவும் தெரியவருகின்றது.

'விழவு அறா வியல் ஆவணம்' (பட்டின. 58)

'விழவுஅறுபு அறியா முழவு இமிழ் மூதூர்' (அக.115:1)

'அழியாவிழவின் அஞ்சுவருமூதூர்' (அக.115:1)

எனவருவன இதற்குச் சான்றாகும்.

விழா எடுக்கும் ஊர்களில் அதனை கண்டு களிக்க உள்ளூர் மக்களும் வெளியூர் மக்களும் வந்து திரள்வர்.

'சாறு அயர் மூதூர்சென்று தொக்காங்கு' (பட்டின. 215)

'முழவு இமிழ் மூதூர் விழவுக் காணுஉ பெயரும் (பதிற்.30:20)

'ஆடு இயல் விழவின் அழுங்கல் மூதூர்
உடையோர் பன்மையின் பெருங்கை தூவா' (நற். 90:1-2)

'ஊரே, ஒலிவரும் சும்மையொடு மலிபு தொகுபுஈண்டி
கலிகெழு மறுகின் விழவு அயருமமே' (நற். 348:3-4)

எனவரும் குறிப்புகளால் மக்கள் பலராகத் திரண்டு விழாக் கொண்டாடுதல் போதரும். விழாவிற்குச் செல்லும் ஆடவர் பெண்டிர் தம்மை நன்கு ஆடை அணிகளால் ஒப்பனை செய்து கொண்டு சென்றனர். மேலும், அவர்களுக்கு விழா நிகழ்ச்சிகள் பேருவகையளிப்பனவாகவும் அமைந்தன.

'காதலர் உழையர் ஆகப் பெரிது உவந்து,
சாறு கொள் ஊரின் புகல்வேன் மன்ற' (குறுந். 41:1-2)

'வயல் வெள் ஆம்பல் உருவ நெறித்தழை
ஐது அகல் அல்குல் அணிபெறத் தைஇ,
விழவின் செலீஇயர் வேண்டும் மன்னோ' (நற். 390:4-6)

'இருங்கதிர்க் கழனி பெருங்கவின் அன்ன
நலம் பாராட்டி, நடை எழில் பொலிந்து,
விழவில் செலீஇயர் வேண்டும்' (அக. 326:7-9)

'கூன்முள் முள்ளிக் குவிகுலைக் கழன்ற,
மீன்முள் அன்ன, வெண்கால் மா மலர்
பொய்தல் மகளிர் விழவு அணிக்கூட்டும்' (அக. 26:1-3)

'பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்
விழவு அணி மகளிர் தழை அணிக்கூட்டும்' (அக. 70:11-12)

'காவிரிப் படப்பை உறந்தை அன்ன
பொன்னுடை நெடுநகர், புரையோர் அயர
நல்மாண் விழவில் தகரம் மண்ணி
யாம் பல புணர்ப்பச் சொல்லாள்.'' (அக. 385:4-7)

'உடுத்தும், தொடுத்தும், பூண்டும், செரீஇயும்,
தழை அணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி,
விழவொடு வருதி நீயே,' (குறுந்.295:1-3)

ஆடவரும் பெண்டிரும் இளையரும் முதியரும் ஆகக் கூடி நின்று கண்டு களிக்கும் வண்ணம் தெய்வத்திற்குரிய சிறப்பு விழாக்கள் தெருவீதிகளில் கொண்டாடப்பெற்றன. இது இக் காலத்தில் ஆண்டுக்கு ஓர் இரு முறை நடைபெறும் வீதி வலம் வரும் பெருவிழாக்களை ஒக்கும்.

'ஆல் அமர் செல்வன் அணிசால் மகன் விழாக்
கால் கோள்' என்று ஊக்கி, கதுமென நோக்கி' -
(கலி.83:14-15)

என்று கூறப்படுதலின், விழாவின் தொடக்கமும் தக்க சிறப்புடன் போற்றப் பட்டமை தெளிவு.

'செறிதொடி முன்கை கூப்பி, செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்
குழல் அகவ, யாழ் முரல,
முழவு அதிர, முரசு இயம்ப,
விழவு அறா வியல் ஆவணத்து -
மை அறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய
மலர்அணி வாயில் பலர் தொழு கொடியும்.
(பட்டின. 154-160)

என வரும் பட்டினப்பாலை அடிகளால் வெறியாடுதற்குரிய முருக வேளுக்கும் பலரும் தொழும் வேறு பிற தெய்வங்களுக்கும் அங்காடித் தெருவில் விழாவெடுத்து வழிபட்டமை போதரும். இவ்வடிகளுக்கு நச்சினார்க்கினியர் தரும் உரை விளக்கமும் கூர்ந்து கவனித்தற்குரியதாகும். அவர் உரை வருமாறு:

''வெறியாடுதற்கு உரிய முருகனுக்கும், பிறப்பறுத்தற்குத் காரணமாகத் தலைமையை உடைமையால் கோயில்களிடத்திலே உண்டாக்கின பலரும் தொழும் தெய்வங்களுக்கும், பாடு மகளிரோடே பொருந்தப் பரந்து வங்கியம் இசையை உண்டாக்க, யாழ் வாசிக்க, முழவு முழங்க, முரசு ஒலிப்ப, எடுத்த திருநாள் நீங்காத அகன்ற அங்காடித் தெருவினையும், மகளிரோடே செறிய எடுத்த விழா என்க. சேவடி முதலியவற்றை உடைய சாயலோர் மாடங்களில் சாளரங்களில் பொருந்தி முன் கை கூப்ப, பலரும் தொழும் முருக வேளுக்கும் ஏனைத் தெய்வங்களுக்கும் எடுத்த விழவு அறா வியல் ஆவணம் எனக் கூட்டுக, இல்லுறை தெய்வம் மகிழ மனைவாசலில் கட்டின கொடிகளும்''

இப் பொருள் மேற்குறித்த அடிகளில் அமைந்த சொற்களைப் பலவாறு அசைத்துச் சேர்த்துக் கொண்டு கூட்டி எழுதப்பெற்றது. சொற்கிடக்கை போக்கில் பார்ப்பினும் விழவு அறா வியல் ஆவணத்துக் கொடி, மலர் அணி, வாயில் கொடி, பலர் தொழு கொடி என்க் கொடி என்பது சிறப்பிக்கப்படுதலின், இக் கொடி தெய்வத்தின் பொருட்டு விழாவிற்காக உயர்த்திய கொடியே ஆதல் வேண்டும். மலர் அணி வாயில் என்பதற்கு 'மனை வாசல்' என்று உரைகாரர் கொள்வது காலவழக்கை ஒட்டியதாதல் வேண்டும். வாயில் எனப் பொதுப்பட உள்ளமையில் இது கோயில் வாயிலைக்

குறித்தல் கூடாதோ என்பது சிந்தித்தற்குரியது. வாயில் என்பதனைக் கோயில் வாயில் எனக் கொள்வோமாயின் விழாவின் பொருட்டுக் கோயில் கொடி ஏற்றும் முறையும் முன்பு இருந்தது எனக் கொள்ளலாம்.

விழாக்கள் சந்திரன் நிலவொளியை மேல்மேல் பரப்பி வளரும் வளர்பிறைக் காலத்தில் கொண்டாடப்பட்டன என்றும் நற்றிணையில் வரும் ஒரு குறிப்பினால் உணரலாகும். ஊரில் விழா நிகழும் காலத்தில் தலைவனைப் பிரிந்து தனித்து வாழும் தலைவி ஒருத்தி,

'நிலவே நீல்நிற விசும்பில் பல்கதிர் பரப்பி,
பால் மலி கடலின், பரந்து பட்டன்றே;
ஊரே ஒலி வரும் சுமையொடு மலிபு தொகுபு ஈண்டி,
கலிகெழு மறுகின் விழவு அயரும்மே' (நற். 348:1-4)

என்று பேசுகிறாள். பால்போல் நிலவு எறிக்கும் இரவில் தெருக்களில் பேரொலிமிக மக்கள் கூடி விழா காண்கின்றனர். விழாக் காலத்தில் மக்கள் தூக்கத்தையும் விடுத்து விழா நிகழ்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். ஊரே கண்ணுறங்காது உள்ளது.

'இரும் பிழி மகாஅர் இவ் அழுங்கல் மூதூர்
விழவு இன்று ஆயினும் துஞ்சாது ஆகும்.' (அக. 122:1-2)

என்பதனால் விழாக் காலத்தில் தூக்கத்தையும் விடுத்து மக்கள் விழா நிகழ்ச்சிகளில் ஈடுபட்டமை புலனாகும்.

ஊரில் திருவிழா நடைபெறப் போகும் செய்தியை யாவருக்கும் தெரிவிப்பவர் ஊர்ப் பொதுவில் வாழும் குயவனுக்குரிய பணியாகும். அரும்பு சுட்டிய நீலமணி போலும் நிறமுடைய ஒளி படைத்த நொச்சிப்பூங் கொத்துக்களால் ஆன மாலையை இவன் அணிந்து செல்வான். ஊரில் விழா நிகழ்ச்சியை அறிவிப்பதுடன் ஊர்ப் பொது மன்றங்களில் உறையும் தெய்வங்களுக்கு கள் முதலியவற்றைப் பலியாக இடுவதும் இவனுக்குரிய கடமையாகும். இவற்றை,

'கண்ணி கட்டிய கதிர அன்ன
ஒண் குரல் நொச்சித் தெரியல் சூடி,
யாறு கிடந்தன்ன அகல் நெடுந்தெருவில்
'சாறு' என நுவலும் முதுவாய்க் குயவ!' (நற். 200:1-4)

'மணிக் குரல் நொச்சித் தெரியல் சூடி,
பலிக்கள் ஆர் கைப் பார் முது குயவன்
இடு பலி நுவலும் அகன்தலை மன்றத்து,
விழவுத் தலைக் கொண்ட பழவிறல் மூதூர்' (நற். 293:1-4)

எனவரும் நற்றிணைப் பாடற் பகுதிகளால் அறியலாகும்.

விழாக் காணும் ஊர்கள் நன்கு அலங்கரிக்கப் பட்டிருக்கும். விளக்குகளும், பூக்கள் முதலியனவும் அழகிய காட்சிகளை நல்கும்.

'விழவுக் தலைக் கொண்ட பழவிறல் மூதூர் நெய் உமிழ் சுடரின்'
(அக. 17:19-20)

என்பதனால் எண்ணெய் விளக்குகள் எங்கும் பரந்து காணப்பட்டமை தெளிவு. யானைகளும் தெருவில் அலங்காரமாகச் செல்லும், யானைகளின் மத அருவி பாய்தலினால் துகள் நிரம்பிய தெருவின் புழுதி அமர்ந்துவிடும்.

'அண்ணல் யானை அருவி துகள் அவிப்ப,
நீறு அடங்கு தெருவின் அவன் சாறு அயர் மூதூர்
சேய்த்தும் அன்று; சிறிது நணியதுவே' (சிறுபாண். 200-202)

என்று நல்லியக் கோடனின் கோநகர் வருணிக்கப்பட்டுள்ளது. விழாவில ஆடல், பாடல் நிகழ்த்துவோர்க்கும் பிறர்க்கும் சோறு அளித்தலும் உண்டு. ஒரு பேரூரிலே விழாக் கழிந்துவிட்டால், வேறு விழாக் காணும் ஊரை நாடிப் பொருநர், பாணர் முதலியோர் சென்றுவிடுகின்றனர். இங்ஙனம் அவர்கள் செல்வது விழாவில் அளிக்கப்பெறும் சோற்றினைப் பெறும் பொருட்டும் ஆகும். இவ்வகைப்பட்ட பொருநர் தன்மையை,

'அறாஅ யாணர் அகன்தலைப் பேரூர்
சாறு கழிவழிநாள் சோறு நசை உறாது
வேறு புலம் முன்னிய விரகு அறி பொருந.' (பொருந. 1-3)

எனப் பொருநராற்றுப் படையில் வரும் பொருநனின் இயல்பு கூறுமாற்றால் புலப்படும்.

தெருவில் தெய்வம் உலாவரும் காட்சி உண்டு என்பது மாடங்களின் மேலிருந்து விழாக் காணும் மகளிர் கைகூப்பி வணங்குதலால் பெறப்படும். பூண் அணிந்த மாதர் நல்லார் புழுகு முதலியவற்றின் மணம் தெருவெல்லாம் பரக்க, மேனிலத்திலே இருந்து தொழுகின்றனர். தெருக்களிலே இறைவன் முன்பு நீண்ட

கொடித்தண்டுகளிலே பெருங்கொடிகளைக் கட்டி ஏந்தி வருகின்றனர். காற்று எழுந்து வீசுவதனால் திரைச்சீலைகள் அசைந்தாடுகின்றன. இதனால் நிலா முற்றங்கள் தோறும் நின்று விழாக் காணும் மகளிர் மஞ்சில் புகுந்து செல்லும் சந்திரன் போல ஒருகால் தோன்றி ஒருகால் மறைந்து காணப்படுகின்றனர்.

'அணங்கு வீழ்வு அன்ன பூந்தொடி மகளிர்
மணம் கமழ் நாற்றம் தெருவுடன் கமழ,
ஒண் குழை திகழும் ஒளி கெழு திருமுகம்
திண் காழ் ஏற்ற வியல் இரு விலோதம்
தெண் கடற் திரையின், அசைவளி புடைப்ப,
நிரை நிலை மாடத்து அரமியம் தோறும்
மழை மாய் மதியின் தோன்றுபு மறைய,'

(மதுரை. 446-452)

எனக் கூடல் மாநகரில் நடைபெறும் விழாக் காணும் மகளிர் சிறப்பிக்கப்படுகின்றனர். விழாவிற்கு வரும் செல்வர்கள் தம் தகுதிக்கு ஏற்ற ஆடை அணிகலன்களுடன் தேர் ஏறி, தேரில் பூண்ட குதிரைகளைச் செலுத்திக் காலாட்கள் சூழ்ந்து வர விழாவில் கலந்து கொள்கின்றனர். (மதுரை. 431-432) விழாவுக்கு கால் கொள்ளத் தொடங்கிய நாளிற்கு ஏழாம் நாள் அந்தியிலே தீர்த்தமாடுகின்றனர். அப்பொழுது அவ் விழாவிற்காக வந்து திரண்ட நாட்டிலுள்ளோர் ஆரவாரம் செய்து மகிழ்கின்றனர்.

'கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி,
ஆடு துவன்று விழவின் நாடு ஆர்த்தன்றே -
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாள் அங்காடி நனந்தலைக் கம்பலை' (மதுரை. 427-430)

என்பது மதுரைக் காஞ்சி.

விழாவில் இசையும் கூத்தும் பாட்டும் மக்கள் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தாக அமைந்து விளங்கின.

'சேரிதோறும்
உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ,
வேறு வேறு கம்பலை வெறிகொள்பு மயங்கி.'

(மதுரை. 616-618)

சேரி விழாவில் இசை கூத்து நிகழ்த்துவோர், பல ஊர்களி

விருந்தும் வந்து குழுமுகின்றனர். யாழ், குழல், முழவு முதலிய இசைக் கருவிகளில் இசையெழுப்புவோரும் ஆடல்வல்ல கூத்தரும், ஆடுமகளிரும் தத்தம் திறமை காட்டி மக்களை மகிழ் விக்க வருவர். கூத்துகளில் துணங்கைக் கூத்தும் குரவைக் கூத்தும் முக்கியமாக இடம்பெறுகின்றன.

'தீம் தொடை நரம்பின் பாலை வல்லோன்
பையுள் உறுப்பின் பண்ணுப் பெயர்த்தாங்கு'
(பதிற்று. 65:14-15)

'விழவும் மூழ்த்தன்று; முழவம் தூங்கின்று' (நற். 320:1)

'முழவு முகம் புலரா விழவுடை வியல்நகர்'
(அக. 206:11;397:3)

'முழவு இமிழும்; அகல் ஆங்கண்,
விழவு நின்ற வியல் மறுகின்,
துணங்கை, அம் தழுஉவின் மணம் கமழ் சேரி'
(மதுரை: 327-329)

விழவு கொள் மூதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ' (அக. 352:4-6)

அரிமலர் ஆம்பலொடு ஆர்தழை தைஇ
விழவு ஆடு மகளிரொடு தழூஉ அணிப் பொலிந்து'
(அக. 176:14-15)

'-விழவில்
கோடியா நிலைமை போல முறைமுறை
ஆடுநர் கழியும் இவ் உலகத்து' (புற. 29:22-24)

'விழவு வீற்றிருந்த வியலுள் ஆங்கண்
கோடியர் முழவின் முன்னர், ஆடல்
வல்லான் அல்லன்; வாழ்க அவன் கண்ணி!' (பதிற். 56:1-3)

அழியா விழவின், இழியாத் திவவின்,
வயிரிய மாக்கள் பண் அமைத்து எழீஇ.
மன்றம் நண்ணி மறுகுசிறை பாடும்
அகன்கண் வைப்பின் நாடு' (பதிற். 29:7-10)

இவற்றால் இனிய வாத்திய முழக்கங்களும் துணங்கை, குரவை முதலிய கூத்துகளும், கூத்தர், விறலியர் முதலியோர்

நிகழ்த்தும் ஆடல் பாடல்களும் விழாவில் நிரம்பிச் சாணட் பெற்றமை புலனாம்.

தவிரவும் போர் மள்ளர்களும் விழாவில் குழுமி விளை யாட்டுப் போர் நிகழ்த்தி மக்களை மகிழ்வித்தல் உண்டு. மாயோனுக்கு எடுத்த ஓணநாள் விழாவில் மறவர் சேரிப்போர் நிகழ்த்தி, கள் குடித்து, மகிழ்ந்து திரிதலை மதுரைக் காஞ்சி குறிக்கின்றது. (590-599).

'மள்ளர் குழீஇய விழவி னானும்,
மகளிர் தழீஇய துணங்கையானும்,
யாண்டும் காணேன், மாண்தக்கோனை!
யானும் ஓர் ஆடுகள மகளே; என்கைக்
கோடு ஈர் இலங்கு வளை நெகிழ்ந்த
பீடு கெழு குரிசிலும், ஓர் ஆடுகள மகனே! (குறுந். 31)

என்றும் குறுந்தொகைப் பாட்டு வீரர்குழுமி விழாவில் விளையாட்டுப் போர் நிகழ்த்துதலையும் ஆடும் கூத்தர் கூத்தியர் கூத்து நிகழ்த்துதலையும் விவரிக்கிறது.

வேங்கடம், உறையூர், கூடல்(மதுரை), திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் நடைபெறும் விழாக்களைச் சிறப்பித்துப் புலவர்கள் பாடியுள்ளனர்.

'விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்' (அக. 61:13)

என்பதனால் வேங்கடத்தில் நிகழ்ந்த விழாவும், அத்தலத்தின் மிக்க புகழும் புலப்படுதல் காணலாம். உறையூரில் நிகழும் விழாக்களில் பங்குனி மாதத்தில் நடைபெறும் விழா சிறப்பாக எடுத்துப் பேசப்பட்டுள்ளது. காவிரிப் பேராற்றின் கரை மருங்குள்ள வெண் மணல் மிக்க சோலைகளிலே இப்பங்குனி விழா கொண்டாடப் படுகிறது. இது பங்குனி உத்திர நாளில் நிகழ்ந்ததாக வேறு குறிப்புகளால் தெரிய வரும.

'கறங்கு இசை விழவின் உறந்தை' (அக. 4:14)

'வென்று எறி முரசின் விறற்போர்ச் சோழர்
இன்கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண்,
வருபுனல் நெரிதரும் இருகரைப் பேராற்று
உருவ வெண்மணல் முருகு நாறு தண் பொழிற்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்
வீஇலை அமன்ற மரம்பயில் இறும்பின்

நீது இல் அடுப்பின் அரங்கம் போல' (அக. 137:5-11)

என்று இவ்விழா நிகழ்ச்சியை அகநானூறு குறிப்பிடுகிறது.

காவிரியின் அரங்கமாகிய ஆற்று நடுவிடத்தில் விழாக் காண வந்தார் பலரும் உணவாக்கி உண்டனர் என்றும், விழாவின் பின் மக்கள் இல்லாது தீயில்லாது காணும் வெற்றடுப்புகள் மட்டும் காணுதல் அழகின்றித் தென்படுகின்றது என்றும் இங்குச் சுட்டப்பட்டுள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்திலும் கூடல் மாநகரிலும் நிகழ்ந்த பல்வேறு விழா நிகழ்ச்சிகளைப் பட்டினப்பாலையிலும் (142-183), மதுரைக் காஞ்சியிலும் (425-460) காணலாம். மதுரையை அடுத்து விளங்கும் திருப்பரங்குன்றத்தில் முருகப் பெருமானுக்கு நிகழ்த்தப் பெற்ற விழாக்களையும், வேறு சிறப்பு வழிபாடுகளையும் பரிபாடலில் பரக்கக் காணலாம். எப்பொழுதும் இக்குன்றம் விழாச் சிறப்பு மிக்குத் திகழ்ந்தமையை,

'நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்
கொடிதுடங்கு மறுகின் கூடற் குடாஅது,
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய
ஓடியா விழவின், நெடியோன் குன்றத்து' (அக. 149:13-16)

எனவரும் அகநானூற்றுப் பாடற்பகுதி சுட்டுகிறது.

மாயோனுக்கு ஓணநாளிலும் (மதுரை. 590-599), முக்கண்ணனுக்கு ஆதிரை நாளிலும்(பரி.11:74-78)சிறப்பாக விழாவெடுக்கப்பட்டன. இவை ஆவணித் திருவோணமும், மார்கழித் திருவாதிரையும் ஆகும்.

'கணம் கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நல்நாள்' (மதுரை. 590-591)

என்று மாயோனுக்குரிய திருவோணம் சிறப்பிக்கப்படுகிறது.

'நீ பிறந்த திருவோணம்' எனப் பெரியாழ்வாரும் கண்ணனைக் குறித்துக் கூறுதல் நோக்கத்தகும். மாயோனுக்கு மதுரையார் எடுத்த ஓணநாள் விழாவில் போர்மறவர் விளையாட்டுப் போர் நிகழ்த்திக் காட்டிக் கள்ளுண்டு களித்துத் திரிந்தமையை மதுரைக்காஞ்சி சுட்டுகிறது. அந்தணர் தொடங்கிய ஆதிரை விழாவை,

'கனைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்க,
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து,
ஞாயிறு காயா நளிமாரிப் பின்குளத்து,
மா இருந் திங்கள் மறுநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க' (பரி. 11:74-78)

எனவரும் பரிபாடற் பகுதியுள் காணலாம். ஆதிரை விழவு தொடங்க என்பதனால், இது பலநாள் கொண்டாடப்பட்ட பெருந்திருவிழா என்பதும் போதரும்.

'இந்திர விழவில் விபூவில் அன்ன' (ஐங். 62:1)
எனவும்,

'காமவேள் விழவு ஆயின்' (கலி. 2:24)

எனவும் வருவன் கொண்டு இந்திரன், காமவேள் முதலிய பிற கடவுளர்க்கும் மக்கள் விழாவெடுத்துப் போற்றியமை பெறப் படும். உள்ளி விழவில் கொங்கர்கள் அரையில் மணி கட்டித் தெருவில் ஆடுவர் என்று அகநானூற்றில் காணப்படுகிறது.

கொங்கர்
மணி அரை யாத்து மறுகின் ஆடும்
உள்ளி விழவின் அன்ன' (அக. 368:16-18)

என்பது அகப்பாட்டு. இவ் விழா நிகழ்ந்தது என்பதனை இறையனார் பொருளுரை சுட்டுகிறது.

'களவினுள் தவிர்ச்சி (கள. 16) என்னும் சூத்திர' உரையில்

'இனி, ஊர் துஞ்சாமை என்பது, ஊர் கொண்ட பெரு
விழா நாளாய்க் கண்பாடு இல்லையாகவும் இடையீடாம்
என்பது. அவை மதுரை ஆவணி அவிட்டமே, உறையூர்ப்
பங்குனி உத்திரமே, கருவூர் உள்ளி விழாவே என இவையும்
இவை போல்வன பிறவும் எல்லாம் அப் பெற்றியான பொழுது
இடையீடாம் என்பது'

என்று ஊர் துஞ்சாமைக்கு விளக்கம் தருகிறார். இங்கே உறையூர் மதுரையில் நிகழும் பெருவிழாக்களுடன் ஒப்பக் கருவூர் உள்ளி விழாவும் சுட்டப்பட்டுள்ளதலினாலே இதுவும் பெருவிழாவாதல் வேண்டும் என்பது போதரும்.

கார்த்திகைத் தீப்விழா ஊர்களில் சிறப்பாகப் போற்றப் பட்டதொரு பெருவிழாவாகும். மதி நிறைந்து அறுமீனாகிய கார்த்திகையுடன் சேரும் கார்த்திகைத் திங்கள் நிறைமதி நாளில் எடுக்கப்பெறுவது இவ் விழா. இக் காலத்தில் உழுதொழில் முடிந்து, மழையும் பெய்தலை ஒழிந்து நீங்குகிறது. தெருக்களில் விளக்குகளை வரிசையாக வைத்து, மாலைகளைத் தொங்கவிட்டு ஊரில் உள்ளார் பலரும் ஒருங்குகூடி இவ் விழாவினைக் கொண்டாடுவர்.

'உலகு தொழில் உலந்து, நாஞ்சல் துஞ்சி,
மழை கால் நீங்கிய மாசு விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர, மதி நிறைந்து
அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்;
மறுகு விளக்குறுத்து, மாலை தூக்கி,
பழ விறல் மூதூர் பலருடன் துவன்றிய
விழவு உடன் அயர, வருகதில் அம்ம' (அக. 141:5-11)

கார்த்திகை விழாவைக் கொண்டாடுதற்கு வினைவயிற் பிரிந்து சென்ற தலைவரும் வருவாராக என்று தலைவி கூறுகின்றாள். ஆகவே பிரிந்துறைவோரும் கார்த்திகை விழாக் கொண்டாடத் தம் ஊர் திரும்பி விடுவர் போலும்.

இத் திருவிழாவில் ஏற்றப்படும் விளக்கு வரிசை, காட்டில் பூத்துக் குலுங்கும் மலர்களின் தோற்றத்திற்கு ஒப்புக் கூறுதலும் புலவர் மரபு.

'பெருவிழா விளக்கம் போல, பல உடன்
இலைஇல மலர்ந்த இலவமொடு' (அக. 185:11-12)

'இலை இல மலர்ந்த முகை இல் இலவம்
கலி கொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த
அம்சுடர் நெடுங் கொடி பொற்பத் தோன்றி' (அக. 11:3-5)

'அறுமீன் பயந்த அறம் செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போல,
பல்பூங் கோங்கம் அணிந்த காடே' (நற். 202:9-11)

இலவ மலரும் கோங்க மலரும் கார்த்திகை விளக்குகள் போலச் செந்நிற ஒளி விட்டு விளங்கும் காட்சியை இப் பாடற் பகுதிகளில் காண்கிறோம். இக் கார்த்திகை விழா எல்லா ஊர்களிலும் கொண்டாடப் பெற்றது என்பதும் பொதுவகையாக இது கூறப்பட்டு தலிருந்து பெறலாகும்.

கார்த்திகை விழாவைப் போன்றே ஊர்களில் மக்கள் எடுக்கும் வேறு சில சிறப்பு நிகழ்ச்சிகளும் உள. புதுப்புனல் வருங்கால் அதில் ஆடி மகிழ்தலை ஒருவிழாப் போன்றே கொண்டாடுகின்றனர். (பரி. 2,12,22). எருதுகளை ஓடவிட்டு அடக்கும் ஏறுதழுவும் நிகழ்ச்சியும் மக்களால் மகிழ்ந்து செய்யப்படுகிறது. (முல்லைக்கலி). விற் பயிற்சியாளராகிய இளைய வீரர் தம் பயிற்சித் திறமையை அரங்கேற்றி காட்டும் நிகழ்ச்சி, 'பூந்தொடை விழா' என்று (அக.187:7-9) என்று பேசப்படுகிறது. மேலும் மன்னர்கள் வீரர்களுக்கு விருந்துவ்வத்து மகிழ்தலைப் 'பெருஞ்சோற்று விழவு' என்று போற்றப்படுகிறது. இங்ஙனமே பிள்ளைப் பேறு, திருமணம் முதலியனவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இங்ஙனம் மக்களில் அன்றாட வாழ்க்கையோடு ஒட்டிச் செய்யப்படும் சிறப்புகளை விழா என்பதனைவிடச் சடங்குகள் என்று கொள்ளலாம். மக்களிடையே காணப்பெற்ற பல்வகைச்சடங்குகளையும் அடுத்து நோக்குவோம்.

12. சடங்குகள்

மக்கள் தாங்கள் செய்துவரும் வழிபாடு, விழா முதலிய வற்றை முந்தையோர் முறைப்படி செய்துவந்தனர். இங்ஙனம் பரம்பரை வழக்கமாகச் செய்துவரும் செயல்களே சடங்குகளாம். இவை நூல் முறையாலும் சான்றோர் நெறியாலும் வழிவழி வருவன. இவற்றை அறிந்த முதியோர் ஏனையோர்க்கு வழிகாட்ட, இவை பின்பற்றப்படுபவை. வெறியாட்டு, விழா எடுத்தல் முதலிய தெய்வ வழிபாடுகளில் அவற்றை செய்வதற்குரிய வேலன், அந்தணர் முதலியோர் அவற்றை நிகழ்த்துவிக்கின்றனர்.

'பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாஇருந் திங்கள் மறுநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க' (பரி.11:75-78)

என்பதனால் ஆதிரை விழாவைத் தொடங்கியோர் நூல் நெறி முறைமையான் விழாச் சடங்குகளை அறிந்த அந்தணர் ஆவர். இவ்வடிகளுக்கு,

'பனி மிகுதலால் குளிரால் நடுங்குதலை உடைய
முன்பனிப் பருவத்து ஞாயிறு தெறாத கடை மாரியை
யுடைய மார்கழி மாதத்துத் திங்கள் மறுவொடு நிறைந்த
திருவாதிரை நாளின்கண் ஆகமங்களை உணர்ந்த பூசகர்
திருவாதிரைக்குத் தெய்வமாகிய இறைவனுக்கு விழாவைத்
தொடங்க'

எனப் பரிமேலழகர் தரும் உரைவாக்கியம் உணரத்தக்கது. ஆகம நெறியுணர்ந்தாரே விழாச் சடங்கு ஆற்றுகின்றமை இதனால் தெரியவரும். இங்ஙனம் ஆற்றும் சடங்கு முறை அல்லது முறைமை என்று கூறப்படும். வேள்வி செய்விப்போரும் அம்பாவாடல் புரிதற்கு உதவுவோரும் அவ்வந் நெறி முறை தெரிந்தோர்களாவர்.

' முறை நற்கு அறியுநர் முன்னுறப் புகழ்ந்த
தூ இயல் கொள்கைத் துகளறு மகளிரொடு,
பருதி உருவின் பல்படைப் புரிசை
எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்

வேத வேள்வித் தொழில் முடிந்ததூஉம்.' (புறம். 224:5-9)

எனக் கரிகாலன், 'வேள்விக்குரிய முறைமையை நன்றாக அறிந்த சடங்கவிகள் அம்முறையை முன்னின்று காட்ட, தன் குலமகளிரொடு வேள்வி செய்தமை கூறப்பட்டிருக்கின்றது. இங்ஙனமே அம்பாவடல் புரியும் கன்னியர்க்கு முதுபார்ப்பனிமார் முன்னின்று நோற்கும் முறைமையை உணர்த்துகின்றனர்.

'அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்ட
....
தாய் அருகா நின்று தவத்தை நீர் ஆடுதல்.' (பரி. 11:81-91)

புரிகின்றனர். ''அம்பாவாடலையுடைய கன்னியர், சடங்கு அறிந்த முதுபார்ப்பபனிமார் நோற்கும் முறைமை காட்ட'' எனப் பரிமேலழகர் தரும் விளக்கமும் கவனிக்கத்தகும். 'சடங்கு' என்பது ''சாஸ்திர விதி பற்றியும் வழக்கம் பற்றியும் அனுஷ்டிக்கும் கிரியை,'' என்று சென்னைப் பல்கலைகழகத் தமிழ் பேரகராதி குறிப்பிடுகிறது. மக்கள் தமது பிறப்பு தொடங்கி வாழ்க்கை முற்றிலும், தாங்கள் புரியும் பலவேறு நிகழ்ச்சிகளிலும் பற்பல சடங்குகளை மேற்கொண்டிருந்தமையும் இலக்கியங்களால் புலனாகின்றன.

வழிபாடு, விழா முதலிய சடங்குகள் மக்கள் பயன் கருதிச் செய்யப்படுவனவே. மழைவளம் பெருகவும், தங்கள் வாழ்வு சிறக்கவுமே தெய்வம் போற்றுகின்றனர். இம்மை வாழ்வில் தாம் விரும்பும் பயன்களைத் தெய்வத்திற்குச் செய்யும் பூசை முதலியவற்றால் பெறலாம் என்று கண்டனர்.

'கரு வயிறு உறுக' எனக் கடம்படுவோரும்,
'செய் பொருள் வாய்க்க' எனச் செவி சார்த்துவோரும்,
'ஐ அமர் ஆடுக' என அருச்சிப்போரும்' (பரி. 8:106-108)

என்பன மக்கள் விரும்பி வேண்டும் ஒரு சில பயன்கள். மகளிர் தமக்குக் 'கருவாய்க்க வேண்டும் என்று தெய்வத்திற்கு நேர்ச்சைக்கடன் பூண்கின்றனர். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை தன் தேவியுடன் செய்த பெரு வேள்வியால், அவனது தேவியின் கருவில் பத்துமாதம் நிரம்பி, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, நடுநிலை முதலிய அரசர்க்கு வேண்டும் உத்தம இலக்கணங்களுடன் கூடிய புகழ் அமைந்த புதல்வனைப் பெற்றெடுத்தான் எனப் பதிற்றுப் பத்து கூறுகிறது

(பதிற். 74). முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்து மகப் பெற்றனர் மக்கள்.

'குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்.' (ஐங். 257)

என்பது கடவுளைப் பேணிக் குறவன் ஒருவன் பெண்மகவு ஈன்றமை கூறுகிறது.

சூல் கொண்ட மக்ளிர் தேவராட்டியுடன் நின்று தெய்வத்திற்கு மடை கொடுத்தல் மரபு.

'திவவு மெய்ந்நிறுத்துச் செவ்வழி பண்ணி,
குரல் புணர் நல்யாழ் முழவொடு ஒன்றி,
நுண்நீர் ஆகுளி இரட்ட, பல்வுடன்,
ஒண்சுடர் விளக்கம் முந்துற மடையொடு,
நல்மா மயிலின் மென்மெல இயலி,
கடுஞ்சூல் மகளிர் பேணி, கைதொழுது,
பெருந்தோட் சாலினி மடுப்ப -
(மதுரைக். 604 -610)

எனவரும் மதுரைக் காஞ்சியடிகள் சூல்மகளிர் தெய்வத்திற்குப் பாற்சோறு முதலியவற்றைப் படைத்து வழிபட்ட முறைமையைத் தெரிவிக்கின்றன.

'கடும்புடைக் கடுஞ்சூல் நம் குடிக்கு உதவி' (நற். 370:3)

என்பதனால் புதல்வரால் குடி தழைத்தல் போதரும். புதல்வன் பிறந்ததனால் கணவன் முதலிய சுற்றத்தார் உவக்கின்றனர். மகப் பெற்ற மகளிர் அணங்கு முதலியன அண்டாவண்ணம் காப்பாக நெய்யுடனே வெண்சிறு கடுகை மாளிகையிடத்தே பூசி வைக்கின்றனர். நறும்புகையும் புகைத்தல் உண்டு. குழந்தைக்கு மையும் தீட்டுகின்றனர்.

'கடும்புடைக் கடுஞ்சூல் நம் குடிக்கு உதவி
நெய்யொடு இமைக்கும் ஐயவித் திரள் காழ்
விளங்குநகர் விளங்கக் கிடந்தோள்' (நற். 370:2-4)

'நெய்யும் குய்யும் ஆடி, மெய்யொடு
மாசுபட் டன்றே கலிங்கமும்; தோளும்,
திதலை மென்முலைத் தீம்பால் பிலிற்ற,
புதல்வற் புல்லிப் புனிறு நாறும்மே' (நற். 380:1-4)

இவை ஈன்ற மகளிர் நெய், ஐயவி, நறும்புகை முதலியன கொண்டு அமைதலை உணர்த்தும். ஈன்றணிமை நீங்கிய பின், மகப் பெற்றார் குளத்து நீரில் சென்று குளிப்பர். புதல்வர்களை ஈன்ற மகளிர் நீராடுதலை,

'கணவர் உவப்பப் புதல்வர்ப் பயந்து,
பணைத்து ஏந்து இளமுலை அமுதம் ஊற,
புலவுப்புனிறு தீர்ந்து, பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளநீர் அயர' (மதுரை.600-603)

என்பதனால் அறிகிறோம. மகவீன்ற மனையில் மகளிர் நன்நிமித்தம் பார்த்து விரிச்சி கேட்டு நிற்றலும், பிறந்த மகவைச் செவிலி பேணித்த்ம் பக்கல் அணையில் வைத்துப் பாதுகாத்தலும், தலைவி நெய்யாடியிருத்தலும், அப்பொழுது பரத்தை ஒழுக்கத்தால் மனைவராது இருந்த தலைமகனும் குலக் கொழுந்தாம் புதல்வனது முகத்தைக் காண வருதலும் ஆகியவற்றைப் பின்வரும் நற்றிணைப் பாடல் தெரிவிக்கிறது.

'நெடு நா ஒள் மணி கடிமனை இரட்ட,
குரை இலைப் பேகிய விரவு மணற் பந்தர்,
பெரும் பாண் காவல் பூண்டென, ஒருசார்,
திருந்து இழை மகளிர் விரிச்சி நிற்ப,
வெறி உறவிரிந்த அறுவை மெல் அணைப்
புனிறு நாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச,
ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈர்-இமை பொருந்த,
நள்ளென் கங்குல், கள்வன் போல,
அகன்துறை ஊரனும் வந்தனன் -
சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே!' (நற். 40)

புதல்வன் பிறந்தவுடன் அவன் முகத்தைத் தந்தை பார்த்து மகிழ வேண்டும் என்பது தருமநூல் விதி என்பர். அதியமான் தவமகன் பிறந்தவனை வந்து காண்கின்றான். அப்பொழுதும் அவன் பகைவர் மேற்கொண்ட சினம் தணிந்திலன் என்று ஔவையார் குறிப்பிடுகிறார்.

'செறுவர் நோக்கிய கண், தன்
சிறுவனை நோக்கியும், சிவப்பு ஆனாவே' (புறம். 100:10-11)

என்பது ஔவை வாக்கு, ஒருவன் பெறும் பேறுகளுள் மக்கட் பேற்றின் பெரும் பேறு வேறு இல்லை என்று அறவோர் கொண்டனர்.

'படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வர் ஆயினும், இடைபடக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி,
இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்,
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை - தாம் வாழும் நாளே' (புறம். 188)

என்பது மக்கட் பேற்றின் அருமையைப் புலப்படுத்தும்.

குழந்தைக்குப் பெயரிடுவதிலும் ஒரு வழக்கம் உண்டு. தம் தந்தையின் பெயரையே புதல்வனுக்கு இடுவது மரபு.

'அகன் பெருஞ்சிறப்பின் தந்தை பெயரன்' (ஐங். 403:3)

'முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற
புதல்வற் புல்லிப் பொய்த்துயில் துஞ்சும்' (கலி.75:24-25)

'மேதக்க எந்தை பெயரனை யாம் கொள்வேம்' (கலி. 81:35)

பாட்டன் பெயர் பெறும் மக்கள் அக்குடிக்குரிய உரிமையையும் பெறுவோராகின்றனர். இது 'தாயம்' எனக் குறிக்கப்படும் (பொருந. 132; புறம். 213:10-11). அறிவுடை நன்மக்களைப் பெற்ற தாய் தந்தையரை உலகம் வாழ்த்தியது.

'நீ வாழியர்; நின் தந்தை
தாய் வாழியர், நிற்பயந்திசினோரே!' (புறம். 137:14-15)

என நாஞ்சில் வள்ளுவனும் அவனது பெற்றோரும் வாழ்த்தப் பெறுகின்றனர்.

புலிப்பல்லைக் கோத்துச் சிறுவர்க்கும் அதனோடு பொன்னைச் சேர்த்துச் சிறுமியர்க்கும் 'தாலி' என்னும் அணியை அணிந்தனர்.

'புலிப்பற் தாலிப் புன்தலைச் சிறாஅர்' (புற. 374;9)

'புலிப்பற் தாலிப் புதல்வற் புல்லி,
'அன்னா!' என்னும் அன்னையும்' (குறு. 161:3-4)

பொன்னொடு
புலப்பல் கோத்த புலம்பு மணித் தாலி
....
நல்கெழு சிறுகுடிக் கானவன் மகளே!' (அக. 7:17-22)

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இளம்பருவத்தில் தானே பகைவரை வென்று கொண்ட வெற்றியைச் சிறப்பித்துப் பேசிய இடைக்குன்றூர் கிழார்.

'கிண்கிணி களைந்த கால் ஒண்கழல் தொட்டு,
குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண் தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து,
குறுந்தொடி கழித்த கைச் சாபம் பற்றி,
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்
யார் கொல்? வாழ்க. அவன் கண்ணி; தார்பூண்டு,
தாலி களைந்தன்றும் இவனே; பால் விட்டு
அயினியும் இன்று அயின்றனனே' (புறம். 77:1-8)

என்று பேசுகின்றார். இங்கே குழந்தை குடுமியுடனும், கிண்கிணி அணிந்த காலுடனும், சிறுவளையுடனும் பொலிவதைக் காண்கிறோம். நெடுஞ்செழியன் மார்பில் பூண்ட தாலி இன்னும் நீக்கப்பெறவில்லை என்பதனால் குமரப்பருவத்தில் இக்குழந்தைத் தாலி நீக்கப்படும் என்பது போதரும்.. இங்கே, ''தாலி களைந்தன்றும் இலனே'' என்பதற்கு 'ஐம்படைத்தாலி கழித்ததும் இவன்' என்பது பழையவுரை. இதனைத் திருமாலின் பஞ்சாயுதம் என்றும், பிறந்த ஐந்தாம் நாளில் பிள்ளைகளுக்கு இதனை அணிவித்தல் மரபு என்றும் கூறுவர். 'பொன்னுடைத் தாலி என் மகன்' (அக. 54:18) என அகநானூறும் இந்த ஐம்படைத்தாலியைக் குறிப்பிடுதல் காணலாம். குழந்தைப் பருவம் நீங்கும்போது அதன் பக்கத்துள்ள குடுமியைக் களைதலும், கிண்கிணி அணிந்த காலில் வீரக்கழலை அணிதலும், சிறுவளை அணிந்த கையிலே வில்லைப் பிடித்தலும் இப் புறநானூற்றுப் பாடலால் விளங்கலாகும்.

இடபப்பூணும் அரையில் அணிவர். அதனோடு வெட்டாத வாளும் மழுவும் இரண்டு புறத்தும் கட்டப்பட்டிருக்கும். இடையே யுள்ள இடபப்பூண் ஈசல் பூச்சியின் நிறம் போன்று பவளத்தால் செய்யப்பட்டிருக்கும்.

'பூண்டவை எறியா வாளும் எற்றா மழுவும்
செறியக் கட்டி, ஈர்இடைத் தாழ்ந்த
பெய் புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மை அற விளங்கிய ஆன் ஏற்று அவிர் பூண் (கலி. 85:8-11)

குழந்தைகளின் தளர்நடை கண்டும், மழலை கேட்டும், பெற்றோர் பெருமகிழ்வுறுகின்றனர்; அம்புலி காட்டி அதனை மகிழ்விக்கின்றனர்.

'கிளர்மணி ஆர்ப்ப ஆர்ப்பச் சாஅய்ச் சாய்ச் செல்லும்
தளர்நடை காண்டல் இனிது' (கலி. 80:10-11)
'ஐய! காமரு நோக்கினை, 'அத்தத்தா' என்னும் நின்
தேமொழி கேட்டல் இனிது' (கலி. 80:14-15)

'ஐய! திங்கட் குழவி, வருக!' என, யான் நின்னை
அம்புலி காட்டல் இனிது' (கலி. 80:18-19)

குழந்தைக்கு நல்ல அழகிய ஆடை அணிதல், அதன் மேல் அரையில் விளங்கும்படி பொற்காசும் மணிக்காசுகளும் கோத்த அரைஞாண்; சிறந்த பவள வடம். கையில் வளை, மார்பில் முத்தும் பிற மணிகளும் சேரக் கோத்து அமைந்த மூன்று வடம். இங்ஙனமாகப் பல பிள்ளைப் பணிகளும் பூண்டு ஆண்மகவோ தன்னொடு ஒத்த சிறுவர்களுடன் சிறுதேர் உருட்டித் தெருவில் விளையாடச் செல்கின்றது (கலி. 85). பெண்மகவோ பாவையும் பந்தும் கொண்டு தோழியருடன் விளையாடியும், வண்டற்பாவை புனைந்தும், மலர் பறித்தும் பொழுது போக்குகின்றது.

குழந்தைகளுக்குத் தெய்வ உணர்ச்சி இளமையில் தானே படியும் வண்ணம் அவர்களைக் கோயில்களுக்குத் தம்முடன் அழைத்துச் சென்று வழிபடச் செய்வர். தலைவி ஒருத்தி கடவுள் உறையும் கோயில்கள் தோறும் தன் குழந்தையை வலஞ் செய்வித்து வணங்கி வரும்படி தோழியுடன் மகனை அனுப்பிய செய்தி மருதக்கலியால் தெரியவரும்.

-'எல்லா!
'கடவுட் கடிநகர் தோறும் இவனை
வலம் கொளீஇ வா' என, சென்றாய்' (கலி. 84:5-7)
'புத்தேளிர் கோட்டம் வலம் செய்து இவனொடு
புக்க வழி எல்லாம் கூறு' (கலி: 82:4-5)

என்பன தலைவியின் கூற்றுகள்.

குழந்தை பிறந்த நாளைப் பெரிதும் கொண்டாடுவர். இதனால், குழந்தை பிறந்த நாள் முதலியன குறிக்கும் இக்கால சாதகம் போன்றதொரு வழக்கம் முன்பு இருந்ததோ என்று ஐயுறவு தோன்றலாம். மன்னர் தமது பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுவதிலிருந்து, மக்களிடையே அவ்வழக்கம் பயின்றிருந்தது எனக் கொள்ளலாம். நன்னன் என்பான் தனது பிறந்த நாளில் கொண்டாடிய சேரி விழாவை உவமையாக எடுத்துக் காட்டுகிறது மதுரைக்காஞ்சி.

'பேர் இசை நன்னன் பெரும்பெயர் நன்னாள்
சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு' (மதுரை. 618-619)

தவிரவும், ஒவ்வொருவருக்கும் உயிர்நிலையாக ஒரு நாள்மீன் விண்ணில் நிலைபெற்றிருப்பதாகவும் எண்ணும் நம்பிக்கையும் தெரியவருகிறது. ஒருவருடைய வாழ்க்கை முடிவுடன் அந்த மீனும் அழிந்து விடுமாம். இச் செய்தியை,

'கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய!
நின்று நிலைஇயர், நின் நாள்மீன்; நில்லாது
படாஅச் செவீஇயர், நின்பகைவர் மீனே!' (புறம். 24:23-25)

என்பதனால் அறியலாம். நாளும் கோளும் மக்களுடைய வாழ்க்கையில் இணைந்து செல்கின்றது. மணநாள் பார்த்தல், பிரயாணத்திற்கு நாள் பார்த்தல் முதலிய வழக்கமும் காண்கிறோம். பிரயாணத்திற்கு நாள் தடையாக இருத்தல்,

'நாளும் கோளும் தகைத்தலும் தகைமே' (கலி. 5:9)

என்பதனால் போதரும்.

ஒருவன் பிறக்கின்ற வேளைக்குத் தக்கவாறு அவனது உருவு, குணம் முதலிய அமையும் என்பதும் ஒரு நம்பிக்கை. கலித் தொகையில் வரும் கூனி, குறளனை நோக்கி, 'குறளாய்ப் பிறத்தற்கு ஏதுவாகிய நாழிகையின் முகூர்த்தத்திலே ஆண்டலைப் புள்ளுக்குத் தன் பெடை ஈன்ற பறழாகிய மகனே' என்று விவரிக்கின்றாள். குறளாய்ப் பிறந்தது அவன் பிறந்த வேளையின் பயன் என்பது அவள் கருத்து.

'அன்னையோ! காண் தகை இல்லாக் குறள்நாழிப்
போழ்தினான்,
ஆண்டலைக்கு ஈன்ற பறழ் மகனே!' (கலி. 94:5-6)

என்று விளிக்கின்றாள் கூனி.

'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே' (புறம். 312:1-2)

என்றபடி தந்தை குழந்தையைச் சான்றோனாக ஆக்குதற்கு அவனுக்கு வேண்டும் கல்வி அளிக்கின்றான். ஆசிரியரை யடுத்துக் கற்று அவருக்குக் காணிக்கை செலுத்தினர். கற்ற மாணவன் ஆசிரியர்க்கு உரிய காணிக்கை செலுத்தாவிடில், அவனுடைய செல்வம் குன்றும் என்றும் கூறுகிறார் ஒரு புலவர்.

'கற்பித்தான் நெஞ்சு அழுங்கப் பகர்ந்து உண்ணான்
விச்சைக்கண்
தப்பித்தான், பொருளேபோல், தமியவே தேயுமால்'
(கலி. 149:4-5)

என்பது அவர் வாக்கு.

மாணவர்கள் மை தடவிய ஓலையைக் கொண்டு கல்வி பயின்றனர். ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதிய எழுத்துத் தெரிவதற்காக மை பூசுதல் மரபு. ஆகவே கல்வி பயிலும் இளைஞரை,

'மையாடல் ஆடல் மழ புலவர்' (பரி. 11:88)

என்று குறிப்பிடுகின்றது பரிபாடல். 'மையோலை பிடித்த இளைய புலவரது' எனப் பரிமேலழகர் இதற்கு எழுதும் உரையும் நோக்கத் தகும். மேலும், ஓலையில் எழுதிச் செய்திகளை அனுப்புதலும் உண்டு. செய்தி வரைந்து ஓலையைக் கட்டி, அதன் தலையிலே அரக்கு இலச்சினை பொறிப்பர்.

போதர். அகடு ஆரப் புல்லி முங்குவேம் -
துகள் தபு காட்சி அவையத்தார் ஓலை
முகடு காப்பு யாத்து விட்டாங்கு' (கலி. 94:41-43)

என்பது கலித்தொகை. பறை அறைந்தும் செய்திகளை மக்களுக்கு அறிவித்து வந்தனர்.

'நிறை அழி கொல்யானை நீர்க்கு விட்டாங்கு
பறை அறைந்தல்லது செல்லற்க என்னா
இறையே தவறு உடையான்' (கலித். 56:32-34)

என்பதனால் இவ் வழக்கம் தெரியலாகும்.

ஓலை எழுத்துடன் கல்லெழுத்தும் முன்பு இருந்தது. இறந்த பெரு வீரர்க்கு நாட்டிய கல்லிலும் அவ்வீரப் பெருமக்களின் பெயரும் பீடும் பொறித்தலை முன்பு நடுகல் பற்றிக் கூறியவிடத்துக் கண்டோம். ஆகவே, எண்ணும் எழுத்தும் கண்ணெனை வரைந்து கற்றல் பண்டுதொட்டே பயின்று வருவது. ஆனால், அந்தணர் வேதங்களை எழுதாது வழிவழி கேள்வி வாயிலாகவே கற்றுப் போற்றினர் என்பது தெரியவருகிறது. பிரமசாரி வாழ்க்கை நிலையுடைய ஒரு பார்ப்பன மகனை வருணிக்குமிடத்துக் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் அவன் வேதம் கற்ற விதமும் அவனது தோற்றம் முதலியனவும் வருணிக்கப்பட்டுள்ளன.

'பார்ப்பன மானே! பார்ப்பன மகனே'
செம்பூ முருக்கின் நல்நார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண்டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே!
எழுதாக் கற்பின் நின் சொலுள்ளும்' (குறுந் . 156:1-5)

என்று மாணிப்படிவப் பார்ப்பனன் தோற்றமும் ஒழுக்கமும் சுட்டிக் காட்டப்பட்டிருத்தல் காணலாம்.

'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்'
(பரி. தி. 4:1)

என்பதனால் மூன்று தமிழும் சிறப்புறக் கற்றனர் மக்கள் என்பது போதரும். மொழி இலக்கண மரபுகளையும் பொருள்-இலக்கண மரபுகளையும் உணர்ந்தனர்.

'தள்ளாப் பொருள் இயல்பின் தண்தமிழ் ஆய்வந்திலார்
கொள்ளார்இக் குன்று பயன்' (பரி. 9:25-26)

எனப் பொருள் இலக்கணம் சிறப்பிக்கப்படுதலின் ஏனை எழுத்தும் சொல்லும் தெரிதல் வெளிப்படை. யானையைப் பழக்கும் பாகர் யானைப் பேச்சான வடமொழியில் அதனைப் பழக்குகின்றனர்.

'கவைமுட் கருவியின், வடமொழி பயிற்றி,
கல்லா இளைஞர் கவளம் கைப்ப' (முல்லை. 35-36)

என்பது முல்லைப்பாட்டு தரும் செய்தி. இதற்கு, 'வடமொழியை அடியிலே கல்லாத இளைஞர் யானைப் பேச்சான

வடமொழிகளைக் கற்றுப் பலகாற் சொல்லிக் கவைத்த முள்ளையுடைய பரிக்கோலாலே கவளத்தைத் தின்னும்படி குத்த' என்று நச்சினார்க்கினியர் உரை வகுக்கின்றார். யானையைப் பழக்குவோர் இளமையிலேயே வடமொழியைக் கல்லாது தம் தொழிலிற்கு வேண்டும் அளவு அம்மொழி தெரிந்திருந்தனர் என்னும் குறிப்பு இதனால் போதரும். ஆதலால், வடமொழிக் கல்வியும் போற்றப்பட்டது போலும்.

'நெடுஞ்சுழிப்பட்ட கடுங்கண் வேழத்து
உரவுசினம் தணித்து, பெருவெளிற் பிணிமார்,
விரவுமொழி பயிற்றும் பாகர் ஓதை' (மலைபடு. 325-327)

என மலைபடுகடாமும் யானை பயிற்றுவோர் அதற்குப் பயிற்றுவிக்கும் மொழியினைக் குறிப்பிடுகின்றது.

கற்கும் இளைஞர் பிரமசரிய விரதம் காத்துக் கல்வியையும் பெற்றனர். தலைவன் விடுத்த தூதுவனாக வந்த ஓர் இளைஞனை,

'அன்னாய்! இவன் ஓர் இளமாணாக்கன்;
தன் ஊர்மன்றத்து என்னன் கொல்லோ?
இரந்தூண் நிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெருஞ் செம்மலனே' (குறு. 33)

என்று புகழ்கிறாள். தூதாக வந்த இளைஞன் இரந்து உண்ணும் பிரமச்சரிய வாழ்க்கையுடையவன் என்பதும், அவனது பேச்சால் அவன் கல்வி சான்றவனாய்த் தெரிதலும் பெறப்படுகின்றன. அந்தணர்கள் நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசரியம் காத்தலும், ஒன்பது புரிகளைக் கொண்டு ஆக்கிய முந்நூலை அணிதலும் மரபு (முருகு. *179-184*). ஏறு தழுவும் விழாவிலே பிறரைக் குத்திக் குடர்மாலையைக் கொம்பில் தாங்கி வரும் ஏற்றின் முன் நின்று ஆடிய ஒருவன் அக்குடரை இரண்டு கையாலும் எடுத்து வயிற்றிலே இடுகின்றான். இது சிவந்த நூற் கழியை ஒருவன் இரண்டு கையிலும் கோத்துப் பிடித்திருக்க அதனை மூன்று நூலாகக் கொள்கின்றவனை ஒத்திருக்கிறது என்கிறார் ஒரு கவிஞர் (கலி. *103:28-31*). அந்தணர் முத்தீயையும் பேணி வழிபடுகின்றனர். எனவே, இவர், .ஒன்பது கொண்ட மூன்று புரி நுண்ஞாண். (முருகு. *183*) உடையவர் என்றும்,

'மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து,
இரு பிறப்பாளர்' (முருகு. 181-182)

என்றும் சிறப்பிக்கப்படுகின்றனர்.

இங்ஙனம் இளமை வாழ்வு கழிய ஆடவர் வீரக்கழல் அணிந்து போர்ப்பயிற்சி முதலியன பெறுதலும், கன்னியர் அம்பாவாடல் முதலியன நிகழ்த்துதலும் ஆகிய குமரப்பருவத்தை எய்துகின்றனர். குன்றக்குறவரின் மகளிர் இப்பருவத்தில் தினைப்புனம் காவலுக்கு அனுப்பப்படுகின்றனர். குமரப்பருவத்தில்,

'வில்லோன் காலன கழலே; தொடியோள்
மெல்அடி மேலவும் சிலம்பே' (குறுந். 7:1-2)

என்றவாறு கழல் ஆர்க்கவும் சிலம்பு ஒலிக்கவும் துள்ளுநடை போடுகின்றனர் குமரரும் குமரியரும்.

'வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறு வாள் அருஞ் சமம் முருக்கி,
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' (புறம். 312:3-6)

என்று மறக்குடிப் பிறந்த தாய் ஒருத்தி தன் மகனது கடமையைக் கூறுகிறாள். போரிலே மறக்குடிப் பிறந்தவர் ஈடுபடும் போரில் கொல்லர் உலைத்தொழில் புரிகிறார்; உழவர் உணவாக்குகின்றார்; குயவன் பாண்டம் வனைகிறான்; வணிகர் கடலிலும் தரையிலும் சென்று வணிகம் புரிகின்றனர். ஆகவே, எல்லா மாந்தரும் அவரவர் இயல்புக்கும் திறமைக்கும் ஏற்ற தொழில்களிலே புகுகின்றனர்.

கன்னிமகளிர் இளமையில் நோற்கும் நோன்புகளிலே ஒன்று அம்பாவாடல்; இதனைத் 'தைந்நீராடுதல்' என்றும் குறிப்பிடுவர். இவர் சிறுமியாதலின் தாயார் அருகே நிற்க நீராடுகின்றனர். மார்கழி மாதத்து நிறைமதி நாளாகிய திருவாதிரையில் பூசகர் தெய்வத்திற்கு விழா எடுக்க, கன்னிப் பெண்கள் கூடி, 'பூமியானது மழைவளம் பெற்றுக் குளிர்வதாக' என்று அம்பா ஆடலை மேற்கொள்கின்றனர். அவர்களுக்குச் சடங்கு அறிந்த முதுபார்ப்பனிமார் நோன்பு நோற்கும் முறைமையைத் தெரிவிக்கின்றனர். அவர்கள் காட்டிய முறைப்படி அதிகாலையில் நீராடிக் கன்னிமகளிர் நோன்பு நோற்கின்றனர் (*பரி. 11:74-92*)

'வை எயிற்றவர் நாப்பண், வகைஅணிப் பொலிந்துநீ
தையில் நீராடிய தவம் தலைப்படுவாயோ?' (கலி. 59:12-13)

'இழை அணி ஆயமொடு தகுநாண் தடைஇ.

தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோட் குறுமகள்' (நற். 80:6-8)

'நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண்கயம் போல
பலர் படிந்து உண்ணும்' (ஐங். 84:3-5)

எனவரும் பாடற்பகுதிகளால் கன்னிமகளிர் தம் ஆயத்தாருடன் நீராடி மகிழ்தல் புலப்படும்.

'புகை, பூ, அவி, ஆராதனை, அழல், பல ஏந்தி
நகை அமர் காதலரை நாளணிக் கூட்டும்
வகை சாலும் வையை வரவு' (பரி. 6:11-13)

என வையையின் வரவு கூறுதலின் மகளிர் நதியில் நீராடி அதற்கு ஆராதனை செய்தற்கு வேண்டும் புகை, முதலியன கொண்டு செல்லுதல் புலப்படும். அங்கே வையைக்கு மடை கொடுத்தலையும் காண்கிறோம்.

'வையை நினக்கு மடை வாய்த்தன்று' (பரி. 11:8)

என்பது மகளிர் தைந்நீராடல் நோன்பில் நதிக்குப் படைக்கும் படையலைக் குறிக்கும்.

'தைஇய மகளிர்தம் ஆயமொடு அமர்ந்து ஆடும்
வையை வார் உயர் எக்கர் நுகர்ச்சியும் உள்ளார் கொல்'
(கலி. 27:19-20)

என்பதனால் மகளிர் தம் ஆயத்தாருடன் தைந்நீராடுதல் போதரும் இந்தப் பாவை நோன்பில் வண்டல் விளையாட்டுக்கு உரிய பாவையை நீர்த்துறையிடத்து வைத்து, கொம்பு என்னும் இயம் ஒலிக்கக் குரவைக் கூத்தாடுதலும் உண்டு.

'தைஇ நின்ற தண் பெயல் கடைநாள்,
பொலங்காசு நிரைத்த கோடு ஏந்து அல்குல்
நலம்கேழ் மாக்குரல் குழையொடு துயல்வர,
பாடு ஊர்பு எழுதரும் பகுவாய் மண்டிலத்து
வயிர் இடைப்பட்ட தெள்விளி இயம்ப
வண்டற் பாவை உண்துறைத் தரீஇ,
திருநுதல் மகளிர் குரவை அயரும்
பெருநீர்க் கானல் தழீஇய இருக்கை,
வாணன் சிறுகுடி' (அக. 269:14-20)

என்னும் அகப்பாட்டால் மேற்குறித்தது புலனாகும். பாவையை நீர்த்துறையில் அமைத்துச் செய்யும் நோன்பு ஆதலால் இது பாவை நோன்பு எனப்பட்டது போலும். இப் பாவைக்கு அரும்பு முதலிய நீர்ப்பூக்களைப் பறித்து அணிதலும் உண்டு.

'படிவ மகளிர் கொடி கொய்து அழித்த
பொம்மல் அடும்பின் வெண்மணல் ஒருசிறை' (நற். 272:2-3)

என்பது அடும்பு மலரை நோன்பு இயற்றும் மகளிர் கொய்தல் பற்றிக் கூறும். இம் மகளிர் நீராடியதனால் ஈரம் — மேனியராய் உள்ளனர். தினைக்கதிரைப் பறித்துக்கொண்ட பெண் குரங்கு ஆண் குரங்குடன் கூடி அத்தினையைக் கையால் நெருடி உண்ணும் தோற்றம் நோன்பியர் நோன்பில் உணவு உண்ணும் காட்சியை நினைவூட்டுகின்றது என்கிறார் ஒரு கவிஞர். இதனைப் பின்வரும் நற்றிணைப்பாடல் உணர்த்தும்.

'கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை
முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரை ஏறி
அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டு, தன்
திரை அணற் கொடுங்கவுள் நிறைய முக்கி,
வான் பெயல் நனைந்த புறத்த, நோன்பியர்
கை ஊண் இருக்கையின் தோன்றும் நாடன்' (நற். 22:1-7).

அம்பாவாடலாம் தைந்நீராடலினால், 'உலகம் மழையால் குளிர்வதாக' என வேண்டுதல் ஒரு பயன். மற்றும் அக் கன்னியர் தமக்கு ஏற்ற கணவனைப் பெற்று, அவனுடன் கூடி என்றும் இன்பம் பெற்றுச் சுற்றமுடன் சிறந்து வாழவேண்டும் என்று வேண்டுதலும் மற்றொரு பயனாகும். பாவை நோன்பு இயற்றுவார் பின்வரும் பயன்கள் தமக்கு வாய்க்க வேண்டும் என்று வேண்டுவதாய்ப் பதினொராம் பரிபாடல் குறிப்பிடுகிறது.

'தைந்நீரே! யாம் ஆடும் அளவொடு தெளிந்து வருகின்றாய். நீ தக்காய்!' என்கின்றனராம் சிலர். இன்னும் சிலர். 'எம் காதலரைத் தழுவும் வீறு பெறுக என வேண்டுகின்றோம்' என்கின்றனர். மற்றும் சிலர், 'பூவில் விழும் வண்டு பின்னர் அப் பூவை நீங்கித் தனியே விட்டுப் போவது போலப் போகாமல், எம்மால் விரும்பப்படும் கணவர் எம்மைப் பாதுகாப்பராக' என்கின்றனர். 'என் கணவரும் யாமும் கிழவர் கிழவியர் எனப்படாமல் இத்தவம்

நிலைபெற்ற இளமையைத் தர மகப்பெற்றுச் செல்வத்தொடும் சுற்றத்தோடும் நிலை பெறுக' என வேண்டுகின்றனர் வேறு சிலர்.

'நீ தக்காய், தைந்நீர்; நிறம் தெளிந்தாய்'' என்மாரும்,
''கழுத்து அமை கை வாங்காக் காதலர்ப் புல்ல,
விழுத்தகை பெறுக!.. என வேண்டுதும். என்மாரும்
''பூவீழ் அரியின் புலம்பப் போகாது,
யாம் வீழ்வார், ஏமம் எய்துக'' என்மாரும்,
''கிழவர் கிழவியர்.. என்னாது, ஏழ் க்ாறும்,
மழ ஈன்று மல்லற் கேள் மன்னுக!. என்மாரும் -
(பரி. 11:115-121)

இத்தகைய தைந்நீராடலையும் பாவை நோன்பையும் பிங்கல' நிகண்டு பிள்ளைப் பாட்டின் ஒரு பகுதியாகக் கொண்டு கூறுதலும் ஈண்டு ஒப்பு நோக்கத் தகும்.

'பேணும் சிறப்பின் பெண் மகவு ஆயின்,
மூன்றாம் ஆண்டில் குழமணம் மொழிதலும்,
ஐந்தின் முதலா ஒன்பதின் காறும்,
ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றலும்
பனிநீர் தோய்தலும்-பாவை ஆடலும்' (பிங். 1369)

என்பது பிங்கல சூத்திரம்.

திருப்பரங்குன்றத்தில் முருகப்பெருமானின் ஊர்தியாகிய யானையைக் கன்னிமை கனிந்த மகளிரும் திருமணம் பெற்ற மகளிரும் பூசித்தல் கூறப்பட்டுள்ளது. இந்த யானைப் பூசையில் அதன் மத்தகத்தில் குங்குமத்தால் அலங்கரிப்பர். பூவொடு கூடிய இனிய நீரை அதன்மேல் சொரிவர். செவிகளிலே வெண்சாமரத்தை வைத்து, அதன்மேல் பவளத்தால் செய்த நல்ல காம்பினையுடைய பொற்குடையையும் எடுப்பர்; அவ் யானை உண்ணுதற்கு சோற்றுக் கவளமும் படைக்கின்றனர். பூசையின் பின் யானை உண்ட மிச்சிலை மகளிர் உண்பர். இவ்வாறு பூசை செய்யாவிடில், மகளிர்தம் காதலர் முறுவலொடு கூடிய தலையளியை எய்தார் என்றும், கன்னிமை கனிந்த காலத்தார் குறைவற்ற மைந்தர் தோளைக் கூடார் என்றும் கருதினர். இந்த யானைப் பூசையை,

'நின யானைச் சென்னிநிறம் குங்குமத்தால்
புனையா, பூநீர் ஊட்டி, புனை கவரி சார்த்தா,
பொறப்பவழப் பூங்காம்பின் பொற்குடை ஏற்றி,

மலிவுடை உள்ளத்தான் வந்துசெய் வேள்வியுள்;
பல்மணம் மன்னு பின் இருங் கூந்தலர்,
கன்னிமை கனிந்த காலத்தார், நின்
கொடி ஏற்று வாரணம் கொள் கவழ மிச்சில் -
மறு அற்ற மைந்தர் தோள் எய்தார்; மணந்தார்
முறுவல் தலையளி எய்தார் - நின் குன்றம்
குறுகிச் சிறப்பு உணாக்கால்' (பரி.19:85-94)

என்னும் பாடற்பகுதி உணர்த்தும்.

நாட்டுவாழ் கன்னியர் தைந்நீராடி நோன்பு நோற்கின்ற காலத்து, குன்றக் குறவருடைய, சிறுமகளிர் தினைப்புனங் காவலுக்குச் செல்லுகின்றனர். ஆயர் மகளிர் வெண்ணெய், மோர் முதலிய பாற் பயன்களை விலை பகரச் செல்லுகின்றனர். இவ்வாறாகக் கன்னி மகளிர் பெற்றோர்க்கு உதவி வாழ்கின்றனர். இங்ஙனமே காளையரும் வினைமேல் செல்கின்றனர். இவ்வாறு சுதந்திரத்தோடு உலவும் காளையரும் மங்கையரும் விதிவழி ஒருவரை ஒருவர் எதிர்ந்து பண்டைத் தொடர்பால் உள்ளம் ஒன்றுபடுகின்றனர். மகளிர் நோன்பு இயற்றும் துறைகளில் கூட ஆடவர் மகளிர் சந்திப்பு நேர இடமாகிறது. வையை நதித் துறையில் தைந்நீராடி மகிழும் மகளிரைக் கண்டு உவப்படைந்த தலைமகன் ஒருவன்,

'கண்டார்க்குத் தாக்கு அணங்கு இக் காரிகை காண்மின்;
பண்டாரம், காமன் படை, உவள்கண்; காண்மின்'
(பரி. 11:122-123)

எனப் பேசுவது அவன் கொண்ட பெருங்காதலைப் புலப்படுத்தும். கோவிலும் கூட காதல் நிகழ்ச்சிகளுக்கு நிலைக்களமாதலைக் கலித்தொகை சித்திரிக்கும் கூனி குறளன் காதல் உரையாடலில் காணலாகும். இறுதியாகக் குறளனை விரும்பிய கூனி,

'ஆங்கு ஆக; சாயல் இன் மார்ப! அடங்கினேன்: 'ஏஎ'
பேயும் பேயும் துள்ளல் உறும் எனக்
கோயிலுள் கண்டார் நகாமை வேண்டுவல்;
தண்டாத் தகடு உருவ! வேறாகக் காவின்கீழ்ப்
போதர்; அகடு ஆரப் புல்லி முயங்குவோம் -
துகள்தபு காட்சி அவையத்தார் ஓலை
முகடு காப்பு யாத்து விட்டாங்கு' (கலி. 94:37-43)

இங்கே, 'கோயிலுள் கண்டார் நகாமை வேண்டுவல்' என்றும், 'வேறாகக் காவின் கிழ்ப் போதர்' எனச் சந்திப்பிற்கு ஏற்ற இடம் கூறுதலும் காணலாம். ஆகவே, கன்னியரும், காளையரும் ஒருவரை ஒருவர் சந்திக்க நேரும் இடங்களில் ஒருவர்க்கொருவர் காதல் உணர்வு எழ இடமுண்டாதல் பெறப்படும். காதல் நிகழ்ச்சிக்குக் குறிஞ்சி நிலத்தைப் பின்னணியாகக் கொண்டு புலவர் கூறுதல் இலக்கிய மரபே அல்றி வேறன்று.

காதலரைக் கணடு களவு மணம் கொள்ளும் நிகழ்ச்சியும், பின்பு உலகம் அறிய மணம் கொண்டு வாழும் கற்பியல் நிகழ்ச்சியும் சுவைபட நாடக வழக்கும் உலகியல் வழக்குமாகக் கவிஞர்கள் பாடுகின்றனர். அடியோர்களிடத்திலும், வினைவல தொழிலாளர் முதலியோரிடத்தும் நிகழும் காதற் பேச்சுகளையும் கலித்தொர்கை சித்திரிக்கின்றது (கலி. 94).

மகளிரை வலிந்துகொண்டு சென்று மணந்துகொள்ளும் இராக்கத மணவொழுக்கமும் இல்லாமல் இல்லை.

'மைஇல் மதியின் விளங்கும் முகத்தாரை
வெளவிக் கொளலும் அறன். எனக் கண்டன்று'
(கலி. 62:14-15)

என்று பேசுகிறான் கலித்தொகைப் பாடல் ஒன்றில் வருந்தலைவன். ஆகவே ஒத்த அன்புடை ஆடவர் மகளிர் தனிமையிடத்து எதிர்ந்து காதல் கொண்டு, பின் சுற்றத்தார் இசைவுடன் மணந்து வாழும் நிகழ்ச்சிகள் இலக்கியங்களில் காணுமாறே நிகழ்ந்தனவெனல் பொருத்தமாகாது. பல்வேறு உலகியல் நிகழ்ச்சியையும் நாடகச் சுவைபட அகப்பொருட் பாடல்கள் வருணிக்கும் ஒழுக்கப் பண்புகள் உண்மையொடு பொதிந்த கற்பனைப் புனைவுகளே.

களவு ஒழுக்கம் சிறப்பாகவே கொள்ளப்படுகிறது. காதல் திருமணம் புலவர்களால் பெரிதும் புகழ்ந்து போற்றப்பட்டது என்பதனை,

'புலவர் புகழ்ந்த நார்இல் பெருமரம்
நிலவரை எல்லாம் நிழற்றி,
அலர் அரும்பு ஊழ்ப்பவும் வாராதோரே''(அக. 273;15-17)

என்பதனால் உணரலாம். மேலும் இங்ஙனம் ஒருவரை ஒருவர்

மனம் ஒப்பிச் சேர்தல் வழிவழிவரும் அன்பின் தொடர்பு என்றே கொண்டனர்.

'ஒன்றுதும் என்ற தொன்றுபடு நட்பின்
காதலர்' (நற். 109:12)

என்றும், 'தொல்கேள்', (ஐங். 167:4; 271:4) என்றும் போற்றினர் இயற்கையில் அமைந்த புள்ளும் மாவும் இணை இணையாகச் சேர்ந்து இவர்க்கு இன்பக் கிளர்ச்சியை மேலெழச் செய்கின்றன. காட்டில் மானின் சேர்க்கையைக் காதலிக்குக் காட்டி,

'உயிர் கலந்து ஒன்றிய செயிர்தீர் கேண்மைப்
பிரிந்துறல் அறியா விருந்து கவவி,
நம்போல் நயவரப் புணர்ந்தன -
கண்டிகும் மடவரல்! - புறவின் மாவே' (ஐங். 419)

என்று பேசுகிறான் ஒரு தலைவன். ஒத்த அன்புடை இருவர் நெஞ்சங்கள் ஒன்றுபட, அவர் தம் பழவினைப் பாசம் தொடர ஈருடல் ஒருயிராய்க் கலந்து ஒழுகுகின்றனர்.

'மாதரும் மடனும் ஓராங்குத் தணப்ப,
நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி,
இருவேம் ஆய்ந்த மன்றல் இதுஎன,
நாம் அறிவுறாலின் பழியும் உண்டோ?' (குறிஞ்சி. 19-22)

தலைவனும் தலைவியும் பெருமையும் உரனும் அச்சமும் நாணமும் நுணுகிய நிலையால் பிறந்த களவு மணத்தை அறிவித்தல் புகழே அன்றிப் பழியின்று என்கிறாள் ஒரு தலைவி. இதனை, 'இருவேம் ஆய்ந்த மன்றல்' என்கிறாள் மற்றொருத்தி. இதனால் கொடுப்போரும் அடுப்போரும் இன்றி அன்புடை இருவர் நெஞ்சம் கலந்த காதல் வாழ்வு உயர்வாகவே மதிக்கப்படுகிறது.

'யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே?' (குறுந். 40)

அன்புடை நெஞ்சம் தாம் கலந்த காதலரின் களவு வாழ்வில் தடையின்றிக் கணவனை எய்தப் பெறாமையால், இப்புது

ஒழுக்கத்தாலும் தலைவியின் மேனி வேறுபடுகிறது. அது கண்ட தாய் இவ்வேறுபாடு இவளுக்கு எதனால் ஆயது என்று அறியக் கட்டுவிச்சியையும் கழங்குக்குறி கூறும் வேலனையும் அழைத்து வினாவ முற்படுகின்றாள். 'அகலுள் ஆங்கண் அறியுநர் வினாய்' (குறிஞ்சி.4) என்பதற்கு, 'அகன்ற இடத்தையுடைய ஊரிடத்துக் கட்டினானும் கழங்கினானும் எண்ணியறிவாரை வினாவி, அவன் தெய்வத்தான் வந்த வருத்தம் என்றலின்' என்று நச்சினார்க்கினியர் விளக்கம் தருவர்.

கட்டுவிச்சியை அகவன் மகள் என்று அழைப்பர். இவள் தெய்வங்களை அழைத்துக் குறி கூறும் இயல்பினள். குறி கூறும் பெண்டிர் முதுமை வாய்ந்தவராயும் இருப்பர் போலும். இவளைச் சங்குமணி போன்ற வெண்ணிறமுடைய கூந்தலையுடையவளே என்று விளித்துக் கூறுகிறாள் ஒரு தலைவி. வெள்ளிய நுனியையுடைய சிறு கோல் ஒன்றை, அதாவது வெள்ளிப்பூண் கட்டிய சிறிய கணுக்களோடு கூடிய மூங்கிற்கோலைக் கையிலே பிடித்திருப்பர்.

'அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே' (குறுந். 23:1-3)

'வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்' (குறுந். 298:6)

'இறுங்கழை இறும்பின் ஆய்ந்துகொண்டு அறுத்த
நுணங்கு கண் சிறுகோல் வணங்கு இறை மகளிரொடு'
(அக. 97:9-10)

'நுண்கோல் அகவுநர்' (அக. 152:4; 208:3)

எனவரும் பாடற்பகுதிகளால் அகவன் மகளிரின் தோற்றத்தை நாம் அறியலாம். இவள் முறத்தில் நெல்லையிட்டு அதனை எண்ணி, அதனால் போந்த சில நிமித்தங்களை அறிந்து கூறுவள். இவள் தெய்வம் ஏறிக் குறி கூறுதலும் உண்டு. தெய்வத்திற்காக அப்பொழுது பிரப்பரிசியை வைப்பள். இம் மரபுகளை,

'குன்ற நாடன் பிரிவின் சென்று,
நல்நுதல் பரந்த பசலை கண்டு, அன்னை
செம்முது பெண்டிரொடு நெல் முன் நிறீஇ,
கட்டின் கேட்கும் ஆயின்' (நற். 288:4-7)

'சூர் உறை வெற்பன் மார்பு உறத் தணிதல்
அறிந்தனள் அல்லள் அன்னை; வார்கோல்
செறிந்து இலங்கு எல்வளை நெகிழ்ந்தமை நோக்கிக்
கையறு நெஞ்சினள் வினவலில், முதுவாய்ப்
பொய்வல் பெண்டிர் பிரப்பு உளர்பு இரீஇ,
முருகன் ஆர்அணங்கு என்றலின். (அக. 98:5-10)

எனவரும் பாடற்பகுதிகளிலே காண்கிறோம். இங்ஙனம் கட்டுவிச்சி இத் தலைவியின் மேனி வேறுபாடு முருகனால் வந்தது என்று குறி கூறுதலின், அத்தாய் முருகனுக்குப் பூசை போடுவதற்குரிய வேலனை அழைக்கின்றாள். இவனும் அகவன் மகளைப் போலவே கோல் ஒன்றைத் தாங்கியிருப்பன். அந்தக் கோலில் சிறிய பைகள் தொங்கவிடப்பட்டிருக்கும். இவன் தன் தலைமயிரைக் கட்டாகச் சுற்றித் தொங்கவிடப்பட்ட ஆடையைத் தலையிலே கட்டியிருப்பன். மேல் நிகழ்வது அறிந்து கூறும் திறமையும் உடையான்.

'அறுவை தோயும் ஒருபெருங் குடுமி,
சிறுபை நாற்றிய பல்தலைக் கொடுங்கோல்,
ஆகுவது அறியும் முதுவாய், வேல!' (அக. 195;12-14)

என இவன் அழைக்கப்படுகிறான். இவன் வெறியாடும் திறத்தையும் கூட்டுவிச்சி குறி கேட்ட தாய் செயலையும் 98ஆம் அகப்பாட்டு விவரிக்கிறது.

'பொய்வல் பெண்டிர் பிரப்பு உளர்பு இரீஇ,
'முருகன் ஆர் அணங்கு. என்றலின், அது செத்து,
ஓவத்தன்ன வினை புனை நல் இல்,
பாவை அன்ன பலர்ஆய் மாண் கவின்
பண்டையின் சிறக்க, என்மகட்கு. எனப் பரைஇ,
கூடுகொள், இன்இயம் கறங்க, களன் இழைத்து
ஆடு அணி அயர்ந்த அகன்பெரும் பந்தர்,
வெண் போழ் கடம்பொடு சூடி, இன்சீர்
ஐது அமை பாணி இரீஇ, கைபெயரா,
செல்வன் பெரும் பெயர் ஏத்தி, வேலன்
வெறிஅயர் வியன் களம் பொறப்ப, வல்லோன்
பொறி அமை பாவையின் தூங்கல் வேண்டின்,
என் ஆம் கொல்லோ? - தோழி!' (அக. 98:9-21)

முருகப்பெருமானுக்கு வேலன் வெறியாட்டு எடுத்தலைக் குறித்து முன்பு முருகனைப் பற்றிப் பேசியவிடத்தும் விரிவாகக் கண்டோம்.

இவ் வேலன் கூறும் குறி கழங்குக் குறியாகும். கழற்சி வித்துப் பலவற்றை முருகன் முன் போட்டு, தன் கையில் பிடித்திருக்கும் சிறுபைகள் கட்டிய கோலால் வாரி எடுக்கின்ற காலத்து, குறிப்புக் கண்டு கூறும் ஒருவகைக் குறி.

'அணங்கு அறி கழங்கின் கோட்டம் காட்டி
வெறி என உணர்ந்த உள்ளமொடு, மறி அறித்து
அன்னை அயரும் முருகு நின்
பொன் நேர் பசலைக்கு உதவாமாறே?' (நற். 47:8-11)

என்பதனால் தெய்வத்தை முன்னிட்டு அறியப்படுவது இக் கழங்குக் குறி என்பதும், கழங்கின் மாறுபாட்டாலே வெறியாட்டு எடுக்க அன்னை துணிதலும் இங்குக் கூறப்பட்டுள்ளன. கழங்குக் குறி பார்க்குமிடத்துத் தலைவியின் நோய் தணித்தற்கு ஒரு படிமம் பண்ணிக் கொடுத்தலும் உண்டு. இந்தப் படிமம் கன்னம் என்று கூறப்படும்.

'பொய்யா மரபின் ஊர்முது வேலன்
கழங்கு மெய்ப்படுத்து, கன்னம் தூக்கி,
முருகு என மொழியும்' (ஐங். 245:1-3)

'பொன் நகர் வரைப்பில் கன்னம் தூக்கி
முருகு என மொழியும்' (ஐங். 247:2-3)

என வருவன கழங்குக் குறி பார்க்கும் வேலன் 'கன்னம்' என்பதும் உடன் வைத்துக் குறிகூறுதல் புலனாம். மணல் பெய்த முற்றத்திலே தெய்வம் தொழுது வேலனை அழைத்துக் குறி கேட்கின்றனர். இங்ஙனம் மகளிர் கழங்குக்குறி கேட்டலைப் பின்வரும் பாடற்பகுதிகளிலும் காணலாகும்.

'பெய்ம் மணல் முற்றம் கடி கொண்டு
மெய்ம்மலி கழங்கின் வேலற் தந்தே' (நற். 268:8-9)

'நல் நுதல் சாய, படர்மலி அருநோய்
காதலின் தந்தமை அறியாது, உணர்த்த,
அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்

கிளவியின் தணியின் நன்றுமன்' (நற். 282:13-6)

'பெய்ம்மணல் முற்றம் கவின் பெற இயற்றி,
மலை வான் கொண்ட சினைஇய வேலன்
கழங்கினால் அறிகுவது என்றால்,
நன்றால் அம்ம, நின்ற இவள் நலனே?' (ஐங். 248)

'பெய்ம் மணல் வரைப்பில் கழங்கு படுத்து, அன்னைக்கு
முருகு என மொழியும் வேலன்' (ஐங். 249:1-2)

'பொய் படுபு அறியாக் கழங்கே! - மெய்யே
மணி வரைக் கட்சி மடமயில் ஆலும் நம்
மலர்ந்த வள்ளிஅம் கானங்கிழவோன்;
ஆணதகை விறல் வேள் அல்லன் - இவள்
பூண் தாங்கு இளமுலை அணங்கியோனே' (ஐங். 250)

தலைவியின் மேனி வேறுபாடு கண்டவழி மட்டும் பார்க்கும் குறிகளே கட்டும் கழங்கும் என்று கூறுவதற்கில்லை. இனிமேல் என்ன நிகழும் என்பதை முன்னதாக அறிந்து கொள்வதற்காக மக்கள் விரும்பும் காலங்களில் பார்க்கப்படும் குறிகளே இவை. மகட்போக்கிய தாய் ஒருத்தி, மகளைக் கொண்டு சென்ற தலைமகன் அவளை முதலில் அவன் என் மனைக்கே அழைத்து வருவானா? அல்லது தன் இல்லத்திற்கே கொண்டு செல்வானா? என்று கேட்கிறாள்.

'ஆகுவது அறியும முதுவாய், வேல!
கூறுக மாதோ, நின் கழங்கின் திட்பம்;
மாறா வருபனி கலுழும் கங்குலில்
ஆனாது துயரும் என்கண் இனிது படீஇயர்
எம் மனை முந்துறத் தருமோ?
தன் மனை உய்க்குமோ யாது அவன் குறிப்பே!
(அக. 195:14-19)

இதனால், இக் குறிகள் மக்கள் விரும்பும் சில பல நிகழ்ச்சிகளின் உண்மை அறிதற்குப் பார்க்கப்படுபவை என்பது பெறப்படும்.

தலைவியின் வேறுபாட்டின் உண்மையைத் தோழி, செவிலி, நற்றாய் முதலியோருக்குச் குறிப்பாக அறிவுறுத்துதலை 'அறத்தொடு நிற்றல்' என்பது கவிமரபு. உண்மை உணர்ந்த பெற்றோர்

களவில் தலைவி நயந்த தலைவனுக்கே அவளை மணம் முடித்து வைப்பர். அதற்கு இடையூறு வரின் தலைவியைத் தலைவன் பிறர் அறியாவண்ணம் தன்னுடன் அழைத்துக்கொண்டு சென்று விடுவான். இதனை 'உடன்போக்கு' என்பர். இவ்வகையினால் எல்லாம் தான் விரும்பிய காதலியை அடைய முடியாத நிலையில், காதலன் 'மடலேறி' தன் காதல் உண்மையை உலகத்திற்கு வெளிப்படுத்தி, உலகம் துணைவரக் காதலியை அடைதலும் உண்டு என்பர்.

மடல் என்பது பனை மடலால் குதிரை வடிவினதாகச் செய்யப்பட்ட உருவமாகும். காமம் மிக்க தலைவன் பனைமடலால் குதிரையைப் போல் ஓர் உருவம் செய்து, அதன் கழுத்தில் மணி, ஆவிரை மாலை முதலியவற்றைப் பூட்டி அதன் மேலாக ஏறி, ஊர் மன்றத்தே வருவன். இவன் தன் கையில் தான் காதலித்த பெண்ணின் உருவையும் தன் வடிவையும் படத்தில் எழுதிக் கையில் பிடித்திருப்பன். மடலேறும் தலைமகன் எருக்கமாலை, ஆவிரம் மாலை, வெள்ளெலும்பு மாலை முதலியன அணிந்து கொண்டிருப்பன். இவனது வருகை கண்ட ஊரினர் இவனுக்கு இன்னாளொடு நட்பு உண்டு என்று அறியவே செய்தி எங்கும் பரவிப் பழிப்புக்கு இடமாகும். அது கேட்ட தலைவியின் சுற்றத்தார் அத் தலைமகனுக்கு அவளை மணம் முடித்து வைப்பர்.

'மா என மடலும் ஊர்ப; பூ எனக்
குவி முகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுவ;
பிறிதும் ஆகுப காமம் காழ்க்கொளினே!' (குறுந். 17)

'அறிகதில் அம்ம இவ் ஊரே! மறுகில்
'நல்லோள் கணவன் இவன் எனப்
பல்லோர் கூற, யாஅம் நாணுகம் சிறிதே' (குறுந். 14:4-6)

'ஒறுப்பின், யான் ஒறுப்பது நுமரை; யான் மற்று இந்நோய்
பொறுக்கலாம் வரைத்து அன்றிப் பெரிதாயின், பொலங்குழாய்,
மறுத்து இவ் ஊர் மன்றத்து மடல் ஏறி,
நிறுக்குவென் போல்வல் யான், நீ படு பழியே?
(கலி. 58:20-23)

'மணிப் பீலி சூட்டிய நூலொடு, மற்றை
அணிப் பூளை, ஆவிரை. எருக்கொடு, பிணித்து யாத்து,

மல்லல் ஊர் மறுகின்கண், இஃது ஒத்தன்
எல்லீரும் கேட்டீமின் என்று' (கலி. 138:8-11)
'வருந்த மா ஊர்ந்து, மறுகின்கண் பாட,
திருந்திழைக்கு ஒத்த கிளவி கேட்டு. ஆங்கே
பொருந்தாதார் போர்வல் வழுதிக்கு அருந்திறை
போல, கொடுத்தார், தமர்' (கலி. 141:22-25)

என்னும் பாடற்பகுதிகள் மடலேற்றின் மூலம் ஒரு தலைவன் தான் விரும்பிய காதலியைப் பெற்று மகிழ்ந்தமை உரைக்கும். மடலேற்றம் பற்றிய பாடல்களும் சங்கப்பாடல்களில் பலவாம் (குறுந். 173:1-5; 182;1-5; கலி. 62:22-23; நற். 146:1-3; 152:1-2; 220:1-5; 342;1-5; 377;1-5).

காமம் முற்றியார் மடலேறுதலேயன்றி, 'பிறிதும் ஆகுப', (குறுந். 17:4) என்றும் குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது. இங்கே பிறிதுமாதலாவது காதல் கைகூடாத நிலையில் தம் உயிரையே மாய்த்துக் கொள்ளுதலாம். இத் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவார் மலை மீதேறி அங்கிருந்து பாய்ந்து உயிர் நீப்பர்; இதனை 'வரை பாய்தல்' என்பர்.

'ஆராக் காமம் அடூஉ நின்று அலைப்ப,
இறு வரை வீழ்நரின் நடுங்கி' (அக. 322:3-4)

என்பதனால் காமத்தால் நலிவுற்றார் வரைபாய்தல் உணரலாம்.

காதல் மணம் பலர் அறி கற்பு மணமாக மலர்கிறது. பெண்ணின் தமர் உரிய தலைமகனை அறிந்து அவனுக்குத் தன் மகளை உவப்புடன் அளிக்க முன் வருகின்றனர்.

'கூன் முள் முண்டகக் கூர்ம் பனி மா மலர்
நூல் அறு முத்தின் காலொடு பாறித்
துறை தொறும் பரக்கும் தூ மணற் சேர்ப்பனை
யானும் காதலென்; யாயும் நனி வெய்யள்;
எந்தையும் கொடீஇயர் வேண்டும்;.
அம்பல் ஊரும் அவனொடு மொழிமே' (குறுந். 51)

இதனால் தலைவி ஒருத்தி விரும்பிய தலைவனுக்குத் தந்தையும் தாயும் தம் மகளைத் திருமணம் செய்து கொடுக்க முன் வருகின்றனர்.

'வேங்கைக் கண்ணியன் இழிதரு நாடற்கு
இன் தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து
எந்தையும் எதிர்ந்தனன், கொடையே'
(அக. 282:10-12)

பெண் கேட்டு வந்தார் தம் தகுதிக்கு ஏற்றவர் அல்லராயின் மணம் செய்து கொடுக்க ஒப்புவதில்லை.

'புரையர் அல்லோர் வரையலள், இவள் எனத்
தந்தையும் கொடாஅன்' (புற. 343:12-13)

'நிரல் அல்லோர்க்குத் தரலோ இல்' (புற. 345:14)

எனத் தந்தை, தன்னைமாரும் மகள் மறுத்துவிடுகின்றனர். மேலும், தன்னை வணங்காதார் எத்தகையோராயினும் அவர்கட்கும் மகட் கொடுத்தல் இல்லை.

'வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும
மலைந்த சென்னியர், அணிந்த வில்லர்,
கொற்ற வேந்தர் வரினும், தன்தக
வணங்கார்க்கு ஈகுவன் அல்லன்' (புற. 338:6-9)

முப்பெரு வேந்தர்க்கும் கூட அவர் வணங்காராயின் அவர்க்கு மகட் கொடுப்பதில்லை. மகள் மறுத்த ஏதுவாய் இருபெரு வீரர்களிடையே போர் நிகழ்தலும் உண்டு.

'வேட்டட வேந்தனும் வெஞ்சினத் தனனே;
கடவன கழிப்பு இவள் தந்தையும் செய்யான்;
ஒளிறு முகத்து ஏந்திய வீங்குதொடி மருப்பின்
களிறும் கடிமரம் சேரா; சேர்ந்த
ஒளிறுவேல் மறவரும் வாய்மூழ்த் தனரே;
இயவரும் அறியாப் பல்இயம் கறங்க,
அன்னோ, பெரும் பேதுற்றன்று, இவ் அருங்கடி மூதூர்'
(புற. 336:1-7)

என மகள் மறுத்தமை ஏதுவாக மூதூரில் நேர்ந்த போர் நிகழ்ச்சி குறிக்கப்படுகிறது. இதனை, 'மகட்பாற் காஞ்சி', 'மகண்மறுத்து மொழிதல்' என வழங்குவர் (புறம். 337-354).

மகளைக் கொடுக்கத் தந்தை முதலியோர் முன் வந்தபோது, வேண்டாம் என மறுத்துவிடும் தலைவரும் உளர். பாரிமகளிரைத் தம்முடன் கொண்டுசென்று கபிலர், விச்சிக்கோன், இருங்கோவேள் ஆகியோர் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டுதலும், அவர் ஒருப்படாது மறுத்தலும் ஆகிய புறநானூற்றுச் செய்திகள் இதற்குச் சான்றாம் (புறம்.200, 201, 202). ஆகவே மகட் பேசி மணம் முடிக்கும் முறை தெரியவரும்.

திருமணம் என்பது வாழ்க்கையில் மாற்ற முடியாத ஒரு நிகழ்ச்சி. இருவரும் ஒருமனப்பட்டாராய்ச் சிறந்து வாழ்தலே மணவாழ்க்கை. உடலால் இருவராயினும் உள்ளத்தால் ஒருவரே.

'கண்டல் வேலிய ஊர் , .'அவன்
பெண்டு. என அறிந்தன்று; பெயர்த்தலோ அரிதே!'
(நற். 74:10-11)

என்பதனால் ஒருவனும் ஒருத்தியும் பிரியா வாழ்க்கை பெற்று உடன் வாழ்தலே சிறப்பாகக் கொள்ளப் பெற்றது.

திருமணம் விழாப் போன்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சி, 'வதுவை விழவு' (கலி. 98:3) என்றே குறிக்கப்படுகிறது. இது மறக்கமுடியாத ஓர் இனிய நிகழ்ச்சி.

'எண்ணு முறை நிறுத்த பண்ணினுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும். இனியனால் எமக்கே' (அக. 352:15-17)

என இனிமைக்கு வதுவைநாள் எடுத்துக்காட்டப்படுகிறது. வளர்பிறை நாளில், உதய காலத்தில், தீய கோள்களின் சேர்க்கை யின்றி நற்கோள்கள் பயின்றிருக்கும் காலமே திருமணத்திற்கு உரிய காலமாகக் கொள்ளப்படுகிறது (அக. 86:5-7). நன்னிமித்தங்கள் வாய்க்கப்பெற்றுச் சந்திரன் உரோகிணி முதலிய சுபநட்சத்திரங் களுடன் கூடிய நாளாகவும் இருக்கவேண்டும். (அக. 136:3-5). வேங்கை மலர்தலும் மணநாளுக்கு உரிய காலமாகிறது. (நற்.206:6-7).

''எந்தை வந்து உரைத்தனனாக,அன்னையும்,
நல்நாள் வேங்கையும் மலர்கமாஇனி என
என் முகம் நோக்கினள் (நற்.206:6-8)

என்பதில் இக்குறிப்பைக் காணலாம்.

மணநாளுக்கு ஏற்ற முகூர்த்தம் குறிப்பதற்குக் கணியை (சோதிடனை) முன்னிட்டுச் சான்றவர்களுடன் கூடி மணமகள் இல்லத்திற்கு வருகின்றனர். இச்செய்தியை,

'நெறி அறி செறி குறி புரிதிரிபு அறியா அறிவனை முந்துறீஇ,
தகை மிகு தொகை வகை அறியும் சான்றவர் இனமாக,
வேய் புரை மென்தோட் பசலையும், அம்பலும்,
மாயப் புணர்ச்சியும், எல்லாம் உடன் நீங்க,
சேய் உயர் வெற்பனும் வந்தனன்;
பூ எழில் உண்கணும் பொலிகமா, இனியே!' (கலி. 39:46-51)

என்று தோழி தலைவன் மணநாள் குறித்தற்கு வந்தமையைத் தலைவிக்குக் கூறுகிறாள். ''நூல் நெறியாலே அறிந்த இருவரும் கூடுதற்கு ஏதுவாகிய முகூர்த்தம் வேறுபட்டுத் தப்புதலை ஒரு காலத்தும் அறியாத கணியை முன்னிட்டு, அழகு மிகுகின்ற தொகுத்துக் கூறுதலையும் வகுத்துக் கூறுதலையும் அறியும் சான்றவர் தனக்குச் சுற்றமாக......உயர்ந்த மலையினை உடையவனும் வந்தான்.........'' என நச்சினார்க்கினியர் மேற்குறித்த பாடற்பகுதிக்கு எழுதியுள்ள உரையும் கூர்ந்து நோக்கத்தகும்.

தலைவன் மணப்பெண்ணிற்குப் பரிசம் கொடுத்தல் மரபு.

'அசையினள் இருந்த ஆய்தொடிக் குறுமகள்,
நலம்சால் விழுப் பொருள் கலம் நிறை கொடுப்பினும்
பெறல் அருங்குரையள்' (அகம். 280:4-6)

முழங்குகடல் முழவின் முசிறி அன்ன.
நலம்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்,
புரையர் அல்லோர் வரையலள், இவள்' (புறம். 343:5-12)

என்பனவற்றால் பொன் முதலிய சிறந்த பொருள்களைப் பரிசமாகக் கொடுக்கின்றமை தெரியவரும்.

'எக்கர் ஞாழல் மலர் இல் மகளிர்
ஒண்தழை அயரும் துறைவன்
தண்தழை விலை. என, நல்கினன் நாடே' (ஐங். 147)

என நாட்டையே மணப்பெண்ணுக்குப்பரிசமாகக் கொடுத்து விடுகிறான் ஒருவன். ''தழை விலை என்றது இடக்கர், முலைவிலை

என்றாற் போல'' என டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் இப் பாட்டின் குறிப்புரையில் கூறுகின்றார்.

திருமண நிகழ்ச்சிக்கு முன்பாகத தலைவயின் காலில் அணிந்திருக்கும் சிலம்பைக் கழற்றுதற்கு ஒரு சடங்கு நிகழ்த்தப் படும். இதனைச் 'சிலம்பு கழி நோன்பு' என்பர். இந்தச் சடங்கு தன் இல்லத்தில் நிகழ வேண்டும் என்று தாயர் விரும்புகின்றனர். உடன்போக்கில் செல்லும் தலைவியர்க்கு இந்நோன்பும் மண வினையும் தலைவனது இல்லத்திலேயே பெரும்பாலும் நிகழ்ந்து விடும்.

'அதர் உழந்து அசையின கொல்லோ - ததர்வாய்ச்
சிலம்பு கழீஇய செல்வம்
பிறருழைக் கழிந்த என் ஆயிழை அடியே' (நற். 279:9-11)

'நும்மனைச் சிலம்பு கழீஇ ய்யரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிக எனச்
சொல்லின் எவனோ மற்றே.....
....
பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே?' (ஐங். 399:1-5)

என மகட் போக்கிய தாய்மார் பேசுவதிலிருந்து, அவர்களின் விருப்பம் புலனாகும். இங்ஙனமே மகளை உடன்போக்கில் பிரிந்த தாய்மார் பேச்சுக்களில் இச் சிலம்புகழி நோன்பும் குறிக்கப் படுதலினால், இது சிறப்பாகப் போற்றப்படும் ஒரு சடங்கு போலும் (அக. *49:13-18; 117:8-9; 315:7-8; 14-15; 321:15-17; 369:21-26; 383:11-14; 385:15-18*).

உடன்போக்கில் சென்ற தலைவி தன் காலடிச் சிலம்போசையால் தாய் தன் போக்கைத் தெரிந்துகொள்வாளோ என்று அஞ்சி, தானே தனது சிலம்பைக் கழற்றி வைத்துவிட்டுக் காதலித்த காளையுடன் நடந்து சென்று விடுகிறாள்.

'அரி பெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ,
யாய் அறிவுறுதல் அஞ்சி,
வேய் உயிர் பிறங்கல் மலை இறந்தோளே' (அகம். 321:15-17)

என்று வரும் செவிலித்தாயின் கூற்றிலிருந்து மேற்குறித்த செய்தியைக் கொள்ளலாம். எங்ஙனமாயினும் கன்னிப்பருவத்து அணியப்பெற்ற சிலம்பு கழற்றப்பட்டு மணவினைக்கு முன் வேறு சிலம்பு அணிவர் போலும்.

மணமகளின் பெற்றோர் மது அருந்தி, வீட்டை அலங்கரித்து, மணலைக் குவித்து, 'எமது மகளுக்குத் திருமணம் செய்ய நிச்சயித்துள்ளோம்' என்னும் செய்தி கூறி திருமணத்தின் முன்னர்ச் செய்யப்படும் திருமண உறுதி விழா ஒன்றும் நிகழ்த்தப்படுகிறது.

'நனைவிளை நறவின் தேறல் மாந்தி,
புனை வினை நல்இல் தருமணல் குவைஇ,
'பொம்மல் ஓதி எம்மகள் மணன். என,
வதுவை அயர்ந்தனர் நமரே' (அக. 221:1-4)

என மண அறிவிப்புச் செய்தமையை அறிவிக்கின்றாள் தோழி.. அது கேட்ட தலைவி, 'அந்த மணநாள் விரைவில் வந்து எய்தட்டும்; நாம் கை கூப்பி இல்லுறை தெய்வத்திற்குப் பலிக்கடன் செலுத்துவோம்' என்று கூறுகிறாள்.

திருமணத்தை முன்னிட்டு இல்லுறை தெய்வங்களுக்குச் சிறப்புச் செய்தலை இத் தலைவியின் கூற்றால் உணர்கிறோம்.

'இன்தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து
எந்தையும் எதிர்ந்தனன், கொடையே; அலர்வாய்
அம்பல் ஊரும் அவனொடு மொழியும்;
சாய் இறைத் திரண்ட தோள் பாராட்டி,
யாயும், 'அவனே' என்னும்; யாமும்,
'வல்லே வருக, வரைந்த நாள்!' என
நம் இறை மெல்விரல் கூப்பி,
இல்உறை கடவுட்கு ஆக்குதும் பலியே. (அக. 282:11-18)

என்பது தலைவியின் பேச்சு.

திருமணப் பந்தலிலே நல்ல புதுமணல் பரப்பியிருக்கின்றனர். மண மனையில் எங்கும் நல் விளக்குகளை வைத்துள்ளனர். மாலைகளைத் தொங்க விடுகின்றனர் (அக. 86:3-4; 136:6). ஆயர் திருமணத்தின் முன் அவர் தம் இல்லத்தைச் செம்மண்ணால் பூசிப் புதுக்குதலும், எருமைமாடு அளித்தலும் குறிக்கப்பட்டிருக்கிறது.

'தருமணல் தாழப்பெய்து, இல் பூவல் ஊட்டி,
எருமைப் பெடையொடு, எமர் ஈங்கு அயரும்
பெருமணம்' (கலி. 114:12-14)

என்கிறாள் ஆயமகள். இதனால் மண அலங்காரமும், பிற நடைமுறை நிகழ்ச்சிகளும் அவரவர் சமுதாயப் பண்பாட்டிற்கு

ஏற்ற வகையில் சிறிது மாறுபட்டிருந்தது எனலாம். பெ துவாகத் திருமண இல்லம் நறுமணப் பொருள்களால் பொலிந்து விளங்கும்.

'பைந்தாது அணிந்த போது மலி எக்கர்
வதுவை நாற்றம் புதுவது கஞல' (அக. 25:4-5)

இங்கே வதுவை நன்மணம் மணல் மேட்டில் சிறந்திருந்தமை குறிக்கப்பெற்றுள்ளது.

திருமணத்திற்குச் சுற்றத்தார் வந்து கூடுகின்றனர். சுற்றமும் நட்பும் சூழ மணவினை தொடங்கப்படுகிறது. முழவு முதலிய இன்னிசைக் கருவிகள் முழங்குகின்றன.

'சுடுபொன் அன்ன கொன்றை சூடி
கடி புகுவனர்போல் மள்ளரும் உடைத்தே' (ஐங். 432:2-3)

'முழவு முகம் புலரா விழவுடை வியல்நகர்
மணன் இடையாகக் கொள்ளான்' (அக. 397:3-4)

'மணமனைத் ததும்பும் நின் மண முழவந்து எடுப்பும்'
(கலி. 70:10)

இதனால் மணமனை புகுவார் மலர்சூடி, நல்லாடை புனைந்து வருதல் பெறப்படும்.

மணமனை வருவார்க்கு உண்டி அளிக்கப்படுகிறது. உளுந்து கலந்து ஆக்கிய சோற்றை மணநாளில் வழங்குவதாக அகநானூற்றின் 86-ஆம் பாடல் குறிப்பிடுகிறது. ஆனால், 136-ஆம் அகப்பாட்டு இறைச்சியொடு கலந்த வெண்சோற்றைக் கொடுப்பதாகக் கூறுகிறது. ஆக மணவினையில் உளுத்தஞ்சோறும் இறைச்சியுடன் கலந்து புழுக்கின நெய்கலந்த வெண் சோறும் படைக்கின்றமை புலனாம். இங்ஙனம் உண்டியளித்தல், 'பெருஞ்சோற்று அமலை' எனப்படும்.

திருமணத்தில் முதற்கண் கடவுளைப் பேணிப் பின் மணமகளுக்கு வதுவை நீராட்டம் புரிகின்றனர். இந்நீராட்டு, 'வதுவை நன்மணம்' என்றும் குறிக்கப்படுகிறது. நீராட்டுவோர் மகப்பேறு வாய்க்கப்பெற்ற நான்கு மகளிர். இவர்கள், 'கற்பின் வழுவாதபடி கணவனைப் பேணும் சிறந்த மனைவியாகுக' என்று வாழ்த்தி நீராட்டுவர். நீராட்டுதற்குரிய மஞ்சள் நீர் முதலிய வற்றையும் வேறு மங்கலப் பொருள்களையும் சுமங்கலிகளுக்கு

முதுபெண்டிர் தந்து உதவுவர். இந்த மஞ்சன நீரில் பூவும் நெல்லும் கலந்து காணப்படும். அறுகம்புல்லின் கிழங்காகிய பாவையையும் குளிர்ந்த நறுமணப் பூமுகையையும் வெண்ணூலால் சேர்த்துக் கட்டி அவளுக்கு அணிவர். அவள் அழகிய நல்லாடை புனைந்து திகழ்வாள். மணப்பெண்ணின் கூந்தல் முல்லை முதலிய மணமலர்களால் புதுமணம் பெற்று விளங்கும்.

'முகை வாய் திறந்த நகைவாய் முல்லை
கடிமகள் கதுப்பின் நாறி' (அக. 244:4-5)

என்பது மணப்பெண்ணின் கூந்தல் மணத்தைப் பாராட்டிக் கூறும்.

கணவனுடன் மணவறையில் நாணம் மேலிடத் தலைமகள் வீற்றிருப்பாள். ஆனால், இவர்களோ களவிற் புணர்ந்த காதலாகளாம்.

'மணப்பு அருங் கர்மம் புணர்ந்தமை அறியார்,
தொன்று இயல் மரபின் மன்றல் அயர,
பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி,
நொதுமல் விருந்தினம் போல, இவள்
புது நாண் ஒடுக்கமும் காண்குவம் யாமே' (அக. 112:15-19)

என்னும் தோழி பேச்சில் தலைவி மணவறையில் வீற்றி ருக்கும் நாணுடைக் கோலம் காட்சி தருகிறது.

பரத்தையிற் பிரிந்த தலைமகன் விடுத்த தூதைக் கண்டு ஒரு தலைவி பேசும் பேச்சிலிருந்து, மணக்காலத்தில் தீவேட்டனரோ என்றும் கருத இடமுண்டு. தலைவனுடைய தூதுவனைக் கண்ட தலைவி, 'அவன் என்னை மணந்த காலத்து இருந்த அன்புடை நிலையில் சிறிதும் மாறாமல் நாம் இருக்கின்றோம். நெய்யைப் பெய்த தீயைப் போல நாம் அவனை ஏற்றுக் கொள்வோம்' என்று பேசுகிறாள்.

'புல்வீழ் இற்றிக் கல்இவர் வெள்வேர்
வரை இழி அருவியின் தோன்றும் நாடன்
தீது இல் நெஞ்சத்துக் கிளவி நம் வயின்
வந்தன்று - வாழி, தோழி!' - நாமும்
நெய் பெய் தீயின் எதிர்கொண்டு,
'தான் மணந்தனையம்' என விடுகம் தூதே' (குறுந். 106)

மணக்காலத்து நிலைமையில் தான் உள்ளமை கூறி, 'நெய் பெய் தீயின் எதிர் கொள்வோம்' என்றலின், இது மணவினையின் பகுதியாக அமைந்த எரிவேட்டலாகும் போலும்.

'தெறல் அருங் கடவுள் முன்னர்த் தேற்றி
மெல் இறை முன்கை பற்றிய சொல் இறந்து
ஆர்வ நெஞ்சம் தலைத்தலைச் சிறப்ப, நின்
மார்பு தருகல்லாய்' (அக. 396:7-10)

என வரும் அகநானூற்றுத் தலைவியின் பேச்சை நோக்கும் போது, தீக்கடவுள் முன்னாகப் பிரியாது என்றும் ஏற்றுக் கொள்வதாக உறுதி உரைத்துத் தலைவியின் கையைப் பற்றுதல் உண்டு என்பது தெரியவருகிறது.

திருமணத்தின் அறிகுறியாக இப்பொழுது மணப் பெண்ணிற்கு மணமகன் கட்டும் தாலி போன்று ஏதேனும் அணியும் வழக்கம் முன்பு இருந்ததா என்று வெளிப்படையாகத் தெரியவில்லை. ஆயைக் குறித்து முடமோசியார் பாடிய 127 ஆம் புறப்பாட்டில் அவன் தன்பால் உள்ள பொருள்களையெல்லாம் இரப்போர்க்கு ஈந்தான் என்று குறிப்பிடுகின்றார். அவன் மனைவியரிடம் எவ்வகையான அணிகலன்களும் இல்லை. ஆனால், அவர்களிடம் 'ஈகை அரிய இழை' ஒன்று மட்டுமே எஞ்சியிருந்தது என்கிறார். இத் தொடருக்குப் பழைய உரைகாரர், 'கொடுத்தற்கு அரிய மங்கலிய சூத்திரத்தை அணிந்த மகளிர்' என்று பொருள் தருவர்.

எல்லாம் இழந்து மயானத்தில் மகனை அடக்கம் செய்ய நின்ற சந்திரமதியை நோக்கி, 'நீ பொருள் இல்லை என்று சொல்வது பொய்; உன் கழுத்திலிருக்கும் தாலியைக் கொடுப்பது தானே' என்று கேட்கிறானாம் அரிச்சந்திரன். கணவனுக்கு அன்றிப் பிறர் கண்ணுக்குப் புலனாகாத தாலியுடையளாதலின், அவனே அரிச்சந்திரன் என்பதைத் தெரிந்து கொள்கிறாள். சந்திரமதியிடம் எல்லா அணியும் இல்லாத காலத்தும் தாலி ஒன்று மட்டும் விளங்கியது என அரிச்சந்திரன் சரிதம் உரைக்கும் நூல்கள் கூறும். 127 ஆம் புறப்பாட்டில் 'ஈகை அரிய இழை' என்பது தாலி போன்ற நிலையில் அமைந்த ஓர் அடையாளப் பொருளாக இருக்குமா என்பது ஆராய்தற்குறியது.

நெடுநல்வாடையில் அரசனைப் பிரிந்த நிலையில் தனியே

படுக்கையில் கிடந்த அரசியைப் பற்றிக் கூறிவரும் செய்திகளில், 'முத்தாரங்களைச் சுமந்து அழகுபெற்றுத் தோன்றிய அவ்வரசியின் மார்பிடத்தே திருமாங்கலியம் மட்டும் அசைந்து கிடப்பதேயன்றி வேறோர் அணியும் காணக்கூடவில்லை என்கிறார் கவிஞர்.

'ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்துப்
பின் அமை நெடு வீழ் தாழ' (நெடுநல். 136-137)

. எனவரும் நெடுநல்வாடை அடிகளுக்கு, ''முன்பு முத்தாற் செய்த கச்சுக் சுமந்த பருத்த முலையினையுடைய மார்பிடத்தே இப்பொழுது குத்துதல் அமைந்த நெடிய தாலி நாண் ஒன்றுமே தூங்க'' எனவரும் நச்சினார்க்கியர் தரும் உரைவிளக்கத்தால், 'தாலி' அணி எக்காலத்தும் நீக்கக் கூடாத ஓர் சின்னம் என்னும் கருத்து இனிது புலப்படும்.

மண நிகழ்ச்சிகளில் மணமகளின் பெற்றோர் 'பெருமனைக்கு உரிமையுடையவளாகுக' என்று வாழ்த்தி, அவளை மணமகனுக்கு அளிப்பர். பின்னர் இரவில் மணமக்கள் ஓர் அறையில் உடன் உறைந்து இன்புறுவர்.

'தமிழகத்தில் திருமணம்' எனத் தாம் எழுதிய கட்டுரையில் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள்,

'பாணிக்கிரகணம், ஓமம், தீவலம் வருதல், சப்தபதி
முதலியன சங்ககாலத்தில் நிகழ்ந்தன அல்ல. புரோகிதர்
கள் மந்திரம் ஓதுதலும் மணவினையில் இல்லை என்றே
கூறலாம். தாலி கட்டும் சடங்கும் காணப்படவில்லை'

என்று எழுதியுள்ளார். இவை குறித்த விவரங்கள் முற்றிலும் இல்லையா? திருமணத்தில் நடைபெறும் பிற நிகழ்ச்சிகளைக் கொண்டு இவற்றுள் ஒரு சிலவும் இருந்திருத்தல் கூடும் என்று ஊகிக்கக் கூடுமா என்பது சிந்தனைக்குரிய பெரும்பொருள்.

புதுமணப்பெண் புக்ககம் சென்றபின், நல்ல நறுஞ்சுவை உணவுகளை ஆக்கிக் கணவனை உண்பிக்கின்றனர். முதல்முதல் மணப்பெண் பாலை உலையாக வைத்துச் சோறு சமைத்தல் முறை. அவள் சமைத்துப் படைக்கும் பாலடிசிலைத் தொட்டு உண்டு தலைவன் அருந்தும் முதற் போனகமும் ஒரு சடங்கே.

'துவரப் புலர்ந்து தூமலர் கஞலி,
தகரம் நாறும் தண்நறுங் கதுப்பின்

புதுமண மகடூஉ அயினிய கடிநகர்ப்
பல் கோட்டு அடுப்பில் பால் உலை இரீஇ,
கூழைக் கூந்தற் குறுந்தொடி மகளிர்
பெருச்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்
பாசவல் இடிக்கும்' (அக. 141:12-18)

'இடுமுள் வேலி முடக்கால் பந்தர்,
புதுக் கலத்து அன்ன செவ் வாய்ச் சிற்றில்,
புனை இருங் கதுப்பின் நின்மனை யோள் அயர,
பாலுடை அடிசில் தொடீஇய, ஒருநாள்,
மாவண் தோன்றல்! வந்தனை சென்மோ' (அக. 394:8-12)

எனவரும் அகப்பாடல் பகுதிகளால் தலைவன் மணப்பெண் படைக்கும் அடிசில் தொட்டு உண்ணும் சடங்கு உண்மை உணரலாகும்.

'சொல் என, ஏனது சுவைப்பினும் நீகைதொட்டது
வானோர் அமுதம் புரையுமால் எமக்கு என
அடிசிலும் பூவும் தொடுதற் கண்ணும்' (தொல். கற்பு. 5)

என இந்நிகழ்ச்சியைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இத்தகைய சடங்கில் தலைமகன் ஒருவன் மொழிந்ததனை உட்கொண்டு,

வேம்பின் பைங்காய் என் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் (குறுந். 19:1-2)

என்று தோழி ஒருத்தி கூறும் வாக்கும் கவனிக்கத் தகும்.

மனைக்கு ஒளிசெய்து விளங்குபவள் இல்லாள். ஆகவே, அவள், 'மனைக்கு விளக்கு ஆகிய வாணுதல்' (புறம். 314:1) என்று போற்றப்படுகின்றாள்.

'ஒண்சுடர்ப் பாண்டில் செஞ்சுடர் போல
மனைக்கு விளக்கு ஆயினள் மன்ற - கனைப்பெயல்
பூப்பல அணிந்த வைப்பின்
புறவு அணி நாடன் புதல்வன் தாயே' (ஐங். 405)

எனக் குலவிளக்காம் புதல்வனைப் பெற்று, அவள் அவனது குடிக்கு விளக்காய் இலங்குகின்றாள். கணவன் மனைவியர் உயிர்க்கு உயிராய் அமைந்துள்ளனர். கணவன்மார்க்குக் கற்புடை

மனைவியர் தோளைச் சேர்தலினும் சிறந்த பேறு வேறு இல்லை. இவ்வுண்மைகளை,

'உயிர்க்கு உயிர் அன்னர் ஆகலின், தம் இன்று
இமைப்பு வரை அமையா நம்வயின்
மறந்து ஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டே'
(குறுந். 218:5-7)

'வடமீன் புரையும் கற்பின், மடமொழி,
அரிவை தோள் அளவு அல்லதை,
நினது எனஇலை நீ பெருமிதத்தையே'
(புற. 122:8-10)

கற்புடை மனையாட்டியால் ஒருவனுடைய இல்லம் செல்வவளம் வாய்க்கப் பெற்றுச் சிறப்படையும். நல்மனைவி ஒருவருக்கு வாய்ப்பின் அவருடைய செல்வம் மிக்கு வளருமாம், ஓர் ஏர் உழவனாயிருந்த ஒருவன் மனைவி வந்தபின் பெருஞ்செல்வனாய் விளங்கலானான்.

'ஓர் ஆன் வல்சிச் சீர்இல் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென,
இனி விழவு ஆயிற்று என்னும், இவ் ஊரே' (குறுந். 295:4-6)

ஒரு தலைவனின் மனைவியால் அவனுக்கு வாழ்வு.வளம் பெருகிய நிலைமையை ஊரார் பேசிப் பாராட்டுகின்றனர். ஓர் உயிர் படைத்த இருதலைப் புள் போல உடலால் இருவரும் உணர்வால் ஒருவருமாய் இல்லறம் நிகழ்த்துகின்றனர். எனினும் சிலகால் புலவியும், துனியும், ஊடலும், ஊடாடுதலும், அவைநீங்கிக் கூடலும் நிகழ்தல் உண்டு.

'என் இவை, ஓர் உயிர்ப்புள்ளின் இருதலையுள் ஒன்று
போர் எதிர்ந்தற்றாப் புலவல்? நீ கூறின், என்
ஆர் உயிர் நிற்கும் ஆறு யாது?'

என ஊடல் தீர்ப்பானாகிய ஒரு தலைவன் பேசுகிறான். தலைவன் அறத்தால் பொருள் ஈட்டிப் பொருளால் இன்பம் துய்க்கிறான். ஆகவே, அவன் பொருளுக்கு ஏதுவான வினைகளை மேற்கொள்கிறான்.

'வினையே ஆ[illegible]ர்க்கு உயிரே; வாள்நுதல்
மனை உறை[illegible]க்கு ஆடவர் உயிர்' (குறுந். 145:1-2)

'செயல்படு மனத்தர் செய் பொருட்கு
அகல்வர், ஆடவர்; அது அதன் பண்பே' (நற். 24:8-9)

என்று பெரியோர் கொள்கின்றனர். பொருளால் நல்வாழ்வு வாழ்தலே அவர் தம் இலட்சியம். அதனைக் கொண்டு சுற்றத்தாரையும், இல்லோரையும் புரக்கின்றனர். 'கொள் எனக் கொடுக்கும்' ஈகை அறம் வாய்ந்து, இளைஞரையும் முதியோரையும் புலவர், பர்ணர், கூத்தர் முதலிய இயல் இசை வல்லாரையும் புரந்தனர்.

அறன் கடைப் படாஅ வாழ்க்கையும், என்றும்
பிறன் கடைச் செலாஅச் செல்வமும், இரண்டும்
பொருளின் ஆகும்' (அக. 155:1-3)

'அறம் தலைப் பிரியாது ஒழுகலும், சிறந்த
கேளிர் கேடு பல ஊன்றலும், நாளும்
வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்' எனச்
செய்வினை, புரிந்த நெஞ்சினர்' (அக. 173:1-4)

இத்தகைய எண்ணமும் செயலுமுடையராய் மாந்தர் வாழ்ந்தனர். அறவோர்க்கு அளித்தும், அந்தணர் ஓம்பியும், துறவோரை வழிபட்டும் போற்றினர். மனைக்கு வரும் விருந்தினரை உபசரித்தனர். விருந்தின் வருகையைத் தெரிவித்துக் கரையும் காக்கைக்குப் பலியிட்டனர். *(நற். 258:5-6; 281:1-4; 343-4-5; 367:1-5; ஐங்;391:1-6)*. தலைவன் வருகையால் மகிழ்ந்து, அவன் வருகையைத் தெறிவித்த காக்கைக்கு எவ்வளவு பலியிடினும் தகும் என்னும் கருத்தில் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடிய பாட்டு இங்கு நோக்கத்தகும்.

'திண் தேர் நள்ளி கானத்து அண்டர்
பல் ஆ பயந்த நெய்யின், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிது - என் தோழி
பெருந் தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே'

(குறுந். 210)

தெய்வத்திற்காகப் படைக்கும் பலிகளையும் இக்காக்கைகள் உண்டு திரியும்.

'இல்உறை நல்விருந்து அயர்தல்
ஒல்லும், பெரும! நீ நல்குதல் பெறினே' (அக. 300:21-22)

என்பதனால் தலைவர் தலையளி செய்து 'உடன் உறை வாழ்க்கையில் விருந்து ஓம்புதல் ஒரு முதன்மைக் கடமையாக மகளிர்க்கு அமைகிறது. தலைவர் வினைவயிற் பிரிந்து சென்று மீண்டு மனைவருங்கால் அவர்க்கு விருந்து செய்து மகிழ்வர்.

'மாலை நனி விருந்து அயர்மார்
தேர் வரும் என்னும் உரை வாராதே' (குறுந். 155:6-7)

'சுடர் துணர் எடுப்பும் புன்கண் மாலை,
அரும் பெறற் காதலர் வந்தென, விருந்து அயர்பு,
மெய்ம்மலி உவகையின் எழுதரு
கண் கலிழ் உகுபனி அரக்குவோரே' (குறுந். 398:5-8)

என வரும் செய்யுட் பகுதிகள் தலைவர் வருகைக்காக விருந்து செய்தலை உணர்த்துகின்றன. இப் பாடல்கள் மாலையில் விருந்து நிகழ்த்துவதாகப் பேசுதலின், விருந்திற்கு ஏற்ற பொழுதாக மாலைக் காலத்தைக் கொண்டனர் போலும்.

சுடர் மாயும் மாலையிலே மங்கையர் மனையில் விளக்கு ஏற்றுவர். விளக்கிற்கு நெல்லும் மலரும் தூவி வணக்கம் செலுத்துவர் (நெடுநல். 39-44; பட்டின. 247-248; முல்லை. 45-49; மதுரை. 554-556; குறுந். 398:3-5; நற். 3:8-9; அக. 7:8; 47:9-10; 87:13; 235:8). பிறை தொழுது போற்றுதலும் உண்டு.

'ஒள் இழை மகளிர் உயர்பிறை தொழுஉம்
புல்லென் மாலை' (அக. 239:9-10)

என்பதனால் மகளிர் மாலைப் பிறையைத் தொழல் பெறப்படும்.

ஆற்றில் புதுப்புனல் பெருகிவரும் காலத்து ஆடவரும் மகளிரும் நதித்துறை சென்று நீராடி மகிழ்வர். இது 'புதுப்புனல் விழா' எனப்படும். வையைப் புதுப்புனல் நீராட்டத்திற்குக் கற்றாரும் மற்றாரும், மன்னவனும் கூட வந்து சேருகின்றனர்.

'கற்றாரும், கல்லாதவரும், கயவரும்,
பெற்றாரும், பெற்றாற் பிழையாத பெண்டிரும்,
பொற்றோரான் தானும், பொலம் புரிசைக் கூடலும்
முற்றின்று- வையைத் துறை' (பரி. தி. 2:24-27).

மகளிரும் மைந்தரும் புதுப்புனல் விழாக் கொண்டாடிய திறத்தை வையையைப் பற்றிய பரிபாடல்களிலே (10,11,12,16) காணலாகும்.

'போர்த்து எறிந்த பறையால் புனல் செறுக்குநரும்
நீர்த்தரு பூசலின் அம்பு அழிக்குநரும்,
ஒலித்தலை விழவின் மலையும் யாணர்' (பதிற். 22:28-30)

என்று இவ் விழாக் குறிப்புப் பதிற்றுப்பத்திலும் காணப்படுகிறது. சோழ நாட்டுக் காவிரியின் கழார்ப் பெருந்துறையில் ஆட்டன் அத்தி தன் மனையாள் ஆதிமந்தியுடன் புதுப்புனலாடியதும், அத்தியை நீர் ஈர்த்துச் செல்ல, புனல் வழியே சென்று, மருதி என்பாள் காட்டத் தன் கணவனைத் தழுவி மீண்ட செய்தியை அகநானூற்றின் 222ஆம் பாடலில் காணலாம். ஐங்குறுநூற்றில், 'புனலாட்டுப் பத்து' என்னும் பெயருடன் (8)ஒரு பத்துப் பாடல்களே உள்ளன (ஐங். 71-80). வேழப் புணைப் பற்றி நீந்துதல், துருத்தியால் ஒருவர்க்கொருவர் நீரை இறைத்து விளையாடுதல் முதலியனவும் செய்வர்.

'நின் மலைப் பிறந்து, நின் கடல் மண்டும்
மலிபுனல் நிகழ்தரும் தீம்நீர் விழவின்,
பொழில் வதி வேனில் பேர் எழில் வாழ்க்கை' (பதிற்.48:13-15)

எனப் பதிற்றுப்பத்து, நீர் விழவில் மக்கள் நீராடி மகிழ்ந்து பொழில்களில் தங்கி இன்பம் துய்த்தலையும் குறிப்பிடுகின்றது.

கடற்கரை வாழ் பரதவர் உலா நாளில் கடலில் மீன் பிடிக்கச் செல்லாது மனையில் தங்கி, தெய்வம் போற்றி, மலர்சூடி, கள் முதலியன உண்டு மகளிருடன் இன்பப் பொழுது போக்குதலைப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது (பட்டின. 79-93).

தீவினை போகக் கடலாடுதலும் செய்வர். காவிரி கடலொடு கலக்கும் சங்கம முகத்திலே கடலாடியும், அதன்பின் புனலாடியும் வரும் மாந்தர் இயல்புகளைப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

'மாமலை அணைந்த கொண்மூப் போலவும்,
தாய்முலை தழுவிய குழவி போலவும்,
தேறு நீர்ப் புணரியொடு யாறு தலை மணக்கும்
மலி ஓதத்து ஒலி கூடல்,
தீது நீங்கக் கடல் ஆடியும்,
மாசு போகப் புனல் படிந்தும்' (பட்டின. 95-100)

என்பது கடலாட்டுக் காட்சி. புனலாட்டு விழாப் போன்றே ஊர்களில் நிகழ்த்தப்பெறும் தெய்வ விழாக்களிலும், அதனொடு தொடர்பான இசை, கூத்து முதலிய நிகழ்ச்சிகளிலும் மக்கள் கலந்துகொண்டு இன்பப் பொழுது போக்குதல் காண்கிறோம்.

விழா முதலியவற்றில் இரவலர்க்கும் பிறர்க்கும் தானம் செய்தலும் உண்டு. தானம் செய்கின்ற பொழுது நீரட்டித் தானம் செய்வர்.

'கார் எதிர் புறவினதுவே - உயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில், யாவர்க்கும்
வரைகோள் அறியாச் சொன்றி,
நிரைகோல் குறுந்தொடி தந்தை ஊரே' (குறுந்.233:4-7)

என்பதனால் உயிர்ந்தோர்க்கு நீராட்டித் தானம் செய்தலையும், ஏனையோர்க்கு வரைவு இன்றிச் சோறு வழங்குதலையும் குறிப்பித்தல் காணலாம்.

மக்கள் தாம் செய்த தீவினையைப் போக்கத் தக்கதான கழுவாய்களையும் (பிராயச்சித்தம்) மேற்கொண்டனர். அறங் களையும், அறம் பிழைத்த செயல்கள் நிகழ்ந்தவழிப் பிராயச் சித்தம் செய்தலையும் புறநானூற்றுப் பாடலொன்று கூறுகிறது.

'ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்
மாண் இழை மகளிர் கருச் சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயும் உள' என,
நிலம்புடை பெயர்வ தாயினும், ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்' என
அறம்பாடின்றே - ஆயிழை கணவ'' (புற. 34:1-7)

இங்கே 'அறம்பாடின்று' என்பதற்கு 'அறநூல் கூறிற்று' என்பது பொருளாம்.

அறத்தையே கடவுளாகக் கூறுதலும் உண்டு. 'அறன் வாழ்த்த நற்கு ஆண்ட' (பதிற். 90:12); 'அறம் புணையாகலும் உண்டு' (கலி. 144:48) என வருவன இதற்குச் சான்று. இங்கெல்லாம் அறம் என்பதற்கு 'அறக்கடவுள்' எனப் பண்டை உரையாசிரியர்கள் பொருள் கூறுதலும் கவனிக்கத்தக்கது.

அறம் நிலைநிறுத்தவும், ஓதுதற்கும், மன்னன் பொருட்டுப் போரிடைச் சென்று பகைதணித்தற்கும், கலத்திலும் காலினும் சென்று பொருளீட்டுதற்குமாக ஆடவர் தம் மனைவியரைப் பிரிந்து செல்லுதல் உண்டு.

'கைதொழு மரபின் கடவுள் சான்ற
செய்வினை மருங்கில் சென்றோர்' (அகம்.125:14-15)

என்று ஓதற்பிரிவு குறிக்கப்படுகிறது. 'கலத்தினும் காலினும் தருவனர் ஈட்ட; நீரினும் நிலத்தினும் மக்கள் சென்று வணிகம் முதலியன புரிந்து பொருள் தேடுதலைப் பட்டினப்பாலை முதலியன விரிவாகக் கூறுகின்றன. போரின் பொருட்டாக மறவர் வேலும் வில்லும் தாங்கித் தம் வீரம் விளங்கச் சென்றனர். ஒரு மறக்குடித்தாய,

'வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
தண்ணடை நல்கல் வேந்தர்க்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கித்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' (புறம். 312:3-6)

என்று தன் மகனுடைய கடமையை அறிவுறுத்துகின்றாள். போரிலே விழுப்புண் பட்டு இறந்தால் மகிழ்வும், புறமுதுகிடின் துயரும் கொள்ளும் வீரத்தாய்மார் சரிதங்களைப் புறநானூற்றில் காணலாகும்.

போர்கள் பகை கொண்டு எதிர்க்கும் இருதிறப் படைகளுக்கு மட்டுமே நிகழுமே யன்றி ஏனைய குடிமக்களுக்கு எவ்விதத் தீங்கும் நேர்வதில்லை. போர் தொடங்கும் முன்பே வருத்தத் தகாத பெண்டிர், பிணியாளர் முதலியோரை அவரவர்களுக்கு ஏற்ற பாதுகாப்பிடங்களைத் தேடிச் சென்றுவிடுமாறு முன் அறிவிப்புச் செய்வர்.

'ஆவும், ஆன்இயற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடண் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅதீரும்
எம் அம்பு கடிவிடுதும், நும் அரண் சேர்மின்' என
அறத்து ஆறு நுவலும் பூட்கை' (புற. 9:1-6)

முதுகுடுமிப் பெருவழுதியால் கடைப்பிடிக்கப்பட்டமையை அறிகிறோம். போருக்கு முரசத்தை முறைப்படி வழிபாடாற்றிப்

போற்றுதல் முன்பு சிறுதெய்வ வழிபாடு உரைக்குமிடத்துக் கண்டோம். போர் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப வெட்சி, கரந்தை, உழிஞை முதலிய பூக்களைப் போர்.வீரர் அணிவர். கோட்டைகளும் அகழிகளும் அந்த நாளில் பாதுகாப்பு அரண்களாக உள்ளன. தேர், யானை, குதிரை, காலாள் என்னும் நால்வகைப்படையும் போரில் ஈடுபட்டன.

படைக்கலம் பயின்ற இளவீரர்களின் பயிற்சியை ஊக்கு வித்தற்கும், அவர் தம் பயிற்சித் திறனை வெளிக்காட்டவும் விழா வைத்தல் உண்டு. இது போர்ப்பயிற்சியின் அரங்கேற்ற விழா ஆகும்.

'வார் கழற் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன' (அக. 187:7-8)

'தோல் மிசைத்து எழுதரும் விரிந்து இலங்கு எஃகின்
தார்புரிந் தன்ன வாளுடை விழவின்
போர் படு மள்ளர்......' (பதிற். 66:12-14)

என்பன பூந்தொடைவிழா, வாள்விழாக்கள் பற்றித் தெரிவிப் பனவாம்.

போர்ப்பூக்களை வழங்குவதற்குத் தண்ணுமையை முழக்குதலும், அந்த ஒலி கேட்டு மறவர் பூவைப் பெற்றுக் கொள்ளுதலும் செய்வர்.

'இருபெரு வேந்தர் மாறுகொள் வியன்களத்து,
ஒரு படை கொண்டு, வருபடை பெயர்க்கும்
செல்வம் உடையோர்க்கு நின்றன்று விறல்' என,
பூக் கோள் ஏய தண்ணுமை விலக்கிச்
செல்வேம் ஆதல் அறியாள்' (அக.174:1-5)

என்பது பூக்கோள் தண்ணுமைச் செய்தியை விளக்குகின்றது.

போர்மேல் சென்ற வழி அரசன் பாசறை அமைத்துத் தங்கியிருத்தலையும், பாசறையின் அமைப்பு முதலியனவும் நெடுநல்வாடையில் நன்கு விவரிக்கப்பட்டிருத்தல் காணலாம். போரில் பகை மன்னர் எயிலை அழித்துத் தரைமட்டமாக்கிக் குருதிச் செந்நீர் படிந்த அக்களத்தைக் கழுதை ஏரால் உழுது, வெள்ளை வரகும். கொள்ளும் விதைத்து வேந்தர் சினம் தீர்வர். அதியமான்

நெடுமான் அஞ்சியின் மகன் பொகுட்டெழினியின் போர்ச் செயலைப் புகழ்ந்த ஔவையார் அவனை ஒரு வில்லேர் உழவனாக உருவகித்துப் பாடியுள்ளார்.

'உருகெழு மன்னர் ஆர் எயில் கடந்து,
நிணம் படு குருதிப் பெரும்பாட்டு ஈரத்து
அணங்குடை மரபின் இருங்களந் தோறும்,
வெள்வாய்க் கழுதைப் புல்இனம் பூட்டி,
வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்
வைகல் உழவ! வாழிய பெரிது! (புற. 392:6-11)

என்பது ஔவை வாக்கு.

போரில் விழுப்புண் பட்டு வந்த வீரர்களின் புண்களைப் பேய்கள் தீண்டித் துன்புறுத்தா வண்ணம் காப்பதற்கு அவர் தம் மனைவியர் சில சடங்குகள் செய்வர். இரவமரம், வேப்பமரம் ஆகியவற்றின் தழைகளை ஒடித்து மனையில் செருகி வைப்பர். ஐயவியைப் புகைப்பர்; மையிடுவர்; பல இயம் ஒலிக்க, மணி அடித்துக் காஞ்சி பண்ணைப் பாடுவர். இவ்வகையாகப் பேய் தீண்டாது மகளிர் பாதுகாப்பு அளித்தமையை இரண்டு புறப்பாட்டுக்கள் விளக்குகின்றன. அவை வருமாறு:

'தீம்கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ,
வாங்கு மருப்பு யாழொடு பல்இயம் கறங்க,
கைபயப் பெயர்த்து மை இழுது இழுகி,
ஐயவி சிதறி, ஆம்பல் ஊதி,
இசை மணி எறிந்து, காஞ்சி பாடி,
நெடுநகர் வரைப்பில் கடி நறை புகைஇ,
காக்கம் வம்மோ - காதல் அம் தோழி! -
வேந்துறு விழுமம் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே' (புறம். 281)
'வேம்பு சினை ஒடிப்பவும், காஞ்சி பாடவும்,
நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்,
எல்லா மனையும் கல்லென்றவ்வே' (புறம். 296:1-3)

வெற்றி பெற்ற வேந்தர் வாகை சூடி மகிழ்கின்றனர். வாகைப்பூ சுடர் போன்று நல் ஒளி படைத்தது. 'சுடர் வீ வாகை' (பதிற். 40:15; 88:10). வெற்றிக்குரிய இப் பூவில் வெற்றி

மடந்தையாம் கொற்றவை வாழ்வதாகக் கருதுவர். 'கடவுள் வாகைத் துய்வீ' (பதிற். 66:15) என்று பதிற்றுப்பத்து போற்றுகிறது. மன்னன் வெற்றியைப் புகழ்ந்து பாணர்கள் பாட்டிசைக்கின்றனர். பாணர்க்கும் வெற்றிக்குதவிய வீரர்க்கும் சோறு படைக்கும் சிறு சோற்று விழாவை நிகழ்த்துகிறான். போர்க்குப் புறப்படுமுன் வீரர் முதலியோர்க்கு அளிக்கும் விருந்து உணவைப் 'பெருஞ்சோற்று விழா' என்பர். 'சேட்சென்னி நலங்கிள்ளி பாசறையிடத்தே நிகழ்த்திய சிறு சோற்று விழவை 33ஆம் புறப்பாட்டு வியந்து போற்றுகிறது.

'பாடுநர் வஞ்சி பாட, படையோர்
தாது எரு மறுகின் பாசறை பொலிய,
புலராப் பச்சிலை இடை இடுபு தொடுத்த
மலரா மாலைப் பந்து கண்டன்ன
ஊண் சோற்று அமலை பாண் கடும்பு அருத்தும்
செம்மற்று அம்ம, நின் வெம்முனை இருக்கை -
வல்லோன் தைஇய வரி வனப்பு உற்ற
அல்லிப் பாவை ஆடு வனப்பு ஏய்ப்ப,
காம இருவர் அல்லது, யாமத்துத்
தனி மகன் வழங்காப் பனி மலர்க் காவின்,
ஒதுக்குஇன் திணி மணற் புதுப்பூம் பள்ளி
வாயில் மாடந்தொறும் மை விடை வீழ்ப்ப,
நீ ஆங்குக் கொண்ட விழவினும் பலவே' (புறம். 33:10-22)

இப்பாடலில் குறிக்கும் விழவைச் 'சிறுசோற்று விழவு' எனக் குறிக்கின்றார். பழைய உரைகாரர். சிறுசோறு போல மன்னனது கோநகரில் அவனது பெருங்கோயிலில் நிகழ்ந்த பெருஞ்சோற்று விழா நிகழ்ச்சியைப் பின்வரும் புறப்பாட்டுப் பகுதியில் காணலாம்.

'அந்தோ எந்தை அடையாப் பேர் இல்;
வண்டுபடு நறவின் தண்டா மண்டையொடு
வரையாப் பெருஞ்சோற்று முரிவாய் முற்றம்,
வெற்று யாற்று அம்பின் எற்று? அற்று ஆகக்
கண்டெனென் மன்ற; சோர்க, என் கண்ணே' (புறம். 261:1-5)

ஒரு மன்னன் இறந்துபட அவனது பெருஞ்சோறு வழங்கிய கோயில் முற்றம் பாழ்பட்டுவிட்டதை நினைந்து வருந்திப்

பேசுகிறார் ஆவூர் மூலங்கிழார். ஔவையார் அதியமான் இறந்தபோது பாடிய கையறுநிலைப் பாடலில் சிறுசோறு, பெருஞ்சோறு இரண்டையும் குறித்ததோடு அவன் வீரர் முதலியோருக்குக் கள் வழங்கியமையும் பேசுகிறார்.

'சிறிய கட் பெறினே, எமக்கு ஈயும்; மன்னே!
பெரிய கட் பெறினே,
யாம் பாட, தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே!
சிறு சோற்றானும் நனிபல கலத்தன்; மன்னே;
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன், மன்னே!'
(புறம். 235:1-5)

இங்ஙனம் வீரருடன் கூடிச் சோறுண்டு, கள் குடித்து மகிழ்தலை 'உண்டாட்டு' என்பர்.

'நறவும் தொடுமின்; விடையும் வீழ்மின்;
பாசுவல் இட்ட புன்காற் பந்தர்ப்
புனல் தரும் இளமணல் நிறையப் பெய்ம்மின் -
ஒன்னார் முன்னிலை முருக்கி, பின் நின்று,
நிரையொடு வரூஉம் என்னைக்கு
உழையோர் தன்னினும் பெருஞ்சாயலரே' (புறம். 262)

'குயில் வாய் அன்ன கூர்முகை அதிரல்
பயிலாது அல்கிய பல்காழ் மாலை
மைஇரும் பித்தை பொலியச் சூட்டி,
புத்தகல் கொண்ட புலிக்கண் வெப்பர்
ஒன்று இருமுறை இருந்து உண்ட பின்றை.
உவலைக் கண்ணித் துடியன் வந்தென,
பிழிமகிழ் வல்சி வேண்ட, மற்று இது
கொள்ளாய் என்ப, கள்ளின் வாழ்த்தி;
கரந்தை நீடிய அறிந்துமாறு செருவில்
பல்ஆன் இனநிரை தழீஇய வில்லோர்
கொடுஞ்சிறைக் குரூஉப் பருந்து ஆர்ப்ப,
தடிந்து மாறு பெயர்த்தது, இக் கருங்கை வாளே' (புறம். 269)

வீரர்க்குக் கள் வழங்கும்போதும் வழிவழியாக மன்னர்க்கு உதவும் வீரர்குடி வந்த மறவர்க்கு முதலில் வழங்க வேண்டும் என்று மறக்குடியின் நிலையை ஔவையார் எடுத்து மொழிகின்றார்.

'இவற்கு ஈத்து உண்மதி, கள்ளே; சினப்போர்
இளக் களிற்று யானை, இயல்தேர்க் குருசில்;
நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை,
எடுத்து எறி ஞாட்பின் இமையான், தச்சன்
அடுத்து எறி குறட்டின், நின்று மாய்ந்தனே;
மறப்புகழ் நிறைந்த மைந்தினோன் இவனும்,
உறைப்புழி ஓலை போல,
மறைக்குவன் - பெரும! நிற் குறித்து வரு வேலே!' (புறம். 290)

இவற்றால் பண்டை மன்னர் மறக்குடிப் பிறந்த பெரு வீரர்களைத் தக்க முறையில் போற்றிப் புரத்தல் புலனாகும். பெருவீரர்களுக்கு நில மானியங்களும் மன்னர்கள் அளித்தனர்.

''பிணங்கு கதிர்
அலமருங் கழனித் தண்ணடை ஒழிய,
இலம்பாடு ஒக்கல் தலைவற்கு ஓர்
கரம்பைச் சீறூர் நல்கினன் எனவே' (புறம். 285:14-17)

'துறை நனி கெழீஇக் கம்புள் ஈனும்
தண்ணடை பெறுதலும் உரித்தே' (புறம். 287:7-8)

'தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே' (புறம். 312:4)

என வருவனவற்றால் வீரர்க்கு நிலமானியம் அளிக்கும் வழக்கு புலனாகும்.

போர் நிகழ்ச்சியின் போதும், பிற முயற்சிகளில் ஈடுபடும் போதும் நாள் கோள் நோக்கியும், பல்வகை நிமித்தங்களைக் கவனித்தும் செயல் தொடங்கினர். நிமித்தம் என்பது 'புள்' என்றும் கூறப்படும். முதலில் பறவைகளால் நிமித்தம் பார்க்கும் வழக்கம் ஏற்பட்டிருந்ததென்றும், பின் பிற நிமித்தங்களுக்கும் அதுவே பெயராக வழங்கப்பட்டது என்றும் சிலர் கருதுவர்.

'புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளிச் சென்றோர் பழியலர்' (புற. 204:10-11)

'நாள் அன்று போகி, புள் இடைத் தட்ப,
பதன் அன்று புக்கு, திறன் அன்று மொழியினும்,
வறிது பெயர்குநர் அல்லர்' (புற. 124:1-3)

'புலரி விடியல் புள் ஓர்த்துக் கழிமின்' (மலைபடு. 448)

'அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்
உணங்கு திறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார், புள் ஓர்த்துப்
படை அமைத்து எழுந்த பெருஞ்செய் ஆடவர்' (அக. 20:1-4)

என்பனவற்றால் மக்கள் நாள் பார்த்தும், புள் நோக்கியும் செயலாற்றும் இயல்பினர் என்பது போதரும்.

நிமித்தங்களில் நல்நிமித்தமும் தீநிமித்தமும் உண்டு. பின்வருவன நல்நிமித்தங்கள்.

'இடூஉ ஊங்கண் இனிய படூஉம்
நெடுங் சுவர்ப் பல்லியும் பாங்கில் தேற்றும்;
மனை மா நொச்சி மீமிசை மாச்சினை,
வினைமாண் இருங்குயில் பயிற்றலும் பயிற்றும்;
உரம் புரி உள்ளமொடு சுரம்பல நீந்தி,
செய்பொருட்கு அகன்றனர் ஆயினும் பொய்யலர்
வருவர் வாழி - தோழி!' (நற். 246:1-7)

'நுண் ஏர் புருவத்த கண்ணும் ஆடும்;
மயிர் வார் முன்கை வளையும் செறூஉம்;
களிறு கோட் பிழைத்த கதம் சிறந்து எழுபுலி' (ஐங். 218:1-3)

'குருகும் இரு விசும்பு இவரும்; புதலும்
வரி வண்டு ஊத வாய் நெகிழ்ந்தனவே;
சுரி வளைப் பொலிந்த தோளும் செற்றும்.
வருவர்கொல் வாழி - தோழி!' (குறுந். 260:1-4)

'அணிமாலைக் கேள்வற் தரூஉமார், ஆயர்
மணிமாலை ஊதும் குழல்' (கலி. 101:34-35)

*இங்ஙனமே தீய நிமித்தங்களை **41**-ஆம் புறப்பாட்டு தொகுத்துத் தருகின்றது. அது வருமாறு:*

'திசை இரு - நான்கும் உற்கம் உற்கவும்,
பெருமரத்து, இலைஇல் நெடுங்கோடு வற்றல் பற்றவும்,
வெங்கதிர்க் கனலி துற்றவும், பிறவும்,
அஞ்சுவரத் தகுந புள்ளுக்குரல் இயம்பவும்
எயிறு நிலத்து வீழவும், எண்ணெய் ஆடவும்
களிறு மேல் கொள்ளவும், காழகம் நீப்பவும்,

வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்,
கனவின் அரியன காணா, நனவில்
செருச்செய் முன்ப; நின் வருதிறன் நோக்கி,
மையல் கொண்ட ஏமம் இல் இருக்கையர்' (புறம். 41:4-13)

இப்பாட்டில் உற்கம் முதலிய நான்கும் உற்பாதமாய் நனவிற் காணப்பட்டன; எயிறு நிலத்து வீழ்தல் முதலியன கனவிற் காணப்பட்டன.

தீய நிமித்தம் நேர்ந்தவிடத்து, மனம் தளர்தலும் தீங்கு நேராதிருக்க வேண்டிக் கடவுளைத் துதித்துப் போற்றுதலும் மாந்தர் இயல்பு என்பது 260-ஆம் பாட்டில் வரும் பாணனது செயலால் புலப்படும். பாணன் இன்னிசை எழ எழுப்ப, அது வேறுபட்டு இரங்கற் பண்ணாக ஒலிக்கிறது. அது கேட்டு யாது தீங்கு நேருமோ என்று அவன் வருகின்ற வழியில் உள்ள கள்ளி நிழலில் கண்ட கடவுளை ஏத்தி வழி நடந்து வருகின்றானாம்.

'வளரத் தொடினும், வௌவுபு திரிந்து,
விளரி உறுதரும் தீம் தொடை நினையா,
தளரும் நெஞ்சம் தலைஇய, மனையோள்
உளரும் கூந்தல் நோக்கி, களர
கள்ளி நீழற் கடவுள் வாழ்த்தி,
பசி படு மருங்குலை, கசிபு, கைதொழாஅ,
'காணலென்கொல்?' என வினவினை வருஉம்
பாண! கேண்மதி, யாணரது நிலையே' (புறம். 250:1-8)

இப்பாடற் பகுதி அப் பாணன் வரும் தோற்றத்தை நமக்குத் தெற்றெனக் காட்டுகிறது.

பாலை நிலத்தில் வழிச்செல்வார் ஓந்தியை நிமித்தமாகக் கொள்கின்றனர்.

'வேதின வெரிநின் ஓதிமுது போத்து,
ஆறு செல் மாக்கள் புள்கொள, பொருந்தும்
சுரனே சென்றனர், காதலர்' (குறுந். 140:1-3)

என்பதனால் இது போதரும். புள் நிமித்தம் பார்த்தல் போல விரிச்சி கேட்டலும் உண்டு.

'புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்' (குறுந். 218:3) என்பது காண்க. 'விரிச்சி' என்பது நற்சொல்; இக்காலத்தில் 'அசரீரி வாக்கு'

என்று சொல்வது போலக் கேட்கும் குரலால் நலம் தீங்கு அறிதல் ஆகும். மனையிலே உள்ள மணற்பந்தரிலே, மணி ஒலிக்க, நாழியிற் கொண்ட நெல்லுடனே நறிய முல்லைப் பூவும் நீரும் சொரிந்து முதுபெண்டிர்கள் விரிச்சி கேட்டு நிற்பர்.

'பெரும் பெயல் பொழிந்த சிறு புன் மாலை,
அருங்கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப' (முல்லை. 6-11)

'நெடுநா ஒள்மணி கடிமனை இரட்ட,
குரை இலைப் போகிய விரவு மணற் பந்தர்,
பெரும் பாண் காவல் பூண்டென, ஒருசார்,
திருந்து இழை மகளிர் விரிச்சி நிற்ப' (நற். 40:1-4)

'என்னை மார்பில் புண்ணும் வெய்ய;
நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்;
நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா;
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்;
அஞ்சு வரு குராஅல் குரலும் தூற்றும்;
நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா' (புறம். 280:1-7)

இவற்றால் விரிச்சி கேட்கும் முறைமை நன்கு விளங்கும். இவ்வாறு விரிச்சி கேட்டு நிற்கும்பொழுது, காதில் விழும் சொற்களைக் கொண்டு நலம் தீங்கு அறிவர்.

'பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப -
சிறு தாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், ''கைய
கொடுங்கோற் கோவலர் பின் நின்று உய்த்தர,
இன்னே வருகுவர், தாயர்'' என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்; அதனால்,
நல்ல, நல்லோர் வாய்ப்புள்; தெவ்வர்
முனை கவர்ந்து கொண்ட நிறையர் வினைமுடித்து

வருதல், தலைவர், வாய்வது; நீநின்
பருவரல் எவ்வம் களை, மாயோய்!' (முல்லை. 11-21)

'இன்னே வருகுவர் தாயர்' என ஆய்மகள் உரைத்த மொழி தலைவனது வருகையை நினைந்து ஏங்கும் தலைவிக்கு ஆறுதலாக அமைகிறது; தம் தலைவரும் விரைவில் வருவர் என்பதும் இதனால் தெளிகிறாள்.

விரிச்சி கேட்டல் போன்றே பல்லியின் சொல்லும் அவர்க்கு நிமித்தமாகின்றது. தலைவன் பிரிவில் அவன் வருகையை வேண்டிச் சுவரில் அவன் சென்ற நாள்களைக் கணக்கிடச் செய்து வரும் குறிகளை எண்ணி ஏங்குகின்றாள். கண்ணினின்று பெருகிய கண்ணீர் வந்து காதில் விலங்கும் பொற்குழை மீது விழுந்து தெறிக்கின்றது. முன் கையைத் தாடையில் தாங்கி, படுக்கைமீது அமர்ந்து, அதில் தானே வருந்திக் கிடக்கிறாள். அப்பொழுது பல்லி பொலபொலென ஒலி செய்கிறது. இந்நிலையில் அமைந்திருக்கும் ஒரு தலைவியை 351-ஆம் அகப் பாட்டில் காணலாம்.

'செய்குறி ஆழி வைகல் தோறு எண்ணி,
எழுது சுவர் நினைந்த அழுது வார் மழைக் கண்
விலங்கு வீழ் அரிப்பனி பொலங்குழைத் தெறிப்ப,
திருந்து இழை முன்கை அணல் அசைத்து ஊன்றி,
இருந்து அணை மீது, பொருந்துழிக் கிடக்கை,
வருந்து தோள் பூசல் களையும் மருந்து என
உள்ளுதொறு படூஉம் பல்லி
புள்ளுத் தொழுது உறைவி செவிமுதலானே?'
(அக. 351:10-17)

பல்லி சொல் நல்நிமித்தமாகவே கொள்ளப்படுகிறது. பெண்களின் இடக்கண் துடித்தலும் இங்ஙனமே நல்நிமித்தமாகும். இதனை,

'இனை நலம் உடைய கானம் சென்றோர்
புனைநலம் வாட்டுநர் அல்லர்; மனைவயின்
பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன;
நல் எழில் உண்கணும் ஆடுமால் இடனே' (கலி. 11:19-22)

என்று பிரிவிடை வருந்தும் தலைவியைத் தேற்றுகிறாள் ஒரு தோழி. இங்ஙனம் பல்லி சொற் கேட்டு பலன் உணர்தல் வேறுசில பாடல்களிலும் சுட்டப்பட்டுள்ளன (நற். 333:10-12; அக.9:18-23; 151:11-15; 289:14-17; 387:15-20).

மாந்தர் பல்லி சொற் பலன் கேட்டிருத்தல் ஒருபுறம் இருக்க, விலங்குகளும் பல்லி சொல் நிமித்தம் ஓர்வதாகவும் கவிஞர்கள் கட்டுரைக்கின்றனர்

'முதைச் சுவற் கலித்த மூரிச் செந்தினை
ஓங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய, பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லிப் பாடு ஓர்த்து, குறுகும்
புருவைப் பன்றி வருதிறம் நோக்கி' (அக. 88:1-4)

'எய்ம் முள் அன்ன பரூஉ மயிர் எருத்தின்
செய்ம்ம் மேவல் சிறுகட் பன்றி
ஓங்கு மலை வியன்புன்ம் படீஇயர், வீங்குபொறி
நூழை நுழையும் பொழுதில், தாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென,
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்து, தன்
கல் அளைப் பள்ளி வதியும் நாடன்!' (நற். 98:1-7)

இவற்றில் பன்றி பல்லி சொல் ஓர்த்துச் செயல்புரிதலைக் கவிஞர் கூறுவது காணத்தகும்.

விரிச்சி, பல்லி சொல் முதலிய நிமித்தம் போலக் கனாவில் நிகழும் பலன் விதந்து பேசப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், ஆடவரும் பெண்டிரும் நனவில் ஊடாடும் எண்ணங்களைக் கனவின் கண்ணும் கண்டு பேசும் பேச்சுகள் சில சங்கப் பாடல்களில் உள (குறுந். 147:3-5; நற்.173:4-5; ஐங். 234:2-4; அக.39:23-25).

'எரி கவர்ந்து உண்ட என்றூழ் நீள்இடைச்
சிறிதுகண் படுப்பினும், காண்குவென் மன்ற -
நள்ளென் கங்குல், நளிமனை நெடுநகர்,
வேங்கை வென்ற சுணங்கின்
தேம் பாய் கூந்தல் மாஅ யோளே' (ஐங். 324)

இது பிரிவிடைச் சென்ற காலத்துத் தலைவியைக் கனவிற் கண்ட வகைபற்றிப் பேசும் ஒரு தலைமகளின் பேச்சு.

'பொய் வலாளன் மெய்உற மரீஇய
வாய்த் தகைப் பொய்க்கனா மருட்ட, ஏற்று எழுந்து,
அமளி தைவந்தெனனே' (குறுந். 30:2-4)

தலைவனைப் பிரிந்துறையும் ஒரு தலைவியின் கனா நிகழ்ச்சியை இது செப்புகிறது.

வண்டு முதலிய பிராணிகளும் கனாக் காண்பதாக உரைப்பது கவி மரபு.

'துளித் தலைத் தலைஇய சாரல் நளிசுனைக்
கூம்பு முகை அவிழ்த்த குறுஞ்சிறைப் பறவை
வேங்கை விரி இணர் ஊதி, காந்தள்
தேனுடைக் குவிகுலைத் துஞ்சி, யானை
இருங் கவுட் கடாஅம் கனவும்
பெருங்கல் வேலி, நும் உறைவு இன் ஊர்க்கே' (அக. 132:9-4)

இது குறுஞ்சிறைப் பறவையாகிய ஒரு வண்டு கண்ட கனவு. இந்த வண்டு சுனைப் பூவின் முகையை அவிழ்த்து, வேங்கை மலரைச் சுற்றி ரீங்காரம் செய்து காந்தள் மலர்ப் பூக்குலையிலே தூங்குகின்றதாம். அத்தூக்கத்தில் அது யானையின் கன்னமதத்தை எண்ணிக் கனவு கொள்கிறதாம்.

தெய்வங்களும் கனவில் சாட்சி தருதல் உண்டு என்று நம்பினர். மகளின் வேறுபாடு முருகன் அணங்கியதனால் நிகழ்ந்தது என்று கொண்டு வெறியாட்டெடுக்க முனைகிறாள் தாய். அப்பொழுது தோழி தலைவியை நோக்கி, ''இந்த முருகன் நம் அன்னையின் கனவிலே தோன்றி, இந்நோய் என்னால் வந்தது அன்று; மலைகிழவோனாகிய தலைமகனால் நேர்ந்தது என்ற உண்மையைச் சொன்னால் முருகனுக்கு யாது குறை உண்டாகும்'' என்று வினவுகிறாள். இதுகொண்டு கனவில் தெய்வக்காட்சி புலப்படுதல் கூடும் என்னும் நம்பிக்கை மக்களிடை உள்ளமை உணரலாகும்.

'சுனைப் பூக்குற்றும், தொடலை தைஇயும்,
மலைச் செங்காந்தட் கண்ணி தந்தும்,
தன் வழிப் படூஉம் நம் நயந்தருளி,
வெறி என உணர்ந்த அரிய அன்னையை,
கண்ணினும் கனவினும் காட்டி, 'இந்நோய்
என்னினும் வாராது; மணியின் தோன்றும்
அம் மலை கிழவோன் செய்தனன்இது' எனின்,
பரு வண்டு ஆர்க்கும் பைந்தாள் மார்பின்
நெடுவேட்கு ஏதம் உடைத்தோ? -
தொடியோய்! கூறுமதி, வினவுவல் யானே' (நற். 173)

என்பது தோழி கூற்று.

இங்ஙனமாக, மக்கள் உலக வாழ்க்கை அறம் பொருள் இன்பங்களின் வயமாகச் சென்று கொண்டிருக்கின்றது. இந்த வாழ்வில் திடீரென நேரும் பெருந்துன்பம் மரணம். போர் முதலிய காரணங்களால் நேரும் மரணமேயன்றி இயற்கையாக நேரும் மரணமும் குறுக்கிடுகிறது. கூற்றத்தையும் மூப்பையும் மறப்பதற்கு இல்லை. அவை வருவது நிச்சயம்; ஆதலால் அவற்றை மறந்து நடக்கும் அறிவில்லாதாருடன் கூடாது நன்மக்கள் செல்வழி நாட வேண்டும்.

கூற்றமும் மூப்பும் மறந்தாரோ டோரா அங்கு
மாற்றுமைக் கொண்ட வழி' (கலி. 12:18-19)

நாடுதல் வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. வீர மறவர்களோ போரில் இறத்தலையே பெரும்பேறாக விரும்புவர். மன்னர்களில் போர்களத்து இறக்கப் பெற்றாரே துறக்கம் பெறுவர். அன்றி, நோய் முதலிய ஏதுவால் அவர்கள் இறந்துபட்டால் அவர்கள் போரில் புண்பட்டு இறவாத தீங்கைப் போக்குவதற்கு, அங்ஙனம் இறந்த மன்னர் உடம்பைத் தருப்பைப் புல்லிலே கிடத்தி, போரில் இறந்துபட்ட வீரர்செல் உலகத்தை இவரும் அடைவாராக என்று கூறி, அந்தணர் வாளால் இவர் தம் உடம்பைப் பிளந்து பின்பு அடக்கம் செய்வார்களாம்.

'திண்பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்று, அமர் கடத்தல் யாவது? - வந்தோர்
தார் தாங்குதலும் ஆற்றார், வெடிபட்டு,
ஓடல் மரீஇய பீடுஇல் மன்னா
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇ,
காதல் மறந்து, அவர் தீது மருங்குஅறுமார்,
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம் புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி,
மறம் கந்தாக நல்அமர் வீழ்ந்த
நீள் கழல் மறவர் செல்வுழிச் செல்க!' என
வாள் போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ'
(புறம். 93:1-11)

இந்தப் புறப்பாட்டு மேலே குறித்த செய்தியை நமக்குத் தருகிறது. அன்றியும், மன்னர் பரம்பரையில் சாக்குழவியும் ஊன் பிண்டமுமாகப் பிறந்தாலும் வாளால் பிளந்து அடக்குதல் செய்வார்களாம். சேரமான் கணைக்காலிரும்பொறை என்னும் சேரமன்னனே,

'குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்
'ஆள் அன்று' என்று வாளின் தப்பார்' (புறம். 74:1-2)

என்று தன் வாக்கால் புலப்படுத்துகிறான்.

இவ்வுலகத்தை வெறுத்து மேல் உலகு அடைய விரும்பினவர் மேற்கொள்ளும் தற்கொலை முயற்சி வடக்கிருத்தல். வடக்கிருப் போர் இவ்வுலக நுகர்ச்சியை விடுத்து, விரதத்தால் உடலை மெலிவித்து, யோகப்பயிற்சியால் உயிரை விடுப்பர். ஆக இது உண்ணா நோன்பு கொண்டு உயிர் துறத்தலைக் குறிப்பதாகும். வடக்கிருப்பார் தாம் உறைந்த இடத்தை விடுத்துப் புண்ணிய திசையாகிய வட திசையில் சென்று தங்குதலும், அங்கிருந்தும் மீளாமல் நியமத்துடன் வடக்கு நோக்கி இருந்து யோகப் பயிற்சியால் உயிரை விடுத்தலும் மரபு (புறம். 63, 66, 214, 216, 218, 336, அகம். 55). சேரமான் பெருஞ்சேரலாதன் கரிகாற் பெரு வளத்தானொடு பொருது புறப்புண் நாணி வடக்கிருக் கின்றான் (புற. 65,. 66) . இந்தச் சேரலாதன் மார்பின் முன்பு பட்ட வேல் ஊடுருவிக் கிழித்துக்கொண்டு பின்புறமாகச் சென்று விடுகிறது. இதனை அவன் புறப்புண்ணாகக் கருதி நாணத்தால் வடக்கிருந்து உயிர் விடுகிறான்.

'தன்போல் வேந்தன் முன்பு குறித்து எறிந்த
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள் வடக்கிருந்தனன்' (புறம். 65:9-11)

'புறப்புண் நாணி வடக்கிருந்தோனே' (புறம். 66:8).

இவன் வடக்கிருக்க ஏதுவாக அமைந்த போர் வெண்ணிப் பறந்தலையில் நிகழ்ந்ததாம். இவன் வடக்கிருத்தலாகிய இன்னா இன் உரையைச் சான்றோர் கேட்கின்றனர். சேரலாதன் மரிக்கின் றான் என்பதனால் இன்னாதாகவும், புறப்புண் நேர்ந்த பழி தீர வடக்கிருந்து உயிர்விடுகின்றான் என்பதனால் இனிமையாகவும் அவ்வுரை கேட்ட சான்றோர்க்கு.அமைகிறது. அச்சான்றோர்களும் அவனிருக்கும் இடம் வந்து. ஆண்டுத் தம் உயிரை விடுக்கின்றனர். இந் நிகழ்ச்சியை அகநானூறு,

'கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள்வடக்கிருந்தென,
இன்னா இன் உரை கேட்ட சான்றோர்

அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்,
பெரும் பிறிது ஆகியாங்கு' (அக. 55:10-15)

என உவமையாக எடுத்து மொழிகிறது.

கோப்பெருஞ்சோழன் தன்னொடு மாறுபட்ட தன் மக்களுடனேயே போர் தொடுக்கின்றான். சான்றோர் அறிவுரையால் பின் அச்செயல் தவிர்கிறான். ஆயினும் அவனுக்கு உலகம் கசந்து விடுகிறது. வடக்கிருந்து உயிர்துறக்க முற்பட்டுவிடுகிறான்.

-இமயத்துக்
கோடு உயர்ந்தன்ன தம் இசை நட்டு,
தீதுஇல் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே'
(புற. 214:11-13)

என்று பேசி வடக்கிருக்கின்றான். அப்பொழுது தன் உயிர் நண்பர் பிசிராந்தையாரும் செய்தி அறியின், தம்முடன் வந்து வடக்கிருப்பார் என்று கருதிய அவன்,அவர்க்கும் தன் பக்கத்தில் இடன் ஒழிக்கச் சொல்கிறான் (புற. 216). அவன் உரை பழுதாகாமல் செய்தி கேட்ட பிசிராந்தையார் அங்கு வந்துவிடுகிறார். (புற. 217). அது கண்டு வியந்து பொத்தியாரும், கண்ணகனாரும், கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனாரும் வியந்து, அவர்தம் செய்கையைப் பாராட்டிப் பேசுகின்றனர். (புற. 217, 218, 219).

- என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப;
சாலார் சாலார் பாலர் ஆகுபவே' (புற. 218:5-7)

என்று கூறுகிறார் கண்ணகனார். வேள் பாரி துஞ்சிய வழி அவன் மகளிரைப் பார்ப்பனர்ப் படுத்து, பின் கபிலர் வடக்கிருந்தார் என்பர் (புற. 236 அடிக்குறிப்பு). ஆகவே, புறப்புண் நாணிய வேந்தரேயன்றித் தம் உயிரை மாய்க்கக் கருதினர் மேற்கொள்ளும் ஓர் ஒழுக்கமாக இந்த உண்ணா நோன்பாகிய 'வடக்கிருத்தல்' அமைந்துள்ளமை காணலாம்.

இறக்குமவர்களை எரித்தலும் தாழியிற் கவித்தலும் மரபு. கணவன் மாய்ந்தால் மனைவியும் அவனுடன் ஈமத்தீயுள் பாய்ந்து உயிர்துறக்கும் உடன்கட்டை ஏறும் வழக்கமும் உண்டு. பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு, சான்றோர் விலக்கியும் கேளாது அவனுடன் தீயுள் குளித்து உயிர் விடுகின்றனாள். தம்மை விலக்கிய சான்றோர்களை நோக்கி,

'பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கு அரிதாகுக தில்ல; எமக்கு எம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென, அரும்பு அற
வள்இதழ் அவிழ்ந்த தாமரை
நள் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே' (புற. 246:11-15)

என்று உரைத்தனளாம்.

ஒரு பெண் கணவனுடன் சுரத்தில் வழிச் சென்ற காலத்தில் அவன் உயிர் துறக்க வருந்தி, அவனொடு தானும் புதைக்கப்படத் தாழியைப் பெரிதாக வனைந்து தரவேண்டும் என்று குயவனை இரக்கின்றாள்.

'கலம் செய் கோவே! கலம் செய் கோவே!
அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய
சிறுவெண் பல்லி போல, தன்னொடு
சுரம் பல வந்த எமக்கும் அருளி,
வியல் மலர் அகன் பொழில் ஈமத்தாழி
அகலிதாக வனைமோ-
நனந்தலை மூதூர்க் கலம்செய் கோவே!' (புறம். 256)

மேலும், கணவன் மாய்ந்தமை கேட்டதும் தாங்காது அவனுடன் தானே மடிந்துபடும் தலையாகு கற்புடைப் பெண்டிரும் உள்ளனர். சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருது இருவரும் களந்து மாய்கின்றனர். அப்பொழுது அவர்களின் உரிமை மகளிரும் அங்கு வந்து அவர் மார்பகத்தே பொருந்தி இறந்து கிடந்தனராம்.

'களம் கொளற்கு உரியோர் இன்றி, தெறுவர,
உடன் வீழ்ந்தன்றால் அமரே; பெண்டிரும்
பாசடகு மிசையார், பனிநீர் மூழ்கார்,
மார்பகம் பொருந்தி ஆங்கு அமைந்தனரே'
(புறம். 62:12-15)

என்று கவிஞர் இச்செய்தியை அறிவிக்கின்றார்.

இங்கே பாசடகு மிசைதல், பனிநீர் மூழ்கல் எனக் குறிக்கப் பட்டன கணவன் மாய்ந்தபின்னும் உயிர் வாழும் கைம்மை மகளிர்

ஒழுக்கமாகும். கைம்மை நோற்பார் நெய் தீண்டுவதில்லை; நீர்ச் சோற்றைக் கையால் பிழிந்து கொண்டு உண்பர். எள் துவையலும் புளி சேர்த்து அட்ட வெந்த வேளைக்கீரையும் உடன் சேர்த்துக்கொள்வர். வெறுந்தரையில் பாய் இன்றிப் படுப்பர் (புற. *246:4-10*). இவர்கள் வளை அணிந்துகொள்வதில்லை (புற. *238:6, 250:4, 253:5*). ஆம்பல் அரிசியையும் இவர் உணவாகக் கொள்வது உண்டு (புற. *248, 250:5; 280:12-13*) தமது கூந்தல் மயிரைக் கொய்து களைந்து விடுவர் (புற. *250:4*). தலைமயிரை நன்றாக மழித்து விடுவர் (புற. *261:17; 280:11*). ஆபரணங்கள் எதுவும் அவர்கள் அணிந்து கொள்வதில்லை (புற. *261:18; 280:14*).

இறந்த பெருவீரர்க்குக் கல் நாட்டி வழிபடுதல் உண்டு என்பது சிறுதெய்வ வழிபாடுகள் பற்றிப் பேசியபோது குறிப்பிட்டோம். இறந்த கணவர்க்கு அவன் காதலிமார் புல்லின்மேல் பிண்டம் வைத்து வழிபடுவர்.

'நோகோ யானே? தேய்கமா காலை!
பிடி அடி அன்ன சிறுவழி மெழுகி,
தன் அமர் காதலி புல்மேல் வைத்த
இன்சிறு பண்டம் யாங்கு உண்டன்ன் கொல்-
உலகு புகத் திறந்த வாயில்
பலரோடு உண்டல் மரீஇ யோனே?' (புற. 234)

'அடங்கிய கற்பின் ஆய்நுதல் மடந்தை,
உயர்நிலை உலகம் அவன்புக,.....வரி
நீறு ஆடு சுளகின் சீறிடம் நீக்கி,
அழுதல் ஆனாக் கண்ணள்,
மெழுகும், ஆப்பி கண் கலுழ் நீரானே' (புற. 249:10-14)

காதலி பிண்டம் வைத்தலேயன்றி இழிபிறப்பினனாகிய புலையன் புல்லின்மேல் கள்ளும் பிண்டமும் வைத்து இறந்தார்க்கு வழிபாடு செய்தலும் உண்டு (புறம். *360:17-21; 363:10-18*).

'வெள்ளில் நிறுத்த பின்றை, கள்ளொடு
புல்லகத்து இட்ட சில் அவிழ் வல்சி,
புலையன் ஏவ, புல்மேல் அமர்ந்து உண்டு,
அழல்வாய்ப் புக்க பின்னும்,
பலர் வாய்த்து இராஅர், பகுத்து உண்டோரே'

(புறம். 360:17-21)

'கள்ளி வேய்ந்த முள்ளிஅம் புறங்காட்டு,
வெள்ளில் போகிய வியலுள் ஆங்கண்,
உப்பு இலாஅ அவிப் புழுக்கல்
கைக்கொண்டு பிறர்க்கு நோக்காது,
இழி பிறப்பினோன் ஈயப் பெற்று,
நிலம் கலனாக, இலங்கு பலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே,
செய்நீ முன்னிய வினையே,
முநநீர் வரைப்பகம் முழுது உடன் துறந்தே'
(புறம். 363:10-18)

இத்த கைய ஒருநிலை யாவர்க்கும் வருவது உண்மை. ஆனால், அந்தக் காலம் வரும்முன் செய்யவேண்டும் நல் வினைகளை விரைந்தாற்ற வேண்டும் என்று அறிவுறுக்கின்றார் கவிஞர். இதில் அவர் துறவு வாழ்வு பெறுதல் அதற்குச் சிறந்து உபாயம் என்னும் கருத்தையும்.

'செய்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்மகம் முழுது உடன் துறந்தே'

என வற்புறுத்துகின்றார். துறவிலும் முற்றத் துறத்தல். வேண்டும் என்பது இவர் கருத்து.

இறந்த தாய்தந்தையருக்குப் புதல்வன் நீர்க்கடன் முதலிய செய்தல் மரபு. முன்னையோருக்கு நீர்க்கடன் ஆற்றுதற்குப் புதல்வர்ப் பேறு அவசியமானது என்றும் கருதுகின்றனர். போர் தொடங்கும் முன் புதல்வர் பெறாதாரும் அப்பால் விலகிச் சென்றுவிடுமாறு எச்சரிக்கப்படுகின்றனர்.

'தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅதீரும்,
எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சேர்மின்' (புறம். 9:3-5)

என்பதனால் இது பெறப்படும். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த காலத்தில் புலவர் பொத்தியாரும் உடன் வடக்கிருக்கச் சென்றபோது, அவர் புதல்வர்ப் பெறாமையினாலே அவரைக் கோப்பெருஞ்சோழன் விலக்கிப் புதல்வனைப் பெற்றபின் வா எனக் கூறித் தடுத்துவிடுகிறார். பின்பு தமக்கு மகன் பிறந்தபின்னர் இந்தப் பொத்தியாரும் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து

நடுகல்லாக இருக்கும் இடத்திற்குச் செல்கின்றார். இதனால் வடக்கிருந்தார்க்கும் நடுகல் நாட்டுதல் தெரியவரும். பொத்தியார் வந்தபோது கல்லாகி நிற்கும் கோப்பெருஞ்சோழன் இவர்க்கு வடக்கிருக்க இடம் கொடுத்தானாம் (புறம். 222, 223).

'நிலைபெறு நடுகல் ஆகியக் கண்ணும்
இடம் கொடுத்து அளிப்ப, மன்ற - உடம்பொடு
இன் உயிர் விரும்பும் கிழமைத்
தொல் நட்புடையார் தம்முழைச் செலினே' (புறம். 223: 3-6)

என்று அவனது பெருங்கிழமையையும் பாராட்டிப் புலவர் பொத்தியாரும் அங்கு வடக்கிருக்கின்றார். இதனால் தென்புல வாழ்நராம் பிதிரர்க்கும் கடனாற்ற புதல்வர்ப் பேறு அவசியம் என்னும் கருத்துப் புலப்படும். உதியஞ் சேரலாதன் துறக்கம் எய்திய தமது முன்னோர்க்குப் பலியாக அவன் பிண்டம் ஈந்தபோது, பிறர்க்கும் பெருஞ்சோறு அளித்தனன். அவன் இட்ட பலிப் பிண்டத்தை உண்ண அவ்விடத்துக் குறியவும் நெடியவும் பேய்க் கூட்டங்கள் வந்து சூழ்ந்தனவாம். இதனை,

'துறக்கம் எய்திய தொய்யா நல்இசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை, இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇ இருந்தாங்கு' (அக. 233:7-10)

என்பதனால் அறியலாம்.

உலகமும் உலகப் பொருள்களும், யாக்கை, இளமை, செல்வம் முதலியனவும் நிலையாது மாய்தல் கண்டு மாயாப் பெருவாழ்வு பெற வானப்பிரத்த, சந்நியாச ஒழுக்கங்களையும் மக்கள் மேற்கொள்வாராயினர். வானப்பிரத்தம் என்பது மனைவியோடு உடனுறைந்து புரியும் தவம். இத் தவசியரை அடுத்து நல்லுரை கேட்டு, இவர் வழியைப் பின்பற்றி வாழ்வாரும் ஒருசிலர் உளராயினர். இந்த வானப்பிரத்த நிலையை அடைய விழைந்ததாக ஒரு தலைவன்.

'உடன் உறை வாழ்க்கைக்கு உதவி உறையும்
கடவுளர்கண் தங்கினேன்' (கலி. 93:6-7)

என்கிறான்.

'பொய் அற்ற கேள்வியால், புரையோரைப் படர்ந்துநீ
மை அற்ற வடிவத்தான் மறுத்தரல் ஒல்வதோ?
(கலி. 15:14-15)

என்று இந்த வானப்பிரத்த நிலையை உணர்த்துவதாகும்.

உலகின் நிலையாமை கண்டு நிலையான வீட்டின்பத்தை நாடும் ஒழுக்கத்தில் செல்லும் துறவு நிலையாளரும் உளர்.

'ஓர் இல் நெய்தல் கறங்க, ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப
புணர்ந்தோர் பூஅணி அணிய, பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப,
படைத்தோன் மன்ற, அப் பண்பிலாளன்!
இன்னாது அம்ம, இவ் உலகம்;
இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே' (புற. 194)

இப்பாட்டில் துன்ப மயமான உலகத்தில் இன்பம் அடையும் வழியை நாடுதல் உலக இயல்புணர்ந்தார்க்குத் தக்கது என்று அறிவுறுத்தப்படுகிறது. 'முடி சார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பல் ஆவர்' என்ற பட்டினத்தடிகள் திருவாக்கிற்கொப்ப, எவ்வளவு பெருநிலையை இந்த உலகத்தில் பெற்றிருந்தும் என்ன? எல்லோரும் இறந்துபடுபவர்களே. கூற்றுவன் காலம் பார்த்துத் தவறாது வந்துவிடுவான். ஆகவே, உலகியலில் மட்டுமே உழன்று திரியாது பற்று நீங்கித் துறவு அடைதல் வேண்டும் என்று 363-ஆம் புறப்பாட்டு அறிவுறுத்துகிறது. அது வருமாறு;

'இருங்கடல் உடுத்த இப்பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவணது இடை பிறர்க்கு இன்றி,
தாமே ஆண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே; சுடு பிணக்
காடு பதி ஆகப் போகி, தம்தம்
நாடு பிறர்கொளச் சென்று மாய்ந்தனரே;
அதனால், நீயும் கேண்மதி அத்தை; வீயாது
உடம்பொடு நின்ற உயிரும் இல்லை;
மடங்கல் உண்மை மாயமோ அன்றே;
கள்ளி வேய்ந்த முள்ளி அம் புறங்காட்டு,
வெள்ளில் போகிய வியலுள் ஆங்கண்,

உப்பு இலாஅ அவிப் புழுக்கல்
கைக்கொண்டு, பிறர்க்கு நோக்காது,
இழிபிரப்பினோன் ஈயப் பெற்று,
நிலம் கலனாக, இலங்கு பலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்நீ முன்னிய வினையே,
முந்நீர் வரைப்பகம் முழுது உடன் துறந்தே' (புறம். 363)

இல்லற வாழ்வு துறவுக்குத் தடையாக, ஒரு கால் விலங்காக உள்ளது என்று கருதினாரும் ஒருசிலர் ஆவர்.

'அதள் எறிந்தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல,
ஓடி உய்தலும் கூடும் மன்;
ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே' (புறம். 193)

இல்லறம் தடுக்கிறதே; துறவுக்குத் தடையாக இருக்கிறதே என்று எண்ணும் உளம் படைத்தார் என்றாவது ஒருநாள் துறவு வாழ்வு பெறுதல் இயலுவதே. எண்ணும் எண்ணம் ஒருசிலர்க் கேனும் உருப்பெறாமல் போகுமா? இளமையிலே மங்கையர் மனத்தைப் பிணிக்கும் பேரழகு வாய்ந்து விளங்கி, இல்லறத்தை நல்லறமாக்கியவர்கள் தம் வாழ்வின் பிற்பகுதியில், கான் உறைந்து, நோன்புகொண்டு சடைதாங்கி, அருவியாடி, தீவேட்டுத் துறவியராக வாழ்க்கை புரிதலையும் புறநானூற்றுத் தொகை நூலில் காண்கிறோம்.

ஓவத்து அன்ன இடனுடை வரைப்பில்,
பாவை அன்ன குறுந்தொடி மகளிர்
இழைநிலை நெகிழ்த்த மள்ளற் கண்டிகும்-
கழைக்கண் நெடுவரை அருவி ஆடி,
கான யானை தந்த விறகின்
கடுந்தெறல் செந்தீ வேட்டு,
புறம் தாழ் புரிசடை புலர்த்து வோனே' (புற. 251)

கறங்கு வெள் அருவி ஏற்றலின் நிறம் பெயர்ந்து,
தில்லை அன்ன புல்லென் சடையோடு,
அள் இலைத் தாளி கொய்யுமோனே-
இல் வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே' (புறம். 252)

இத்தவத்தின் மேன்மையை தவமுதல்வராகிய வான்மீகியார் வாக்கினாலும் நாம் கேட்டு மகிழலாம்.

'பருதி சூழ்ந்த இப் பயம் கெழு மாநிலம்
ஒருபகல் எழுவர் எய்தியற்றே;
வையமும் தவமும் தூக்கின், தவத்துக்கு
ஐயவி அனைத்தும் ஆற்றாது ஆகலின்
கைவிட்டனரே காதலர்; அதனால்
விட்டாரை விடாஅள். திருவே;
விடாஅதோர் இவள் விடப்பட்டோரே' (புறம். 358)

மக்கள் வாழ்க்கையில் புல்வேறு நிலைகளும் பயிலக் காண்கிறோம். ஒவ்வொரு நிலையிலும் அவர்கள் கடவுளின் பொருட்டாகவும், தத்தம் நிலைக்கேற்ற வகையிலும் பற்பல சடங்குகளை மேற்கொண்டுவந்துள்ளமையும் பார்த்தோம். இனி, மக்களின் வாழ்க்கையில் வழிகாட்டியாய் அமைந்து, உலகிற்கு உண்மைகளைப் போதித்து, யாவர்க்கும் எடுத்துக்காட்டாய் விளங்கிய சான்றோர்களின் இயல்புகளை இதனை அடுத்து நோக்குவோம்.

13. செந்நெறி காட்டும் திருத்தகு சான்றோர்

உலகம் அல்லவை தவிர்த்து நல்லவை போற்றி ஒழுக வழிகாட்டிச் செல்லும் பெரியோரே சான்றோர் ஆவர். தெய்வ வழிபாடாயினும், மக்கள் வாழ்க்கையில் நடைபெறும் திருமணம் முதலிய சடங்குகளாயினும் எல்லாம் சான்றோரை முன்னிட்டே ஆற்றப்பெறுகின்றன. பெரியோர் சென்ற நெறியே பின்புள்ளாருக்கும் மேல்வரிச் சட்டமாக விளங்கும். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன் பகைவரை வென்று அவரை அறநெறியில் நிறுத்த காலத்து, பெரியோர் நடந்த அடிப்பாட்டின் வழிகாட்டித் திருத்துகிறான்.

'செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப,
வியன்கண் முதுபொழில் மண்டிலம் முற்றி,
அரசியல் பிழையாது, அறநெறி காட்டி
பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது'

என்பது மதுரைக்காஞ்சி (189-192).

சான்றோர் ஆன்றோர் என்பன நிறைவு என்னும் பொருள் தரும் சால், ஆல் என்னும் பண்பின் அடியாக வந்த பெயராகும். இப்பெயர்களுக்கு எல்லாவகை நற்குண நற்செயல்களாலும் நிரம்பியவர் ஏன்பது பொருள். இவர் நூலறி புலவர்; உலக நடப்புகளை நன்குணர்ந்தவர்; குற்றமற்ற சிறப்புடைய பெருங் குணங் களுக்கு நிலைக்களமானவர். எனவே, இவர், 'புகர் அறு சிறப்பின் செம்மைச் சான்றோர்' (மதுரை. 764-765) எனப புகழப்படுவர். சால்பும், மேம்பாடும், ஒழுக்கமும் ஒருங்கே கொண்டவராவர் (குறிஞ்சி. 15-18). இவர்கள் ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினராய் விருப்பு வெறுப்பு இன்றி யாவர்க்கும் ஒத்த பெருநெறியில் செல்லும் பெற்றியராவர். புலவர் பிசிராந்தையார் தமக்கு யாண்டு பல ஆகியும் நரை இல்லாமைக்குக் கூறிய காரணங்களில், எல்லாவற்றிற்கும் மேலாகத் தாம் வாழும் ஊரில் சான்றோர் பலராக வாழ்வதுதான் என்கிறார்.

- வேந்தனும்
அல்லவை செய்யான், காக்கும்; அதன்தலை

ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர், யான் வாழும் ஊரே' (புறம். 191:4-7)

என்பது அவர் வாக்கு. இதனால் சான்றோர்களால் அமைதி யான வாழ்வு உளதாதல் பெறப்படும். இவர்கள் ஒழுக்கத்தில் சிறந்து நின்றோர்ராவர். இவர், 'சால்பு எதிர்கொண்ட செம்மையோர்' (நற். 345:) ஆவர்.

'அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை (குறுந். 184:1)

சான்றோர்
புகழும் முன்னர் நாணுப;
பழியாங்கு ஒல்பவோ காணுங்காலே' (குறுந். 252:6-8)

'பேணுப பேணார் பெரியோர் என்பது
நாணுத் தக்கன்று. அது காணுங்காலை' (நற். 72:1-2)

சான்றோர்
கடன்நிலை குன்றலும் இலர்' என்று உடன் அயர்ந்து
உலகம் கூறுவது உண்டு' (நற். 327:4-6)

'கழியக் காதலர் ஆயினும், சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்' (அக. 112:11-12)

என வருவன சான்றோருடைய ஒழுக்கத்தின் விழுப்பத்தைக் காட்டும். பிறருறும் துன்பத்தைத் தமக்குற்ற துன்பமாகக் கருதி, அதனைத் துடைத்தற்கு ஆவன செய்வர். பேரும், புகழும், பொன்னும், பொருளும், ஊர்தி முதலிய போகப் பொருள்களும் ஒருவர் பெற்றிருப்பினும் அவை செல்வம எனப்படா. அவை எல்லாம் செய்வினைப் பயனால் உண்டானவையாகும். சான்றோர் மதிக்கும் செல்வமாவது பிறர் துன்பம் கண்டு அஞ்சி அத்துன்பத்தைப் போக்குவதற்கு ஆவன செய்வதுவேயாகும்.

'நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்று; தன் செய்வினைப் பயனே;
சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே' (நற். 210:5-9)

என்பது சான்றோர் போற்றும் செல்வத்தைக் குறிப்பிடுகிறது.

கோப்பெருஞ்சோழன் அரச வாழ்வைத் துறந்து வடக்கிருந்து உயிர்விடத் துணிந்து, வடக்கிருக்கின்றான். அப்பொழுது அவன் பாண்டிநாட்டில் வாழும் தம் நண்பராகிய புலவர் பிசிராந்தையார் நிச்சயம் வருவார்; அவருக்கும் இடன் ஒழிக்க என்கிறான். இத்தனைக்கும் அவ்விருவரும் ஒருவரை ஒருவர் பார்த்ததும் இல்லை. சோழன் பிசிராந்தையாரை, 'இகழ்விலன், இனியன், யாத்த நண்பினன்' என்று பாராட்டி, யான் துன்பமுறும் இக்காலத்து அவர் அங்கே தங்கி இரார்; விரைவில் வருவார்' என்று புகல்கிறான். மன்னனின் உரை பழுதாகவில்லை; பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கும் இடத்திற்கு வருகிறார். இந்த இருபெருஞ் சான்றோர்களையும் கண்டு வியந்து பொத்தியார் பின்வருமாறு போற்றுகின்றார்.

'நினைக்கும் காலை மருட்கை உடைத்தே,
ஏனைப் பெருஞ் சிறப்பினோடு ஈங்கு இது துணிதல்;
அதனினும் மருட்கை உடைத்தே, பிறன் நாட்டுத்
தோற்றம் சான்ற சான்றோன் போற்றி,
இசை மரபு ஆக, நட்புக் கந்து ஆக,
இனையது ஓர்காலை ஈங்கு வருதல்;
'வருவன்' என்ற கோனது பெருமையும்
அது பழுது இன்றி வந்தவன் அறிவும்,
வியத்தொறும் வியத்தொறும் வியப்பு இறந்தன்றே;
அதனால், தன் கோல் இயங்காத் தேயத்து உறையும்
சான்றோன் நெஞ்சுறப் பெற்றதொன்று இசை
அன்னோனை இழந்த இவ் உலகம்
என் ஆவது கொல்? அளியது தானே! (புறம். 217)

'இந்தச் சான்றோனை இழந்த இந்நாடு எந்நிலை யடையுமோ? இதுதான் இரங்கத் தக்கதாயுள்ளது' என்கிறார் புல்வர். எப்பொழுதும் சான்றோர் சான்றோரையே விரும்புகின்றனர்; சாலாதாரும் தம்மினத்தையே நேசிக்கின்றனர். கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தை யாரும் ஆகிய இரு சான்றோரும் ஒன்றுகூடியது, ஒன்றற்கு ஒன்று நெடுந்தூரம் இடையிட்ட இடங்களில் பிறக்கும் பொன், பவளம், முத்து என்பன அணிகலம் அமைக்கும் காலத்து ஒன்று சேர்வது போல் உள்ளது என்கிறார் புலவர்.

'பொன்னும், துகிரும், முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்,
இடைப்படச் சேய ஆயினும், தொடை புணர்ந்து,
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை,
ஒருவழித் தோன்றியாங்கு-என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப;
சாலார் சாலர்ர் பாலர் ஆகுபவே' (புறம். 218)

இவ்வுலகம் நிலைபெறுவது இத்தகைய சான்றோர்களால் தான். இவர் தமக்கென வாழாது உலகிற்கு உழைப்பதற்கே வாழ்கின்றனர். புகழ் அன்றிப் பழிவருவன செய்யார். தமக்குக் கிடைத்ததைப் பலர்க்கும் பகுத்துக்கொடுத்து உண்பர். இத்தகு சான்றோரின் பெருங்குணங்களைக் கடலுள் மாய்ந்து இளம்பெரு வழுதி பாடிய புறப்பாட்டில் காணலாகும். அது வருமாறு:

'உண்டால் அம்ம இவ்உலகம் - இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி,
புகழ் எனின், உயிரும் கொடுக்குவர்; பழிஎனின்,
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகி,
தமக்கு என முயலா நோன்தாள்,
பிறர்க்கு என முயலுநர் உண்மை யானே' (புறம். 182)

ஆதலால், எந்த இடத்தில் சான்றோர் வாழ்கின்றனரோ அந்த இடம்தான் நல்ல இடம; நிலத்தின் வளமையினால் ஒரு நிலத் திற்குச் சிறப்பு வருதல் இல்லை; சான்றோர்கள் வாழ்தலினால்தான் ஒரு நாடு சிறப்புடன் போற்றப்படுவதாகிறது.

'நாடா கொன்றோ, காடா கொன்றோ;
அவலா கொன்றோ, மிசையா கொன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை; வாழிய நிலனே!' (புறம். 187)

அறம் கூறு அவையங்களில் அமர்ந்து, நீதிவழங்கி மக்களை நெறிப்படுத்தியோரும் இத்தகு பெரியோர்களே. 'அவை' என்பது சான்றோர் அவையைத்தான் குறிக்கும். அவை இருந்த பெரும் பொதியில்' (மதுரை. 161) என்பது இதனை விளக்கும். அவையில்

முறையிட வருவாரின் அச்சமும், அவலமும், அவர் கொண்டுள்ள பற்றுள்ளமும் நீங்கச் செய்வர். தமது நெஞ்சம் ஒரு கூற்றில் செற்றமும் மற்றொருகூற்றில் உவகையும் செய்யாமல் நன்கு பாதுகாத்துக் கொள்வர். துலாக்கோல் போன்று நடுநிலை வகிப்பர்.

'அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி,
செற்றமும் உவகையும் செய்யாது காத்து,
மென் கோல் அன்ன செம்மைத்து ஆகி
சிறந்த கொள்கை அறம்கூறு அவையமும்' (மதுரை. 489-492)

என்று மதுரைக்காஞ்சி அறங்கூறும் அவையத்தின் இயல் பினைப் புலப்படுத்துகிறது. நல்நெறியிலார் உரைக்குந் தீமொழி எல்லாம் நன்மக்கள் இருக்கின்ற அவையுள் சென்றால் நீங்கும்.

'அறன் அறிந்து ஒழுகும் அங்கணாளனைத்
திறன் இலார் எடுத்த தீமொழி எல்லாம்
நல் அவையுள் படக் கெட்டாங்கு' (கலி. 144:70-72)

'சான்றோர் இருந்த அவையத்து உற்றோன்,
'ஆசுஆகு' என்னும் பூசல்போல,
வல்லே களைமதி அத்தை' (புறம். 266:8-10)

என்பவற்றால் மேற்கூறியது புலனாகும். தவத்தினின் நீங்கித் துறக்கம் செல்லுதல் கூடாது வழுவியோன் துயர் தீர்த்து மீண்டும் அவனைத் துறக்கத்தில் சேர்த்தனராம் சான்றோர். அது போன்று எனது துயரையும் தீர்த்தல் வேண்டும் என்று ஒரு தலைவன் சான்றோர்பால் முறையிடுவதாகக் கலித்தொகையுள் காண்கிறது.

'அறிந்தனர் ஆயின், சான்றவிர்! தான்தவம்
ஒரீஇ, துறக்கத்தின் வழீஇ, ஆன்றோர்
உள் இடப்பட்ட அரசனைப் பெயர்த்து, அவர்
உயர்நிலை உலகம் உறீஇயாங்கு,என்
துயர்நிலை தீர்த்தல் நும் தலைக் கடனே'
(கலித். 139:33-37)

என்பது சான்றோர்பால் கூறிய முறையீடு. ஆகவே, சான்றோர் அறங்கூறும் அவையத்தும், பிற இடங்களிலும் மக்களின் துயர்தீரப் பணியாற்றி உலகிற்கு நன்மை செய்தல் பெறப்படும்.

சான்றோரை எதிர்ப்பட்டார் அவர்ரை எதிர்கொண்டு போற்றி

உபசரிப்பர்.

'நாம் அறி செம்மைச் சான்றோர்க் கண்ட
கடன் அறி மாக்கள் போல, இடன் விட்டு,
இதழ்தளை அவிழ்ந்த ஏகல் வெற்பன்
நன்னர் நெஞ்சத்தன் (குறுந். 265:3-6)

என்பது சான்றோரை எதிர்ப்பட்டார் அவர்க்குத் தக்க கடமை யாற்றுதலைக் குறிப்பிக்கும்.

'பெரியோர்ப் பேணி, சிறியோரை அளித்தி''
(பதிற். 79:3)

'தொலையாக் கொள்கைச் சுற்றம் சுற்ற,
வேள்வியுள் கடவுள் அருத்தினை, கேள்வி
உயர்நிலை உலகத்து ஐயர் இன்புறுத்தினை;
வணங்கிய சாயல்; வணங்கா ஆண்மை,
இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணி,
தொல்கடன் நிறுத்த வெல்போர் அண்ணல்' (பதிற். 70:17-22)

என அரசனைப் போற்றுதலின்றும் அவன் முதியோர்களையும் பெரியோர்களையும் பேணிப் பாதுகாத்தமை பெறப்படும்.

சான்றோர்களில் புலவர் பெருமக்களும் சிறந்த இடம் பெறுகின்றனர். புலவர்கள் இலவ மலர் போன்ற அழகிய செந் நாவையும் புலமையால்வரும் புகழ்ந்து போற்றும் பெருங்கீர்த்தி யையும் கொண்ட உயர்ந்தோராவர்.

'இல மலர் அன்ன அம் செந்நாவின்
புலம் மீக்கூறும் புரையோர்' (அகம். 142:1-2)

என்று புகழப்படுகின்றனர். இவர்களால் பாடப்பெறும் புகழ்ச்சி யையே மன்னர்களும் மற்றையோரும் வேண்டி நிற்கின்றனர். புலவர்கள் பெருமையற்ற வாழ்வுடையாரைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை.

'பெரிய ஓதினும் சிறிய உணராப்
பீடு இன்று பெருகிய திருவின்,
பாடு இல் மன்னரைப் பாடன்மார் எமரே!' (புறம்; 375:19-21)

'வளி நடந்தன்ன வாச்செலல் இவுளியொடு
கொடி நுடங்கு மிசைய் தேரினர் எனாஅ
கடல் கண்டன்ன ஒண்படைத் தானையொடு

மலை மாறு மலைக்கும் களிற்றினர் எனாஅ,
உரும் உரற்றன்ன உட்குவரு முரசமொடு
செரு மேம்படூஉம் வென்றியர் எனாஅ,
மண்கெழு தானை, ஒண்பூண், வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே;
எம்மால் வியக்கப் படூஉ மோரே,
இடுமுள் படப்பை மறி மேய்ந்து ஒழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங்கண் குற்றடகு,
புன்புல வரகின் சொன்றியொடு, பெறூஉம்,
சீறூர் மன்னர் ஆயினும், எம் வயின்
பாடு அறிந்து ஒழுகும் பண்பினாரே;
மிகப் பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்;
நல் அறிவு உடையோர் நல்குரவு
உள்ளுதும், பெரும! யாம் உவந்து, நனிபெரிதே! (புறம். 197)

இவற்றால் எத்தகைய பெரிய குறிக்கோளை உடையராயிருந்தனர் புலவர் என்பது போதரும். 'பாடு அறிந்து ஒழுகும் பண்பினாரையே அவர்கள் விரும்பினர். தீமை புரிந்தாரையும் அவர் மரபினையும் அவர்கள் வெறுத்தனர். ஏதேனும் ஒரு புலவர்க்குச் செய்த தீங்கைக் கூடப் புலமைக்குச் செய்த பெருங்குற்றமாகக் கருதி, அவர்களை வேறு புலவர் யாருமே வாழ்த்திப் பாடுதல் இல்லை. 'இளங்கண்டீரக்கோவும் இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்த வழிச் சென்ற பெருந்தலைச் சாத்தனார் இளங்கண்டீரக் கோவைப் புல்லினார் இளவிச்சிக்கோவைத் தழுவிப் போற்றவில்லை. அவன், 'என்னை என் செயப் புல்லாராயினீர்?' என்று கேட்கின் றான். அதற்குப் புலவர்பெருமகனார், அவன் பெண்கொலை புரிந்த நன்னன் வழியினனாதல் கருதியும் பாடுவார்க்குக் கதவை அடைத்துவிட்ட காரணத்தாலும் அவனைத் தழுவிப் போற்ற வில்லை என்று மறுமொழி பகர்கின்றனர்.

பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீரக்கோன் ஆகலின், நன்றும்
முயங்கல் ஆன்றிசின், யானே; பொலந்தேர்
நன்னன் மருகன் அன்றியும், நீயும்
முயங்கற்கு ஒத்தனை மன்னே; வயங்குமொழிப்
பாடுநர்க்கு அடைத்த கதவின், ஆடுமழை

அணங்குசால் அடுக்கம் பொழியும்நும்
மணம் கமழ் மால்வரை வரைந்தனர், எமரே!
(புறம். 151:5-12)

நான் மட்டுமன்று; எங்கள் புலவர் பரம்பரையே உன் குடும்பத்தைப் பாடுதலை ஒழித்துவிட்டது என்கிறார். இதனால் மதியாதார் தலைவாசல் மிதியாமல் ஒதுக்கினர் என்பது போதரும். கழாத்தலையார் என்னும் புலவரை இகழ்ந்ததன் பயனாக இருங்கோவேளின் மூதூரிலே பொன்னை அவர்களுக்கு உதவிய அரையமானது கேடுற்றது என்பதனைக் கபிலர் அம்மன்னனுக்குச் சுட்டிக் காட்டுகின்றார்.

'வென்றி நிலைஇய விழுப்புகழ் ஒன்றி,
இருபால் பெயரிய உருகெழு மூதூர்,
கோடி பல அடுக்கிய பொருள் நுமக்கு உதவிய
நீடு நிலை அரையத்துக் கேடும் கேள்; இனி;
நுந்தை தாயம் நிறைவுற எய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்!
நும் போல் அறிவின் நுமருள் ஒருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே; இயல்தேர் அண்ணல்!'

ஆகவே, புலவரை இகழ்ந்தார் தீமை உறுவர் என்னும் செய்தி நன்கு விளங்கும்.

இவ்வாறு புலவரைப் போற்றாது சிறுமையடைந்தோர் மிகச் சிலரே. மன்னர்களும், வள்ளல்களும், குடிபடைகளும் புலவர்களையும் பாணர், கூத்தர், விறலியர் முதலிய இசைப் புலவர்களையும் பல்வகையாகப் புரந்து போற்றியமையைப் புறநானூறு, பத்துப்பாட்டு, முதலியவற்றில் பரக்கக் காணலாம். புலவர்க்குப் பொன்னும், மணியும், யானையும் நிலமும் பிற பொருள்களுமாக ஈந்து அவர்களைப் புரந்தனர். மன்னர் புலவரை வழி அனுப்புங்கால் அவர்களுக்கு வேண்டும் பொருள் அளித்து, அவர்பின் ஏழடி ...ன்று அனுப்பி வைப்பர். கரிகாலன் பொருநர்க்குப் பரிசில் ஈந்து, ...ர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிய காட்சியைப் பின்வரும் ...பாருநராற்றுப்படை அடிகளில் காணலாகும்.

'ஈற்று ஆ விருப்பின், போற்றுபு நோக்கி, நும்
கையது கேளா அளவை, ஒய்யென,

பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கி, தூய
கொட்டைக் கரைய பட்டு உடை நல்கி,
'பெறல் அருங் கலத்தில் பெட்டாங்கு உண்க! என,
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர.
வைகல் வைகல் கைகவிபருகி,
எரி அகைந்தன்ன ஏடு இல் தாமரை
சுரி இரும் பித்தை பொலியச் சூட்டி,
நூலின் வலவா நுணங்கு அரில் மாலை
வால் ஒளி முத்தமொடு பாடினி அணிய,
கோட்டின் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஊட்டு உளை துயல்வர, ஓரி நுடங்க,
பால் புரை புரவி நால்கு உடன் பூட்டி,
காலின் ஏழ் அடிப் பின்சென்று, 'கோல்இன்
தாறு களைந்து ஏறு' என்று ஏற்றி, வீறு பெறு
பேர் யாழ் முறையுளிக் கழிப்பி, நீர் வாய்த்
தண் பணை தழீஇய தளரா இருக்கை
நன்பல் ஊர நாட்டொடு, நன்பல்,
வெருஉப் பறை நுவலும், பரூஉப் பெருந்தடக்கை,
வெருவரு செலவின், வெகுளி வேழம்
தரவிடைதக தங்கல் ஓவிலனே? (பொரு. 151-173)

முரசுகட்டில் என அறியாது களைப்பினால் தூங்கிவிட்ட மோசிகீரன் புலவனாதலின் அவனுக்குத் துன்பம் தராததோடு கவரி கொண்டும் வீசினான் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ் சேரலிரும்பொறை. விழித்தெழுந்தபின் புலவர் உண்மை உணர்ந் தாராய், அம்மன்னன் தமிழ் முழுது அறிந்த தன்மையால், தமிழன் னைக்குச் செய்த சிறப்பு என அவன் செய்கையைப் போற்றுதல் உள்ளமுருக்கும் உரைகள்ளாம்.

'குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை, எண்ணெய்
நுரை முகந்தன்ன பொன்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்கும் நின்வாள் வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும், நல் தமிழ் முழுது அறிதல்;

அதனொடும் அமையாது, அணுக வந்து, நின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சி, தண்ணென
வீசி யோயே; வியலிடம் கமழ,
இவண்இசை உடையோர்க்கு அல்லது, அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல் -
வலம் படு குருசில்! நீ ஈங்கு இது செயலே?' (புறம். 50:5-17)

தன்னை அவன் வாளால் வெட்டாதொழிந்த தொன்றே அவன் தமிழ் முழுதறிந்தமைக்குப் போதும். அதனொடும் நில்லாது விசிறி கொண்டும் தமக்கு வீசினானே என்று வியக்கின்றார் புலவர். இம்மை உலகில் இசை படைத்தார்க்கே உயர்நிலை உலகம் உண்மை தெரிந்து மன்னன் அவ்வாறு செய்தனனோ என்று கேட்கிறார்.

புலவர் பாடும் புகழுடையோர் வலவன் ஏவா வானவூர்தியில் துறக்கம் புகுவர் என்று அறிவுடையார் கொண்டனர்.

'சேற்று வளர் தாமரை பயந்த, ஒண் கேழ்,
நூற்று இதழ் அலரின் நிரைகண்டன்ன,
வேற்றுமை-இல்லா விழுத்திணைப் பிறந்து,
வீற்றிருந் தோரை எண்ணும் காலை,
உரையும் பாட்டும் உடையோர் சிலரே;
மரை இலை போல மாய்ந்திசினோர் பலரே;
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்ப, தம் செய்வினை முடித்து' எனக்
கேட்பல்; எந்தை! சேட்சென்னி! நலங்கிள்ளி! (புறம். 27:1-10)

இதனால் புலவர் பெருமக்களின் புகழ் பெரிதும் விளங்கும்.

வேள்விக்கு உதவும் அந்தணர்களையும், அருந்தவர் முதலியோரையும் மன்னரும் மற்றையோரும் வணங்கிப் போற்றி வழிபாடாற்றினர். இவர்களும் மக்களுக்காகப் பணிபுரிந்த பொதுநலத் தொண்டர்களாவர்.

பண்டை இலக்கியத்தில் பார்ப்பனர்

சங்க இலக்கிய வழி பார்ப்பனரின் நிலையை ஆராய்வுழி, பெரும்பாலும் உயர்நிலையினராகவே காணப்படுகின்றனர்.

வேதம் ஓதி, அறுதொழில் புரிந்து, முத்தீப் பேணி, அரசர் பொருட்டாகவும் பிறர் பொருட்டாகவும் வேள்வி செய்து, அறவழி ஒழுகியோர் எல்லாருடைய போற்றுதலுக்கும் உரியவராகக் காணப்படுகின்றனர். பாரிக்குத் துணைவராய் விளங்கி அரச காரியங்களில் ஈடுபட்ட கபிலரைப் போன்ற அந்தணர் பிறிதொரு வகையினராவர். இனி, உலகியலில் பெரிதும் ஈடுபட்டுத் தலைமகற்குப் பாங்களாக விளங்கியும், அவர் பொருட்டுத் தூது சென்றும், பிறவாறும் வாழ்ந்த இலௌகிய நிலையினரையும் காண்கிறோம். இவர் தம்முள் முதலில் வேள்வி செய்யும் அந்தணருடைய நிலை எப்படியிருந்தது என்பதை ஆராய்வோம்.

அந்தணரது தோற்றமும் அவர்களது இயல்பும், கல்வி அறிவு ஒழுக்கங்களும் அங்கங்கே சுட்டிக் காட்டப்படுகின்றன. இவர்கள் பசுக்களைப் போன்ற இயல்பு வாய்ந்தவர்கள் (புறம். 9:1). இருபிறப்பாளர் என்று போற்றப்படுபவர்கள்(முருகு. 182; புறம். 367:13). 'இருபிறப்பு, இருபெயர், ஈர நெஞ்சத்து, ஒருபெயர், அந்தணர்' என்பது பரிபாடல் (4:27-28). காலையில் குளிர்ந்த நீரில் நீராடுவார்கள் (பரி.6:43-45). மார்பில் பூணூல் அணிபவர்கள் (பரி. 11:83). ஒன்பது கொண்ட மூன்று புரிகளோடு கூடியது இந்நூல் (முருகு. 182). மிகுந்த நூற்கேள்வியினையும் ஐம்புலன்கள் அடங்கிய விரதங்களையும் நான்கு வேதங்களையும் உடையவர்கள். 'ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை நான்மறை முதல்வர்'' (புற.26:12-13) என்றும், 'மறை காப்பாளர்' (பெரும்.301) என்றும், 'வேதியர்' (பரி. 11:84)என்றும், 'வாய்மொழிப் புலவர்' (பரி. 9:13) என்றும் குறிக்கப்படுகின்றனர். கேள்விச் செல்வம் மிகுதியும் உடையவர்கள். 'கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த வேள்வி' (பெரும். 315-316); 'கேள்வி அந்தணர் கடவும் வேள்வி' (கலி. 36:25-26) என வருவன இவர்தம் கேள்விச் சிறப்பைப் புலப்படுத்தும்.

நெருப்பை ஓம்பி வழிபடுபவர்கள் (புற. 122:3); இவர்கள் ஓம்பும் நெருப்பு மூன்று வகைப்படும். அதனால், இவர்கள் முத்தீச் செல்வமும் உடையவர்கள் (புறம். 2:22; 367:13; முருகு. 181). இவர்கள் முத்தீயை வலம் செய்து வழிபடுதலை, ''ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான் போல்'' (கலி. 69:5) என்பது புலப்படுத்தும்.

இவர்கள் நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமச்சரிய வாழ்க்கை நடத்தும் இயல்பினர் (முருகு. 179-180). பிரமசாரிகள், புரசமரத்தின்

பட்டை நீக்கிய தண்டும் கமண்டலமும் கைகளில் கொண்டு விரத உணவை உண்பர் (குறுந். 156:2-5). பார்ப்பனரின் மக்கள் குடுமித் தலையராயிருந்தனர்; மிகவும் அடர்த்தியாகத் தலைமயிரை இவர்கள் வளர்த்து வந்தனர். குதிரையின் தலைமயிருக்கு இவர்களுடைய தலைமயிரை ஒப்புக் கூறுவதிலிருந்து இதனை உணரலாம். (ஐங். 202:2;4).

அந்தணர் இல்லம் சாணத்தால் மெழுகப்பட்டிருக்கும். வழிபடு தெய்வங்களும் அங்கு உண்டு. இல்லத்தை அடுத்த குறுங்கால் பந்தலில் பசுங்கன்று கட்டப்பட்டிருக்கும். வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகளும், நாயும் இவர்கள் இல்லத்தில் சேர்வதில்லை. அங்கு வாழும் கிளிகள் வேத ஒலி செய்யும். பார்ப்பனமகள், பறவைப் பெயர்ப்படு வத்தத்தால் ஆக்கிய (இரசான்னம் என்னும் பெயர்பெற்ற நெல்) சோற்றைச் சமைப்பாள். கொம்மட்டி மாதுளையின் பசுங்காயோடு மிளகுப்பொடி சேர்த்து, கருவேம்பின் இலையும் கலக்கப்பட்டு, சிவந்த வாசனையோடு கூடிய பசுவின் மோரையும் ஆகாரமாய்க் கொள்வர். மாவடுவினால் ஆக்கிய ஊறுகாயும் சேர்த்துக் கொள்வர். இவ்வாறு அந்தணர் இல்லம் பெரும்பாணாற்றுப்படையில் சித்திரிக்கப்படுகிறது. (பெரும். 297-310).

இவர்களுக்கு ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைத் தொழில் உண்டு. அதனால், 'அறுதொழில் அந்தணர் எனப்படுவர் (புறம். 397:20).

'ஓதல், வேட்டல், அவைபிறர்ச் செய்தல்
ஈதல், ஏற்றல் என்று ஆறுபுரிந்து ஒழுகும்
அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுகி'

என்பது பதிற்றுப்பத்து (23:6-8). இதில் அந்தணர்க்கு அரசர் வழிபாடு செய்து ஒழுக வேண்டும் என்பதை 'வழி மொழிந்து ஒழுகி' என்னும் பகுதி குறிக்கிறது.

அரசர்களும் இவ்வந்தணர்களை வணங்கிப் போற்றி, அவர்களைக் கொண்டு வேள்வி செய்வித்து, அவர்களுக்கு நிலம், பொருள்கள் முதலியனவும் தானம் செய்து அவர்களைப் பேணி வந்தனர்.

'பார்ப்பரர்க்கு அல்லது பணிபு அறியலையே'
என்பது பதிற்றுப்பத்து (63:1)

'இறைஞ்சுக பெருமதின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே' (புறம். 6)

என்று புறநானூற்றில் காரிகிழார் கூறுகிறார்.

சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும் தாமப்பல் கண்ணனார் என்னும் பார்ப்பனப் புலவரும் வட்டாடும் இடத்துச் சோழன் வெகுண்டு அவர் மேல் வட்டுக் கொண்டு எறிய, அப்பொழுது புலவர்,

'ஆர் புனை தெரியல் நின்முன்னோர் எல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்; மற்று இது
நீர்த்தோ நினக்கு?' (புறம். 43:13-15)

என வெறுப்பக் கூறினர். கபிலர் என்பார் பாரிமகளிரை இருங்கோ வேளிடத்து அழைத்துச் சென்று, அவரை மணஞ்செய்து கொள்ள வேண்டும் என்று வேண்டுமிடத்துத் தமது வேண்டுகோள் நிறை வேற்றப்பட வேண்டும் என்பதற்குத் தாம் ஓர் அந்தணப் புலவர் என்பதை நினைவுபடுத்துகிறார்.

'இவர் யார்? என்குவை ஆயின் இவரே,
....
நெடுமாப் பாரி மகளிர்; யானே
தந்தை தோழன்; இவர் என் மகளிர்;
அந்தணன், புலவன், கொண்டுவந்தனே'
(புறம். 201:1-7)

அந்தணர்க்கு நிலமும் பொன்னும் பிற பொருள்களும் தானமாக அளித்து மன்னர் முதலியோர் அவர்களைப் பாதுகாத்து வந்தனர். காரி வள்ளல் தமது நாட்டின் பகுதிகளை அந்தணர்க்கு உரிமையாக்கினான் (புறம். 122:1-3).

ஏற்கின்ற பார்ப்பார்களுக்குப் பொன் முதலியவற்றை நீரட்டித் தானமாகக் கொடுப்பது மரபு (புறம். 367:4-5).

'கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்க்கு,
அருங்கலம் நீரொடு சிதறி, பெருந்தகைத்
தாயின் நன்று பலர்க்கு ஈத்து' (புறம். 361:4-6)

'அறம் கரைந்து வயங்கிய நாவின், பிறங்கிய
உரைசால் வேள்வி முடித்த கேள்வி,

அந்தணர் அருங்கலம் ஏற்ப, நீர்பட்டு.
இருஞ்சேறு ஆடிய மணல்மலி முற்றத்து' (பதிற். 64:3-6)

இங்கே குறிக்கப்பெற்ற அந்தணர் தம் மரபுக்கு ஏற்றவண்ணம் நடக்கும் ஒழுக்கசீலர்களாவர். இவரே வேள்வி முதலியன புரிதற்கும், அரசர்க்கும், பிறர்க்கும் அறிவுரை கூறுதற்கும் தகுதி படைத்தவர். இவர்கள் ஓர்ளவு முற்றத் துறந்த முனிவர்க்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றத் தக்கவர்களாவர்.

பாரியின் நண்பராயும் புலவர் பெருமானாயும் விளங்கிய அந்தணப் புலவராகிய கபிலர், பாரி இறந்தபின் அவன் மகளிர்க்குத் திருமணம் செய்து வைக்கப் பெரிதும் முயல்கிறார். பறம்பை விடுத்துப் பிரிந்து செல்லும் நிலையில் இவர் அம்மலையை நோக்கிப் பாடிய பாடலிலிருந்து கள், ஊன் இவற்றையும் உணவாகக் கொண்டவர் இவர் என்பது புலனாகிறது

'மட்டு வாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டு ஆன்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்
பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே; இனியே,
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே!
கோல் திரள் முன்கைக் குறுந்தொடிமகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே' (புறம். 113)

இதிலிருந்து கள்ளும் ஊனும் உண்டு வாழ்ந்த அவர்தம் பறம்பு மலை வாழ்க்கை நன்கு புலனாகிறது. இங்ஙனமே அரசரை அடுத்து நெருங்கிய உறவு கொண்டிருந்த பார்ப்பனர் நிலை வேள்வி செய் அந்தணர் நிலையினும் மாறுபட்டுக் காணப்பட்டது எனக் கொள்ளலாம்.

கள்ளி அகிலும், கருங்காக்கைச் சொல்லும்போல்
எள்ளற்க, யார்வாயும் நல் உரை - தெள்ளிதின்
ஆர்க்கும் அருவி மலை நாட! - நாய்கொண்டால்
பார்ப்பாரும் தின்பர் உடும்பு.

எனவரும் பழமொழிப் பாடலும் ஈண்டு ஒப்பு நோக்கத்தகும்.

இனி அந்தணர் குடியில் பிறந்தும் வேதம் ஓதுதல் முதலிய நெறி பிறழ்ந்தாரும், வேள்வி செய்யாதாரும் 'வேளாப் பார்ப்பார்'

எனப்படுவர். இவருக்குச் சங்கறுத்தல் போன்ற தொழில்கள் உள எனத் தெரியவருகிறது.

'வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளை களைந்து ஒழிந்த கொழுந்தின் அன்ன,
தளை பிணி அவிழா, சுரிமுகப் பகன்றை' (அகம். 24:1-3)

எனவரும் அகநானூற்றுப் பாடற்பகுதி வேளாப் பார்ப்பாரின் இயல்பைப் புலப்படுத்துகிறது.

மறைநூல் ஒழுக்கம் தப்பிய பார்ப்பனர் சேரி ஒன்றனைச் சிலப்பதிகாரம் சுட்டுதலும் கவனிக்கத் தக்கது. கோவலன் கண்ணகியர் மதுரைப் புறஞ்சேரியை அண்மி வருகின்ற நிலையில் வழியிடையில் இளைப்பாற இத்தகைய பார்ப்பனர் ஊரில் சேர்கின்றனர்.

'வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப்
புரிநூல் மார்பர் உறைபதி சேர்ந்து' (சிலப். புறஞ்சேரி. 38:39)

என்பது இளங்கோவடிகள் வாக்கு. ''நாவால் மறைநூல் நவிலாது வரிப்பாட்டை நவிலும் கோட்பாட்டையுடைய நூலணி மார்பர் உறைவதோர் பதியைச் சேர்ந்தென்க' என அடியார்க்கு நல்லார் இதற்கு விளக்கம் தருகிறார். இவரை 'அம்பணவர்' என்றும் குறிப்பிடுவர் அரும்பதவுரைகாரர்.

இவரைப் போன்றே தலைவனுக்குத் தோழனாக அமைந்து, தூது செல்லும் தொழில்புரிவோரும், பிற உலகியல் தொழில்களில் சிக்கி உழல்வோரும் சாதாரண நிலையில் உள்ள பார்ப்பனராவர். பார்ப்பான் தூது செல்லும் நிகழ்ச்சியை அகநானூற்றுப் பாடல் ஒன்றுநன்கு விவரித்து உரைக்கின்றது (337). தூது செல்லும் தொழில் பூண்ட பார்ப்பான் ஒருவன் கையில் கொண்ட வெள்ளிய ஓலைச் சுருளுடன் பாலை நிலத்து வழியே வருகிறான். அவன் உண்ணாமையால் வாடிய விலாப்புறத்தை உடையவனாயிருந்தான். அவன் கையிடத்தேயுள்ள பொதியை அந்நிலத்து வாழும் வழிப்பறி செய்யும் கொடுந்தொழில் மறவர் கண்டு, 'இவன் கையில் உள்ளது பொன்னாகவும் இருத்தல் கூடும் என்று கருதி, அவனைக் கொன்று வீழ்த்திவிடுகின்றனர். அப் பார்ப்பான் உடுத்துள்ள கந்தையைத் தவிர, அவனிடம் பொன் ஒன்றும் இல்லாமை கண்டு, தமது கொலைத் தொழிலால் பயன் சிறிதும் இல்லாமற் போகவே கையை

நொடித்து அப்பாற் போய்விடுகின்றனராம்.

> தூது ஒய் பார்ப்பான் மடி வெள் ஓலைப்
> படையுடைக் கையர் வரு தொடர் நோக்கி,
> 'உண்ணா மருங்குல் இன்னோன் கையது
> பொன் ஆகுதலும் உண்டு' என, கொன்னே
> தடிந்து உடன் வீழ்த்த கடுங்கண் மறவர்,
> திறன் இல் சிதாஅர் வறுமை நோக்கி,
> செங்கோல் அம்பினர் கைந் நொடியாப் பெயர'
>
> (அகம். 337:8-14)

ஒரு தலைவி இரவுக்குறியிடத்துச் செல்ல, அங்குப் புலிக்கு வைத்த வலையில் ஒரு நரி அகப்பட்டது போன்று; கருங்குட்டத் தினால் காலும் கையும் குறைந்து முடமாகிய நிலையில் உள்ள ஒரு முதுபார்ப்பான், தலைவியினிடம் காமவேட்கை கொண்டவன் போல் பேசுதலும் தலைவியின் சாதுரியச் செய்கையால் அவளை ஒரு பெண் பிசாசு என்று அஞ்சி அவன் ஓலமிட்டு ஓடுதலும் ஆகிய நிகழ்ச்சிகள் நாடகச்சுவைபடக் கலித்தொகையில் (கலி. 65) சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

இப்பாடலில் அந்த முதிய பார்ப்பான் எந்நாளும் தனித்து நிற்கும் மகளிரைக் கண்டால், இவ்வாறு காமவேட்கையால் பேசி, அணுகும் இயல்புடையோன் என்று அவனைச் சுட்டித் தலைவி,

> என்றும் தன்
> வாழ்க்கை அதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்
> வீழ்க்கைப் பெருங் கருங்கூத்து'

என்று பேசுவதும் கவனிக்கத்தக்கது.

இவ்வாறாகப் பண்டைப் பார்ப்பனரில் வெவ்வேறு வகை ஒழுக்கம் மேற்கொண்டாரும் வாழ்ந்து வந்தனர் என்பது மேலே கூறிவந்த செய்திகளால் புலனாகும்.

> 'மறப்பினும் ஒத்துக் கொளல் ஆகும்; பார்ப்பான்
> பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்' (திருக். 134)

என்பது வள்ளுவர் வாக்கு.

அருந்தவர்

துறவு வாழ்வு வாழும் முனிவரர் அருந்தவர், அந்தணர், ஐயர், தவசியர் (நற். 141), முனிவர் முதலிய பெயர்களால் குறிக்கப் பெறுகின்றனர். இவர்கள் நீண்ட சடைமுடியை உடையவர்கள் (நற்.141). அசையாது யோக நிலையில் இருக்கும் உடம்பை உடையவர்கள்(நற்.141). குன்றங்களில் வாழ்பவர் (நற்.141). காவி நிற ஆடை அணிபவர்கள் (முல்லை. 37). துறவோர் பிச்சையேற்று உண்ணும் வாழ்க்கையர் என்பதை, ''ஓர் இல் பிச்சை ஆர மாந்தி'' என்னும் குறுந்தொகைப் பாடலினால்(குறுந்.277:3) ஊகிக்கலாம். இவர்கள் ஓரிடத்தில் நிலையாய் இராது எங்கும் சஞ்சரித்துக் கொண்டிருப்பவர்கள் (குறிஞ்சி. 17) இவர்கள் உள்ளத்தில் இறைவன் எழுந்தருளுவான் (முருகு. 81-90) சென்ற காலமும் வருங்காலமும் நிகழ்காலத்தோடு ஒக்க அறியும் ஆற்றல் படைத்தவர்கள் (மதுரைக். 477-478)

பிரிந்து சென்ற தமது தலைவர், நாட்டில் எங்கேனும் ஓரிடத்தில்தான் இருப்பார் என்று ஒரு தோழி தலைவிக்குச் சொல்லுமிடத்து, 'நிலத்திற்குள்ளும் வானிலும் நீரிலும் செல்லார் என்று சொல்வது முனிவர்களில் சித்தி பெற்றாரை மனத்தில் கொண்டு கூறுவதுபோல் உள்ளது.

> நிலம்தொட்டுப் புகாஅர், வானம் ஏறார்:
> விலங்கு இரு முந்நீர் காலின் செல்லார் (குறுந். 130)

என்பது தோழியின் கூற்று. தவம் தவறுதலினால் துறக்க வாழ்வி லிருந்து நீக்கப்பட்டுத் தவம் செய்யும் சான்றோருடன் சேர்ந்த ஓர் அரசனை, அவனது வழிநீக்கி மீண்டும் சொர்க்கத்திற்குப் போக்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள் இந்த முது சான்றோர் (கலி. 139:33-37). முனிவனை அணுகுவோர் தம் தூய்மையின்மைக்காகத் தொடாது விலகிச்செல்வது உண்டு என்பது,

> 'கடவுள் நண்ணிய பாலோர் போல
> ஒரீஇ ஒழுகும் என்னைக்கு' (குறுந்.203:4-5)

எனவரும் குறுந்தொகை (203:4-5) அடிகளால் புலப்படும். இவர் கள், 'ஞாலத்து உறையுந் தேவர்' (பரி. 31:27) என்று போற்றப்படுவர். மனைவியருடன் உறைந்து செய்யும் தவ வாழ்வுக்கு வழி காட்டுவோர் இப் பெரியார்களே (கலி. 93:6-7).

இறைவனை ஏத்தி வழிபடும் பண்புடையர் (முருகு.274). இவர்கள் வேள்வி செய்து வழிபடும் பண்புடையவர்களும் ஆவர். 'அவிர் சடை முனிவர் அங்கி வேட்கும் ஆவுதி நறும்புகை' (பட்டினப். 54-55) என்ற பாடலடி இவர்கள் வேள்வி செய்தலை விளக்குகிறது. வனத்தில் வாழும் விலங்குகளும் பணி செய்ய இவர்கள் தவம் செய்து வாழ்தலை வேள்விபற்றிப் பேசிய இடத்தில் விரிவாகக் கூறியுள்ளோம் (பெரும்பாண். 494-500). முனிவர்களில் வேள்விக்குண்டத்திலிருந்து நல்ல விளைவுகள் உலகிற்குத் தோற்றுதல் கூடும் என்பதை வடபால் முனிவன் தடவினுள் தோன்றிய ஆதிவேளின் செய்தி உணர்த்த வல்லது (புறம். 201:7-12).

இதுவரையில் முனிவர்களைப் பற்றி நாம் கண்ட பல்வேறு செய்திகளையும் சேர்த்து ஒரு சித்திரம் தீட்டிக் காட்டினாற்போல, நக்கீரர் தாம் பாடிய திருமுருகாற்றுப்படையில் வரைந்துள்ள சொற்சித்திரம் காட்சி அளிக்கிறது.

சீரை தைஇய உடுக்கையர், சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்,
மாசுஅற இமைக்கும் உருவினர், மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர்,நன்பகல்
பலஉடன் கழிந்த உண்டியர், இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர், யாவதும்
கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர், காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர், இடும்பை
யாவதும் அறியா இயல்பினர், மேவரத்
துனிஇல் காட்சி முனிவர்' (முருகு. 126-137)

வேதம் ஓதி ஒழுக்கமுடையராய், தேவருலகத்தையும் இவ்வுலகிற் காணும் பேறு பெற்றாராய்,அறநெறி பிழையா அன்புடை நெஞ்சங்கொண்டு வாழும் பெரியோர்களின் பள்ளிபற்றிய இயல்பினை மதுரைக்காஞ்சியுள் (468-474) காணலாம்.

'சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து,
நிலம் அமர் வையத்து ஒருதாம் ஆகி,

உயர்நிலை உலகம் இவண்நின்றுஎய்தும்
அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்,
பெரியோர மேஎய், இனிதின் உறையும்
குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளியும்' (மதுரை.468-474)

இம்முனிவர்களின் இருப்பிடங்களை மன்னர் புனித தலமாகக் கருதினர். முனிவர் இருப்பிடங்களை எதிர்ப்படின் குடை தாழ்த்து மரியாதை செய்தலும், அம்முனிவர் தம் கையை உயர்த்தி ஆசி கூறும்போது தலை தாழ்த்துப் பணிதலும் மரபு. இவ்வகையில் பெரியார்களைப் பேணியோர்களில் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவன் முனிவரைக் கொண்டு வேள்வி பல செய்த பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி.

'பணியியர் அத்தை, நின் குடையே - முனிவர்
முக்கட் செல்வர் நகர் வலம் செயற்கே!
இறைஞ்சுக, பெரும! நின் சென்னி - சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே' (புறம். 6:17-20).

சுடரொடு திரியும் முனிவர்

சூரியன் சென்ற வழியெல்லாம் அவனுடனே சென்று தவம் செய்யும் அந்தரசாரிகளாகிய முனிவரைப் பற்றிய குறிப்புகளும் இரண்டு இடங்களில் உள. இம்முனிவர்கள் சூரியனுடைய வெம்மையைத் தாம் பொறுத்து உலகில் வாழும் உயிர்களுக்குப் பாதுகாவலாகக் காற்றையே உணவாகக் கொண்டு அச் சூரியனுடனேயே திரிந்துவரும் இயல்பினராவர் (புறம்.43:1-4). முருகன் இங்ஙனம் ஆகாயத்தில் இயங்கும் தெய்வ முனிவர்களுக்குப் பாதுகாவலாகத் தமது ஒரு கையையே மேலே ஏந்திக் கொண்டிருக்கிறாராம். பின்வரும் பாடலடிகளில் இவ்வியல்புகள் தெற்றென விளங்கும்.

நிலமிசை வாழ்நர் அலமரல் தீர
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கி
கால் உணவு ஆக, சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரும் மருள' (புறம். 43:1-4)
'விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒருகை'
(முருகு. 107)

முக்கோல் அந்தணர்

முனிவர்களில் மூன்று கோலை ஏந்தி, காவி உடை முதலிய தவ வேடத்தோடுகாட்டில் திரியும் முனிவர்களும் ஒருவகையினர். முக்கோலின் மேலாகக் காவி உடையையும் கட்டியிருப்பர் *(முல்லை.37-40)*. தொங்கும் உறியிலே கமண்டலத்தைக் கொண்டு செல்வர். சூரியனின் வெம்மை தம்மைத் தாக்காதிருக்கக் குடை பிடித்துச் செல்லுதலும் இவர்தம் இயல்பு *(கலி.9:1-4)*.செக்கர் வானின் ஒளி தன்மேல் பட, நாரை ஆரவாரத்தைக் கைவிட்டு மணல் மேலே இருக்கின்ற நிலையை முக்கோல் அந்தணரின் தியான நிலைக்கு ஒப்பிட்டுப் பேசுகின்றார் நல்லந்துவனார் *(கலி.126:1-5)*.

உடன்போக்கில் சென்ற தன் மகளைத் தேடிச் செல்லும் செவிலித் தாயர் காட்டிடையில் எதிர்ப்படும் முக்கோல் அந்தணரை நோக்கி, அவர் வரும் வழியில் தம் மகள் சென்றதைக் கண்டதுண்டோ என்று வினவுவதாகவும், அவ்வறிஞர் அவருக்கு அறிவுரை கூறுவதாகவும் அகப்பொருட் பாடல்கள் அமைந்துள்ளன *(கலி:9)*

இவர் கொண்டுள்ள முக்கோல் எதனைக் குறிக்கிறது என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள. அயன், அரி, அரன் என்னும் மூவரும் ஒருவரே என்பதை உணர்த்தும் என்பர் ஒரு சாரார். சத்து, சித்து, ஈசுவரன் என்னும் முப்பொருள் உண்மையைப் புலப் படுத்தும் முறையிலோ, திரிகால ஞானிகள் என்பதைக் காட்டும் வகையிலோ அமைந்த சின்னமாகவும் இருக்கலாம்.

14. வேற்றுமையில் ஒற்றுமை

இங்ஙனமாக இவ் உலகின் பொருட்டு உழைக்கும் உத்தமர்கள் ஒரு சிலர்தாம் இருத்தல் கூடும். எங்கோ ஒரு மூலையில் இருந்து கொண்டு தமக்கென வாழாது, பிறர்க்காகத் தமது உழைப்பினை இவர்கள் நல்குவதனால் இவ்வுலகம் நிலைபெற்றிருக்கின்றது என்பதனை 'உண்டால் அம்ம இவ் உலகம்' என்ற புறப்பாட்டிலே காண்கிறோம். பெரும்பான்மையினர் ஆசை மேலீட்டால் போரும் பூசலும் விளைத்து அமைதியின்றி வாழ்ந்தவரே. அரசர்களுக்குள் ஒருவரை யொருவர் வென்று மேம்பட விளங்க முற்படுதல் அக் கால வீரயுகத்திற்கு ஒத்ததே.

'ஒருவனை ஒருவன் அடுதலும், தொலைதலும்
புதுவது அன்று; இவ் உலகத்து இயற்கை' (புறம். 76:1-2)

என்பது இடைக்குன்றூர் கிழார் வாக்கு.

தமிழகத்துப் பேரரசர்களாய்த் திகழ்ந்த சேர, சோழ, பாண்டியர் மூவரும் அவர்க்குக் கீழ்க் குறுநில மன்னராய் அமைந்தோரும் ஒருவரோடொருவர் ஒற்றுமையாய்ப் போர் பூசல் இன்றி வாழ்ந்த தாகத் தெரியவில்லை. ஒரொரு காலத்து ஒவ்வொருவர் கை மேலோங்குதலும், பிற மன்னர் அவர்க்குத் திறை செலுத்தி அமைந்து வாழ்தலும் செய்தனர்.

'குன்று தலை மணந்த மலை பிணித்து யாதத மண்,
பொதுமை சுட்டிய மூவர் உலகமும்,
பொதுமை இன்றி ஆண்டிசி னோர்க்கும்' (புற. 357:1-3)

என்று கூறுமாறு உலகம் பொதுமையன்று, தமக்கே உரியது என்று செருக்கும் பெருமன்னர்களும் இருந்தனர்.

'பல் ஒளியர் பணிபு ஒடுங்க,
தொல் அருவாளர் தொழில் கேட்ப,
வடவர் வாடக் குடவர் கூம்ப,
தென்னவன் திறல்கெடச் சீறி, மன்னர்
மன்எயில் கதுவும் மதனுடை நோன்தாள்'.
(பட்டின. 274-278)

என்று திருமாவளவனாம் கரிகாலனின் போர்த்திறம் புகழப் படுகிறது. இதனால் இவன் சேரபாண்டியரையும் வடபுலத்து வாழ்ந்த மன்னர்களையும் வென்று மேம்பட்டமை பெறப்படும். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், செங்குட்டு வன், பெருஞ்சேரலிரும்பொறை முதலியோர் இத்தகைய பெருமை படைத்து வாழ்ந்தவர்களாவர்.

மூவரசரும் தமிழகத்துச் சிறப்புடன் வாழ்ந்தமை புலவர் வாக்குகளால் தெரியவருகின்றன.

'முரசு முழங்கு தானை மூவருள்ளும்
அரசு எனப்படுவது நினதே, பெரும! (புறம். 35:4-5)

'முற்றிய திருவின் மூவர் ஆயினும்
பெட்பின்று ஈதல் யாம் வேண்டலமே' (புறம். 205:1-2)

'வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும்
மலைந்த சென்னியர், அணிந்த வில்லர்,
கொற்ற வேந்தர் வரினும்' (புறம். 338:6-7)

இவர்கள் ஆணை தமிழ் வழங்கும் வேங்கட எல்லையைத் தாண்டி அதற்கு அப்பாலுள்ள மொழி வேறுபட்ட தேசங்களிலும் சென்றது. மூவரசராலும் காக்கப்பெற்றுவந்த மொழி பெயர் தேசங் கள் இருந்தன.

- வென்றியொடு
வில் அலைத்து உண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ் கெழு மூவர் காக்கும்
மொழி பெயர் தேஎத்த பல்மலை இறந்தே'
(அக. 31:12-15)

என்பது இதற்குத் தக்க சான்றாம்.

இமயம் இவர்கள் அறிந்த பெருமலை. அதனைப் பனிமலை செம்மலை, பொற்கோட்டு மலை என்றெல்லாம் அழைக்கின்றனர்

'புகையின் பொங்கி, வியல் விசும்பு உகந்து,
பனி ஊர் அழற்கொடி கடுப்பத் தோன்றும்
இமயச் செல்வரை......' (அக. 265:1-3)

'பனிவரை' (சிறுபாண். 240)

'பொற்கோட்டு இமயம்' (புறம். 2:24)

என வருவன குறிப்பிடத்தகும். குமரி முதல் இமயம் வரையில் கீழ்கடல் தொடக்கமாக மேல்கடல் வரையில் உள்ள பெருநிலப் பரப்பெங்கும் மூவரசர் ஆணை சென்றதுண்டு. அங்கெல்லாம் வாழ்ந்த மறக்குடித் தலைவர்களும் மன்னர்களும் ஒருபெற்றிப் பட்டுத் தமிழக மன்னரை வணங்கி வாழ்ந்ததும் உண்டு.

'தென்குமரி வடபெருங்கல்,
குணகுட கடலா எல்லை.
குன்று, ம்லை, காடு, நாடு
ஒன்றுபட்டு வழிமொழிய.
கொடிது கடிந்து, கோல் திருத்தி,
படுவது உண்டு, பகல் ஆற்றி,
இனிது உருண்ட சுடர்நேமி
முழுது ஆண்டோர் வழி காவல' (புறம். 17:1-8)

'தென்குமரி வட பெருங்கல்
குணகுட கடலா எல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப,
வெற்றமொடு வெறுத்து ஒழுகிய -
கொற்றவர்தம் கோன் ஆகுவை' (மதுரை. 70-74)

'ஆரியர் துவன்றிய, பேர் இசை இமயம்
தென்அம் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறம்தடக் கடந்தே' (பதிற். 11:23-25)

'கடவுள் நிலைய கல் ஓங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயம் ஆக,
தென்அம் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய, ஆர்ப்புஎழ,
சொல் பல நாட்டைத் தொல் கவின் அழித்த
போர் அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ!' (பதிற். 43:6-11)

இவற்றால் இமய எல்லை வரையில் மூவரசரும் சென்று புகழ் பரப்பியமையும் ஆங்குள்ள அரசர்கள் அவர்களுக்குப் பணிந்து வாழ்ந்தமையும் புலப்படும்.

தமிழ் மன்னர் படையில் பல்மொழி பேசும் மக்களும் அமைந் திருந்தனர்.

'பல் நூறு அடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்
இடம் கெட ஈண்டிய வியன்கண் பாசறை' (புறம். 62:10-11)

என்பதனால் இது விளங்கும். இவரைப் 'பதினெண் பாடை மாக்களாகிய படைத்தொகுதி' என்று உரைக்கின்றார் பழைய உரைகாரர். இம் மறவர்கள் காடு இடைக்கிடந்த பிற நாடுகள் வெகுதூரத்திலிருப்பினும் சிறிதும் பின்னடையாது சென்றனர். தமிழ்நாட்டு மறவரின் வீரத்தை எண்ணி வடபுலத்தரசுகள் அச்சத்தால் தூங்காத கண்ணையுடையனவாய் ஆயினவாம்.

'போர் எனின், புகலும் புனைகழல் மறவர்,
காடு இடைக் கிடந்த நாடு நனி சேஎய;
செல்வேம் அல்லேம்' என்னார்; கல்லென்
விழவுடை ஆங்கண் வேற்றுப்புலத்து இறுத்து,
குணகடல் பின்னது ஆக, குடகடல்
வெண்தலைப் புணரிநின் மான் குளம்பு அலைப்ப,
வலமுறை வருதலும் உண்டு என்று அலமந்து,
நெஞ்சு நடுங்கு அவ்வலம் பாய,
துஞ்சாக் கண்ண, வடபுலத்து அரசே' (புறம். 31:9-17)

'வலம் படு முரசிற் சேரலாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பு அறுத்து, இமயத்து
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து' (அக. 127:3-5)

'ஆரியர் அலறத் தாக்கி, பேர்இசைத்
தொன்று முதிர் வடவரை வணங்கு வில் பொறித்து,
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி அன்ன என் நலம் தந்து சென்மே!' (அகம். 396:16-19)

'வரை அளந்து அறியாப் பொன்படு நெடுங்கோட்டு
இமயம் சூட்டிய ஏம விற்பொறி,
மண்விளை நெடுந்தேர், வானவர் தொலைய'
வாடா வஞ்சி வாட்டும் நின்
பீடு கெழு நோன்தாள் பாடுங்காலே?' (புறம். 39:14-18)

'குடபுலம் காவலர் மருமான் - ஒன்னார்
வடபுல இமயத்து வாங்குவிற் பொறித்த
எழு உறழ் திணி தோள், இயல்தேர்க் குட்டுவன் -
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே!' (சிறுபாண். 47-50)

இங்ஙனமே சோழ பாண்டியரும் கயல், புலி பொறித்த மையைப் பிற நூல்களில் காணலாகும்.

இமய எல்லை வரை மட்டுமன்று, அதற்கு அப்பாலும் கடல் கடந்தும் ஆணை செலப் புகழ் படைத்து அரசாண்டனர் மூவேந்தர். உலகம் எங்குமே மூவரசர் புகழ் பரந்து விளங்கியது.

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்,
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்,
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்,
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்,
கீழது முப்புணர் அடுக்கிய முறை முதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழும், மேலது
ஆனிலை உலகத்தானும், ஆனாது,
உருவும் புகழும் ஆகி, விரிசீர்த்
தெரிகோல் ஞமன் போல, ஒருதிறம்
பற்றல் இலியரோ! நின்திறம் சிறக்க!' (புறம். 6:1-10)

என்று பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி போற்றப் படுகிறான்.

ஆயர் மகளிர் தாம் ஆடும் குரவையுள் தமது மன்னன் ஆட்சி இமயத்திற்கு அப்பாலும், உலகம் எங்கணுமே சிறந்து ஓங்க வேண்டும் என்று தெய்வத்தைப் பரவி வேண்டுகின்றனர்.

'பாடு இமிழ் பரப்பகத்து அரவணை அசைஇய
ஆடுகொள் நேமியாற் பரவுதும் - 'நாடு கொண்டு'
இன் இசை முரசின் பொருப்பன், மன்னி
அமை வரல் அருவி ஆர்க்கும்
இமையத்து உம்பரும் விளங்குக!' என்வே' (கலி. 105:71-75)

'குரவை தழீஇ, யாம், மரபுளி பாடி,
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும் -
மாசு இல் வான் முந்நீர்ப் பரந்த தொல்நிலம்
ஆளும் கிழமையொடு புணர்ந்த
எம் கோ வாழியர், இம் மலர்தலை உலகே!'
(கலி. 103:75-79)

'தொல் கதிர்த் திகிரியாற் பரவுதும் - ஒல்கா
உரும் உறழ் முரசின் தென்னவற்கு

ஒருமொழி கொள்க, இவ் உலகு உடன்! எனவே'
(கலி. 104;78-80)

வடபுலத்திலும் பிற இடங்களிலும் தமிழ் மன்னர் விளைத்த பெரும்போர் நிகழ்ச்சிகளைப் பின்வரும் பாடற் பகுதிகளில் காணலாகும்.

'பல் ஒளியர் பணிபு ஒடுங்க,
தொல் அருவாளர் தொழில் கேட்ப,
வடவர் வாட, குடவர் கூம்ப,
தென்னவன் திறல்கெடச் சீறி, மன்னர்
மன்எயில் கதுவும் மதனுடை நோன்தாள்,
மாத்தாளை மற மொய்ம்பின்,
செங்கண்ணால் செயிர்த்து நோக்கி,
புன்பொதுவர் வழி பொன்ற' (பட்டின. 274-281)

'அணங்குடை நெடுங்கோட்டு அளையகம் முனைஇ,
முணங்கு நிமிர் வயமான் முழுவலி ஒருத்தல்
ஊன் நசை உள்ளம் துரப்ப, இரை குறித்து,
தான் வேண்டு மருங்கின் வேட்டு எழுந்தாங்கு
வடபுல மன்னர் வாட, அடல் குறித்து,
இன்னா வெம்போர் இயல் தேர் வழுதி!' (புறம். 52:1-6)

'தென் பரதவர் மிடல் சாய,
வட வடுகர் வாள் ஒட்டிய' (புறம். 378:1-2)

'ஆரியர் அலறத் தாக்கி, பேர் இசைத்
தொன்று முதிர் வடவரை வணங்குவில் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்' (அகம். 396:16-18)

'மாரி அம்பின் மழைத்தோற் சோழர்
வில் ஈண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை,
ஆரியர் படையின் உடைக. என்
நேர் இறை முன்கை வீங்கிய வளையே!' (அகம். 336:20-23)

இவற்றால் தமிழ்ப் பெருவேந்தர் ஆரியர் முதலிய வடவரை வென்று செருக்கியமை பெறப்படும்.

ஆகவே, முப்பெரு வேந்தரும் தமிழ்ப் பெருமக்களுடைய மொழி பெயர் தேசங்களோடும், இமயத்திற்கு அப்பாலும் சென்று, ஆண்

டர்ண்டு உறையும் மக்களை வென்றும், அவர்க்கு உதவியும், அவர்களோடு வணிகம் முதலிய பொருள் முயற்சிகளில் ஈடுபட்டும் வந்தமையும், தமிழ் நிலத்தாரின் பரந்துபட்ட பண்பாடும் காண லாகும். பாரதப் பெரும்போரிலே தமிழ் வேந்தர் நடுநிலை பூண் கின்றனர். உதியஞ் சேரலாதன் பாரதப் போர்வீரர்களுக்குப் பெருஞ்சோறு வழங்கிப் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் எனும் சிறப்புப் பெயர் புனையப்பெற்றான்.

'அலங்கு உளைப் புரவி ஐவரொடு சினைஇ,
நிலம் தலைக்கொண்ட பொலம் பூந் தும்பை
ஈர் - ஐம்பதின்மரும் பொருது, களத்து ஒழிய,
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!'
(புறம்.2:13-16)

என்று இம்மன்னன் புகழப்படுகிறான்.

மேலும் மன்னர்தாம் நாட்டிற்கு உயிராய் அமைந்து விளங்கு தலை உணர்ந்து தமது நாட்டில் வளம்பெருக்கி, குடிமகிழக் கோலோச்சினர். உலகத்தின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் மன்னன் ஆட்சியே ஏதுவாகின்றது என்று மக்களும் கருதுகின்றனர். தமக்கு வரும் போர் வெற்றி முதலியவற்றுக்கெல்லாம் உழுபடை தாங்கிய உழவர்களின் பொருளாக்கத்தில் அமைந்து கிடத்தலை மதித்துப் போற்றினர்.

'நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' (புறம். 186:1-2)

'வருபடை தாங்கி, பெயர் புறத்து ஆர்த்து,
பொருபடை தருஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே;
மாரி பொய்ப்பினும், வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்,
காவலர்ப் பழிக்கும், இக்கண் அகல் ஞாலம்,
அது நற்கு அறிந்தனை ஆயின், நீயும்
நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது,
பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி,
குடி புறந் தருகுவை ஆயின், நின்
அடி புறந்தருகுவர், அடங்காதோரே' (புறம். 35:24-34)

செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி,
ஒரு நீ ஆகல் வேண்டினும், சிறந்த
நல்இசை நிறுத்தல் வேண்டினும், மற்று அதன்
தகுதி கேள், இனி, மிகுதியாள!
நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி.னோரே;
வித்தி வான் நோக்கும் புன்புலம் கண்அகன்
வைப்பிற்று ஆயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே; அதனால்,
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலன் நெளி மருங்கில் நீர் நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளா தோரே' (புறம். 18:73-30)

இப்பாடற் பகுதிகளால் மன்னரின் மாண்புகளையும் அவரால் நிலம் பயனுற வாழ்தலையும் காணலாகும்.

உழவிற்கு அடுத்தபடியாக வணிகப் பெருமக்கள் குன்றும் காடும் இடையிட்ட கடத்தற்கரிய நிலங்களைத் தாண்டி வாணிகம் செய்கின்றனர். மொழி வேறுபட்ட தேசங்களிலும் இவர் செல்வம் தேடப் போகின்றனர். இமயத்து விளங்கும் உலக இடைகழியான அறைவாயையும் தாண்டி, அப்பாற் சென்று வாணிகம் புரிய இவர்கள் தயங்கவில்லை.

'செய்பொருள் திறவர் ஆகி, புல் இலைப்
பராரை நெல்லிஅம் புளித்திரள் காய்
கான.மடமரைக் கணநிரை கவரும்
வேனில் அத்தம் என்னாது, ஏமுற்று,
விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறை இறந்து அகன்றனர் ஆயினும், எனையதூஉம்
நீடலர் வாழி தோழி!' (அகம். 69:6-13)

'மா கெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்குவெள் அருவிய அறைவாய் உம்பர்
மாசுஇல் வெண்கோட்டு அண்ணல் யானை
வாயுள் தப்பிய, அருங்கேழ், வயப்புலி
மாநிலம் நெளியக் குத்தி, புகலொடு
காப்பு இல வைகும் தேக்கு அமல் சோலை
நிரம்பா நீள்இடைப் போகி,
அரம்போழ் அவ்வளை நிலை நெகிழ்த்தோரே'
(அகம். 251:12-20)

என வருவன இதனைப் புலப்படுத்தும். நீரினும் நிலத்தினும் நிகழ்ந்த பெருவணிகத்தினைப் பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி முதலியவற்றால் விளங்க உரைத்தல் காணலாம். காவிரிப்பூம் பட்டினம், கொற்கை, முசிறி என்னும் மூன்றும் மூவரசர் நாட்டினும் சிறந்து விளங்கிய பட்டினங்கள். இங்கெல்லாம் யவனர் முதலிய மேலைநாட்டினரும், ஈழ நாட்டினரும், காழகம் முதலிய கீழக்கடல் நாட்டினரும் வணிகத்தின் பொருட்டு வந்து குழுமினர்.

'யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளம்கெழு முசிறி' (அகம். 149:9-11)

பாண்டி நாட்டின் கடற்கரைப் பட்டினத்தில் கலங்களின் வழிப் புரவிகள் முதலியன வந்து இறங்கின.

'முழங்கு கடல் தந்த விளங்குகதிர் முத்தம்,
அரம் போழ்ந்து அறுத்த கண்நேர் இலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூலம்,
இருங்கழிச் செறுவின், தீம்புளி, வெள்உப்பு,
பரந்து ஓங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல்,
விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கலன் உய்ம்மார்,
புணர்ந்து, உடன் கொணர்ந்த புரவியொடு, அனைத்தும்,
வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப,
நெய்தல் சான்று வளம்பல பயின்று, ஆங்கு,
ஐம்பால் திணையும் கவினி அமைவர' (மதுரை. 315-326)

காவிரிப்பூம்பட்டினத்தில் நீர், நில வழிவந்து குவிந்த அரும்பண்டங்களைப் பட்டினப்பாலை பின்வருமாறு சித்திரிக்கிறது.

'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்,
காலின் வந்த கருங்கறி மூடையும்,
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,
தென்கடல் முத்தும், குணகடற் துகிரும்,
கங்கை வாரியும் காவிரிப் பயனும்,
ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்,
அரியவும், பெரியவும், நெரிய ஈண்டி,
வளம் தலை மயங்கிய நனந்தலை மறுகின் -
நீர்நாப் பண்ணும் நிலத்தின் மேலும்
ஏமாப்ப இனிது துஞ்சி,
....
தமவும் பிறவும் ஒப்ப நாடி,
கொள்வதூஉம் மிகைகொள்ளாது,
கொடுப்பதூஉம் குறை கொடாது,
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல் கொண்டித் துவன்று இருக்கை'

(பட்டின. 185-195; 209-212)

இப்பகுதியால் பல் நாட்டு வளங்களையும் வணிகரின் சீரிய வாணிக முறையையும் காண்கின்றோம். யவனர்கள் சிறந்த மதுவகைகளையும் கொணர்ந்து விற்றனர்.

'யவனர் நன்கலம் தந்த தண் கமழ் தேறல்
பொன்செய் புனை கலத்து ஏந்தி நாளும்
ஒண்தொடி மகளிர் மடுப்ப, மகிழ் சிறந்து,
ஆங்கு இனிது ஒழுகுமதி! - ஓங்குவாள் மாற!'

(புறம். 56:18-21)

இதனால் யவனர் தந்த மது அரசர், செல்வர், முதலிய பெருமக்களால் விரும்பி உண்ணப்பட்டமை தெளிவு. இங்கே ஈழம் என்பது இலங்கைத் தீவைக் குறிப்பது; காழகம் என்பது பர்மா, மலேயா நாடுகளைக் குறிக்கும். வடமலைப் பிறந்த

மணியும் கங்கைச் சமவெளிப் பொருள்களும் கொண்டு வரப்படுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கறைத் துறையில் ஏற்றுமதி இறக்குமதி நிகழ்ந்த தன்மையைப் பட்டினப்பாலை பின்வருமாறு விளக்கிக் காட்டுகிறது.

'தொல்இசைத் தொழில் மாக்கள்,
காய் சினத்த கதிர்ச் செல்வன்
தேர்பூண்ட மாஅ போல,
வைகல் தொறும் அசைவு இன்றி,
உல்கு கொளக் குறைபடாது -
வான் முகந்த நீர் மலைப் பொழியவும்,
மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்,
மாரி பெய்யும் பருவம் போல-
நீரினின்று நிலத்து ஏற்றவும்,
நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்,
அளந்து அறியாப் பல பண்டம்
வரம்பு அறியாமை வந்து ஈண்டி,
அருங்கடிப் பெருங் காப்பின்,
வலியுடை வல் அணங்கின் நோன்
புலி பொறித்துப் புறம் போக்கி
மதி நிறைந்த மலி பண்டம்
பொதி மூடைப் போர் ஏறி,
மழை ஆடு சிமைய மால் வரைக் கவாஅன்
வரை ஆடு வருடைத் தோற்றம் போல,
கூர் உகிர் ஞமலிக் கொடுந்தாள் ஏற்றை

(பட்டின. 121-140)

கங்கையில் நீர்ப்பெருக்கெடுத்துப் பாய்தலையும், அந்நதியில் கலத்தில் செல்லுதலையும் ஒருசில பாடல்கள் சுட்டியுள்ளன (புறம். 161:6-8; நற்.369:7-10; பெரும்.430-433; மதுரை. 696-697). கங்கை முதலிய பேராறுகளின் வழிச் சென்றும் மக்கள் வாணிகம் செய்ததையை,

'கங்கை வங்கம் போகுவர் கொல்லோ -
அலங்கல் உலவைஅம் காடு இறந்தோரே' (நற். 189:5-10)

என்பதனால் இது உணரலாகும். சோணை நதிக் கரையில் அந்நாளில் சிறந்து விளங்கிய பாடலிபுத்திர நகரின் பெரு

வளமையும் போற்றிப் பேசப்படுகிறது. (குறு. 75:3-6). இங்கே நந்தர் என்பார் கங்கை நீரில் பெருநிதியத்தைக் கரந்து வைத்துள்ளனர் என்னும் செய்தியை அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

'நாம்படர்கூரும் அருந்துயர் கேட்பின்,
நந்தன் வெறுக்கை எய்தினும், மற்று அவண்
தங்கலர் - வாழி, தோழி!' (அகம. 251:4-6)

'பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇ, கங்கை
நீர்முதல் கரந்த நிதியம் கொல்லோ?' (அகம். 265:4-6)

இதுபோன்று தமிழகத்து ஊர்கள் சிலவற்றிலும் பெருநிதியம் தொகுத்து வைக்கப்பெற்றிருந்தமையும் தெரியவருகிறது. மாந்தையில் நிலம் தினத் துறந்த நிதியம் (அக. 127:6-12). நன்னன் பாழி நிதியம் (218:1-3; அகம்.372:3-5) உறந்தை நிதியம் (அகம். 385:3-7); முசிறிப் பெரும்பொருள்' (புறம். 343:9-11) என்பவை காணத் தக்கவை. கொடுமணம் என்னும் ஊர் ஆபரணங்களினாலும், பந்தர் என்னும் ஊர் முத்தினாலும் பெயர் சிறந்து விளங்கியது (பதிற். 74:5-6; அகம்.67:1-3). பாண்டி நாட்டுக் கொற்கை முத்து மிகவும் புகழ் வாய்ந்தது.

'வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை,
மறப்போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்
கொற்கை அம் பெருந்துறை முத்தின் அன்ன' (அகம். 27:7-9)

'புலவுப் பொருது அழித்த பூநாறு பரப்பின்
இவர்திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர்நடைப் புரவி கால் வடுத் தபுக்கும்
நல்தேர் வழுதிக் கொற்கை முன்துறை' (அகம். 130:8-11)

குமரியும் கோடியும் சிறந்த நீர்த்துறைகளாகப் போற்றப் பட்டன. இங்கே மக்கள் தீது நீங்கக் கடலாடினர் என்று கொள்ளலாம். பின்வரும் பாடற்பகுதிகளில் இத்துறைகளின் செய்தி குறிக்கப்படுதல் காணலாம்.

'வென்வேற் கவுரியர் தொல்முது கோடி
முழங்கு இரும் பௌவம் இரங்கும் முன் துறை'
(அகம். 70:13-14)

குமரித்துறையையும் இமயத்தையும் பிணைத்துப் பேசும் மரபும் உளது (புறம். 67:6-7; 380:12; பதிற். 11:23-25; 43:6-8)

துறைமுகப் பட்டினங்களேயன்றி, பெருமன்னர்கள் வாழ்ந்த நகரங்களிலும் வாழ்க்கை சிறந்தோங்கியது. கச்சி, மாவிலங்கை, உறையூர், மதுரை முதலியன முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. பெருநகரங்கள் நாற்பெருங் குலத்தாரொடு பல்வேறு தொழில் புரியும் குலத்தார்களும் உடன் வாழ்ந்தனர்.

'கோடு போழ் கடைநரும், திருமணி குயினரூஉம்
சூடுறு நன்பொன் சுடர்இழை புனைநரும்,
பொன்னுரை காண்மரும், கலிங்கம் பகர்நரும்,
செம்பு நிறை கொண்மரும், வம்பு நிறை முடிநரும்,
பூவும் புகையும் ஆயும் மாக்களும்,
எவ்வகைச் செய்தியும் உவமம் காட்டி,
நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின்
கண்ணுள் வினைஞரும், பிறரும், கூடி
தெண்திரை அவிர் அறல் கடுப்ப, ஒண்பல்
குறியவும் நெடியவும் மடி தரூஉ விரித்து,
சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ,
நால்வேறு தெருவினும், கால் உற நிற்றர'. (மதுரை. 511-522)

இவர்களின் வாழ்க்கை முறை மதுரைக்காஞ்சி, பட்டினப் பாலை முதலியவற்றில் நன்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. நிலவகையானும் அங்கே அவர்கள் வாழ்க்கைத் தொழில்களாலும் வேறுபட்ட குறவர், மறவர், ஆயர், பரதவர் ஆகியோரும் உளர்.

'வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே' (புறம். 183:8-10)

என்பதனால் மக்களிடையே மேல், கீழ் என்னும் பகுப்பு நிலை பெற்றுவிட்டமை காணலாகும்.

'துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று
இந்நான்கு அல்லது குடியும் இல்லை' (புறம். 335:7-8)

என்பதனால் இவர்கள் நால்வரும் பழங்குடி மக்களாகக் கருதப் பட்டனர். என்பது தெரியலாம். புலையன் (புற. 347:5-6), இழிசினன் (புற. 82:3-4) என்றும் சிலர் பேசப்படுகின்றனர்.

மக்கள் பல்வேறு வகையினராதல் போலவே அவர்தம் உணவுப் பழக்கமும் நடை உடை பாவனைகளும் பல்வேறுபட்டு அமைகின்றன. அவர்கள் வணங்கிய பல்வேறு தெய்வங்களையும் பற்பல முறையாகப் போற்றி வழிபட்ட முறைகளையும் நாம் இந்த உரைக்கோவையின் முற்பகுதியில் பார்த்தோம். இத்தகு பெரிய வேற்றுமைகளின் இடையே மக்கள் ஒன்றுபட்டு வாழ்ந்து, பிறரையும் வாழச் செய்தமையைச் சங்க இலக்கியப் பாடல்களின் இடையே இலைமறை காய்போல் அங்கங்கே காணலாகும். காவிரிப்பூம்பட்டினத்தில் பல்வேறு இன மக்களும் கலந்து உறைந்து இனிதாக வாழ்க்கை நடத்தியமையைப் பட்டினப்பாலை சுட்டிக்காட்டியுள்ளது.

'பல் ஆயமொடு பதி பழகி,
வேறு வேறு உயர்ந்த முதுவாய் ஒக்கல்
சாறு அயர் மூதூர் சென்று தொக்காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம்' (பட்டின. 213-218)

என்று இப்பட்டினத்தின் அமைதி வாழ்வு போற்றப்படுகிறது. பல மொழிகள் கூட அவர்தம் உறவுக்குத் தடையாக இல்லை. படம் புகு மிலேச்சர் நாவால் உரையாடாது தத்தம் கையாலும் முகத்தாலும் காட்டும் பல்வகைக் குறிகளாலேயே ஊமை மொழியில் உரையாடுகின்றனராம்.

'மத்திகை வளைஇய, மறிந்துவீங்கு செறிவுஉடை,
மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து,
வலிபுணர் யாக்கை, வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமாண் நல்இல்,
திருமணி விளக்கம் காட்டி, திண் ஞாண்
எழினி வாங்கிய ஈர்அறைப் பள்ளியுள் -
உடம்பின் உரைக்கும், உரையா நாவின்,
படம்புகு மிலேச்சர்' (முல்லை. 59-66)

இங்கே பல்மொழியாளரும் கலந்து இனிது உறைதல் சமுதாயத்தில் காணும் பல்வேறு வேற்றுமைகளிலும் உள்ளமைந்து உலவும் ஒற்றுமைக் காட்சியாகும்.

மக்கள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றன் கூறுபாடு களையும் நன்கு போற்றினர்.

'அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவு அமர் காதலின் புணர்ச்சியும் தரும்' என,
பிரிவு எண்ணிப் பொருள் வயிற் சென்றநம் காதலர்'

(கலி. 11:1-4)

அறத்தால் பொருளீட்டி, பிறர்க்கு ஈந்து தாமும் இன்பம் துய்க்கும் கடப்பாடு போற்றப்படுகிறது. இன்ப அளவிலேயே தங்கிவிடாமல் இளமை முதலியன நிலையாது ஒழிதலையும் மூப்பும் கூற்றும் வந்துறுதலையும் உணர்ந்து உயர்நிலை உலகமாம் பேரின்பப் பெருவாழ்வையும் அடைய விழைகின்றனர்.

'நறுநுதல் நீத்துப் பொருள் வயிற் செல்வோய்!
உரனுடை உள்ளத்தை; செய்பொருள் முற்றிய
வளமையான் ஆகும் பொருள் இது என்பாய்!
இளமையும் காமமும் நின் பாணி நில்லா -
இடைமுலைக் கோதை குழைய முயங்கும்
முறைநாள் கழிதல் உறாஅமைக் காண்டை-
கடைநாள் இது என்று அறிந்தாகும் இல்லை.
போற்றாய் - பெரும! நீ, காமம் புகர்பட
வேற்றுமைக் கொண்டு பொருள்வயிற் போகுவாய்!
கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு ஓராஅங்கு
மாற்றுமைக் கொண்ட வழி! (கலி. 12:9-19)

இங்கே குறிக்கும் மாற்றுமைக் கொண்ட வழியாவது நன் மக்கள் கொண்டொழுகு செந்நெறியாகும். நன்றி மறவாமை, பெரியோரைப் பேணல், கள், காமம் துறத்தல், பொய் கூறாமை, பிறர்க்கு அல்ல புரியாமை ஆகியவற்றை மேற்கொண்டு ஒழுகினர். இன்பமும் துன்பமும் இரவும் பகலும் போல மாறி மாறி வருவது' எனத் தெளிந்தனர்.

'இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
நன்பகல் அமையமும் இரவும் போல,
வேறு வேறு இயல ஆகி, மாறு எதிர்ந்து,
உள், (அகம். 327:1-4)

என்று அகநானூறு உணர்வைத் தூண்டுகிறது. பின்வரும் கலித் தொகைப் பாடல் அடிகள் 'ஆற்றுதல்', 'போற்றுதல்' முதலிய அறங்களின் இயல்புகளை இனிதே எடுத்து மொழிகின்றன.

'ஆற்றுதல்' என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;
'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
'பண்பு' எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்;
'அன்பு' எனப்படுவது தன் கிளை செறாஅமை;
'அறிவு' எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்;
'செறிவு'எனப்படுவது கூறியது மறாஅமை;
'நிறை'எனப்படுவது மறை பிறா அறியாமை;
'முறை' எனப்படுவது கண்ணோடாது உயிர் வெளவல்;
'பொறை' எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்'
(கலி. 133:6-14)

இங்ஙனமாக, நல்லறம் செய்யாவிடினும் குற்றம் இல்லை; பிறர்க்குத் தீமையாவது புரியாமல் இருந்தால் அதுவே பேரறம் எனப் புகல்கின்றார் நரிவெரூஉத் தலையார்.

'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது; அன்றியும்,
நல் ஆற்றுப் படூஉம் நெறியும்மார் அதுவே' (புறம். 195:6-9)

மக்கள் யாவருக்கும் தேவைப்படும் இன்றியமையாத ஒன்று பொருள். செல்வம் படைத்தோர் பிறர்க்கு ஈந்து மகிழ்தலே பேரறமாம். மனிதர்கள் யாவரும் ஒருபெற்றிப்பட்ட இயல்பினரே. இவ்வாறாக மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் நமக்கு அறிவுறுத்துகின்றார்.

'தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்,
நடுநாள் யாமத்துப் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே, தப்புந பலவே' (புறம். 189)

இத்தகைய பெருநோக்கம் மலர மக்களுக்கு உணர்ச்சியூட்டிய

பெருவாக்கே, ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்பது. இவ்வாக்கை நமக்குத் தந்து உதவிய கணியன் பூங்குன்றனார் பெரியோரை வியத்தலும், சிறியோர்ரை இகழ்தலும் இன்றித் தாம் வாழ்ந்ததற்குரிய காரணத்தையும் எடுத்து மொழிகின்றார். 'திறவோர்' எனப்படும் அறிவர் நூல்களிலிருந்து உயிரின் இயல்புகளைத் தாம் அறிந்தமையே என்றும் கூறுகிறார். இவர் தம் நல்வாக்கு நமக்கு என்றென்றும் வழிகாட்டி அமைவதாகும்.

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னாது என்றலும் இலமே; 'மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லல் பேர் யாற்று
நீர் வழிப்படூஉம் புணைபோல், ஆர்உயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' (புறம். 192)

மக்கள் விரும்பும் பெருங்குறிக்கோள்களையும், பரந்த உள்ளத்தையும் பின்வரும் ஐங்குறுநூற்றில் அமைந்த வேட்கைப் பத்து வாக்கியங்களிலே நன்கு மிளிர்தல் காணலாம்.

'நெல் பல பொலிக; பொன் பெரிது சிறக்க!
'விளைக வயலே: வருக இரவலர்!'
'பால் பல ஊறுக! பகடு பல சிறக்க!'
பகைவர் புல் ஆர்க! பார்ப்பார் ஓதுக''
'பசி இல்லாகுக! பிணி சேண் நீங்குக!'
'வேந்து பகை தணிக! யாண்டு பல நந்துக!'
'அறம் நனி சிறக்க! அல்லது கெடுக!'
'அரசுமுறை செய்க! களவு இல்லாகுக!'
'நன்று பெரிது சிறக்க! தீது இல்லாகுக''
'மாரி வாய்க்க! வளம் நனி சிறக்க''

(ஐங். வேட்கைப்பத்து 1-10; 2-வது அடிகள் மட்டும்)

பொருட்குறிப்பு அகராதி

(எண் - பக்க எண்)

அக்குரன்	87
அகத்தியன் என்னும் நாள்	197
அகநானூற்றுக் கடவுள் வாழ்த்து	101
அகப்பொருட் பாடல்கள்	248
அகலிகை	19
அச்சம் காரணமாகச் சிறு தெய்வங்கள்	112
அணங்கு	115, 121
அணங்கும் சூரும்	121
அணங்கு சூர்களின் ஆவேசம்	124
அதிகமான் நெடுமான் அஞ்சி	143
அந்தணர் அருந்தவர் போற்றல்	302
அந்தணர் இல்லம்	12,304
அந்தணர்க்கு நிலம் பொன் முதலியன கொடுத்தல்	14
அந்தணர் தோற்றமும் இயல்பும்	11, 303
அந்தணர் முருகனை வழிபடுமுறை	81 - 82
அந்தணர் வேதம்	1
அமண்பள்ளி	109
அமாவாசியை	178
அயிரைமலைக் கொற்றவை	98
அரக்கு மாளிகை தீயிட்டது	61
அரங்கம்	37
அரசர்கள் அந்தணரைப் போற்றியமை	304
அரசரும் பிறரும் வேள்வி செய்வித்தல்	7-8
அரசரை அடுத்த பார்ப்பனர் நிலை	306
அரவு பற்றும் மதியின் தோற்றம்	184
அரிக்கும் அரனுக்கும் முதன்மை	106
அரிச்சந்திரன் வரலாற்றில் தாலி	263
அருந்தவத்தோன்	100
அருந்தவர்	309
அருந்தவர் உருவச் சித்திரம்	310
அல்லிப்பாவை	156
அவதார சரிதங்கள்	57
அவரவர் திறமைக்கேற்ற தொழில்கள்	243
அவியுணவு	10
அழற்குட்டம்	196
அறக்கடவுள்	270

அறங்கூறு அவையத்தார் 296 - 297
அறத்தொடு நிற்றல் 253
அறவோர் பள்ளி 110
அறுதொழில் அந்தணர் 13,304
அறுமீன் - கார்த்திகை 185
அன்புடை இருவர் நெஞ்சம் கலத்தல் 251
ஆசிரியருக்குக் காணிக்கை 240
ஆடவர் - மகளிர் குமரப்பருவ நிலை 243
ஆடவர் மகளிரைப் பிரிந்து செல்லச் காரணங் கள் 271
ஆடிப்பாவை 157
ஆதிசேடன் 47
ஆதிசேடனின் திருக்கோயில் 48
ஆதிரை நாள் விழா 228
ஆதிரையான் 101
ஆதிரையும் ஓணமும் 194
ஆதிரை விழாத் தொடங்கியோர் 232
ஆயர் திருமண இல்லம் 260
ஆயர் மகளிர் குரவையுள் மன்னனை வாழ்த்தல் 317
ஆயுதத்தில் அமர்ந்துறை அணங்கு 126
ஆலமர் செல்வன் 91
ஆலமுற்றம் 94
ஆவணி நிறைமதி நாள் அவிட்டம் 186
ஆற்றுதல் போற்றுதல் முதலிய அறங்கள் 328
ஆறு அங்கங்கள் 2 - 3
இச்சையால் மால் கொண்ட பிறப்பு 57
இசையறிமாக்கள் இசையை யெழுப்பி வழிபடல் 213
இந்திரவிழா 19-20,229
இந்திரன் 17-25
இந்திரன் அகலிகையால் பெற்ற சாபம் 19
இந்திரன் சுவர்க்கலோக அதிபதி 17
இந்திரனின் தனிச்சிறப்பு 17
இந்திரவில் 18
இமய எல்லை வரை மூவரசர் பெரும் புகழ் 315
இமயத்துக்கு அப்பாலும் தமிழரசர் ஆணை 317
இமயம் தமிழர் அறிந்த பெருமலை 316
இரதி 54
இரதி மன்மதர் 55
இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி 8
இராம சரிதம் 60
இராமன் பறவைகளின் ஒலியடக்கல் 60

இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்தல் 91
இராவணனுக்கு இறைவன் அருளியது 92
இருந்தையூர் ஆதிசேடன் 48
இருந்தையூர்க் கோயில் 37
இருபெருந்தெய்வம் 62,105
இருள் உவா 182
இல்லுறை-கடவுள் 151 - 152
இளஞ்சேரலிரும்பொறை 98
இளஞாயிறு 171
இளவேனிற் காலம் 56
இறக்குமவர்களை எரித்தலும் தாழியிற் கவித்தலும் 285
இறந்தார்க்கு நீர்க்கடன் செய்தல் 286
இறந்தார்க்குப் பிண்டம் வைத்தல் 287
இறையனார் பொருளுரை சுட்டும் விழாக்கள் 229
ஈகை அரிய இழை 263
உடன்போக்கு 254
உண்டாட்டு 275
உபநிடதம் 3
உமை 95
உமையொருபாகன் 100
உயிர் உண்ணும் கூற்று 27
உயிர் நிலையாக ஒரு நாள் மீன் 239
உருகெழு தெய்வம் 129
உலக இடைகழியின் அறைவாய் 320
உலகம் நிலைபெறுவது சான்றோர்களால் 296
உறையூர்ப் பங்குனி விழா 227
ஊர்களில் விழா நடைபெற்றமை 220
ஊரின் நடுநாயகமாகக் கோயில் 207
ஊழிக்காலம் 203
ஊழிமுடிவில் உலகை அழிக்க ஒன்று சேர்பவை 24
ஊழி முடிவில் கோள்நாள்கள் நிலை குலைதல் 204
எட்டாம் பக்கத்தில் அரைத் திங்கள் 178
எண் தோள் முக்கண் எம்மான் 90
எழுது அணி கடவுள் 149
எழுமீன் 196
ஐங்குறு நூற்றின் கடவுள் வாழ்த்து 100
ஐந்துமலர் அம்புகள் 53
ஐம்படைத்தாலி 34, 237
ஐவர் அருஞ்சபதம் 67
ஒரு நாளில் ஆறு காலப் பகுதி 202

ஓணநாள் விழா 228
ஓண நாளில் மறவர் சேரிப் போர் 227
ஓணமும் ஆதிரையும் 194
ஒந்தி நிமித்தம் 278
ஓர் ஆண்டில் ஆறு பருவம் 202
ஓலையில் ஆணியால் எழுதிக் கற்றல் 240
கங்கை நீரில் கரந்து வைத்த பெருநிதியம் 324
கட்டும் கழங்கும் 253
கட்டுவிச்சி 250
கட்டுவிச்சி குறிபார்க்கும் முறை 250
கடம்பினைத் துதித்து வழிபடுதல் 83
கடல் தெய்வக் காட்சி 120
கடவுட்குக் காணிக்கை 217
கடவுட் த நேர்த்திக் கடன் 217
கடவுட் பெயரிய கானம் 99
கடவுளர் 17 - 28
கண்ணகி கதிர்செல்வனை வேண்டியது 174
கண்ணன் அருச்சுனனுக்குக் கீதை மொழிந்தது 66
கண்ணன் ஆய்ச்சியருடன் குரவைக் கூத்து 64
கண்ணன் ஆய்ச்சியரின் துகில் கவர்ந்தது 64
கண்ணி எனப்படும் தலைமாலை 211
கணவன் மனைவியர் உயிர்க்கு உயிராய் அமைதல் 265
கணவன் மாய்ந்ததும் உடன் உயிர்விடும் மகளிர் 285
கணிச்சி என்னும் மழுப்படை 90
கணியன் முகூர்த்தநாள் குறித்தல் 258
கதம்ப மாலை 211
கந்தருவர் 24
கந்திற்பாவை 163
கபிலர் 10
கபிலர் கள்ளும் ஊனும் உண்டது 12
கயிலை மலையில் காட்சி 70
கருடப்புள் 48
கருடன் அன்னையின் துன்பம் களைதல் 49
கருவாய்க்க வரம் வேண்டுதல் 233
கல்லெழுத்து 241
கவர்த்த வழியினட வடக்கிருத்தல் 134
கவிரமலைச் சுனைச்சூர் 123
கழுது 129
கழுவாய்கள் மேற்கொள்ளுதல் 270
கழுவுள் காமூரில் பூதம் 139

களவுமணம் அறிவித்தல் புகழே 249
களவுமணம் கற்பு மணம் 248
களவு முறையில் வள்ளி திருமணம் 76
களவேள்வி 11, 137
கற்பு மணம் தமர் நிகழ்த்துதல் 255
கன்னிம்களிர் நோன்பு 243
கனாவில் நிகழும் பலன் 281
கஜலட்சுமி 45
காடு உறை கடவுள் 116
காடுகிழாள் 97
காடு முதலியவற்றில் பற்பல கடவுளர் 112-113
காதல் உணர்வு தோன்றும் சூழல் 247-248
காதல் திருமணம் 248
காமவேள் கோட்டம் 55
காமவேள்விழா 229
காமன் உறைவிடம் 54
காமனின் கருவூலமும் படையும் 54
காமனும் சாமனும் 52
கார்த்திகைத் தீப விழா 230
கார்த்திகை விழா விளக்கு 230
காரி உண்டிக் கடவுள் 89, 94
கால அளவின் பெருக்கம் 202
காலக் கணக்கறிஞர் 205
காலச் சுழல் 201
காலத்தின் பேரளவு குறிப்பவை 203
காவிரிப்பூம்பட்டினத்தில் ஏற்றுமதி இறக்குமதி 323
காவிரிப்பூம்பட்டினத்தில் வந்து குவிந்த பொருள்கள் 322
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் 62
காவிரிப்பூம்பட்டின விழா 228
காவிலும் மரங்களிலும் வாழும் தெய்வம் 117
காளி கோயிலில் பூதம் 139
காற்றுத் தேவன் 25
கான் அமர் செல்வி 96
கிளி வேதம் இசைத்தல் 2
குபேரன் 25
குமரியும் இமயமும் பிணைத்துப் பேசுதல் 325
குரவை 81
குரவைக் கூத்து 36
குழந்தை அணிகள் 237
குழந்தைக்குப் பெயரிடுதல் 236

குழந்தைகளின் தளர்நடையும் மழலையும் 238
குழந்தைகளைக் கோயில்களுக்குக் கொண்டு செல்லல் 238
குழந்தை பிறந்தநாள் கொண்டாட்டம் 239
குழந்தையின் அரையணி 237
குழந்தையின் ஆடை அணிகள் 238
குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் 8
குளவாய் 37
குறமகளிர் வெறியாட்டு 79
குறவர் குரவையாடி முருகனை வணங்குதல் 81
குறவர் மழை பெய்யவும் நிற்கவும் வேண்டி வழிபடுதல் 217
குறவன் கடவுட் பேணி மகப்பெற்றமை 234
குறளனும் கூனியும் 133
குறுந்தொகையில் முருகன் வாழ்த்து 77
குறுநில மன்னரின் வேள்வி 9
குறும்பல் கூளியர் 132
குன்றுதொறாடல் 85
கூடல் மாநகர் விழா 238
கூடல் மாநகரின் அமைப்பு 208
கூந்தல் (கேசி) சினம் அழிந்தது 65
கூந்தல் பற்றிப் பரிமேலழகர் விளக்கம் 65
கூளிச் சுற்றம் 129
கூற்றுவன் ஏவலாளர் 26
கூற்றுவனுக்கு ஒப்பான பொருள்கள் 26
கைம்மை மகளிர் 285
கொல்லிப்பாவை 159-166
கொற்கைத்துறையில் மகளிர் வழிபாடு 120
கொற்றவை 96
கொற்றவையின் கோட்டம் 97
கொற்றவையின் பரிவாரங்கள் 130
கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தமை 285
கோயில் எடுத்து வழிபடல் 207
கோயில்களில் வழிபட்ட தெய்வங்கள் 208
கோயிலில் கொடி ஏற்றும் முறை 223
கோவலன் (கண்ணன்) 63
கோவலனின் குடக்கூத்து 64
கோள்கள் பற்றிய விளக்கம் 164
கோள்நாள்கள் ஒளிபடைத்தவை 166
கோள் நாள் சூழ்வரும் மூன்று வீதி 165
கோளும் நாளும் 164-206
கௌணியன் விண்ணந்தாயன் 108

கௌஸ்துப மணி	32
சங்குசக்கரப் படைகள்	33
சடங்கு அறிந்த முதுபார்ப்பனிமார்	233
சடங்கு என்பதன் விளக்கம்	233
சடங்குகள்	232 - 292
சதுக்கம் சந்திக் கடவுள்	147
சதுக்கம் சந்தி மன்று பொதியில் தெய்வம்	147
சந்திரனும் ரோகிணியும்	165
சமணசமய முனிவர்கள்	110
சலதாரி	88
சனிக்கோள்	190
சாதாரண நிலையில் உள்ள பார்ப்பனர்	307
சாமவேதம்	1
சாமன்	52
சாவகர்கள்	110
சான்றோர் தன்மை	293
சான்றோர்களில் புலவர் பெருமக்கள்	298
சான்றோர் சான்றோர் பாலராதல்	296
சான்றோர்பால் கூறிய முறையீடு	297
சான்றோர் மதிக்கும் செல்வம்	294
சான்றோர் வடக்கிருந்தமை	284
சான்றோருடைய ஒழுக்கத்தின் விழுப்பம்	294
சான்றோர் வாழும் இடம் நாள் நல்ல இடம்	296
சான்றோரை எதிர்ப்பட்டால் போற்றுகை	297-298
சிலம்பாறு	38
சிலம்புகழி சடங்கு	259
சிறந்த நீர்த்துறைகள் குமரியும் கோடியும்	324
சிறப்பாகக் கொள்ளப் பெற்ற மலர்கள்	210
சிறுசிறு கடவுளர்	112
சிறுசோற்றுவிழா	274
சிறுவர் சிறுமியர் விளையாட்டு	238
சிறுவர்க்குப் புலிப்பல் தாலி அணிதல்	236
சுக்கிரன் எனப்படும் கோள்	189
சுடர்ச்சக்கரச் சித்திரம்	164
சுடர்நேமி	164
சுடரொடு திரியும் முனிவர்	311
சுவர்ப்பாவை	156
சுறா மீன் கொடி	53
சுறாமீன் முத்திரைப் பொறி	53
சூர்	121-122

சூர்ப்பனிப்பு	122
சூரரமகளிர்	122
சூரரமகளிர் ஆடுகின்ற பான்மை	123
சூரர மகளிரின் தோற்றம் முதலியன	123
சூரிய சந்திரர் சிறப்புக்கள்	168
சூரிய சந்திரரின் ஒளித்தன்மை	167
சூரியனின் தோற்றமும் மறைவும்	170
சூரியனின் விடியல் காட்சி	171
சூரினால் பற்றப்பட்ட பிராணிகள்	124
சூல்கொண்ட மகளிர் தெய்வத்திற்கு மடை கொடுத்தல்	238
சூளுரைத்தார் தவறின் தெய்வம் வருத்தும் என்னும் நம்பிக்கை	219
செக்கர் வானமும் பிறையும்	175
செந்நெறி காட்டும் திருத்தகு சான்றோர்	293-312
செய்தி வரைந்த ஓலை	240
செய்யாப்பாவை	156
செல்வக்கடுங் கோ வாழியாதன்	8
செவ்வாய் புதன் முதலிய பிற கோள்கள	185
செவ்வாய்க்கோள்	190
சேக்கிழார்	92
சோழன் நலங்கிள்ளி	13
ஞாயிற்றின் தேர்	169
ஞாயிற்றின் தோற்றமும் நிலையும்	170
ஞாயிற்றின் பேரொளிக்குமுன் நிகழ்வன	172
ஞாயிற்றுத் தெய்வமாகப் போற்றுதல்	175
ஞாயிற்றுப் புத்தேள்	28
ஞாயிற்றுப் புத்தேளிடம் வேண்டுதல்	174
ஞாயிறு கடலில் மறைதல்	175
ஞாயிறு திங்கள் மழை	168
ஞாயிறு தோன்றியதும் வான்நிலை	172
ஞாயிறு போற்றுதல்	168-169
ஞாயிறும் திங்களும்	166
ஞாயிறு மாலையில் மறைதல்	174
ஞாயிறு மேலெழுகின்ற போது நிகழ்வன	173
ஞாயிறு திருமாலை உணர்தல்	44
ஞானியர் வழிபாடு	36
தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்	313
தமிழகத்தில் திருமணம் -	264
தமிழகத்து ஊர்களில் பெருநிதியத் தொகுப்பு	324
தமிழகத்து மன்னர் - குறுநில மன்னர் நிலை	313
தமிழரசர் படையில் பல்மொழியாளர்	315

தருமன் முதலிய ஐவரும் வெற்றி பெறுதல் 68
தலைவன் மணப்பெண் படைக்கும் அடிசில் உண்ணல் 265
தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் 8
தவத்தின் மேன்மை 292
தவப்பள்ளி 109
தாக்கு அணங்கு 121
தாமப்பல்கண்ணனார் 13
தாமரைப் பூவின் சிறப்பு 211
தாலி அணியும் பழக்கம் 263
தானம் செய்முறை 270
திக்குபாலகர் 24
திங்கட்புத்தேள் 28
திங்கள்ரோகிணியுடன் கூடிய நாள் மணநாள் 194
திங்கள் தேவன் கண் கூடாகக் காட்டுதல் 177
திங்கள் பெறும் அடைமொழிகள் 177
திங்களில் குறுமுயல் 181
திங்களின் அலர்தருபக்கம் 182
திங்களின் தண்ணிய பாற்கதிர் 177
திங்கள் வழியது பக்கம் 182
திங்களைப் போற்றுதல் 176
திருக்கோயில் வலம் வருகை 214
திருச் செந்தூர் 85
திருஞானசம்பந்தர் 92
திருதராட்டிரன் 66
திருப்பரங்குன்றத்தில் நடந்த விழா 228
திருப்பரங்குன்றம் 85
திருமகள் 45
திருமகள் செல்வத்திற்குரியவள் 45
திருமணத்தில் சுற்றத்தார் 261
திருமணத்திற்கு உரிய காலம் 257
திருமணத்தை முன்னிட்டு இல்லுறை தெய்வம் போற்றல் 200
திருமணப்பந்தல் 260
திருமணம் என்பது ஒன்றிய பிரியா வாழ்க்கை 257
திருமணம் விழாப் போன்ற சிறப்பு நிகழ்ச்சி 257
திருமணம் நிச்சயம் பெண்ணின் பெற்றோர் அறிவித்தல் 260
திருமால் உருவ வண்ணம் 31
திருமால் எங்கும் இருப்பவன் 42
திருமால் எல்லாத் தெய்வமும் ஆதல் 30
திருமால் எல்லாமாய் நிற்றல் 39
திருமால் ஏந்திய சங்குசக்கரம் 33

திருமால் காப்பவன்	42
திருமால் திருக்கண்	32
திருமால் திருப்பதிகள்	37
திருமால் திருவடி	32
திருமால் திருவுருச்சித்திரம்	35
திருமால் மார்பில் திருமகள்	32
திருமாலிடத்துத் தோன்றியவை	40
திருமாலின் அறிதுயில்	57
திருமாலின் உந்தித் தாமரை	32
திருமால் முத்தொழில் புரியும் முதல்வன்	43
திருமாலிருங் குன்றத்து அருவிக் காட்சி	63
திருமாலிருஞ்சோலை	38
திருமாலிருஞ்சோலை மலையில் வாலியோனும் மாயோனும்	106
திருமாலின் திருமேனி	31
திருமாலின் பெருமாண்புகள்	39
திருமாலின் மார்பு	31
திருமாலுக்கு ஒப்பு	43
திருமாலுக்கு விற்படை	34
திருமாலைக் குறித்த சில சரிதங்கள்	69
திருமாலைப் பற்றிய குறிப்பு	30
திருமாலோடு தொடர்புடைய தெய்வங்கள்	44
திருமுருகாற்றுப்படை	70
திருமுருகாற்றுப்படையில் முருகன் உருவ வருணனை	73
திருவனந்தபுரத்துத் திருமால்	37
திருவிழாச் செய்தியைக் குயவன் அறிவித்தல்	223
திருவெஃகாக் கோயில்	37
தீதுதிர் சிறப்பின் ஐவர்கள்	103
தீநிமித்தம் நேர்ந்த போது கடவுளைத் துதித்தல்	278
தீவினை போகக் கடலாடுதல்	269
துவரைப் பதியைக் கண்ணன் ஆளுதல்	68
துறவுநிலையாளர்	290
துறவு வாழ்வு பெறுதல்	288
தூது செல் பார்ப்பான்	15
தெய்வங்கள் கனவில் காட்சி தருதல்	282
தெய்வங்காட்டிச் சூளுரைத்தல்	218
தெய்வங்காட்டித் தெளித்தல்	218
தெய்வத் திருமேனிக்கு நீராட்டுதல்	211
தெய்வத்திற்கு மலரிட்டுத் தூப தீபம் காட்டல்	211
தெய்வத்திடம் மக்களின் வேண்டுதல்கள்	216
தெய்வம் ஐவர்	107

தெய்வ மகளிர் தன்மை 114
தெருவில் தெய்வம் உலாவரும் காட்சி 224
தெருவில் விழா எடுத்து வழிபட்டமை 222
தெற்றிப் பாவை 159
தேவயானை வள்ளி திருமணம் . 76
தேவர்கள் 20
தேவர்கள் உண்ணும் அமுதம் 22
தேவர்களின் தன்மை 22
தேவர் முப்பத்து மூவர் 23
தைந்நீராடல் 245-246
தொண்டை மான் இளந்திரையன் 37, 68
தொழுதுகாண் பிறை 178
நக்கீரர் தீட்டிய பேய்ச்சித்திரம் 132
நக்கீரர் போற்றும் நால்வர் 103-104
நங்கையைக் கூற்று எனல் 26
நடாஅ நெடுங்கல் 146
நடுகல் 139
நடுகல்லுக்கு ஆற்றிய வழிபாடு 144-145
நடுகல் தெய்வம் 144
நடுகல்லில் பெயரும் பீடும் எழுதுதல் 141
நண்பகலில் சூரியனின் நிலை 173
நரசிங்காவதாரம் 59
நல்நிமித்தம் தீநிமித்தம் 277
நல்லந்துவனார் 101
நல்வழி நாடுதல் 283
நன்மக்கள் கொண்டொழுகும் செந்நெறி 329
நன்னன் சேய் நன்னன் 171
நன்னன் சேய் நன்னன் நவிரமலை 94
நன்னன் பாழிப்போர் 134
நால்வகைப் படை 272
நாழிகைக் கணக்கர் 205
நாள்கள் 191
நாள்கோள்கள் நல்ல நிலையில் மழை 200
நாள்கோள்களால் நலமும் தீங்கும் விளைதல் 199
நாள் திங்கள் காலப் பாகுபாடு 202
நாள் மீன் 165
நாள்தோறும் பல் கால வழிபாடு 214
நாள் முறை வழிபாடும் விழாக்களும் 207-231
நாற்பெருந்திசைக்காவலர் 103
நாற் பெருந்தெய்வம் 103

நான்கு ஊழிகள் 205
நான்மறை 1
நான்மறைப் புலவர் 2
நான்முகன் 50
நான்முகன் தொழில் 50
நான்முகன் தோன்றிய வகை 50
நான்முகனின் விசித்திரப் படைப்பு 51
நிமித்தம் பார்த்தல் 276
நிலம் அளக்க நீண்ட மால் 58
நிலமகள் 46
நிலாமுற்றத்திலிருந்து மகளிர் விழாக்காணல் 225
நிறைமதி 178
நிறைமதி நாளில் இரு சுடர் 180
நிறைமதி நாளில் சந்திரனோடு ஒரு நட்சத்திரம் 201
நிறைமதி வெண்கொற்றக் குடைக்கு உவமை 180-181
நீர்த்துறைக்கடவுள் 109
நீர்த்துறையில் மகளிர் பாவை செய்து விளையாடுதல் 158
நீரினும் நிலத்தினும் நிகழ்ந்த வாணிகம் 321
நீருறை கடவுள் வழிபாடு 120
நெடியோன் 30
நெய்தல் நில மக்களின் சுறாக்கொம்பு வழிபாடு 148
நெய்தல் முதலிய காலப் பேரளவு 203
நெருஞ்சிப் பூவின் இயல்பு 172
நெருப்பை வழிபடுபவர் அந்தணர் 303
பஞ்சமூர்த்தியாம் வியூகநிலை 61
பஞ்சாய்ப்பாவை 157
பட்டினத்தின் அமைதி வாழ்வு 326
பண்டை இலக்கியத்தில் பார்ப்பனர் 302
பதினெண்கணம் 23
பதுக்கைக்கடவுள் 143
பயங்கெழு வெள்ளி ஆநியம் நிற்றல் 187
பரங்குன்றப் பெருமாளை வழிபடுவோர் 82
பரசுராமன் 59
பரசுராமன் செய்த வேள்வி 10
பரணி முதலியன 198
பரிசில் தந்து விடை கொடுத்த முறை 300-301
பரிபாடலில் திருமாலுக்கு முதலிடம் 70
பரிபாடலில் மால் முருகன் பற்றிய பாடல்கள் 70
பல்மலர் சிதறி வழிபடல் 210
பல்மொழியாளர் கலந்து உறைதல் 326

பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி 7
பல்யானைச் செல்கெழுகுட்டுவன் 8
பல்வகைப் பாவை 155 - 163
பல் வளமும் சிறக்க வைக்கும் ஞாயிறு 173
பல்வேறு பயன்கருதி வழிபடல் 216
பல்வேறு விழாக்களில் வழிபாடு 208
பல்லி சொல் நிமித்தம் 280
பல தேவன் 63
பல தேவனின் படையும் கொடியும் 63
பல தேவனின் குண்டலமும் மாலையும் 63
பல தேவனும் கண்ணனும் 61
பலர் புகழ் ஞாயிறு 105
பலருடன் கூடி வழிபடுகை 215
பலிபீடம் 212
பலியிடும்போது மந்திரங்கள் உச்சரித்தல் 212
பழங்குடி மக்கள் 325
பழமுதிர்சோலை 85
பறையறைந்து செய்தி தெரிவித்தல் 290
பன்னிருராசி இருக்கை 186
பனைக்கொடியோனும் நேமியோனும் 105
பனைமரத்தடி மன்றம் 148
பாசறையில் அரசன் 272
பாட்டன் பெயர் பெறும் மக்கள் 236
பாண்டி நாட்டுக் கடற்கரையில் புரவிகள் வந்து இறங்கின 321
பாண்டியன் தேவி கட்டில் மேற் கட்டியில் சுடர்ச் சக்கரம் 165
பாணர் முதலியோரின் மலைத் தெய்வ வழிபாடு 116
பாணரின் காடுறை தெய்வ வழிபாடு 117
பாம்பு சேர் மதி 183
பார்ப்பார்க்குப் பொன் முதலியன கொடுத்தல் 305
பாரதச் செய்திகள் 66
பாரதப் போர் நிகழ்ச்சிகள் 68
பாரத வீரரின் வமிச வரலாறு 67
பாரதம் பாடிய பெருந்தேவனார் 99
பாவைக்கூத்து 162
பாவைத் தெய்வம் 153
பாவை நோன்பு 245
பாவை மன்றம் 162
பாவையாக்கம் 155
பாவை விளக்கு 155
பாழ்பட்ட பொதியில் 150

பாறைகளின் மேல் வீரர் உருச் சமைத்தல் 146
பிங்கல நிகண்டு 246
பிசாசு 128
பிசிராந்தையாரின் சால்பு 295
பிதிரர்க்குக் கடனாற்ற புதல்வர்ப் பேறு 289
பிரமசரிய வாழ்க்கை 242
பிள்ளைப்பாட்டு 246
பிறக்கின்ற வேளைக்குப் பொருந்த உருவு குணம் 239
பிறந்தநாளின் பிறக்கம் 198
பிறர்க்கு ஈந்து மகிழ்தல் 328
பிறர்க்குத் தீமை புரியாமை வேண்டும் 228
பிறை பிறந்து வளர்கை 178
பிறை மதியை விளையாட அழைத்தல் 179
புண்பட்டு இறவார் மார்பைப் பிளந்து அடக்கம் செய்தல் 283
புதல்வரால் குடி தழைத்தல் 234
புதல்வன் பிறந்ததும் தந்தை அதன் முகம் பார்த்தல் 235
புதன் 190
புதுப்புனல் நிராட்டம் 268
புதுப்புனல் விழா 231
புதுமணப்பெண் உணவாக்கல் 264
புலவர் கொண்ட பெரிய குறிக்கோள்கள் 299
புலவர் பாடும் புகழுடையோர் 302
புலவர் மோசிகீரனார் முரசுகட்டிலில் உறங்குதல் 128
புறநானூற்றுக் கடவுள் வாழ்த்து 101
புறப்பாட்டு தரும் நாற்பெருந்தெய்வம் 103
பூக்கோள் தன்னுமை 272
பூதம் 128
பூதம் காத்தல் 138
பூதம் பற்றிய குறிப்புகள் 138
பூந்தொடை விழா 251
பெருங்கடல் தெய்வம் 119
பெருங்கால அளவு; ஊழி, வெள்ளம் 202
பெருஞ்சேரலாதன் வடக்கிருந்தமை 284
பெருஞ்சேரலிரும்பொறை 8
பெருஞ்சேரலிரும்பொறையின் தமிழுணர்வு 128
பெருஞ்சேரலிரும்பொறை வேள்வியால் மகப்பெற்றமை 233
பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் 68
பெருஞ்சோற்று விழா 274
பெருந்தெய்வங்கள் 70
பெருந்தேவனார் தரும் முக்கண்ணான் காட்சி 100

பெருந்தெய்வங்களுள் பெருந் தெய்வம் 103-111
பெருமானது கறைமிடறு 89
பெருமானது முக்கண் 89
பெருமைபடைத்த சிலவேந்தர் 314
பெருவீரர்களைப் போற்றுதல் 276
பேய்ஏறி நடத்தும் ஊர்தி 133
பேய்க்குக் குழந்தைபலி 134
பேய்கள் நிணம் தின்று கும்மாளமிடுதல் 135
பேய்களின் ஆடல் 136
பேய்களின் உருவத் தோற்றம் 230
பேய் கூழ் சமைத்தல் 137
பேய் சுற்றித் திரியும் இடங்கள் 133
பேய் பலிபெற்று நீங்குதல் 135
பேய் பிசாசு பூதம் 128
பேய் பிசாசுகளில் ஆண் பெண் வேற்றுமை 130
பேய் பிடித்தலுக்குச் சாந்தி 133-134
பேய் மகளிரும் பேய்களும் ஆடும் துணங்கைக் கூத்து 135
பேய் மனிதரைப் பிடித்தல் 133
பேய் விருந்து 138
பேயின் உருவ வருணனை 131
பேயின் கண்கள் 131
பேயின் தலை 131
பேயினத்தைச் சார்ந்தவை 129
பேராறுகளின் வழிச் சென்றும் வாணிகம் 323
பொதியில் எனப்படும் ஊரம்பலம் 148
பொதியில் கட்டட அமைப்பு 149
பொதியில் கந்து 147,150
பொருள் தேடும் வினைமேற் கொள்ளல் 266
பொருளால் நல்வாழ்வு அமைதல் 267
பொழில்களில் இன்பம் துய்த்தல் 269
போர்க்களத்துள் பேய்கள் 135
போர்ச் சக்தி 96
போர் தொடங்குமுன் முன்னறிவிப்பு 271
போர்ப்பயிற்சி அரங்கேற்றுவிழா 272
பௌத்தப் பள்ளி வணக்கம் 109
பௌத்த சமணச் சார்புடைய புலவர் 111
மக்கட் பேற்றின் பெரும்பேறு இல்லை 236
மக்கள் அறம் பொருள் இன்பம் போற்றுகை 327
மக்கள் நடமாடும் வழிகளில் நடுகல் 141
மக்கள் வாழ்க்கையில் நாள் கோள் 239

மக்கள் பல்வேறு வகையினராதல் 326
மகப்பெற்ற மகளிர் செய் காப்பு முறை 234
மகப்பெற்றார் குளத்து நீரில் குளித்தல் 235
மகவீன்ற மனையில் நிகழ்வன 235
மகவெண்மீன் 198
மகள் மறுத்தல் 256
மகள் மறுத்தலால் போர் நிகழ்தல் 256
மகளிர் தைந்நீராடல் 244
மகளிர் மாலைப் பிறையைத் தொழுதல் 208
மகளிரை வலிந்து கொண்டு மணத்தல் 248
மகிடாசுரன் வதை 96
மங்கல நாண் 263
மடல் ஏறுதல் 254
மணப்பெண்ணிற்குப் பரிசம் கொடுத்தல் 258
மணம் மறுக்கும் தலைவர் 257
மணமனை புகுவார்க்குச் சிறப்புச் செய்தல் 261
மணவிழவில் தீவேட்டல் 262
மதியின் அல்லல் கண்ட மாந்தர் நிலை 185
மதியும் விண்மீன்களும் 192-193
மதியைப் பாம்பின் பிடியிலிருந்து திருமால் விடுவித்தல் 184-185
மரங்களை வழிபட்ட முறை 48
மரம் செல மிதித்த மால் 64
மல்லர்களின் மறம் சாய்த்தல் 66
மலை உறை தெய்வம் 113
மலைக் குறவர் வழிபட்ட முறை 215
மலைமகள் 95
மலை முதல் மனை வரையிலும் கண்ட பல கடவுளர் 112-154
மலை வாழ் தெய்வ வழிபாடு 115
மழுவாள் நெடியோன் 106
மழைக்கோள் நிலை 187
மறவர் கையில் நூல் கட்டுகை 98
மன்றப் பாவை 159
மன்றுத்தெய்வம் 147
மன்னர்களும் வள்ளல்களும் புலவரைப் போற்றியமை 300
மன்னர் நாட்டிற்கு உயிர் என்னும் உணர்வு 319
மன்னர் வாழ்ந்த கோநகரச் சிறப்பு 325
மன்னரின் மாண்புகள் 320
மனைக்கு விளக்கு இல்லாள் 265
மனையாட்டியால் செல்வ வளம் 266
மாங்குடி மருதனார் 110

மாதப் பெயர் 201
மாயோன் 31
மாயோனும் முக்கண்ணனும் இரு பெருந்தெய்வம் 107
மால் 29-69
மால் அன்னம் ஆனமை 58
மால் ஆயர் போற்றும் தெய்வம் 29
மால் குன்றுறை தெய்வம் 29
மாலின் ஈருரு நிலை 61
மாலின் மூவுரு நிலை 61
மாலின் வராகத் திருக்கோலம் 58
மாலையில் மங்கையர் விளக்கேற்றுதல் 268
மீன் பூத்த வானம் 191
முக்கண்ணன் 87-102
முக்கண்ணன் ஊர்தி 90
முக்கண்ணன் கூற்றை மாய்த்தல் 94
முக்கண்ணன் சடையில் நீர் 88
முக்கண்ணன் திருமுடிச்சடை 87
முக்கண்ணன் திருமுடிப் பிறை 88
முக்கண்ணன் முப்புரம் எரிசெய்தல் 90
முக்கண்ணன் முப்புரம் எரித்த செய்தி 92
முக்கண்ணனின் மேனி நிறம் 87
முக்கண்ணன் யோகியாகக் காட்சி தருதல் 90
முக்கண்ணனி 96
முக்கண்ணும் கறை மிடறும் 89
முக்கோல் அந்தணர் 312
முடிநாகராயரும் காவட்டனாரும் மலை நாட்டினர் 175
முத்தொழில் முதல்வர் 104
முத்தொள்ளாயிரம் போற்றுகை 102
முதுகுடுமிப் பெருவழுதியின் கடல் தெய்வ வழிபாடு 120
முதுநாலுக்கு இதல் கண்டோர் 108
முதுபார்ப்பான் காதல் வேட்கை 15
முதுபார்ப்பானின் காமப் பேச்சு 308
முப்புரம் எரித்த முக்கண்ணன் சென்ற வகை 93
முரசில் அமர்ந்துறை அணங்கு 126
முரசு கட்டில் 128
முரசுத் தெய்வம் போற்றுகை 126
முரசுறை தெய்வம் வழிபடுவோன் 127
முரஞ்சியூர் முடிநாகராயர் 68, 175
முருகப் பெருமான் கொண்டுள்ள ஆயுதங்கள் 74
முருகப் பெருமான் வழிபடப் பெறும் இடங்கள் 71

முருகபூசை செய்யும் படிமத்தான் 78
முருகன் 70-86
முருகன் ஊர்தி 73
முருகன் என்னும் பெயர் விளக்கம் 71
முருகன் கிரவுஞ்ச மலையை அழித்தல் 75
முருகன் கன்னியரை அணங்குதல் 77
முருகன் கோட்டம் 82
முருக்ன் கோயில் தலங்கள் 84
முருகன் சூரனைத் தடிந்தமை 75
முருகன் திரு அவதாரம் 71
முருகன் திருப்பெயர்கள் 83
முருகன் திருவுருவக் காட்சி 72
முருகன் திருவுரு செந்நிறப் பிழம்பாகக் காட்சி தருதல் 72-73
முருகன் தோற்றத்தில் இந்திரன் 78
முருகன் பெருந்திறல் 74
முருகன் மங்கையர் கணவன் 77
முருகன் மலை உறை கடவுள் 71
முருகனிடம் வேண்டும் வரம் 84
முருகனுக்கு இடும் நறும் புகை 83
முருகனுக்குத் தேவர்கள் ஆயுதம் கொடுத்தல் 72
முருகனும் மாலும் தனிக்கவிதை பெற்றுள்ளனர் 70
முருகனும் யமனும் 28
முருகனைச் சுட்டும் பெயர்கள் 70-71
முருகனைப் புகழ் பாடித் துதித்தல் 83
முருகனை வணங்கும் தகுதி பெற்றார் 84
முலை உறை விற்றுத் தெய்வம் 125
முனிவர்களின் இருப்பிடங்கள் 317
முனிவர் வேள்வி 9-10
மூவர் முதன்மை 104
மூவரசர் ஆணை வேங்கட எல்லையையும் தாண்டியது 314
மூவரசர் தமிழகத்தில் சிறப்புடன் வாழ்ந்தமை 314
மூன்று தமிழும் சிறப்புறக் சுற்றல் 241
மூன்று புரிப் பூணூல் 242
மேருவைச் சூரிய சந்திரர் சுற்றி வருகை 114
மேருமலை தேவர் உறைவிடம் 20
மேல் கீழ் என்னும் பகுப்பு 325
மொழிபெயர் தேயங்களோடும் தொடர்பு 318-319
மோசிகிரனாரைப் பெருஞ்சேரலிரும்பொறை
போற்றியமை 301-302
யமன் 26

யமன் தருமன்	27
யவனர் தந்த மதுவகை	322
யவனர் முதலிய மேலை நாட்டினர்	321
யாகம் செய்தார் சுவர்க்கம் புகுவர்	5
யாதும் ஊரே யாவரும் கேளிர்	329
யாழ்த் தெய்வம்	125
யானையைப் பழக்குவோர் மொழி	242
யானைப் பூசை	246
வடக்கிருத்தல்	284
வடக்கிருந்தார்க்கும் நடுகல்	143-144
வடபுலத்தரசர் தூங்காக் கண்ணுடையர் ஆதல்	316
வடபுலத்துத் தமிழ் மன்னர் விளைத்த பெரும்போர்	318
வடமீன் - அருந்ததி	196-197
வடமொழிக்கல்வி	242
வண்டற்பாவை	158
வண்டு முதலியன கரைக் காணுதல்	282
வணிகப் பெருமக்களின் பொருள் முயற்சி	320
வணிகப் பெருமக்கள் வேள்வித் தொண்டு	9
வணிகரின் சீரிய வாணிகமுறை	322
வதுவை நீராட்டம்	261
வருத்தும் தெய்வம்	121
வரைபாய்தல்	255
வரையரமகளிர்	114
வழிபட்ட முறை	209
வழிபாட்டில் இசைக்கருவிகள் இயக்குதல்	213
வழிபாட்டிற்குரிய பொருள்கள்	209
வழிபாட்டு முறைகள்	108
வழிபாடு விழா முதலிய சடங்குகள்	233
வாகை வெற்றிப்பூ	97
வாலியோன்	63
வானரங்கள் பூண்ட அணி	60
வான நூற் புலவர்	206
வானப் பிரத்த சந்நியாச நிலை	289
வானுலகு	21
விசும்புவீழ் கொள்ளி	199
விண்மீன்கள்	191
விந்தாடவிக் கொற்றவை	99
வியாழமும் வெள்ளியும்	190
விரிச்சி	278-279
விருந்தோம்புதல்	268

விருந்தோம்பு வேள்வி 10
வில்ஏர் உழவன் 273
விலங்குகள் பல்லி நிமித்தம் ஓர்தல் 281
விழா 220
விழாக்கள் தெருவீதிகளில் கொண்டாடப்பெற்றமை 221
விழாக்காண மக்கள் திரளுதல் 220
விழாக்காணும் ஊர்கள் அலங்கரிக்கப்படுதல் 224
விழாக்காணும் மகளிர் 225
விழாக்கள் வளர்பிறைக்காலத்தில் கொண்டாடுகை 223
விழாக் காலங்களில் குயவன் மன்றத் தெய்வம் வழிபடல் 212
விழாவில் ஆடல் பாடல் 224
விழாவில் இசை முழக்கம் 226
விழாவில் இசையும் கூத்தும் பாட்டும் 225
விழாவில் துணங்கை குரவை முதலிய கூத்துக்கள் 226
விழாவில் மன்னர் விளையாட்டுப் போர் 227
விழுப்புண்பட்ட வீரரைப் பாதுகாத்தல் 273
விறல்கெழுசூலி 96
வீரயுகத்திற்கு ஒத்தநிலை 313
வீரர்க்குக் கல் நாட்டி வழிபடுகை 287
வீரர்க்குக்கள் வழங்குதல் 275-276
வீரர்க்கு நடுகல் நாட்டல் 139-140
வெல்போர்க்கொற்றவை 96
வெள்ளிக்கோள் 118
வெள்ளிய நிலாக்கதிர் 176
வெள்ளியும் வியாழனும் 190
வெற்றி பெற்ற வேந்தர் வாகை சூடி மகிழ்தல் 273
வெறியயர் களனும் வழிபாடும் 79
வெறியாட்டில் முருகனை வழிபடுதிறம் 80
வெறியாட்டில் வேலன் 78
வெறியாட்டு 78
வெறியாடும் இடம் 80
வேங்கட விழா 227
வேட்கைப் பத்தில் காணும் அறவுரை 329
வேதத்தின் வேறுபெயர்கள் 1
வேத நெறி 1-16
வேதநெறிக்கு வேறுபட்ட வேற்றுச் சமயங்கள் 108-111
வேதம் அருளிய முக்கண்ணன் 91
வேதம் கேள்வி வாயிலாகப் போற்றுதல் 241
வேதம் பிறந்தது 52
வேதம் பாடும் முறை 1

வேதவேள்வி	3
வேந்தரைத் திருமாலுக்கு ஒப்பிடுகை	43
வேலன் வெறியாட்டு	251
வேலனின் கழங்குக் குறி	252
வேலூர்	86
வேள்விக்களம்	6
வேள்விசெய் அந்தணர்	11
வேள்விசெய்தமுறை	4-5
வேள்விசெய்விப் போர்	232
வேள்விப்புகை	7
வேள்வி வழிபாடு	213
வேளாப் பார்ப்பான்	14,307
வேளாப்பார்ப்பாரின் இயல்பு	307
வேற்றுச் சமயங்கள்	108-111
வேற்றுமையில் ஒற்றுமை	312-329